வெளியீடு : 05-04-2024

Issued: 05-04-2024

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
## (பதினாறாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
## (SIXTEENTH ASSEMBLY)

**புதன்கிழமை, ஏப்ரல் 5, 2023—தொகுதி 60—எண் 1**

**Wednesday the 5th April 2023—Volume 60—No. 1**

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.**
**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

**ரூ.3.00]** **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# 5–4–2023

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxviii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | 1-61 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-61 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | 61-90 |
| டெல்டா பகுதிகளில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கு ஒன்றிய அரசால் ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது | 61-90 |
| முனைவர் T.R.B. ராஜா | 62-65 |
| திரு. கு. செல்வபெருந்தகை | 65, 67-69 |
| *திரு. இரா. காமராஜ் | 65-67 |
| திரு. ஜி.கே. மணி | 69-73 |
| *திரு. ம. சிந்தனை செல்வன் | 73-76 |
| திரு. வி.பி. நாகைமாலி | 76-77 |
| திரு. K. மாரிமுத்து | 77-78 |
| *திரு. ஆர். வைத்திலிங்கம் | 78 |
| டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் | 78-79 |
| முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 79-80 |
| திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் | 80 |


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

**2. சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி

திரு. தி. வேல்முருகன் 80-82

திரு. மு. ஜெகன் மூர்த்தி 82-83

திருமதி வானதி சீனிவாசன் 83-84

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு 84-89

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 89-90

**3. கவன ஈர்ப்பு**— 90-95

திண்டிவனம்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து முடித்தல் 90-95

*திரு. ச. சிவகுமார் 90-93

மாண்புமிகு திரு. துரைமுருகன் 92-93

மாண்புமிகு திரு. எ.வ. வேலு 91, 93-95

**4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 5—வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

95-264, 265-352

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்**— *தொடர்ச்சி*

(இ) கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

(ஈ) கோரிக்கை எண் 8–பால்வளம்(கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் 96, 177-178, 181-184, 187, 191-193, 332-349

*மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன் 117, 141, 178, 255, 257, 259-260, 262, 296-332

*மாண்புமிகு திரு. சா.மு. நாசர் 158, 179, 265-296

*திரு. ஓ.எஸ். மணியன் 99-100, 123, 146, 163-164, 179-181, 183-186, 188, 190-197

மாண்புமிகு திரு. துரைமுருகன் 183, 190, 236

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு 186-187

| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி* | |
| *திரு. வி.பி. நாகைமாலி* | 108, 132, 171,188-189 |
| *திரு. எஸ்.பி. வேலுமணி* | 189-190, 252, 262 |
| *மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு* | 197 |
| *திரு. தா. உதயசூரியன்* | 197-207 |
| *திரு. மு. பன்னீர்செல்வம் (with a leading asterisk) | 207-213 |
| *திரு. கே.ஏ. செங்கோட்டையன் (with a leading asterisk) | 209 |
| *திரு. R. ராதாகிருஷ்ணன் (with a leading asterisk) | 97, 118, 142, 159, 214-221 |
| *திரு. A. நல்லதம்பி* | 221-227 |
| *திரு. நயினார் நாகேந்திரன்* | 103, 126, 148, 166, 228-237 |
| *திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் (with a leading asterisk) | 237-251 |
| *திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் (with a leading asterisk) | 252-264 |
| *திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி* | 293-294 |
| *திரு. ம. சிந்தனை செல்வன்* | 294 |
| **5. அறிவிப்பு**— | 264 |
| பேரவையின் மாலை கூட்ட நேரத்தில் மாற்றம் | 264 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 353-356 |
| **7. இணைப்புகள் I-IV** | 357-776 |


****

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | **முதலமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**<br>*பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், மாற்றுத் திறனாளிகள் நலன்* |
| 2. | **நீர்வளத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**<br>*சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்* |
| 3. | **நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**<br>*நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்* |
| 4. | **ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**<br>*ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்* |
| 5. | **உயர் கல்வித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:**<br>*தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்* |

| | | | |
|---|---|---|---|
| 6. | **பொதுப் பணித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**<br>*பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்* |
| 7. | **வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**<br>*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு* |
| 8. | **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:**<br>*வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை* |
| 9. | **தொழில் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**<br>*தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்* |
| 10. | **இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்**<br>*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்* |
| 11. | **சட்டத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:**<br>*சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்* |

**12. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:**

*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி*

**13. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

*கூட்டுறவுத் துறை*

**14. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

*குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்*

**15. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்*

**16. சமூக நலன் — மகளிர் உரிமைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

| | |
|---|---|
| **17. மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு* |
| **18. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** *பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்* |
| **19. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்* |
| **20. உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு* |
| **21. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு* |
| **22. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்* |
| **23. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. | **மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு* |

**24. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:**

*வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*

**25. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:**

*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*

**26. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:**

*இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*

**27. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:**

*நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை*

**28. பால்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:**

*பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*

**29. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:**

*சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*

| | | |
|---|---|---|
| **30. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**<br>*பள்ளிக் கல்வி* |
| **31. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**<br>*சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள்* |
| **32. தொழிலாளர் நலன் — திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:**<br>*தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு* |
| **33. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:**<br>*தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்* |
| **34. வனத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:**<br>*வனம்* |
| **35. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:**<br>*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்* |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | | |
|---|---|---|---|
| 1. | **Chief Minister** | .. | **The Hon. Thiru M.K. Stalin:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives and Welfare of the Differently abled persons |
| 2. | **Minister for Water Resources** | .. | **The Hon. Thiru Duraimurugan:**<br>Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines |
| 3. | **Minister for Municipal Administration** | .. | **The Hon. Thiru K.N. Nehru:**<br>Municipal Administration, Urban and Water Supply |
| 4. | **Minister for Rural Development** | .. | **The Hon. Thiru I. Periyasamy:**<br>Rural Development, Panchayats and Panchayat Union |
| 5. | **Minister for Higher Education** | .. | **The Hon. Dr. K. Ponmudi:**<br>Higher Education including Technical Education, Electronics, Science and Technology |
| 6. | **Minister for Public Works** | .. | **The Hon. Thiru E.V. Velu:**<br>Public Works (Buildings), Highways and Minor Ports |

| | | |
|---|---|---|
| 7. | Minister for Agriculture and Farmer's Welfare .. | **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugars, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development |
| 8. | Minister for Revenue and Disaster Management .. | **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management |
| 9. | Minister for Industries .. | **The Hon. Thiru Thangam Thennarasu:**<br>Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology |
| 10. | Minister for Youth Welfare and Sports Development .. | **The Hon. Thiru Udhayanidhi Stalin**<br>Youth Welfare and Sports Development, Special Programme Implementation Department & Poverty Alleviation Programme and Rural Indebtedness |
| 11. | Minister for Law .. | **The Hon. Thiru S. Regupathy:**<br>Law, Courts, Prisons and Prevention of Corruption |
| 12. | Minister for Housing and Urban Development .. | **The Hon. Thiru S. Muthusamy:**<br>Housing, Rural Housing, Town Planning Projects and Housing Development, Accommodation Control, Urban Planning and Urban Development |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

| | | |
|---|---|---|
| **13. Minister for Co–operation** | .. | **The Hon. Thiru KR. Periakaruppan:**<br>Co–operation |
| **14. Minister for Micro, Small and Medium Enterprises** | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:**<br>Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board |
| **15. Minister for Information & Publicity** | .. | **The Hon. Thiru M.P. Saminathan:**<br>Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press |
| **16. Minister for Social Welfare & Women Empowerment** | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:**<br>Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme |
| **17. Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**<br>Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry |
| **18. Minister for Backward Classes Welfare** | .. | **The Hon. Thiru R.S. Rajakannappan:**<br>Backward Classes Welfare, Most Backward Classes Welfare, Denotified Communities Welfare and Khadi & Village Industries Board |

| | | |
|---|---|---|
| 19. | **Minister for Tourism** .. | **The Hon. Thiru K. Ramachandran:**<br>Tourism and Tourism Development Corporation |
| 20. | **Minister for Food and Civil Supplies** .. | **The Hon. Thiru R. Sakkarapani:**<br>Food and Civil Supplies, Consumer Protection and Price Control |
| 21. | **Minister for Electricity, Prohibition & Excise** .. | **The Hon. Thiru V. Senthilbalaji:**<br>Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses |
| 22. | **Minister for Handlooms and Textiles** .. | **The Hon. Thiru R. Gandhi:**<br>Handlooms and Textiles, Boodhan and Gramadhan |
| 23. | **Minister for Health and Family Welfare** .. | **The Hon. Thiru Ma. Subramanian:**<br>Health, Medical Education and Family Welfare |
| 24. | **Minister for Commercial Taxes and Registration** .. | **The Hon. Thiru P. Moorthy:**<br>Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies |
| 25. | **Minister for Transport** .. | **The Hon. Thiru S.S. Sivasankar:**<br>Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 26. | **Minister for Hindu Religious and Charitable Endowments** .. | **The Hon. Thiru P.K. Sekarbabu:**<br>Hindu Religious and Charitable Endowments and CMDA |

| | | |
|---|---|---|
| 27. **Minister for Finance and Human Resources Management** | .. | **The Hon. Dr. Palanivel Thiaga Rajan:**<br>Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits and Statistics |
| 28. **Minister for Milk & Dairy Development** | .. | **The Hon. Thiru S.M. Nasar:**<br>Milk and Dairy Development |
| 29. **Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare** | .. | **The Hon. Thiru Gingee K.S. Masthan:**<br>Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board |
| 30. **Minister for School Education** | .. | **The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:**<br>School Education |
| 31. **Minister for Environment and Climate Change** | .. | **The Hon. Thiru Siva.V. Meyyanathan:**<br>Environment and Pollution Control and Ex–Servicemen |
| 32. **Minister for Labour Welfare and Skill Development** | .. | **The Hon. Thiru C.V. Ganesan:**<br>Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment |
| 33. **Minister for Information Technology and Digital Services** | .. | **The Hon. Thiru T. Mano Thangaraj:**<br>Information Technology and Digital Services |
| 34. **Minister for Forests** | .. | **The Hon. Dr. M. Mathiventhan:**<br>Forests |
| 35. **Minister for Adi Dravidar Welfare** | .. | **The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. மு. அப்பாவு*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி*

## மாற்றுத் தலைவர்கள்#

*திரு. க. அன்பழகன்*

*திரு. நா. இராமகிருஷ்ணன்*

*திரு. S.R. இராஜா*

*திரு. தா. உதயசூரியன்*

*திரு. துரை. சந்திரசேகரன்*

*முனைவர் T.R.B. ராஜா*

## செயலாளர்

*முனைவர் கி. சீனிவாசன்*

---

\# *11–1–2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

## முக்கிய அலுவலர்கள்

| | |
|---|---|
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.எல். | .. சிறப்புச் செயலாளர் |
| திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. | .. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை) |
| திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். | .. மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை) |
| திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) மாற்றுப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர் |
| திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஸ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல். | .. | குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு) |
| திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. | குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) மாற்றுப் பணியில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர் |
| திருமதி வி. விமலா தேவி, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திரு. கோ. வரதராஜன், பி.காம்., எம்.பி.ஏ., எல்.எல்.பி. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ஆர். மலர்விழி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ஏ. மகாலட்சுமி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி பாஸ்ஹரிதேசிங், பி.காம், பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்
## (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. போளூர் |
| 2. | அசன் மௌலானா, திரு. JMH. | .. வேளச்சேரி |
| 3. | அசோகன், திரு. G. | .. சிவகாசி |
| 4. | அசோக்குமார், திரு. கி. | .. கிருஷ்ணகிரி |
| 5. | அசோக்குமார், திரு. N. | .. பேராவூரணி |
| 6. | அண்ணாதுரை, திரு. கா. | .. பட்டுக்கோட்டை |
| 7. | அப்துல் சமது, திரு. ப. | .. மணப்பாறை |
| 8. | அப்துல் வஹாப், திரு. மு. | .. பாளையங்கோட்டை |
| 9. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 10. | அமலு, திருமதி V. | .. குடியாத்தம் (தனி) |
| 11. | அமுல் கந்தசாமி, திரு. T.K. | .. வால்பாறை (தனி) |
| 12. | அம்பேத்குமார், திரு. S. | .. வந்தவாசி (தனி) |
| 13. | அம்மன் K. அர்ச்சுணன், திரு. | .. கோயம்புத்தூர் (வடக்கு) |
| 14. | அய்யப்பன், திரு. பி. | .. உசிலம்பட்டி |
| 15. | அரவிந்த் ரமேஷ், திரு. ச. | .. சோழிங்கநல்லூர் |
| 16. | அருண்குமார், திரு. P.R.G. | .. கவுண்டம்பாளையம் |
| 17. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. புவனகிரி |
| 18. | அருள், திரு. இரா. | .. சேலம் (மேற்கு) |
| 19. | அர்ஜுனன், திரு. பொ. | .. திண்டிவனம் (தனி) |
| 20. | அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 21. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 22. | அன்பழகன், திரு. க. | .. கும்பகோணம் |
| 23. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 24. | அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு. | .. திருவெறும்பூர் |
| 25. | ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். | .. பல்லடம் |
| 26. | இசக்கி சுப்பையா, முனைவர் | .. அம்பாசமுத்திரம் |
| 27. | இராசேந்திரன், திரு. சபா. | .. நெய்வேலி |

| | | |
|---|---|---|
| 28. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ட்டி. | .. தளி |
| 30. | இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R. | .. அருப்புக்கோட்டை |
| 31. | இராஜா, திரு. S.R. | .. தாம்பரம் |
| 32. | இராஜேந்திரன், திரு. இரா. | .. சேலம் (வடக்கு) |
| 33. | இராஜேந்திரன், திரு. வி.ஜி. | .. திருவள்ளூர் |
| 34. | இலட்சுமணன், டாக்டர் இரா. | .. விழுப்புரம் |
| 35. | இளங்கோ, திரு. ரா. | .. அரவக்குறிச்சி |
| 36. | இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச. | .. ஈரோடு (கிழக்கு) |
| 37. | இனிகோ இருதயராஜ், முனைவர் த. | .. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) |
| 38. | ஈஸ்வரப்பன், திரு. J.L. | .. ஆற்காடு |
| 39. | ஈஸ்வரன், திரு. ஈ.ஆர். | .. திருச்செங்கோடு |
| 40. | உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. | .. உடுமலைப்பேட்டை |
| 41. | உதயகுமார், திரு. ஆர்.பி. | .. திருமங்கலம் |
| 42. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 43. | உதயநிதி ஸ்டாலின், திரு. | .. சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி |
| 44. | ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ. | .. ஸ்ரீவைகுண்டம் |
| 45. | எடப்பாடி K. பழனிசாமி, திரு. | .. எடப்பாடி |
| 46. | எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 47. | எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. | .. காஞ்சிபுரம் |
| 48. | எழிலன், டாக்டர் நா. | .. ஆயிரம் விளக்கு |
| 49. | ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு. | .. இராயபுரம் |
| 50. | ஐயப்பன், திரு. கோ. | .. கடலூர் |
| 51. | கடம்பூர் ராஜூ, திரு. | .. கோவில்பட்டி |
| 52. | கணபதி, திரு. க. | .. மதுரவாயல் |
| 53. | கணேசன், திரு. சி.வி. | .. திட்டக்குடி (தனி) |
| 54. | கணேஷ், திரு. ஆர். | .. உதகமண்டலம் |
| 55. | கண்ணன், திரு. க.சொ.க. | .. ஜெயங்கொண்டம் |
| 56. | கதிரவன், திரு. சீ. | .. மண்ணச்சநல்லூர் |

57. கந்தசாமி, திரு. V.P. .. சூலூர்
58. கயல்விழி செல்வராஜ், திருமதி என். .. தாராபுரம் (தனி)
59. கருணாநிதி, திரு. இ. .. பல்லாவரம்
60. கருணாநிதி, திரு. ஜெ. .. தியாகராய நகர்
61. கருப்பணன், திரு. K.C. .. பவானி
62. கருமாணிக்கம், திரு. இராம. .. திருவாடனை
63. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு. .. இராமநாதபுரம்
64. காந்தி, திரு. ஆர். .. ராணிப்பேட்டை
65. காந்தி, திரு. எம்.ஆர். .. நாகர்கோவில்
66. காந்திராஜன், திரு. எஸ். .. வேடசந்தூர்
67. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்
68. கார்த்திகேயன், திரு. க. .. ரிஷிவந்தியம்
69. கார்த்திகேயன், திரு. ப. .. வேலூர்
70. கிரி, திரு. மு.பெ. .. செங்கம் (தனி)
71. கிருஷ்ணசாமி, திரு. ஆ. .. பூந்தமல்லி (தனி)
72. கிருஷ்ணமுரளி, திரு. செ. .. கடையநல்லூர்
73. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
74. கோவிந்தசாமி, திரு. ஆ. .. பாப்பிரெட்டிப்பட்டி
75. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ. .. கும்மிடிப்பூண்டி
76. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
77. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (தனி)
78. சங்கர், திரு. கே.பி. .. திருவொற்றியூர்
79. சண்முகையா, திரு. எம்.சி. .. ஒட்டப்பிடாரம் (தனி)
80. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (தனி)
81. சதாசிவம், திரு. S. .. மேட்டூர்
82. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
83. சந்திரசேகர், திரு. துரை. .. பொன்னேரி (தனி)
84. சந்திரன், திரு. S. .. திருத்தணி
85. சம்பத்குமார், திரு. வே. .. அரூர் (தனி)
86. சரவணக்குமார், திரு. கே.எஸ். .. பெரியகுளம் (தனி)

87. சரவணன், திரு. பெ.சு.தி. .. கலசப்பாக்கம்
88. சரஸ்வதி, டாக்டர் சி. .. மொடக்குறிச்சி
89. சாமிநாதன், திரு. மு.பெ. .. காங்கேயம்
90. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வ.)
91. சிந்தனை செல்வன், திரு. ம. .. காட்டுமன்னார் கோவில் (தனி)
92. சிவகாமசுந்தரி, திருமதி க. .. கிருஷ்ணராயபுரம் (தனி)
93. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (தனி)
94. சிவகுமார், திரு. ச. .. மயிலம்
95. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
96. சின்னதுரை, திரு. மா. .. கந்தர்வகோட்டை (தனி)
97. சின்னப்பா, திரு. கு. .. அரியலூர்
98. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
99. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
100. சுந்தரராஜன், திரு. செ. .. சங்கரி
101. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
102. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை
103. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிபாளையம்
104. செஞ்சி K.S. மஸ்தான், திரு. .. செஞ்சி
105. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
106. செந்தில் குமார், திரு. கோ. .. வாணியம்பாடி
107. செந்தில்குமார், திரு. மா. .. கள்ளக்குறிச்சி (தனி)
108. செந்தில்நாதன், திரு. பெரி. .. சிவகங்கை
109. செந்தில்பாலாஜி, திரு. V. .. கரூர்
110. செல்லூர் கே. ராஜூ திரு. .. மதுரை (மேற்கு)
111. செல்வபெருந்தகை, திரு. கு. .. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112. செல்வராஜ், திரு. க. .. திருப்பூர் தெற்கு
113. செல்வராஜ், திரு. A.K. .. மேட்டுப்பாளையம்
114. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (தனி)
115. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்
116. சேகர், திரு. S. .. பரமத்தி-வேலூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| | |
|---|---|
| 117. சேகர்பாபு, திரு. பி.கே. | .. துறைமுகம் |
| 118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |
| 119. சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. லால்குடி |
| 120. தங்கப்பாண்டியன், திரு. எஸ். | .. ராஜபாளையம் |
| 121. தங்கமணி, திரு. பி. | .. குமாரபாளையம் |
| 122. தங்கம் தென்னரசு, திரு. | .. திருச்சுழி |
| 123. தமிழரசி, திருமதி ஆ. | .. மானாமதுரை (தனி) |
| 124. தமிழ்செல்வம், திரு. T.M. | .. ஊத்தங்கரை (தனி) |
| 125. தளபதி, திரு. கோ. | .. மதுரை (வடக்கு) |
| 126. தளவாய் சுந்தரம், திரு. ந. | .. கன்னியாகுமரி |
| 127. தனபால், திரு. ப. | .. அவினாசி (தனி) |
| 128. தாமோதரன், திரு. செ. | .. கிணத்துக்கடவு |
| 129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. | .. திண்டுக்கல் |
| 130. தியாகராஜன், திரு. ந. | .. முசிறி |
| 131. துரைமுருகன், திரு. | .. காட்பாடி |
| 132. தேவராஜி, திரு. க. | .. ஜோலார்பேட்டை |
| 133. தேன்மொழி, திருமதி எஸ். | .. நிலக்கோட்டை (தனி) |
| 134. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. | .. நத்தம் |
| 135. நந்தகுமார், திரு. A.P. | .. அணைக்கட்டு |
| 136. நயினார் நாகேந்திரன், திரு. | .. திருநெல்வேலி |
| 137. நல்லதம்பி, திரு. அ. | .. கெங்கவல்லி (தனி) |
| 138. நல்லதம்பி, திரு. A. | .. திருப்பத்தூர் |
| 139. நாகைமாலி, திரு. வி.பி. | .. கீழ்வேளூர் (தனி) |
| 140. நாசர், திரு. சா.மு. | .. ஆவடி |
| 141. நிவேதா எம். முருகன், திரு. | .. பூம்புகார் |
| 142. நீலமேகம், திரு. டி.கே.ஜி. | .. தஞ்சாவூர் |
| 143. நேரு, திரு. கே.என். | .. திருச்சிராப்பள்ளி (மேற்கு) |
| 144. பண்ணாரி, திரு. அ. | .. பவானிசாகர் (தனி) |
| 145. பரந்தாமன், திரு. இ. | .. எழும்பூர் (தனி) |
| 146. பழனி நாடார், திரு. S. | .. தென்காசி |
| 147. பழனியாண்டி, திரு. மொ. | .. ஸ்ரீரங்கம் |

148. பழனிவேல் தியாக ராஜன், முனைவர் .. மதுரை (மத்தி)
149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
150. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
151. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (தனி)
152. பாண்டியன், திரு. K.A. .. சிதம்பரம்
153. பாபு, திரு. மு. .. செய்யூர் (தனி)
154. பாலசுப்ரமணியன், திரு. ஈ. .. சேலம் (தெற்கு)
155. பாலாஜி, திரு. S.S. .. திருப்போரூர்
156. பால் மனோஜ் பாண்டியன், திரு. .. ஆலங்குளம்
157. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்
158. பிரகாஷ், திரு. ஒய். .. ஓசூர்
159. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி. .. விருகம்பாக்கம்
160. பிரபாகரன், திரு. ம. .. பெரம்பலூர் (தனி)
161. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
162. புகழேந்தி, திரு. நா. .. விக்கிரவாண்டி
163. பூண்டி கே. கலைவாணன், திரு. .. திருவாரூர்
164. பூமிநாதன், திரு. மு. .. மதுரை (தெற்கு)
165. பெரியகருப்பன், திரு. கேஆர். .. திருப்பத்தூர்
166. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
167. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்
168. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி
169. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்
170. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வ.)
171. மகாராஜன், திரு. ஆ. .. ஆண்டிப்பட்டி
172. மகேந்திரன், திரு. சி. .. மடத்துக்குளம்
173. மணி, திரு. ரா. .. ஓமலூர்
174. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
175. மணிக்கண்ணன், திரு. A.J. .. உளுந்தூர்பேட்டை
176. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்

177. மதியழகன், திரு. தே. .. பர்கூர்
178. மதிவேந்தன், டாக்டர் மா. .. ராசிபுரம் (தனி)
179. மரகதம் குமரவேல், திருமதி கு. .. மதுராந்தகம் (தனி)
180. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்
181. மாங்குடி, திரு. சா. .. காரைக்குடி
182. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
183. மாரிமுத்து, திரு. K. .. திருத்துறைப்பூண்டி (தனி)
184. மார்க்கண்டேயன், திரு. G.V. .. விளாத்திகுளம்
185. மான்ராஜ், திரு. இ.மா. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
186. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. .. நாகப்பட்டினம்
187. முத்துசாமி, திரு. சு. .. ஈரோடு (மேற்கு)
188. முத்துராஜா, டாக்டர் வை. .. புதுக்கோட்டை
189. முருகேசன், திரு. செ. .. பரமக்குடி (தனி)
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
191. முனுசாமி, திரு. கே.பி. .. வேப்பனஹள்ளி
192. மூர்த்தி, திரு. பி. .. மதுரை (கிழக்கு)
193. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி
194. மோகன், திரு. M.K. .. அண்ணா நகர்
195. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்
196. ரகுராமன், திரு. A.R.R. .. சாத்தூர்
197. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (தனி)
198. ராதாகிருஷ்ணன், திரு. R. .. விருத்தாசலம்
199. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
200. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
201. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
202. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
203. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
204. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
205. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
206. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
207. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி
208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்

209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. K.N. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G. .. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ. .. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. .. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ. .. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த. .. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு. .. கீழ்வைத்திணான்குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S. .. பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P. .. ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன். .. கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர். .. சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு. .. அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஒ. .. செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (தனி)

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 22, திருவள்ளுவர் ஆண்டு—2054

## 2023 ஏப்ரல் 5, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:*

*"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்."*

*விளைந்த பயிரைப் பார்த்தாலே இது எந்த நிலத்தில் விளைந்தது என்று அறிந்து கொள்ளலாம். அதேபோல ஒருவரின் வாய்ச் சொல்லைக் கேட்டே அவர் எத்தகைய குடியில் பிறந்தவர் என்பதை உணர்ந்துகொள்ளலாம்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 101, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

*வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**102—**

### கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***49969—திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 5*

*நத்தம் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நத்தம் தொகுதி அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் தற்பொழுது ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், மூன்று அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 19 சுயநிதிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, ஓர் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், 12 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 14 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், நத்தம் தொகுதியில் புதியதாகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

**திரு. செல்லூர் கே. ராஜூ:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள் வந்துவிட்டார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ, உங்களுக்குக் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.*

**திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, முழுக்க முழுக்க கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய தொகுதியாகும். அங்கு நகராட்சி கிடையாது. அங்கு ஒரே ஒரு பேரூராட்சிதான் இருக்கிறது. கிராமப்புற மக்கள் அதிகமாக வசிக்கின்ற இந்தப் பகுதியில், கிராமப்புற மாணவ, மாணவிகள் அனைவரும் உயர் கல்வி படிப்பதற்கு வசதியாக*

*2023 ஏப்ரல் 5*]
*அரசின் சார்பாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில், பல அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளிலேயே மாணவ, மாணவியர்கள் சேராமல் இப்போது காலியிடங்கள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, 16,201 இடங்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கே சேர்ந்திருக்கும் மாணவர்கள் 7,093. 9,108 இடங்கள் காலியாக இருக்கின்றன. மேலும், திண்டுக்கல் மாவட்டத்தில் போன வருடம்தான் இரண்டு அரசு கலைக் கல்லூரிகள் புதிதாகத் துவங்கப்பட்டிருக்கின்றன. உங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை என்று நீங்கள் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற முறையே எந்தெந்த தொகுதிகளிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லையோ அங்கேயெல்லாம் அரசு கலைக் கல்லூரிகளை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். கல்லூரிகள் அறிவிக்கப்படுகிறபோது, உங்கள் தொகுதிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, நிச்சயமாக அதுவும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள்.*

**திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் கல்லூரிகள் பல இருந்தாலுங்கூட, அரசு கல்லூரி இல்லை என்பதால்தான், ஏழை மாணவ, மாணவியர்கள் படிப்பதற்கு வசதியாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றேன். மானியக் கோரிக்கையில் ஏற்கெனவே நான் பேசுகின்றபோதுகூட இதைச் சொல்லியிருக்கின்றேன். அதாவது,*

*அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத்தர அனுமதி அளிக்கப்படுமேயானால், கல்லூரி அமைப்பதற்குரிய தேவையான இடத்தை எனது சொந்தப் பொறுப்பிலேயே வழங்குகின்றேன் என்றுகூட சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் பகுதியில் ஒட்டுமொத்தமாக அதிக கல்லூரிகள் இருக்கின்றன என்று சொல்லி தட்டிக் கழித்துவிடாமல், நத்தம் தொகுதியிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லையென்பதால், சட்டமன்றத் தொகுதிக்கு ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வரவேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலாவது, நத்தம் பகுதியிலுள்ள மாணவ, மாணவியர்கள் பயனடைகின்ற வகையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி, ஆளுங்கட்சி என்றெல்லாம் பார்க்காமல் (குறுக்கீடு) உடனே கையாட்டுகிறார் பாருங்கள். அவருடைய தொகுதியிலும் நாங்கள் சென்ற ஆண்டு கல்லூரியைத் தொடங்கியிருக்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களுடைய தொகுதியிலும் கல்லூரி தொடங்கியிருக்கிறீர்கள்.*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *கோரிய எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பது மிகவும் நியாயமான கோரிக்கை. அந்த அடிப்படையில் அதைச் செய்து தருவதற்கான சில சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே திண்டுக்கல் மாவட்டத்தில்தான் இடம் இருக்கிறது; நத்தம் தொகுதியில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நத்தம்*

*2023 ஏப்ரல் 5*]

*தொகுதியில் மட்டும் தனியார் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்கள் 3,725. ஆனால், கல்லூரிகளில் சேர்ந்திருப்பவர்கள் 1,643 பேர். 2082 இடங்கள் காலியாகத்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கே தனியார் கல்லூரிகள்தான் இருக்கின்றன. அங்கு அரசுக் கல்லூரிகள் இல்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, வெகுவிரைவில் நிதிநிலைக்கேற்ப புதியதாக கல்லூரியை உருவாக்குவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் யார் கேட்டாலும்—திரு. ஜி.கே. மணி அவர்களும் இதே கோரிக்கையைக் கேட்டிருக்கிறார்கள்—எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவர்களுடைய கோரிக்கைகளையும் கேட்டு, எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். தோழமைக் கட்சியிலிருக்கின்ற திரு. செல்வபெருந்தகை அவர்கள் இதே கோரிக்கையைக் கேட்டிருந்தார்கள். அவரது தொகுதியிலும் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறோம். கம்யூனிஸ்ட் உறுப்பினர்களும் கைதூக்குகிறார்கள். எல்லோரும் கேட்டு, எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, உங்களுடைய கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, வருங்காலத்தில் ஓர் அரசு கலைக் கல்லூரியை அந்தப் பகுதியில் உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை நிச்சயமாகச் செய்வார் என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

**திரு. செல்லூர் கே. ராஜூ:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு தொகுதியில் ஓர் அரசு கல்லூரிகூட கிடையாது. இன்னும் சொல்லப்போனால், மதுரை மாநகரிலேயே ஓர் அரசு கல்லூரிதான் 1962–ல் தொடங்கப்பட்டது; அதற்குப் பிறகு எந்தக் கல்லூரியும் தொடங்கப்படவில்லை. அதுவும் மகளிர் கல்லூரி மட்டுமே இருக்கிறது. மற்றவையெல்லாம் தனியார் கல்லூரிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதியில் எந்தவொரு அரசு கல்லூரியும் இல்லாமல் இருக்கிறது. எங்கள் தொகுதியில் விளாங்குடி பகுதியில் ஏறத்தாழ 3½ ஏக்கர் நத்தம் புறம்போக்கு இடம் காலியாக இருக்கிறது. நான் ஏற்கெனவே மாண்புமிகு*

அமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து முதலில் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 10 ஆண்டுகள் நீங்கள் அமைச்சராக இருந்தும் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக அங்கு கல்லூரியைத் தொடங்க அனுமதி கொடுப்பார்கள்; நான் அதை வாங்கிக் கொடுப்பேன் என்று கடந்த ஆண்டிலும் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நிறைவேற்றித் தரச் சொல்லுங்கள். அதை வாங்கித் தருவது உங்கள் கையில்தான் இருக்கிறது என்பதைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் அவர்களே கோரிக்கை வைக்க வேண்டிய கட்டாயம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடுதான் நீங்களும் இந்தக் கேள்விகளை எழுப்பிக்கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரையைப் பொறுத்தவரையில், மதுரை பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளெல்லாம் அரசு கல்லூரிகளாக ஏற்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும் 6+1=7 உறுப்புக் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் இதுகுறித்துதான் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் அரசு கல்லூரிகளாக்கப்படும். மதுரையைப் பொறுத்தவரையில், கல்வியில் மிகச் சிறந்திருப்பதால்தான் பல்கலைக்கழகம் அங்கே இருக்கிறது. ஆகவே, உங்களுடைய கோரிக்கையை ஏற்று, வருங்காலங்களில் தேவை ஏற்படின் அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நான் கேட்காமலேயே சபாநாயகராகிய என்னுடைய தொகுதியில் திசையன்விளை, பணகுடி ஆகிய பகுதிகளில் உள்ள இரண்டு உறுப்புக் கல்லூரிகளும் அரசு கல்லூரிகளாக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

*2023 ஏப்ரல் 5*]

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கிராமங்களை உள்ளடக்கிய தொகுதிகளாக கீழ்பெண்ணாத்தூர், செங்கம் போன்ற தொகுதிகள் இருக்கின்றன. நகரத்திலுள்ள தொகுதிகளில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன. ஆனால், கிராமப்புறங்கள் உள்ள தொகுதிகளில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படாமல், இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கான இடத்தைக் கொடுத்து, ஏற்கெனவே ரூ.1 கோடி டெபாசிட் செய்தால் புதிய கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கப்படும் என்று கடந்த காலத்தில் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டன. அப்படி அதற்கான தொகையை டெபாசிட் செய்து, அதற்கான இடத்தையும் வழங்கினால் அதுபோன்ற இடங்களில் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா? கீழ்பெண்ணாத்தூர் கிராமங்கள் நிறைந்த பகுதி. அந்த கிராமப்புற மக்களை முன்னேற்றுவதற்காக ஓர் அரசு கல்லூரியைத் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தை அறிவித்து, ஒவ்வொரு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தங்கள் தொகுதிக்குட்பட்ட 10 கோரிக்கைகளை அரசுக்கு தெரிவிக்கலாம் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அதோடு விட்டுவிடவில்லை. அந்த அடிப்படையில் அமைச்சர்களையெல்லாம் அழைத்துப் பேசி, சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்ட கோரிக்கைகளில், உங்கள் துறையில் எத்தனை கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்று கேட்டார். அதைப் பரிசீலித்தபோது, 46 சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய தொகுதிகளுக்குள்ளே கல்லூரி வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அந்த 46 சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளில் அரசு கலைக் கல்லூரியே இல்லாத தொகுதி எத்தனை என்று பார்த்தபோது, 26 தொகுதிகள் இருந்தன. அவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள்.*

ஆகவே, நல்ல கல்லூரிகளெல்லாம் திருவண்ணாமலையில் இருப்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்களுக்குத் தெரியும். கீழ்பெண்ணாத்தூர் ஒரு கிராமம்தான். அதுவும் எனக்கு தெரிந்த ஊர்தான். ஆகவே, உங்களுடைய கோரிக்கைகளெல்லாம் படிப்படியாகப் பரிசீலிக்கப்பட்டு, வெகுவிரைவில் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**103—**

## மேம்பாலம்

***58264—திரு. A.R.R. ரகுராமன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் சாத்தூர் நகரம், படந்தால் சந்திப்பு அருகே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மதுரை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை N.H. 44, கி.மீ. 78–ல் உள்ள படந்தால் விலக்கு என்ற பகுதியில் ஏற்படும் விபத்துகளைக் குறைக்கும்பொருட்டு வாகன கீழ்ப்பாலம் அமைப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.

2023 ஏப்ரல் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.

**திரு. A.R.R. ரகுராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டித் தருவதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். துணைக் கேள்வி ஒன்றையும் கேட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள். 2 கேள்விகள் இருக்கின்றன. இந்த கேள்வி இல்லாமல், ஒரு கேள்வியைக் கேளுங்கள், இன்னொரு கேள்வியையும் கேளுங்கள்.

**திரு. A.R.R. ரகுராமன்:** சாத்தூர் தொகுதியில் இதுவரை இருந்த தரைமட்டப் பாலத்திற்குப் பதில் மேம்பாலம் கட்டிக் கொடுத்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாத்தூர் நகரிலிருந்து தாயில்பட்டி செல்லும் வழியில் ரெங்கநாயகி கல்லூரி அருகில் தரைப் பாலம் ஒன்று உள்ளது. அதையும் மேம்பாலமாகக் கட்டித்தர ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற சாத்தூர்—திருவேங்கடம் சாலையிலுள்ள தரைப் பாலத்தை ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் 2023–2024 ஆம் ஆண்டு உயர்மட்டப் பாலமாக அமைப்பதற்கு இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.

**திரு. A.R.R. ரகுராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆலங்குளத்திலிருந்து வளையப்பட்டி செல்லும் வழியில் தரைப்பாலம் ஒன்று உள்ளது. ஆலங்குளம்

என்னுடைய சொந்த ஊர். அந்த ஊரில் தரைப்பாலத்தை மேம்பாலமாகக் கட்டிக்கொடுத்தால் எனக்கு சந்தோஷமாக இருக்கும். இதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கூட்டரங்கத்தில், சாலை பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையில் நான் ஒரு கூட்டம் ஏற்கெனவே நடத்தினேன். அதற்காக விருதுநகர் போகும்போது, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. K.K.S.S.R. அவர்களும், அதேபோன்று தொழில் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்களும், இந்த மாவட்டத்தில் எங்கெங்கெல்லாம் உயர்மட்டப் பாலம், தரைப்பாலம் கட்ட வேண்டுமென்பதற்கு ஒரு பட்டியலையே என்னிடம் தந்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் இது இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, படிப்படியாக நிதி நிலைமை எந்தளவிற்கு நமக்கு ஒத்துழைக்கிறதோ, அந்த அடிப்படையில் விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு இந்த அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலிருக்கிற மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள விக்கிரவாண்டி—தஞ்சாவூர் சாலைப் பணிகள் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆமை வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன. மத்திய அரசின் பணிகளை ஆய்வு செய்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டம் நடைபெறுகிறது. அந்த ஆய்வுக் கூட்டத்தில் பலதடவை பேசியதற்குப் பிறகும், இன்னும் அந்தப் பணிகள் மிக மிகத் தொய்வாக நடைபெறுகின்றன. என்றைக்கு அது முடியும் என்ற கேள்விக்குறியோடு இருக்கிறது. எனவே, விக்கிரவாண்டி—தஞ்சாவூர் சாலைப் பணிகளை விரைவாக முடித்துக்கொடுப்பதற்கு மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*2023 ஏப்ரல் 5*]

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் சாலை என்பது, மிக நீண்டகாலமாக அமைக்கப்பட்டு வருகின்ற சாலை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மேற்கொண்ட நமக்கு நாமே பயணத்தின்போதுகூட, இந்தச் சாலை எப்படி அமைக்கப்படும், எப்போது முடிக்கப்படும் என்கிற வினாவை அந்தப் பகுதியில் இருக்கின்ற பல கிராம மக்களும் எழுப்பினார்கள்.*

*அதேபோன்று, 6 மாதக் காலத்திற்கு முன்னர் கடலூர் மாவட்டத்திற்கு நான் சுற்றுப்பயணம் சென்றபோதுகூட, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும், காட்டுமன்னார்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர், திரு. ம. சிந்தனை செல்வன் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தினார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் உள்ளிட்ட தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வலியுறுத்தினார்கள். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிந்தது. இதற்காக ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களை நானே நேரடியாகச் சந்தித்து, கடிதங்களும் கொடுத்து, அதற்குப் பின்னர், ஒப்பந்ததாரர்களையெல்லாம் வலியுறுத்தியதன் அடிப்படையில், கூட்டங்கள் நடத்தப்பட்டு, இப்போதுதான் அந்தச் சாலைகள் விரைவாக அமைக்கின்ற நிலை வந்திருக்கிறது.*

*இந்தச் சாலைப் பணிகள் 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 711 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதல் பகுதி பணியை,* M/s. Reliance Infrastructure Ltd. *மேற்கொண்டு வருகிறது. அரசின் சார்பாக கொடுத்த அழுத்தத்தின் காரணமாக தற்போது,* package I*–ன் முன்பகுதி வேலை 45 சதவிகிதம் நடைபெற்றிருக்கிறது. அதற்கு முன்னர் பணிகள் நடைபெறாமல், 20, 25 சதவிகிதப் பணிகளுடன் அப்படியே நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது 45 சதவிகிதப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, 2–வது மற்றும் 3–வது பகுதி பணிகளை* M/s. Patel Infrastructure Ltd. *நிறுவனம்*

மேற்கொண்டு வருகிறது. 3–வது பகுதி சாலையின் நீளம் 47.835 கி.மீ. ஆகும். 3–வது கட்டப் பணிகள் 63 சதவிகிதமும், இரண்டாவது கட்டப் பணிகள் 70 சதவிகிதமும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து, படேல் நிறுவனத்தினரை நானே நேரடியாக அழைத்துப் பேசி, உடனே முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஜூன், 2024–க்குள் பணிகளை முழுமையாகச் செய்து, முடித்துக் கொடுத்து விடுவோம் என்று எங்களுக்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். வாராவாரம் ஆய்வு மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரையும் அறிவுறுத்தியிருக்கிறேன். எனவே, 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முழுமையாகச் சாலை அமைக்கப்பட்டுவிடும். கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாகக் கிடப்பிலே கிடந்த அந்தச் சாலை பணி ஜூன் 2024–க்குள் நிறைவு பெற்றுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.

**திருமதி கு. மரகதம் குமரவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மதுராந்தகம் தொகுதி, மேலவலம்பேட்டை பகுதி, GST சாலை சந்திப்பில், பொதுமக்கள் சாலையைக் கடக்கும்போது, அதிவேகமாக வருகின்ற வாகனங்களால் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. மேலும், இந்தத் தேசிய நெடுஞ்சாலையில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிற காரணத்தால், பொதுமக்களின் சிரமத்தைப் போக்க, மேலவலம்பேட்டை பகுதியில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் சாலை என்பது, வாரத்திற்கு 3 நாட்கள் நான் வந்து போகிற சாலைதான். ஏனெனில், நான் திருவண்ணாமலைக்காரன். அந்த வழியாகத்தான் வந்தாக வேண்டும். வேறு வழி கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினையை நானும் அறிவேன். அந்தச் சாலை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள சாலை என்கிற காரணத்தினால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சகோதரி

*2023 ஏப்ரல் 5]*

*அவர்கள் கோரியபடி, அந்தப் பகுதியில் மேம்பாலம் கட்டுவதற்கு இந்த அரசின் சார்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.*

**திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் சார்பாக நான்குவழிச் சாலைகள், இருவழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. அவ்வாறு அமைக்கப்படும்போது இரண்டு புறங்களிலும் வடிகால் வசதி கட்டப்படுகிறது. முதலில் வடிகால் கட்டி முடித்துவிட்டு, பின்னர் சாலைப் பணிகளை மேற்கொள்கிறார்கள். அந்தச் சாலைப் பணி முழுமையாக முடிவடைந்ததும், வடிகால் முழுமையாக மூடப்பட்டுவிடுகிறது. கழிவுநீர் மீண்டும் சாலை வழியாகத்தான் வருகின்றது, மழைநீர் செல்வதற்கும் வழி கிடையாது. எனவே, அதுபோன்று இருக்கின்ற பகுதிகளில், உதாரணமாக, தற்போது நடைபெற்று வருகின்ற திருச்செங்கோடு—ஈரோடு சாலைப் பணிகளைப் பார்த்தீர்களென்றால், அந்த வடிகால் மூடப்படுகின்ற சூழ்நிலையில்தான் இருக்கின்றது. அரசு, எந்த நோக்கத்திற்காக அந்த வடிகால்களை அமைக்கின்றதோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் இருக்கின்றது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் அதிகாரிகளை அழைத்து, முழுமையாகப் பணி முடிந்து, வடிகாலில் மழைநீர் செல்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நான் நேரடியாகப் பார்த்த அளவில், வடிகால் பணி என்பது பல இடங்களிலே அந்தச் சாலைகளின் மேல் பகுதிகளில் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால்*

அந்தச் சாலையிலிருந்து அந்தப் பகுதியிலே இருக்கிற வீடுகளுக்கோ அல்லது வியாபாரத் தலங்களுக்கோ போக முடியாத ஒரு நிலையை நானும் அறிந்திருக்கிறேன். சில நண்பர்கள்கூட எனக்கு இவற்றையெல்லாம் WhatsApp–ல் அனுப்பியிருந்தார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய தலைமைப் பொறியாளர், 10 அலகிலே சம்பந்தப்பட்டிருக்கிற கோட்டப் பொறியாளர்கள், அதைப்போன்று மேற்பார்வைப் பொறியாளர்கள் அளவில் ஒரு கூட்டம் நடத்தி, திட்ட மதிப்பீடுகளை ஏற்கெனவே எப்படி தயார் செய்திருந்தாலும் அந்த இடத்திற்கே சென்று, எந்த வகையிலே, மக்கள் பயனடைகிற அளவிற்கு அந்த வடிகாலை அமைக்க வேண்டும் என்றும், ஏற்கெனவே design–ல் இப்படியிருக்கிறது என்கிற காரணத்தினால், அந்தப் பகுதிக்கு மக்களே போக முடியாத அளவிற்கு அதை உயர்த்திப்போடுவது என்பது தவறு. எனவே, சாலையில் இருக்கிற அந்தப் பகுதியை மனதிலே வைத்துக் கொண்டு, வீடுகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் வியாபாரத் தலங்கள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அங்குபோய் design–ஐ மாற்றிவிட்டு, நீங்கள் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்றும், drainage என்பதை சாலைக்கு மேலே பயன்படுத்த முடியாத அளவிற்கு உயர்த்திப் போடுவது தவறு என்றும் துறையிலே இருக்கிற அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தியிருக்கிறேன். வருங்காலங்களிலே அது அவ்வாறுதான் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்

**திரு. ப. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய வேலூர் தொகுதியில் நேஷனல் தியேட்டரிலிருந்து தினத்தந்தி அலுவலகம் வரையில் மேம்பாலம் அந்த மேம்பாலம் மண்டித் தெருவில் இறங்குவதுபோன்று கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

*2023 ஏப்ரல் 5*]

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நேஷனல் தியேட்டர் என்பது ஒருகாலத்திலே புகழ்பெற்ற தியேட்டர். அங்கிருந்து கிருஷ்ணா நகர் வரைக்கும் அந்த மேல்மட்டப் பாலத்தை அமைக்க வேண்டுமென்பதுதான் சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை. ஏற்கெனவே அவர் என்னிடத்திலே இதுகுறித்து கடிதமும் தந்திருக்கிறார். ஒன்று; அதைச் செய்ய வேண்டும். இன்னொன்று; புகழ்பெற்ற* CMC Hospital–*க்கு அங்கே ஒரு சுரங்கப்பாதை அமைக்க வேண்டுமென்று இரண்டு கோரிக்கைகளை என்னிடத்திலே கடிதமாகத் தந்தார்கள். அவர்களிடத்திலே சொன்னேன்;* CMC Hospital–*யினுடைய* management *உடன் பேசி,* CMC *சார்ந்த இடங்களை நமக்குக் கொடுத்தால்தான் அந்தச் சுரங்கப்பாதையை அமைக்க முடியும். நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தினால்,* CMC Hospital–*ல் இருக்கிற மக்கள் தொடர்பு அதிகாரி உங்களுக்கு நண்பராக இருக்கிற காரணத்தினால் அந்த இடத்தை நீங்கள் வாங்கித் தாருங்கள்; சுரங்கப்பாதையைப் போடுகிறோமென்று நான் ஏற்கெனவே அவருக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறேன். அந்தப் பணிகளை அவர் மேற்கொள்ள வேண்டும் என்பது ஒன்று.*

*ஏற்கெனவே சொன்னதைப்போல, நேஷனல் தியேட்டரிலிருந்து அந்தப் பகுதியிலே இருக்கிற கிருஷ்ணா நகர் வரைக்கும் அந்த மேல்மட்டப் பாலத்தை அமைக்க வேண்டுமென்று சொன்னால், மிகவும் புகழ்பெற்ற பல வியாபாரத் தலங்கள் கிட்டத்தட்ட 30 ஆண்டுக்காலம், 40 ஆண்டுக்காலம் வியாபாரம் செய்கிற பல்வேறு கடைகள் இருக்கின்றன; அவையெல்லாம் பாதிக்கப்படும்—சட்டமன்ற உறுப்பினருக்கு ஓர் ஆதங்கம் என்னவென்று சொன்னால், எல்லா நகரங்களிலும், எல்லா மாநகராட்சிகளிலும் உள்ளன. இப்படி திருச்சியிலே மேம்பாலம் கட்டுகிறார்கள்; மதுரையிலே மேம்பாலம் கட்டுகிறார்கள்; கோயம்புத்தூரிலே மேம்பாலம் கட்டுகிறார்கள்; சேலத்திலே இருக்கிறது; அதைப்போன்று புகழ்பெற்ற நமது வேலூரிலும் இருக்க வேண்டுமென்ற ஆதங்கத்தில்தான் என்னிடத்திலே சொன்னார்கள். எனவே, நான் ஏற்கெனவே துறையினுடைய* design *சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து சொல்லியிருக்கிறேன்; இந்த வியாபாரத் தலங்களெல்லாம் பாதிக்காத அளவிற்கு முறையாக அந்த* design *வருமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு வேலூரிலே பாலம் கட்டுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடிலிருந்து கோபிசெட்டிபாளையம் வரையிலும் 4 வழிச் சாலைப் பணிகள் நிறைவடைகின்ற நிலையில் இருக்கின்றன. கோபி நகரத்தைப் பொறுத்தவரையிலும் குறுகிய சாலைகளாக இருக்கின்றன. அங்கே வணிக மையங்கள், பள்ளிக் கூடங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், புறவழிச் சாலை ஒன்றை அமைப்பதற்காக முந்தைய ஆட்சி காலத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அந்தப் பணிகள் குறித்து கடந்த ஆண்டே உங்களிடத்தில் கேட்டேன். அந்தப் பணிகளைத் துவங்குவதாக நீங்கள் சொன்னீர்கள். அந்தப் பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உங்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபிசெட்டிபாளையத்தை நானும் அறிந்தவன்தான். மாண்புமிகு முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களும் நானும், ஏறத்தாழ 1972—லிருந்து மிகவும் நண்பராக இருந்த காலங்களெல்லாம் உண்டு. கோபிசெட்டிபாளையத்திலே நாளுக்கு நாள் போக்குவரத்து அதிகமாக இருப்பதை அறிந்தவன். காரணம் என்னவென்று சொன்னால், பெரும்பான்மையாக கோபிசெட்டிப்பாளையம் மற்றும் அந்தப் பகுதிகளை மையமாக வைத்துதான், திரைப்படங்களெல்லாம் எடுத்துக்கொண்டிருப்பார்கள். அதனால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக அங்கு உண்டு.

முற்பகல் 10—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் நடித்ததாகச் சொல்கிறார்கள். (குறுக்கீடு) நீங்களும் நடித்ததாகச் சொல்கிறார்கள். நீங்கள் நடித்தீர்களா என்று பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** ஏனென்று சொன்னால் சம்பந்தப்பட்ட நண்பர்களோடு சேர்ந்து

*2023 ஏப்ரல் 5*]

*கோபிசெட்டிபாளையத்திலே மாதக் கணக்கிலே தங்கி சில திரைப்படங்களையெல்லாம் தயாரித்திருக்கின்ற காரணத்தால், எனக்கு மிகவும் பரிச்சயமான ஊர்தான் கோபிசெட்டிபாளையம். ஏற்கெனவே, சென்ற அரசாங்கம் அதற்கான முயற்சிகளையெல்லாம் எடுத்தது. அந்தப் புறவழிச் சாலை எப்போது அமைக்கப்படும் என்று கேட்கிறார்கள். அது கட்டாயம் வருவதிலே எனக்கு ஒன்றும் மாற்றுக்கருத்து இல்லை. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அரசினுடைய நிதிநிலைமை உங்களுக்கெல்லாம் தெரியும். ஏற்கெனவே 6 இலட்ம் கோடிக்குமேல் கடன் இருக்கிறது. வட்டி கட்ட வேண்டிய நிலை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே 234 தொகுதிகளிலும் தேவையிருக்கின்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சாலை போட வேண்டும் என்ற ஓர் அவா, ஆதங்கம் அல்லது போட வேண்டும் என்ற கடப்பாடு உங்களுக்கெல்லாம் இருப்பதை நான் அறிவேன். ஆனாலுங்கூட, ஈரோடை பொறுத்தளவுக்கு, கோபிசெட்டிபாளையத்திற்கு முன்னுரிமை அளித்து இந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, அதற்கு வேண்டிய முயற்சியை இந்த அரசாங்கம் எடுக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**104—**

## வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு

***8408—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, கீழப்பாவூர் கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கீழப்பாவூர் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் கீழப்பாவூர் கிராமம், புல எண் 1930/17–ல் 00140 ச.மீ. பரப்பளவில் கட்டப்பட்டு நாளது வரையில் நல்ல நிலையில் உள்ளது. ஆகவே, மேற்படி வருவாய் ஆய்வாளர் குடியிருப்புக் கட்டடம் புதியதாகக் கட்டுவதற்கு தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

**திரு. பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதியிலுள்ள சிவலாளர் குளம் வருவாய் கிராமம், ஒரு பெரிய கிராமமாகும். அதில் உள்ளடங்கியதுதான் நல்லூர் என்ற ஊர். அந்த நல்லூரை சிவலாளர் குளம் வருவாய் கிராமத்திலிருந்து பிரித்து தனி வருவாய் கிராமமாக அமைப்பதற்கும், அதேநேரத்தில், ஆலங்குளம் வருவாய் கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு ஒன்றைக் கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா, நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், நல்லூர் கிராமத்தை வருவாய் கிராமமாக அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் பத்து அம்சக் கோரிக்கைகளில் கொடுத்திருக்கிறேன் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லூர் கிராமத்தைப் பிரித்துத் தனி வருவாய் கிராமமாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மட்டுமல்ல எல்லா உறுப்பினர்களும் கேட்கிறார்கள்; நான் உட்பட கோரிக்கை வைக்கின்றோம். Revenue Villages—வருவாய் கிராமங்கள் அனைத்தும் பெரிது பெரிதாக இருக்கின்றன. அந்தக் காலத்தில் கிராம அலுவலர்களை

2023 ஏப்ரல் 5]

நியமிக்கும்போது மக்கள்தொகைக் குறைவாக இருந்தது; இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. ஆகையினால் அவற்றைப் பிரிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துகொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

**திரு. பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதியிலுள்ள கடையம் ஒன்றியம், அதிகமான வருவாய் கிராமங்களைக் கொண்ட ஒன்றியம். அங்கே அடைச்சாரி என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கிட்டத்தட்ட 40 கி.மீ. தொலைவிலுள்ள தென்காசி தாலுகாவிற்குச் செல்லக்கூடிய சூழ்நிலையைத் தாங்களும் அறிவீர்கள். கடையம் தாலுகாவைத் தனித் தாலுகாவாக அமைக்க வேண்டும் என்பது கடையம் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். கடந்த முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடையம் தாலுகாவைத் தனி தாலுகாவாக இந்த ஆண்டு அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்கள் தொகுதிகளிலே தாலுகாவைப் பிரித்து புதிய தாலுகாவை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப அந்தப் பணிகளெல்லாம் நடக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

**டாக்டர் நா. எழிலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதர பிற்படுத்தப்பட்டோர் 27 சதவிகித இடஒதுக்கீடு

சாதிச் சான்றிதழ் தொடர்பாக கேள்வியைக் கேட்கிறேன். ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிபவர்களின் வகைப்பாடுகளில், சாதிச் சான்றிதழ்களில் தனித் தனியாக வகைப்படுத்தி உள்ளார்கள். ஆனால் தமிழ்நாடு அரசின் உத்தரவுகளில் 4(2)(3) பிரிவில் பொதுவாக பொதுத்துறை ஊழியர்கள் என்று குறிப்பிட்டிருப்பதால், பொதுத் துறை நிறுவனங்களில் வேலை செய்யும் இடைநிலை, கடைநிலை ஊழியர்களுக்கு உரித்தான சாதிச் சான்றிதழ் கிடைக்காமல் சிக்கல் உள்ளது. பொதுத் துறை ஊழியர்கள் என்ற இப்பிரிவினை வகைப்படுத்தி, கடைநிலை ஊழியர்கள், இடைநிலை ஊழியர்கள் என்று பிரித்தால்தான், 27 சதவிகிதம் இடஒதுக்கீடு அவர்களுக்குப் போய்ச் சேருவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படும். இதனால் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவாய்த் துறையில் இதர பிற்படுத்தப்பட்டோர், பொதுத் துறை நிறுவனங்களில் இடைநிலை ஊழியர்கள், கடைநிலை ஊழியர்கள் என்று பிரித்தால், அவர்களுடைய குழந்தைகள் ஒன்றிய அரசின் வேலைவாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் சேர வாய்ப்பு ஏற்படும். இதர பிற்படுத்தப்பட்டோர் 27 சதவிகித இடஒதுக்கீடு சான்றிதழ் கிடைக்க வழி செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுசம்பந்தமாக ஏற்கெனவே என்னிடம் பேசியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக என்னுடைய துறை அதிகாரிகள் மத்தியிலும் நான் கலந்து பேசியிருக்கிறேன். என்னுடைய துறை சார்ந்த மானியக் கோரிக்கை முடிந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அழைத்துப் பேசி, அதற்கு வேண்டிய முடிவெடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.

**திரு. சா. மாங்குடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் காரைக்குடி

*2023 ஏப்ரல் 5*]

*நகர்ப் பகுதியில், அண்ணா நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பட்டாக்கள் வழங்கப்பட்டன. நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் இணைந்துதான் அந்தப் பட்டாக்களை வழங்கினார்கள். அந்தப் பட்டா வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் பட்டா வழங்க வேண்டுமென்றும், காரைக்குடி தொகுதிக்குட்பட்ட செக்காலக்கோட்டை, கழனிவாசல் பகுதிகளிலெல்லாம் பத்திரப் பதிவுகள் நடைபெறுகின்றன; ஆனால், பட்டா மாறுதல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் ஏற்கெனவே தகவல் தெரிவித்துள்ளேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், ஒரு கேள்வியைக் கேளுங்கள்.*

**திரு. சா. மாங்குடி:** *ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டாக்கள் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே பட்டாக்கள் வழங்கியிருக்கிறார்கள். அதுகுறித்து அரசினுடைய அடங்கலில் ஏற்றாமலும் இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து பட்டா வழங்குவதற்கும், இடங்கள் எங்கே இருக்கின்றன; அவர்கள் எத்தனை ஆண்டுக் காலமாகக் குடியிருந்து வருகிறார்கள் என்பதையெல்லாம் அரசினுடைய பரிசீலனையில் எடுத்து, அதற்கு வேண்டிய தொடர் நடவடிக்கைகளை எடுப்போம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.*

**திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் சுமார் 500 குடும்பங்கள் நிரந்தரமாக வீடுகள் கட்டி சுமார் 60 ஆண்டுக் காலமாக வசித்து வருகின்றனர். அவர்களுக்கு இதுவரை பட்டாக்கள் கிடைக்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் 500 குடும்பங்களுக்குப் பட்டா கேட்கிறார்கள். அவ்வளவுதான். அது என்னவென்ற விவரங்களைத் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** அந்த இடம் முழுவதும் belt area–ல் வருகிற காரணத்தினால், அங்கே பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அதைத் தவிர, அவர்கள் குடியிருக்கிற பகுதி எந்த category–ல், எந்தப் பிரிவில் இருக்கிறது என்பதையெல்லாம் சரிபார்த்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

**திரு. இரா. அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரத்தைப் பொறுத்தவரையில், 8 கிலோ மீட்டர் surrounding–க்கு பட்டா கொடுக்கக் கூடாது என்று ஏதோ ஓர் அரசு விதி இருக்கிறதாம். எங்களுக்கு மட்டுமல்ல; மாநகராட்சிப் பகுதிகளில் எல்லா இடங்களிலும் இந்தப் பிரச்சினை இருப்பதாகச் சொல்கின்றனர். கிட்டத்தட்ட 50, 60 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற குடும்பங்கள், அங்கே வீடுகள் கட்டி, குடும்பத்தோடு வசித்து வருகின்றனர். அவர்களிடம் Ration card, EB card, Aadhar card போன்றவையெல்லாம் இருக்கின்றன. அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டிலே, சென்னை

*2023 ஏப்ரல் 5*]

*உள்ளிட்ட பல மாநகராட்சிப் பகுதிகளெல்லாம்* belt area *என்று சொல்லி பட்டா வழங்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.* Court*–னுடைய உத்தரவும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, அதுசம்பந்தமாக ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

**திரு. க. கணபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 முதல் 2011 வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த நம்முடைய அன்புத் தலைவர் ஐயா கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் கிராம நத்தம் மனைகளுக்கெல்லாம் பட்டா கொடுத்தோம். அன்றைக்கு பல இலட்சக்கணக்கான மக்கள் பயன்பெற்றனர். இன்றைக்கு சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் அளவிற்கு* belt area *என்று சொல்கின்றனர்.* Belt area *என்று சொல்லக்கூடிய இடங்களுக்குப் பட்டா கிடையாது என்று தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார்கள். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அன்பிற்கினிய அண்ணன் தளபதி அவர்கள் இன்றைக்கு எண்ணற்ற திட்டங்களை, மக்கள் நலப் பணிகளைச் செய்து வருகிறார்கள். உதாரணத்திற்கு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களுக்கு என்ன கேள்வி?* (குறுக்கீடு) *யாருக்கு, என்ன செய்ய வேண்டும் என்பதைக் கேளுங்கள்.*

**திரு. க. கணபதி:** *ஒரேயொரு கேள்விதான், சொல்லிவிடுகிறேன். ஒரேயொரு விஷயம். மிகவும் முக்கியமான விஷயம். அதனால், பேசிவிடுகிறேன். உதாரணத்திற்கு ரூ.1,000 மகளிர் உரிமை தொகை என இப்படி எண்ணற்ற திட்டங்களை அறிவிக்கின்ற நம்முடைய கழக அரசு, இன்றைக்கு ஏழை மக்கள் பயன்பெறுகிற விதத்தில், இந்த* belt area *என்று சொல்லக்கூடிய அந்தச் சட்டத்தையே எடுத்துவிடலாமே என்று நான் சொல்கிறேன். என்ன காரணம் என்று சொன்னால், . . .*

[*2023 ஏப்ரல் 5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதை மறுபரிசீலனை செய்வீர்களா என்று கேளுங்கள்.*

**திரு. க. கணபதி:** *நாங்களெல்லாம் சுற்றியிருக்கிறோம். சென்னையைச் சுற்றியிருக்கிற இடங்களெல்லாம் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள். தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இலவசப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டன. ஆகவே, இதைக் காரணம் சொல்லி, இன்றைக்குப் பட்டா வழங்க மறுக்கப்படுகிறது. இதற்கு எப்படியாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனித் தீர்வு கண்டு, அனைத்து மக்களும் பயன்பெறும் விதத்திலே பட்டா வழங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவருக்கு சொன்ன பதில்தான் இவருக்கும் சொல்ல வருகிறேன்.* Belt area *குறித்து 1962 ஆம் ஆண்டே சட்டம் இயற்றப்பட்டு இருக்கின்றது. நம்முடைய சென்னை மாநகராட்சியைச் சுற்றியிருக்கின்ற பகுதிகள், சென்னையைச் சுற்றி 4 மாவட்டங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்துகிறது. ஆனால், 1962—ல் பல காரணங்களை வைத்து இதைச் செய்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து கொண்டு, இதை நாம் செய்தால் சாதக, பாதகங்கள் என்ன வரும்,* Belt area*—வில் இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கினால், எப்படி வழங்குவது, எத்தனை வருடங்களாக இருப்பவர்களுக்கு வழங்குவது, இப்பொழுதுகூட, 30 வருடங்கள், 40 வருடங்கள் ஆக்கிரமித்து இருப்பவர்களும் இருக்கிறார்கள். கடந்த 4 வருடங்கள், 5 வருடங்களாக ஆக்கிரமித்து குடியிருப்பவர்களும் இருக்கின்றார்கள். இதையெல்லாம் அரசு கவனத்தில் வைத்து பரிசீலித்து கொஞ்சம் நிதானமாகத்தான் முடிவு எடுக்க வேண்டும். இதை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், அந்த நான்கு மாவட்டங்களைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் என் கவனத்திற்குக் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்கள். நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேசி இதற்கு வேண்டிய முடிவு எடுக்கலாம். ஆனால், சாதக, பாதகங்களைப் பொறுத்துத்தான் முடிவு எடுக்க முடியும்.*

*2023 ஏப்ரல் 5*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.*

**திரு. சி. மகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமானத் தருணத்திலே, இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியதற்கு நன்றி. உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிகளிலே மக்களிடம் ஒரு சின்ன பதற்றம் நிலவுகிறது. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியையும், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியையும், பழனியோடு இணைத்து பழனி மாவட்டமாக உருவாக்கப் போவதாக செய்தித்தாள்களிலும், சமூக வலைதளங்களிலும் செய்தி பரவிக் கொண்டிருக்கிறது. என்னுடைய முகாம் அலுவலகத்திலே, கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான மக்கள் வந்து இதுபற்றி நேற்றிலிருந்து என்னிடம் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பழனி மாவட்டமாகப் பிரிப்பது மிகவும் முக்கியமானது. பழனி முக்கியமான ஸ்தலம். அதைத் திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியிலே இணைத்து பழனி மாவட்டத்தை உருவாக்க வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உருவாக்குவீர்களா என்று கேட்கிறீர்கள்.*

**திரு. சி. மகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம். அதனால்தான் உங்களுக்கு நன்றி சொன்னேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தற்போது மாவட்டத்தை உடனே பிரிக்கப்போவது இல்லை.*

**திரு. சி. மகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறேன். நீங்கள் மடத்துக்குளம், உடுமலைப்பேட்டையை பழனியோடு இணைக்காமல்,—உடுமலைப்பேட்டை குமணன் வாழ்ந்த மிக முக்கியமான புகழ்பெற்ற தலைநகரம். அதைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தலைநகரை உருவாக்க அரசு முன்வருமா அல்லது ஏற்கெனவே, பொள்ளாச்சியை மாவட்டமாக உருவாக்க அரசு முன்வருவதாகத் தகவல் வந்துள்ளது. இல்லையென்றால் பொள்ளாச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஹேஷ்யத்திற்கெல்லாம் வேண்டாம். உங்களுக்கு அது உருவாக்கப்படுமா என்று கேட்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். நேரம் இல்லை.

**திரு. சி. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலையை தலைநகரமாகக் கொண்டு மாவட்டம் உருவாக்கப்படுமா அல்லது பொள்ளாச்சியை தலைநகரமாகக் கொண்டு மாவட்டம் உருவாக்கப்படுமா என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்கே மாவட்டத்தைப் பிரிக்கிறோம் என்று சொன்னோம். சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் பெருமக்களும் இதுபோல கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அரசினுடைய கவனத்தில் இருக்கிறது என்றுதான் சொன்னோம்; பரிசீலிக்கப்படுகிறது என்று சொல்லவில்லை. அவரவர்கள் அவரவர்களுடைய சௌகரியத்திற்கு பத்திரிகையிலோ, YouTube–லோ பிரிப்போம் என தெரிவிக்கின்றனர். அப்படி நடக்காது. அப்படிப் பிரிக்க வேண்டிய காலம் வருகின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்தையெல்லாம் கேட்காமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுக்க மாட்டார்கள். அப்படிப் பிரிக்க நேரும் காலங்களில் நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து அந்தக் கோரிக்கையை வைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**105—**

## சிறப்பு நீதிமன்றம்

***152—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?*

*2023 ஏப்ரல் 5]*

**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*பாலியல் குற்ற வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக, தனி நீதிமன்றங்களைத் தமிழ்நாடு அரசு, உயர் நீதிமன்றத்தினுடைய அறிவுறுத்தலின்படி ஏற்கெனவே அமைத்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளுக்கான விசாரணை மிகக் காலதாமதமாக நடைபெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்; மகிழ்ச்சி. அனைத்து மாவட்டங்களிலும் இந்தச் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? மகளிர் நீதிமன்றம் அல்லாத சிறப்பு நீதிமன்றமாக இது செயல்படுகிறதா? தற்போது மகளிர் நீதிமன்றங்களில்தான் இந்த வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. அதைப்போல பல மகளிர் நீதிமன்றங்களிலே நீதிபதிகள், நீதிமன்ற ஊழியர்கள் காலிப் பணியிடங்கள் இருக்கக்கூடிய ஒரு சூழல் இருக்கின்றது. இவற்றையெல்லாம் நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று வினவ விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென 32 மகளிர் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி தரத்திலும், 33 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் குற்றவியல் நடுவர் தரத்திலும் தோற்றுவிக்கப்பட்டு, அவற்றில் 4 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் தவிர, மற்ற அனைத்து நீதிமன்றங்களும் இன்றைக்கு இயங்கி*

வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதித் துறையைப் பொறுத்தவரைக்கும், எல்லா இடங்களிலுமே நடுவர்கள் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீதிபதிகள் இருக்கிறார்கள். காலிப் பணியிடங்கள் இருந்தால் நிச்சயமாக அவற்றைப் பூர்த்தி செய்ய உயர் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், POCSO சட்டத்தின்கீழே வருகின்றன. உச்ச நீதிமன்றம் POCSO சட்டத்தின்கீழே குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளில் 6 மாதங்களில் விசாரணை முடிக்கப்பட வேண்டும். அடுத்த 6 மாதங்களில் மேல்முறையீடு முடிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றது. ஆனால், தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் மட்டும்தான் POCSO தொடர்பான, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வழக்குகளை விசாரிக்கக்கூடிய நீதிமன்றங்கள் இருக்கின்றன என்று தெரிய வருகிறது. மேலும், இந்த வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்படக்கூடிய விகிதம் மிகக் குறைவாக, வெறும் 14 விழுக்காடுதான் இருக்கின்றது என்று ஒரு புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே தெரிய வருகின்றது. இந்த வழக்குகளும் மிகவும் காலதாமதமாக நடைபெற்று வருகின்றன. உச்ச நீதிமன்றம் 6 மாதங்களில் முடிக்க வேண்டும் என்று சொன்னது 2012–ல். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், 2014 முதல் தேனியில் நடைபெற்ற ஒரு சிறுமி தொடர்பான பாலியல் வழக்கில் 2018–ல் 3 பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டு, அடுத்த மாதமே அவர்கள் விடுதலை பெற்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் வினவ விரும்புவது, காலதாமதமான தரமற்ற விசாரணையால் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க முடியாமல் குற்றவாளிகளை விடுதலை செய்யக்கூடிய இந்த நிலையை மாற்றுவதற்கு தரமான விசாரணையை நடத்துவதற்கு உரிய பயிற்சிகளை அரசுத் தரப்பு வழக்கறிஞர்களுக்கும், சட்ட அலுவலர்களுக்கும் அளித்து, அனைத்து மாவட்டங்களிலும் POCSO நீதிமன்றங்களை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், 16 நீதிமன்றங்கள் இன்றைக்கு POCSO வழக்குகளுக்காகச் செயல்பட்டு வருகின்றன. எங்கெங்கெல்லாம் 100 வழக்குகளுக்குமேல் POCSO–வில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவோ அந்த மாவட்டங்களிலே சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. 100 வழக்குகளுக்குக்கீழ் இருந்தால் அங்கே சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்படுவதில்லை. எனவேதான், 100 வழக்குகளுக்குமேல் இருக்கக்கூடிய 16 மாவட்டங்களிலே இன்றைக்குச் சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசைப் பொறுத்தவரைக்கும் விரைந்து விசாரணை என்பதிலே நாம் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதிமன்றத்திலே வாய்தா வாங்குவது போன்றவையெல்லாம் நீதித் துறை சம்பந்தப்பட்டவை. அங்கே காலதாமதம் ஏற்படுவதற்கு நிச்சயமாக அரசு வழக்கறிஞர்கள் எந்தக் காலத்திலும் உறுதுணையாக இருக்கமாட்டார்கள்; துணையும் போகமாட்டார்கள். உரிய காலத்தில் தங்களுக்குரிய மனுக்களை அவர்கள் அங்கே சமர்ப்பித்துவருகின்ற சூழ்நிலையைத்தான் இன்றுவரை நாங்கள் பார்த்துவருகின்றோம். எனவே, POCSO வழக்குகளிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அரசு இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 1–1–2021 முதல் 31–12–2021 வரை 1,820 வழக்குகள் பதியப்பட்டு, அவற்றிலே தீர்க்கப்பட்டுள்ள வழக்குகள் 753. அதைப்போல, 31–12–2022 வரை 1,860 வழக்குகள் பதியப்பட்டு அவற்றிலே தீர்க்கப்பட்டவை 842. எனவே, விரைந்துதான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். தண்டிக்கப்படக்கூடியவர்கள் 14 சதவிகிதம் என்பது தவறு; இந்த வழக்குகளில், ஏறக்குறைய 50 சதவிகிதத்தையொட்டி நாங்கள் தீர்வு கண்டு கொண்டிருக்கின்றோம். பழைய வழக்குகளுக்கும் சேர்த்துத்தான் இந்த அரசு விரைந்து தீர்வு கண்டு கொண்டிருக்கிறது. POCSO வழக்குகளைப் பொறுத்தவரையிலும், எந்தக் குற்றவாளியும் தப்பிக்கக் கூடாது

என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம், செயல் ஆகும். நிச்சயமாக குற்றவாளிகளைத் தப்பிக்கவிட மாட்டோம்.

முற்பகல் 10—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னப்பா அவர்கள்.

**திரு. கு. சின்னப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2007 ஆம் ஆண்டு அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது. ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டும் என்பது அம்மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகின்றது. தற்போது, பல்வேறு நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அரியலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் தெரிவித்திருக்கிறோம். அதற்கான திட்ட அறிக்கையும் அரசுக்கு வந்திருக்கிறது. ஆகவே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை உடனடியாக அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகளுடன் வந்து, உயர் நீதிமன்றத்திலேயே தாங்கள் இதுபற்றிய கோரிக்கையைத் தந்திருப்பது குறித்து தெரிவித்து, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றார்கள். உயர் நீதிமன்றமும் பரிந்துரை செய்திருக்கிறது. அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எனினும்கூட, தற்போதைய நிதிநிலைமையைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு, அதாவது, அனைத்து நீதிமன்றங்களையும் ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் கட்டுவதற்கு அதிகப்படியான நிதியாதாரங்கள் தேவைப்படுகின்றன. நீதித் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து, அனைத்துக் கட்டடங்களையும்

*2023 ஏப்ரல் 5*]

*ஒரே இடத்தில் கட்டுவதற்கு, அதாவது மாவட்ட நீதிமன்றம் உள்ளிட்ட மற்ற நீதிமன்றங்களையெல்லாம் ஒரே இடத்தில் கட்டுவதற்கு தற்போதைக்கு சாத்தியம் இல்லை. எனவேதான், நீதிமன்றங்களில் சில வாடகைக் கட்டடங்களிலும், சில சொந்தக் கட்டடங்களிலும், சில அரசுக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வருங்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**106—**

## மும்முனை மின்சாரம்

***11925—திரு. பெரி. செந்தில்நாதன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிவகங்கை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*விவசாயிகளுடைய நலன் கருதி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையிலும், இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரையிலும் என மொத்தம் 18 மணி நேரம் மும்முனை மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சிவகங்கை தொகுதியிலும் 18 மணி*

நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள்.*

**திரு. பெரி. செந்தில்நாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தெய்வங்களான முன்னாள் முதலமைச்சர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்கி, குடிமராமத்து நாயகர், கழகத்தினுடைய பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மிக வறட்சியான மாவட்டமாகும். ஒருபோக சாகுபடியிலேயே, விளைச்சல் வருகின்ற நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுகின்றது. அம்மாவட்ட மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றார்கள். ஆற்றுப் பாசனம் இல்லை. இதுபோன்ற மாவட்டங்களைச் சிறப்பு மாவட்டங்களாகக் கருதி, 24 மணி நேரமும் இலவச மும்முனை மின்சாரம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

**திரு. பெரி. செந்தில்நாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கத்தை அளிக்கிறேன். ஒருசில நேரங்களில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, அறுதலான விளைச்சல் வருகின்ற நேரங்களில், இலவச மின்சாரம் பெறுபவர்கள் பக்கத்து கிராமங்களில் பெரும்பாலும் வசதியான வீட்டுக்காரர்கள் மின் மோட்டார்கள் வைத்திருப்பார்கள்; அவர்களிடமிருந்து தண்ணீர் அடித்துக்கொள்ள வேண்டுமென்றால் அரசின் விதிகளில், அடுத்தவர்களுக்குத் தண்ணீர் அடிப்பதற்கு வழிவகை இல்லை. அதுபோன்ற மாவட்டங்களில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடியாகப் பார்த்துவிட்டு, அடுத்தவர்களுக்குத் தண்ணீர்*

*2023 ஏப்ரல் 5]*

*அடிப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும்; அல்லது அந்த ஒரு மாத காலத்தில் மட்டும்* temporary *ஆக பணம் கட்டிக்கொள்வதற்குக்கூட தயாராயிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனது வைத்தால், இதுபோன்று நடப்பதற்கு நிச்சயமாக வழிவகை ஏற்படும். இதனால், அந்த ஊரே பயன்படும். எங்களைப் போன்ற மாவட்டங்களில் ஒருபோக விளைச்சலுக்கு உத்தரவாதம் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரமும் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவாகும். அடிப்படைத் தேவைகளான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக்கூடிய பணிகள், குறிப்பாக சட்டமன்றத்தில் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும் 'துணை மின் நிலையம் அமைக்கவேண்டும்', 'புதிய மின்மாற்றிகள் அமைக்க வேண்டும்' என்பன உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகள் முடிந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24 மணி நேரமும் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளார்கள். மொத்தம் ஒன்றரை இலட்சம் விவசாயிகளில் 3,232 விவசாயிகள் சிவகங்கை மாவட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய உங்களுடைய தொகுதியிலிருந்து 863 விவசாயிகள் இலவச மின் இணைப்பைப் பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் ஒரு கருத்தை முன் வைத்திருக்கிறார். அதைத் துறை ரீதியாக ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*[2023 ஏப்ரல் 5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள்.*

**திரு. பெரி. செந்தில்நாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காளையார்கோவில், நாட்டரசன்கோட்டை, பாகனேரி, பணங்குடி போன்ற ஊர்களில் தேரோட்டம் மிகப் பிரசித்திப் பெற்றது. அந்தத் தேரோடும் வீதிகளிலே இருக்கக்கூடிய, மின் கம்பிகளைப் புதைவடக் கம்பிகளாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு இடங்களிலே அங்கு* low voltage *இருக்கிறது. 9 கிலோ மீட்டரிலே உள்ள கல்லல்* SS *அருகிலுள்ள வேப்பங்குளம் கிராமம், 32 கிலோ மீட்டரிலே உள்ள தேவகோட்டை* SS*–ல் தற்போது இருக்கிறது. எனவே, வேப்பங்குளம் கிராமத்தை 9 கிலோ மீட்டர் பக்கத்திலே இருக்கக்கூடிய கல்லல்* SS*–க்கு மாற்றித் தர வேண்டும். திருத்திப்பட்டி என்கிற கிராமத்திலும்* low voltage *இருக்கிறது. இந்த இரண்டையும் மாற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதியில் மின் இணைப்புகளில் இருக்கக்கூடிய* low voltage *பிரச்சினையைச் சரிசெய்வதற்கு மூன்று புதிய துணை மின் நிலையங்களின் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு அவற்றுக்கானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிற அந்தப் பகுதிகளில் இன்று அல்லது நாளை துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி எங்கெங்கே அந்த மாதிரியான குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து ஒரு வார காலத்திற்குள் அந்தப் பணிகளை நிறைவு செய்யுமாறு துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

*2023 ஏப்ரல் 5*]

**திரு. க.சொ.க. கண்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில், மீன்சுருட்டி பகுதியில் துணை மின் நிலையமும், அதேபோன்று* power grid *ஒன்றும் உள்ளது. ஆனால், அந்தப் பகுதியில் குறைந்த நேரமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. எனவே, அந்த டெல்டா பகுதியிலே உள்ள விவசாயிகள், பல்வேறு தொழில் செய்கின்றவர்கள் பயன்பெறுகின்ற விதத்தில் 24 மணி நேரமும் மீன்சுருட்டி பகுதிக்கு மும்முனை மின்சாரம் வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, ஏற்கெனவே இரண்டு துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். கூடுதலாக இந்த ஆண்டு ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கும் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். மூன்று புதிய துணை மின் நிலையங்கள் ஜெயங்கொண்டம் தொகுதியிலே அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அவர் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதிகளில் இந்தத் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்ட பிறகு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளைத் துறை எடுத்திருக்கிறது* (மேசையைத் தட்டும் ஒலி) *என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

**திரு. கடம்பூர் ராஜூ:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருவிழாக்காலங்களாக இருப்பதால், பல்வேறு நகர்ப்புறங்களிலே தேரோட்டம் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. அப்படித் தேரோட்டம் நடைபெறுகின்ற*

அந்தப் பகுதிகளிலே மட்டும் மின்சாரத்தை நிறுத்தாமல் நகர்ப்புறப் பகுதி முழுவதும் மின்சாரம் நிறுத்தப்படுகின்ற நேரத்திலே மக்கள் அவதிப்படுகிறார்கள். கோடைக் காலமாக இருக்கின்றது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு அந்தப் பகுதியிலே மட்டும் மின்சாரத்தை நிறுத்துவதற்கானப் பணியை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தத் திருக்கோயில் என்று சொன்னால் உடனடியாக அதுகுறித்து துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு தேரோட்டம் செல்லக்கூடிய அந்தப் பகுதிகளில் மட்டும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து உண்மையிலேயே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சிறிய மாவட்டம், வளம் நிறைந்த மாவட்டம், விவசாயிகள் அதிகமாக இருக்கக்கூடிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே 25 சென்ட் நிலம் இருந்தால்கூட பெரிய விவசாயி என்று சொல்லக்கூடிய சூழல் இருக்கிறது. ஆகவே 25, 30, 40 சென்ட் என்று நிலம் இருக்கக்கூடியவர்களுக்கு மின் இணைப்புகளைக் கொடுக்க, இலவச மின்சாரம் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வைத்திருக்கும்

*2023 ஏப்ரல் 5*]

*விவசாயிகள் ஏற்கெனவே இலட்சக்கணக்கானோர் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு முழுவதுமாக மின் இணைப்பு வழங்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைத் துறை பரிசீலிக்கும். ஏனென்றால், ஏற்கெனவே நான்கரை இலட்சம் பேர் பதிவு செய்து, ஒன்றரை இலட்சம் பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய விவசாயிகள், அதிகமான நிலப்பரப்பு கொண்ட, குறிப்பாக இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் இன்னும் காத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**107—**

**பேருந்து வசதி**

***18247—திரு. S.S. பாலாஜி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்போரூர் தொகுதி, கேளம்பாக்கம்–கோவளம்–மாமல்லபுரம்–திருப்போரூர் வழியாகச் சுற்றுவட்ட பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள், சுற்றுவட்ட வழித்தடத்தில் பேருந்து கோரியுள்ளார். ஏற்கெனவே, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில்*

இதுபோன்ற பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இயக்கப்பட்ட பேருந்துகளுக்குப் போதிய வரவேற்பு இல்லாமையின் காரணத்தினாலும், போதிய வருவாய் இல்லாத காரணத்தினாலும், அதுபோன்ற வழித்தடங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. எனவே, இப்போது அதுபோன்ற சுற்றுவட்ட வழித்தடப் பேருந்துகளை இயக்குவதற்கு போக்குவரத்துக் கழகத்தில் குறிப்பேதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

**திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளம்பாக்கம் என்பது சென்னை மாநகராட்சியிலிருந்து ECR பகுதிகளுக்குச் செல்லக்கூடிய ஒரு மைய பகுதி. GST Road–ம் வந்து இணையக்கூடிய பகுதி. OMR, ECR, GST அனைத்தும் இணையக்கூடிய பகுதி. அதோடு மட்டுமல்லாமல், அதன் அருகிலே பல கல்லூரிகள் இருக்கின்றன. செட்டிநாடு மருத்துவக் கல்லூரி இருக்கிறது; இந்துஸ்தான் கல்லூரி இருக்கிறது; SSN கல்லூரி இருக்கிறது; VIT கல்லூரி இருக்கிறது. இப்படி பல கல்லூரிகள் இருக்கின்றன. சுற்றுலாத் தலங்கள் என்று பார்த்தால், கேளம்பாக்கத்தின் பக்கத்தில் கோவளத்தில் Blue Beach இருக்கிறது. அருகிலே முட்டுக்காடு இருக்கிறது. அங்கே முதலை பண்ணை இருக்கிறது; திருவிடந்தை நித்திய கல்யாண பெருமாள் கோயில் இருக்கிறது; ஸ்ரீஸ்தலசயன பெருமாள் கோயில் இருக்கிறது; மாமல்லபுரம் இருக்கிறது; புலிக்குகை இருக்கிறது; ஆலத்தூர் தொழிற்பேட்டை இருக்கிறது. இந்தத் தடத்திலே பேருந்து இயக்கினால் உறுதியாக அரசுக்கு இலாபகரமாக இருக்கும் என்கின்ற அடிப்படையில் அதனை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், சென்னையிலேகூட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே உள்ள சிறுசேரி SIPCOT–ஐ விட்டுவிட்டார். அதனையும்

*2023 ஏப்ரல் 5*]

*இணைத்துக்கொள்ளலாம். எனது மகன் கேளம்பாக்கத்திலுள்ள கல்லூரியில் படிக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதி முழுமையும் நான் அறிந்த பகுதி. அதேபோன்று, நாங்கள் ஊருக்குச் செல்கின்றபோது இந்தப் பக்கத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தால், திருப்போரூர் வழியாக செங்கல்பட்டு சென்று அங்கிருந்து செல்லும் வழக்கம் இருப்பதால், அந்தப் பகுதி முழுமையும் நான் அறிந்த பகுதிதான். இருந்தாலும், அந்த வழித்தடம் என்பது, முழுவதும் நன்கு இணைக்கப்பட்ட பகுதி. மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் தடம் எண் 515*A *பேருந்து மேற்கு தாம்பரம்—கோவளம் இடையே 11 பேருந்துகள் இயங்குகின்றன. பிராட்வே—திருப்போரூர் இடையே உள்ள வழித்தடத்தில் தடம் எண் 109X, 1 பேருந்து இயங்குகிறது. பட்டூர்—கோவளம் இடையே உள்ள வழித்தடத்தில் தடம் எண் 566*B, *2 பேருந்துகள் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் 14 பேருந்துகள் கேளம்பாக்கம்—கோவளம் வழியாக இயக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பேருந்துகளைப் பயன்படுத்தி கோவளம் வந்தடைந்தால், அவ்வழியாக இயக்கப்படும் தடம் எண் 588 பேருந்து வழித்தடத்தில் திருவான்மியூர்—மாமல்லபுரம் இடையே 5 பேருந்துகள், தடம் எண் 588*B *என்ற வழித்தடத்தில் மாமல்லபுரம்—பெசன்ட் நகர் இடையே 5 பேருந்துகள், தடம் எண் 102*X *என்ற வழித்தடத்தில் பிராட்வே—திருப்போரூர் இடையே 15 பேருந்துகள் என மொத்தம் 25 பேருந்துகளைப் பயன்படுத்தி மாமல்லபுரம் வந்தடையலாம். தடம் எண் 515 என்ற வழித்தடத்தில் தாம்பரம்—மாமல்லபுரம் இடையே திருப்போரூர் வழியாக இயக்கப்படுகின்ற 14 பேருந்துகள்மூலம் திருப்போரூர் சென்றடையலாம். எனவே, கேளம்பாக்கம், கோவளம், மாமல்லபுரம், திருப்போரூர் இவற்றிற்கு மேற்கண்ட வழித்தடங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் பெருமளவில் பயணம் செய்து வருகிறார்கள். எனவே, சுற்றுவட்ட வழித்தடம் என்பதைத் தாண்டி, இந்தப் பேருந்துகளே அவற்றை இணைப்பதால், தேவையான அளவிற்கு இப்போது போக்குவரத்து வசதி அந்தப் பகுதிகளில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.S. *பாலாஜி அவர்கள்.*

**திரு. S.S. பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் போக்குவரத்து வழித்தடம் 519*T *தற்போது தையூர்–கோமான் நகர் வரை இயக்கப்படுகிறது. காயார் என்ற பகுதி மிகவும் பின்தங்கியிருக்கக்கூடிய பகுதி, பழங்குடியின மக்கள், மாணவர்கள் வசிக்கக்கூடிய பகுதி. எனவே, அதை காயார் பகுதி வரை இன்னும் சற்று நீட்டித்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையும், தற்போது மானாமதி வரை இயக்கப்படுகின்ற சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தினுடைய சேவையை திருக்கழுக்குன்றம் வரை நீட்டித்துத் தருவதற்கும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த* mini bus *திட்டத்தை மீண்டும் அரசு செயல்படுத்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வழித்தடங்களை மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் எழுதி தருமாறு அன்போடு கோருகிறேன். கேட்பவர் எஸ்.எஸ். பாலாஜி; பதில் சொல்பவன் எஸ்.எஸ். சிவசங்கர். எனவே, பதிலை* yes, yes *என்று சொல்வதற்கே விரும்புகிறேன்.*

*அதேபோல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்* Mini Bus *திட்டத்தை மிகச் சிறப்பாகக் கொண்டு வந்த காரணத்தினால்தான், அரசு பேருந்துகள் செல்ல முடியாத குக்கிராமங்களுக்கு அந்தப் பேருந்து வசதி செய்து தரப்பட்டு, பெருமளவில் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. அந்தப் பேருந்து உரிமையாளர்கள் இடைப்பட்ட காலத்தில் மினி பேருந்துகளைச் சரியாக இயக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டிருக்கின்ற சூழலை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்களுடைய கருத்துகள் கேட்கப்பட்டு, அரசு அதிகாரிகள் மட்டத்தில் ஆய்வு நடத்தப்பட்டு, ஓர் அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கொடுக்கப்பட்டு, நல்ல தீர்வு காணப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*2023 ஏப்ரல் 5*]

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில், 1972 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெரம்பூரில் ஒரு பேருந்து முனையம் உருவாக்கப்பட்டது. பெரம்பூர் பேருந்து முனையத்திலிருந்து 7 என்ற எண் கொண்ட பேருந்து* Broadway *வரையிலும், 29—*N *என்ற எண் கொண்ட பேருந்து வேளச்சேரி வரையிலும், 46*F *என்ற எண் கொண்ட பேருந்து கோயம்பேடு வரையிலும் சென்று கொண்டிருந்தன. இந்தப் பேருந்துகள் கடந்த காலங்களில் நிறுத்தப்பட்டுவிட்டன. எனவே, நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்து வழித்தடங்களை மீண்டும் இயக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*அதேபோல, 164 மற்றும் 164*J *எண் கொண்ட பேருந்துகள் மீஞ்சூர் வரை சென்று கொண்டிருக்கின்றன. அதனை பொன்னேரி வரையில் நீட்டித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சோழிங்கநல்லூரில்* IT *நிறுவனங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அங்கு பணிபுரியும் இளைஞர்களின் எண்ணிக்கை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இத்தனை* number*—யும் ஓர் அமைச்சர் ஞாபகம் வைத்து சொல்ல முடியுமா? சொல்லுங்கள். துணைக் கேள்வி கேட்கும்போது இதைச் செய்யுங்கள் என்று சொல்லுங்கள். கேள்வி கேட்கின்றபோது இவற்றையெல்லாம் சேர்த்து எழுதிக்கொடுங்கள். உரையை முடியுங்கள்.*

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** *சோழிங்கநல்லூரில்* IT *நிறுவனங்களில் பணிபுரிகின்ற இளைஞர்களின் எண்ணிக்கை என்னுடைய தொகுதியில் நிறைந்து காணப்படுகின்ற காரணத்தினால், சோழிங்கநல்லூருக்கு நேரடி வழித்தடம் ஒன்றை உருவாக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. தாயகம் கவி அவர்கள் எழுத்துமூலம் அளித்தால், அதை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பெரம்பூரிலிருந்து சோழிங்கநல்லூர் வரை பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார். நகரப் பேருந்துகள் இயக்குகின்ற அந்தக் குறிப்பிட்ட கிலோ மீட்டர் இடைவெளியைத் தாண்டி அது இருக்குமென்று கருதுகிறேன். இருப்பினும், அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.

**திரு. S. சேகர்:** எங்களுடைய பொதுச் செயலாளர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் S. சேகர். பரமத்தி–வேலூர் தொகுதியிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட கிட்டத்தட்ட நான்கு பேருந்துகள் இப்போதும் இயக்கப்படவில்லை. அப்பகுதிகளுக்கு மீண்டும் பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சேகர் அவர்கள், அந்த வழித்தடங்களை எழுத்து வடிவில் கொடுத்தால், அதிகாரிகளிடம் கொடுத்து, ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, yes, yes என்று பதில் சொல்வதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

*2023 ஏப்ரல் 5*]
**108—**

## தெப்ப உற்சவத் திருவிழா

***14263—திரு. எஸ். தங்கப்பாண்டியன்:**

*மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ராஜபாளையம் தொகுதி, தேவதானம், அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளியசுவாமி திருக்கோயில் திருக்குளத்தைச் சீரமைத்து தெப்ப உற்சவத் திருவிழா நடத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தேவதானம், அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளியசுவாமி திருக்கோயிலுக்கு 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் தெப்பக் குளத்தைச் சீரமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, 15 சதவிகிதப் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. அந்தக் குளத்தைச் சுற்றி கண்மாய்கள் அமைந்திருப்பதால், மழைக் காலங்களில் அதிகமான நீர் தேங்கி, குளத்திலும் நீர் அதிகமாகி நீரை வெளியேற்றி அந்தப் பணிகளைத் தொடங்க வேண்டிய சூழ்நிலையிருப்பதால் சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது. அடுத்த தெப்பத் திருவிழாவிற்குள் அந்தக் குளம் சீரமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.*

**திரு. எஸ். தங்கப்பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவதானம் மேற்கே உள்ள அருள்மிகு தவம் பெற்ற நாயகி திருக்கோயில் தெப்பத் திருவிழாவை நடத்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

*ராஜபாளையம் தொகுதி, தேவதானம் மேற்கே உள்ள அருள்மிகு தவம் பெற்ற நாயகி திருக்கோயிலுக்கு நான்கு கோடி*

ரூபாய் நிதியொதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் ராஜபாளையம் தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே பதிலும் அமைந்திருக்கிறது. நன்றியும் சொல்லிவிட்டார். அதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அவருக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.

**திரு. எஸ். தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதியில், அருள்மிகு மயூரநாத சுவாமி திருக்கோயில் உள்ளது. ராஜபாளையம் தொகுதியில் உள்ள ஏழையெளிய மக்கள் திருமணம் செய்ய வேண்டுமென்றால் தனியார் திருமண மண்டபத்தில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் முதல் ஐந்து இலட்சம் ரூபாய் வரை வாடகை செலுத்த வேண்டிய நிலைமை உள்ளது. எனவே, ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், கோயில் அருகிலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் குளிர்சாதன வசதியுடன் திருமண மண்டபம் அமைக்க வேண்டும். மேலும், இக்கோயிலுக்கு அன்னதான திட்டத்தைச் செயல்படுத்தி, விரிவுபடுத்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

*2023 ஏப்ரல் 5*]

*கோரிய மயூரநாதசுவாமி திருக்கோயில் என்பது பெத்தவநல்லூர் ராஜபாளையத்தில் அமைந்திருக்கின்ற திருக்கோயில் ஆகும். ஏற்கெனவே, இந்தத் திருக்கோயிலுக்கு மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்,* PACR *சேதுராமம்மாள் பெயரில் 12–5–1973 அன்று திருமண மண்டபத்தைத் திறந்து வைத்திருக்கிறார். அந்த மண்டபத்தைப் புனரமைத்து, மண்டபத்தில் திருமணம் நடைபெறுகிறபோது வருகின்ற உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் போதிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு ரூ.1 கோடி அளவிலே* estimate *தயாரிக்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் நடைபெறுகின்றபோது ஏற்கெனவே இருக்கின்ற மண்டபம் புதுப்பித்துத் தரப்படும். அதன் பிறகும் தேவை என்றால், புதிதாக மண்டபம் கட்டுவது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு முயற்சிப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

**திரு. மு.பெ. கிரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்திபெற்ற திருக்கோயிலான உண்ணாமுலையம்மை உடனமர் அண்ணாமலையார் திருக்கோயிலின் வடக்கு கோபுரத்தை எனது செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த அம்மணியம்மாள் அவர்கள் கட்டித் தந்தார்கள். அந்தக் கட்டடப் பணி நடைபெறுகின்றபோது அங்கு கட்டடத் தொழிலாளர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட அம்மணியம்மாள் மண்டபம், பக்கத்திலே இருக்கின்ற இடம் ஆகியவை இந்து முன்னணியைச் சேர்ந்த திரு. சங்கர் என்பவரால் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின்படி, அந்த ஆக்கிரமிப்பு சமீபத்தில் அகற்றப்பட்டபோது, அவர் அடியாட்களோடு வந்து தடுத்திருக்கிறார். அந்த ஆக்கிரமிப்பை முழுமையாக அகற்றவும், அம்மணியம்மாள் மண்டபத்தைப் புதுப்பித்துத் தரவும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 259 ஆண்டுகளுக்கு முன்பு வடக்கே அமைந்திருக்கின்ற திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்குக் கோபுரம் கட்ட வேண்டி, நன்கொடையாளர், அம்மணியம்மாள் என்ற ஒரு விவசாயி, அந்த மண்டபத்தைக் கட்ட வேண்டுமென்று மண்டபத்தின் எதிரிலேயே வாழ்நாள் முழுவதும் அமர்ந்து, மண்டபத்தைக் கட்டி முடித்து, அந்த மண்டபத்திற்கு அம்மணியம்மாள் மண்டபம் என்ற பெயரையும் சூட்டினார். அந்த மண்டபம் 25 ஆயிரத்து 247 சதுரடி கொண்ட மண்டபம். அந்த மண்டபம் மற்றும் இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, சட்டப் பிரிவு 6, உட்பிரிவு 17–ன்படி, இந்து சமய அறக்கட்டளைக்குச் சொந்தமான இடம். நாளடைவில் தனியார் 5 பேர் ஒன்றுகூடி அந்த இடத்தை, அந்த Trust–ஐயே அவர்களுடைய பெயரில் மாற்றி பதிவு செய்துகொண்டு, 25 ஆயிரம் சதுரடியையும், அம்மணியம்மாள் மண்டபம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு, வீடுகள் கட்டியும் அதை சமூக விரோதச் செயல்களுக்கும் பயன்படுத்திக்கொண்டிருந்த நிலையில், அந்த மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர், அருமை அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், கடந்த ஆண்டு அங்கிருந்து காலி செய்து தர வேண்டுமென்று ஆக்கிரமிப்பாளருக்கு விதி 78–ன்கீழ் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதை எதிர்த்து அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றம், இது இந்து சமய அறக்கட்டளைக்குச் சொந்தமானது என்பதால் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

நம்முடைய மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்கள் அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்குண்டான அனைத்து உதவிகளையும் இந்து சமய அறநிலையத் துறைக்குச் செய்து கொடுத்து, 25 ஆயிரத்து 247 சதுரடி கொண்ட அந்த நிலத்தை மீட்டிருக்கின்றோம். யார் ஆக்கிரமித்தார்கள் என்பது கேள்வி அல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த ஆட்சியைப் பொறுத்தளவில், திருக்கோயில் நிலங்கள், இறை சொத்து இறைவனுக்கே சொந்தம் என்ற தாரக மந்திரத்தின்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைகளால், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, 25 ஆயிரத்து 247 சதுரடி இடம் மீட்கப்பட்டிருக்கிறது. அங்கே, 259 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அம்மணியம்மாள் மண்டபம், ஆக்கிரமிப்பாளர்கள் கட்டடத்திற்குள் இருந்ததால்,

*2023 ஏப்ரல் 5*]

*அந்த இடிபாடுகளை அகற்றுகின்றபோது அம்மணியம்மாள் மண்டபமும் சற்று சேதாரம் அடைந்திருக்கிறது. இதை மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களும், நானும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், அம்மணியம்மாளுக்கு ஏற்கெனவே இருந்ததைவிட சிறந்த முறையில் ஒரு மண்டபத்தை அங்கு அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சிதிலமடைந்திருக்கின்ற அந்த மண்டபத்தை முழுவதுமாகப் புதிய மண்டபமாக. புதுப் பொலிவுடன், பார் உள்ளளவு, கடல்நீர் உள்ளளவு அம்மணியம்மாள் புகழ் இருக்கின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவோடு அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**109—**

## நூலகம் அமைத்தல்

***64844—திரு. ச. சிவகுமார்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கம்மந்தூர் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) பொதுவாக இதுபோன்ற கேள்விகளுக்குப் பலமுறை நான் பதில் அளித்திருக்கின்றேன் என்று சொன்னாலும், தொடர்ந்து இதுபோன்ற கேள்விகள் கேட்கப்படும்போது*

[2023 ஏப்ரல் 5

உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கின்றது. காரணம், நம்முடைய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிவுசார்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று எண்ணும்போது அதைத் தொடர்ந்து எழுப்பப்படுகின்ற கேள்வி. குறிப்பாக, இங்கே இருக்கின்ற பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சட்டமன்றத் தொகுதி அலுவலகமாக இருந்தாலும் சரி, கட்சி அலுவலகமாக இருந்தாலும் சரி, ஏதோ ஒரு வகையில் சிறியதாக நூலகம் அமைக்க வேண்டுமென்பதை வழக்கமாக வைத்திருக்கின்றார்கள். அதற்கு என்னுடைய நன்றி. அதிலும் குறிப்பாக, நம்முடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்கூட சமீபத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் நடமாடும் நூலகம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் நூலகத்தை நடத்துவது என்பது உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது.

விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், வல்லம் ஒன்றியம், கம்மந்தூர் கிராமத்தில் நூலகம் வேண்டுமென்று இந்த கேள்வியைக் கேட்டிருக்கிறார். பொதுவாக நூலகம் என்று சொல்லும்போது முதலில் பகுதிநேர நூலகம் அமைக்கப்பட வேண்டும். பிறகு அதன் பயன்பாடு, மக்கள், வாசகர் எண்ணிக்கையைச் சார்ந்து அது ஊர்ப்புற நூலகமாக மாறும்; பிறகு கிளை நூலகமாக மாறும்; பிறகு முழுநேர நூலகமாக மாறும். உறுப்பினர் வெறுமனே நூலகம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார். உறுப்பினர் அவர்கள் பகுதிநேர நூலகம் அமைக்கப்படுமா என்று கேட்கும்போது, நிச்சயமாக அதற்கான கருத்துரு பெறப்பட்டு அதை அமைக்கின்ற பணியில் நாங்கள் முழுமையாக ஈடுபடுவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

**திரு. ச. சிவகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியத்தில் கம்மந்தூர் ஊராட்சியைச் சுற்றியுள்ள, துடுப்பாக்கம், மொடையூர், கீழூர், மணியம்பட்டு, மேல்சேவூர் போன்ற கிராமங்களில் உயர்நிலைப்

*2023 ஏப்ரல் 5*]

*பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களும், பொதுமக்களும் கம்மந்தூர் ஊராட்சியில் நூலகம் அமைந்தால் பயன்பெறுவார்கள். அதுபோல, கம்மந்தூர் ஊராட்சி சுமார் 2,000 மக்கள் தொகைக் கொண்டது. கம்மந்தூர் ஊராட்சியும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மாணவர்களும், பொதுமக்களும் பயன்பெறுவார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தற்போது புத்தகத் திருவிழா, நான் முதல்வன், இல்லம் தேடி கல்வி, காலை உணவு போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாணவர்களின் திறனை மேம்படுத்த தொடர்ந்து திட்டங்களைத் தீட்டுகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*'ஒரு நூலகம் திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன' என்று சான்றோர் கூறியுள்ளனர். ஆகவே, அந்த கிராமத்தில் பகுதிநேர நூலகம் ஒன்று அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கிராமத்தில் மொத்தம் 2 ஆயிரத்து 252 மக்கள் இருக்கின்றனர். கிட்டத்தட்ட 1,516 பேர் படித்தவர்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக, இதைப் பார்க்கும்போது, அங்கே படிக்காதவர்களையும் படிக்க வைக்க வேண்டுமென்பதற்காக* Non–formal education *மூலமாக கல்வியறிவைத் தருவதற்கும் நாங்கள் தயாராகியிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், கிட்டத்தட்ட 4 கி.மீ, 6 கி.மீ., 8 கி.மீ., 9 கி.மீ., என சுற்றுவட்டாரங்களில் பார்த்தீர்களென்றால் தையூர், மொடையூர், வல்லம், அணிலாடி போன்ற பகுதிகளில் நூலகங்கள் இருக்கின்றன. குறிப்பாக, தொகுதியைச் சார்ந்து ஒட்டுமொத்தமாக 21 நூலகங்கள் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் பகுதிநேர நூலகம் அமைக்கப்படுமா என்று கோரிக்கை வைக்கும்போது, அதற்கான கருத்துரு பெறப்பட்டு பகுதிநேர நூலகம் அமைப்பதற்கான பணியில் நாங்கள் முழுமையாக ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2023 ஏப்ரல் 5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

**திரு. ச. சிவகுமார்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மயிலம் சட்டமன்றத் தொகுதியில் கூட்டேரிப்பட்டில் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அதை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். இந்தப் பள்ளி, 1934 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அவர்களால் கமலா நேரு என்ற பெயரில் அடிக்கல் நாட்டப்பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இன்று மூன்று அமைச்சர்கள், நான்கு மானியக் கோரிக்கைகள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் தரமுயர்த்தி தரப்படுமா என்று கேள்வியை மட்டும் கேட்டு அமருங்கள். நேரமில்லை.*

**திரு. ச. சிவகுமார்:** *அதேபோல், தீவனூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், கொங்கரப்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்தித் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், 12 ஆயிரம் பகுதி நேர ஆசிரியர்கள், 12 ஆண்டுகளாக ரூ.10 ஆயிரம் சம்பளத்தில் பணிபுரிகின்றார்கள். அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்களா என்பதையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் கடந்த இரண்டு வருடங்களாகப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படவில்லை என்று தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்திருந்தார். சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. தி. வேல்முருகன் அவர்களும் வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்தபோது, ஒரு கிலோ மீட்டருக்குள் தொடக்கப் பள்ளி, 3 கிலோ மீட்டருக்குள் நடுநிலைப் பள்ளி, 5 கிலோ மீட்டருக்குள் உயர்நிலைப் பள்ளி,*

*2023 ஏப்ரல் 5*]

*8 கிலோ மீட்டருக்குள் மேல்நிலைப் பள்ளி என்ற அந்த* radius, almost cover *செய்யப்பட்டுள்ளது.*

*அவர்கள் காலத்தில் வருடாவருடம் 100 பள்ளிகளைத் தரம் உயர்த்துகின்ற அந்தப் பணி நடந்திருக்கிறது. இப்போது* almost *பார்த்தால் பக்கத்தில் ஏதாவது ஒரு பள்ளியிருந்தால்* Aided school *இருந்தால்கூட, அதற்கான விதிமுறைகள் உட்பட்டு வரவில்லை என்று* Finance Department*–ல் பதில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்* special case *ஆக மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அண்ணன் அவர்களாக இருந்தாலும் சரி, இப்போது கேட்டிருக்கின்ற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார் அண்ணன் அவர்களாக இருந்தாலும் சரி, அந்தப் பணிகளையெல்லாம் கண்டிப்பாகச் செய்து தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிதி நிலைமைக்கேற்ப–புதியதாகப் பள்ளியைத் தரம் உயர்த்தவேண்டுமென்று சொன்னால், அதற்கென்று சில* rules and regulations *இருக்கின்றன. நீங்களும் அதையே கேட்டிருக்கிறீர்கள். அதிகமான சட்டமன்ற உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 105 வெட்டுத் தீர்மானங்களை, பள்ளியைத் தரம் உயர்த்துவது பற்றி மட்டும்தான் கொடுத்திருந்தனர். கண்டிப்பாக* financial position*–க்குத் தகுந்தாற்போல் அவற்றைப் படிப்படியாகத் தரமுயர்த்துவோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா அவர்கள்.*

**முனைவர் T.R.B. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகராட்சி நிர்வாகத் துறைமூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு நூலக வரி செலுத்தப்பட்டு, அதன்மூலம் நாம் பல திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்னர், எங்கள் பெருமை வாய்ந்த மன்னார்குடி நகராட்சியில், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்காக, ஏறத்தாழ 2,19,593 சதுரடி நிலம் வழங்கப்பட்டது. இதற்கான மதிப்பு ஒரு சதுரடிக்கு ரூ.57.30 காசு என்று அப்போது மதிப்பிடப்பட்டு, ஒரு கோடியே 25 இலட்சத்து 82 ஆயிரத்து அறுநூற்று எழுபத்து ஒன்பது ரூபாய் பள்ளிக் கல்வித் துறை தர வேண்டும். இது படிப்படியாக ஏறத்தாழ 25 ஆண்டுக் காலம் கடந்து விட்டது. தற்போது பள்ளிக் கல்வித் துறை*

25 கோடியே 39 இலட்சத்து 49 ஆயிரத்து அறுநூற்று இருபத்து இரண்டு ரூபாய் 75 பைசா எங்களுக்கு தரவேண்டும். ஆனால், இன்றுவரை மன்னார்குடிக்கு கடன்பட்டதாகவே இந்தப் பள்ளிக் கல்வித் துறை இருந்து வருகிறது. நான் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டேன், என்ன செய்வதென்று. சரி, நீங்கள் நூலக வரியெல்லாம் கொடுத்துவிட்டீர்களா என்று கேட்டார். மன்னார்குடி ஏறத்தாழ 82 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் நூலக வரியாக, பள்ளிக் கல்வித் துறைக்கு கொடுக்க வேண்டும். அதில், ரூ.35 இலட்சம் கொடுத்துவிட்டோம். மீதமுள்ள 47 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாயை இன்னும் இரண்டு மாதங்களில் கொடுத்துவிடுவோம். ஆக, அதையும் நாங்கள் முழுமையாகக் கொடுத்துவிடுவோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை நமது மன்னார்குடி பகுதிக்கு அறிவித்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு என்ன வேண்டும்?

**முனைவர் T.R.B. ராஜா:** இன்னும் பல திட்டங்களை அறிவிப்பதற்கு எங்களுக்கு நிதி வேண்டும். அதனால், நகராட்சி நிர்வாகத் துறையிடம் இது பற்றி கேட்டதற்கு, ஏறத்தாழ 300 கோடி ரூபாய் நகராட்சி நிர்வாகத் துறையினர், பள்ளிக் கல்வித் துறைக்கு தரவேண்டுமென்று தெரிவித்து வருகிறார்கள். ஆனால், அதில் 90 கோடி ரூபாய் நாங்கள் State Planning Commission மூலமாக பெற்றுத் தந்துள்ளோம். Estimates Committee சார்பாக எனது சொந்த recommendation-ம் அதில் இருக்கிறது. ஆக, மன்னார்குடி நகராட்சியிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்கு 90 கோடி ரூபாய் இப்போது கொடுத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மன்னார்குடிக்கு கடன்பட்டவராகவே இருப்பாரா அல்லது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அன்பில் மின்னுமா மன்னை என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள். இவ்வளவு கடனில் இருப்பீர்கள் என்று தெரியாதே! எங்களுக்கு. இவ்வளவு பெரிய கடனில் இருப்பீர்கள் என்று எங்களுக்கு தெரியாதே!

**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை என்று சொன்னாலும், நீங்கள் தொடர்ந்து

*2023 ஏப்ரல் 5*]

*அனுமதித்துக்கொண்டே இருக்கிறீர்கள். இருந்தாலும் அவர் எங்களுக்கு 50 இலட்சம் ரூபாய் தரவேண்டிய பாக்கியிருக்கிறது.* Library Cess *மூலமாகத் தர வேண்டியிருக்கிறது. பரவாயில்லை, நாங்கள் அதைக் கழித்துக்கொள்கிறோம். இருந்தாலும் மீண்டும் நாங்கள்* financial approval*–க்கு சென்றால் அவர்கள்தான்* clear *செய்து தரவேண்டும். ஏற்கெனவே நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் ரூ.250 கோடி முதல் 300 கோடி ரூபாய் வரை* Library Cess *மட்டும் வரவேண்டியிருக்கிறது. அதில் இப்போது 150 கோடி ரூபாய் தனியாக* sanction *செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே* State Planning Commission*–ல் அவர் இருக்கிறார். அதிலிருந்து 90 கோடி ரூபாய் வழங்கியிருப்பதாக சொல்லியிருக்கிறார். அதற்கு ரொம்ப நன்றி. இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அதிலிருந்து ஏதாவது* adjust *செய்ய முடியுமா என்று பார்த்துக்கொள்ளலாம். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்தக் கேள்வியை நீங்கள் கேட்க சொன்னதால்தான், அவர் என்னிடத்தில் வந்து கேட்டு, அனுமதி வாங்கினார். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் கோவி. செழியன் அவர்கள்.*

**முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் பல்லாண்டுகளாக நூலகம் செயல்பட்டு வருகிறது. கட்டடம் பாதிப்படைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால் புத்தகங்களையெல்லாம் பாதுகாக்க முடியாமலும், வாசகர்கள் தங்கிப் படிக்க இயலாத நிலையும் இருக்கிறது. தாலுகா தலைநகராக, தொகுதியின் தலைநகராக, ஒன்றிய தலைநகராக, பேரூராட்சியின் தலைநகராக விளங்குகிற திருவிடைமருதூரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல நூலகம் அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அந்த நூலகத்தை* Digital *நூலகமாக, எப்படி மழலையர் பள்ளிகளுக்கு* Smart Class *தருகிறீர்களோ, குழந்தைகளுக்கே* Smart Class *தருகிற நீங்கள், படிக்கிற நூலகர்களுக்கு, பயனாளிகளுக்கு* Digital *நூலகமாகத் திருவிடைமருதூரில் அமைத்துத் தருவீர்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமைத்துத் தரும்பட்சத்தில் மாணவர்கள் தங்கள் தேர்வுகளுக்குத் தேவையான குறிப்புகளை நகல் எடுப்பதற்கு, எங்களுடைய சொந்த செலவில் அதற்குரிய* Xerox machine

வாங்கித் தருகிறோம் எனச் சொல்லி, திருவிடைமருதூருக்கு Digital நூலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைதான். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் சொல்வதுபோல, அந்தப் பகுதியில் நாங்களும் பள்ளி மாணவர்களைச் சந்தித்தபோது, பள்ளி மாணவர்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்றிருக்கிறோம்; அதேபோல, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுடைய கோரிக்கையும் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, ஒரு நூலகம் அமைப்பதற்கு 5 சென்ட் நிலத்தை அவர்கள் நூலகக் குழுவிற்கு வழங்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அதேபோல, இரண்டு புரவலர்களாக இருந்தால், ரூ.1,000/– பணம் செலுத்த வேண்டும், 200 உறுப்பினர்களாக இருந்தால், ஆண்டுச் சந்தாவாக ரூ.20/– வீதம் கட்டவேண்டும், தேவையான தளவாடப் பொருட்கள் இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கித் தரவேண்டும் என்கிற பல விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த நூலகம் நிச்சயம் அமைத்துத் தரப்படும். மேலும்,* Digitise *செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல,* Second phase*–ல் 500 நூலகங்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றபட்சத்தில், அந்தப் பணியும் செய்து தரப்படும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி* V. *அமலு அவர்கள்.*

**திருமதி V. அமலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட பிச்சனூர் பகுதியில் மிகவும் பழமையான கங்காதரசுவாமி நகராட்சி நடுநிலைப்*

*2023 ஏப்ரல் 5]*

*பள்ளி இயங்கி வருகிறது. இப்பகுதி, நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகும். எனவே, இப்பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 2015 ஆம் ஆண்டு முன்வைப்புத் தொகையாக ரூ.1 இலட்சம் பொதுமக்களின் பங்களிப்பாகச் செலுத்தப்பட்டும், இதுநாள் வரையில் அப்பள்ளி தரம் உயர்த்தப்படவில்லை. இதனால் இப்பகுதி பெண்களின் இடைநிற்றல் விகிதம் சுமார் 40 சதவிகிதம், . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்படுமா என்று கேட்கிறீர்கள், இல்லையா?*

**திருமதி V. அமலு:** *நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, முன்வைப்புத் தொகை ரூ.1 இலட்சம், ரூ.2 இலட்சம் செலுத்தி, 5, 6, 7 வருடங்கள் கழிந்தும், நிலுவையிலுள்ளன எனக் குறிப்பிட்டு, பல சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போலத்தான்,* financial implications*–ஐப் பொறுத்து, சாத்தியக்கூறுகள் ஏற்படும்பொழுது,* special case *ஆக எடுத்துக்கொள்ளப்படும். ஏனென்றால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. கே.பி. முனுசாமி அவர்களும்கூட மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில்* special case *ஆக எடுத்துக்கொண்டு, முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுள்ளார்கள்.*

*அந்த வகையில்,* special case *ஆக* consider *செய்து,* atleast *அந்த இனங்களில் ஒரு சில* cases*–க்கு முன்னுரிமை வழங்க முடியுமா என்று ஆராய்ந்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

**திரு. S. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதி, கருமாண்டிசெல்லிப்பாளையம் பேரூராட்சி, சிறப்புநிலைப் பேரூராட்சியாகத் தற்போது தரமுயர்த்தப்பட்டுள்ளது. இங்கு செயல்பட்டு வந்த நூலகக் கட்டடம் கடந்த சில ஆண்டுகளாக மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் இருப்பதால், அருகிலுள்ள பெருந்துறை பேரூராட்சியில் கருமாண்டிசெல்லிப்பாளையம் நூலகக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அந்தக் கட்டடத்தை அகற்றி, அதே இடத்தில், மீண்டும் கருமாண்டிசெல்லிப்பாளையம் பேரூராட்சியிலேயே இந்த நூலகக் கட்டடத்தை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நூலகர்கள் சார்பாக அது தொடர்பான கருத்துருக்கள் கேட்கப்பட்டு, அங்கு எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள், எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன என்பனவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, தேவைப்படும்பட்சத்தில், அதே இடத்தில் புதிதாக நூலகம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.

**110—**

## புத்தாக்கப் பயிற்சி

***4265—திரு. ரூபி ஆர். மனோகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் இராணுவத்தில் சேரும் இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க புத்தாக்கப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*2023 ஏப்ரல் 5*]

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் இளைஞர்கள் இராணுவத்தில் சேரும் எண்ணிக்கையை அதிகரிக்க புத்தாக்கப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.*

**திரு. ரூபி ஆர். மனோகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்தில் வட மாநில இளைஞர்களைப்போல தமிழக இளைஞர்கள் அதிகமாகச் சேர்க்கப்படுவதில்லை. குறிப்பாக, கடந்த 9 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஒன்றிய அரசின்* Agnipath *திட்டத்திலும், தமிழக இளைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை; வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. வட மாநிலங்களுக்கு இணையாக இல்லை. எனவே, தமிழகத்தின் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு, விகிதாச்சார அடிப்படையில், வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் 3 இலட்சத்து 8 ஆயிரத்து 280 இராணுவ வீரர்கள் சேர்க்கையில், ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 435 பேர் வட இந்தியர்கள். அதாவது, 57 சதவிகிதம் வட இந்தியர்கள் இராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்கள். அதாவது, பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான், உத்தரகாண்ட், ஜம்மு காஷ்மீர் ஆகிய 6 வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மட்டும் 57 சதவிகிதம் பேர் சேர்ந்திருக்கிறார்கள். 2019–2020 ஆம் ஆண்டு* data*–வின்படி ஹரியானாவின் மக்கள்தொகை இந்திய மக்கள்தொகையில் 2 சதவிகிதம் இருக்கிறது; அவர்களில் 6 சதவிகிதம் இராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இந்திய மக்கள்தொகையில் 1 சதவிகிதமான இமாச்சலப் பிரதேசத்தில், 7 சதவிகிதத்தினர் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். இந்திய மக்கள் தொகையில் 2 சதவிகிதமான பஞ்சாப் மாநிலத்தில் 10 சதவிகிதத்தினர் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர். மொத்தத்தில் 5 சதவிகித மக்கள்தொகை கொண்ட அம்மாநிலங்களில், கிட்டத்தட்ட 23 சதவிகிதத்தினர் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர்.*

[*2023 ஏப்ரல் 5*

*முற்பகல் 11–25*

*அதேபோன்று, 2019–2020 ஆம் ஆண்டில் மட்டும், மொத்தம் 80 ஆயிரத்து ஐநூற்று எழுபத்து இரண்டு நபர்கள் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர்.* Northern States*–ல், உத்தரப் பிரதேச மாநிலத்தில் 8 ஆயிரத்து 425 நபர்களும், பஞ்சாப் மாநிலத்தில் 7 ஆயிரத்து 813 நபர்களும், இமாச்சலப் பிரதேசத்தில் 5 ஆயிரத்து 782 நபர்களும், ராஜஸ்தான் மாநிலத்தில் 6 ஆயிரத்து 882 நபர்களும், ஆக மொத்தத்தில் 2019–2020 ஆம் ஆண்டில் மட்டும் 58 சதவிகிதம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். நான் கேட்பது, தமிழகத்தில் இன்றைக்கு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறைவாக உள்ளன, மத்திய அரசும் சரியாக வழங்குவதில்லை, இராணுவத்திலும் விகிதாச்சார அடிப்படையில் புறக்கணிக்கப்படுவதாக நினைக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

**திரு. ரூபி ஆர். மனோகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்தால் இராணுவத்தில் ஆட்கள் சேர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் நாங்குநேரி தொகுதியானது, திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்குட்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால்* Agnipath *திட்டத்தின்கீழ், இராணுவத்தில் ஆட்சேர்ப்பு முறைக்குப் புதிய தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே நடைமுறையில் இருந்த இராணுவ ஆட்சேர்ப்பு முறை தேர்வானது, அந்தந்த மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்டன. இந்த ஆட்சேர்ப்பு முறையில், முதலில் உடற்தகுதி தேர்வு, அதனைத் தொடர்ந்து மருத்துவத் தேர்வு, இறுதியாக எழுத்துத் தேர்வு என்ற முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், தற்போதைய*

*2023 ஏப்ரல் 5*]

Agnipath *திட்டத்தின்கீழ், இராணுவத்தில் ஆட்சேர்ப்பு முறைக்கு இணையதளம் மூலமாகத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அந்த தேர்வில் யார் தேர்ச்சி பெறுகிறார்களோ, அவர்களுக்கு உடற்தகுதித் தேர்வு, அதனைத் தொடர்ந்து மருத்துவத் தேர்வு என்ற புதிய வழிமுறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரது கேள்வி மிக, மிக முக்கியத்துவம் வாய்ந்தது. விகிதாச்சார அடிப்படையில், தமிழ்நாட்டிலிருந்து அதிக இளைஞர்களை இராணுவத்திற்கு அனுப்ப வேண்டும் என்கிற அடிப்படையில், இணையதளம் மூலமாக நடத்தப்படுகின்ற எழுத்துத் தேர்வில் தமிழகத்திலிருந்து அதிக அளவிலான இளைஞர்கள் பங்கேற்கின்ற வகையில், அதற்கான புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, அதிக அளவிலான இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கான உரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், நீங்கள் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்ற காரணத்தினால் அதிக அளவிலான தரவுகளைக் கூறுகிறீர்கள். இரண்டாம் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

**திரு. ரூபி ஆர். மனோகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 58 ஆக இருந்தது; தற்போது 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோன்று இராணுவத்திலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கான வயது வரம்பை முன்பிருந்ததைவிட தற்போது இரண்டு ஆண்டுகள் உயர்த்தி வழங்க வேண்டும். இராணுவத்தினருக்கு மட்டுமல்லாது, தமிழக இளைஞர்களுக்கும், அரசுப் பணியில் சேருவதற்கான வயது வரம்பைக் கூட்டுவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்தில் சேர்பவர்களின் வயது வரம்பை உயர்த்தும் பொறுப்பு, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இருந்தாலும், வீரத்தின் விளை நிலமாம் தமிழ் மண்ணின் மைந்தர்கள், நாடு காக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்து, கொட்டும் மழையிலும், உறைய வைக்கும் குளிரிலும், தகிக்க வைக்கும் பாலைவனங்களிலும் அயராது பாடுபட்டு வருகிறார்கள். இவ்வாறான கடும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, வீரத்துடனும், விழிப்புணர்வுடனும் செயல்பட்டுவரும் இவ்வீரர்களின் விலைமதிப்பற்ற தியாகத்தினைப் போற்றிடும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் மறுவாழ்விற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் சுமார் 1 இலட்சத்து 86 ஆயிரம் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் நலன்களைப் பேணுகின்றவகையில், சுமார் 15 ஆயிரத்து 336 முன்னாள் படைவீரர்கள், அவர்தம் குடும்பத்தினருக்கு, இந்த 2022–2023 ஆம் ஆண்டில் மட்டும் 39 கோடியே 50 இலட்சம் ரூபாய் அவர்களுக்கு நலத் திட்ட உதவிகளாக வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மேலும், போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் தங்கள் இன்னுயிர் நீத்த மற்றும் அதன்மூலம் மாற்றுத் திறனாளிகளாக ஆக்கப்பட்ட படைவீரர்களுக்கான கருணைத் தொகை வழங்கும் திட்டம் மிகவும் உன்னதமான திட்டமாகும். இந்தக் கருணைத் தொகை வழங்கும் திட்டம் 1971 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2016 ஆம் ஆண்டு முதலாம் உலகப் போரில் வீர மரணமடைந்தோரின் வாரிசுதாரர்களுக்கு 20 இலட்சம் ரூபாயாக வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், வரலாறு காணாத அளவில் 20 இலட்சம் ரூபாயை 40 இலட்சம் ரூபாயாக, இரு மடங்காக உயர்த்தி வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் இந்தத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் இராணுவத்தினருக்கான அனைத்துத் திட்டங்களையும் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

*2023 ஏப்ரல் 5*]

*அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### டெல்டா பகுதிகளில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கு ஒன்றிய அரசால் ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் பேசுகிறேன். உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)* Zero Hour*—தான் எடுத்துக்கொள்கிறேன்.*

*சிறப்புக் கவன ஈர்ப்பாக* delta *பகுதிகளில் நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கு ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர்* T.R.B. *ராஜா, திரு. கா. அண்ணாதுரை, முனைவர் கோவி. செழியன், திரு. துரை. சந்திரசேகரன், திரு. பூண்டி கே. கலைவாணன், திரு. கு. செல்வபெருந்தகை, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார், திரு.* S. *பழனி நாடார், திரு. ஜி.கே. மணி, திரு. இரா. அருள், திரு.* S. *சதாசிவம், திரு. ச. சிவகுமார், திரு. தி. வேல்முருகன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு.* S.S. *பாலாஜி, திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், திரு. வி.பி. நாகைமாலி, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. எடப்பாடி* K. *பழனிசாமி அவர்கள், திரு. ஆ. அருண்மொழிதேவன், திரு.* M. *ராஜமுத்து, திரு.* K.A. *பாண்டியன், திரு. ஈ. பாலசுப்ரமணியன், திரு. வே. சம்பத்குமார், திரு. இ.மா. மான்ராஜ், திரு. அ. பண்ணாரி, திரு. ரா. மணி, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. இரா. காமராஜ், டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு.* K. *மாரிமுத்து,*

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 5

முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன், திருமதி வானதி சீனிவாசன், திரு. ம. சிந்தனை செல்வன், திரு. மு. ஜெகன் மூர்த்தி மற்றும் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா ஆகியோர், இதுவரைக்கும் 10 நிமிடங்களுக்கு முன்புவரை எல்லோருமே, இதுகுறித்து விதி 55–ன்கீழ் எடுப்பதற்காக எழுதிக் கொடுத்திருக்கின்றீர்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். சுருக்கமாக ஒவ்வொரு நிமிடத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைச் சொல்வார்கள் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

**முனைவர் T.R.B. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 29 ஆம் தேதியன்று, ஒன்றிய அரசின் நிலக்கரி அமைச்சகம், தமிழகத்தில், பொன் விளையும் பூமியான காவிரி delta பகுதியில் மூன்று இடங்களில் நிலக்கரி எடுப்பது தொடர்பாக, தன்னிச்சையாக, மாநில அரசிடம் எந்தவொரு கலந்தாலோசனையையும் நடத்தாமல், எந்தவொரு ஆலோசனையும் கேட்காமல், மாநில அரசின் attention–க்கே கொண்டுவராமல் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மக்களின் பாதுகாப்பையும், வாழ்வாதாரத்தையும் கிஞ்சித்தும் மதிக்காமல், delta பகுதிகளைப் பாலைவனமாக்கும் corporate கம்பெனிகளுக்குக் கொடுப்பதைப்போல ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. Delta மக்களின் வாழ்வாதாரத்தை ஏலமிட்டது என்றே இதைத் தெரிவிக்க வேண்டும். ஒன்றிய அரசின் நிலக்கரி அமைச்சகம், தமிழகத்தில் மைக்கேல்பட்டி, சேத்தியாத்தோப்பு மற்றும் தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் அடங்கியுள்ள பரவாக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை, உள்ளிக்கோட்டை, மகாதேவிப்பட்டினம், கண்ணுக்குடி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் சொல்கிறேன். இது குறித்து பத்திரிகைகள், ஊடகங்களிலெல்லாம் முழு விவரங்களுமே வெளிவந்துவிட்டன. தயவுசெய்து, இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்கிற முறையில் அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்ந்தால், நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. தயவுசெய்து அந்த

*2023 ஏப்ரல் 5*] [பேரவைத் தலைவர்]

*அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்து இருக்க வேண்டுமென்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**முனைவர் T.R.B. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமானப் பிரச்சினை இது. அதையும் தாண்டி, எனது சொந்த கிராமமான தளிக்கோட்டையும் இதில் அடங்கும். பல்லாயிரக்கணக்கான விவசாயக் குடிமக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. எனவே, இதற்குக் கொஞ்சம் நீங்கள் நேரம் தர வேண்டும்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலோடு, இதே பேரவையில்* delta *பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட வேண்டுமென்று,* SAPZ–Special Agricultural Processing Zone *ஆக அறிவிக்க வேண்டுமென்று நான் பேசியிருக்கிறேன்; பதிவு செய்திருக்கிறோம். அதைத்தொடர்ந்து, அன்றிருந்த அரசு, கிட்டத்தட்ட, கொஞ்சம் காலந்தாழ்த்தி, 2020 ஆம் ஆண்டு ஓர் அறிவிப்பை வெளியிட்டது. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக இந்த பகுதிகள் அறிவிக்கப்பட்டன.*

*முற்பகல் 11–35*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வந்திருக்கும் இந்த அறிவிப்பில், இந்தச் சட்டத்தின் 4(1) என்ற பிரிவில், காவிரி டெல்டா பகுதியில் நிலக்கரி படுகைகள்,* methane, shale gas *எரிவாயு மற்றும் பிற ஒத்த ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை ஆய்வு செய்தல், துளையிடுதல் மற்றும் பிரித்தெடுத்தல் எதுவுமே செய்ய முடியாது என்று தெள்ளத் தெளிவாக இருக்கிறது. 29 ஆம் தேதி அறிவிப்பில் நிலக்கரி படுகை, மீத்தேன் சுரண்டலும் இருக்குமென்று கூறப்பட்டுள்ளது. எனவே, நிச்சயமாக இது சட்டத்திற்குப் புறம்பான ஓர் அறிவிப்பு. அதில்* underground coal gasification–*ம் அறிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக இது எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல. இந்த அறிவிப்பு வந்த நொடியிலிருந்து, தஞ்சை டெல்டா பகுதிகளில் உள்ள அனைத்து மக்களும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள மக்களும் நெற்களஞ்சியத்தில் நிலக்கரியா என்ற மிகப் பெரிய அச்சுறுத்தலிலும், அதிர்ச்சியிலும் இருந்து வருகிறார்கள். உடனே, டெல்டா பகுதியில்*

விவசாயிகளுக்கு எந்த ஒரு குழப்பமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று திராவிட நாயகன், விவசாயிகளின் தோழர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று இந்த ஒட்டுமொத்த அறிவிப்பையும் முழுமையாக உள்வாங்கி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தமிழகத்தின் கண்டனத்தைப் பதிவு செய்யும் வகையில், மிகச் சிறப்பான ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார். (குறுக்கீடு) அதேசமயம், நேற்று திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக ஊடக நண்பர்களைச் சந்தித்து, எக்காரணத்தைக் கொண்டும், இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்டா பகுதியில் வர விடமாட்டார் என்ற ஓர் அறிவிப்பையும் கொடுத்தார். இதனால், மக்களிடையே கொஞ்சம் பதற்றம் குறைந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு, 2030–க்குள்ளாக renewable energy 50 சதவிகிதம் இருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். 2070–க்குள்ளாக முற்றிலும் net zero ஆகும் என்ற அறிவிப்பையும் குறிப்பிடுகிறார்கள். ஆனால், எதிர்மறையாக, coal gasification, புவி வெப்பமயமாதலைத் துரிதப்படுத்தும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது மிகுந்த கண்டனத்திற்குரியது. ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளின் நலன் காக்கும் இந்த ஆட்சி, ஆயிரம் கோடி ரூபாய், வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அறிவிப்பான ஆயிரம் கோடி ரூபாயை அறிவித்து, விவசாயிகள் நலன்காக்கும் இந்த அரசு, விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டைகள் அங்கு அமையும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

**முனைவர் T.R.B. ராஜா:** அரசின் கவனத்தை ஈர்ப்பதைவிட, மக்களுக்குச் சொல்ல வேண்டும். இந்த அரசு முழுமையாகக் கேட்கிறது என்று சொல்ல வேண்டுமல்லவா? அதனால்தான் கொஞ்சம் detailed ஆக சொல்கிறேன்; முடித்துவிடுகிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக, தமிழக மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், மைக்கேல்பட்டி, சேத்தியாத்தோப்பு, வடசேரி உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும், குறிப்பாக மன்னார்குடி பகுதியிலுள்ள காவேரி டெல்டா

மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தத் தமிழக மக்களின் நம்பிக்கை நிச்சயமாக வீண்போகாத அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதுகாப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஒட்டுமொத்தத் தமிழக மக்களின் நம்பிக்கைக்கேற்ப, நல்ல ஒரு வாக்குறுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த அவைக்குத் தர வேண்டுமென்று கேட்டு, இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை.

**திரு. கு. செல்வபெருந்தகை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தொடர்ந்து ஒன்றிய அரசு. . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள், சொல்கிறேன். இதற்கு, யாரெல்லாம், எந்த வரிசையில் கொடுத்திருக்கிறார்களோ, (குறுக்கீடு) அப்படிதான், சிறப்புக் கவன ஈர்ப்பு என்கிற முறையில் (குறுக்கீடு) இருங்கள். திரு. செல்வபெருந்தகை (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், பேசுங்கள். (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்கிறேன். கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள்.

***திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடு கட்டி போரடித்தால் மாளாது என்று சொல்லி, யானை கட்டி போரடித்த காவிரி டெல்டா பகுதியில் தொடர்ந்து விவசாயிகள் பல்வேறு இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாட்டின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொன்விளையும் பூமியான காவிரி டெல்டா பகுதிக்கு உள்ளடங்கிய தஞ்சாவூர் மாவட்டம், வடசேரி, கடலூர் மாவட்டம், புவனகிரி பகுதி, சேத்தியாத்தோப்பு கிழக்கு, அரியலூர் மாவட்டம், மைக்கேல்பட்டி ஆகிய இடங்களில் மத்திய அரசு நிலக்கரி அமைச்சகத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணையம், நிலக்கரி எடுப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ள 29 ஆம் தேதி அறிவிப்பைத் தந்துள்ளது. இதற்கான டெண்டரும் கோரப்பட்டுள்ளது. இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென இந்த நேரத்தில் வலியுறுத்துவதோடு, 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக்காலத்தில் அன்றைக்கு மீத்தேன் எடுப்பதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுவிட்டது.

[திரு. இரா. காமராஜ்] [2023 ஏப்ரல் 5

அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீண்ட சட்டப் போராட்டம் நடத்தினார்கள். 2013 ஆம் ஆண்டு இடைக்காலத் தடையை அதற்காகப் பெற்றாரகள். 2015 ஆம் ஆண்டு நிரந்தரத் தடையை அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்கள்.

முற்பகல் 11–40

அதற்குப் பின்னர், காவேரி டெல்டா பகுதியில், விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிற்சாலையும், அது hydrocarbon–திட்டமோ அல்லது வேறு எந்தத் தொழிற்சாலையோ வரக் கூடாது என்கிற உயர்ந்த அடிப்படையில், அந்தப் பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த தலைவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக "காவேரி காப்பாளர்" என காவேரி டெல்டா மாவட்டத்தில் உள்ள விவசாய சங்கப் பிரதிநிதிகளெல்லாம் சேர்ந்து அவருக்கு பட்டத்தை வழங்கினார்கள். ஆனால், இன்றைக்கு அந்தச் சட்டப் பிரிவு என்ன சொல்கிறது என்று சொன்னால், பிரிவு 4(1)–ன்படி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் இரண்டாவது அட்டவணையில் எந்தவொரு புதிய திட்டத்தையும், புதிய செயல்பாட்டையும், எந்தவொரு தனி நபரோ, நிறுவனமோ மேற்கொள்ளக் கூடாது என்று அழுத்தமாகச் சொல்கிறது. இருந்தபோதிலும், இன்றைக்கு tender கோரப்பட்டிருக்கிறது. Tender கோரப்படுகிற இந்த நடவடிக்கையானது கிட்டத்தட்ட ஓராண்டாக நடைமுறையில் இருந்ததாகச் சொல்கிறார்கள். ஓராண்டாக நடைமுறையில் இருந்த இந்த நடவடிக்கைகள் எப்படி தமிழக அரசினுடைய கவனத்திற்கு வராமல் போயின என்பது வியப்பாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி பிரச்சினைக்காக நாடாளுமன்றத்தை 22 நாட்கள் முடக்கிய இயக்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உரிமையில் இன்றைக்கு உங்களிடத்தில் கேட்கிறேன். 38 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தி.மு.க. கூட்டணி இதற்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். மத்திய அரசிற்கு அழுத்தம் தந்து, இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். காலையில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பேசும்போது என்னிடத்தில் சொன்னார்கள், கடிதம்

*2023 ஏப்ரல் 5]* [திரு. இரா. காமராஜ்]

எழுதுவதைவிட மாண்புமிகு பிரதம மந்திரியிடம் தொலைபேசியில் பேசியிருக்கலாம் என்றார்கள். நாம் பலவற்றை இழந்திருக்கிறோம். காவேரி பிரச்சினையில் நாம் பின்னடைவைச் சந்தித்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், போதும்.

**திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு காவேரி பிரச்சினையில் பின்னடைவைச் சந்தித்தோம். ** இழந்தோம். இன்றைக்கு நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிற, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், டெல்டாவை குறித்து மட்டும் பேசுங்கள். ** பற்றியெல்லாம் பேச வேண்டாம். (குறுக்கீடு) ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. இரா. காமராஜ்:** இன்றைக்கு N.L.C. நிறுவனம், (குறுக்கீடு) தமிழக அரசின் அனுமதியில்லாமலே ஆழ்குழாய்க் கிணறுகள்மூலம் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கு பல இடங்களில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சூழ்நிலைகளில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், இன்றைக்குக் கோரப்பட்டிருக்கின்ற tender–ஐ உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு, இந்த அரசு, மத்திய அரசிடம் கடுமையான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டுமென அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

**திரு. கு. செல்வபெருந்தகை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருகின்ற ஒன்றிய அரசின் திட்டங்கள் எல்லாம், எப்படி தமிழக மக்களுக்கு எதிரான திட்டங்களாக இருக்கின்றனவோ அதுபோல், இதுவும் ஒரு முன்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 ஏப்ரல் 5

உதாரணம். தமிழ்நாட்டு அரசைக் கலந்து ஆலோசிக்கவில்லை. தமிழ்நாட்டு அரசின் அனுமதியையும் பெறவில்லை, மாநில சுயாட்சியில் எத்தனையோ முறை தலையிட்டிருக்கிறார்கள். இப்போதும், அதேபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்பது தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட மாண்புமிகு பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதும்போது, ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். வேளாண் மண்டலம் மேம்பாட்டுச் சட்டம், 2020–ன்கீழ் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குள் வருகின்றது. மைக்கேல்பட்டி ஒன்றியம், காவேரி டெல்டாவின் மிகவும் வளமான பகுதியையொட்டி அமைந்துள்ள, அதிக நெல் விளையும் பகுதி. 2020 சட்டம், பிரிவு 4(1)–ன்படி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில், இரண்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி எந்தவொரு புதிய திட்டத்தையும் அல்லது புதிய செயல்பாட்டையும் எந்தவொரு நபரும் மேற்கொள்ளக் கூடாது என்று இருக்கிறது. இப்படிச் சட்டம் இருக்கும்போது. தமிழ்நாடு அரசைக் கலந்தாலோசிக்காமல் ஒன்றிய அரசு இப்படிச் செய்வது ஜனநாயகத்திற்கு எதிரான செயல் என்று நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 11–45

ஒரு தாயின் ஈரல் குலையை அறுப்பதற்கு சமம் இந்த நடவடிக்கை. ஏற்கெனவே, நாம் பல நீராதாரங்களையும், மண் ஆதாரங்களையும் இழந்திருக்கிறோம். அந்த அடிப்படையில், 28 இலட்சம் ஏக்கர்களை இது பாதிக்கும்விதமாக, குறுவை, சம்பா பிரதான நெல் உட்பட அங்கு சாகுபடி செய்யப்படுகின்ற வேளாண்மையை அழிக்கின்றவிதமாக இந்த அறிவிப்பு இருக்கின்றது. 33 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உட்பட அனைத்து தானியங்களையும் விளைவிக்கின்ற பகுதியாக, வேளாண் மண்டலமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, சூரிய ஒளியிலோ, கடல் அலைகளிலோ மின்சாரம் தயாரிக்கும் முயற்சியை எடுக்காமல், தஞ்சை, கடலூர், அரியலூர் மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பறிக்கும் விதமான ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு என்பது மிகவும் வருத்தப்படக்கூடியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக ஒன்றிய அரசு இதைக் கைவிட வேண்டும். ஒன்றிய அரசின் இந்தத் திட்டம் மக்கள் விரோதத் திட்டம் என்றுதான் மக்கள் பார்க்கிறார்கள். ஒன்றிய

*2023 ஏப்ரல் 5*] [*திரு. கு. செல்வபெருந்தகை*]

*அரசின் மாண்புமிகு நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர்* Thiru Pralhad Joshi *அவர்கள் எந்த அடிப்படையில் மாநில அரசிடம் கலந்தாலோசிக்காமல், மாநில அரசின் அனுமதியைப் பெறாமல் இதை அறிவித்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இது ஜனநாயகத்திற்கு எதிரானது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்திற்கு மதிப்பளித்து, ஒன்றிய அரசு உடனே இந்தத் திட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகப் பதிவு செய்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்குச் சொந்தமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி என்கிற மிகப் பெரிய நிறுவனம் நீர் சுரண்டலைத் தொடர்ந்து செய்து வேளாண் மக்களை, வேளாண் கூலித் தொழிலாளிகளை, பாதிப்படையச் செய்வதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேவேளையில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மிகுந்த வேதனையோடு, ஆழ்ந்த வருத்தத்தோடு, கனத்த இதயத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடுவண் அரசுக்கு எழுதிய கடிதத்தை வரவேற்பதோடு, சில தகவல்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.*

*குறிப்பாக, தஞ்சைதான் தமிழகத்தின் நெற்களஞ்சியம். தஞ்சைத் தரணி என்று போற்றப்படுகிற காவேரி பாசனப் பகுதிகளைத்தான் டெல்டா என்று சொல்கிறோம். ஆனால், அந்த டெல்டா பகுதிக்குட்பட்ட கடலூர் மாவட்டத்தில் நடைபெறுகிற இந்த நிலையை, அரியலூர் மாவட்டத்தில் நடைபெறுகிற நிலையை அரசின் கவனத்திற்கு சட்டமன்றத்திலேயும். . .*

*(பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. அருள், திரு.* S. *சதாசிவம், திரு. ச. சிவகுமார் உள்ளிட்டோர் அவையில் பதாகைகளை தூக்கிக் காண்பித்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இங்கே உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பேசக் கூடாது என்று பதாகைகளைக் காண்பிக்கிறீர்களா? இங்கே அவ்வாறு பதாகைகளைக் காண்பிக்கக் கூடாது. என்னுடைய அனுமதியில்லாமல் அவ்வாறு காட்டக் கூடாது. உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்தான்*

பேசிக்கொண்டிருக்கிறார். தேவையில்லாமல் பிரச்சினை செய்யக் கூடாது, பார்த்துக்கொள்ளுங்கள். பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** கடலூர் மாவட்டம் குறித்தும், அரியலூர் மாவட்டத்தில் ஏற்படுகின்ற மிகப் பெரிய சுரண்டலினால் ஏற்படும் கடுமையான பாதிப்பு குறித்தும் சட்டமன்றத்திற்கு வெளியிலே போராட்டத்தின் வாயிலாகவும், கிராம சபைக் கூட்டங்களின் வாயிலாகவும் அரசுக்கு எடுத்துச் சொல்லியும்கூட, இது அரசின் கவனத்திற்கு வரவில்லை என்று சொல்லிவிட்டு, இப்பொழுது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரத்தநாடு பகுதியை அடுத்துள்ள வடசேரியில் நிலம் எடுக்கப்படுகிறது என்று சொன்னவுடனேதான் ** என்ற அச்சம், வேதனை எனக்கு ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் விஷயத்தை மட்டும் சொல்லுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தொடர்ந்து பாதிப்பை உண்டாக்கி வருகிறது. பேசுவதற்கு சற்று நேரம் அனுமதி கொடுங்கள். என்னென்ன பாதிப்பு என்பதைத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இருங்கள்.

தஞ்சைத் தரணி என்பது தமிழகத்தினுடைய நெற்களஞ்சியம். தமிழகத்தில் நெல் விளைவிக்கின்ற அந்தப் பூமியை, எந்த ஆக்கிரமிப்பும் செய்யாமல், பாதிப்பு உண்டாக்காமல் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம், Protected Agricultural Zone என்ற வார்த்தையை முதன்முதலில் இந்த நாட்டுக்குச் சொன்னவர் மருத்துவர் அய்யா அவர்களும், மருத்துவர் அன்புமணி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியும். அதற்காக எடுத்த போராட்டம்தான் இது என்பதை இந்த நாடு அறியும். அந்தப் போராட்டத்தின் எதிரொலிதான், கடந்த ஆட்சிக் காலத்தில் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டது. இப்படி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் கடலூர்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 5] [திரு. ஜி.கே. மணி]

மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகள் உள்ளடங்கியிருக்கின்றன. நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்குக் கையகப்படுத்தக்கூடிய நிலங்களில் அரியலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மைக்கேல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பகுதிகளும் இதில் வருகின்றன. ஆனால், இதுகுறித்து அரசுக்குச் சொல்லியும்கூட, அரசு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை என்பது மிகப் பெரிய வேதனை.

உதாரணத்திற்கு, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்–I, சுரங்கம்–IA, சுரங்கம்–II ஆகிய 3 திட்டங்களில் 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தை எடுத்து, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேறு பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, நீங்கள் மூத்த உறுப்பினர். நீங்கள் மற்ற எல்லோருக்கும் வழிகாட்டுங்கள். தகவல் கோரல் என்ற முறையில் டெல்டா பிரச்சினையைப் பற்றிப் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** டெல்டா பிரச்சினையில் இந்தப் பாதிப்புகளைப் பற்றி அரசுக்குச் சொன்னால்தான் அரசு வேகமாகச் செயல்பட முடியும் என்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் தெரியும். நீங்கள் சொல்லி எல்லோருமே தெரிந்துகொண்டுவிட்டார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** சரி. நான்காவதாக, இப்போது சுரங்கம்–III; ஐந்தாவதாக வீராணம் திட்டம்; ஆறாவது, பாளையங்கோட்டை திட்டம். ஏழாவது, சேத்தியாத்தோப்பு கிழக்கு திட்டம்; எட்டாவது, வடசேரி, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தது; ஒன்பதாவது, மைக்கேல்பட்டி, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்தது.

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும்.

**திரு. ஜி.கே. மணி:** இப்படி 9 நிறுவனங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துகின்ற நிலையில், இந்த 3 நிறுவனங்களுக்கு 25,000

[திரு. ஜி.கே. மணி] [2023 ஏப்ரல் 5

ஏக்கர், இப்போது இதில்மட்டும் 1 இலட்சத்து ஆயிரம் ஏக்கர் விவசாய நிலத்தை விவசாயிகளிடமிருந்து பிடுங்குகின்ற நிலை, விவசாயத் தொழிலாளர்களை அழிக்கின்ற நிலை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், நீங்கள் நிறைய விவரங்களைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** நெய்வேலி நிலக்கரி நிறுவனம் மின்சாரத்தைக் கொடுக்கிறது என்பதால் அரசு தயங்குகிறது. நான் வெளிப்படையாகவே பேசுகிறேன். நெய்வேலி நிலக்கரி நிறுவனம், வெறும் 800 மெகாவாட் மின்சாரத்தைத்தான் நமக்கு கொடுக்கிறது. இந்த 800 மெகாவாட் மின்சாரத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து, நான் உங்களைக் குறுக்கிடவில்லை. குறுக்கிடவில்லை, ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். Neyveli Lignite Corporation India Limited–ஐப்பற்றி எல்லாவற்றையும் பேசியாகிவிட்டது. இப்போது மத்திய அரசு அறிவித்திருக்கின்ற அந்த விஷயத்திற்காக மட்டும் அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கவனத்திற்குத்தான், நான் சொல்லிவிடுகிறேன். 800 மெகாவாட் மின்சாரத்தை நாம் பெறவேண்டுமென்கின்ற அவசியம் இல்லை. நமக்கு இப்போது தேவையானது 18 மெகாவாட் மின்சாரம். அப்படியென்றால், உற்பத்தி கூடுதலாகவே இருக்கிறது. அதனால், நிலத்தைக் கையகப்படுத்தி, அவர்களுடைய நிலத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எண்ணூரில், அவ்வளவு மின்சாரத்தைத் தந்தாலும்கூட, அந்த இடத்தைக் கொடுக்கக் கூடாது என்று பேசுங்கள், முடியுங்கள். நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் வீராணம்–பாளையங்கோட்டை திட்டத்திற்கு 500 இடங்களில் ஆழ்துளைக் கிணறு எடுப்பதற்கான ஆய்வு நடத்தியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 9 விஷயங்களையும் இங்கே விவரித்துச் சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் 9 விஷயங்களையும் பதிவு செய்தாகிவிட்டது. இது எடுக்கக் கூடாது, அவ்வளவுதானே, அதோடு முடித்துவிட்டு உட்காருங்கள்.

*2023 ஏப்ரல் 5*]

**திரு. ஜி.கே. மணி:** *எடுக்கக் கூடாது என்று சொல்வதற்கு— ஓரிடத்தில் 500 ஆழ்துளைக் கிணறுகள். இன்றைக்கு வடசேரியில் 99, பாளையங்கோட்டையில் 16, இதை நடுவண் அரசின் மாண்புமிகு அமைச்சர்* Thiru Pralhad Joshi *அறிவித்திருக்கிறார். கடந்த நவம்பர் மாதம் 3 ஆம் தேதி. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *போதும்.*

**திரு. ஜி.கே. மணி:** *மத்திய அமைச்சர் மாண்புமிகு திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள், மரியாதைக்குரிய . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்த அவையில் 1 மணி வரை நீங்கள்மட்டும் பேசி, பதிவு செய்தீர்களென்றால், உங்களுடையதே— இன்னும் ஒரு சிறப்பு கவன ஈர்ப்பு இருக்கிறது.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு நிர்மலா சீதாராமன் அவர்களின். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்த அவையினுடைய—ஒரு பிரச்சினை, எல்லா . . .*

**திரு. ஜி.கே. மணி:** *ஆகவே நான், மீண்டும் மீண்டும் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது, விளைநிலங்களை அழிக்கின்ற, விவசாயிகளைச் சீரழிக்கின்ற, விவசாயத் தொழிலாளர்களைப் பாழாக்குகின்ற. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்தத் திட்டம். . .*

**திரு. ஜி.கே. மணி:** *தமிழ்நாட்டில் நிலத்தை எடுக்கக் கூடாதென்பதில் அரசு உறுதியாக இருக்க வேண்டும். இதே நேரத்தில் கிராம சபைக் கூட்டம், போராட்டம் இதையெல்லாம். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

***திரு. ம. சிந்தனை செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீராணம் ஏரி, தமிழ் அரசர்களின் ஆகச் சிறந்த நீர் மேலாண்மைக்கு அடையாளமான ஒரு பகுதி. பொன்னியின் செல்வன் என்கின்ற கதைக்களத்தின் மூலமாக*

மீண்டும் கவனத்தைப் பெற்றிருக்கின்ற அந்த இடத்தைக் குறித்து நான் கூடுதலாகச் சொல்ல வேண்டிய தேவையில்லை.

அத்தகைய, விவசாயப் பகுதியில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, MECL என்று சொல்லப்படுகின்ற, ஒன்றிய அரசு நிறுவனம், கடந்த 3–4–2017 அன்று தமிழக அரசின் அனுமதியைப் பெற்று, தொடர்ந்து 500 ஆழ்துளைக் கிணறுகளைப் போடுவது என்கின்ற அடிப்படையில் 422 ஆழ்துளைக் கிணறுகளை அமைத்திருந்தது. இந்தச் சமயத்தில் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற அரசின் கவனத்திற்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்தபோது, ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து பரிசோதனை செய்கின்ற திட்டம் உடனடியாக நிறுத்தப்பட்டது.

கடந்த மார்ச் மாதம், 24 ஆம் தேதி, இவ்வாறு ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து நிலக்கரியின் இருப்பு பரிசோதிக்கப்படுவது, அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மத்தியில் ஓர் அச்சத்தை உருவாக்குகிறது என்கின்ற ஓர் ஐயத்தை இதே சட்டப் பேரவையில் நான் எழுப்பியபோது, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் அப்படிப்பட்ட பரிசோதனைகள் நடத்தப்படாது, பாதுகாக்கப்படும் என்கின்ற உத்தரவாதத்தைத் தந்தார்.

முற்பகல் 11–55

இன்று விவசாயிகளின் உணர்வுகளை 100 விழுக்காடு பிரதிபலிக்கக்கூடிய வகையில், தமிழ் நிலத்தை, நமது அனுமதியின்றி, தமிழ் மக்களின் அனுமதியின்றி, இசைவின்றி யாரும் தொட முடியாது என்கிற நம்பிக்கையை உருவாக்குகிற வகையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு வலுவான, ஆழமான கடிதத்தை ஒன்றிய அரசிற்கு எழுதியிருக்கிறார். ஏற்கெனவே நீங்கள் சொன்னதுபோல், ஊடகங்களிலே இது பரவலான அளவிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தருணத்திலே அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, கடந்த 2022–ல், 3–11–2022–ல் ஒன்றிய அரசு இதே பகுதிகளை ஏலம் விட்டு, இந்தியா முழுவதிலுமுள்ள 110–க்கும் மேற்பட்ட பகுதிகளை ஏலம் விட்டு, அந்த இடங்களிலே ஏலம் எடுக்க வணிகரீதியாக எந்த நிறுவனமும் முன்வரவில்லை. ஏனென்றால், நிலக்கரியை எடுக்கிறபோது,

40 அடிக்குள் நிலக்கரி கிடைத்தால் அது இலாபகரமாக இருக்கும்.
மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாகச் சொல்லுங்கள். முடியுங்கள்.

**திரு. ம. சிந்தனை செல்வன்:** ஆனால், 150 அடிக்கும் கீழே இருப்பதால், இது வணிகரீதியாக வெற்றியானதல்ல என்று வணிக நிறுவனங்கள் ஏலம் எடுக்காததால். இன்று நாம் தப்பித்திருக்கிறோம். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல், மாவட்ட ஆட்சியருக்குத் தெரியாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் தெரியாமல், ஒன்றிய அரசு, தமிழக நிலத்தை ஏலம் விடுகிறது என்று சொன்னால், மிகப் பெரும் அதிர்ச்சியில் தமிழ்நாடு உறைந்திருக்கிறது.

வேளாண், விவசாயப் பெருங்குடி மக்களும், தமிழ் உணர்வாளர்களும் தங்களுடைய உதிரத்தைத் தந்து வேளாண் நிலங்களைப் பாதுகாப்பார்கள் என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கின்றபோது, ஒருபிடி மண்ணைக்கூட அவர்களால் தொட முடியாது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நம்முடைய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்ந்து இவ்வாறு இடையூறு செய்கிறார்கள். அதை நிறுத்த வேண்டும்.

**திரு. ம. சிந்தனை செல்வன்:** இதேபோன்று சுரங்கம் குறித்து பிரச்சினை ஒன்று வந்தபோது, உச்ச நீதிமன்றம், Eco Sensitive Zone என்று அறிவிக்கப்பட்டிருக்கிற பகுதிகளில், மாநில அரசின் இசைவின்றி எந்தப் பணியையும் தொடங்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டில் அத்தகைய Eco Sensitive பகுதியாக இல்லையென்றாலும் கொடுக்கக் கூடாது என்பதுதான் அனைவருடைய கருத்தும். எனவே, நீங்கள் முடியுங்கள்.

**திரு. ம. சிந்தனை செல்வன்:** ஒரேயொரு நிமிடம். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய ஒரு சிறப்பு

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2023 ஏப்ரல் 5

சிக்கல் என்னவென்றால், காட்டுமன்னார்கோவில் தாலுகாவாக இருந்தபோது, அது பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக இருந்தது. ஆனால், அந்தத் தாலுகா நிர்வாக வசதிக்காக திருமுட்டமாக பிரிக்கப்பட்ட பிறகு, அந்தத் திருமுட்டம் பகுதிதான் தற்போது இருக்கிற வீராணம் திட்டம், பாளையங்கோட்டை திட்டம். அதில் வரக்கூடிய ஆதிவராகநல்லூர், பாளையங்கோட்டை, கொண்டசமுத்திரம், கோவிந்தநல்லூர், கண்டியங்குப்பம், கொழை, கல்லிடைக்குறிச்சி, சோழக்கூர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், போதும் போதும். (குறுக்கீடு) போதும்.

**திரு. ம. சிந்தனை செல்வன்:** தேத்தாம்பட்டு, நாச்சியார்பேட்டை, சாத்தாவட்டம், கூடலையாத்தூர், காவாலக்குடி ஆகிய கிராமங்கள், தற்போது வருவாய் வட்டங்கள் பிரிக்கப்பட்டதால் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்னும் தன்மையை இழந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், எந்த வட்டத்தில் இருந்தாலும், அந்தத் திட்டம் வேண்டாம் என்பதுதான் ஒருமித்த கருத்தாக இருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. ம. சிந்தனை செல்வன்:** ஆகவே, அந்தப் பகுதிகளையும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, இந்தத் திட்டத்தை வலுவாகத் தடுத்து நிறுத்துவதற்கு, மாநில அரசின் இசைவில்லாமல், தமிழ் நிலத்தின்மீது தொடர்ந்து கை வைக்கின்ற ஒன்றிய அரசைக் கடுமையான முறையில் கண்டிக்கக்கூடிய வகையில் தமிழக அரசு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். திரு. நாகைமாலி அவர்கள்தான் சுருக்கமாகப் பேசி முடிக்கக்கூடியவர். இன்று 4 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அமைச்சர்கள் 3 பேர் பதிலுரையாற்ற வேண்டும்.

**திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று போற்றப்படுகின்ற காவிரி டெல்டா பகுதியில், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு,

வடசேரி, கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு, அரியலூர் மாவட்டம், மைக்கேல்பட்டி ஆகிய இடங்களில் நிலக்கரி எடுப்பதற்கான டெண்டரை ஒன்றிய அரசு கோரியிருப்பதாக நாம் அறிகிறோம். இதையறிந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனடியாக மத்திய அரசுக்கு, நிலக்கரி எடுக்கிற அந்தத் திட்டம் தமிழகத்திலே வரக் கூடாது என்று உறுதியாகத் தெரிவித்து, விரிவான கடிதத்தை எழுதியிருக்கிறார். காவிரி டெல்டா விவசாயிகளுடைய, டெல்டா மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரத்தை முற்றும் அழித்து நாசமாக்குகின்ற இந்தத் திட்டம், காவிரி டெல்டா பகுதியிலுள்ள விவசாயிகள் மத்தியிலும், அந்தப் பகுதி மக்கள் மத்தியிலும் மிகப் பெரிய பதற்றத்தையும், கவலையையும் உருவாக்கியிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதில் மிகப் பெரிய கவனம் செலுத்தி, ஒன்றிய அரசினுடைய இந்தத் திட்டத்தை முறியடிக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள். தோழர்கள்தான் time–க்கும் தோள் கொடுக்கிறீர்கள்.

**திரு. K. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு 2023–2024 வேளாண்மை நிதிநிலை அறிக்கையில்கூட திருச்சி–நாகப்பட்டினம் வரை வேளாண் பெருந்திட்டத் தடம் 1,000 கோடி ரூபாயில் அறிவித்திருப்பதை அந்தப் பகுதி மக்களெல்லாம் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். வேளாண் உற்பத்திக்கும் உற்பத்தி செய்திருக்கிற சந்தைப் பொருட்களுக்கும் மிகப் பெரிய நம்பிக்கை வந்திருக்கின்ற இந்த வேளையில்தான், இன்னும் நம்முடைய வேளாண் பாதுகாக்கப்பட்ட மண்டலமாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில்தான், நேற்றையதினம் வந்திருக்கிற செய்தி அதிலும் குறிப்பாக, ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் மதிப்புமிக்க விவசாய நிலங்களில் நிலக்கரிச் சுரங்கம் எடுக்கப்படுமென்று ஒன்றிய அரசு நம்முடைய மாநில அரசினுடைய எந்த அனுமதியும் இல்லாமல், மாநில அரசோடு கலந்தாலோசிக்காமல் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அறிவித்திருப்பது என்பது அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளின் மத்தியில் பெரும் பதட்டத்தை

ஏற்படுத்தியிருக்கிறது. காவேரி டெல்டா பகுதியே போராட்டக் களமாக மாறுகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதனை இந்த அவை நன்கு உணர்ந்திருக்கிறது. எனவே, ஒட்டுமொத்தமாக இந்தத் திட்டத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த மாமன்றத்தில் நேர்த்தியான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். அதேநேரத்தில், நாம் எடுக்கிற இந்த முடிவுகள் மூலமாக ஒன்றிய அரசும் உடனடியாக இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று நம்முடைய அவையின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள்.

***திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசு காவேரி டெல்டாவான ஒரத்தநாடு தொகுதி, வடசேரியிலும், கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பிலும், அரியலூர் மாவட்டம், மைக்கேல்பட்டியிலும் நிலக்கரி எடுப்பதற்கு tender விட்டிருப்பதாக செய்திகள் வந்து மக்கள் பதற்றமடைந்து கொண்டிருக்கின்றார்கள். காவேரி டெல்டா வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டம், பிரிவு 4 (1)–ன்படி அட்டவணை 2–ல் எந்தவிதத் திட்டமும், நிலக்கரி எடுப்பதோ, மீத்தேன் எடுப்பதோ, Shale எரிவாயு எடுப்பதோ கூடாது; மாநில அரசைக் கேட்காமல் மத்திய அரசு தாந்தோன்றித்தனமாகக் காவேரி டெல்டா பகுதிகளில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதை அறிந்து மக்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய பதற்றத்தைத் தணிக்கின்ற விதமாக, தமிழ்நாடு சட்டமன்றத்தில் அதைத் தடை செய்வதற்கான ஒரு தீர்மானம் கொண்டுவந்து, அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, தந்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு தன்னிச்சையாக நம்முடைய தமிழகத்தின் மாநில அரசைக் கலந்து பேசாமல் அல்லது இசைவு பெறாமல், அனுமதி பெறாமல், தஞ்சைத் தரணியில்

*2023 ஏப்ரல் 5]* [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

*அதுவும் நெற்களஞ்சியத்தில் நிலக்கரி வெட்டியெடுப்பதற்காக ஓர் அறிவிப்பை அறிவித்திருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை எதிர்த்து, அதைக் கண்டித்து, ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பது வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. நம்முடைய நெற்களஞ்சியம் என்பது குறிப்பாக, நெல்லுக்கு ஒரு குணம் உண்டு. வாயுமண்டலத்தில் இருக்கின்ற* carbon–*ஐயும்,* hydrogen–*ஐயும் இழுத்து, அதைப் பெற்று,* carbohydrate–*ஐத் தயாரிக்கக்கூடிய ஒரு சக்தி வாய்ந்தது நெல். அந்த வகையில், நம்முடைய வாயுமண்டலத்தை, சுற்றுச்சூழலை சுத்தமாக வைப்பதற்குப் பயன்படுகிற நெல்* (மணியடிக்கப்பெற்றது) *அதிகமாக விளைகின்ற அந்தப் பகுதியில் இதுபோன்ற திட்டங்களை ஒன்றிய அரசு தன்னிச்சையாகக் கொண்டு வருவதை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடுமையாகக் கண்டித்து அமருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

*பிற்பகல் 12–05*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் 47 ஆண்டுகளில் காணாத அளவுக்கு நெல் சாகுபடியிலே காவேரி டெல்டா மாவட்டங்கள் குறிப்பாக, தஞ்சை மாவட்டம் மிகப் பெரிய சாதனையை அடைந்திருப்பதைப் பார்த்து நாமெல்லாம், இந்த அவையே மகிழ்ந்தது. அதே தஞ்சையிலே சுமார் 66 இடங்களில் ஆழ்துளையிட்டு நிலக்கரி எடுப்பதற்கான அறிவிப்பாணையை ஒன்றிய அரசு வெளியிட்டிருக்கிறது. ஒன்றிய அரசைப் பொறுத்தவரை, மாநில அரசினுடைய உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக, காவிரி படுகை பகுதி, வேளாண் பாதுகாப்பு மண்டலம் என்று தமிழக அரசு அறிவித்து சட்டம் இயற்றியிருப்பது ஒன்றிய அரசுக்குத் தெரியும். அது தெரிந்தும்கூட, தமிழக மக்களுடைய வாழ்வுரிமையை, குறிப்பாக டெல்டா பகுதிகளில் வாழக்கூடிய விவசாயிகளுடைய வாழ்வுரிமையைப் பறிக்கக்கூடிய வகையிலே, அங்கே நிலக்கரியை எடுப்பதற்கான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இதை எதிர்த்து இந்த மன்றம், ஏகமனதாகத் தீர்மானம்* (மணியடிக்கப்பெற்றது) *நிறைவேற்ற வேண்டும். மிகக் கடுமையாக இதற்கு எதிர்வினையாற்ற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர்*

*அவர்கள், மிக வலுவான கடிதம் ஒன்றை ஒன்றியப் பிரதமருக்கு நேற்று அனுப்பியிருக்கின்றார்கள். அதோடு நிற்காமல், நம்முடைய விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கு காவிரி படுகைப் பகுதிகளில், அரியலூர் மாவட்டத்திலும், நிலக்கரி எடுப்பதற்கு எந்த வகையிலேயும் தமிழ்நாடு ஒப்புக்கொள்ளாது; அதை அனுமதிக்காது என்பதை வலிமையாகச் சொல்லக்கூடிய வகையில், மாநில அரசு (மணியடிக்கப்பெற்றது) நடவடிக்கை எடுப்பதனுடைய அவசியத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

**திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழலைப் பாதிக்காத சூரிய ஒளியிலிருந்து, காற்றிலிருந்து மின்சாரத்தைத் தயாரிக்கிற காலம் இது. நிலக்கரி அதிகமாகத் தேவையில்லை. இதை ஒட்டுமொத்தமாகத் தமிழகமே எதிர்க்கும் என்று தெரிந்தும் அறிவித்திருக்கிறார்கள். அப்படியென்று சொன்னால், நெய்வேலி சுரங்க விரிவாக்கத்திற்கு நம்முடைய போராட்டம் அதிகப்படும்போது, இதை அறிவித்து நம்முடைய கவனத்தை இன்றைக்கு திசைதிருப்பியிருக்கிறார்கள்; ஒன்று அதுவாக இருக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், தமிழகத்திலே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அந்தப் பின்னடைவைச் சரி செய்வதற்காக, நம்முடைய விவாதங்களைத் திசைதிருப்புவதற்காக இப்படிப்பட்ட முயற்சியை ஒன்றிய அரசு செய்திருக்கிறதா என்ற சந்தேகத்தைத்தான் கிளப்புகிறது. மொத்தத்தில், இது நம்முடைய கவனத்தைத் திசைதிருப்புகிற முயற்சி. நம்முடைய மாமன்றம், நம்முடைய அரசு இதைக் கவனத்தோடு கையாள வேண்டிய அவசியம் இருக்கிறது; நாம் திசை திரும்பக் கூடாது என்பதை வலியுறுத்தி அமர்கின்றேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

**திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு தமிழ்நாட்டில் இருக்கின்றபோது, தமிழ்நாடு அரசின் ஒப்புதல் பெறாமல், குறைந்தபட்சம் தமிழ்நாடு அரசுக்கு முறைப்படியான தகவல் கூறாமல், ஒன்றிய நிதியமைச்சராக இருக்கிற மாண்புமிகு திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் தலைமையில் 3–11–2022 அன்றும்,*

அதற்குப் பிறகு திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் தலைமையில் 29—3—2023 அன்றும், கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு உள்ளடங்கிய பகுதி, அதேபோன்று வடசேரி, தஞ்சை மாவட்டத்தை உள்ளடங்கிய பகுதி, அதேபோன்று, மைக்கேல்பட்டி, அரியலூர் மாவட்டத்தை உள்ளடங்கிய பகுதிகளில், குறிப்பாக, சேத்தியாத்தோப்பை உள்ளடக்கி 20 கிராமங்களில் 21 ஆயிரம் ஏக்கர் நிலங்களையும், வடசேரி பகுதியில் 11 கிராமங்களை உள்ளடக்கி 17 ஆயிரம் ஏக்கர் நிலங்களையும், மைக்கேல்பட்டி உள்ளடக்கி 3 கிராமங்களில் 3 ஆயிரத்து 600 ஏக்கர் நிலங்களையும் ஏலத்திற்கு ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கிறது. ஏலம் யாரும் எடுக்க முன்வரவில்லை என்பதால் நாம் தப்பித்திருக்கிறோம். ஒருவேளை அதானிகளோ, அம்பானிகளோ ஏலம் எடுத்திருந்தால் டெல்டா மாவட்ட மக்களுடைய வாழ்வுரிமை எவ்வாறு பாதித்திருக்கும் என்பதை நாம் கற்பனையில்கூட எண்ணிப்பார்க்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் அனுமதியில்லாமல், சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல், தொடர்ச்சியாக ஒன்றிய அரசு தமிழர் விரோத, தமிழ்நாட்டின் விரோத கொள்கைகளைக் கடைபிடித்து, தமிழ் மக்களின் வாழ்வுரிமையைக் காலில் போட்டு மிதித்து, தமிழ்நாட்டைப் பாலைவனமாக்குகின்ற இந்த முயற்சியை ஒரு காலத்திலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வலுவான ஒரு கடிதம் எழுதியிருப்பதைத் தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக, போராட்டக் குழுவின் தலைவர் என்கிற அடிப்படையில் நான் மனதார வரவேற்கிறேன்.

பிற்பகல் 12—10

எக்காரணத்தைக் கொண்டும் இதுபோன்ற திட்டங்களுக்கோ, விரிவாக்கத்திற்கோ, NLC—யினுடைய மூன்றாம் சுரங்க விரிவாக்கத்திற்கோ நாம் அனுமதிக்கக் கூடாது. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பெயரில் எழுதப்பட்டிருக்கின்ற கடிதத்தை வரவேற்கிற அதேவேளையில், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், இனி எந்தவொரு திட்டத்தையும், இந்த மாநில அரசினுடைய அனுமதியைப் பெறாமல், இந்த அமைச்சரவையின் அனுமதியைப் பெறாமல், இந்தச் சட்டமன்றத்தின் அனுமதியைப் பெறாமல் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்; தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக

இருக்கலாம் என்கிற ஓர் உத்தரவாதத்தைத் தருகின்ற வகையிலே, இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்து, எங்களைப் பாதுகாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் இருக்கிறார்கள்; நாங்கள் நிம்மதியாக உறங்கலாம் என்கிற நிலையை உருவாக்க வேண்டும். நேற்யைதினமே, கடலூரிலும், திருவாரூரிலும், தஞ்சாவூரிலும் விவசாயிகள் வீதிக்கு வந்து போராடியிருக்கிறார்கள். ஒன்றிய அரசின் இந்த எதேச்சதிகாரப் போக்கை, இந்தத் தன்னிச்சையான போக்கை, இந்தச் சர்வாதிகாரப் போக்கை மிக வன்மையாக நான் கண்டிப்பதோடு, இந்த அவை கண்டிக்க முன்வர வேண்டும் என்று கேட்டு, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

**திரு. மு. ஜெகன் மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிலக்கரி எடுக்கின்ற பிரச்சினையை, ஏற்கெனவே அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலான கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, காவிரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) டெல்டா பகுதி மட்டுமல்ல, தமிழக விவசாயிகளே பெருமைப்படுகின்ற அளவிற்கு இருந்த நேரத்தில், இன்றைக்கு மாநில அரசினுடைய அனுமதியும் இல்லாமல், திடீரென்று நிலக்கரியை எடுப்போம் என்று தாந்தோன்றித்தனமாக அறிவித்திருப்பது உண்மையாகவே வருத்தமளிக்கிறது. இந்தப் பேரவையில் புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக கண்டனத்தை இங்கே பதிவு செய்கின்றேன்.

‘சோழ நாடு சோறுடைத்து’ என்ற பெருமை பெற்ற, நெற்களஞ்சியம் என்று போற்றப்படுகின்ற தஞ்சைத் தரணி, விவசாயிகள் மட்டுமல்ல, விவசாயக் கூலிகள் அதிகமாக நிறைந்த பகுதியாகும். அங்கே எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லாமல், விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற மக்களும், குடிநீருக்காக காவிரியை நம்பியிருக்கின்ற மக்களும் அங்கே வாழ்கிறார்கள். இந்த நிலக்கரி திட்டம் வந்தால், கண்டிப்பாக ஒட்டுமொத்த டெல்டா விவசாயிகளுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதை நாம் அறிந்து, இந்தச் சபையிலே கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு

வர வேண்டும் என்று புரட்சி பாரதம் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், உங்கள் Government-ஐ எதிர்த்துத்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் பேச விரும்பினால் பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், நீங்கள் பேசுங்கள்.

**திருமதி வானதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள், "உங்கள் Government-ஐ எதிர்த்துத்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் பேச விரும்பினால், பேசலாம்" என்று கூறினீர்கள். எல்லோரும் சேர்ந்து Government-ஐ திட்டியதால், ஏதோ கொஞ்சம் பதில் சொல்வதற்கும் சிறிது நேரத்தைக் கொடுங்கள். (குறுக்கீடு) பதில் இல்லை. (குறுக்கீடு) பதில் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்து கொண்டு பேச வேண்டாம்.

**திருமதி வானதி சீனிவாசன்:** நான் இந்தத் தீர்மானத்தின்மீது பேசவில்லை. என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், நீங்கள் பேசுங்கள்.

**திருமதி வானதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனுக்கு சோறு வேண்டுமா, மின்சாரம் வேண்டுமா என்றால், நிச்சயமாக சோறுதான் வேண்டும்; அதில், மாற்றுக் கருத்தே இல்லை. தமிழகத்தில், குறிப்பாக டெல்டா பகுதி, விவசாய ரீதியாக எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பது அனைவரும் உணர்ந்த விஷயமாகும். அதேபோன்று, இதற்கு முன்பாக இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மாநில அரசு, அந்தப் பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திருக்கிறது. ஆனால், ஏலம் என்று வருகின்றபோது, எந்தவொரு அரசாங்கத்தினுடைய சட்டத்திற்குக் கீழாக, மத்திய அரசின் சட்டமாகவே இருந்தாலும், நிலம் என்று வரும்போது,

உள்ளூரில் இருக்கின்ற வருவாய்த் துறையினுடைய அனுமதி, அவர்களுக்கான தகவல் இவற்றையெல்லாம் தெரிவித்ததற்குப் பிறகுதான் ஓர் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். அதனால், வருவாய்த் துறை, அந்த மாவட்ட நிர்வாகம், இதுபோன்ற நடவடிக்கைகள் வருகின்றபொழுது, இதுதொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளை எடுத்தன? அவர்கள் இந்த விஷயத்தில் மத்திய அரசுக்கு ஏன் முன்பே தகவல் சொல்லவில்லை? இது ஒன்று.

இரண்டாவது, இங்கே நிறைய பேர் பேசும்போது, Corporate–க்கு கொடுத்துவிடுவார்கள்; அதானி, அம்பானி என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ** அதனால் corporate–க்குக் கொடுக்கிறது.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு பதிலும் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் இந்த டெல்டா குறித்து மட்டும் பேசுங்கள். பழைய விஷயங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

**திருமதி வானதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா விஷயத்தைப் பொறுத்தவரைக்கும், இந்த 3 block–களை, நிலக்கரிக்கு ஏலத்திற்காகக் கொடுத்ததை மாற்ற வேண்டும். இந்த அறிவிப்பிலிருந்து விலக்கு கொடுக்க வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் நாங்கள் மாண்புமிகு நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். நாங்கள் அதனை வலியுறுத்தவும் செய்வோம். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் முக்கியமான உணவு உற்பத்தி மண்டலமாக இருக்கக்கூடிய காவிரி டெல்டா பகுதிகளில் ஒன்றிய அரசினுடைய நிலக்கரி அமைச்சகத்தின் மூலமாக பழுப்பு நிலக்கரி எடுப்பதற்கான ஏல அறிவிப்பு பெரும் அதிர்ச்சியையும்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 5] [திரு. தங்கம் தென்னரசு]

அதிர்வலைகளையும் காவிரி டெல்டா பகுதிகளிலும், அதனை ஒட்டியிருக்கக்கூடிய கடலூர் மாவட்ட பகுதிகளிலும் இன்றைக்கு உருவாக்கியிருப்பதை நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் இந்த அவையினுடைய கவனத்திற்கு, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவையில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் தெரிவித்திருக்கக்கூடிய இந்தக் கருத்துகள், அவர்களுடைய உணர்வுகளோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

எனவேதான், ஒன்றிய நிலக்கரி அமைச்சகத்தின் மூலமாக ஏலம் விடப்பட்டிருக்கக்கூடிய 101 வட்டாரங்களில் சேத்தியாத்தோப்பு கிழக்கு, மைக்கேல்பட்டி, வடசேரி ஆகிய மூன்றும் தமிழ்நாட்டில் அமைந்திருக்கக்கூடிய பகுதிகள் என்பதை அறிந்தவுடன், இந்த அறிவிப்பு வெளிவந்தவுடன், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நேற்றையதினம் உடனடியாகக் கடிதம் எழுதினார்கள். இத்தகைய அறிவிப்பினை நிலக்கரி அமைச்சகம் வெளியிடுவதற்கு முன்பாக, தமிழ்நாடு அரசிடம் எந்தவிதமான ஒப்புதலும் அவர்கள் பெறவில்லை; தமிழ்நாடு அரசுடன் எந்தவிதமான கலந்தாலோசனையையும் அவர்கள் நடத்தவில்லை; அவர்களாகவே தன்னிச்சையாக இத்தகைய அறிவிப்புகளைச் செய்திருப்பது கெடு வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தப் பகுதிகளெல்லாம் காவிரி டெல்டா பகுதிகளாக அமைந்திருக்கக்கூடிய பகுதிகள். அதேபோல், மைக்கேல்பட்டி பகுதி அந்த டெல்டா பகுதியையொட்டியிருக்கக்கூடிய நெல் அதிகமாக விளையக்கூடிய ஒரு சிறப்பான வேளாண் பகுதியாக அமைந்திருக்கக்கூடிய பகுதி என்பதையும் அவர்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிற கடிதத்தின் முக்கியமான பகுதியை இந்த அவையில் பகிர்வு செய்வதை என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தில் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டு சொல்கிறபோது, நம்முடைய வேளாண் பாதுகாப்பு சட்டம்–அந்தச் சட்டத்தினுடைய பிரிவு 4 (1)–ன்படி, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் இரண்டாவது அட்டவணையில், குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு

புதிய திட்டத்தையும் அல்லது புதிய செயல்பாட்டையும் எந்தவொரு நபரும் மேற்கொள்ளக் கூடாது என்று வகுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட திட்டங்களில், நிலக்கரி படுகை, மீத்தேன், ஷேல் எரிவாயு மற்றும் பிற ஒத்த hydrocarbon உள்ளிட்ட எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை ஆய்வு செய்தல், துளையிடுதல் மற்றும் பிரித்தெடுத்தல் ஆகியவை அடங்கும். தற்போது வெளியிடப்பட்டுள்ள டெண்டர் நிபந்தனைகளில் நிலக்கரி படுகை மீத்தேன் சுரண்டலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அவை தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டு சட்டம், 2020 தடைக்குள் அடங்கும். ஆகவே, இந்த ஏல அறிவிப்பு செயல்முறைப்படுத்தப்பட்டு, வெற்றிகரமாக ஏலதாரர் அடையாளம் காணப்பட்டாலும் சுரங்கத் திட்டத்தை மேற்கொள்ள முடியாது என்பதை இது குறிக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் அடையாளம் காணப்பட்ட வட்டாரங்களைப் பொறுத்தவரை, இந்த ஏல நடைமுறை வீணான செயலாகும்; அறிவிக்கை வெளியிடுவதற்கு முன்பே தமிழ்நாடு அரசுடன் கலந்தாலோசித்திருந்தால் இப்பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதுடன், ஏலத்திற்கான அறிவிக்கை வெளியீட்டால் ஏற்பட்ட தேவையற்ற குழப்பதைத் தவிர்த்திருக்கலாம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எனவே, இந்தச் சூழ்நிலையில் விவசாய நிலங்கள் இருப்பதாலும், தமிழ்நாட்டு மக்களினுடைய உணவு பாதுகாப்பு பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளதாலும், தமிழ்நாட்டிலுள்ள 3 சுரங்க வட்டாரங்கள்–வடசேரி, மைக்கேல்பட்டி, சேத்தியாத்தோப்பு கிழக்கு ஆகிய மூன்றையும் ஏலத்தினுடைய ஏழாவது/பதினேழாவது தவணையிலிருந்து முற்றிலுமாக விலக்கிட வேண்டுமென்றும் அதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அதேபோல், எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளில் இத்தகைய அறிவிப்புகளை வெளியிடுகிறபோது மாநில அரசுகளோடு முதலில் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி, இத்தகைய நிலைமைகளை உடனடியாக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு சரி செய்ய வேண்டுமென்றும் அவர்கள் அதிலே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் வாயிலாக

*2023 ஏப்ரல் 5*] [திரு. தங்கம் தென்னரசு]

இந்த அறிவிப்பு வந்ததும் உடனடியாக எவ்வளவு வேகமாகச் செயல்பட முடியுமோ அவ்வளவு வேகமாகச் செயல்பட்டு நம்முடைய மாண்புமிகு இந்தியப் பிரதமருடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அவருடைய கடிதம் சென்றவுடன் தமிழ்நாடு அரசினுடைய உயர் அதிகாரிகளும் நிலக்கரி அமைச்சகத்தினுடைய உயர் அதிகாரிகளை உடனடியாகத் தொடர்பு கொண்டு நம்முடைய கடிதத்தின் வாயிலாக இதுகுறித்து அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்து, மேல் நடவடிக்கைகளை அவர்கள் உடனடியாகக் கைவிட வேண்டும்; இந்த மூன்று பகுதிகளுக்கும் உடனடியாக விலக்களிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12–20*

அன்றையதினம் திருவாரூர் மாவட்டத்திலே சுற்றுப்பயணத்திலேயிருந்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்பிற்குரிய திரு. உதயநிதி அவர்களும் அங்கேயே செய்தியாளர்களிடத்தில், தமிழ்நாடு அரசு ஒருபோதும் இதை அனுமதிக்காது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய நாடாளுமன்றக் குழுவினுடைய தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கடிதத்திற்குப் பிறகு மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர் Thiru Pralhad Joshi அவர்களை உடனடியாகத் தொடர்பு கொண்டார். அவர்களை நேரடியாகச் சந்தித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தினுடைய சாராம்சத்தை விளக்கி, இதிலே நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக நேரம் கேட்டிருந்தார். தொலைபேசியிலே ஒன்றிய அமைச்சரிடத்திலே அவர் பேசினார். ஏனெனில், ஒன்றிய அமைச்சர் அவர்கள் வெளியூரிலே இருந்த காரணத்தினால், அவர்களைச் சந்திக்க முடியாவிட்டாலும் தொலைபேசியில் அவரிடத்திலே விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார். இதுமட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்திலே இதுகுறித்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆக, தமிழ்நாடு அரசு, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், உடனடியாகக்

[திரு. தங்கம் தென்னரசு] [2023 ஏப்ரல் 5

கடிதம் எழுதியதோடு நிறுத்திவிடாமல், எல்லாவகையிலும் இந்தப் பிரச்சினையிலே தமிழ்நாட்டினுடைய நிலைப்பாட்டை எடுத்துச் சொல்லி, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்கள், அதையொட்டியிருக்கக்கூடிய வேளாண் விளை நிலங்களில் இந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்பதிலே திட்டவட்டமாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த அவைக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல, இங்கே மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் பேசுகின்றபோது 2006–ஐப் பற்றியெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான், அதிகமாக அதற்குள் போக விரும்பவில்லை. காரணம், இதனை அரசியலாகக் கொண்டு போகவில்லை. ஆனால், நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தில் எதையெல்லாம் நீங்கள் விட்டுவிட்டு கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் மனசாட்சியோடு கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தை இந்த அவையிலே கொண்டு வருகின்றபோது, நீங்கள் இருக்கக்கூடிய அதே எதிர்க்கட்சியிலிருந்து நான்தான் அந்தச் சட்ட முன்வடிவின்மீது அன்றைக்குப் பேசினேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயகுமார் அவர்கள் அன்றைய வருவாய்த் துறை அமைச்சர். அவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள். ஆனால், என்னென்னவற்றை நீங்கள் விட்டுவிட்டுச் செய்திருக்கிறீர்கள் என்பதையெல்லாம் நான் அவைக்கு இந்த நேரத்திலே கொண்டு வர விரும்பவில்லை. அது இப்போது தேவையில்லை. நான் அதனை அரசியலாக்க விரும்பவில்லை. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய கவனம் திசை திரும்பிப் போய்விடும். எனவே, அதே பதிலைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியாருக்கு நீங்கள் கொடுத்துவிட்டீர்கள் என்று சொன்னது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. Satan also quotes Bible verses என்று சொல்வார்கள். அதைப்போல தனியாருக்குக் கொடுப்பதைப் பற்றியெல்லாம், பா.ஜ.க. வந்து இந்த இடத்தில் பாடம் நடத்துகிறதே, அதைத்தான் நான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒரு விரலை சுட்டிக்காட்டும்போது உங்களை நோக்கித்

திரும்பக்கூடிய மற்ற மூன்று விரல்களைப் பார்த்தால், தனியாருக்குத் தாரைவார்ப்பதைப் பற்றியெல்லாம் நாம் பேசுகிறோமே என்று நீங்கள் நினைத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக நான் ஒன்றை மாத்திரம் சொல்வேன். இந்தப் பிரச்சினையை நான் திசை திருப்பிச் செல்ல விரும்பவில்லை. ஆனால், ஒன்றைச் சொல்வேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே இருக்கிறார்கள். அவருடைய சார்பிலும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியங்களாக, நமக்கு உணவளிக்கக்கூடிய அன்னை பூமியாக இருக்கக்கூடிய டெல்டா மாவட்டங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒருபோதும் இத்தகைய திட்டங்களைத் தமிழ்நாடு அரசு அனுமதிக்காது, அனுமதிக்காது, அனுமதிக்காது என்று நான் திட்டவட்டமாக அரசின் சார்பாக உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதிலளித்திருக்கிறார்கள். எனவே, நான் நீண்ட நேரம் அதுகுறித்து விளக்க வேண்டிய அவசியமில்லை. நீங்களெல்லாம் இந்தச் செய்தியைக் கேட்டு எப்படி அதிர்ச்சிக்கு ஆளானீர்களோ, நானும் அதே உணர்வோடுதான் அதிர்ச்சிக்கு ஆளானேன். இதுகுறித்த செய்தியைப் படித்தவுடன் உடனடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நான் தொடர்பு கொண்டு பேசி, அதற்குப் பிறகு உடனடியாக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அதோடு, நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கிற காரணத்தால், அங்கே டெல்லியில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. டி.ஆர். பாலு அவர்களுக்கு அந்தக் கடிதத்தினுடைய நகலை அனுப்பி, உடனடியாகச் சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர் அவர்களைச் சந்தித்து, நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், நான் மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை நீங்கள் அவரிடத்திலே தரவேண்டுமென்று உத்தரவிட்டேன். அவரும் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டார்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2023 ஏப்ரல் 5 பிற்பகல் 12–25*]

*இங்கே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர் அவர்கள் வெளியூரில் இருக்கின்ற காரணத்தினால், அவரை நேரில் சந்திக்க இயலாததால், திரு. டி.ஆர். பாலு அவர்கள், அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்கள். அவருடன் பேசியபோது, "தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் அனுப்பியிருக்கக்கூடிய கடிதத்திற்கு நிச்சயமாக நாங்கள் மதிப்பளிப்போம்; கவலைப்பட வேண்டாம்" என்ற ஓர் உத்தரவாதத்தை (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அமைச்சர் சொன்னதாக ஒரு செய்தியை திரு. டி.ஆர். பாலு அவர்கள் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.*

*ஆகவே, நிச்சயமாகச் சொல்கிறேன்; முதலமைச்சராக மட்டுமல்ல; நானும் டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்தவன். எனவே, இதிலே உறுதியாக நான் இருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்களெல்லாம் எப்படி உறுதியாக இருக்கிறீர்களோ, அதைவிட அதிகமாக, அந்த அளவிற்கு நானும் உறுதியாக இருப்பேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், அதற்கு நிச்சயமாக நம்முடைய தமிழ்நாடு அரசு அனுமதி அளிக்காது; அளிக்காது; அளிக்காது என்பதைச் சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. கவன ஈர்ப்பு

### திண்டிவனம்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து முடித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. ச. சிவகுமார், திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் மற்றும் திரு. இரா. அருள் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

***திரு. ச. சிவகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்த*

2023 ஏப்ரல் 5] [திரு. ச. சிவகுமார்]

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை, உறுப்பினர்களின் மேசைகளிலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**அறிக்கை**

திண்டிவனம் (கி.மீ. 37/600) முதல் கிருஷ்ணகிரி (கி.மீ. 219/782) வரையிலான தேசிய நெடுஞ்சாலை எண் 66, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தைச் சார்ந்ததாகும். இச்சாலையில் 182.182 கி.மீ. தூரத்திற்கு இருவழிச் சாலையாக அமைக்கும் பணிக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் 4—11—2019—ல் தொடங்கப்பட்டன.

கோவிட்—19 பெருந்தொற்று நோயின் முதல் அலை மற்றும் இரண்டாவது அலை அதன் விளைவுகள், நிவார் மற்றும் புரேவி சூறாவளிகளால் டிசம்பர் 2020 மற்றும் ஜூலை 2021—ல் மிக கனமழை மற்றும் இச்சாலைப் பகுதியில் சாலைப் பணிக்கான மண் எடுக்கும் இடங்கள் மழைநீரால் சூழப்பட்டதால் இப்பணி தாமதமானது. தற்பொழுது, 182.182 கி.மீ. நீளமுள்ள சாலையில் 172.266 கி.மீ. (95%) பணி நிறைவு பெற்றுள்ளது. மேலும் இத்திட்டம் ஜூன் 2023—க்குள் முடிக்கப்படும் என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

**திரு. ச. சிவகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். போதிய தகவல்கள் இல்லை. திண்டிவனம்—கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை என்பது, திருவண்ணாமலை, செஞ்சி, செங்கம், ஊத்தங்கரை வழியாக கிருஷ்ணகிரி வரை 182 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தேசிய நெடுஞ்சாலையாகும். Multi

[திரு. ச. சிவகுமார்] [2023 ஏப்ரல் 5

road. *அதாவது, இருவழிச் சாலையாக 7 மீட்டரிலிருந்து 10.5 மீட்டராக அகலப்படுத்தி, விரிவாக்கம் செய்யும் திட்டம் கடந்த 2010 ஆம் ஆண்டு சாலை அமைக்கும் பணி 610 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, ஒப்பந்தம் வெளியிடப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி, 2012 மே மாதம் தொடங்கி, 2014 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டுமென்று தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதில், 2 பெரிய பாலங்கள், 16 சிறிய பாலங்கள், 366 குறுகிய பாலங்கள், 2 இரயில்வே மேம்பாலங்கள், திண்டிவனம், கிருஷ்ணகிரி, செஞ்சி, ஊத்தங்கரை உள்ளிட்ட ஒன்பது இடங்களில், 43.42 மீட்டர் நீளத்திற்குப் புறவழிச் சாலை ஆகியன அமைக்கப்பட வேண்டும். 2016 வரை 52 சதவிகிதப் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்த நிலையில், மீதமுள்ள பணிகளை அந்தத் தனியார் நிறுவனத்தால் தொடர முடியவில்லை. இதனால் சாலைகள் படுமோசமான நிலையில் இருக்கின்றன. அதற்கான பணிகளை விரைந்து முடிக்கக் கோரி, செஞ்சி மற்றும் செங்கம் நீதிமன்றங்களில் பொதுநல வழக்கு ஒன்று தொடரப்பட்டது. இதுசம்பந்தமாக எங்களுடைய கட்சியின் நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களும் 16 இடங்களில் போராட்டங்களை நடத்தினார்கள். அந்தத் தேசிய நெடுஞ்சாலை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் வைத்துள்ள அந்த நான்கு பேப்பர்களையும் வாசித்தால் நேரம் தாங்காது. (குறுக்கீடு)*

**திரு. ச. சிவகுமார்:** *அந்தச் சாலைப் பணிகளை எடுத்து கிட்டத்தட்ட 13 வருடங்கள் ஆகின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்வி இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாக முடியுங்கள்.*

**திரு. ச. சிவகுமார்:** *கிட்டத்தட்ட 13 வருடங்கள் ஆகின்றன. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தொடங்கப்பட்டது. அப்போது தேசிய நெடுஞ்சாலை ஆணையம். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர், நீங்கள் பேசுங்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

*2023 ஏப்ரல் 5]* [திரு. துரைமுருகன்]

*அதிலிருந்து ஏதாவது அவருக்குத் தெரியவில்லையென்றால், கேள்வி கேட்கலாம். ஏற்கெனவே எழுதி வைத்திருப்பதை இங்கு கொண்டுவந்து மறுபடியும் 5 பக்கங்களுக்கு, 10 பக்கங்களுக்கு படிப்பது என்பது, கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் முறையல்ல. இதை நீங்கள் அனுமதித்தீர்கள் என்றால், அது சரியுமல்ல.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

**திரு. ச. சிவகுமார்:** *கிட்டத்தட்ட 3 சுங்கச்சாவடிகள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சாலைப் பணிகள் 52 சதவிகிதம் முடிந்து 9 ஆண்டுகள் ஆகின்றன. குறிப்பாக, சாலைகள் அமைத்த பின்னர் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, அந்த 3 சுங்கச்சாவடிகளை அமைக்கக் கூடாது. எனவே, சாலைப் பணிகளை விரைந்து முடித்து, திண்டிவனம்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையை நான்குவழிச் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலை என்பது தேசிய நெடுஞ்சாலை, அதாவது, தேசிய நெடுஞ்சாலை எண் 66 ஆகும். 16–4–2012–ல், 182 கிலோ மீட்டர் உள்ள இந்தச் சாலையை 624 கோடி ரூபாய் அளவுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. தொடர்ந்து 52 சதவிகிதப் பணிகள்தான் 2016 வரைக்கும் நடைபெற்றன. திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலையில்தான் திருவண்ணாமலையும் இருக்கின்றது. அந்தச் சாலையில்தான் நானும் பயணிக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக எதிர்க்கட்சியில் நான் இருந்தபோது, அப்போது அரசினுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவந்தேன்.*

*பிற்பகல் 12–30*

*ஒப்பந்தம் போடப்பட்டு 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, அந்தச் சாலைப் பணிகள் 2016 ஆம் ஆண்டு வரைக்கும் நிறைவடையவில்லை என்று சட்டமன்றத்தில் நான் கவன*

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 5

ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்ததோடு மட்டுமல்ல, ஒன்றிய அரசாங்கத்தினுடைய அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. நிதின் கட்கரி அவர்களும் அப்போது இதே துறையின் அமைச்சராகத்தான் இருந்தார்கள். அந்தச் சாலைப் பணிகள் நிலுவையில் இருக்கின்றன உடனே நிறைவேற்றித் தர வேண்டுமென்று அவருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அவரும் எனக்கு பதில் கடிதம் எழுதியிருந்தார்கள்; அதில் மாநில அரசாங்கம் முழு ஒத்துழைப்பு கொடுக்காத காரணத்தால்தான் இந்தப் பணி தாமதமாகின்றது என்று அதில் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த விவரத்தை, அப்போதே எதிர்க்கட்சியில் இருந்தபோது இதே மன்றத்தில் படித்துக் காண்பித்து ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டேன். அதற்குப் பின்னாலும்கூட, அந்தப் பணிகள் வேகமாக நடைபெறவில்லை. தொடர்ந்து, ஒன்றிய அரசாங்கம் ஏற்கெனவே எடுத்திருந்த டான்சாய் என்ற ஒப்பந்ததாரரை இரத்து செய்துவிட்டு, 14—11—2019 அன்று மீண்டும் ஓர் ஒப்பந்தத்தைக் கோரியது. அந்த ஒப்பந்தத்தை தமிழ்நாட்டைச் சார்ந்த எஸ்.வி.கே. & கோ என்ற ஒப்பந்ததாரர் எடுத்தார்கள். 2019 ஆம் ஆண்டு டெண்டர் எடுத்தும்கூட அதற்குப் பின்னாலும் மிகவும் காலதாமதமாக அந்தப் பணிகள் நடந்து கொண்டிருந்தன.

கழக ஆட்சி அமைந்தவுடன், ஏற்கெனவே இதுகுறித்து நானே கவன ஈர்ப்பு கொண்டு வந்தேன், ஒன்றிய அமைச்சர் அவர்களின் கடிதத்தை இங்கே படித்து காண்பித்தேன் என்பதையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டு, விரைந்து அந்தச் சாலைப் பணிகள் நடைபெற வேண்டுமென்கிற அடிப்படையில் மீண்டும் ஒன்றிய அரசின் அமைச்சர் திரு. நிதின் கட்கரியை சந்தித்து, ஒப்பந்ததாரர் அந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் விளைவாக இன்றைக்கு ஏறத்தாழ 95 சதவிகிதப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாக, சத்தியமங்கலம், செங்கம், சாம்பல்பட்டி, செஞ்சி ஆகிய நான்கு இடங்களில் புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இரயில்வே மேம்பாலமும், சிறு பாலங்களும் கட்டுகின்ற பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகளில், சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை நானும் அழைத்துப் பேசினேன். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களும் என்னைத் தொடர்ந்து

*பலமுறை வலியுறுத்தியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்தப் பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது ஒப்பந்ததாரரையும், அதிகாரிகளையும் அழைத்துப் பேசியதன் அடிப்படையில், ஆகஸ்டு 2023–க்குள் அந்தப் பணிகள் முழுவதுமாக முடிக்கப்படும் என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவகுமார் அவர்கள் எதிர்பார்த்ததைப்போல, நீங்களும், நானும் சேர்ந்து அந்தச் சாலையில் பயணிக்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகள் விரைவாக செய்து முடிக்கப்படும்.*

## 4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 5– வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)**

**(ஈ) கோரிக்கை எண் 8– பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)**

– – –

### (அ) கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,124,43,40,000/–, மூலதனக் கணக்கில் ரூ.129,00,98,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.

**திரு. தி. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,124,43,40,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.129,00,98,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,17,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

**திரு. ஆ.மு. முனிரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*வைக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாமாண்டு மாணவர்கள், கீழ்வேளூர், குருக்கத்தியிலே ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவரை நீங்கள் இடம் தேர்வு செய்திருக்கிறீர்களா, வாங்கியிருக்கிறீர்களா என்று கேட்டால், இல்லை. நீங்கள் பார்த்திருக்கிற இடம், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம். அந்த இடத்தை இந்து சமய அறநிலையத் துறை, உயர் நீதிமன்ற ஆணையைக் காண்பித்து தர முடியாது என்று மறுத்திருக்கிறது. மாவட்ட ஆட்சியர், அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தை* land acquisition *முறையிலே வாங்கித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அது எப்பொழுது நடக்கப்போகிறது என்று தெரியவில்லை. அதுமட்டுமல்ல,* (குறுக்கீடு) *ஒரே ஒரு நிமிடம். இந்தக் கல்லூரிக்காகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிற இடத்தில் வாழ்கிற மக்களுக்குக் குடிக்க தண்ணீர், . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *10 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *நான் பேசவே இல்லையே! மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் பேசினார்கள். அந்த ஊரிலே குடியிருக்கிற மக்களுக்குக் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது.*

*பிற்பகல் 12—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு)

**திரு. ஓ.எஸ். மணியன்:** *ஒரு நிமிடம், ஒரு நிமிடம், சொல்லி முடித்து விடுகிறேன்.* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தளவில், துறையின் சார்பிலிருந்து இடங்கள் கேட்கப்பட்டால், தர முடியாது என்று பதில் தரப்படுவதில்லை. துறையின் சார்பில், இந்து சமய அறநிலையத் துறையினுடைய இடத்தை என்ன பயன்பாட்டுக்குக் கேட்கிறார்களோ, அந்தப் பயன்பாட்டிற்குக் கொடுக்கின்றபோது, சட்டத் திட்டத்திற்குட்பட்டு,*

அந்த இடத்திற்குண்டான guideline value–ல் 0.5 percentage வாடகையாகத் தந்தால், அந்த இடத்தைக் குத்தகைக்குத் தரலாம் என்பது சட்டம். ஆகவே, எந்தவகையில் அந்த மறுப்பு அனுப்பப்பட்டிருக்கின்றது என்பதற்கான, ஆதாரம் ஏதேனும் இருந்தால், அதனை மாண்புமிகு உறுப்பினர் சமர்ப்பித்தால், அந்த இடத்தை வாங்கிக் கொடுப்பதற்குண்டான முயற்சியை நிச்சயமாக இந்து சமய அறநிலையத் துறை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர். அந்தக் கல்லூரியைப் பற்றி அவர் இப்போது கரிசனமாகப் பேசுகிறார். இதே வேளாண் கல்லூரியை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அந்த இடத்தில் அடிக்கல் நாட்டி, துவக்குவதற்கு அனுமதி அளித்தார்கள். ஆனால், இவர்களுடைய ஆட்சிக்காலத்தில், 10 ஆண்டுகளில், அப்பணிகளை நிறுத்தி வைத்து, கிடப்பில் போட்டு கல்லூரியை வரவிடாமல் செய்தார்கள். ஆனால், இப்போது அவர் பேசுகிறார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆரம்பித்துவிட்டீர்கள் என்று சொல்லிவிட்டாரே! (குறுக்கீடு) ஆரம்பித்து இரண்டு வருடங்களாகக் கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லி விட்டார்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** பாராட்டுவதற்கு மனம் இல்லை. (குறுக்கீடு) தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுங்கள். இப்போது கிண்டலாகக் கூறினீர்கள். உப்புமா கிண்டினார்கள், களி கிண்டினார்கள் என்று கிண்டலாகக் கூறினீர்கள். ஏதோ களியோ, உப்புமாவோ சாப்பிட்டோம் அல்லவா? (சிரிப்பு) அதைப் பாராட்ட வேண்டும். இந்த அரசு, முக்கியத்துவம் கொடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையின் சலுகைகள், ஒவ்வொரு விவசாயியையும் சென்றடைகின்றது. பாராட்டுவதற்கு மனமில்லை. அவர் பேசும்போது எப்போதும், குறை சொல்லித்தான் பேசுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இரண்டு வருடங்களாகக் கல்லூரியை ஆரம்பித்து, நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதே பாராட்டுதானே! மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், முடித்து விடுங்கள்.*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்ட முடியாது. ஏனென்றால், 4 வேளாண் கல்லூரிகளைத் தொடங்கி, 4 வேளாண் கல்லூரிகளிலும் இன்றைக்கு நிலம் வாங்காமல், போதிய இடத்தில் தொடங்காமல்* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி உங்கள் தொகுதி* (குறுக்கீடு) *ஒரு வார்த்தை திரு. வி.பி. நாகைமாலி ஏதோ சொல்ல வருகிறார்.* (குறுக்கீடுகள்) *இல்லை. அவர் சொல்லட்டும்.* (குறுக்கீடு) *இல்லை,* (குறுக்கீடு) *நான் நேரம் தருகிறேன், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. வி.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மைக்கை விட்டு விட்டுப் பேசுங்கள். மைக் எங்கேயும் போகாது. கையைத் தூரம் எடுங்கள்* (குறுக்கீடு)

**திரு. வி.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் கீழ்வேளூரிலே அமைக்கப்பட்டிருக்கின்ற விவசாயக் கல்லூரி சம்பந்தமாகப் பேசினார்கள்.* (குறுக்கீடு) *இருங்கள், கொஞ்சம், என்னுடைய தொகுதி, நான் கொஞ்சம் பேச வேண்டும் அல்லவா?* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள், திரு. நாகைமாலி, ஏதாவது அதில்* point of order *இருக்கிறதா?*

**திரு. வி.பி. நாகைமாலி:** *என்னுடைய தொகுதியில் அந்தக் கல்லூரி அமைக்கப்பட்டிருக்கிறது.* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. அதில் என்ன* Point of order *இருக்கிறது? சொல்லுங்கள்.*

**திரு. வி.பி. நாகைமாலி:** அது நீண்டகாலக் கோரிக்கை, 2011–ல் துவக்கப்பட்டு, அந்தக் கோரிக்கை இந்த ஆட்சியில்தான் நிறைவேறியிருக்கிறது என்பதை மிகவும் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது அந்தக் கல்லூரி துவங்கியிருக்கிறது. அதற்கான இடம் தேர்வு செய்யப்படுவதற்கான எல்லா தஸ்தாவேஜ்களும் நம்முடைய அரசுக்கு வந்திருக்கிறது. விரைவிலே, அந்த file move–ஆகி நிலம் எடுப்பதற்கான எல்லாப் பணிகளும் நடக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தானே அவர்களும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள். (குறுக்கீடு) போதும். இல்லை, அதிலே ஏதாவது Point of order இருந்தால், உங்கள் தொகுதி (குறுக்கீடு) நான் ஒரு வாய்ப்பைத் தந்தேன். நீங்கள் நடந்ததைத்தானே சொல்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. நாகைமாலி, உட்காருங்கள்.

**திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) எங்களது உறுப்பினர் பேசும்போது, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஓர் உறுப்பினருக்கு நீங்கள் வாய்ப்பு கொடுத்தீர்கள். இதேபோல, அரிசியைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது, எங்களுடைய முன்னாள் அமைச்சர் திரு. செல்லூர் ராஜு Point of order கேட்டார். அதற்கு நீங்கள் வாய்ப்புக் கொடுக்கவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம், இப்படி நீங்கள் ** இப்படி செய்தால், அது எப்படிச் சரியாக இருக்கும்? (குறுக்கீடு) எப்படி நியாயமாக இருக்கும்? (குறுக்கீடு) உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. ஆனால், நீங்கள் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கக் கூடாது.

பிற்பகல் 1–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) ** என்ற வார்த்தை நீக்கப்படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசி முடிக்கட்டும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. எஸ்.பி. வேலுமணி:** *அங்கு இடமில்லை என்பது அவருடைய பிரச்சினை. இடம் இல்லை என்று அவர் சொல்கிறார். அதற்கு இடம் இருக்கிறதா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். இப்படி நடந்தால், எங்களுடைய உறுப்பினர் எப்படிச் சொல்வார்? கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சொல்வது மட்டும் எப்படி நியாயமாக இருக்கும்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எப்போதும் முன் வரிசையில் இருக்கிறவர்கள்,* Leaders. *சில நேரங்களில் அவர்களுக்கு விஷயம் தெரியும்; முன்னாள் சபாநாயகருக்குத் தெரியும்.* (குறுக்கீடு) *நான் சொல்வதை முதலில் கேளுங்கள். முன் வரிசையில் உள்ள* leader-*களுக்கு கொஞ்சம்* priority *உண்டு. ஆகையினால் அவர்களுக்குக் கொடுக்கலாம். இரண்டாவது, அது அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டது.* What has happened there *என்பது பற்றிச் சொல்வதற்கு அவருக்கு உரிமை உண்டு.* (குறுக்கீடு) *ஆகையினால், திரு. ராஜூ எங்கே இருக்கிறார்?* (குறுக்கீடு) *அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்,* (குறுக்கீடு) *இங்கு வருகிறீர்களா, உங்களுக்குக் கொடுக்கவே மாட்டோம்.* (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் ஒரு விளக்கத்தைத் தந்துவிட்டார்கள். மற்றொரு விளக்கத்தை நான் சொல்கிறேன். அவர் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். இடம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை,* college *நடக்கிறது என்கிறார். அப்போது முன் வரிசையில் இருக்கிறவரின் தொகுதி என்பதால், வேறு ஏதாவது விவரம் சொல்கிறாரா என்பதற்காக வாய்ப்பு கொடுத்தேன். விவரம் இல்லை. அதனால், அவரை உட்காரச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், பேசி முடியுங்கள்.*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை ஒருபோதும் பாராட்ட முடியாது.* (குறுக்கீடு) *இது என்ன நியாயம்? நான் பேசும்போது, இன்னொருவர் குறுக்கிட்டால், நான் எப்படிப் பேச முடியும்?*

*2023 ஏப்ரல் 5*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூரில் வேளாண் கல்லூரி அவசியம் எங்களுக்கு வேண்டுமென்றுதான் வற்புறுத்துகிறேன். மாணவர்களுக்கு உகந்த இடத்தை நீங்கள் தேர்வு செய்ய வேண்டும். வாங்க வேண்டும். ஈச்சங்கோட்டைக்கு அனுப்பாமல், அங்கேயே படிப்பதற்குண்டான ஏற்பாட்டை நீங்கள் செய்ய வேண்டும் என்பதைத்தான் நான் வலியுறுத்துகிறேனே தவிர, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதனைப் பதிவு செய்தாகிவிட்டது. அடுத்த* subject*–க்கு வாருங்கள்.*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *வேண்டாம் என்று சொல்வதற்கு நாங்கள் இங்கே வரவில்லை. அவசியம் வேண்டும், வேண்டும் வேண்டும். அதைத்தான் நான் சொல்ல வருகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தை பூராவும் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். 2020–2021–ல் கடுமையான வெள்ளம்.* (குறுக்கீடு) *வேண்டும் என்றுதான் சொல்கிறேன். பிறகு என்ன?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் கல்லூரிக்காக அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டு, அனுமதி கேட்டு வந்திருக்கிறது. அதேபோல், காரைக்குடியில் உள்ள செட்டிநாடு கல்லூரிக்கும் இடம் தேர்வு செய்யப்பட்டு, அனுமதி கேட்டு வந்திருக்கிறது. கரூரிலும் இடம் தேர்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. படிப்படியாக இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உடனடியாகக் குறை சொல்லக் கூடாது. நீங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். பழைய ஒருங்கிணைந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஓர் அரசு வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்பது பல நாள் கோரிக்கை. கலைஞர் அவர்கள் ஆரம்பித்து வைத்த கல்லூரி. இடையில் நிறுத்தப்பட்ட காரணத்தினால், மீண்டும் அதனைத்*

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2023 ஏப்ரல் 5

*தொடங்கவிருக்கிறோம். (குறுக்கீடு) இவர்கள் ஆட்சியில்தானே நிறுத்தினார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் போதும், முடித்துவிடுங்கள்.*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் ஆண்டில் கடுமையான வெள்ளம். எங்களுடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், வெள்ளப் பகுதியைப் பார்வையிட்டு, உடனடியாக ஒரு ஹெக்டேருக்கு 20,000 ரூபாய் வழங்கினார்கள். அப்போது, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அங்கு பார்வையிட வந்தபோது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த அரசு ஏக்கருக்கு 30,000 ரூபாய், ஹெக்டேருக்கு 75,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி, வற்புறுத்திப் பேசினார். இப்போது சீர்காழியில், தரங்கம்பாடி. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஹெக்டேருக்கு 25,000 ரூபாய்தானே!*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *ஏக்கருக்கு 30,000 ரூபாய், ஹெக்டேருக்கு 75,000 ரூபாய் தரச்சொல்லி இன்றைய முதலமைச்சர், அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சொன்னார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஏக்கருக்கு 12,000 ரூபாய் தானே! அதைத்தானே கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள்.*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *ஹெக்டேருக்கு 75,000 ரூபாய். ஹெக்டேருக்கு 75,000 ரூபாய். இப்போது சீர்காழியிலும், தரங்கம்பாடியிலும் வெள்ளம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து பார்த்தார்கள். மக்கள், விவசாயிகள் என்ன எதிர்பார்த்தார்கள் என்றால், அன்றைக்கு ஹெக்டேருக்கு 75,000 ரூபாய் வழங்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சொன்னார்களே! இன்றைக்கு முதலமைச்சராகிவிட்டாரே! கண்டிப்பாக 75,000 ரூபாயோ அல்லது அதற்கு மேலோ கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். எங்களுடைய முதலமைச்சர் 20 ஆயிரம் ரூபாய்*

கொடுத்தாரே அதையும் குறைத்து, ஹெக்டேருக்கு 13 ஆயிரத்து 500 ரூபாய்தான் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி பகுதியில் திடீரென்று ஏற்பட்ட மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு, ரேஷன் கார்டுக்கு ரூ.1,000/– என முதற்கட்ட நிவாரணமாகக் கொடுத்தார்கள். அதேபோல, பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.13,000/– வீதம் கொடுத்தார்கள். அதே நிலத்திற்கு, அதே பயிருக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகையும் உடனடியாகப் பெற்றுக்கொடுக்கப்பட்டது. மீண்டும், இப்போது பருவம் தவறி பெய்த மழையினால் ஏற்பட்ட பாதிப்பிற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000/– கொடுத்தார்கள். ஆக, இந்த விஷயத்தில் பாராட்ட வேண்டும். ஆனால், திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் அமைச்சராக இருந்தபோதிலும் சரி, எப்போதுமே குற்றம் சொல்லிச் சொல்லியேதான் பேசுவார்கள். அவர்கள் இப்படிப் பேசுவதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மழை, வெள்ளக் காலங்களில் பயிர்களுக்கு எவ்வளவு பாதிப்பு என்பதைக் கணக்கிட்டு அரசு முடிவெடுக்கும். அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

**திரு. ஓ.எஸ். மணியன்:** உண்மையையும், நடப்பையும் சொல்கிறேன். இதற்கு ஏன் கோபித்துக்கொள்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், அன்றைய எதிர்க்கட்சித் தலைவருடைய அறிக்கை:

“விவசாயிகள் அழுத கண்ணீர் வீண்போகாது; அதுபேரரசையும் வீழ்த்திவிடும் என்பதை முதல்வர் பழனிசாமி உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே, தொடர்ந்து வஞ்சிக்கப்பட்ட விவசாயிகளின் மனதில் சூழ்ந்திருக்கும் சினத்திலிருந்து சிறிதளவேனும் தப்பிக்க வேண்டுமானால், உடனே ஒரு ஏக்கருக்கு ரூ.30,000/– நிவாரண

*உதவி என அறிவித்திட வேண்டும். செய்வாரா பழனிசாமி அல்லது எப்போதும்போல பொய்களைச் சொல்லியே இனியும் பொழுதுபோக்குவாரா!"*

*என்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் சொல்ல வந்தோம்; வேறொன்றுமில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிடட்டும்,* please. *(குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையை முடித்துவிடட்டும். அதை நீங்கள் குறிப்பு எடுத்துக்கொள்ளுங்கள்.*

**திரு. ஓ.எஸ். மணியன்:** *விவசாயிகள் நிம்மதி அடைய வேண்டுமென்று சொன்னால் தாராளமாக தண்ணீர் வேண்டும். காவேரியிலும், முல்லைப் பெரியாறு அணையிலும் தண்ணீர் பெறுவதற்காக எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி, அந்த முயற்சியில் வெற்றியும் கண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, விதைகள் அவசியம் வேண்டும். இந்த விதைகளை அரசே தந்தால்தான் வேளாண்மை சிறக்கும். இன்றைக்கு விதைகளை ஓரளவிற்குத்தான் இந்த அரசில் வழங்குகிறீர்கள். மீதமுள்ள விதைகளைக் கடைகளிலேதான் வாங்குகிறோம். கடைகளில் வாங்குகிறபோது, அந்த விதைகளுக்கு அரசு மானியம் கிடையாது. ஏழை விவசாயிகளுக்கு அரசு மானியம் அறிவித்தும்கூட அதிக விலை கொடுத்து கடைகளில் வாங்குகின்ற விதைகளுக்கு மானியம் இல்லாமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது. எனவே, விதைகளை முழுவதுமாக அரசே வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*அதேபோல, இப்போது விவசாயத்தில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துவது பூச்சி, பூஞ்சாள நோய்கள்தான். அதற்கு இன்று மருந்து அடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதில் சுற்றுச்சூழல் காரணமாக விஷத் தன்மையைக் குறைத்திருக்கிறார்கள். அது நல்லதுதான். அதனால், அடிக்கடி மருந்து அடிக்க வேண்டிய, 10 தினங்களுக்கு ஒரு முறை மருந்து அடிக்க வேண்டிய (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசவே இல்லை.*

*2023 ஏப்ரல் 5]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 24 நிமிடங்களாகிவிட்டன. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷத் தன்மை இப்போது குறைவாக இருக்கிறது. அதனால், அடிக்கடி மருந்து அடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதையும் உடனடியாக அடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. எனவே, டிரோன் மூலமாக மருந்து அடிப்பதுதான் இனிமேல் சரியான முறையாக இருக்கும். அதற்காக, இலாபகரமாக இயங்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக டிரோன்கள் வாங்குவதற்கு நீங்கள் அனுமதித்தீர்கள் என்று சொன்னால், விவசாயிகள் எளிதாக வாடகைக்கு எடுத்து, அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள். (குறுக்கீடு) போதும். 25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். அதில் 4 நிமிடங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதுபோக, நீங்கள் 21 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். போதும். (குறுக்கீடு) ஒரு வார்த்தை சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்ற ஒன்று; நீர்ப்பாசனப் பகுதிகளான ஆறு, வாய்க்கால், குளம், ஏரி ஆகியவற்றில் ஆகாயத் தாமரை நீக்கமற, அடர்த்தியாக வளர்ந்து, தண்ணீரின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தி, தண்ணீரின் தரத்தையும் கெடுத்து, வெள்ளம் ஏற்படுவதற்குக் காரணமாக, வடிகால் பகுதிகளைப் பாதிக்கின்ற ஒன்றாக இருக்கிறது. இந்த ஆகாயத் தாமரையை அழிப்பதற்கு, ஒழிப்பதற்கு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கையைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியது போதும். நீங்கள் பேச ஆரம்பித்து 26 நிமிடங்களாகிவிட்டன, போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நன்றி சொல்லி முடியுங்கள்.

*பிற்பகல் 1–10*

**திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவசியமான ஒன்றாக இருப்பதும், ஆரோக்கியத்திற்கு உகந்ததாகக் கருதப்படுவதும், இயற்கை விவசாயம் ஆகும். அந்த இயற்கை விவசாயத்திற்கு, நீங்கள் ஒதுக்கியிருக்கிற நிதியைப் பார்த்தால்—4 கோடி ரூபாய், 6 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறீர்கள். இது எதற்கு ஆகும்? இந்தமாதிரி நிதியை ஒதுக்கினால், நாம் இயற்கை விவசாயத்தை நாடு முழுவதும் கொண்டு வருவதற்கு ஒரு தலைமுறை ஆகிவிடும். எனவே, நீங்கள் தாராளமாக நிதியொதுக்க வேண்டும். அதேபோல, இயற்கை விவசாயத்திற்கு அதற்கான இடுபொருளாக பசுந்தாள் உரங்களை நாம் அதிகம் கொண்டு வர வேண்டும். மீன் எண்ணெய்தான் இன்றைக்கு அந்தப் பயிர்களுக்கு நல்ல உரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும் நன்றி.

**திரு. ஓ.எஸ். மணியன்:** எனது தொகுதிக் கோரிக்கைகளை அவையில் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் 1. தலைஞாயிறு, 2. திருமருகல், 3. சீர்காழி, 4. செம்பனார்கோவில் ஆகியவற்றை புதிய வருவாய் வட்டங்களாக அறிவிக்க வேண்டும்.

வேதாரண்யம் அரசு மருத்துவமனையினை முழுமையாக மாவட்டத் தலைமை மருத்துவமனையாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டும்.

நாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரியில் நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு, உள் நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை உடனடியாகத் தொடங்க வேண்டும்.

நாகப்பட்டினத்தில் பனங்குடி கிராமத்தில் CPCL நில எடுப்புக்கு நிலம் தர முன்வந்துள்ள விவசாயிகளுக்கு மத்திய அரசு நில எடுப்புச் சட்டத்தின்படி மதிப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

*2023 ஏப்ரல் 5]* *[திரு. ஓ.எஸ். மணியன்]*

*கடலில்* Crude Oil *குழாய் உடைந்து கடல்நீர் மாசு ஏற்படாமல் இருக்கவும், சுற்றுச்சூழல் மாசு ஏற்படாமல் இருக்கவும், 6 மாதங்களுக்கு ஒரு முறை எண்ணெய் குழாய்களின் உறுதித் தன்மையினைப் பரிசோதிக்க மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.*

*நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் கிராமம், பள்ளிக்கூட தெருவைச் சேர்ந்த இராணுவ வீரர் திரு. ஞானசேகரன் த/பெ சிங்காரவேல் என்பவர் காஷ்மீர் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வரக் கூடாது என்பதற்காக, சக இராணுவ வீரரால் கேம்பிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது குடும்பத்திற்குத் தமிழ்நாடு அரசு நிதியுதவி வழங்க வேண்டும்.*

*வேதாரண்யம் தொகுதி, வண்டுவாஞ்சேரி கிராமம், 400 ஏக்கர் நிலப்பரப்பில் உணவுப் பூங்கா அமைக்க 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நிலம் தேர்வு செய்யப்பட்டு மண் பரிசோதனையும் நடந்துள்ளது. இத்திட்டத்தினை அமல்படுத்த வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய* clarification. *நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் பேசுகின்றபோது, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து ஆனந்த பூர்த்தியாகி ஆகாயத் தாமரை எல்லா இடங்களிலும் பரவிவிட்டது, அதை அழித்தொழிக்க வேண்டுமென்று கேட்டார். அதில் ஏதாவது அரசியல் குறியீடுகள் மறைந்திருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

**திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மணி பிற்பகல் 1–11, பிற்பகல் 1–18–க்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா, அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களுக்குப் புகழ் வணக்கம். எங்களுடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், மாண்புமிகு இளைய தலைவர் உதயநிதியார் அவர்களையும் மற்றும் மூத்த அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன்.

ஒரு இலட்சம் பனை விதைகளை வருடாவருடம் கொடுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கம் தெரிவித்து, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலன் மற்றும் பால்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

இது வள்ளுவர் வாக்கு. உலகின் தலைசிறந்த நூல்களில் ஒன்றாம் திருக்குறளில் இக்கருத்து இடம் பெற்றுள்ளது. இந்த உலகம் எத்தனை தொழில்களைச் சார்ந்திருந்தாலும், உழவுத் தொழிலுக்கு அடிபணிய வேண்டுமென்பது நிதர்சனமான உண்மை என்று குறிப்பிட்டிருக்கிறார் வள்ளுவர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதனால்தான், எங்களுடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே வேளாண்மைத் துறைக்கென்று தனி நிதிநிலை அறிக்கையை உருவாக்கித் தந்திருக்கிறார் என்று சொன்னால், சாதாரண விஷயமல்ல. இங்கே முன்னாள் அமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இந்த வேளாண் பட்ஜெட்டை பற்றிக் குறை சொல்லி, இந்த பட்ஜெட்டில் என்ன இருக்கிறது? வெறும் உப்புமா கலவைதான் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆமாம், ஏழை வீட்டிற்குச் சென்றால், சோறு படைப்பதற்கு நேரமாகும், விரைவில் உணவிடுவதற்கு உப்புமாதான் செய்து தருவார்கள்.

2023 ஏப்ரல் 5] [திரு. தா. உதயசூரியன்]

இந்த வேளாண் தொழில் குறித்து பல்வேறு பழமொழிகள் உள்ளன. "தவளை கத்தினால் மழை வரும்". "அந்தியில் ஈசல் பூத்தால் அடைமழைக்கு அச்சாரம்". "தட்டான் தாழப் பறந்தால் தப்பாமல் மழை, தட்டான் கிட்டப் பறந்தால் பக்கத்தில் மழை". இவையெல்லாம் பழமொழிகள். மனிதர்களுக்கு மட்டுமல்ல; பல ஜீவராசிகளுக்கும் மழை எப்படி வருகிறது என்று தெரியும். ஆனால், நான் சொல்கின்ற பழமொழி, 'திராவிட நாயகன் ஆட்சிக்கு வந்தால் நித்தம் நித்தம் மழை வரும்'. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான், வரையறுக்கப்பட்ட ஜூன் 12 ஆம் தேதிதான் மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டும், ஆனால், 19 நாட்களுக்கு முன்னதாகவே மேட்டூர் அணை திறக்கப்பட்டு, தஞ்சை டெல்டா மாவட்டத்தின் கடைமடைப் பகுதிவரை தூர்வாரியிருந்த காரணத்தினால் 2 இலட்சத்து 17 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. பெருமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், 47 ஆண்டுகளில் இல்லாத அளவில் ஒரு பெரிய சாதனை, திராவிட மாடல் ஆட்சியில் இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த காரணத்தினால்தான் இதுபோன்ற சாதனை அடையப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறைக்கு ஒன்றுமே இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறை என்று சொன்னால்,

'என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்,
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?'

எங்கள் கட்சியில் இருந்தபோது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடிய பாட்டு.

"நல்ல நல்ல நிலம் பார்த்து,
நாமும் விதை விதைக்கணும்,
நாட்டு மக்கள் மனங்களிலே நாணயத்தை
வளர்க்கணும்"

என்று பாடினார். ஆனால், அவர் உருவாக்கிய கட்சியில், 10 ஆண்டுக் காலம் ஆட்சி நடைபெற்றபோது, 2015–லிருந்து 2020 வரை 5 ஆண்டுக் காலங்களில் கரும்பு விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட தொகை டன் ஒன்றிற்கு 2 ஆயிரத்து 750 ரூபாய்.

2021 ஆம் ஆண்டு எங்களுடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, இந்த நிதிநிலை அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, பெரும் நிதிச் சுமை இருந்தாலும், விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல பணியாக 2021 ஆம் ஆண்டு கரும்பு டன் ஒன்றிற்கு 2 ஆயிரத்து 900 ரூபாய், 2022 ஆம் ஆண்டு டன் ஒன்றிற்கு 2 ஆயிரத்து 950 ரூபாய், இந்த ஆண்டு டன் ஒன்றிற்கு 3 ஆயிரத்து 016 ரூபாய் என விலை வழங்கியிருக்கிறோம். (குறுக்கீடு) ஏன், உங்கள் பத்தாண்டுக்கால ஆட்சியில் 4 ஆயிரம் ரூபாய், 5 ஆயிரம் ரூபாய் என்று கொடுத்திருக்கலாமே! (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 3 ஆயிரத்து 016 ரூபாய் இந்த ஆண்டு கொடுத்திருக்கிறோம். ஒவ்வோராண்டும் கரும்பு விவசாயிகளுக்கு விலையை உயர்த்திக் கொண்டேயிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நீங்கள் ஐந்தாண்டுக் காலமாக கொடுத்த தொகை 2 ஆயிரத்து 750 ரூபாய். 2 ஆயிரத்து 750 ரூபாய்தான். இதன்மூலம் எந்த அரசு விவசாயிகளைக் காப்பாற்றுகிற அரசு என்று தெரிந்துகொள்ளலாம்.

அதுமட்டுமல்ல, எங்கள் ஐயா கலைஞர் அவர்களால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்மூலம் 2010 ஆம் ஆண்டில் 12 சர்க்கரை ஆலைகளில், 2 பொதுத் துறை ஆலைகள்—தஞ்சாவூர், பெரம்பலூர் பொதுத் துறை ஆலைகள்— எஞ்சியுள்ளவை 10 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள். இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நலிவடையாமல் இருக்க வேண்டும், வருமானத்தை ஈட்ட வேண்டும் என்பதற்காகப் போடப்பட்ட திட்டம் Cogeneration Project–இணை மின் உற்பத்தித் திட்டம். அத்திட்டம் போடப்பட்டபோது 18 மாதக் காலங்களில் அந்த இணை மின் நிலையங்களில் உற்பத்திப் பணிகளை உருவாக்கித் தந்துவிட வேண்டும். உங்கள் பத்தாண்டுக்கால ஆட்சியில் நீங்கள் செய்தீர்களா? நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும், அவ்வப்போது கேள்விகள் கேட்டுக்கொண்டேயிருந்த காரணத்தால், பத்தாண்டுகளில், ஐந்தே ஐந்து ஆலைகளில்தான் நீங்கள் பணிகளைச் செய்தீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், தற்போது தருமபுரி, பாலக்கோடு ஆலையில் 6–வது ஆலையாக Cogeneration திட்டத்தை நாங்கள் முடித்திருக்கிறோம். இன்னும் 6 ஆலைகள் இருக்கின்றன. அவற்றிலும் 70, 80 சதவிகிதப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

2023 ஏப்ரல் 5] [திரு. தா. உதயசூரியன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட பணத்தில் 10 சதவிகிதம் விவசாயப் பெருங்குடி மக்களுடைய பங்குத் தொகை. 90 சதவிகிதம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பணம். அதற்கு வட்டி 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய். ஏற்கெனவே குறிப்பிட்டவாறு 18 மாதக் காலத்தில் Cogeneration திட்டத்தை உருவாக்கித் தந்திருந்தால், அசலுடன், இந்த 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் வட்டியும் குறைந்திருக்கும். ஆனால், நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு பணிகள் முடுக்கிவிடப்பட்ட காரணத்தால், அப்பணிகள் தற்போது படிப்படியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம், 2010 ஆம் ஆண்டிலேயே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தம் கொடுக்கப்பட்டு, work order கொடுக்கப்பட்டவுடனேயே, அதற்குரிய பொருட்களெல்லாம் வந்து இறங்கின; எல்லாம் துருப்பிடித்துத்தான் போயின.

நான் சார்ந்திருக்கும் மாவட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சி 2–வது சர்க்கரை ஆலை. அந்த ஆலையுடன் சேர்த்து அறிவிக்கப்பட்ட எல்லா ஆலைகளுக்கும் உபகரணங்கள் வந்தன. அவை துருப்பிடித்துத்தான் போயின. ஏன் கிடப்பில் போட்டிருந்தீர்கள்? அது விவசாயிகளுக்காகப் போடப்பட்ட திட்டம்தானே? கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக இணை மின் உற்பத்தித் திட்டத்திற்கு நீங்கள் காலம் தாழ்த்தியது உண்மை. விவசாயிகளுக்காக இதைச் செய்திருக்க வேண்டுமல்லவா? நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோது ஏற்கெனவே பேசினேன். அப்போதைய அமைச்சர் திரு. தங்கமணி அவர்களிடம் அடுக்கடுக்காக அப்போது கேள்வி கேட்டேன். பத்தாண்டுக் காலமாக நீங்கள் ஏன் செய்யவில்லை? நீங்கள்தான் விவசாயிகளுக்குப் பாதுகாப்பா? (குறுக்கீடுகள்) ஆனால், நாங்கள்தான் இதுபோன்ற திட்டங்களை உருவாக்கினோம்.

அதுமட்டுமல்ல, 4 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மூடப்பட்டிருந்தன. (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் இன்று பேசவிருக்கிறார். நான் கேட்பதற்கெல்லாம் அவர் பேசும்போது பதில் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவாசலில் கால்நடை ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அதுகுறித்தும் நான் பேசப் போகிறேன். அவர்தான் அத்துறைக்கு அமைச்சராக இருந்தார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

அவர்கள் அப்போது முதலமைச்சராக இருந்தார்கள். தற்போதைய மாண்புமிகு முதல்வர், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, நான் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து பேசியிருக்கிறேன். அதற்கும் நான் சொல்வதற்கும் சேர்த்து, கடைசியாகப் பேசும்போது உங்கள் உறுப்பினரைப் பதில் சொல்லச் சொல்லுங்கள். (மணியடிக்கப்பெற்றது) இதுபோன்ற எண்ணற்றத் திட்டங்களை விவசாயிகளுக்காகச் செய்திருக்கிறோம். 5 ஆலைகள் திறக்கப்படாமலேயே இருந்தனவே! நடிப்பிசைப் புலவர் திரு. கே.ஆர். இராமசாமி அவர்களின் பெயரிலான ஆலையை உங்களால் திறக்க முடிந்ததா? நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஓர் ஆலை, அதாவது, தருமபுரி ஆலை தற்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்காகப் பல்வேறு நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பது ஒன்று.

மேலும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2023 ஆம் ஆண்டினை 'சர்வதேச சிறு தானியங்கள் ஆண்டாக' ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அறிவித்திருக்கிறது. அதனுடைய பயனாகத்தான் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தோலோசித்ததன் அடிப்படையில், வரகு, கேழ்வரகு, பனி வரகு, சாமை, தினை, குதிரைவாலி போன்ற சிறு தானியங்கள் உற்பத்திக்கு 82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பட்ஜெட்டில், ஒன்றுமேயில்லை என்று சொன்னால் நான் என்ன சொல்வது? பண்டைய காலத்தைப்போல, தற்போது பெரும்பாலானோர் காலையில் பப்பாளிப்பழம் 4 கீற்றுகள், நவதானியங்களால் தயாரிக்கப்பட்ட தோசைகள் 2 என்று சிற்றுண்டியை முடித்துக்கொள்கிறார்கள். தற்போது நிறைய பேர் அரிசி உணவையே சேர்ப்பதில்லை. நாம் சாப்பிடும்போது கவனித்தால் தெரியும். நிறைய பேர் அரிசி உணவையே சேர்க்காமல் சிறு தானியங்களையே விரும்புகின்ற காலம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதற்காகத்தான் மலைப் பிரதேசங்களில் இருக்கின்ற இடங்கள் மாற்றுப் பயிர் சாகுபடி மூலமாகவும், மானாவாரி நிலங்கள், தரிசு நிலங்கள் போன்ற நிலங்களையெல்லாம் சீர்திருத்தம் செய்தும், அவற்றிற்கென 82 கோடி ரூபாயில் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், எங்கேனும் 10 ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறதென்றால், அந்த நிலத்தைத் தேர்வு செய்து, அதற்கு சூரிய ஒளி மின்சாரமோ அல்லது மின் வாரிய மின்சாரமோ கொடுக்கப்பட்டு, அங்கு பழவகைகள், செடிகளை விளைவிப்பதற்கான திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1—20

இன்னும் மேலோங்கி சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் சொன்னேனே, மேட்டூர் அணை திறந்து விடப்பட்டு தண்ணீர் வழிந்தோடி விவசாய நிலங்களுக்கெல்லாம் பயனாக இருந்தது. ஆனால், ஆழ்துளைக் கிணறுகள்மூலமாக, கிணறுகள் மூலமாக பாசனம்செய்கின்றவிவசாயிகளுக்கு,இந்த 2 ஆண்டுக்கால ஆட்சியில் ஒன்றரை இலட்சம் பம்ப்செட்டுகளுக்கு, இலவச மின்சாரம் கொடுத்திருக்கின்ற ஆட்சி திராவிட மாடல் ஆட்சி. ஆனால், 10 ஆண்டுக்காலத்தில் 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர்களுக்குத்தான் நீங்கள் இலவச மின்சாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். அதுவும் இரண்டு ஆண்டுகளில். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே இன்னும் மேலோங்கி சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2017—க்குப் பிறகு, அரசின் திட்டங்களில் பழங்குடியின, ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஒதுக்கப்படுகின்ற மின்னிணைப்புகள் வழங்கப்படவேயில்லை. ஆனால், எங்கள் ஆட்சியில் தொடர்ந்து நிலுவை இல்லாமல் ஆதி திராவிட மக்களுக்கும், பழங்குடியின மக்களுக்கும் அந்த மின்னிணைப்புகளை நாங்கள் கொடுத்திருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்களாகிவிட்டன. ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** முடித்து விடுகிறேன். 1989 ஆம் ஆண்டு எங்கள் ஐயா கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது வேளாண்மைத் துறையோடு ஒட்டியிருந்த கால்நடைத் துறையைப் பிரித்து, இந்திய துணைக் கண்டத்திலேயே கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை மாதவரத்தில் உருவாக்கிக்காட்டிய பெருமை, எங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. அப்போது சின்னசேலம் ஆட்டுப் பண்ணை என்று ஒன்று இருந்தது. இந்த சின்னசேலம் ஆட்டுப் பண்ணை என்பது சென்னை மாகாணமாக இருந்தபோது, மைசூர் என்ற இடத்திலிருந்தது. 1956 ஆம் ஆண்டு மாகாணங்களைப் பிரிக்கின்றபோது, அந்தக் கால்நடை ஆராய்ச்சிப் பண்ணை—ஒசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், சேலம் எல்லாம் ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம்; தென்னாற்காடு

மாவட்டம் என்பது கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி எல்லாம் ஒருங்கிணைந்தது—சேலம் மாவட்டம், ஓசூரிலே அந்தக் கால்நடைப் பண்ணை இருப்பதனால், 1956 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திற்கு நிகராக அருகாமையிலே இருக்கின்ற தென்னாற்காடு மாவட்டத்திலிருந்த சின்னசேலத்திலிருந்த ஆட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை ஆகிய அனைத்தையும் இங்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். அதை 1957 ஆம் ஆண்டு நினைவில் வாழும் முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்கள் அதைத் திறந்து வைத்தார். அதற்கு சின்னசேலம் ஆட்டுப் பண்ணை என்று பெயர். கடலூர், ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டமாக இருந்தபோது JD control தென்னாற்காடு கடலூர்; அதற்குப் பிறகு பிரிந்து விழுப்புரம் JD விழுப்புரம்; அதற்குப் பிறகு கள்ளக்குறிச்சியாக இருந்தபோதும், இப்போதும் விழுப்புரம் JD control—ல்தான் இருக்கிறது. வி. கூட்டுரோடுக்கு விருத்தாசலம் கூட்டு ரோடு என்றுதான் பெயர். அந்தக் கூட்டு ரோடுக்கும் தலைவாசலுக்கும் 10 கிலோ மீட்டர். அங்கிருக்கும் ஆரகலூர் என்ற ஊர்தான் பெரிய ஊர். பாக்கி உள்ளதெல்லாம் கள்ளக்குறிச்சி மாவட்டம்; ஆனால், முன்னாள் ஆட்சியாளர்கள் அந்த விருத்தாசலம் கூட்டு ரோடை தலைவாசல் கூட்டு ரோடு என்று சொல்லி அந்த ஆராய்ச்சி நிலையத்தைக் கொண்டு வருகின்றபோது சின்னசேலம் என்கிற பெயரை விட்டுவிட்டு, சேலம், தலைவாசல் கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா என்று அறிவித்திருப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சின்னசேலம் ஆட்டுப் பண்ணை 1957 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அந்த ஆராய்ச்சிப் பூங்காவோடு சேர்த்து சின்னசேலமும் இடம்பெற வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இதை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

Asil என்பது ஒரு நாட்டுக் கோழியினம். வனராஜா, கிரிராஜா, கிராமப்பிரியா போன்ற இனங்கள் இருக்கின்றன. White Lagan கோழியினம் இருக்கிறது. அவையெல்லாம் 4, 5 கோழிகளுடன் சேர்த்து crossing செய்தது. அது அப்போதைக்கப்போது முட்டையிட்டுக் கொண்டேயிருக்கும். ஆனால் நாட்டுக் கோழி என்று சொன்னால் அது Asil தான். அரசு சார்பில் கிட்டத்தட்ட 13, 14 கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன. ஆட்டுப் பண்ணைகள் இருக்கின்றன. இதுபோன்ற இடங்களில் அரசாங்கமே அந்த

Asil நாட்டுக் கோழியினப் பண்ணைகளை உருவாக்கி பெருக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, ஆடுகள், (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–25

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீசைக்கும் வேட்டிக்கும் சில பேர் பேசிக் கொண்டிருந்த காலகட்டத்தில்,

"உளி இரண்டை உதட்டின் மேல் வைத்தார் போல்
ஒளி மிகுந்த பாண்டியர்க்கு மீசை உண்டு.
இளிவந்து இல்லையென இளமுழக்கம் செய்வது போல்
காதின் வெளி வரை படர்ந்து இருக்கும் சோழன் மீசை.
களிராட்டும் துதிக்கை போன்று கண் நோக்கி
வளர்ந்து இருக்கும் சற்று நெளி காட்டும் சேரன் மீசை.
அந்த, அந்த மீசை எல்லாம் துடித்ததனால்
பகை குன்றங்கள் பொடியான கதைகள் உண்டு
இன்றந்த வீரம் வேண்டும்! மிகவும் வேண்டும்,
இன் செயல்கள் வீரம் தேக்கி!
வன் செயல்கள் அறவே போக்கி!
முன்பு இருந்த தமிழர் உணர்வை பெருக. . ."

என்று எங்கள் ஐயா கலைஞர் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஈரோட்டிலே எங்கள் இளைஞரணிச் செயலாளர், 45 வயது மீசை வைத்த எங்கள் செங்கல் நாயகன் சொன்னது 50,000; ஆனால் 70 வயது எங்களுடைய திராவிட நாயகன் சொன்னது 60,000. அதையும் தாண்டி 63,000 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற நிதர்சனமான நிகழ்வுகளை எடுத்துச் சொல்லி, (மணியடிக்கப்பெற்றது) உடனே உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. தா. உதயசூரியன்:** நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுகிறேன். அறிஞர் அண்ணா சொன்னதை நினைவுகூர விரும்புகிறேன். சட்டமன்றம் எங்களது; எதிர்வரும் நாடாளுமன்றம் எங்களது என்று சொல்கின்றவர்களின் மத்தியிலே சொல்ல விரும்புகின்றேன், யானைமீது பூனை ஏறி வேட்டைக்குப் போனதாம்; குதிரைமீது கொசு ஏறி வேட்டைக்குப் போனதாம். நாட்டு மக்களுக்கு சுண்ணாம்பு எது, வெண்ணெய் எது என்பது தெரியும். வாழ்க தமிழ்நாடு! வாழ்க தளபதி!! வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

சங்கராபுரம் பேருந்து நிலையத்தையும், சின்னசேலம் பேருந்து நிலையத்தையும் விரிவாக்கம் செய்து தர வேண்டும்.

சின்னசேலம் பேருந்து நிலையத்திற்குட்பட்ட காந்திநகர்—ஆதி திராவிடர் பகுதிக்கு தென்பெண்ணை ஆற்றின் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கிடைக்க 3 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

சின்னசேலம் பேரூராட்சி, அம்சாகுளம் முதல் இரயில்வேகேட் வரை சாலையின் இருபுறமும் கழிவுநீர் வாய்க்கால் அமைத்துத் தர வேண்டும். கள்ளக்குறிச்சி ஒன்றியம், தாவடிப்பட்டு மணிமுக்தா நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

கல்வராயன்மலை ஒன்றியம், வெள்ளிமலை மற்றும் சேராப்பட்டு ஊராட்சிகளில் மேம்படுத்தப்பட்ட நகர்ப்புற பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். கல்வராயன்மலை ஒன்றியத்தில் புதிதாக சார்நிலை கருவூலம் அமைத்துத் தர வேண்டும். கல்வராயன்மலை ஒன்றியம், வெள்ளிமலை ஊராட்சியில் புதிதாக 6 அறைகள் கொண்ட சுற்றுலா மாளிகை அமைத்துத் தர வேண்டும்.

கல்வராயன்மலை ஒன்றியத்தில் பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். கள்ளக்குறிச்சி ஒன்றியம், பால்ராம்பட்டி—மாதவச்சேரி வரை உள்ள சாலையை அகலப்படுத்தித் தர வேண்டும்.

சங்கராபுரம் ஒன்றியம், சோழம்பட்டு—கள்ளக்குறிச்சி ஒன்றியம், அழகாபுரம் குறுக்கே ஓடும் மணிமுக்தாற்றின் குறுக்கே மேம்பாலம் மற்றும் தரைப்பாலம் அமைத்துத் தர வேண்டும். வடக்கனந்தல், கச்சிராயபாளையம் வழியாக பாயும் கோமுகி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். சங்கராபுரம் ஆற்றில் பூட்டை—பாவாளம்மணி நதியின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். கல்வராயன்மலை பழங்குடியினர் மக்களுக்கு வருவாய் துறையின்மூலம் அவர்கள் அனுபவித்து வரும் நிலங்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும்.

சங்கராபுரம் அரசு மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் வசதி கொண்ட புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும். சின்னசேலம் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனையில் தரைதளம் அமைத்துத் தர வேண்டும்.

கல்வராயன்மலை ஒன்றியம், கல்படை ஆற்றின் குறுக்கேயும், சித்தாற்றின் குறுக்கேயும், மணலாறு மற்றும் கல்லாற்றின் குறுக்கே தொரடிப்பட்டு அருகிலேயும் வெள்ளரிக்காடு—எருக்கம்பட்டு சாலையில் பெருமுனிகாடு ஆற்றின் குறுக்கேயும் மேம்பாலங்கள் அமைத்துத் தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி—சங்கராபுரம் வழி திருவண்ணாமலை சாலையை அகலப்படுத்தித் தர வேண்டும்.

கல்வராயன்மலை ஒன்றியம், மணியார்பாளையம் மற்றும் மூலக்காடு ஊராட்சிகளிலும், சின்னசேலம் ஒன்றியம், கல்லாநத்தம் ஊராட்சியிலும் கால்நடை கிளை நிலையங்கள் அமைத்துத் தர வேண்டும்.

வடக்கனந்தல்—கச்சிராயபாளையம் ஏரிக்குச் செல்லும் வரத்துக் கால்வாயின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைத்தும், வாய்க்காலைத் தூர்வாரி தரைதளம் அமைத்திட வேண்டும்.

சங்கராபுரம் தொகுதி, சோமன்டார்குடி ஏரியினை குடிமராமத்து செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள். (குறுக்கீடுகள்)

***திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது, பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது, பேசச் சொல்லுங்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை மற்றும் பால்வளம் ஆகிய துறைகளின் சார்பிலே நடைபெறுகிற (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கைகளில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிட்ட தங்களுக்கு (குறுக்கீடுகள்) நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது, பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பரவாயில்லை. (குறுக்கீடுகள்) நேரமில்லை, பிற்பகல் 2–00 மணிக்கு முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. மு. பன்னீர்செல்வம்:** இந்தியாவின் No.1 முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது பேசட்டும். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது பேசட்டும்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** இளைஞர்களின் வழிகாட்டி, நாளைய தமிழ்ச் சமுதாயத்தின் வழிகாட்டி, (குறுக்கீடுகள்) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது, தொகுதி பற்றி பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு. பன்னீர்செல்வம்:** அவை முன்னவர் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் (குறுக்கீடுகள்) மாண்புமிகு அரசு கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். (குறுக்கீடு)

2023 ஏப்ரல் 5] [பேரவைத் துணைத் தலைவர்]

திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் பேசுகிற போது, ஈரோடு வெற்றியைப்பற்றி சொன்னார். ஈரோட்டில் ** என்பதை இந்த நாடே அறியும் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களில் நிலக்கரிச் சுரங்கம் அமைத்து நிலக்கரி வெட்டி எடுக்க உத்தரவிட்ட இந்திய பிரதமர் அவர்களுக்கு டெல்டா மாவட்டங்களில் அதை நடைமுறைப்படுத்த வேண்டாமென்றும், தடை செய்திட வேண்டுமென்றும் உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைக்கு டெல்டா மாவட்ட விவசாயிகளின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, டெல்டா விவசாயிகள் வைத்த கோரிக்கையை உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுத்திட்ட மாண்புமிகு வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர் அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் விவசாயிகளின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாபெரும் திராவிட மாடல் ஆட்சிக்கு வித்திட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுக்கும், அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்களுக்கும், தொலைநோக்குச் சிந்தனையுடன் தமிழகத்தை வழிநடத்திய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திராவிட மாடல் ஆட்சிப் பொறுப்பேற்று பெண்களுக்கு பேருந்தில் இலவசப் பயணம், ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000/– வழங்கும் திட்டம், இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையில், பசி வயிற்றோடு வரும் ஏழையெளிய தொடக்கப் பள்ளி குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம், சாலை விபத்திலே தலையில் அடிபட்டு, கால் அடிபட்டு, முதுகெலும்பில் அடிபட்டு, கைமுறிந்து, கால்முறிந்து கிடப்பவரைக் காப்பாற்ற, செலவு செய்ய முடியாது என நம்பிக்கையிழந்த ஏழையெளியவர்களின் சிகிச்சைக்கு ஆகும் செலவினை, இன்னுயிர் காப்போம்–நம்மை காக்கும் 48 திட்டத்தின்மூலம், ரூ.20 இலட்சமாக இருந்தாலும், ரூ.30 இலட்சமாக இருந்தாலும், ரூ.50 இலட்சமாக இருந்தாலும், அந்தச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் என அறிவித்து, அதனை நடைமுறைப்படுத்திக் காட்டிய, இந்திய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மக்கள் மனதாரப் பாராட்டுகின்றனர்.

பிற்பகல் 1–30

122 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 11–11–2022 அன்று சீர்காழியில் தமிழக வரலாற்றில் இல்லாத அளவுக்கு 50 செ.மீ. பெய்த கனமழையின் காரணமாக மக்கள் குடியிருந்த வீடுகளின் உள்ளே மழைநீர் புகுந்ததால் குடியிருக்க இடமில்லாமல், நடவு செய்த நெற்பயிர்களெல்லாம் மூழ்கி மிகப் பெரிய சேதம் ஏற்பட்டதை அறிந்து, அந்த வெள்ள நீர் வடிவதற்குள்ளாக 14–11–2022 அன்று வெள்ளம் பாதித்த பகுதிகளையும், வீடுகளை இழந்த மக்களையும் நேரடியாகப் பார்த்து ஆறுதல் கூறி, அன்றையதினமே ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் தலா ரூ.1,000/– என வழங்கியும், பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு நிவாரணமாக 44 கோடி ரூபாயை மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மட்டும் வழங்கியும், பயிர் காப்பீட்டுத் தொகைமூலம் ரூ.50 கோடியும், அதேபோன்று, இந்த ஆண்டு பிப்ரவரி மாதம், பருவம் தவறி பெய்த மழையின் காரணமாக, பாதிக்கப்பட்ட நெல் விளைச்சல், பயறு, உளுந்து போன்றவற்றிற்கு சுமார் ரூ.7 கோடி நிவாரணமும் வழங்கி விவசாயிகளைப் பாதுகாத்த மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 5] [திரு. மு. பன்னீர்செல்வம்]

அதேபோன்று, மழைக் காலத்தில் அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்த எங்களது மாவட்டப் பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அண்ணன் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு மின்சார சேதங்களை 3 நாட்களில் சரி செய்து கொடுத்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் திரு. V. செந்தில்பாலாஜி அவர்களுக்கும், விவசாய நிலங்களைப் பார்வையிட்டு, நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்த மாண்புமிகு வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர் அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் திரு. எஸ். ரகுபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமான கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், ஒரு கிராமத்திற்கு இரண்டு power tiller இயந்திரங்கள் என்ற அடிப்படையில், 2023—2024 ஆம் ஆண்டில் சுமார் 2 ஆயிரத்து 504 கிராமங்களுக்கு வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்க நிதியிலிருந்து 5,000 power tiller இயந்திரங்களை வாங்கி பயன்பெற 43 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படவிருப்பது மிகவும் பயனுள்ள திட்டமாகும். பருவம் தவறி பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட 1 இலட்சத்து 93 ஆயிரத்து 366 விவசாயிகளுக்கு ரூ.174.11 கோடி மதிப்பீட்டில் இடுபொருள் மானியம் வழங்கியதற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கு வந்து ஓராண்டு முடிவதற்குள் ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கியதற்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டம். தமிழ்நாடு அரசு எடுத்த முயற்சியால் 2021—2022—ல் பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு ரூ.783 கோடி நிதியும், 2022—2023—ல் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த சம்பா நெல் காப்பீடு செய்த 19 ஆயிரத்து 282 விவசாயிகளுக்கு விதைப்பு பொய்த்தல் இனத்தின்கீழ், 34 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்கரைத் துறை. தமிழ்நாடு அரசின் தொழில் துறையின்கீழ் இயங்கி வந்த சர்க்கரை ஆலைகள் முழுமையாக உழவர் நலத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள

40 சர்க்கரை ஆலைகளில், 30 ஆலைகள் மட்டும்தான் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 10 சர்க்கரை ஆலைகளை இயக்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திட வேண்டும். மயிலாடுதுறை NPKRR சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்கிக் கொடுக்க வேண்டுமெனக் கரும்பு விவசாயிகள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நுண்ணீர்ப் பாசனத்தைப் பயன்படுத்தும், Trench cutting செய்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய மானியத் தொகை இதுவரை வழங்கப்படாமல் உள்ளதாகத் தெரிகிறது. அதனை உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளம். படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றிடும் வகையில், பால்வளத் துறையின்மூலம் வழங்கப்படும் ஆவின் பாலகத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கிட வேண்டுகிறேன்.

மீன்வளத் துறை. சீர்காழி தொகுதியில் உள்ள கடலோர மீனவக் கிராமங்களான மடத்துக்குப்பம், நாயக்கர்குப்பம், சாவடிக்குப்பம், கீழமூவர்க்கரை, மேலமூவர்க்கரை, தொடுவாய், மடவாமேடு ஆகிய பகுதிகளில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக, கடல்நீர் குடியிருப்புகளில் புகுந்து, மக்கள் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, அந்தப் பகுதிகளில் கருங்கல் தடுப்புச் சுவர் அமைத்துக் கொடுத்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் மீனவர் கிராமத்திற்கு மீன் இறங்குதளம் மற்றும் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் செவ்வனே நடைபெறவும் அப்பணியை விரைவுபடுத்திடவும் வேண்டுகிறேன். மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசலில் நடைபெறும் மீன் இறங்குதளம் மேம்படுத்தும் பணியை விரைந்து முடித்துக்கொடுக்க வேண்டுகிறேன். திருமுல்லைவாசல் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மேட்டுத் தெரு வரை போடப்பட்டுள்ள கருங்கல் தடுப்புச் சுவரைப் புதிய ஆற்றுப் பாலம் வரை நீட்டித்து அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, 42 ஊராட்சிகளை உள்ளடக்கிய கொள்ளிடம் ஒன்றிய பகுதிகளைக் கொண்டு தனி வருவாய் வட்டமாக

அறிவித்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். சீர்காழி தொகுதி விவசாயிகள் பயனடையும் வகையிலே, கொள்ளிடம் வடிகால் ஆற்றில், கடலூர் மாவட்டம், சிதம்பரம், திருக்கழிப்பாலைக்கும், (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, அளக்குடிக்கும் இடையில் கடல்நீர் புகாவண்ணம் தடுப்பணைக் கட்ட வேண்டுகிறேன். கொள்ளிடம் வடிகால் ஆற்றில் கடலூர் மாவட்டம், சிதம்பரம்—நளம்புத்தூருக்கும், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி—மாதிரவேலூருக்கும் இடையில் தண்ணீரைத் தேக்கிட தடுப்பணை கட்டிக் கொடுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறை. 42 ஊராட்சிகளை உள்ளடக்கிய கொள்ளிடம் ஒன்றியம், கொள்ளிடத்தில் புதிய பெருகால்நடை மருத்துவமனையையும், ஆலங்காடு, தாண்டவன்குளம் ஆகிய இடங்களில் தலா ஒரு கால்நடை மருந்தகத்தையும் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

சீர்காழி நகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்து, வார்டுகளை அதிகப்படுத்தி, நகராட்சிக்குப் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். சீர்காழி நகராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஜல் ஜீவன் திட்டத்தில் சேர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சிப் பகுதியில் ஜல் ஜீவன் திட்டத்தில் குடிநீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் எரிவாயு தகன மேடை அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன். சீர்காழி நகரத்தில் இயங்கி வரும் எரிவாயு தகன மேடையைச் சீரமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறார்; இனிமேல் இருக்கப்போகிற அத்தனைக் காலங்களிலும், எத்தனை ஆண்டுகளாக இருந்தாலும், 20 ஆண்டுகளாக இருந்தாலும், 25 ஆண்டுகளாக இருந்தாலும், தமிழகத்தில் தளபதிதான் மீண்டும் மீண்டும் முதலமைச்சராக இருப்பார் என்று சொல்லி, தந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. R. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சிகளுக்கெல்லாம் முன்மாதிரியாய் இருந்து, தமிழ்நாடு, தமிழர் நலன், தமிழ்நாட்டு மேம்பாடு என்பதை முழு மூச்சாய்க் கொண்டு உழைத்த கர்ம வீரர், கல்விக்குக் கடவுளாக புராணங்கள் சரஸ்வதியைச் சொன்னாலும், கடைகோடி கிராமத்திலும் பள்ளிக் கூடங்களைத் திறந்து, கல்விக் கண் திறந்த கடவுளாகவே எங்களால் நேசிக்கப்படக்கூடிய பெருந்தலைவர், கருப்பு காந்தி, தமிழ்நாடு முன்னாள் முதல்வர் காமராஜர் அவர்களை வணங்குகிறேன்.*

*தமிழகத்தின் கடலூர் மாவட்டத்தின் மத்தியப் பகுதியில் வெயிலையும், மழையையும் நம்பி செக்கச் செவேல் என சிவந்து கிடக்கும் வானம் பார்த்த செம்மண் பூமியில் முத்தாண்டிக்குப்பம் என்ற கிராமத்தில் விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னையும் இந்த மாபெரும் சபையில் இடம்பெற வாய்ப்பளித்து, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த விருத்தாசலம் தொகுதியைச் சார்ந்த மக்களுக்கும், வாய்ப்பளித்துள்ள அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் எங்கள் வழிகாட்டி, அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவராகத் தலைமையேற்றிருக்கும் உத்தர கன்னட வீரர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களுக்கும், இந்திய ஒற்றுமைப் பயணத்தின் நாயகன், எளியவர்களின் கனவை நனவாக்கிட, ஏழைகளின் உரிமையைக் காத்திட, ஜனநாயகத்தைக் காத்திட, அக்கினிச் சொற்களால் ஆளும் ஆரிய ஆட்சியை எதிர்த்துப் போராடும் போராளி, இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கே.எஸ் அழகிரி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*எட்டு கோடி தமிழர்களின் நம்பிக்கையைப் பெற்று மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஆட்சி பொறுப்பேற்ற 24 மாதங்களில் நிறைவேற்றிட மாற்றத்திற்காகத் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கின்ற ஓய்வறியா சூரியன், இந்திய நாட்டிலுள்ள முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக விளங்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023 ஏப்ரல் 5] [திரு. R. ராதாகிருஷ்ணன்]

ஒரு கல், ஒரு சொல் இவற்றின்மூலம் ஆரிய பகையைத் தடுத்து நிறுத்திய மாண்புமிகு தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழக வரலாற்றில் வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து விவசாயிகளின் விடியலுக்காக தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கின்ற எங்கள் மாவட்ட வீரத்தின் விளைநிலம், வேங்கையின் மைந்தன், விவசாயிகளின் நம்பிக்கை, திராவிட முன்னேற்றக் கழக கடலூர் மாவட்டத்தின் கையிருப்பு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. MRK அவர்களுக்கும் மற்றும் தொழிலாளர்களின் தோழன், தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. சி.வி. கணேசன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி, விவசாயத்தையும், விவசாய உற்பத்தியையும் நம்பி உழைக்கின்ற மக்கள் வாழ்கின்ற பகுதி. மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து மனிதனுடைய உணவுக்காக வேட்டையும், விவசாயமும் தொடங்கிவிட, இயற்கையோடு பின்னிப் பிணைந்து வெயில், மழை, பனி, குளிர் ஆகிய தட்பவெப்ப நிலைக்கேற்ப வேளாண் பயிர்களை உற்பத்தி செய்தவன் உழவன், அதற்குத் துணையாக உழவுக் கருவிகளையும், கால்நடைகளையும் பழக்கி பயிர் செய்து அறுவடையும் செய்து, அந்த அறுவடைத் திருநாளை பொங்கல் விழாவாகக் கொண்டாடி இயற்கைக்கு நன்றி சொல்லி வாழ்பவன் தமிழன்.

'ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே
பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே
பயிர் பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரியினாலே
நாம் சேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே
இந்த தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே'

என்ற மருதகாசியின் பாடலைக் கேட்கும்போதெல்லாம் நான் ஒரு விவசாயி என்பதிலே பெருமைகொள்வேன்.

[திரு. R. ராதாகிருஷ்ணன்] [2023 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி கோரிக்கைகள் சிலவற்றை இங்கு வாசிக்கிறேன். மற்றவற்றை நேரில் உங்களிடம் கொடுக்கிறேன். அவற்றை அவையில் வாசித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம் 9 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டதாகும். கடலூர் மாவட்டத் தலைமையிடத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், விருத்தாசலம் தொகுதியிலிருந்து கிட்டத்தட்ட 70 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். திட்டக்குடி தொகுதியிலிருந்து 115 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, விருத்தாசலம் தனி மாவட்டமாக உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். விருத்தாசலத்தை மாவட்டமாக அமைப்பதற்கான அனைத்து தகுதிகளும் உள்ளன. ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பே விருத்தாசலத்தை திருமுதுக்குன்றம் என்ற பெயரில் சோழ மன்னர்கள் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தியுள்ளார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவசியம் விருத்தாசலத்தைத் தனி மாவட்டமாக அமைக்க வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்கிறார் வள்ளுவப் பேராசான்.

வியர்வையைச் சிந்தி உழைக்கும் விவசாயி உற்பத்திச் செய்யும் பொருட்களுக்குக் குறைவான விலை கிடைக்கும் நிலையே இந்நாட்டில் இருக்கிறது. மழை குறைவு, வறட்சி, இயற்கை இடர்பாடுகள், புயல், வெள்ளம் இவற்றையெல்லாம் தாண்டித்தான் தன் விளைச்சலை சந்தைக்குக் கொண்டு வருகின்றனர். எதிர்பார்த்த விலை கிடைக்காவிட்டாலும், விவசாயத்திலே நஷ்டம் ஏற்பட்டாலும் விவசாயி தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான்.

2023 ஏப்ரல் 5] [திரு. R. ராதாகிருஷ்ணன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். விவசாயம் ஒரு சூதாட்டம். எத்தனை முறை இழந்தாலும் பொன், பொருளை விற்று, அடமானம் வைத்து தொடர்ந்து அந்த ஆட்டத்தை ஆடிக்கொண்டிருக்கிறான் விவசாயி. காலங்காலமாக இது நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், விளைவித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆட்சியில் வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையை வெளியிடுவது, இருண்டு கிடக்கின்ற விவசாயிகளின் வாழ்வில் வெளிச்சத்தையும், மாற்றத்தையும், நம்பிக்கையையும் தருகிறது.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திற்குப் பிறகு எங்களுடைய ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டம்தான் நெல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. கரும்பு உற்பத்தியிலும் தமிழ்நாட்டில் எங்கள் மாவட்டம்தான் முதலிடம் வகிக்கிறது. இந்த ஆட்சியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்ட பிறகுதான் விவசாயிகள் ஓரளவிற்கு நிம்மதிப் பெருமூச்சுவிடுகிறார்கள். தமிழகத்தின் சர்க்கரைக் கிண்ணமாக எங்கள் மாவட்டம் இருந்தாலும், கரும்பு விவசாயிகளின் வாழ்க்கை கசந்தே கிடக்கிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் சிறப்பாக இயங்கி வருகின்ற நிலையில், தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குத் தர வேண்டிய கரும்பு நிலுவைத் தொகைகளைத் தராதது மட்டுமல்லாமல், விவசாயிகளின் சொத்துகளையும் அடகு வைத்து, lockout செய்யப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கடனில் சிக்கித் தவிக்கிறார்கள். அவர்களைக் கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் முன்வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கனிகள் என்று சொல்லக்கூடிய மா, பலா, வாழையுடன் தோட்டப் பயிர்களும், பணப் பயிர்களும் விளையக்கூடிய பூமிதான் எங்கள் கடலூர் மாவட்ட மண். அதேபோல்தான், முந்திரி விளைச்சலும். சுவையான முந்திரி விளைச்சலுக்கு எங்கள் மாவட்டம் புகழ் பெற்றது. (மணியடிக்கப்பெற்றது) வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் முந்திரி சாகுபடியை கூடுதலாக 550 எக்டேர் அதிகரிக்கவும், வயது முதிர்ந்த, விளைச்சல் குறைந்துள்ள முந்திரி மரங்களை அகற்றி, உயர் விளைச்சல் இரக செடிகளை 550 எக்டேரில் நடவு செய்து புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு,

சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்ற அறிவிப்பை முழுமனதுடன் வரவேற்கிறேன்.

10 ஆண்டுகளுக்கு முன்பு முந்திரி வேளாண் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையின் மூலமாக அடி உரங்கள், பூச்சி மருந்துகள் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக அதை நிறுத்திவிட்டார்கள். அதையும் வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முந்திரி விவசாயிகளின் முந்திரிக்கு ஆதார விலையை நிர்ணயம் செய்ய அரசு முன்வர வேண்டும். விவசாய உற்பத்தியில் முந்திரிக்கு இன்று பாதி அளவிற்குத்தான் வருமானம் வருகிறது. முந்திரி விவசாயத்தைப் பாதுகாக்க முந்திரிக்கு ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விருத்தாசலம் தொகுதியில் இயங்கி வருகின்ற வேளாண் முந்திரி ஆராய்ச்சி நிலையத்தைப் புதிய வேளாண்மைக் கல்லூரியாக மாற்றம் செய்தால் எங்கள் பகுதிக்கு உதவியாக இருக்கும். வாழை, முருங்கை, மா, பலா போன்ற தோட்டக்கலைப் பயிர்களோடு, பாரம்பரிய காய்கறி விதைகளை விவசாயிகளிடமும், பொதுமக்களிடமும் கொண்டு சேர்ப்பதற்காக 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதை வரவேற்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு புதிய கூடுதல் கட்டடம் கட்டுவதற்காக விருத்தாசலம் தொகுதி, வேப்பூர் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கோரிக்கையை ஏற்று, நீர்வளத் துறையின் மூலமாக விருத்தாசலம் ஸ்ரீபழமலைநாதர் கோயில் முன்பு செல்லும் மணிமுக்தாற்றில் தடுப்புச் சுவர் அமைக்க 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதற்கு மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்குப் பேரவையின் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கும் ஒரு நன்றியைச் சொல்லி, உட்கார்ந்துவிடுங்கள்.

*2023 ஏப்ரல் 5*]

*பிற்பகல் 1–45*

**திரு. R. ராதாகிருஷ்ணன்:** *வேளாண்மைப் பொறியியல் துறைக்கும், வேளாண்மை இயந்திரங்களுக்காகவும் 125 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை நான் வரவேற்கிறேன்.*

*2023–2024 ஆம் ஆண்டின், கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, நீர்வளத் துறை, எரிசக்தித் துறை, ஊரக வளர்ச்சித் துறை, கூட்டுறவுத் துறை, உணவுத் துறை, வருவாய்த் துறை, வனத் துறை, பட்டு வளர்ச்சித் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ஆகிய துறைகளுக்காக 38 ஆயிரத்து 304 கோடியே 46 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதை நான் வரவேற்கிறேன்.*

*என்னுடைய தொகுதியின் பிரதான கோரிக்கைகள் குறித்த பட்டியலை நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளித்துள்ளேன். விருத்தாசலம் புறவழிச் சாலை பேருந்து நிலையம். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தொகுதிக் கோரிக்கைகள் குறித்த பட்டியலை என்னிடம் தாருங்கள். அவற்றை நீங்கள் இந்த அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.*

**திரு. R. ராதாகிருஷ்ணன்:** *ஒன்றிரண்டு தொகுதிக் கோரிக்கைகளை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். இராமநாதபுரத்தில் விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகை அவர்களைச் சென்றடையவில்லை. புதுக்கோட்டை, இராமநாதபுரம், அறந்தாங்கி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கவில்லை. அதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*விருத்தாசலத்தில் இயங்கிவரும் பீங்கான் தொழில்நுட்பக் கல்லூரி நலிவடைந்த நிலையிலுள்ளது. அக்கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கைக் குறைந்து வருகிறது. எனவே, அந்தக் கல்லூரியைத் தற்கால சூழலுக்கு ஏற்ற வகையில், நவீன தொழில்நுட்பக் கல்லூரியாக மாற்றியமைத்து, கட்டுமானப் பொருட்கள் தயாரித்தல். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், போதும், போதும். தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் கொடுங்கள். (குறுக்கீடு)*

**திரு. R. ராதாகிருஷ்ணன்:** விருத்தாசலம்—காட்டுக்கூடலூர் சாலை, கோட்டேரி—வீரட்டிக்குப்பம் இடையில் வனப் பகுதிக்கு இடையே ஒரு கிலோ மீட்டர் தூரம் தார்ச்சாலை உள்ளது. அது குறுகிய சாலையாக இருப்பதால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், தொகுதி குறித்த விஷயங்களை என்னிடம் கொடுத்துவிடுங்கள். அவற்றை நீங்கள் இந்த அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள்.

**திரு. R. ராதாகிருஷ்ணன்:** அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால், அதற்கான எல்லா பேப்பரையும் வனத் துறையிடம் கொடுத்திருக்கிறேன். தற்போது, அது என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அவர்கள் கேட்ட எல்லா பேப்பரையும் கொடுத்து, கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அதையும் நிறைவேற்றித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடம் அளிக்கிறேன். அவற்றையெல்லாம் நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

விருத்தாசலத்தில் புறவழிச்சாலை பேருந்து நிலையம், மகளிர் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். விருத்தாசலத்தில் இயங்கிவந்த சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் ஆலையை புனரமைத்து பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.

விருத்தாசலம் இரயில் நிலைய சந்திப்பிலிருந்து பேருந்து நிலையம் இடையே மின்கலன் பேருந்து இயக்க வேண்டும்.

வேப்பூர், அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரமுயர்த்தி, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

பிஞ்சனூர்—இளங்கியனூர் இடையேயும், விருத்தாசலம் இரயில்வே ஜங்ஷன் சாலையிலும் மேம்பாலம் அமைக்க வேண்டும்.

நல்லூர், வில்வனேஸ்வரர் கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய வேண்டும்.

சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலப் பணியை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேப்பூரில் உள்ள வேளாண் விளைபொருள் விற்பனை நிலையத்திற்குச் சுற்றுச் சுவரும், கூடுதல் தானியக் கிடங்கும் அமைக்க வேண்டும்.

நல்லூரரில் மயூரா, கோமுகி மற்றும் மணிமுக்தா ஆறுகள் இணையும் பகுதியிலும் வேப்பூர் வட்டம், கொளப்பாக்கம் கிராமத்தின் அருகில் சேப்பாக்கம்—கோமுகி ஆற்றின் குறுக்கேயும் தடுப்பணைகள் கட்டித் தர வேண்டும்.

மங்களம்பேட்டை, ரூபநாராயணநல்லூரியில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய வாகனம் வழங்கிட வேண்டும்.

வேளாண் துறையில் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் ATMA திட்டப் பணியாளர்களாகப் பணிபுரிபவர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் பிற சலுகைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.

**திரு. A. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களை வணங்குகிறேன். தடி கொண்ட பெரியாராய், பொடி கொண்ட அண்ணாவாய், இருவண்ணக் கொடி கொண்ட தலைவர் கலைஞராய், ஓர் உருவமாய் அமர்ந்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் இளைஞரணி செயலாளர், தமிழகத்தின் எதிர்காலம், எங்கள் இளம் தலைவரை வணங்குகிறேன்.

அவை முன்னவர், மண்ணின் மைந்தர் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். உழைப்பால் உயர்ந்தவர், உழைப்பவரை உயர்த்துபவர் மாண்புமிகு பொதுப் பணி துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் உள்ளிட்ட அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை என்பதை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை என்று

மாற்றியமைத்தவர், உழவர் நலன் காக்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் ஆவார்கள். இந்தத் துறையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், என்னை இரண்டாவது முறையாகத் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெறச் செய்து, இந்த அவைக்கு அனுப்பி வைத்த என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மக்களின் நலன் கருதி, தொகுதிக் கோரிக்கைகள் சிலவற்றை மட்டும் இங்கே வைத்து, மற்ற கோரிக்கைகளைத் தங்களிடம் வழங்குகிறேன். அவற்றை நான் இந்த அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் நகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட 5 வார்டு பகுதிகளுக்கும், திருப்பத்தூர் மற்றும் கந்திலி ஒன்றியப் பகுதிகளில் விடுபட்ட ஊராட்சிப் பகுதிகளுக்கும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நூற்றாண்டு விழா காணுகின்ற எங்களுடைய திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டட வசதியை ஏற்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூர் ஒன்றியம், கொடுமாம்பள்ளி முதல் ஜவ்வாதுமலை சேர்க்கானூர் வரை புதிய தார்ச்சாலை அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூர் நகரத்தில் வக்ஃபு வாரியத்தில் அங்கமாக உள்ள மசூதிகள், தர்காக்களுக்குக் குடிநீர் வசதி, சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூர் நகராட்சி, பெரியார் நகரில் உள்ள நகராட்சித் தகன மேடையினை நவீனமயமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை என்பது பல துறைகளின் தாய்த் துறையாகும். தாய்த் துறையாக விளங்கும் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் வாயிலாக ஏற்படும் பொருளாதார வளர்ச்சி, விவசாயிகளின் நலன், நுகர்வோர் தன்னிறைவு, வேலைவாய்ப்பு, வேளாண் உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

வேளாண்மைக்கென தனி பட்ஜெட்டை வழங்கி, நாட்டிற்கே ஒரு முன்னணி முதலமைச்சராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் மேட்டூர் அணை ஜூன் மாதம் 12 ஆம் தேதி திறக்கப்படும். ஆனால், பருவத்தில் பயிர் செய்து விளைச்சலைப் பெருக்க மே மாதம் 20 ஆம் தேதியே அணையைத் திறந்ததோடு மட்டுமல்லாமல், கடைமடை வரைக்கும் நீர் சென்றடைவதை உறுதிபடுத்தினார். இதனால், குறுவை நெல் சாகுபடி 2022—2023 ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நிகழ்ந்து, கடந்த 47 ஆண்டுகளில் நிகழாத சாதனையை கழக அரசு படைத்துள்ளது.

பிற்பகல் 1—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் உற்பத்தி மட்டுமல்லாமல் சந்தையின்மூலம் தங்கள் நிலத்தில் விளையும் பொருட்கள், காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட விளைபொருட்களைச் சந்தைப்படுத்த, இடைத்தரகர்கள் யாருமின்றி தானே முதலாளியாகி, உழைத்தவர் முழு பலனை அடைய வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தில் உழவர் சந்தைத் திட்டத்தைத் தந்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்த சீரிய திட்டத்தினால் உருவாக்கப்பட்ட உழவர் சந்தை கடந்த கால ஆட்சியில் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. ஆனால், கடந்த இரண்டாண்டு கால ஆட்சியில் 100 உழவர் சந்தைகள் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையில் மேலும் புதியதாக 120 உழவர் சந்தைகளைத் திறப்பதாக அறிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் கட்ட இயலாமல், விவசாயிகளின் குடும்பங்கள் இன்னலுற்ற நேரத்தில், 1 யூனிட் மின்சாரத்திற்கு 1 பைசா குறைக்க வேண்டுமென்று வீதிக்கு வந்து போராடிய விவசாயிகள்மீது தடியடியும், துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டதைத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிந்தார்கள். தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடன் விவசாயிகள் தங்கள் பம்பு செட்டுகளுக்கு கட்டணம் முழுமையாகச் செலுத்தத் தேவையில்லை என்று இலவச மின்சார திட்டத்தை அறிவித்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. அரசு, மின்மிகை மாநிலம்

[திரு. A. நல்லதம்பி] [2023 ஏப்ரல் 5

என்று தன்னைக் கூறிக்கொண்டது. ஆனால், சொற்ப அளவிலே விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கிவிட்டு, மீதமுள்ள 7 இலட்சத்திற்கும் மேலான மனுக்களைக் காத்திருப்புப் பட்டியலில் வைத்தது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் பதவியேற்ற 15 மாதகால ஆட்சியில் ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்புகள் வழங்கியதோடு மட்டுமல்லாமல் 23 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டணத் தொகையாக சுமார் 6 ஆயிரத்து 536 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, விவசாயிகளுக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியில், வேளாண் உற்பத்தியில் வீழ்ச்சியைக் கண்டது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கரும்பு உற்பத்தி நலிந்து போனது. குறிப்பாக எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர் சுகர் மில்லை மூடியதில் அ.தி.மு.க. அரசே முழு பொறுப்பாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் கரும்பு சாகுபடி பரப்பை குறிப்பிட்ட அளவைவிட 55 ஆயிரம் எக்டேர் அதிகரித்துள்ளது. மேலும், இந்த ஆண்டு வேளாண் பட்ஜெட்டில் கரும்பு டன் ஒன்றிற்கு கூடுதலாக 195 ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகை வழங்க அறிவித்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. அதேபோல், மொத்த உணவு தானிய உற்பத்தியில், 6 ஆண்டுகளுக்குப் பிறகு 119 இலட்சத்து 97 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டைவிட 11 இலட்சத்து 73 ஆயிரம் மெட்ரிக் டன் கூடுதல் உற்பத்தியாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தை, இலவச மின்சாரம், கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வழங்கியது கழக அரசு. இந்த நிதிநிலை அறிக்கையில், ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் தென்னை மரங்கள் இல்லாத 300 குடும்பங்களுக்குத் தலா இரண்டு தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம், பலவகை பழச்செடிகள் வழங்கும் திட்டம், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம் வேளாண் இயந்திரங்கள் வாங்கப்பட்டு, இ-வாடகை செயலியுடன் இணைத்து விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படும் என்ற திட்டம் வேளாண் பணிகளை சலுகை விலையில் செய்துகொள்ள (மணியடிக்கப்பெற்றது) வேளாண் பொறியியல் துறை வாயிலாக டிராக்டர்கள், ரோட்டவேட்டர்கள் போன்ற

அறுவடை இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது போற்றுதலுக்குரியதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை சாகுபடியை ஊக்குவிக்க 20 இலட்சம் பனை விதைகளையும், ஒரு இலட்சம் பனங்கன்றுகள் விநியோகித்தல் போன்ற பல்வேறு திட்டங்கள். (மணியடிக்கப்பெற்றது) கடந்த ஆண்டு மழையினால் பாதிக்கப்பட்ட 1 இலட்சத்து 82 ஆயிரம் விவசாயிகளுக்கு மானியமாக சுமார் 164 கோடி ரூபாய் வழங்கியது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையிலான அரசு.

வேளாண்மை மேம்பட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மேம்பட உற்பத்தியைப் பெருக்கி நுகர்வோர் தன்னிறைவு அடையும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை கொல்லிமலைத் தேனாக, பண்ருட்டி பலாவாக, ஜவ்வாதுமலை சந்தனமாக, ஒசூர் ரோஜாவாக, மதுரை மல்லியாக மணக்கின்ற ஒரு பட்ஜெட்டாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையில் ஏரிகள், குளம், குட்டைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள் வாயிலாகத் தொழில் செய்கின்ற மீனவர்களை உள்நாட்டு மீனவர்கள் எனப் பெருமையாக அழைக்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. A. நல்லதம்பி:** ஆகவே, இந்தக் கூடுதல் உபகரணங்கள் எல்லாம் உள்நாட்டு மீனவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழ் உணர்வு கொண்ட தமிழ்நாட்டில் தி.மு.க. என்ற இயக்கம் இருக்கின்றவரையில், கழகத்தின் கடைக்கோடி தொண்டன் இருக்கின்றவரையில், கருவாடு மீனாகாது, கறந்தபால் மடி புகாது, தயிர் 'தஹி' ஆகாது என்று சொல்லி, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

திருப்பத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்து கொரட்டி உள்வட்டத்தை மையமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்கிடவும், திருப்பத்தூர் வருவாய் உள்வட்டத்தை இரண்டாகப் பிரித்து மாடப்பள்ளி கிராமத்தை மையமாகக் கொண்டு புதிய வருவாய் உள்வட்டம் உருவாக்கிடவும் வேண்டும்.

திருப்பத்தூர் நகராட்சி, பழைய பேருந்து நிலையத்தில் நகராட்சியின் வருவாயினைப் பெருக்கிட தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் (TUFIDCO) வாயிலாக வணிக வளாகக் கட்டடம் கட்டி கொடுக்க வேண்டும்.

தொகுதியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் சிப்காட் அல்லது சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க வேண்டும். மாவட்டத் தலைநகர் திருப்பத்தூர் நகரத்தில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் புதியதாக அமைத்துக் கொடுக்க வேண்டும்.

செவ்வாத்தூர் புதூர், சு. பள்ளிப்பட்டு துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். திருப்பத்தூர் மாவட்ட மருத்துவமனையில் ஆண், பெண் நோயாளிகளுக்குத் தனி வார்டு மையங்கள் அடங்கிய 6 மாடி கொண்ட O.P. கட்டடம் புதியதாக கட்டிக் கொடுக்க வேண்டும்.

15 ஆயிரம் எக்டேர் சாகுபடி உள்ள திருப்பத்தூர் ஒன்றியத்திற்கு வேளாண் உதவி இயக்குநர் பணியிடம் உருவாக்கித் தர வேண்டும். பழமைவாய்ந்த திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சார்–பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு நவீன வசதி கொண்ட புதிய கட்டடங்கள் கட்ட வேண்டும். திருப்பத்தூர் தொகுதியில் புதியதாக அரசு இசைப் பள்ளி துவக்கிடவும், கந்திலி ஒன்றியம், கொரட்டி–தண்டுகானூர் செல்லும் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள தரைப்பாலத்திற்கு மாற்றாக உயர்மட்டப் பாலம் அமைத்திடவும், திருப்பத்தூர் நகரம், தூய நெஞ்சக் கல்லூரி முதல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தருமபுரி– கிருஷ்ணகிரி பிரிவு சாலை வரை உயர்மட்டப் பாலம் அமைத்திடவும் வேண்டும்.

திருப்பத்தூர் தொகுதியில் மாவட்ட விளையாட்டு மைதானம் அமைத்திடவும், சுமார் 7,000 ஏக்கர் சாகுபடி நடைபெறும் ஜவ்வாதுமலை, புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு கிராமங்களுக்கு புதியதாகத் துணை வேளாண் விரிவாக்க மையம் அமைத்திடவும் வேண்டும்.

திருப்பத்தூர் தொகுதியில் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் (Fertilizer Control Laboratory) அமைத்திடவும், தென்னை உற்பத்திப் பண்ணை அமைத்திடவும் வேண்டும்.

கந்திலி ஒன்றியம், நத்தம் கிராமம், பர்கூர் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டிக் கொடுக்க வேண்டும். திருப்பத்தூர் நகரம் ஆரிப் நகர் பகுதியில் அரசு மருத்துவமனை துவக்கிட வேண்டும். திருப்பத்தூர் ஒன்றியம், கூடப்பட்டு-கரம்பூர் வழியாக வவ்வால் தோப்பு செல்லும் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே சிறுபாலம் கட்டிக் கொடுக்க வேண்டும்.

கந்திலி ஒன்றியம், நத்தம் ஜுரஹரேஸ்வரன் ஆலயம், குரும்பேரி சென்னகேசவ பெருமாள் கோயில், செல்லரபட்டி காளியம்மன் கோயில், ப.முத்தம்பட்டி சென்னகேசவ பெருமாள் கோயில் ஆகிய பழமைவாய்ந்த கோயில்களுக்கு திருப்பணி மேற்கொண்டு, குடமுழுக்கு நடத்திக் கொடுக்க வேண்டும். திருப்பத்தூர் நகரம் முதல் காக்கங்கரை, சோளச்சூர், கீழ்குப்பம், பரதேசிப்பட்டி, சவுளூர், புளியம்பட்டி, மோட்டூர் வழியாக கந்திலி வரை அரசு பேருந்து இயக்கிட வேண்டும்.

திருப்பத்தூர் புறவழிச் சாலை திட்டத்தில் திருப்பத்தூர் நகரின் நடுவில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 179A-ஐ இணைக்கும் விதமாக புறவழிச் சாலையின் நீளத்தை நீட்டித்து இரயில்வே மேம்பாலங்கள் அமைத்தால் இத்திட்டம் முழுமைபெறும். இதனைச் செயல்படுத்த வேண்டும்.

திருப்பத்தூர் மற்றும் கந்திலி ஒன்றிய எல்லைக்குட்பட்ட பழுதடைந்த கிராமச் சாலைகளைச் சீரமைத்து மாவட்டச் சாலைகளாகத் தரம் உயர்த்தி, மேம்பாடு செய்ய வேண்டும்.

தென்பெண்ணை ஆற்று நீரை தொகுதியிலுள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் நிரப்பிடும் வகையில் திட்டம் தீட்டி பணி மேற்கொள்ள வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலன், பால்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கும், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் திரு.EPS அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய, மாண்புமிகு பாரதப் பிரதமர் உலகத்தின் பிரபலத் தலைவர்களில் முதன்மையானத் தலைவர் என்று மீண்டும் பெயர் எடுத்திருக்கின்ற மாண்புமிகு நரேந்திர மோடி ஜி அவர்களுக்கும், எங்களது அகில இந்திய தலைவர் திரு. ஜே.பி. நட்டா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், மழை மிகவும் குறைவாகப் பெய்தது. வட மாவட்டங்களில் அதிகமாக மழை பெய்தது. தென் மாவட்டங்களில் குறைவாக மழை பெய்தது. நாங்குனேரி, ராதாபுரம், சங்கரன்கோவில் தாலுகாக்களில் எந்தக் குளத்திலும் நீர் நிரம்பவில்லை. அது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். திருநெல்வேலி மாவட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் 10 கோரிக்கைகளைக் கொடுக்கச் சொன்னார்கள். 10 கோரிக்கைகளையும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். அந்தக் கோரிக்கைகளை விரைந்து முடிக்க வேண்டுகிறோம். திருநெல்வேலி கோடகன் கால்வாய், பாளையங்கோட்டை கால்வாய்களின் இரண்டு பக்கங்களிலும் lining அமைத்து, நீர்ப் பாசன வசதியைச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 5] [திரு. நயினார் நாகேந்திரன்]

எல்லா பக்கங்களிலும் அதிகமாக வாழ்கின்ற தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், பட்டியல் இனத்திலிருந்து வெளியே வரவேண்டுமென்று விருப்பப்படுகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுகிறேன்.

வற்றாத ஜீவநதி தாமிரபரணி நதி. திரேதாயுகம் தொட்டு ஓடுகின்ற நதி. அது வற்றாத ஜீவநதி. அதன் இரு பக்கங்களிலும் முட்புதர்கள் சூழ்ந்து, அதிக மாசடைந்த பகுதியாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட எல்லோரும் முன்வந்து, தாமிரபரணி ஆற்றைச் சுத்தம் செய்து தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

Forward Community-ஐ பொறுத்தமட்டிலும், மத்திய அரசு அலுவலகங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும், மத்திய அரசுமூலம் Forward Community-க்கு 10 சதவிகித இடஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு கொடுத்த 10 சதவிகித இடஒதுக்கீட்டை, தமிழக அரசு நிச்சயமாக கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறை நிதிநிலை அறிக்கையை மூன்றாவது ஆண்டாக, அழகாக பச்சை நிறத் துண்டுபோட்டு, அழகான எளிய தமிழில் வசனங்களை அழகாக எழுதி, முக்கூடற் பள்ளுவிலிருந்து பாடல்களைச் சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை வாசிக்க ஆரம்பித்தார்கள். நிறைய திட்டங்களை, பரவலாக எல்லா தலைப்புகளிலுமே அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கப்படவேண்டிய விஷயமாக இருந்தாலும், தமிழகத்தில் விவசாயப் பெருமக்கள் அதிகமாக இருக்கிறார்கள். சில இடங்களில் பார்க்கும்போது, அந்தத் திட்டங்கள் குறைவாக இருக்கின்றன. ஆக, அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் 185 வேளாண் பட்டதாரிகள் தேர்வு செய்யப்பட்டு, அக்ரி கிளினிக் அமைக்க அந்த 185 பட்டதாரிகளுக்கும், ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும் என்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில்

சொல்லியிருக்கிறீர்கள். அதையெல்லாம் இன்னும் அதிகப்படுத்த வேண்டும். வேளாண்மை சிறந்து விளங்க வேண்டுமென்று சொன்னால், நீர் வளம் சிறப்பாக இருக்க வேண்டும்; நீர் வளம் சிறப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், மலையில் உற்பத்தியாகின்ற நீர் எவ்வளவு வருகிறதோ, அது கடைமடை வரை வருவதற்கு, அந்தக் கால்வாய்களில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்றன. கால்வாய்களில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், தயவு தாட்சண்யமின்றி எல்லா கால்வாய்களின் ஆக்கிரமிப்புகளையும் கண்டிப்பாக அகற்ற வேண்டும். அதேநேரத்தில், எல்லா குளங்களையும் தூர் வாரவேண்டும். மழை வெள்ளம் வந்து, வண்டல் மண் படிந்து, குளங்களின் ஆழம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆக, எல்லா குளங்களையும் குறைந்தபட்சம் இரண்டு மீட்டர் அளவிற்குச் சீராக ஆழப்படுத்த வேண்டும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து Collector-களுக்கும் உத்தரவிட வேண்டும். அவர்கள் மண்ணை வியாபாரம் செய்வதற்குப் பதிலாக, அந்த வண்டல் மண்ணை எடுத்து விவசாயத்திற்கோ அல்லது வெளியிடத்திற்கோ royalty கொடுத்து, குளத்தை ஆழப்படுத்தினால் நீர் நிலைகளுடைய நீர் ஆதாரம் பெருகும். ஆக, கோடைக் காலங்களில் மழையில்லை என்று சொன்னாலும், பயிர் தேவைக்குப்போக நீர் வளம் நிறைய இருக்கும். ஆகவே, அவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். . . (மணியடிக்கபெற்றது)

பிற்பகல் 2—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. நயினார் நாகேந்திரன்:** நல்ல வேளை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவைக்கு எப்பொழுதுமே நல்ல வேளைதான்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அதனைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் 1 இலட்சம் பனை விதைகளைக் கொடுத்தார்கள். இந்த ஆண்டும் 2 இலட்சம் பனை விதைகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

*2023 ஏப்ரல் 5*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆண்டுக்கு 1 இலட்சம் பனை விதைகளை* regular *ஆகக் கொடுத்து வருகிறேன்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *கொடுத்துக்கொண்டு வருகிறீர்கள். ஆனால், கடந்த ஆண்டு விதைக்கப்பட்ட விதைகளில் எத்தனை முளைத்திருக்கின்றன என்பதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பனை விதையை விதைத்தவர்கள்தான் அதனைப் பார்ப்பார்கள். நீங்கள் விதைக்கவில்லையென்று அர்த்தம்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *பனை விதைகளைப் பொறுத்தவரையில், விதைக்கப்படும் எல்லா விதைகளும் முளைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. அது உங்களுக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். நான் ஒரு பேச்சுக்காக அதனைச் சொன்னேன். வேறு எதற்காகவும் சொல்லவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பனை விதைகளில் முக்கியமான ஓர் இரகசியம் என்னவென்றால், பனை விதையை நீண்ட நாட்கள் கையில் வைத்திருக்கக் கூடாது. பனை விதை கிடைத்த அடுத்த நிமிடமே, அதனை அரை அடி ஆழத்திற்குக் குழி தோண்டி மண்ணில் புதைத்துவிட்டால், நாம் அந்தப் பக்கமே எட்டிப் பார்க்காமல் போய்விடலாம். ஆடு கடித்தாலும், மாடு கடித்தாலும், மனிதன் கடித்தாலும், அதுவாகவே முளைத்து, பலன் தருமே தவிர, அதற்கு நீரும் ஊற்ற வேண்டாம், பாதுகாப்பும் தேவையில்லை. ஆகவே, அந்த ஒன்றை மட்டும்தான் துறை அதிகாரிகளுக்குச் சொல்ல வேண்டும். விதை, கையில் கிடைத்த அடுத்த நிமிடமே, அவற்றை* distribute *செய்து, விதைப்பதற்கு ஆரம்பித்துவிட வேண்டும். அவ்வளவுதான். இல்லையென்றால், விதை முளை வந்துவிடும். முளை வந்துவிட்டால், அது திரும்ப முளைக்காது.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு தகவல். பனை விதையைத் தோண்டாமல் போட்டாலே முளைத்துவிடும். பனை மரத்திலிருந்து தானாக விழுந்தாலும்,* automatic *ஆக வேர்விட்டு, தானாகவே முளைத்துவிடக்கூடிய சக்தி கொண்டது பனை விதை. பனை மரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைக்காட்டிலும், பனைமரம் ஏறுவதற்கு இயந்திரங்களை*

அதிகப்படுத்த வேண்டும். வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டிலும், எல்லா sectors–லும், அதாவது, வேளாண்மைப் பொறியியல் துறையிலும் சரி, தோட்டக்கலைத் துறையிலும் சரி, வேளாண்மைத் துறையிலும் சரி, விதைப் பண்ணைத் துறையிலும் சரி, நிறைய அதிகாரிகள் இருக்கிறார்கள். அரசாங்கம் அறிவிக்கும் திட்டங்கள் விவசாயிகளைச் சென்றடையக்கூடிய வகையில் அனைத்து அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். நிறைய விதைகள் இன்னும் block offices–ல் இருக்கின்றன. அவையெல்லாம் விவசாயிகளைச் சென்றடையும் வகையில் அதிகாரிகளிடம் வேலை வாங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பனை ஏறும் இயந்திரங்களை அதிகப்படுத்த வேண்டும்.

அதேநேரத்தில், நிறைய திட்டங்கள் அரசால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அறுவடை செய்ய வேண்டுமென்றால், அறுவடை இயந்திரங்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு வாடகையாக ரூபாய் 3 ஆயிரத்து 500 வாங்கப்படுகிறது. அதுபோல, டிராக்டர்களைப் பார்த்தோமென்றால், அதற்காகவும், LD Bank–ல், நில வள வங்கியில் வட்டிக்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரு block–க்கு டிராக்டர்கள் மற்றும் அறுவடை இயந்திரங்களை அரசாங்கமே வட்டியில்லாமல் கொடுத்தாலும் சரி அல்லது ஒவ்வொரு யூனியனிலும் அரசாங்கமே இயந்திரங்களை வாடகைக்குக் கொடுத்தாலும் சரி, அறுவடை நேரங்களில், அறுவடை இயந்திரங்கள் ரூபாய் 3 ஆயிரத்து 500-க்கு வாடகைக்கு விடப்படுவதைத் தவிர்த்து, அரசாங்கத்தின் சார்பாக ரூபாய் 2 ஆயிரத்துக்கு வாடகைக்குக் கொடுத்தால், விவசாயிகளுக்கு இன்னும் பயனுள்ளதாக அமையும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை விவசாயம் செய்யும்போது, சக்கைப் பூண்டு, ஜிப்சம் போன்ற பொருட்கள் எல்லா blocks–லும் கொடுக்கிறார்கள். ஜிப்சம், சக்கைப் பூண்டு போன்றவற்றை இன்னும் குறைந்த விலையில் கொடுத்து, எல்லோருக்கும் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினால், அதிகமான விளைச்சல் பெற முடியும். அதிகப்படியான விளைச்சல் எடுத்து, சாதனை செய்பவர்களுக்கு, ரூ.5 இலட்சம் பரிசு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அது எந்த scale–ல் கொடுக்கப்படுகிறது என்று தெரியவில்லை. எங்கள் பகுதிகளில் 1 ஏக்கருக்கு ஒரு மேனி என்று சொல்வோம். ஒரு கதிருக்கு 300 நெல் மணிகள் இருக்க வேண்டுமென்று முக்கூடற்பள்ளுவில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு கதிருக்கு 300 நெல் மணிகள் இருந்தாலே,

அது அதிக விளைச்சலாகக் கருதப்படுகிறது. ஆக, அந்த விளைச்சல் எந்தளவுக்கு இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கேற்ற வகையில் பரிசுத் தொகைகளை அதிகமாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சகவ்யத்தைப் பொறுத்தமட்டில், இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தி, எல்லா இடங்களிலும் அதிகமாகக் கிடைக்க வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்தமட்டில், குமரி மாவட்டம், நாகர்கோவில், வடிவீஸ்வரம் அருகிலுள்ள அழகம்மன் திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த திருக்கோயில். அத்திருக்கோயிலிலுள்ள திருக்குளம் 30 ஆண்டுகளுக்கு முன்பு தூர் வாரப்பட்டது, தற்போது, எல்லாமே இடிந்து கிடக்கிறது. குமரி மாவட்டத்திலுள்ள அழகம்மன் திருக்கோயில் திருக்குளத்தைத் தூர்வார வேண்டுமென்று மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், 100 நாள் வேலை திட்டப் பணிகள் எல்லா இடங்களிலும் நடைபெறுகின்றன. அதற்கான ஊதியத்தைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று சொல்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) இப்பொழுதுதான் உரையை ஆரம்பித்திருக்கிறேன்.

பிற்பகல் 2–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 9 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. எந்தக் குறுக்கீடும் இல்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் வந்திருக்கிறார்கள், குறுக்கீடு வரலாம்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** குறுக்கீடு வருவதுபோன்று நான் பேசவேயில்லை. 100 நாள் வேலைதிட்டத்தைப் பொறுத்தவரையில், நான் குறை சொல்லமாட்டேன், தூர்வாரும் பணிகளைத் தவிர, வேறு எந்தப் பணியும் நடைபெறுவதில்லை. அதுவும் எந்த அளவில் நடைபெறுகிறதென்று நம் அனைவருக்கும் தெரியும். ** இருந்தாலும், அவர்களிடமிருந்து முழுமையான அளவில் பணிகளைப் பெற வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அங்கு பணிபுரிபவர்கள் சாதாரண ஆட்கள். பாவம். அவர்கள் மனம் நோகும்படியான வார்த்தைகள் வேண்டாம்.* (குறுக்கீடு) *அதனை எடுத்துவிடுவோம்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** Ok. *பரவாயில்லை, நான் எதற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால், தற்போது விவசாயத்திற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. அனைவரும் தங்கள் குழந்தைகளைத் தொட்டிலில் போட்டுவிட்டு 100 நாள் வேலை திட்டத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். நான் கேட்பது, 100 நாள் வேலை திட்டத்தின்கீழ் அவர்களில் 60 சதவிகித பணிகள் தூர்வாருகின்ற பணிகளுக்கும், 40 சதவிகித பணிகள் விவசாயப் பணிகளுக்கும் நியமித்தால், அரசாங்கம் கொடுக்கும் ரூ.200/– விவசாயி கொடுக்கும் ரூ.100/– சேர்த்து ரூ.300/– முதல் ரூ.350/– வரை அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சொல்லும் பணிகளுக்கு, 100 நாட்கள் போக மீதி 265 நாட்கள் இருக்கின்றன. அவர்களை அப்போது பயன்படுத்திக்கொள்ளுங்கள்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். பொதுப் பணித் துறையின்கீழ் இருக்கின்ற அனைத்துக் குளங்களிலும் சீமைக் கருவேல மரங்கள் இருக்கின்றன. பொதுப் பணித் துறையின் சார்பில் அனைத்து கருவேல மரங்களையும் அப்புறப்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள், நேரமாகிவிட்டது நிறுத்தச் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள்* (சிரிப்பு)

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரைப்பற்றி அனைத்தும் எனக்குத் தெரியும். எனவே அவர் அவ்வாறு சொல்ல மாட்டார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடிக்கச் சொல்கிறார்கள்.* (சிரிப்பு)

*2023 ஏப்ரல் 5*]

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் அனைத்து கிராமங்களிலும் உலர்களங்கள் அமைக்கப்பட்டன. தற்போது அந்த உலர்களங்கள் அனைத்தும்* damage *ஆகியும், குறைந்த அளவிலும் இருக்கின்றன. அவை அனைத்தையும் மீண்டும் அமைத்துத் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

*மேலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்* GST*–க்கு பாதி தொகை போய்விடுகிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள்தானே அதற்குப் பதில் சொல்ல வேண்டும் (சிரிப்பு)*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* GST *மூலம் நிதி மத்திய அரசிற்கு சென்றாலும், அதன் பங்குத்தொகை மாநில அரசிற்கும்தானே வருகிறது. வரக்கூடிய பங்குத் தொகையை அரசு வேண்டாம் என்று சொல்வதில்லையே?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், பங்கு சரியாக வருவதில்லை என்பதுதான் பிரச்சினையே? (சிரிப்பு) எனவே, அதை விட்டுவிடுங்கள் அடுத்த* subject*–க்கு வாருங்கள்.* Same side goal *ஆகிறது.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தமட்டிலும், என் தொகுதியிலுள்ள நடுக்கல்லூர், கோடகநல்லூர், கங்கைகொண்டான் மற்றும் மானூர் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் எங்கள் பகுதி மிகவும் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய பகுதியாக உள்ளது. எங்கள் மானூர் குளமே இன்னும் பெருகவில்லை. நாங்குநேரி விஜயநாராயணன் குளம் இன்னும் பெருகவில்லை. நீங்கள் அப்பகுதிக்கு வரவில்லை, எனவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அதனை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றாறில் தண்ணீர் வந்தால்தானே, மானூர் குளத்திற்கு வர இயலும்? அதிலும் மானூர் குளம் மேலே இருக்கிறது. ஆறு கீழே இருக்கிறது. எனவே தண்ணீரை pump செய்ய வேண்டும். தற்போது துறையின்மூலம் இரண்டையும் இணைத்திருக்கிறேன். அதனால் தற்போது பரவாயில்லைபோல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்ற வருடம் முழுமையாகப் பெருகியது. இந்த வருடம் மழையின் அளவு குறைவு. மாண்புமிகு உறுப்பினர் அடுத்த subject குறித்து பேசுங்கள். உரையை முடித்துவிடுவோம். பேசியது போதும் அல்லவா?

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையில் NSS, Scouts, NCC போன்ற அமைப்புகள் இருந்தன. Moral Science போன்ற பாடப் பிரிவு இருந்தது. ஆனால், தற்போது Moral Science இல்லவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Moral Science இல்லையென்றால் தனியார் பள்ளிகளிலா? CBSE–யிலா? Matric–லா? அரசுப் பள்ளிகளில் இருக்கிறதென்று சொல்கிறார்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளியாக இருந்தாலும், தனியார் பள்ளியாக இருந்தாலும், எந்தப் பள்ளியாக இருந்தாலும் அனைத்துப் பள்ளிகளிலும் Moral Science கண்டிப்பாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். கலாச்சாரமும், நாகரிகமும் பெருகிவரும் இந்தக் காலகட்டத்தில், ஒழுக்கம் என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. நமக்குப் பின்வரும் சந்ததிகள் நல்லமுறையில் வளர வேண்டும். அதற்கு பள்ளிக் கல்வித் துறை நிச்சயமாக தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், முந்திரி விளைச்சல் அதிக அளவில் நடைபெற்ற மாவட்டமாக இருந்தது. தற்போது முந்திரி விளைச்சல் இல்லாமல், முந்திரி அனைத்தையும் விவசாயிகள் இறக்குமதி செய்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த பிறகு, அதிலுள்ள பருப்பினை எடுத்துக் கொடுப்பதற்கு அரசு 1 சதவிகிதம் surcharge போடுகிறது. ஆக, அந்த surcharge–ஐயும் இரத்து செய்யுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் கடைகளைப் பொறுத்தமட்டிலும், அதற்கான funds எல்லாவற்றையும் MLA fund–லிருந்து கொடுக்கச் சொல்கிறார்கள். 30 இலட்சம் ரூபாய் சமுதாயக் கூடத்திற்கும், 10 இலட்சம் ரூபாய் ரேஷன் கடைக்கும், பல்நோக்குக் கட்டடத்திற்கு 12 இலட்சம் ரூபாயும் செலவிடப்படுகிறது. அதனால் ரேஷன் கடைகளை அரசு பணத்தில் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில் திருநெல்வேலி பகுதியில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், road போடுகிறார்கள். பிறகு பாதாள சாக்கடை அமைப்பதற்காகத் தோண்டுகிறார்கள். பாதாள சாக்கடை போடப்பட்டு, Corporation certificate கொடுத்த பின்னர், நெடுஞ்சாலைத் துறை road போட வேண்டிய நிலை இருக்கிறது. அதனால் TWAD Board, நெடுஞ்சாலைத் துறை, மாநகராட்சி இணைந்து ஒரு குழு அமைத்து, குறுகிய கால நிர்ணயம் செய்து சாலைகளைப் போட வேண்டும். ஏனென்றால், திருநெல்வேலி தொகுதியில் நிறைய சாலைகள் குண்டும், குழியுமாக இருந்தன. தி.மு.க. பகுதி செயலாளர், திரு. கோபி அவர்கள் அந்த குழியில் விழுந்து, இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன, hospital–லில் இருக்கிறார். இதை நான் குறையாகச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. சில நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன. அதனைத் தவிர்க்க மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். மாநகராட்சியில் இருக்கக்கூடிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறை எடுக்க வேண்டும்.

மானூர் மட்டுமல்ல, அனைத்து ஊராட்சிகளில் இருக்கக்கூடிய கிராமச் சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறை எடுத்தால், தமிழ்நாடு முழுவதும் வசதியாக இருக்கும். பேரூராட்சி உட்பட எல்லாவற்றையும் எடுக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டு, மணியடிக்கும் முன்பாக நானே முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.

***திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். தந்தை பெரியாரின் மறுதோன்றல், பேரறிஞர் அண்ணாவின் கனவுகளை நனவாக்கிய காவிய நாயகன்,

மொழிக்காகவும், இனத்திற்காகவும் பாடுபட்ட மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்"

என்ற குறள் நெறிப்படி, அனுதினமும் சாமானிய மக்களின் நலனுக்காக உழைத்து அவர்களின் மனதை வென்ற, மக்களின் முதல்வர், எங்களின் குடும்பத் தலைவர் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகின்றேன்.

திராவிட இயக்கம் ஒரு நூற்றாண்டு காலமாய் தன் தீவிர இலட்சியத்தைச் சுமந்து இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதனை வருங்கால இளைய சமுதாயத்திடம் கொண்டு சேர்க்கும் பணியை இடைவிடாது செய்யும் எங்களின் எதிர்காலம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை வணங்குகிறேன். மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மதிப்பிற்குரிய அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை மற்றும் பால்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் என் உரையை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றும், இன்றும், என்றும் மீனவர்மீது அளவற்ற பாசம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மீனவர்கள் சந்திக்கும் பல்வேறு இடையூறுகளை நீக்கிடும்பொருட்டு, பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி வருவதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

தமிழ்நாடு என்பது சுமார் 1,076 கிலோ மீட்டர் கடற்கரையைக் கொண்ட மாநிலமாகும். சுமார் 608 மீனவக் கிராமங்களைக் கொண்ட 10 இலட்சம் மீனவக் குடும்பங்கள் கடலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

அந்தவகையில் எங்களது இராமநாதபுரம் மாவட்டம் சுமார் 237 கிலோ மீட்டர் கடற்கரையை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கு சுமார் 1,660 விசைப் படகுகளிலும், 4,600 நாட்டு படகுகளிலும் மீனவர்கள் தினமும் மீன் பிடிக்கச் செல்கின்றனர். தமிழகத்தில் உள்ள மீனவச் சமுதாய மக்களில் 22 சதவிகிதம் பேர் எங்களது மாவட்டத்தில் வாழ்ந்து வருகிறார்கள். மேலும், ஒரு இலட்சத்து அறுபத்து ஆறாயிரம் டன் மீன்கள் பிடிக்கப்பட்டு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் மீன் உற்பத்தியில் முதன்மை மாவட்டமாக இருப்பது இராமநாதபுரம் மாவட்டம் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கு சுமார் 170 மீனவக் கிராமங்களில் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மீனவ மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீனவர்களுக்காகத் தந்திருக்கின்றார்கள். அதை இந்த அவையிலே நான் எடுத்துரைக்க விரும்புகிறேன். கடலில் தவறி விழுந்து உயிரிழப்பவர்களை மீட்கும் வகையில் ஆயிரம் மீனவ சமூக இளைஞர்களுக்குக் கடற்கரை உயிர் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பயிற்சித் திட்டம் தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது. மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு அடிப்படையாக விளங்கும் மீன் இனப்பெருக்கத்திற்கான பவளப்பாறைகளைப் பாதுகாக்கவும், செயற்கை பவளப்பாறைகளை உருவாக்கிடவும் ரூ.143 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பவளப்பாறைகளைப் பாதுகாப்பதன்மூலம் மீன் உற்பத்தி அதிகரித்து, மீனவர்களின் பொருளாதாரம் மேம்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாறிவரும் பருவநிலை மாற்றத்தின் காரணமாகவும், சுற்றுச்சூழல் பாதிப்பின் காரணமாகவும் கடற்கரைப் பகுதிகள் பாதிப்படையாமல் இருக்க ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் நெய்தல் மீட்சி இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின்மூலம் கடல் அரிப்பைத் தடுத்திடுவதோடு மட்டுமல்லாமல், கடல் சீற்றத்திலிருந்து மீனவ மக்களைப் பாதுகாக்கவும் வழிவகை செய்யும்.

நிதிநிலை அறிக்கையில் மீன்பிடித் தடைக் காலம் மற்றும் குறைவு காலம் உள்ளிட்ட நிவாரணத் திட்டங்களுக்கு ரூ.389 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள மீனவப் பெருங்குடி மக்கள் பயனடைவார்கள். இராமநாதபுரம் சட்டமன்றத்

தொகுதிக்குட்பட்ட மீனவ மக்களின் கோரிக்கைகளைத் தற்போது நிறைவேற்றித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த அவையிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–15*

இராமேஸ்வரம் மீனவ மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக, கடந்த காலங்களில் நிறைவேற்றப்படாமல் இருந்த இராமேஸ்வரம் படகுகள் அணைவதற்கு ஏதுவாக ஜெட்டி பாலம் அமைப்பதற்குக் கடந்த நிதியாண்டில் ரூ.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

மண்டபம் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் இருக்கக்கூடிய கடற்கரைப் பகுதிகளில் வேகமான காற்றழுத்தங்களும், புயல் சீற்றங்களும் ஏற்படுவதைத் தடுப்பதற்காக, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், இராமநாதபுரத்தில் ஆய்வு செய்தபோது, மீனவ மக்கள், தூண்டில் வளைவு வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஒப்புதல் பெற்று வழங்குவதாக கூறினார். அதை உடனே ஏற்றுக்கொண்டு கடந்த நிதியாண்டில் ரூபாய் 80 கோடி மதிப்பில் தூண்டில் வளைவு திட்டப் பணிகளுக்கு ஆணை வழங்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு அந்த மீனவப் பெருங்குடி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு, விசைப்படகுகள், நாட்டுப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்ட மீனவர்களுக்கு உதவிட வேண்டுமென்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், நானும், மீனவப் பிரதிநிதிகள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மீனவப் பிரதிநிதிகளோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 20–1–2022 அன்று சந்தித்து கோரிக்கை வைத்தோம். அன்று மீனவ மக்கள் தங்கள் ஊருக்கு சென்னையிலிருந்து இரயில் ஏறி அவர்கள் இராமேஸ்வரத்திற்கு செல்வதற்குள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டார்கள். ஏறத்தாழ, இலங்கையில் இருக்கக்கூடிய படகுகளுக்கு, 108 விசைப் படகு உரிமையாளர்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் வீதமும், 17 நாட்டுப்

படகு உரிமையாளர்களுக்கு தலா ரூபாய் 1.5 இலட்சம் வீதமும் கூடுதலாக நிதியொதுக்கி, வடகிழக்குப் பருவமழை காலத்தில் சேதமான 15 மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு 5.66 கோடி ரூபாய் அறிவித்த திராவிட மாடல் ஆட்சியின் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு தமிழ்நாடு மீனவ மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராமநாதபுரம் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், தூத்துக்குடி, கன்னியாகுமரியில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகம் போன்று அதிகமான விசைப்படகுகளைக் கொண்டுள்ள இராமேஸ்வரம் பகுதிக்கு மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தருமாறு தங்களின் வாயிலாகக் கோரிக்கை வைக்கின்றேன். மேலும், தங்கச்சிமடம் வடக்கு கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவுடன்கூடிய மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கோரிக்கை வைக்கிறேன். பாம்பன் மீனவர்களின் நீண்டநாள் கோரிக்கையான பாம்பன் வடக்கு கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவு அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியபட்டினம் கடற்கரைக் கிராமத்தில் வலை பின்னும் கூடம் அமைக்க வேண்டுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இயற்கைப் பேரிடரால் உயிரிழக்க நேரிடுகிறது. அவர்கள் குடும்பத்திற்கு உயிரிழப்பிற்கான நிவாரணத் தொகை வழங்கிட இரண்டு ஆண்டுகள் தாமதம் ஆகின்றன. அவர்களுடைய குடும்பத்தினர் எவ்வித வருமானமுமின்றி வறுமையிலே வாடுகிறார்கள். எனவே, அவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு மீனவக் குடும்பத்திற்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை விரைந்து வழங்க தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்] [2023 ஏப்ரல் 5

தற்போது விசைப் படகு மீனவர்களுக்கு மானிய டீசல் மாதம் ஒன்றுக்கு 1800 லிட்டரும், நாட்டுப் படகு மீனவர்களுக்கு 300 லிட்டரும் வழங்கப்படுகிறது. இதனை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள இலங்கை கடற்படை வசம் உள்ள இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த 100–க்கும் மேற்பட்ட நல்ல நிலையில் உள்ள விசைப் படகுகளையும், நாட்டுப் படகுகளையும் மீட்டுத் தந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள், மீனவர்களின் நலன் காக்க வேண்டுமென்று இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய கடல் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் 60 வயதிற்குமேல் நிதியுதவி வழங்கப்படுவதில்லை. ஆகவே, 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் நிவாரணத் தொகையினை வழங்கி உதவிடுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைக்கின்றேன். சிறுதானிய உணவுத் திருவிழாபோல, மீன் வகைகளின் உணவுத் திருவிழாவும் நடத்திடலாம் என்ற எனது கருத்தினை இந்த அவையில் பதிவு செய்கிறேன். மீனவச் சமுதாய மகளிர் சுயமாக வருமானம் ஈட்டுவதற்கு கைவினைத் தொழில் செய்திட ஏதுவாக பயிற்சி நிலையங்கள் அமைத்து தொழிற்பயிற்சி வழங்கி அவர்களது வாழ்வாதாரம் சிறக்க வழி செய்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மானியக் கோரிக்கை. நமது இந்தியாவின் இரண்டு கண்களாக விவசாயியும், இராணுவ வீரரும் இருந்து வருகிறார்கள். அதனை உணர்ந்த நம்முடைய தலைவர் அவர்கள், வேளாண் துறைக்கு என்று தனியாக பட்ஜெட்டைத் தந்து, மூன்றாவது முறையாக இந்த பட்ஜெட்டை, நம்முடைய மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தாக்கல் செய்திருக்கின்றார்.

2022–2023 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பயிர்க் கடனைவிட கூடுதலாகத் தற்போது 15 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகள் மகிழ்ச்சியடைகிறார்கள். இதன்மூலம் விவசாயிகள் தனியாரிடம் சென்று கடன்பெற வேண்டிய கட்டாயம் இல்லாமல் இருப்பது விவசாயிகளிடத்தில் மட்டற்ற மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது.

*2023 ஏப்ரல் 5] [திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்]*

*தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வேளாண் பட்ஜெட்டில் சிறப்பாக சிறு தானிய உற்பத்தியை அதிகரித்து, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் தரிசு நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றை விளை நிலங்களாக மாற்றி, பயிர்கள் பயிரிடப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 2197 எக்டேர் தரிசு நிலங்கள் தற்போது விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.*

*வேளாண் நிதிநிலை அறிக்கையில் கருவேல மரங்களை அகற்றிட சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரிய விஷயம். இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்த சாகுபடி பரப்பளவில் சுமார் 40 ஆயிரம் எக்டேரில் கருவேல மரங்கள் படர்ந்துள்ளன. அதில் முதற்கட்டமாகக் குறைந்தபட்சம் 10 ஆயிரம் எக்டேரில் உள்ள மரங்களை உடனடியாக நீக்கி, சாகுபடி நிலங்களாக மாற்ற சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். 2023–2024 ஆம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு ரூ.368 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*பிற்பகல் 2–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், உரையை முடித்துவிடுங்கள்.*

**திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** *ஒரே ஒரு வரியில் முடித்துவிடுகிறேன். வடகிழக்குப் பருவமழை குறைவாக பெய்த காரணத்தினால், கடந்த பிப்ரவரி மாதம் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் நெற்பயிர்கள் ஏறத்தாழ 98 ஆயிரத்து 314 எக்டேர் அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், உங்கள் தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். நான் பதிவு செய்து விடுகிறேன்.*

**திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிப் பிரச்சினையல்ல; ஒரு மாவட்டத்தின் பிரச்சினை. அதை மட்டும் நான் பதிவு செய்துவிடுகிறேன். மக்காச்சோளப் பயிர்கள் 40.50 எக்டேர் அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளன என்று ஆய்வறிக்கையில்*

தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. வேளாண் துறையின் சார்பாக திரு. சமயமூர்த்தி, I.A.S., விவசாயத் துறையின் அரசுச் செயலாளர், திரு. அண்ணாதுரை, I.A.S., விவசாயத் துறையின் இயக்குநர், திரு. பிரபாகர், I.A.S., வருவாய்த் துறை ஆணையர், திரு. நாகராஜன், I.A.S., நில நிர்வாகத் துறை ஆணையர் ஆகிய நான்கு பேரும், இராமநாதபுரம் மாவட்டத்தில், எங்களுடைய பகுதியில் ஆய்வு செய்து அறிக்கை தந்திருக்கின்றார்கள். அந்த ஆய்வின் அடிப்படையில், தற்போது மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு மட்டும் எக்டேருக்கு 20,000 ரூபாய் என்று நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. இடைப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. எனவே, எங்களது இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க மிளகாய் மண்டலங்களை அறிவித்திருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ முடித்துவிடுகிறேன். நம்முடைய முன்னாள் அமைச்சர், உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் பேசுகிறபோது விலையில்லா அரிசியைப் பற்றி இந்த அவையில் எடுத்துரைத்தார்கள். அவைக் குறிப்பில் இருக்கக்கூடிய ஒரு வரலாற்றுப் பதிவை நான் இந்த இடத்தில் பதிவு செய்ய வேண்டுமென்று நினைக்கின்றேன்.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் ஒரு கிலோ அரிசி, இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்ற உன்னதமான திட்டத்தைச் சொன்னார்கள். அப்போது மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கொடுப்பதற்கு சாத்தியக்கூறே இல்லையென்று பதிவிட்டார்கள். முதலமைச்சராக ஆட்சிக் கட்டிலில் ஏறியவுடன் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல் கையெழுத்தாக ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கி சரித்திர சாதனையைப் படைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது, நம்முடைய

*பேரவைத் தலைவர், சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தபோது தலைவரிடத்தில் ஒரு கோரிக்கையை வைக்கின்றார். விலையில்லாத அரிசி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறபோது வைக்கின்றார். அப்போது தலைவராக இருந்த டாக்டர் முத்தமிழறிஞர் அவர்கள் சொல்கிறார்; சுயமரியாதை உள்ள தமிழன் உணவுப் பொருளை விலை கொடுத்துதான் வாங்க வேண்டும் என்ற உன்னதமான திட்டத்திற்காக இரண்டு ரூபாய்க்கு வழங்கப்பட்ட அரிசியை ஒரு ரூபாய் என்று கையொப்பமிட்டு, அண்ணாவினுடைய கொள்கையின்படி, மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார் என்பதை இந்த அவையில் நான் குறிப்பிட விரும்புகிறேன். கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி. ஒரு ரூபாய்க்கும், இரண்டு ரூபாய்க்கும் கொடுத்தார்கள் என்பதைப் பதிவு செய்துவிட்டேன். நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.*

**திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக ஒரு பதிவை இங்கே பதிவு செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். பொதுவாக நாட்டு இன மாடுகள் நம்முடைய பகுதியில் அழிந்து கொண்டு வருகின்றன. அதைப்போன்று நாட்டு இன நாய்களும் நம்முடைய பகுதியில் அழிந்து கொண்டு வருகின்றன. கால்நடை பராமரிப்புத் துறையின் பேராசிரியர் திரு. செல்வகுமார் அவர்கள், . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் போதும், உரையை முடித்துவிடுங்கள்.*

**திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** *கால்நடை பராமரிப்புத் துறையின் பேராசிரியர் திரு. செல்வகுமார் அவர்கள், தன்னுடைய அறிக்கையில் ஒரு செய்தியைப் பதிய வைக்கின்றார். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தஞ்சாவூர் டெல்டா மாவட்டத்தில் இருந்த அலங்கு என்ற ஒரு நாய் இனம் அழிந்துவிட்டது. அதைப்போல, திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்த செங்கோட்டை நாய் இனம் அழிந்துவிட்டது. இராமநாதபுரத்தை பூர்வீகமாகக் கொண்டிருக்கக்கூடிய மண்டை நாய் இனம் இப்போது அழிந்து கொண்டு வருகின்றது. அலங்கு என்கிற நாய் இனம் இராஜராஜ சோழன் படையில் இருந்ததாகக் கல்வெட்டில் சொல்லப்படுகிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனை பாதுகாக்க வேண்டும்.

**திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** இராமநாதபுரத்தில் இருந்த அந்த மண்டை நாய் இனமும் இராஜராஜ சோழன் காலத்தில் அவர்களது படையில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்னர் மருது பாண்டியர் படையில் இராமநாதபுரத்தின் மண்டை நாய் இனம் இருந்ததாக காளையார்கோவிலில் உள்ள பல்வேறு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இராமேஸ்வரம் கோவிலில் உள்ள கல்வெட்டுகளில் பார்க்கிறோம். ஆகவே, கால்நடைத் துறையின் மூலமாக அழிந்து வரக்கூடிய நம்முடைய நாட்டு இன மாடுகளையும், நாட்டு இன நாய்களையும் பாதுகாக்க வேண்டுமெனக் கூறி, இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியை உரிதாக்கிக்கொண்டு, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

நகராட்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை: கீழக்கரையில் பாதாளச் சாக்கடை அமைத்துத் தர வேண்டும். இராமநாதபுரம் நகராட்சியில் அலுவலக வளாகத்தில் கூடுதல் அலுவலகக் கட்டடம் அமைக்க வேண்டும். இராமேஸ்வரம் நகர்ப் பகுதி முழுவதும் உள்ள பாதாளச் சாக்கடை திட்டத்தை விரிவுபடுத்தி மறுசீரமைத்துத் தர வேண்டும். இராமநாதபுரம் நகரில் பல்நோக்குக் கூட்ட அரங்கம் அமைக்க வேண்டும். இராமநாதபுரம் நகராட்சியில் வாரச்சந்தை மற்றும் பூங்கா அமைக்க நிதி ஒதுக்க வேண்டும். கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் புதிய தார்ச்சாலைகள் அமைக்க வேண்டும். தட்டான் தோப்பு மற்றும் மாட்டுக்கொட்டகை பகுதிகளில் இயங்கி வரும் கழிவுநீர் உந்து நிலையத்திலிருந்து கழிவுநீர் உந்து குழாய்கள் அமைக்க வேண்டும். இராமநாதபுரம் தேவிப்பட்டினத்தில் அமைந்துள்ள பூங்காவினை அழகுபடுத்தி உடற்பயிற்சிக் கூடம் அமைக்க நிதி ஒதுக்க வேண்டும். இராமநாதபுரம் நகராட்சியில் தார்ச்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளைப் புதுப்பித்துத் தர வேண்டும். இராமநாதபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் அமைக்க வேண்டும். இராமநாதபுரம் நகராட்சிக்குப் புதிதாக ஆணையாளர் மற்றும் பொறியாளருக்கான குடியிருப்புக் கட்டடம் அமைக்க வேண்டும். கீழக்கரை நகராட்சியில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்க

வேண்டும். புதிய நவீனப்படுத்தப்பட்ட மீன் மார்க்கெட் அமைக்க வேண்டும். பழைய உரக்கிடங்கு பகுதியில் பூங்கா அமைக்க வேண்டும். கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் பேவர் பிளாக் சாலை அமைக்க வேண்டும். மண்டபம் பேரூராட்சியில் அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்க வேண்டும்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை: உத்திரகோசமங்கை பிரப்பன்வலசையில் தானிய சேமிப்புக் கிடங்கு அமைக்க வேண்டும். மண்டபம் ஒன்றியம், தாமரைக்குளம் மற்றும் திருப்புல்லாணி ஒன்றியம், உத்திரகோசமங்கை பகுதியில் கூடுதலாக உலர்களம் மற்றும் சேமிப்பு கிட்டங்கி அமைக்க வேண்டும்.

ஆதி திராவிடர் நலத் துறை: கீழக்கரையில் படிக்கும் ஆதி திராவிடர் பள்ளி மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான மாணவர் விடுதி அமைக்க வேண்டும். உத்திரகோசமங்கையில் ஆதி திராவிடர் மாணவர்களுக்கான பள்ளி மாணவர் விடுதி அமைக்க வேண்டும். இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்குத் தேவையான நிதியை ஆதி திராவிடர் நல சிறப்பு நிதித் திட்டத்தின்கீழ் தாட்கோ மானியமாக ஆலைக்கு வழங்க வேண்டும். திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கும் இடமான பனையடியேந்தல் கிராமம், உத்திரகோசமங்கை கோயில், ஆதி ஜெகந்நாதர் கோயில் தெரு, மல்லல் கிராமம் ஆகிய இடங்களில் சமுதாயக் கூடம் அமைக்க வேண்டும்.

கூட்டுறவுத் துறை: இராமநாதபுரம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், தாதனேந்தல் ஊராட்சியில் மிளகாய் சேமிப்புக் கிடங்கு அமைக்க வேண்டும். இராமநாதபுரம் தொகுதியில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் துவங்க வேண்டும்.

சுற்றுச்சூழல் துறை: பேக்கரும்பு அருகில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் தேசிய நினைவகம் அருகில் முத்தமிழறிஞர் டாக்டர் முத்துவேல் கருணாநிதி அவர்களின் பெயரில் பசுமைப் பூங்கா அமைக்க வேண்டும். கீழக்கரையில் நவீன வசதிகளுடன் கடற்கரையை மேம்படுத்தி சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க வேண்டும். பாம்பன் ஊராட்சி குருசடைத் தீவு கடற்கரையை மேம்படுத்தி, சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க வேண்டும். சாத்தகோன்வலசை ஊராட்சி, அரியமான் கடற்கரையை மேம்படுத்தி சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க வேண்டும்.

மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை: இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன் இறங்குதளத்தில் மீன் ஏலக்கூடம் மற்றும் வலை பின்னும் கூடம் அமைக்க வேண்டும். கீழக்கரையில் புதிய ஜெட்டி கட்டுதல் மற்றும் பழைய ஜெட்டியைப் புதுப்பித்து தர வேண்டும். இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும். களிமன்குண்டு. தங்கச்சிமடம், சடையமுனியன்வலசை, பாம்பன் ஊராட்சி ஆகிய இடங்களில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும். மண்டபம் மேற்குவாடியில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும். இராமநாதபுரம் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டும். இராமநாதபுரம், கீழக்கரையில் மீன்வள தொழில்சார் தொழிற்கல்வி நிலையம் அமைக்க வேண்டும். பாம்பன் தெற்குவாடி மீன்பிடி துறை இறங்கு தளத்தினை ஆழப்படுத்த வேண்டும். பாம்பன் பாலத்திற்குக் கீழே மீன் ஏலக்கூடம் அமைக்க வேண்டும். இராமநாதபுரம், இராமேஸ்வரம், சிங்காரவேலனார் திட்டத்தின்கீழ் இலவச அடுக்குமாடிக் கட்டடம் அமைக்க வேண்டும். இராமநாதபுரம் தொகுதி, தங்கச்சிமடத்தில் அரசு மீன் விதைப் பண்ணை அமைக்க வேண்டும். இராமநாதபுரம் தொகுதியில் பல்நோக்கு மருத்துவமனை அமைக்க வேண்டும். கீழக்கரை, இராமேஸ்வரம் மற்றும் உச்சிப்புளி ஆகிய பகுதிகளில் புதிய கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் அமைக்க வேண்டும். மானிய விலையில் டீசல் வழங்க வேண்டும். இராமேஸ்வரத்தில் மீன்வளம் சார்ந்த அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டும்.

வனத் துறை: இராமநாதபுரம் ஆர்.எஸ். மடை பகுதியில் ஆக்ஸிஜன் பூங்கா ஏற்படுத்த வேண்டும். இராமேஸ்வரம்–தனுஷ்கோடி செல்லும் வழியில் வனத் துறைமூலம் மூங்கில் பூங்கா ஏற்படுத்த வேண்டும். இராமேஸ்வரம் மற்றும் தீவுப் பகுதிகளில் வனத் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் (Quarters) கட்டித் தர வேண்டும். இராமநாதபுரத்தில் வனத் துறை சார்பாக விருந்தினர் மாளிகை அமைத்துத் தர வேண்டும்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை: இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். கீழக்கரை அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். கீழக்கரையில் ஆரம்ப சுகாதார நிலையத்தை அடிப்படை வசதிகளுடன் வேறு இடத்திற்கு மாற்றித் தர

வேண்டும். இராமநாதபுரம் செவிலியர் பள்ளியினை செவிலியர் கல்லூரியாக தரமுயர்த்தித் தர வேண்டும். திருப்புல்லாணி ஒன்றியம், தினைக்குளம் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய கட்டட வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். இராமேஸ்வரம், சம்பை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும். திருப்புல்லாணி ஒன்றியம், சின்னபாளையனேந்தல், வெங்குளம், பனையடியேந்தல் ஆகிய கிராமங்களில் புதிய துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டித் தர வேண்டும். திருப்புல்லாணி ஒன்றியம், தில்லையேந்தல் கிராமம், 500 பிளாட் நல்லாங்குடி, மேலமடை, கருங்குளம்லாந்தை ஆகிய கிராமங்களில் துணை சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும். இராமேஸ்வரம் நகராட்சி, அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மருந்தாளுநர்களைப் பணி நியமனம் செய்ய வேண்டும். மருத்துவமனைக்கு கூடுதலாக அதிநவீன மருத்துவ உபகரணங்கள் (X–Ray Machine, C.T.Scan Machine and ICU Ward) வழங்க வேண்டும். கீழக்கரை தாலுகா அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைப் பணி நியமனம் செய்து, மருத்துவமனைக்கு கூடுதலாக அதிநவீன மருத்துவ உபகரணங்கள் வழங்க வேண்டும். இராமநாதபுரம் தொகுதி, பெரியபட்டினம் மற்றும் தங்கச்சிமடம் பகுதிகளில் மருத்துவ அலுவலர்களுக்கு தங்கும் விடுதி அமைத்துத் தர வேண்டும்.

உயர் கல்வித் துறை: இராமநாதபுரத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தர வேண்டும். இராமநாதபுரத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் இளநிலை படிப்பு மற்றும் முதுநிலை படிப்பு பிரிவுகள் அமைத்துத் தர வேண்டும். இராமநாதபுரத்தில் கல்லூரி மாணவர்களுக்கு புதிய மாணவர்கள் விடுதி ஏற்படுத்தி தர வேண்டும். இராமநாதபுரம் முதுகலை படிக்கும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு புதிய கல்லூரி மாணவர் விடுதி ஏற்படுத்தி தர வேண்டும்.

பள்ளிக் கல்வித் துறை: இராமநாதபுரம் நகராட்சிக்கு புதியதாக மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டும். இராமநாதபுரம் நகரில் வள்ளல்பாரி நடுநிலைப் பள்ளியை ஆண்கள் உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தி தர வேண்டும். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட இடம் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். தனுஷ்கோடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கண்ணாடிநார்

இழையால் (Fibre Glass) ஆன கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதில் சோலார் மின்வசதியினை ஏற்படுத்தி தர வேண்டும். இராமநாதபுரத்தில் பள்ளிக் கட்டடங்களுக்குத் தேவையான பராமரிப்பு மேற்கொள்ள வேண்டும். இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். புனித யாகப்பர் மேல்நிலைப் பள்ளியின் மேல்நிலைப் பிரிவிற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும். இராஜசூரியமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தி தர வேண்டும். புதுமடம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தர வேண்டும். இராமேஸ்வரம் நகராட்சியில் உள்ள பள்ளிகளுக்கு புதிய வகுப்பறை கட்டடம் கட்டித் தர வேண்டும். கீழக்கரை நகராட்சியில் நூலகம் அமைத்துத் தர வேண்டும். தங்கச்சிமடம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். இராமேஸ்வரம், மாங்காடு கிராமம், துவக்கப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். இரட்டையூரணி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதியதாக 4 வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். வாணியங்குளம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதியதாக 3 வகுப்பறை கட்டடங்கள் கட்டித்தர வேண்டும். புதுக்கோயில் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதியதாக 2 வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். கடுக்காய்வலசை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதியதாக 4 வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். நாரையூரணி அரசு நடுநிலைப் பள்ளிக்கு புதியதாக 2 வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். ரெகுநாதபுரம் அரசு துவக்கப் பள்ளியில் புதிதாக 2 வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். பெரியபட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்த கட்டடங்களைப் பழுதுபார்த்து தர வேண்டும். பாம்பன் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும். காஞ்சிரங்குடி அரசு உயர்நிலைப் பள்ளியில் புதிய நூலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும். தாமரைக்குளம் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் வண்ணாங்குண்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் கட்டித்தர வேண்டும்.

பொதுப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறை: இராமநாதபுரம் தொகுதி, அரியன்குண்டு–வடகாடு சாலையை நெடுஞ்சாலையாக தரமுயர்த்துதல். இராமநாதபுரம், தங்கச்சிமடம் பஞ்சாயத்திலுள்ள அரியன்குண்டு–வடகாடு சாலை மற்றும் மாடக்கொட்டான்

பஞ்சாயத்து ஒன்றிய சாலையை நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்த வேண்டும். இராமநாதபுரம் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் சுற்று வழிச் சாலை அமைக்க வேண்டும். இராமநாதபுரம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், ஆற்றங்கரை ஊராட்சி சேர்வைக்காரன் ஊரணி கிராமத்தில் சேர்வைக்காரன் ஊரணி பஸ் ஸ்டாப் NH சாலை வழியாக 150 மீட்டர் நீளம் உள்ள வைகை ஆற்றில் மேம்பாலம் அமைக்க வேண்டும். இராமநாதபுரம் பழைய கலெக்டர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். இராமேஸ்வரம், ஓலைக்குடா பகுதியில் அமைந்துள்ள அரசு விருந்தினர் மாளிகையில் கூடுதல் அறைகள் கட்டித் தர வேண்டும். எட்டிவயலிலிருந்து உத்திரகோசமங்கைவரை செல்லும் சாலையை இடைவெளித் தடத்திலிருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய வேண்டும். திருப்புல்லாணி–பிரப்பன்வலசை சாலையை இடைவெளித் தடத்திலிருந்து இருவழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய வேண்டும். புத்தனேந்தல்–ஏர்வாடி சாலையை ஒருவழித் தடத்திலிருந்து இருவழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யவேண்டும். திருப்புல்லாணி–பிரப்பன்வலசை சாலையிலிருந்து வெள்ளேரிஓடை சாலையில் பெட்டிப் பாலத்தை புதுப்பித்துத் தரவேண்டும். திருப்புல்லாணி–ரெகுநாதபுரம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் தினைக்குளம் சாலையில் பெட்டிப் பாலத்தைப் புதுப்பித்து தரவேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாகத் தரமுயர்த்தி மேம்பாடு செய்திட பரிந்துரை செய்ய வேண்டும். இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமச் சாலைகளை நெடுஞ்சாலை சாலைகளாகத் தரமுயர்த்தித் தர வேண்டும்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை: இராமநாதபுரம் மாவட்டம், தேவிபட்டினம், அருள்மிகு நவக்கிரஹ திருக்கோயிலில் நவீன வசதிகளுடன்கூடிய கழிப்பறை, உடை மாற்றும் அறை, கோயிலைச் சுற்றி பேவர் பிளாக் சாலை அமைக்க வேண்டும். இராமநாதபுரம், இராமேஸ்வரம் நகராட்சியில் நிதி ஒதுக்கி சாலை வசதிகள் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, பேசுங்கள்.

**திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரிசி வழங்கியதைப் பற்றிச் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், என்ன நினைத்தார்களோ அதனைச் செயல்படுத்தினார்கள். ஒரே தலைவி, ஒப்பற்றத் தலைவி அம்மா அவர்கள் 20 கிலோ அரிசி ஏழைகளுக்கு விலையில்லாமல் தந்தவர். இது எல்லோருக்கும் தெரியும். அதையும் அவர் சேர்த்துச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

பிற்பகல் 2—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் அவரும் சொன்னார். இரண்டு ரூபாய்க்கு கொடுத்தோம், ஒரு ரூபாய்க்கு கொடுத்தோம். நீங்களும் கொடுத்தீர்கள் என்றுதான் பதில் சொல்கிறார். அதில் தவறில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களிடம் சொல்லுங்கள்; அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசி முடிக்கட்டும். நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவுகளோடும், என்னை ஆளாக்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். கழகத்தின் பொதுச் செயலாளர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக் கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் நன்றி.

உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலிருந்து 2016 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையில் நான் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்தபோது, 26 கோடி ரூபாயில் 326 வீடுகள் உடுமலைப்பேட்டைக்கு அருகில், புக்களம் ஊராட்சியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டடப்பட்டன. அதில், இன்றைக்கு 100 வீடுகள் மட்டும்தான்

கொடுக்கப்பட்டிருக்கின்றன. புக்களம் ஊராட்சியில் நிலம் எடுக்கின்றபோது, அந்தப் பகுதியில் இருக்கின்ற அருந்ததியர்கள் மற்றும் ஏழை, எளியோருக்கு 100 வீடுகளைத் தருவதாகச் சொன்னோம். அந்த அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டார்கள். ஆனால், அந்தப் பயனாளிகளுக்கு இன்னும் வீடுகள் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அதைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஒரு வீட்டிற்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதையும் இரத்து செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

உடுமலைப்பேட்டையில் நாராயணகவி போன்ற பல்வேறு அறிஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பலர் இந்த அவையில் பல்வேறு துறைகளில் அமைச்சர்களாகப் பணியாற்றியிருக்கின்றார்கள். ஆகவே, உடுமலைப்பேட்டையை மையமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர், கோவை மாவட்டங்களைப் பொறுத்தவரையில், கறிக்கோழிப் பண்ணைகள் அதிகமாக இருக்கின்ற பகுதி; தீவன ஆலைகள் அதிகமாக இருக்கின்ற பகுதி. இதற்காக மக்காச்சோளத்தை பல்வேறு மாவட்டங்களிலிருந்து திருப்பூருக்கும், கோவைக்கும் கொண்டு வர வேண்டும். ஆனால், அதற்கு 1% Cess வரி உள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் அல்லாமல், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் போன்ற பகுதிகளுக்கு மட்டும் விதிக்கப்படுகிறது. அதை இரத்து செய்து தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கோழி உற்பத்தியில் இந்தியாவிலேயே முதன்மை இடத்தைப் பெற்றிருக்கின்ற மாநிலம் தமிழகம் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவையில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் ஆகிய துறைகளின் சார்பில் ஒருசில கருத்துகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பதிவு செய்ய விரும்புகின்றேன். ஒரு நாட்டின் பெருமை என்பது அதனுடைய அற முன்னேற்றத்தையும், அங்கு கால்நடைகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதையும் பொறுத்துத்தான் அளவிட முடியும் என்று மகாத்மா காந்தி

அவர்கள் சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு இந்த அவையில் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, ஏழை, எளியோருடைய வாழ்வாதாரம் உயர வேண்டும்; குறிப்பாக, கிராமப் பகுதிகளில் இருக்கின்ற தாய்மார்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்களுடைய பொருளாதார நிலை உயர வேண்டுமென்பதற்காக வெள்ளாடுகள் வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக கடந்த 10 ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 11 இலட்சத்து 67 ஆயிரத்து 674 கிராமப்புறப் பெண் பயனாளிகளுக்குக் கொடுத்திருக்கின்றோம். அதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.1,656 கோடி. அதுபோன்று பல்வேறு திட்டப் பணிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏழை, எளியோர்களுக்காக வழங்கினோம்.

விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டபோது, அதன்மூலம் பிறந்த ஆட்டுக் குட்டிகளின் எண்ணிக்கை 78 இலட்சம். அதனுடைய தோராய மதிப்பு ரூ.1,953 கோடி என்பதையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்தத் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். அதன்மூலம் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டுமென்றும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் மூலமாக 1 இலட்சம் பேருக்கு ரூ.430 கோடி செலவில் வழங்கினோம். அவற்றின்மூலம் 2 இலட்சம் கன்றுகள் பிறந்தன. அதன் தோராய மதிப்பு ரூ.100 கோடி என்பதையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2—30

அதேபோல, 2019—2020 ஆம் ஆண்டில் முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இந்த அவையில் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். அசில் இன நாட்டுக்கோழிகளை விலையில்லாமல் வழங்கும் திட்டத்தினைத் துவக்கிவைத்து, 134 கோடி ரூபாய் செலவில் கிராமப்புற மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற 4 இலட்சத்து 70 ஆயிரத்து 200 பயனாளிகளுக்கு, குறிப்பாக தாய்மார்களுக்கு வழங்கப்பட்டன. அதன் மூலமாக, அன்றைக்கு 1 கோடியே 25 இலட்சம் நாட்டுக் கோழிகளை நம்முடைய தமிழகத்தில் கொடுத்தோம். இன்றைக்கு நாட்டுக் கோழி வளர்ப்பில் நாம் முன்னேறி இருக்கின்றோமா

என்று பார்த்தால், நாட்டுக் கோழி உற்பத்தி இன்றைக்குக் குறைந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, எனக்கு முன்பு பேசிய நம்முடைய இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர், நாட்டு இனங்கள் அழிந்து வருவதாகச் சொன்னார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், காங்கேயம் காளைகள் என்றால், ஆராய்ச்சி மையம் ஒன்று அங்கே உருவாக்கப்பட்டு, காங்கேயம் இனக் காளைகளைக் காப்பாற்றினோம். அதேபோல, உம்பளாச்சேரி என்றால், அந்தக் காளைகளையும் காப்பாற்றுவதற்காக ஆராய்ச்சி மையத்தை உருவாக்கி, அனைத்து காளைகளுக்கும் ஆராய்ச்சி மையங்களை உருவாக்கிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, ஒரு வருடத்தில் நாங்கள் 1 இலட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு 6 இலட்சம் மாடுகளைக் கொடுத்தோம்; 15 ஆயிரம் கறவைப் பசுக்களைக் கொடுத்தோம்; 2 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நாட்டுக் கோழிகளைக் கொடுத்தோம். அவையெல்லாம் இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் அனைத்தையும் மீண்டும் இந்த அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்தத் திட்டங்களைக் கொடுத்ததன் விளைவு, அம்மா ஆம்புலன்ஸ் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவச் சேவையை அவர்களுடைய இல்லத்திற்கே சென்று கொடுக்கின்ற ஒரு வசதியை மாண்புமிகு முதலமைச்சராக இருந்த அண்ணன் எடப்பாடியார் அவர்கள் துவக்கிவைத்தார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, நம்முடைய சேலம், தலைவாசலில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கடந்த கால ஆட்சியில் ஆடு கொடுத்தோம், மாடு கொடுத்தோம், கோழி கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். ஆனால், அவற்றிற்கெல்லாம் மருத்துவம் பார்ப்பதற்கு, மருத்துவர்களை நியமித்தார்களா என்று சொன்னால், 40 சதவிகிதம் மருத்துவர்கள் இல்லாத நிலையை விட்டுச்சென்றார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். எங்களுடைய ஆட்சிக் காலத்தில் அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக இருந்த அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஒரே வருடத்தில் 125 கிளை நிலையங்களைக் கொடுத்தார்கள்; 25 கால்நடை மருந்தகங்களை உருவாக்கிக் கொடுத்தார்கள்; 5 மருத்துவமனைகளை உருவாக்கிக் கொடுத்தார்கள்; 2 பெருமருத்துவமனைகளை உருவாக்கிக் கொடுத்தார்கள்; 3 கால்நடை மருத்துவக் கல்லூரிகளை, உலகத்தரம் வாய்ந்த நிலையில் உருவாக்கிக் கொடுத்தார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், அன்றைக்கு ஆடுகளானாலும் சரி, மாடுகளானாலும் சரி, கோழிகளானாலும் சரி, இலட்சக்கணக்கில் நாங்கள் கொடுத்தோம். அதற்காக, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டுமென்பதற்காக. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் ஒத்துக்கொண்டார்களே. டாக்டர்தான் இல்லை என்று கேட்டதாகச் சொன்னார்கள்.

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** அம்மா ஆம்புலன்ஸ் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, எந்தப் பகுதியில் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அங்கு நேரடியாகச் சென்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துகொடுத்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, சேலம் மாவட்டம், தலைவாசலில் 1,000 ஏக்கரில் 1,000 கோடி ரூபாயில் கால்நடை உயர் ஆராய்ச்சி நிலையம் உருவாக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் அற்புதமான ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு முன்பாக, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், நான் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராக இருந்தபோது என்னை அழைத்து, அந்தத் திட்டம் மேலைநாடுகளில் எப்படி இருக்கின்றதோ, அதைப்போன்று இருக்க வேண்டுமென்பதற்காக, என்னை அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைத்து அங்கேயிருக்கின்ற ஆராய்ச்சி மையங்களைப் பார்த்து, அந்தக் கட்டடங்கள் எப்படி அமைந்துள்ளனவோ,

2023 ஏப்ரல் 5] [திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்]

அந்தத் தரத்தில் இங்கே இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆராய்ச்சி மையம்தான் தலைவாசல் கால்நடை உயர் ஆராய்ச்சி நிலையம் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** இதில் என்ன இருக்கிறது? இப்பொழுது நான் என்ன சொன்னேன். ஒன்றுமே சொல்லவில்லையே, குறையே சொல்லவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆஸ்திரேலியாவுக்கு எல்லாம் போய்விட்டு வந்திருக்கிறீர்களே! பதில் சொல்வதற்காக.

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,100 ஏக்கரில் அந்தத் திட்டத்தை ஆரம்பித்தீர்கள். ஏறக்குறைய 1,100 கோடி ரூபாய் அதில் செலவு செய்தீர்கள். ஆனால், அந்த நிலத்தைப் பார்க்கும்போது விளைச்சலுக்கான நிலமா, bore போட்டால் தண்ணீர் இருக்கிறதா என்று கேட்டால், தண்ணீர் இல்லை. ஆனால், மேட்டூரிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக, 262 கோடி ரூபாய் அதற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. செலவு செய்தது மட்டுமல்ல; தொடர் செலவினமாக வருடத்திற்கு 10 கோடி ரூபாய் செலவு செய்யக்கூடிய சூழ்நிலையை இன்றைக்கு நீங்கள் உருவாக்கிவிட்டு சென்றிருக்கிறீர்கள். உருவாக்கிவிட்டு சென்றிருக்கிறீர்கள் என்று சொன்னாலும், அந்தத் திட்டத்தை எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறுத்த வேண்டுமென்று எண்ணவில்லை. அதைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்பதற்காக அதற்கான நிர்வாக அனுமதியெல்லாம் பெற்று, ஒவ்வொன்றாகச் செய்து, ஏறக்குறைய 2, 3 மாதக் காலத்தில் அதை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளைத் தந்திருக்கிறார்கள். நாங்கள் கொண்டு வந்த புதிய தலைமைச் செயலகத்தை, புதிய Secretariat கட்டடத்தை உங்களுடைய ஆட்சியில் எப்படி மூடினீர்களோ, அதுமாதிரி நாங்கள் மூடமாட்டோம் என்பதை உங்களுக்கு நாங்கள் உறுதியாகச் சொல்கின்றோம்.

*பிற்பகல் 2–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் இதே துறையின் சார்பாக இங்கே பேசியவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, வீட்டு வசதித் துறைக்காகவும் பேசியவர்தான். இருந்தாலும் பரவாயில்லை. அவர் சொல்கின்ற ஒருசில கருத்துகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில், தண்ணீர் வேண்டும். எந்தவொரு தொழிலாக இருந்தாலும், ஆராய்ச்சி மையமாக இருந்தாலும் தண்ணீர் வேண்டும். அதற்காகத்தான் எங்களுடைய அப்போதைய முதலமைச்சர் அவர்கள், முதலில் தண்ணீர் தேவை என்பதற்காக 250 கோடி ரூபாயில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக காவேரி ஆற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்தார்கள்.

அடுத்ததாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாங்கள் எந்தத் திட்டத்தையும் கைவிடவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நாங்கள், நபார்டு வங்கியில் 101 கோடி ரூபாயைப் பெற்று, ஒரு திட்டத்தை அங்கே அறிவித்தோம். என்ன திட்டமென்றால், கலப்பினப் பசுக்களை உருவாக்க வேண்டும், பால் பதனிடும் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக 101 கோடி ரூபாயை நபார்டு வங்கியிலிருந்து வாங்கிக் கொடுத்தோம். அந்தத் திட்டத்தைத் தற்போது நீங்கள் கைவிட்டிருக்கின்றீர்கள். ஏனென்றால், அந்தத் திட்டம் என்பது மேலை நாடுகளிலிருந்து கறவைப் பசுக்களைக் கொண்டு வருவது. நம்முடைய காங்கேயம் காளை சுமார் 2 லிட்டர் பால் கொடுக்கும். அதேநேரத்தில், 20 லிட்டர், 30 லிட்டர் பால் கொடுக்கும் மேலை நாட்டுப் பசுக்களுடன் கலப்பின இனப்பெருக்கம் செய்தால், விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் குறைந்தபட்சம் 15 முதல் 20 லிட்டர் வரையிலான பால் கிடைப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம் அது.

அடுத்ததாக, பால் பதனிடும் தொழிற்சாலை. கொள்முதல் செய்யப்படும் பால், அனைத்து வகைகளிலும் மூலப் பொருட்களாக உருவாக்கப்பட்டு, அங்குள்ள மீன் வளர்ச்சிக் கழகம், பால் வளத் துறையின் மூலமாகக் கிடைக்கின்ற பொருட்கள் என

2023 ஏப்ரல் 5] [திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்]

அனைத்துப் பொருட்களையும் ஒருங்கிணைத்து, அங்கே ஒரு வளாகம் அமைத்து, அதை கால்நடைப் பூங்காவாகவும் அமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக 101 கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்தோம். அந்தத் திட்டமும் தற்போது கைவிடப்பட்டிருக்கின்றது என்பதையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தத் திட்டத்தையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கோவில்பட்டியிலே நானும் அப்போதைய செய்தித் துறை அமைச்சர் அவர்களும் ஒரு திட்டத்திற்காக அடிக்கல் நாட்டினோம். அந்தத் திட்டத்தையும் நீங்கள் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக ஜல்லிக்கட்டு நடத்துதல். 2020 ஆம் ஆண்டில், அதாவது ஒரே ஆண்டில் 300 ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு நாங்கள் அனுமதி கொடுத்தோம். நான் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராக இருந்தபோது, தற்போது நீங்கள் அமர்ந்திருக்கும் இருக்கைக்கு அருகில் அப்போது சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அமர்ந்திருப்பார். தினமும் 3 அல்லது 4 ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு அனுமதி வேண்டுமென்று அவர் என்னை தொந்தரவு செய்துகொண்டேயிருப்பார். நானும் பொறுத்துக்கொண்டே இருப்பேன். இன்றைக்கு நான் பேசிக் கொண்டிருக்கும்போதும் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார். அவருக்கு இன்னொரு கோரிக்கை இருக்கிறது. என்னவென்றால், எங்கள் ஆட்சியில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கு அந்தந்த ஊர்களிலுள்ள கிராம கமிட்டிகளே அனுமதியளித்தன. ஆனால், தற்போது online முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த online முறையை இரத்து செய்ய வேண்டுமென்று முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு போட்டியைப் பொறுத்தளவில், ஒரு கட்டுக்குள் அடங்குகின்ற அளவிற்குத்தான்

காளைகளைப் பயன்படுத்த முடியும். அதிகமான காளைகள் வருகின்றபோது, முதலில் வருகின்ற காளைகளை online–ல் பதிவு செய்ய வேண்டுமென்ற முறையைத்தான் சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடைமுறைப்படுத்தினார்களே தவிர, online–ல்தான் பதிவு செய்ய வேண்டுமென்ற சட்டத்தை நாங்கள் கொண்டுவரவில்லை. அத்தகைய திட்டத்தையும் நடைமுறைப்படுத்தவில்லை. தற்போது பல இடங்களில் இந்த ஜல்லிக்கட்டு போட்டி முறையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** நீங்கள் அதை அமல்படுத்த வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள், இதையும் கேட்டுக்கொள்ளுங்கள். நமது பட்ஜெட்டே காகிதமில்லா பட்ஜெட்தான். தொடர்ந்து பல மாண்புமிகு அமைச்சர்களும் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்றால், காகிதம் இல்லாமலேயே பதிலுரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஜல்லிக்கட்டு காளைகளை online–ல் பதிவு செய்வது கட்டாயம் என்று சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, மீனவர் நலன்.

கடந்த எங்களது ஆட்சிக் காலத்தில் 1,000 கோடி ரூபாயிலிருந்து 1,500 கோடி ரூபாயாக பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டது. அது தற்போது 389 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. மீனவர் நலனுக்காக, உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காக இந்த அரசு நிதி ஒதுக்க வேண்டும். ஆனால், ஒதுக்கவில்லை என்பது ஏமாற்றம் அளிக்கிறது.

அதேபோன்று, நம்முடைய கிராமப் பகுதிகளில், குறிப்பாக, ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட கூடுதாழை, அமலி நகர், இரயுமன்துறை போன்ற பல மீனவக் கிராமங்களில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன்மீது

போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மானிய விலையில் டீசல் கொடுக்க வேண்டும். டீசல் விலை உயர்ந்தபோது, மீனவர்களுக்காக டீசலை மானிய விலையில் கொடுத்து சாதனையைப் படைத்தார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மீனவர்களைக் காப்பாற்றினார்கள். அந்த வகையில், இந்த அரசில், விசைப் படகுகளுக்கு மாதத்திற்கு 1,800–லிட்டரிலிருந்து 2,000 லிட்டர் டீசல் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நாட்டுப் படகுகளுக்கு 300–லிட்டரிலிருந்து 400 லிட்டர் டீசல் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். உடனடியாக அதைக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். உங்களுக்காகவே முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 2–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மணி 2–40 ஆகிறது. 2–42 மணிக்கு உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** முடித்துவிடுகிறேன். அதேபோல, மீனவப் பெண்கள் தலைச்சுமையாக பல்வேறு இடங்களில் மீன் வியாபாரம் செய்து வருகிறார்கள். அந்தந்த ஊர்களிலே புதிதாக மீன் வியாபாரம் செய்ய விரும்புவோர் ** எனவே, வாய்ப்பு இருக்கும் இடங்களில், மீன் அங்காடி அமைத்துத் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** மீன்பிடித் தடைக்கால நிவாரணம் (குறுக்கீடு) இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். ஒன்றும் குறையே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வகையிலே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ** குறிப்போடு தந்தார்கள் என்று சொன்னால், ** என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அந்த விவரம் சொல்லவில்லை என்பதால்தான் அதை நீக்கினேன். உரையை முடித்து விடுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.

**திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியாக இருக்கும்போது சில குற்றச்சாட்டுகளைச் சொல்வார்கள். அதற்குப் பிறகு இல்லையென்று சொல்வார்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வதற்கு முன்பே நீங்கள் நீக்கிவிடுகிறீர்கள். அதேபோல, நாங்கள் பேசும்போதும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அண்ணன் அவர்கள் பேசும்போதும், இங்கு அவையில் நீக்காமல், அதற்குப் பிறகு எங்களுக்குக் குறிப்புகள் வரும்போது நிறைய நீக்கப்பட்டு வருகின்றன. அது ஆரோக்கியமான விஷயமாகத் தெரியவில்லை. நீங்கள் சபையில் நீக்காமல், பிறகு அதை நீக்குவது எப்படிச் சரியாக இருக்கும்? எதிர்க்கட்சி என்றால் அப்படித்தான் பேசுவோம். அதற்குப் பதில் சொல்வதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கிறார் அல்லவா! அதுபோன்று செய்வது ஆரோக்கியமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2023 ஏப்ரல் 5*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவையில் சொல்லிவிட்டு நீக்கியதைத் தவிர, வேறு ஒன்றும் நீக்கியிருந்தால், நீங்கள் அதைத் தாருங்கள். நான் அதைச் சேர்க்கச் சொல்லிவிடுகிறேன். அதிலெல்லாம் ஒன்றும் மறைமுகமாக இல்லை. நேரடியாக அவையில் நன்றாக எல்லோருமே இணக்கமாகத்தான் மக்கள் பிரச்சினைகளைப் பேசுகிறீர்கள்.* (குறுக்கீடு) *அதனால் மாறுபட்ட கருத்து இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை* K. *ராதாகிருஷ்ணன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *இன்னும் இரண்டே பாயிண்டில் முடித்து விடுகிறேன். நீங்கள் 2–42 மணிக்கு முடிக்கச் சொன்னீர்கள். நீங்கள் ஒரு நிமிடம் பேசிவிட்டீர்கள். 2–43 மணி வரை நேரம் கொடுங்கள், முடித்துவிடுகிறேன். மீன்பிடித் தடைக்கால நிவாரணம் 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 ஆயிரம் ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர் வங்கியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2022 ஆம் ஆண்டு மீனவர் பாதுகாப்புச் சட்டம் குறித்து சட்டப் பேரவையிலே நான் பேசினேன். கடலில் காற்றோடும், இயற்கையோடும் போராடி வாழும் மீனவ சமூகத்தைப் பாதுகாக்க சட்டம் இல்லை. எனவே, மீனவர் வாழ்வுரிமை காக்க, வாழ்வாதாரம் காக்க, வாழ்விடங்களைக் காக்க மீனவர் பாதுகாப்புச் சட்டம் வேண்டும். மீனவர்களைப் பழங்குடி மக்களாக அறிவிக்க வேண்டும். அதேபோல,* CRZ *2019 வரைபடத்திலே, 400–க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்கள், மீனவர் பயன்பாட்டுப் பகுதிகள் ஆகியவை இல்லாமல் இருக்கின்றன. இந்த வரைபடத்தை மீனவர்கள் உதவியுடன் வரைந்து, மீனவர்கள் வாழ்விடப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*பால்வளத் துறையிலே 35 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்துவந்தார்கள். அது 15 இலட்சமாகக் குறைந்திருக்கிறது. அதேபோல, பால் உற்பத்தியாளர்களுக்குப் பசும் பால் விலை லிட்டருக்கு ரூ.42/–ம், எருமைப் பால் விலை லிட்டருக்கு ரூ.51/–ம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கலப்புத் தீவனத்திற்கு அரசு மானியமாக கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் வழங்க வேண்டும். பால் விலையை உயர்த்தக் கோரி பல்வேறு*

இடங்களில் பால் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *தமிழக அரசுப் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கும், அங்கன்வாடி குழந்தைகளுக்கும் சத்தான ஆவின் பால் பவுடர் வழங்க வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

## 5. அறிவிப்பு

### பேரவையின் மாலை கூட்டநேரத்தில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் பேரவை மாலை கூடும் நாட்களில் மாலை 4–00 மணிக்குக் கூடலாம் என முடிவெடுக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டது. தற்போது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருடைய ஆலோசனைகளையும், கருத்துகளையும் ஏற்று, இக்கூட்டத் தொடரில் பேரவை மாலையில் கூடும் நாட்களில் மாலை 5–00 மணிக்குக் கூடும் என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருடைய கருத்துகளையும் ஏற்று, மாண்புமிகு அமைச்சர்கள் தங்களது பதிலுரையை இன்று மாலை 5–00 மணிக்கு அளிப்பார்கள் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் மாலை 5–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 2–43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*2023 ஏப்ரல் 5*]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் தலைமையில் பிற்பகல் 5–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

## 4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் தொடர்ச்சி (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)**

} *தொடர்ச்சி*

– – –

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பதிலுரை. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் எங்கள் உயிர் மூச்சு; தஹி, தஹி தமிழ்நாட்டிற்கு தஹி—அவர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால்—இங்கே நஹி, நஹி. (மேசையைத் தட்டும் ஒலி) தயிரை நாம் தயிர் என்போம்; பாலை நாம் பால் என்போம். தமிழே எங்கள் உயிர் என்போம். பால் இங்கு* Doodh *ஆகாது; தயிர் இங்கு தஹி ஆகாது. அந்தி வந்தால் நிலவு வரும்; இந்தி வந்தால் கடும் எதிர்ப்பு வரும்*

என்று, முந்தி முழங்கி, இந்தி திணிப்பை உந்தி உதைத்து, பின் வாங்க வைத்து, வென்று காட்டிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி)

என்றும் பால் மாறாது, எம் கொள்கையில் தாகம் தீராது. பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், நிமிர்ந்து நின்று எழுவாய் தலைவர்; ஏற்றமிகு தமிழ்நாடு முதல்வர் நம்முடைய கழகத் தலைவர், என் உயிரினும் மேலான தளபதி அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் உரையை நான் தொடங்குகின்றேன்.

திருவாரூர் தேர் அழகு; செட்டிநாடு சீர் அழகு; வள்ளல் வாழை தார் அழகு; வான்மேகம் வந்தமரும் குமரிக் கடல் வள்ளுவர் சிலை நேர் அழகு; வற்றாத கருத்தூற்று பெரியார் பகுத்தறிவு பேரழகு; பேரறிஞர் அண்ணா சொல்வேல் அழகு; கலைஞர் பேனா கூர் அழகு. (மேசையைத் தட்டும் ஒலி) மேகமழை பொய்த்தாலும், தேகமழை பொய்க்காத, தளபதி உழைப்பின் வியர்வையின் நீர் அழகு. (மேசையைத் தட்டும் ஒலி)

வெள்ளப்பெருக்கில் கண்ணீரும் மூழ்கிப் போக மூச்சு வாசல்தோறும் கண்ணீர் சுவரெழுப்பும், கண்ணீர் வெள்ள பொழுதுகளில் கால்விரல் நகம்கூட நனையாமல் கதவடைத்துக் கிடந்த, விண்ணில் பறந்து வெள்ளம் பார்த்த ஒப்பனை முதல்வர்களிடையில், மார்பளவு நீரில் மூழ்கி, நீந்தி மக்களைக் கரையேற்ற வந்த (மேசையைத் தட்டும் ஒலி) மனிதப் படகான மாணிக்க முதல்வரின் மனித நேய கண்ணின் நீர் அழகு; அவர் காலணியின் சேறழகு. பள்ளிக்கு வரும் பிள்ளைகள் புத்தகப் பையை மட்டுமே பார்த்த தலைவர்களிடையே இரைப்பையையும் பார்த்த ஒரே தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) கடவுளுக்கும் பிரசாதம் வழங்கியதைப்போல, குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்ற அந்தக் குழந்தைத் தெய்வங்களுக்கும் காலை உணவாக வழங்கிய சிற்றுண்டி அழகு; தேர்தல் திருவிழாவில் ஒற்றைச் செங்கல்லால் உறியடித்து, ஆட்டையைப்போட்டு, ஆட்டை முறியடித்து வெற்றிவாகைக்கு பாட்டையைப் போட்டு, கோட்டையைப் பிடித்த தி.மு.க. தாங்கிப் பிடிக்கும் கருப்பு–சிவப்பு கொடிமரத்தின் விசைகுறையா இளைஞர் பட்டாளத்தைத் தட்டித் தட்டி வீறுகொள்ள வைத்த இளமை சிங்கம் மாண்புமிகு உதயாவின் போர் குண அழகு. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு கருவூலத்திற்கே பால் ஊற்றியதற்கு மாறாக, தமிழ்த் தாய்நாடான தாய்க்கே பாலூட்ட வருகின்ற ஆவினின் பால் அழகு. சூரிய

கண்ணில் படர முயலும் ஆரிய புரையை நீக்கும், திராவிட மாடல் ரேசர் அழகு; முத்தமிழறிஞர் கலைஞர் தாசர், தளபதி எங்கள் நேசர். அடியேன், மடியேன் பணிந்து வணங்கி, பாங்குடன் தொடங்குகிறேன் இந்த ஆவடி நாசர். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இயங்கி வரும் பால்வளத் துறை, பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலை நியாயமான விலையில் கொள்முதல் செய்ததோடு, தரமான, தூய பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் வழங்கி, 65 ஆண்டுக் காலமாக தமிழகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது.

பிற்பகல் 5–05

உலக பால் உற்பத்தியில் நம் நாடு 24 சதவிகித பங்களிப்பை வழங்கி, உலகின் மிகப் பெரிய பால் உற்பத்தியாளராக உள்ளது. அதுபோல், இந்திய அளவில் தமிழ்நாடு பால் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. பால் உற்பத்தித் தொழில், ஆண்டு முழுவதும் கிராமப் பொருளாதாரத்தை உயர்த்துவதோடு, ஏழையெளிய விவசாயிகளுக்கு வருமானம் ஈட்டித் தருவதோடு, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கித் தரும் முக்கியத் தொழிலாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு அமைப்புகள்மூலம் கொள்முதல் செய்யப்படும் பால் மற்றும் பால் சார்ந்த பொருட்கள் ஆவின் என்ற பெயரில் நுகர்வோர்களுக்குச் சந்தைப்படுத்தி விற்கப்படுகின்றன. இதன்மூலம், பெருநகரங்களில் மற்றும் சிறுநகரங்களில் உள்ள நுகர்வோரின் பால் தேவையை ஆவின் நிறுவனம் முழுமையாகப் பூர்த்தி செய்கிறது. ஆவின் நிறுவனம் மழை, வெள்ளம், புயல் என எந்தவொரு இயற்கைச் சீற்றங்களையும் புறந்தள்ளி, தமது கிராமப்புற ஏழை விவசாயிகளிடமிருந்து ஆண்டு முழுவதும் எந்தவொரு விடுமுறையும் அளிக்காது, காலை, மாலை என நாள்தோறும் இருவேளைகளிலும் பாலைக் கொள்முதல் செய்வதோடு, ஆண்டு முழுவதும் சீரான பால் கொள்முதல் விலையையும் வழங்குகிறது.

பால் உற்பத்தியாளர்கள் நலன் மட்டுமல்லாது, பால் நுகர்வோர்களின் நலனையும் கருத்தில் கொண்ட பால்வளத் துறையின் ஆவின் நிறுவனமானது, தமது பால் உற்பத்தியாளர்களுக்கு இயற்கைச் சீற்றக் காலங்களில் தங்குதடையின்றி பால்

விநியோகத்தைத் தொடர்ந்து சிறப்பாக அளித்து, மக்களின் மனதில் நீங்காத நற்பெயரைப் பெற்றுள்ளது.

கோவிட்–19 பெருந்தொற்றுக் காலத்தில் பல தனியார் பால் நிறுவனங்கள் தங்களது பால் கொள்முதல் அளவைக் கட்டுப்படுத்தியோ அல்லது முழுமையாகவோ நிறுத்திவிட்டன. ஆனால், தனியார் நிறுவனங்களுக்கு பாலை வழங்கி வந்த விவசாயிகள் பாலை விற்பனை செய்ய முடியாமல் அவதிக்குள்ளான நிலையில் இருந்தபோது, அவ்விவசாயிகளின் நலன் கருதி, ஆவின் நிறுவனம் அவர்களிடமிருந்து அக்கூடுதல் பாலையும் கொள்முதல் செய்து, தமது உற்பத்தியாளர்களின் நலனையும், நுகர்வோரின் நலனையும், பணியாளர்களின் நலனையும் காத்தது; இதற்கான பணிகளைச் சீரிய முறையில் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணை இணையம், இந்திய அளவில் சிறந்த செயல்பாட்டிற்கான இரண்டாம் இடத்திற்கான விருதினை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு வழங்கியுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் 20 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள், கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் வழியாக ஆவினுக்கு பால் வழங்குகின்றார்கள். இதன்மூலம் நாளொன்றுக்கு சுமார் 13 கோடி ரூபாய் அளவில், அதாவது வருடத்திற்கு ஏறத்தாழ 5 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கிராமப் பொருளாதாரத்தில் பணப்புழக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தியப் பொருளாதார மதிப்பில், தனித்தன்மையான உணவுப் பொருளாக பால் 5 சதவிகிதத்திற்கும் மேலாக பங்களிப்பை அளித்து, பால் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. இதன் காரணமாக, கிராமப்புற குறு, சிறு விவசாயிகளின் வாழ்வாதாரம், குறிப்பாக கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்களின் நலனைக் காக்க, இடுபொருட்களின் விலையினைக் கருத்திற்கொண்டு, 5–11–2022 முதல் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் உயர்த்தி, பசும்பாலின் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.32/–லிருந்து ரூ.35/– ஆகவும், எருமைப் பாலின் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.41/–லிருந்து ரூ.44/–

ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றன. அனைத்து பால் உற்பத்தியாளர்களும் பயன்பெற, அவர்களின் பணப் பட்டுவாடா ECS மூலமாக அவர்களது வங்கிக் கணக்கிற்கே நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்களின் நலன்மீது அக்கறை கொண்டுள்ள பால்வளத் துறை, குறைந்த விலையில் கால்நடைத் தீவனம், மானிய விலையில் தாது உப்புக் கலவை, கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதுடன், கால்நடைகளுக்கு மருத்துவ உதவிகளையும், செயற்கைக் கருவூட்டல், அவசரகால சிகிச்சை போன்றவற்றையும் பால் உற்பத்தியாளர்கள் இருப்பிடத்திற்கே சென்று அளித்து, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து, ஆண்டுக்கு இருமுறை கோமாரி நோய்த் தடுப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, கறவை கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஈரோடு தீவன ஆலையில் 150 மெட்ரிக் டன் அளவாக இருந்த உற்பத்தித் திறனை நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் அளவாக விரிவாக்கம் செய்து, தீவன உற்பத்தியை அதிகரித்து, பால் உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலையில் வழங்க வழிவகை செய்துள்ளார்கள். மேலும், கிருஷ்ணகிரியில் புதிதாக நாளொன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட தாது உப்புக் கலவை தொழிற்சாலை துவக்கப்பட்டு, தாது உப்புக் கலவை மானிய விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 5—10

பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் 500 ஏக்கர் பரப்பளவில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய பயிற்சி மற்றும் தீவன விதைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிறுவனத்தால் வழங்கப்பட்டு, பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் மற்றும் தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டிய இலாப தொகையிலிருந்து ரூ.61 கோடி ஊக்கத் தொகையாக சுமார் 2 இலட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நல நிதியின்கீழ் 15—3—2023 வரை 244 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு இறப்பு இழப்பீட்டுத் தொகையாக ரூ.4.81 கோடியும், கல்வி உதவித் தொகையாக 105 நபர்களுக்கு ரூ.17.80 இலட்சம் தொகையும், திருமண உதவித் தொகையாக 47 நபர்களுக்கு ரூ.10.90 இலட்சம் தொகையும், 83 நபர்களுக்கு இறுதிச் சடங்குச் செலவுகள் தொகையாக ரூ.4.15 இலட்சம் உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவிப்பின்படி பால் உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு, பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில்கொண்டு, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டும் திருப்பத்தூர் மாவட்டத்தில் திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டும் புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் துவக்கப்பட்டு, அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை இம்மன்றத்தில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கக்கூடிய பால் உற்பத்தியைக் கருத்தில்கொண்டு, தேவையின்பொருட்டு, புதிதாக ரூ.15 கோடி செலவில் 2 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 4 எண்ணிக்கையிலான மொத்த பால் குளிர்விப்பான் நிலையங்கள் மற்றும் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 89 எண்ணிக்கையிலான மொத்த பால் குளிர்விப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. மேலும் 8 கோடி ரூபாய் செலவில் 592 தானியங்கி பால் சேகரிப்பு அலகுகளும், ரூ.2.36 கோடியில் 380 எண்ணிக்கையிலான செயலாக்க தரவு பால் சேமிப்பு அலகுகளும் நிறுவப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணை அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே உள்ள பால் பண்ணையில் பால் கையாளும் திறனை நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டராக உயர்த்தி விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 300 மெ.டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பணியும் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் துவக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்

ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என 2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது இப்பேரவையில் அறிவிக்கப்பட்டதை நிறைவேற்றும்வகையில் இந்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகத்தின் 6.89 கோடி ரூபாய் மானியத்துடன் நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் அப்பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சென்னை பெருநகரில் 26–9–2022 அன்று அதிகபட்சமாக 15.05 இலட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனையும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின்மூலம் 31–8–2022 அன்று அதிகபட்சமாக 15.80 இலட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனையும் செய்து சாதனை படைத்துள்ளது என்பதையும் இம்மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். சென்னை, அம்பத்தூர் பால் உபபொருட்கள் தொழிற்சாலை மற்றும் மதுரையில் செயல்பட்டுவரும் ice cream தொழிற்சாலை போன்று, சேலம் மற்றும் அதன் அருகாமையில் உள்ள மாவட்டங்களில் நுகர்வோர்களின் ice cream தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, சேலம் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட புதிய ice cream தொழிற்சாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16–8–2022 அன்று காணொலி காட்சிமூலம் துவக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

பால் நுகர்வோரின் தேவையை அறிந்து, ஆவின் நிறுவனம்மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், பொது மக்களின் பயன்பாட்டிற்கு 5 வகையான பால் உபபொருட்கள் அறிமுகம் செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து தற்போது பலாப் பழம் ஐஸ்கிரீம், white chocolate, cold coffee, butter chiplets, basundi, Aavin health Mix, பதப்படுத்தப்பட்ட cheese, baked yoghurt, Aavin Milk biscuit மற்றும் Aavin butter murukku ஆகிய 10 புதிய பால் பொருட்கள் 19–8–2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 5–15

பண்டிகைக் காலங்களில் நுகர்வோர் தேவையறிந்து பால் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகளை அறிமுகப்படுத்தும் ஆவின் நிறுவனம் மூலம் கடந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகையின்போது

அனைத்துப் பகுதிகளிலும், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் தற்காலிக பார்லர்களை அமைத்து, பொதுமக்களுக்கு இந்தச் சிறப்பு இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டன. 2022 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, ஆவின் நிறுவனத்தின்மூலம் சிறப்பு இனிப்பு வகைகள் மற்றும் இதர பால் பொருட்கள் ரூபாய் 116 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டு சாதனைப் படைக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டினைவிட 33 சதவிகிதம் கூடுதலாகும் என்பதை இந்த மன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆவின் பால் பொருட்களின் விற்பனையை அதிகரித்திட ஏதுவாக புதியதாக 250 எண்ணிக்கையிலான பாலகங்கள் துவங்கப்பட்டுள்ளன. புதியதாக 1,300 எண்ணிக்கையிலான விற்பனை முகவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை மற்றும் ஆவின் நிறுவனத்தின் பணியிலிருந்த காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 49 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பணி நியமன ஆணை 16–8–2022 அன்று வழங்கப்பட்டுள்ளது. நுகர்வோருக்குத் தரமான பால் மற்றும் பால் பொருட்கள் வழங்குவதை உறுதி செய்வதற்கு ஆவின் நிறுவனம் எப்போதும் முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதை வலுப்படுத்தும்விதமாக பால் மற்றும் பால் பொருட்களின் தரங்களைப் பரிசோதிக்கவும், அதனை உறுதி செய்யவும் தேசிய பரிசோதனை மற்றும் அளவு திறந்த ஆய்வகங்கள், அங்கீகார வாரியம், அதேபோன்று தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையம், அதேபோன்று அங்கீகாரமற்ற வெளி ஆய்வகங்களில் பால் பரிசோதனை செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநில மைய ஆய்வகம் மாதவரம் பால் பண்ணையில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 16–8–2022 அன்று துவக்கப்பட்டு, பால் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் முதன்மை முதல்வராகத் திகழ்ந்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி, புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 5] [திரு. சா.மு. நாசர்]

## பால்வளம்

## (கால்நடை பராமரிப்பு பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

**1. "கலைஞர் சங்கப் பணியாளர்கள் நல நிதி" உருவாக்கப்பட்டு, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் நலன் பேணப்படும்**

*பால் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் 24,000–க்கும் மேற்பட்ட பணியாளர்களின் நீண்டகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும்வகையிலும், அவர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்த ஏதுவாகவும் "கலைஞர் சங்கப் பணியாளர்கள் நல நிதி"* (Kalaignar Society Employees Welfare Fund) *சங்கப் பணியாளர்கள், சங்கம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பங்களிப்புடன் உருவாக்கப்படும்.*

*சங்கப் பணியாளர் விபத்து காரணமாக இறக்க நேரிட்டால் ரூபாய் 5 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும். மேலும், அதிகபட்சம் இரண்டு குழந்தைகளுக்குத் தலா ரூபாய் 25 ஆயிரம் உயர் கல்வி உதவித் தொகை மற்றும் திருமணத்திற்கு தலா ரூபாய் 30 ஆயிரம் இந்நிதியிலிருந்து வழங்கப்படும்.*

*பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிறுவனத்தின் இணைப்பாகச் செயல்பட்டுவரும் 24,000–க்கும் மேற்பட்ட சங்கங்களின் நலனைப் பேணுவதற்காக எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டுமென்று பாடுபட்டு வந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்புமிக்க நூற்றாண்டை நினைவுகூறும்விதமாக அவர்களின் பெயரில் புதிய திட்டமான 'கலைஞர் சங்கப் பணியாளர்கள் நல நிதி' உருவாக்கப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி, சங்கப் பணியாளர்கள், சங்கம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பங்களிப்புடன் உருவாக்கப்படும். இந்நிதியிலிருந்து சங்கப் பணியாளர்கள் விபத்து காரணமாக இறக்க நேரிட்டால் ரூபாய் 5 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும். மேலும், அதிகபட்சம் இரண்டு குழந்தைகளுக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் உயர் கல்வி உதவித் தொகை மற்றும் திருமணத்திற்குத் தலா ரூபாய் 30 ஆயிரம் இந்நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம். இது நீண்ட நெடுநாள் கோரிக்கை.*

24 ஆயிரம் நபர்களுடைய வாழ்வாதாரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற தொலைநோக்கு எண்ணத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக எங்களுடைய அறிவிப்பில் முதலில் அறிவிக்கின்றோம்.

மேலும், நேரத்தின் அருமைக் கருதி, இதர புதிய அறிவிப்புகளின் தலைப்பை மட்டும் படிக்கின்றேன். புத்தக வடிவில் உள்ள விரிவான பொருளடக்கத்தைத் தாங்கள் அவைக் குறிப்பில் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**2. தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கிக் கடன்மூலம் 2 இலட்சம் புதிய கறவை மாடுகள் வாங்க நபார்டு வங்கியின் கிளை நிறுவனத்தின் (NABSanrakshan) கடன் உத்தரவாதத் திட்ட உதவியுடன் "ஆவின் பால்பெருக்குத் திட்டம்" செயல்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)**

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க ஏதுவாக பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கிமூலம் 2 இலட்சம் புதிய கறவை மாடுகள் கொள்முதல் செய்ய நபார்டு வங்கியின் கிளை நிறுவனத்தின் (NABSanrakshan) கடன் உத்தரவாதத் திட்டம்மூலம் "ஆவின் பால்பெருக்குத் திட்டம்" செயல்படுத்தப்படும்.

பால் உற்பத்தியாளர்கள், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் வங்கி இடையே முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

**3. ஆவின் இணைய பால் பண்ணைகளில் பால் பாக்கெட்டுகள் தயாரித்து கையாளும் பணி ரூபாய் 30 கோடி செலவில் தானியங்கி இயந்திரம் நிறுவுவதன்மூலம் நவீனப்படுத்தப்படும்**

தற்போது மாதவரம், அம்பத்தூர், சோழிங்கநல்லூர் பால் பண்ணைகளின்மூலம் சென்னை பெருநகர நுகர்வோருக்குப் பால் பாக்கெட்டுகள் தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பால் பண்ணைகளில் தானியங்கி இயந்திரங்கள்மூலம் பால் பாக்கெட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டு கையாளப்படும்போது குறித்த நேரத்தில் கால விரயமின்றி பால் பாக்கெட்டுகள் விநியோகிக்கப்படுவது உறுதி செய்யப்படும். மேலும், இதன்மூலம் பால் பண்ணைகளின் உற்பத்தித் திறன்

*அதிகரித்து செலவினங்கள் குறைக்கப்படும்.*

**4. கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் புதிய கால்நடை தீவன ஆலை ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)**

*பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் கலப்புத் தீவன தேவையைப் பூர்த்தி செய்யும்வண்ணம் கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் நாளொன்றுக்கு 200 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய கால்நடை தீவன ஆலை நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் (RIDF) ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.*

*ம. புடையூர் கிராமத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள இந்தத் தீவன தொழிற்சாலையால் இப்பகுதியைச் சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு பெருகுவதுடன் பால் உற்பத்தியும் அதிகரிக்கும்.*

*பிற்பகல் 5–20*

**5. எருமை வளர்ப்பை ஊக்குவிக்க “எருமைக் கன்று வளர்ப்புத் திட்டம்” நடைமுறைப்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)**

*பால் உற்பத்தியில் எருமை மாடுகளின் பங்களிப்பு முக்கியமானது, எருமை மாடு வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் எருமைக் கன்று வளர்ப்பில் ஆர்வமுள்ள பால் உற்பத்தியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு எருமைக் கன்றுகள் வாங்கவும், அவர்களின் எருமைக் கன்றுகளுக்கு விலையில்லா கலப்புத் தீவனம், குடல்புழு நீக்க மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு கன்று ஈனும் காலம் வரை தொடர்ந்து கண்காணிக்கப்படும். “எருமைக் கன்று வளர்ப்புத் திட்டம்”மூலம் எருமைப் பால் உற்பத்தி அதிகரித்து பால் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் வருவாய் பெறுவதன்மூலம் அவர்களின் பொருளாதாரம் மேம்படும்.*

**6. பால் உற்பத்தியாளர்களுக்குத் தாங்கள் வழங்கும் பாலின் தரத்திற்கேற்ப உற்பத்தியுடன்கூடிய ஊக்கத் தொகை வழங்கப்படும்**

*தரமான பாலை வழங்கும் சங்கத்தின் பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்கள் வழங்கும் தரமான பாலிற்கு (கொழுப்பு சத்து 4.3% மற்றும் இதர சத்து 8.2%) லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று கூடுதலாக ஊக்கத் தொகை வழங்கப்படும்.*

இத்தொகை மாதம் ஒருமுறை கணக்கிடப்பட்டு, உற்பத்தியாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். இதன்மூலம் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் தரமான பாலை ஊற்றுவது, சங்க அளவில் பால் தர பரிசோதனை செய்வது, உற்பத்தியாளர்களுக்கு பால் அளவு மற்றும் தரத்திற்கான ஒப்புகைச் சீட்டு (Milk Testing and Spot Acknowledgement) வழங்குவது உறுதி செய்யப்படும்.

**7. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்தல், கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதிப் பணிகள் கணினிமயமாக்கப்படும்**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்ய விண்ணப்பம் பெறுதல், விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல் மற்றும் பதிவு செய்தல் ஆகிய பணிகளோடு, சங்கத்தின் பல்வேறு கட்டடங்களில் மேற்கொள்ளப்படும் கள ஆய்வுகள் மற்றும் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதித் திட்டப் பணிகள் ஆகியவை தேசிய கூட்டுறவு பால் பண்ணைகளின் இணையத்தின் (National Co-operative Dairy Federation of India-NCDFI) நிதியுதவியுடன் கணினிமயமாக்கப்படும்.

**8. ஒரு இலட்சம் பால் உற்பத்தியாளர்கள், சங்கப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட ஒன்றிய பணியாளர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பணியாளர்கள், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்கப் பணியாளர்கள் அடங்கிய ஒரு இலட்சம் நபர்களுக்கு, தேசிய பால் பண்ணை மேம்பாட்டுத் திட்ட நிதி ரூபாய் 4.52 கோடி மதிப்பில் மாதவரம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம், சேலம் மற்றும் மதுரை மாவட்ட ஒன்றிய பயிற்சி மையங்கள்மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

இதன்மூலம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் நவீன தொழில்நுட்பங்களை அறிந்துகொள்வதுடன், உற்பத்தியாளர்கள் மற்றும் பணியாளர்களின் திறன் மேம்படும்.

2023 ஏப்ரல் 5] [திரு. சா.மு. நாசர்]

**9. புதிய தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தும்வண்ணம் “தேசிய பால் பண்ணை வர்த்தகக் கண்காட்சி (National Dairy Trade Expo)” நடத்தப்படும்**

பால் பண்ணைத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய தொழில்நுட்ப வளர்ச்சியைக் காட்சிப்படுத்தும் வகையில் தேசிய அளவிலான பால் பண்ணை வர்த்தகக் கண்காட்சி தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம்மூலம் நடத்தப்படும். பால் பண்ணையின் நவீன தொழில்நுட்பங்கள், பால் பண்ணையில் உள்ள வேலைவாய்ப்புகள், கருத்தரங்கப் பட்டறைகள், கண்காட்சி மற்றும் விற்பனை அரங்குகள் காட்சிப்படுத்தப்படும்.

மாவட்ட ஒன்றியங்கள், மற்ற மாநில பால் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் பால் பண்ணை நிறுவனங்கள் இக்கண்காட்சியில் கலந்துகொண்டு பயனடைவார்கள்.

**10. ஆவின் நுகர்வோர்களுக்கு மாதாந்திர பால் அட்டை (e–Milk Card) விற்பனை மற்றும் புதுப்பிக்கும் பணிகள் கணினிமயமாக்கப்படும்**

ஆவின் நுகர்வோர் வசதிக்காக மாதாந்திர பால் அட்டை பெறுதல் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு, மின்னணு பால் அட்டைகள் (e–Milk Card) அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் நுகர்வோர்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்தபடியே மாதாந்திர பால் அட்டைகளை மின்னணு முறையில் பெற்றுக்கொள்ளலாம். இதன்மூலம் பால் அட்டை அச்சடித்தல், விநியோகித்தல் போன்ற செலவினங்கள் குறைக்கப்படுவதோடு நுகர்வோர்களின் பயணம் மற்றும் நேரம் விரயமாகாமல் எளிதாகப் பால் அட்டை பெறுவது உறுதி செய்யப்படும்.

**11. “ஆவின் ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதி” உருவாக்கப்படும்**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் ஓய்வூதியர்களின் கருணை ஓய்வூதியத்தின் பங்களிப்பிலிருந்து தனி நிதி (Corpus Fund) உருவாக்கி, அதன்மூலம் கருணை ஓய்வூதியர்கள் இறந்தால், அன்னாரது குடும்பத்திற்கு நிதியுதவி வழங்க “ஆவின் ஓய்வூதிய குடும்ப பாதுகாப்பு நிதி” உருவாக்கப்படும்.

**12. பால் உற்பத்தியாளர்களின் 5 இலட்சம் கறவைகளுக்கு 50% மானியத்தில் தேசிய கால்நடை காப்பீடுத் திட்டத்தின்மூலம் காப்பீடு செய்யப்படும்**

*கிராமப்புறங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகள் திடீரென்று இறக்கும்போது, அக்கறவை மாடுகள்மூலம் பால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கின்ற தொடர் வருமானம் நின்று விடுவதால், பால் உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது.*

*இப்பொருளாதார இழப்பினை ஈடு செய்யும்பொருட்டு, நடப்பாண்டில் 5 இலட்சம் கறவைகளுக்கு 50 சதவிகித மானியத்தில் காப்பீடு செய்யப்படும்.*

**13. "தமிழ்நாடு பால் உற்பத்தி மேலாண்மைக் கொள்கை" உருவாக்கப்படும். மேலும், "தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி ஒழுங்குமுறை மற்றும் பால் கூட்டுறவுச் சட்டம்" அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்**

*தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கென "தமிழ்நாடு பால் உற்பத்தி மேலாண்மைக் கொள்கை" உருவாக்கப்படும். தமிழ்நாட்டில் பால் கொள்முதலை வரைமுறைப்படுத்தவும், உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், வளர்ந்துவரும் தரக் கட்டுப்பாடு தொழில்நுட்பங்களைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்தவும், பால் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடையாமல் இலாபகரமாக இயங்குவதை உறுதி செய்யும் வகையிலும் "பால் உற்பத்தி ஒழுங்குமுறை மற்றும் பால் கூட்டுறவுச் சட்டம்" இயற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**14. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விதமாக சூரிய சக்தி மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு மாற்று மின்சாரமாகப் பயன்படுத்தப்படும்**

*இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் உள்ள காலி இடங்கள் மற்றும் கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய சக்தி மின் உற்பத்தித் தகடுகள் பொருத்தப்பட்டு, உற்பத்தியாகும் மின்சாரம் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும். மேலும், இதர அரசு மற்றும் தனியார் துறைமூலம் தயாரிக்கப்படும் சூரிய சக்தி*

*2023 ஏப்ரல் 5] [திரு. சா.மு. நாசர்]*

*மற்றும் காற்றாலை சக்தி மின்சாரம் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் உள்ள பால் பண்ணைகளுக்குப் பயன்படுத்தப்படும். இதன்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதோடு பசுமை இல்ல வாயுவான $CO_2$ குறைக்கப்பட்டு, புவி வெப்பமயமாதலைத் தடுக்க வழிவகை செய்யப்படும்.*

**15. புதிய திட்டங்களைச் செயல்படுத்த ஏதுவாக ஆவின் நிறுவனம்மூலம் புதிய பிரிவு 8 நிறுவனம் உருவாக்கப்படும்**

*ஆவின் இணையம், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை, வளர்ந்துவரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மேம்படுத்துவது, பல்வேறு நிறுவனங்களிடமிருந்து நிதி பெறுவது, துறை சார்ந்த பல்வேறு பணிகளை மேற்கொள்வது, தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவது போன்ற பணிகளை மேற்கொள்ள, மற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் புதிய பிரிவு 8 நிறுவனம் உருவாக்கப்படும்.*

**16. புதிய சாக்லேட் உற்பத்தி அலகு அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் நிறுவப்படும்**

*நுகர்வோர்களிடையே கோகோ பீன்ஸ் மூலப்பொருளுடன் பால் பவுடர் சேர்ந்த சாக்லேட்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு புதிய சாக்லேட் உற்பத்தி அலகு, இந்திய அரசின் உணவு பதப்படுத்தும் துறையின் 35 சதவிகித மானியத்தில் அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் நிறுவப்படும். இதன்மூலம் மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்கள் விற்பனை அதிகரிக்கும்.*

**17. புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 25,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பாக்கெட் உற்பத்தி செய்யும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

*தற்சமயம் கள்ளக்குறிச்சி மாவட்ட நுகர்வோர்களின் தினசரி தேவையினைப் பூர்த்தி செய்ய பால் பாக்கெட்டுகள் விழுப்புரம் ஒன்றியத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.*

*புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்ட ஒன்றியத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக நாளொன்றுக்கு*

*25,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பாக்கெட் உற்பத்தி செய்யும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.*

**18. ராணிப்பேட்டை மாவட்டம், கொடக்கல் பால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் 25,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பாக்கெட் உற்பத்தி செய்யும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

*தற்சமயம் ராணிப்பேட்டை மாவட்ட நுகர்வோர்களின் தினசரி தேவையினைப் பூர்த்தி செய்ய பால் பாக்கெட்டுகள் வேலூர் பால் பண்ணையிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.*

*ராணிப்பேட்டை மாவட்ட நுகர்வோர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், கொடக்கல் பால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் நாளொன்றுக்கு 25,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பாக்கெட் உற்பத்தி செய்யும் வசதி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.*

**19. சூரிய சக்திமூலம் பால் கேன்களைக் குளிர்விக்கும் இயந்திரங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க அளவில் நிறுவப்படும்**

*மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலினை அருகிலுள்ள பால் குளிர்விப்பு மையங்களுக்கு எடுத்துச் செல்ல நீண்ட நேரம் ஆகிறது. பாலின் காப்பு நேரம் மற்றும் தரம் அதிகரிக்க பாலை உடனடியாகக் குளிர்விக்கத் தேவையான சூரிய சக்திமூலம் இயங்கும் பால் கேன்கள் குளிர்விக்கும் இயந்திரங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க அளவில் நிறுவப்படும்.*

**20. ஈரோடு சத்தியமங்கலத்தில் பசுந்தீவன குச்சிகள் (Green Fodder Pellets) தயாரிக்கும் ஆலை ரூபாய் 6.75 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

*பசுந்தீவனம் அதிக அளவில் உற்பத்தியாகும் காலத்தில் அவற்றைப் பதப்படுத்தி வைக்க வேண்டியது அவசியம். பற்றாக்குறை காலங்களில் கறவை மாடுகளின் பசுந்தீவன தேவையைப் பூர்த்தி செய்ய புதிய தொழில்நுட்பம்மூலம் பசுந்தீவன*

குச்சி (Green Fodder Pellet) தயாரிக்கும் ஆலை சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) நிதியின்மூலம் ரூபாய் 6.75 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். இதன்மூலம் உபரியாக உற்பத்தியாகும் காலத்தில் கிடைக்கும் பசுந்தீவனத்தைப் பதப்படுத்தி தேவைப்படும் காலங்களில் பயன்படுத்த இயலும்.

**21. தஞ்சாவூர், சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பசுந்தீவன புல் விதைகள் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்**

ஆவின் பால் உற்பத்தியாளர்களுக்குப் பசுந்தீவன உற்பத்திக்காகத் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்ய முதல் கட்டமாக தஞ்சாவூர், சேலம் மற்றும் ஈரோடு ஒன்றியங்களிலும், இரண்டாவது கட்டமாக மற்ற ஒன்றியங்களிலும் தர முத்திரையிடப்பட்ட விதைகள்/சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்படும்.

இணையம் மற்றும் ஒன்றிய நிதி ரூபாய் 25 இலட்சம் செலவில் பசுந்தீவன விதை உற்பத்தி செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.

**22. நீலகிரியில் உள்ள ஆவின் உறைவிந்து உற்பத்தி நிலையத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 5.46 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் இனவிருத்தித் தேவைக்காக நீலகிரி ஆவின் உறைவிந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் உறைவிந்து குச்சிகள் பயன்படுத்தப்படுகின்றன.

கூடுதல் தேவையினைப் பூர்த்தி செய்ய இந்நிலையத்தின் உறைவிந்து குச்சிகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் நோக்கில் ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) நிதி ரூபாய் 5.46 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

**23. நீலகிரி மாவட்ட ஒன்றிய பால் பண்ணை புனரமைப்புப் பணிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்**

மலை மாவட்டமான நீலகிரியில் உள்ள பால் உற்பத்தி மற்றும் விற்பனை கட்டமைப்பு வசதி மேம்படுத்துவதன் அவசியத்தைக் கருதி, சிறப்புப் பகுதி வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து (SADP) நீலகிரி மாவட்ட ஒன்றியத்தின் நிர்வாக அலுவலகம் மற்றும் பால் பண்ணைக் கட்டடங்கள் ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில்

புனரமைக்கப்படும். மேலும், ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டில் ஐஸ்கிரீம் விற்பனையை அதிகரிக்க குளிர்சாதன வாகனம் கொள்முதல் செய்து தரப்படும்.

**24. தூய பால் உற்பத்தியை உறுதி செய்ய தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்ட நிதிமூலம் ரூபாய் 8.75 கோடி மதிப்பீட்டில் கிராமப்புற ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும்**

கிராமப்புறத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் தரத்தை உடனுக்குடன் ஆய்வு செய்து தூய பால் உற்பத்தியை உறுதி செய்ய தேசிய பால் வள மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ரூபாய் 8.75 கோடி மதிப்பீட்டில் தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் உள்ளிட்ட கிராமப்புற ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தினால் பால் உற்பத்தியாளர்களுக்குப் பாலின் தரத்திற்கேற்ற விலை கிடைக்கவும், பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் மேம்படவும், நுகர்வோர்களுக்குத் தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்கவும் வழிவகை செய்யப்படும்.

**25. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 100 சங்கக் கட்டடப் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும்**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியுதவியுடன், 50 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்த ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

மேலும், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில், 100 சங்கக் கட்டடங்களுக்கு "ஒருங்கிணைந்த சங்கக் கட்டட நிதி"—யிலிருந்து புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**26. தரமான பால் உற்பத்தியை ஊக்குவிக்கும்பொருட்டு, சிறந்த பால் உற்பத்தியாளர்கள், சங்கச் செயலாளர்கள் மற்றும் தொகுப்பு பால் குளிர்விப்பு மைய செயலாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும்**

சங்கங்களில் தரமான பால் உற்பத்தியை ஊக்குவிக்கும்பொருட்டு, மாவட்ட ஒன்றியங்கள்தோறும் சிறப்பாகச் செயல்படுகின்ற சிறந்த

பால் உற்பத்தியாளர்கள், சங்கச் செயலாளர்கள் மற்றும் தொகுப்பு பால் குளிர்விப்பு மைய செயலாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ரூபாய் 2 கோடி அளவில் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

**27. நுகர்வோர்களின் தேவைக்கேற்ப புதிய பால் வகைகள் மற்றும் பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்படும்**

பெருகிவரும் நுகர்வோர்களின் தேவையைக் கருத்தில்கொண்டு ஆவின் அவ்வப்போது புதிய பால் வகைகள் மற்றும் பால் பொருட்களை அறிமுகப்படுத்தி வரவேற்பைப் பெற்று வருகிறது. இவ்வாண்டும் நுகர்வோர் தேவைக்கேற்ப புதிய பால் வகைகள் மற்றும் பால் பொருட்கள் ஆவின் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்படும்.

**28. ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனைக்கு இணையவழி விற்பனை வசதி (Online sales) ஏற்படுத்தப்படும்**

நுகர்வோர்கள் தங்களுக்குத் தேவையான பால் மற்றும் பால் பொருட்களை உடனுக்குடன் தங்களது இருப்பிடத்தில் இருந்தபடியே பெற்றுக்கொள்ளவும், ஆவின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்திலும், செயலி மற்றும் இணையதளம் உருவாக்கப்படும். இவ்வசதி சென்னை மற்றும் இதர மாநகரங்களில் முதற்கட்டமாகச் செயல்படுத்தப்படும். இணையவழி விற்பனை வசதி, செயலி மூலமாகவும், இணையதளம் மூலமாகவும் ஏற்படுத்தப்படும்.

**29. காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக “காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்” உருவாக்கப்படும்**

காஞ்சிபுரம்–திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை விவகார எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட விவகார எல்லைகளில் செயல்பட்டுவரும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டும், காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டும் புதியதாக மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்.

**30. திருவாரூரை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக "திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்" உருவாக்கப்படும்**

*தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களை விவகார எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.*

*திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவகார எல்லையில் செயல்பட்டுவரும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டும். திருவாரூரை தலைமையிடமாகக் கொண்டும் புதியதாக மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்.*

**31. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களில் 50 புதிய நவீன பாலகங்கள் ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டிலும், சென்னை மாநகரில் 30 ஏவிளம் பாலகங்கள் புனரமைப்புப் பணிகள் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்**

*ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் தலா ரூபாய் 5 இலட்சம் செலவில் மொத்தம் ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் 50 எண்ணிக்கையில் பாலகங்கள் அமைக்கப்படும். சென்னை மாநகரில் 30 பாலகங்கள் மொத்தம் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.*

**32. பால்வளத் துறையில் உள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கென "பால் கூட்டுறவு ஒன்றியம்" (Dairy Co–operative Union) அமைக்கப்படும்**

*கூட்டுறவுத் துறையின்கீழ் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்பட்டு, இலாபத்தில் செயல்படும் கூட்டுறவு அமைப்புகள் தங்களது இலாபப் பிரிவினையில் ஒரு குறிப்பிட்ட, பங்கை கூட்டுறவு கல்வி, பயிற்சி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி என ஒதுக்கீடு செய்கின்றன. இந்நிதியின்மூலம் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்குப் பல்வேறு பயிற்சிகளும், கூட்டுறவுச் சங்கங்களை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு உதவிகளும் செய்து வருவதைப்போன்று, பால்வளத் துறையில் உள்ள பால்*

*கூட்டுறவுச் சங்கங்களுக்கென "பால் கூட்டுறவு ஒன்றியம்" (*Dairy Co-operative Union*) ஏற்படுத்தப்படும்.*

**33. மகளிர் தொழில்முனைவோர்களுக்காகப் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்க சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 2.58 கோடி செலவில் மேம்படுத்தப்படும்**

*மகளிர் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும்பொருட்டு பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளான தூய பால் உற்பத்தி, தீவன மேலாண்மை, செயற்கை முறை கருவூட்டல் ஆகிய பயிற்சிகளை வழங்குகின்ற சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், மகளிருக்கு தங்கும் வசதியுடன்கூடிய விடுதிகள் ரூபாய் 2.58 கோடி செலவில் ராஷ்டிரிய கோகுல் மிஷன்மூலம் (*RGM*) கட்டித் தரப்படும்.*

**34. நீண்டகால அடிப்படையில் ஆவின் நுகர்வோர்களின் எண்ணிக்கையினை விரிவுபடுத்தவும், பால் பொருட்களின் விற்பனையினை அதிகரிக்கச் செய்யவும் நுகர்வோர் ஊக்குவிப்புத் (Loyalty) திட்டங்கள் செயல்படுத்தப்படும்**

*ஆவின் பால் பொருட்களைத் தொடர்ந்து வாங்கும் நுகர்வோர்களுக்கு அவர்கள் வாங்குகின்ற மதிப்பிற்கு ஏற்றவாறு வெகுமதி புள்ளிகள் வழங்கப்பட்டு, அப்புள்ளிகளுக்கு உரிய மதிப்பில் சலுகைகள் வழங்கும் வகையில் நுகர்வோர் ஊக்குவிப்புத் திட்டம் (*Loyalty Programme*) செயல்படுத்தப்படும்.*

*மேலும், நுகர்வோர் தொடர்புத் திட்ட முகாம்கள் நடத்தி, அதிகமான பால் மற்றும் பால் பொருட்கள் வாங்கிய நுகர்வோர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பரிசுகள் (*Gift hampers*) வழங்கப்படும்.*

*பிற்பகல் 5—25*

**35. கறவை மாடு வளர்ப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்த கன்று பேரணிகள் நடத்தப்படும்**

*கன்று பேரணிகள் நடத்துவதன்மூலம் பால் உற்பத்தியாளர்களிடையே அறிவியல் பூர்வமாக கன்று வளர்ப்பு*

குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். நன்றாகப் பராமரிக்கின்ற கன்றுகளின் உரிமையாளர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்படும். அனைத்து கன்றுகளுக்கும் உடல் எடை அடிப்படையில் குடல்புழுநீக்க மருந்து அளிக்கப்படும். மாவட்ட ஒன்றியங்களில் 50 எண்ணிக்கையில் கன்றுகள் பேரணிகள் ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) திட்டத்தின்மூலம் ரூபாய் 10 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

**36. கறவைகளின் இனப்பெருக்க திறனை மேம்படுத்த சினை முட்டை ஒருங்கிணைப்பு (ovulation synchronization) தொழில்நுட்பம் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்**

20,000 பசுக்கள் மற்றும் எருமையினங்களை சினை முட்டை வெளியேறும் நேரத்தினை ஒருங்கிணைக்கும் தொழில்நுட்பத்திற்கு உட்படுத்தி பாலினம் பகுக்கப்பட்ட (Sex sorted semen) உறைவிந்து குச்சிகளைப் பயன்படுத்தி, செயற்கைமுறை கருவூட்டல் செய்வதன்மூலம் கிடாரி கன்றுகள் அதிக எண்ணிக்கையில் பிறக்கும். நீண்டகால அடிப்படையில் பால் உற்பத்தி அதிகரிக்கும். இதன்மூலம் 20,000 பால் உற்பத்தியாளர்கள் பயனடைவர். ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) மூலம் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் திட்டம் அமல்படுத்தப்படும்.

**37. நீலகிரி மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை மானிய விலையில் வழங்கப்படும்**

நீலகிரி மாவட்டத்தில் மேய்ச்சல் நிலப்பரப்புக் குறைந்ததால் கறவை மாடுகளின் தீவனத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை அளிப்பது அத்தியாவசியமாகிறது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (SADP) நிதிமூலம் ரூபாய் இரண்டு கோடி மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பால் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை மானிய விலையில் வழங்கப்படும்.

**38. கறவை இனங்களில் மடி நோய் தடுப்பு மற்றும் புற ஒட்டுண்ணி தடுப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்**

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளை மடிநோய் மற்றும் புற ஒட்டுண்ணிகள்மூலம் தோல் கழலை நோய் மற்றும் இரத்த

2023 ஏப்ரல் 5] [திரு. சா.மு. நாசர்]

சோகை நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் மடிநோய் மற்றும் புற ஒட்டுண்ணி தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இவ்விரு நோய்களைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தடுப்பு மருந்துகள் அளிக்கும் இத்திட்டத்தின்மூலம் பால் உற்பத்தி குறைவு தடுக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள்.

**39. கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க நுண்ணூட்ட சத்துக் கலவை (Micro Nutrients) வழங்கப்படும்**

கறவை மாடுகளின் செரிமான சக்தியினை அதிகரிக்க அதன் பெருவயிற்றில் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையினை உயர்த்த நுண்ணூட்டச் சத்துக்கலவை வழங்குவது அவசியமாகும். நுண்ணூட்டச் சத்துக்கலவையின் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை பால் உற்பத்தியாளர்களிடம் ஏற்படுத்த 20,000 கறவை மாடுகளுக்கு ரூபாய் 60 இலட்சம் செலவில் நுண்ணூட்டச் சத்துக்கலவை வழங்கப்படும்.

**40. பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் இதர பால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு பயணம் அழைத்துச் செல்லப்படுவர்**

10,000 எண்ணிக்கையிலான பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்கப் பணியாளர்களை ஊக்குவிக்கும்பொருட்டு ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) நிதியினைப் பயன்படுத்தி பிற பால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு (Exposure visit) அழைத்துச் செல்லப்படுவர். பிற கூட்டுறவு நிறுவனங்களில் கடைபிடிக்கப்படும் சிறந்த பால் பண்ணை நடைமுறைகளைத் தெரிந்துகொள்ள இப்பயணம் உதவும்.

**41. பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் மேம்பாட்டிற்காக "ஒருங்கிணைந்த கால்நடை மேம்பாட்டு நிதி" உருவாக்கப்படும்**

சங்க அளவில் உள்ள உற்பத்தியாளர்களின் கால்நடை மேம்பாட்டுப் பணிகளான தடுப்பூசி, காப்பீடு, இனவிருத்தி, நோய் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் உற்பத்தி காலம் கடந்த கறவை மாடுகளுக்கு மாற்றுக் கறவைகள் வழங்குவதற்காக "ஒருங்கிணைந்த கால்நடை மேம்பாட்டு நிதி" உருவாக்கப்படும்.

தொடக்க பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களில் ஒதுக்கீடு செய்யப்படும் கால்நடை மேம்பாட்டு நிதி ஒருங்கிணைக்கப்பட்டு உற்பத்தியாளர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகச் செலவிடப்படும்.

**42. சூரிய சக்திமூலம் தண்ணீரை சூடேற்றும் கருவி 277 எண்ணிக்கையில் தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

தொகுப்பு குளிர்விப்பு மையங்களில் பாலை சேமிக்கின்ற கலன், பால் கேன்கள், இதர உபகரணங்களைச் சூடான நீரில் (Sanitizer) இரசாயனம் மற்றும் சோப்புத் தூளைக் கலந்து சுத்தப்படுத்தும்போது தூய்மை விகிதம் அதிகமாகிறது.

இதனால் தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களில் கொள்முதல் செய்கின்ற ஆரம்ப பாலின் காப்பு நேரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. மேலும், மின்நுகர்வு கணிசமாகக் குறைவதால் மாவட்ட ஒன்றியங்களின் மின் கட்டணம் செலுத்தும் தொகை சேமிக்கப்படும்.

**43. பால் உற்பத்தித் திறன் பதிவு திட்டம் (Field Performance Recording Programme) மேலும் 18 மாவட்ட ஒன்றியங்களுக்கு விரிவாக்கம் செய்யப்படும்**

தற்போது 9 மாவட்ட ஒன்றியங்களில் கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறன் பதிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மேலும் 18 மாவட்ட ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் கூட்டுறவு வரம்பில் உள்ள அனைத்து கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறன் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, பால் உற்பத்தித் திறன்மிக்க கறவை மாடுகளைத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்படும். பால் உற்பத்தித் திறன்மிக்க கறவை மாடுகளுக்குச் சிறந்த மரபு திறனுள்ள காளைகளின் விந்துமூலம் இனப்பெருக்கம் செய்யும்போது, மேலும் திறன் மரபியல்மிக்க புதிய கறவைகள் மற்றும் காளைகள் உற்பத்தி செய்யப்படும். இதன்மூலம் பால் உற்பத்தியினைத் துரித காலத்தில் பெருக்க இயலும்.

2023 ஏப்ரல் 5] [திரு. சா.மு. நாசர்]

**44. கறவை மாடுகளில் இனவிருத்தித் திறன் சார்ந்த தரவுகளைச் சேகரித்து ஆய்வு செய்ய "தரவு ஆய்வகம்" (Data lab) ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்**

*ஆவின் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கறவை மாடுகளின் பால் உற்பத்தி, இனப்பெருக்கம், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கறவை மாடுகள் காப்பீடு பற்றிய விவரங்களின் தரவுகளைச் சேகரித்து, ஆய்வு செய்து, மேம்பாடு செய்வதற்காக ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் "தரவு ஆய்வகம்" (Data lab) நிறுவப்படும். இந்த ஆய்வகத்தின் முடிவுகள் கறவை மாடுகளின் மரபுத் திறன் மற்றும் இதர செயல்பாடுகளின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.*

**45. பால்வளத் துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் அலுவலகப் பணிகள் கணினிமயமாக்கப்படும் (e–office)**

*பால்வளத் துறையில் ஆணையர் அலுவலகம், மாவட்ட அளவில் துணை பதிவாளர் (பால்வளம்) அலுவலகங்கள், தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்படுவதன் (e–office) மூலம் அலுவலகப் பணிகளின் துரிதமும், வெளிப்படைத் தன்மையும் உறுதி செய்யப்படும். இத்திட்டம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) மூலம் செயல்படுத்தப்படும்.*

**46. பால் உற்பத்தியின் பல்வேறு கூறுகளை இளைய சமுதாயம் அறிந்துகொள்ள ஏதுவாக "மாதவரம் பால் பண்ணை பூங்கா மற்றும் அருங்காட்சியகம்" அமைக்கப்படும்**

*தமிழ்நாட்டில் பால்வளத் துறையின் துவக்கம், வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த விளக்கப் படங்கள், காட்சிப் பொருட்கள் உள்ளடக்கிய அருங்காட்சியகம், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும்வண்ணம் மாதவரத்தில் "பால் பண்ணை பூங்கா மற்றும் அருங்காட்சியகம்" அமைக்கப்படும்.*

[திரு. சா.மு. நாசர்] [2023 ஏப்ரல் 5

**47. ஆவின் களப் பணியாளர்களை ஒருங்கிணைத்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் இடுபொருள் சேவைகள் மேம்படுத்தப்படும்**

*பால் கூட்டுறவு அமைப்புகளில் பற்று கொண்டுள்ள பால் உற்பத்தியாளர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு அவர்களின் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்ய, மேம்பட்ட தொழில்நுட்ப விரிவாக்கச் சேவைகளான கால்நடை சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சை வசதி, இனப்பெருக்க வசதி, கலப்புத் தீவன மற்றும் பசுந்தீவன உற்பத்தி, நோய் தடுப்பு வசதி, கால்நடை காப்பீடு வசதிகளைத் தொடர்ந்து வழங்குவது அவசியம்.*

*பால் உற்பத்தியாளர்களுடன் நேரடித் தொடர்பில் உள்ள கிராம நல ஊழியர்கள், விரிவாக்க அலுவலர்கள், பால்வளத் துறை முதுநிலை ஆய்வாளர்கள் மற்றும் சார்பதிவாளர்களை ஒருங்கிணைத்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடுபொருள் உள்ளிட்ட சேவைகள் தொய்வின்றி பெறும் வகையில் விரிவாக்கப் பணிகள் சீரமைத்து கண்காணிக்கப்படும்.*

**48. பசுந்தீவன உற்பத்தியை மேம்படுத்த தேசிய விதைக் கழகத்தின் (National Seeds Corporation) விநியோக உரிமம் பெறப்படும்**

*தேசிய விதைக் கழகத்தின் தரமான தீவன விதைகளை ஆண்டு முழுவதும் இணையம் மற்றும் அனைத்து மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் வழியாக பால் உற்பத்தியாளர்களுக்குவிற்பனை செய்வதன்மூலம் பசுந்தீவனங்களை வருடம் முழுவதும் உற்பத்தி செய்ய முடியும். பசுந்தீவனங்களைத் தொடர்ந்து கறவை மாடுகளுக்கு வழங்குவதன்மூலம் பால் உற்பத்திச் செலவு குறையும். தீவன விதைகளை விற்பனை செய்வதன்மூலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் இணையத்திற்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 ஆம் ஆண்டு பதவியேற்ற நாள்முதல் பால் உற்பத்தியாளர்கள் பயனடையவும், ஆவின் நிறுவனத்திற்கு உறுதுணையாக இருந்து அந்நிறுவனம் வளர்ச்சியடையவும், ஏழையெளிய மக்கள் பயன்பெறும்வகையிலும் பல்வேறு அறிவிப்புகள் மற்றும் திட்டங்களுக்கு அனுமதியளித்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இத்தருவாயில் துறையின்*

2023 ஏப்ரல் 5] [திரு. சா.மு. நாசர்]

சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில் உறுதியளித்ததன்படி தான் பதவியேற்ற முதல்நாளே ஆவின் பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் குறைத்து, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களின் நம்பிக்கையைப் பெற்று முதல்வரின் முதல்வராகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறங்களில் செயல்பட்டுவரும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த இடுபொருட்களின் விலையைக் கருத்தில்கொண்டு பால் உற்பத்தியாளர் நலன்களைக் காக்கவும், கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தவும் பால் கொள்முதல் விலையை 5—11—2022 முதல் லிட்டருக்கு மூன்று ரூபாய் உயர்த்தி, பால் உற்பத்தியாளர்கள் பயன்பெற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள். 2021 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, அரசு சார்பு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இனிப்புகளை ஆவின் நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 2.16 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும்வகையில் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட 21 பொருட்கள் அடங்கிய சிறப்புப் பொங்கல் தொகுப்பில், ஆவின் நிறுவனத்தின் 100 கிராம் நெய்யும் வழங்கப்படும் என்ற அறிவிப்பு, ஆவினுக்கு 121 கோடி ரூபாய் விற்பனைக்கு வழிவகுத்தது. ஆவின் நிறுவனங்களில், பண்டிகைக் காலங்களில் விற்பனையை அதிகரிக்கவும் பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உறுதுணையாக உள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இப்பேரவையில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இத்துறையின் அறிவிப்புகளுக்கு அனுமதி வழங்கியும், நிதி வசதி ஏற்படுத்திக் கொடுத்து, பால் உற்பத்தியாளர்களுக்கும், ஆவின் நிறுவன வளர்ச்சிக்கும் ஆதரவாகவுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும், மீண்டும் என் நன்றியை இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. சா.மு. நாசர்] [2023 ஏப்ரல் 5

மேலும், ஆவின் நிறுவன வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கும் அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, I.A.S., அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் செயலாளர்கள் திரு. டி. உதயசந்திரன், I.A.S., அவர்களுக்கும், திரு. எம்.எஸ். சண்முகம், I.A.S., அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், I.A.S., அவர்களுக்கும், நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. என். முருகானந்தம், I.A.S., அவர்களுக்கும், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. A. கார்த்திக், I.A.S., அவர்களுக்கும், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டு ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் Dr. N. சுப்பையன், I.A.S., அவர்களுக்கும், பால்வளத் துறையின் பணியாளர்கள் மற்றும் ஆவின் நிறுவன பணியாளர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 5–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள், விவசாயிகள் மற்றும் பால் நுகர்வோர்கள் இடையே பாலமாய் விளங்கும், பால்வளத் துறையானது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறது. மக்கள் வாழ்வில் நீங்கா இடம் பெற்றிருக்கும் சத்தான உணவான பாலை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்துவரும் பால்வளத் துறையின் சார்பாக, மூன்றாவது முறையாக 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை சமர்ப்பித்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நீதிநெறி தவறாமல் சபையைக் கண்ணியத்துடன் நடத்திவரும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை குறித்த மானியக் கோரிக்கையின்மீது மாமன்ற உறுப்பினர்கள் 144 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றிற்குப் போதுமான விளக்கங்களை எனது பதிலுரையில் தெரிவித்திருப்பதாகக் கருதுகிறேன். இருப்பினும் விடுபட்டுப்போன வெட்டுத் தீர்மானங்கள் குறித்து துறையுடன் ஆய்வு செய்து,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கூடுமானவரையில் அவற்றை நிறைவேற்றுவேன் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

**திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். தற்போது தமிழகத்தில் நடைபெற்று வருகின்ற பால் உற்பத்தியாளர்களுடைய போராட்டத்தைப் பற்றி எந்தவிதமான கருத்தும் இங்கே பதிய வைக்கவில்லை. ஊடகங்களிலே சில தினங்களாக பால் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக, ஆவின் நிறுவனம் ** (மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, அது வேண்டாம். அதை நீக்கிடுவோம். ** சொல்வது உங்களிடம் ஆதாரம் இருக்கிறதா என்று தெரியவில்லை. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பால் தட்டுப்பாடு, போராட்டம் என்று பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார்கள்.*

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம். ஒன்று, இரண்டு உறுப்பினர்கள் கேட்பார்கள் சேர்த்து பதில் சொல்லிவிடுங்கள்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்ற பால் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு, இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தட்டுப்பாடு இருக்கிறதா என்று தெரியவில்லையே! பால் விலையை உயர்த்தச் சொல்லித்தான் போராட்டம் நடக்கிறது. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் நீங்கள் இதற்கும் சேர்த்து பதில் சொல்லிவிடுங்கள்.

**திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே, பாரம்பரிய கால்நடையான எருமை மாடு வளர்ப்பில் தமிழக அரசு கூடுதல் கவனம் எடுக்கவேண்டும்; ஒரு சமூக தாழ்வின் அடிப்படையில் எருமை மாடு வளர்ப்பு என்பது குறைந்து வருகிறது என்கிற கருத்தை முன்வைத்தோம். (மணியடிக்கப்பெற்றது) அதைக் கனிவோடு பரிசீலித்து மிகச் சிறந்த முறையிலே எருமைக் கன்று வளர்ப்புத் திட்டம் என்கிற திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தியமைக்காகத் தமிழக அரசிற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்கு ஒரு சின்ன அறிவிப்பு. மாண்புமிகு அமைச்சர் கொஞ்சம் இருங்கள். எல்லா மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரை சொன்னபிறகு, உறுப்பினர்களைப் பேச வைத்துவிட்டு, பதில் சொல்லிவிடலாம். கொஞ்சம், ஒரு நிமிடம் அமைதியாக இருங்கள். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் இதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பால் பற்றாக்குறையைப் பற்றி கூறினார்கள். அவர் ஏற்கெனவே பால்வளத் துறையினுடைய தலைவராக இருந்தவர். அவருக்கு இதில் உள்ள நெளிவு, சுளிவு நன்றாகத் தெரியும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் இந்த நான்கு மாதங்களை lean season என்று சொல்வார்கள். கால மாறுபாட்டால் பால் உற்பத்தி இயற்கையாகவே குறையும்.

அது இங்கே மட்டுமில்லை, இந்தியா முழுவதும் உள்ள நிலை. ஆனால் இப்போதுள்ள சூழ்நிலை என்னவென்றால், அகில இந்தியா முழுவதும் lumpy skin disease என்று சொல்லக்கூடிய ஒருவிதமான அரிய வகை நோய். . .

பிற்பகல் 5–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலுக்கு தட்டுப்பாடா, இல்லையா என்று கேட்டார்கள். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** அந்த அரிய வகை நோய் ஏற்பட்ட காரணத்தால், காஷ்மீரிலிருந்து கர்நாடகம் வரை மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களான தெலங்கானா, ஆந்திரா, கேரள மாநிலங்கள் முழுவதுமாக அந்த நோய் தாக்கப்பட்ட காரணத்தால், பல இலட்சம் மாடுகளுக்கு சுரப்பு நின்றுவிட்டது; பல இலட்சம் மாடுகள் இறந்துவிட்டன. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணத்தால், தமிழகத்தில் எந்தவொரு மாட்டுக்கும் அந்த மாதிரியான நோய் வரவேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், கர்நாடக எல்லையை ஒட்டியுள்ள தமிழக மாவட்டமான தருமபுரியில் ஒருசில கால்நடைகளுக்கு அந்த நோய் வந்தபோது, உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கால்நடைகளின் உயிர் காக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக வட மாநிலங்களில் ஏற்பட்ட பால் பற்றாக்குறையினை நிறைவு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் எல்லையையொட்டியுள்ள தமிழக மாவட்டங்களிலிருந்து ஒட்டுமொத்தமாக பாலை கொள்முதல் செய்கிறார்கள். அதனால், சிறு தடை ஏற்பட்டது. அது ஒருபுறம். Lean season என்பது மறுபுறம். அந்தந்த மாநிலங்களினுடைய பால் தேவையை நிறைவு செய்வதற்காக நம் மாநிலத்திலிருந்து வாங்கினார்கள். இன்னும் சொல்லப்போனால், நாம் ரூ.35/– கொடுத்து பாலை வாங்குகிறோம். ஆனால், அவர்கள் ரூ.45/– கொடுத்து வாங்குகிறார்கள்.

நாம் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றம், இனம் தெரியாத பகைவன் கொரோனா என்கின்ற தொற்று ஏற்பட்ட நேரத்தில் பாலை எந்த இடத்திலும், தனியார் நிறுவனங்களோ, அண்டை மாநிலங்களிலுள்ள பால் நிறுவனங்களோ வாங்க

முன்வரவில்லை. அந்த நேரத்திலும், உயிரைப் பணயம் வைத்து, ஒவ்வோர் உற்பத்தியாளரிடமிருந்தும் கொள்முதல் செய்யப்பட்ட பால், BMC–யிலிருந்து, CC–க்குக் கொண்டுவரப்பட்டு, பண்ணைக்குக் கொண்டுவரப்பட்டு, ஒட்டுமொத்தமாக 60 இலட்சம் பாக்கெட்டுகளாகத் தயார் செய்யப்பட்டு, ஒட்டுமொத்த தமிழக மக்களுக்குச் சேர்த்த ஒரே நிறுவனம், ஆவின் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிறுவனம், ஆவின் நிறுவனம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மைக்குப் புறம்பான, தவறான தகவலைச் சொல்கிறார். ஆகவே, அவர்களுக்குத் தங்கள் வாயிலாக இந்தப் பதிலைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறாண்டுகளையும் கடந்து தனது கொள்கையை நிலைநிறுத்தியிருக்கின்ற வைக்கம் வீரர், தந்தை பெரியார் அவர்களையும், நம் நெஞ்சங்களில் நிலையாக வாழ்ந்து கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களையும், கழகத்திற்கு இமையாகவும், கழகத் தொண்டர்களுக்கு உயிராகவும், நம் உணர்வுகளோடு கலந்திட்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன்.

திராவிட மாடல் ஆட்சியின்மூலம் சமூகத்தில் அனைத்துத் தரப்பு மக்களுக்குமான நல்லாட்சி வழங்கிவரும், உழைப்பின் சிகரம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நெஞ்சார்ந்த நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். கணினி உலகையும் ஆளப் பிறந்த எங்கள் இளைய தளபதி அவர்களுக்கும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திருமிகு கனிமொழி M.P. அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது திருச்செந்தூர் தொகுதி மக்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் தொழில், குறு, சிறு விவசாயிகளுக்கு அன்றாடம் நல்லதொரு வருமானத்தை ஈட்டித் தருகிறது. இன்றைக்குக் குறிப்பாகச் சொல்ல

வேண்டுமென்று சொன்னால், கால்நடை வளர்ப்பு, கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய ஒரு தொழிலாக இருந்து வருகிறது. அந்த வகையிலே, இன்றைக்கு ஒரு குடும்பத்தில் 3, 4 மாடுகள் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய குடும்பத்தின் பொருளாதார நிலை காக்கப்படுகின்றது. அதுபோல, ஆடு வளர்ப்பு பற்றி சொல்ல வேண்டுமென்றால், ஒரு குடும்பத்தில் 10, 12 ஆடுகள் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய குடும்பத்திற்கு எந்த நேரம் பணம் வேண்டுமென்றாலும், கிராமத்திலுள்ளவர்கள் சொல்வதைப்போல நடமாடும் வங்கியாக ஆடுகள் இருக்கின்றன. அதுபோல, கிராமத்திலுள்ள தாய்மார்கள், தங்களுடைய புழக்கடையில் 5, 6 கோழிகளை வளர்க்கின்றபோது, கோழி முட்டைகளை வைத்துக்கொண்டு, அவர்களுக்கான தினச் செலவுகளை மேற்கொள்வதற்காக அட்சயப் பாத்திரமாக கோழி வளர்ப்புத் தொழில் இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கிராமத்திலுள்ள சிறு விவசாயிகள், பெண்கள், கால்நடை வளர்ப்போர் உள்ளிட்டோரைக் காக்கின்ற வகையிலே, பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கின்றார்கள். நோயில்லாத கால்நடைகளை உருவாக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம். அந்த எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில்தான் அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒரு மாடு, வருடத்திற்கு ஒரு கன்றையாவது ஈன்றெடுக்க வேண்டுமென்கிற வகையில், கால்நடைகளை உருவாக்க வேண்டுமென்கிற வகையில் துறையின் செயல்பாடுகள் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். என்னுடைய உரைக்கு செல்வதற்கு முன்னால் ஒரு முக்கியமான விஷயத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 5—40

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் எங்கள் துறையினை ஆய்வு செய்தபோது, துறையிலுள்ள மருத்துவமனைகள், கால்நடை நிலையங்கள் ஆகிய அனைத்திலும் ஏறக்குறைய 40 சதவிகித

மருத்துவர்கள் இல்லையென்ற நிலையை அறிந்தவுடன், அன்றைக்கு கிராமங்களிலுள்ள கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகளிடமிருந்து மருத்துவர்கள் வேண்டும் என்ற கோரிக்கை அதிகமாக வந்துகொண்டிருந்தன. கால்நடை மருத்துவர்கள் நியமனத்தில் பல்வேறு சிக்கல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் நீக்கி, ஒரே நேரத்தில் 1,141 மருத்துவர்களை நியமனம் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வரலாற்றைப் படைத்துள்ளார்கள். கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில், இதுவரை ஒட்டுமொத்தமாக 1,141 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள் என்ற வரலாறு ஏற்பட்டதில்லை. எந்தெந்த இடங்களிலெல்லாம் மருத்துவர்கள் நியமனம் தேவையாக இருந்ததோ, அந்தந்த இடங்களிலெல்லாம் மருத்துவர்களைப் பணி நியமனம் செய்வதற்கான ஆணையினை வழங்கிய முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள். அந்தவகையில், எங்கள் துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் 2 கோடியே 45 இலட்சம் கால்நடைகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான கால்நடைகள், மேய்க்கால் மற்றும் மந்த நிலங்களில் கிடைக்கும் பசுந்தீவனத்தை நம்பி வளர்க்கப்படுகின்றன. மேய்க்கால் நிலங்களிலிருந்து கிடைக்கும் தீவனத்தின் அளவையும், தரத்தையும் உயர்த்தும் வகையில், மாநிலம் முழுவதும் 1000 ஏக்கர் மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்தி, அதிக விளைச்சல் தரும் ஊட்டச்சத்து நிறைந்த பல்லாண்டு புல் மற்றும் பயறு வகை தீவனங்களைப் பயிரிடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் பழத் தோட்டங்களில், பசுந்தீவன உற்பத்தியினை ஊடு பயிராக மேற்கொள்ளும்வகையில், விவசாயிகளின் சொந்த நிலங்களில் 2 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த 2 ஆயிரம் ஏக்கர் நிலங்களிலும் பசுந்தீவனங்களை ஊடுபயிராக செய்ய வேண்டும் என்ற வகையிலும் அதற்கு மானியம் வழங்கும் வகையிலும் ஒரு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் வழங்கி பசுந்தீவனப் பற்றாக்குறையினை நீக்குவதற்கான நடைமுறைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் இந்த அரசு மேற்கொண்டுள்ளது என்பதை இந்த அவையில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பசுந்தீவன உற்பத்தியினை வணிக முறையில் எளிதில் மேற்கொள்ளும் வகையில், ட்ராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள், தீவன சிப்பம்கட்டும் இயந்திரங்கள் ஆகியவை 25 சதவிகித மானிய விலையில் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதேபோன்று, 2022–2023 ஆம் ஆண்டில் 12 துறை சார்ந்த பண்ணைகளில் 1,167.81 ஏக்கர் பரப்பளவில் தீவனப் பயிர்கள் பயிரிடப்பட்டு, சுமார் 19 ஆயிரம் மெ.டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், 21.47 இலட்சம் தீவன புல்கரணைகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை செயற்கைமுறை கருவூட்டல் திட்டத்தின்மூலம் சிறந்த பசுக்களை உருவாக்கி அதன்மூலம் அதிக பால் உற்பத்திக்கு அடிகோலுகிறது. துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் சிறந்த மரபணு திறன்கொண்ட பொலிகாளைகளிலிருந்து விந்து சேகரிக்கப்பட்டு செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன. திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து குச்சிகள் சேமிப்பு மற்றும் விநியோக முறையை வலுப்படுத்த ரூ.3.60 கோடி செலவில், 17 வாகனங்களும், 452 உறைவிந்து குச்சி மற்றும் திரவ நைட்ரஜன் சேமிப்புக் குடுவைகளும் மற்றும் உறைவிந்தின் நோயில்லாத் தன்மை மற்றும் தரம் அறிய 18 நுண்ணோக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 9–3–2023 அன்று ரூ.47.50 கோடி நிதி ஒதுக்கீட்டில், பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து உற்பத்தியினை ஊட்டியில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் மேற்கொள்ளும் வசதியினைத் துவக்கி வைத்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் செயல்பட்டுவரும் கால்நடைப் பண்ணையில் கருமாற்று மற்றும் ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்ப நிலையம், ரூ.4.55 கோடி செலவில் துவக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 3 ஆண்டுகளில் 84 உயர் மரபணு கொண்ட சிந்தி, காங்கேயம், உம்பளாச்சேரி, புலிக்குளம், பர்கூர் ஆகிய பொலிகாளைகள் மற்றும் 85 பொலிகாளைகள் உற்பத்தி செய்ய தாய் பசுக்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி

இதுவரையில், 55 கன்றுகள் பிறந்துள்ளன; 227 கருக்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின்மூலம் பல்வேறு சேவைகளைச் செய்வதற்காக கால்நடைகளை கால்நடை நிலையங்களுக்கு கொண்டு செல்வதில் விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் கால்நடைகளுக்கு தொழுவத்திலேயே சிகிச்சை மற்றும் இதர சேவைகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள்.

பிற்பகல் 5—45

குறிப்பாக சொல்லச் வேண்டுமென்றால், கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களின் மூலமாக கால்நடை கிளை நிலையம் வேண்டும், கால்நடை கிளை நிலையத்தை upgrade செய்ய வேண்டும் என்று, கால்நடைகளுக்கு சிகிச்சை செய்வதற்கான நடைமுறைகளைச் செய்ய வேண்டும் என்ற வகையிலே அதிகமான கோரிக்கைகள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து வந்திருக்கின்றன. அந்த நிலைகளையெல்லாம் போக்குகின்ற வகையிலே 245 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்; செயல்படுத்தவிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் செயல்களின்மூலம், எந்தெந்தப் பகுதிகளில் கால்நடை மருத்துவ நிலையங்கள் இல்லையோ, அந்தந்தப் பகுதிகளில் நடமாடும் மருத்துவமனையைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற வகையிலே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 245 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் என்பது, 234—சட்டமன்றத் தொகுதிகள்தான் இருக்கின்றன. இருந்தாலும், சென்னை போன்ற இடங்கள், கால்நடைகள் அதிகம் உள்ள இடங்கள் என எல்லா இடங்களிலும் கால்நடைகளுக்கு அந்தந்தப் பகுதிகளுக்கே சென்று, சிகிச்சை செய்கின்ற வகையிலே எங்கள் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தீட்டி தந்திருக்கின்றார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் ஜூலை மாதத்தில் வடநாட்டில் இருக்கின்ற அத்தனை இடங்களிலும் மாட்டின தோல்கழலை நோய் ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான,

இலட்சக்கணக்கான மாடுகள், கன்றுகள் உயிரிழந்த வரலாறு உண்டு. நம்முடைய மாநிலத்திலும் அந்த மாட்டின தோல்கழலை நோய் தென்படுகிறது என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன்— இதைச் சொன்னவுடன் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அண்ணன் அவர்கள் அங்கிருந்து பார்க்கின்றார். ஏனென்றால், அவர் பொள்ளாச்சியில் தோல்கழலை நோய் இருக்கிறதென்று phone செய்தார். உடனடியாக தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் எங்கள் துறைக்கு உத்தரவிட்டவுடன், அதற்கு சிகிச்சை வழங்கவும், தடுப்பூசி பணிகளை மேற்கொள்ளவும், நோயைக் கட்டுப்படுத்தவும் 3 குழுக்களாக அமைத்து தமிழ்நாடு முழுவதும் எந்த இடத்தில் இந்த நோய் இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்காக ஆட்டம்மை நோய்க்கான தடுப்பூசியைப் போட வேண்டுமென்று ஒன்றிய அரசு வலியுறுத்தியிருந்த வகையிலே தமிழகம் முழுவதும் இருக்கின்ற மாடுகளுக்கு அந்த ஊசி போடப்பட்டு இந்த நோயிலிருந்து தமிழக கால்நடைகளைப் பாதுகாத்த நிகழ்வுகளை இன்றைக்கு எங்களுடைய துறை செய்திருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கால்நடைகளுக்கு வருகின்ற பெரிய நோய், கோமாரி நோய்–Foot and Mouth Disease, இந்த நோய் வருகின்றபோது, பால் சுரப்பு குறைந்துவிடுகின்றது, வாயில் புண், காலில் புண் ஏற்படுகின்றது. இதனால் அந்த மாடே சீரழிந்துவிடுகிறது. இந்த நிலைகளை அறிந்த வகையிலே இதற்கான தடுப்பூசி மருந்துகளை ஒன்றிய அரசாங்கம்தான் தருகின்றது. கடந்த கால ஆட்சியாளர்கள் ஒரு வருடக் காலமாக தொடர்ந்து அந்தத் தடுப்பூசியை வாங்கிப் போட முடியாத காரணத்தினால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஒன்றிய அரசாங்கத்தை வலியுறுத்தி, 4 தவணைகளாக 90 இலட்சம் ஊசிகளை வாங்கி, Foot and Mouth Disease கால்நடைகளுக்கு வராமல் இருப்பதற்காக இந்த நிலைகளைச் சரி செய்த முதலமைச்சர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இந்த தடவையும் November, December–ல் போட வேண்டிய ஊசியைத் தருவார்கள், தருவார்கள் என்று ஒன்றிய அரசிடம் கேட்டாலும், கடைசி நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழுத்தம் கொடுத்ததன் காரணமாக, January மாதம் தந்தார்கள். 1–3–2023 முதல் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அத்தனை கால்நடைகளுக்கும் நோய் வராத நிலையை செய்ய வேண்டுமென்ற வகையிலே அந்தத்

தடுப்பூசி போடப்பட்டது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடையிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்களான Rabies வெறி நோயைக் கட்டுப்படுத்தவும், இந்த நோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 77 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீட்டில் மாநிலம் முழுவதும் 400 வெறிநோய் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இந்த நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 59 ஆயிரத்து 300 மாணவர்கள் பயன்பெறும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பில் கையாளப்படும் தொழில்நுட்பங்கள் அனைத்தும் கிராமங்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக மாநிலம் முழுவதும் 7 ஆயிரத்து 760 கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அனுமதி அளித்தார்கள். அந்த முகாம்களிலே நோயுற்ற கால்நடைகளுக்குச் சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை போன்ற சேவைகளும், பசுந்தீவன உற்பத்தி, தரமான கால்நடை பொருட்களுக்கான உற்பத்தி, மதிப்பு கூட்டுதல், சிப்பம் கட்டுதல், சந்தைப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்களும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் நடப்பாண்டில் 9 இலட்சத்து 24 ஆயிரம் விவசாயிகளும், 84 இலட்சத்து 9 ஆயிரம் கால்நடைகள் மற்றும் கோழியினங்களும் பயனடைந்துள்ளன என்பதை இந்த அவையிலே பதிவு செய்கிறேன்.

பிற்பகல் 5—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பானது வீடுகளில் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கால்நடை வளர்ப்பினைப் பண்ணைமுறையில் மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தொழில்முனைவோர்

உருவாக்கல் திட்டத்தின்கீழ், பண்ணை முறையில் நாட்டின கோழி வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, தீவனம் மற்றும் தீவனப் பயிர் உற்பத்தி ஆகியவற்றை மேற்கொள்ள 'தொழில்முனைவோர் உருவாக்கல் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய இலட்சியமான, அனைவருக்குமான சரிசமமான வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ள இத்திட்டத்தில் இதுவரை 14 தொழில்முனைவோர்களின் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு, 4 தொழில்முனைவோர்களுக்கு முதல் தவணை மானியமாக 46 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகள் மட்டுமின்றி, ஆதரவின்றி சுற்றித் திரியும் கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டும் அரசுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், 'வள்ளலார் பல்லுயிர் காப்பகம்' திட்டத்தினை நமது கழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திலே ஆதரவற்ற விலங்குகள், செல்லப் பிராணிகள் நலன் பேணும் அமைப்புகள், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் போன்ற பொதுநல அமைப்புகள் கொட்டகைகள் கட்டுதல், உணவு வழங்குதல், அவசர சிகிச்சை ஊர்தி வழங்குதல் போன்றவற்றிற்கு அரசு நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டம் கடந்த திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு, ஐந்து தொண்டு நிறுவனங்களுக்கு நடப்பாண்டில் 2 கோடியே 14 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு, இதுவரை 88 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பட்ட உட்கட்டமைப்பே தரமான சேவைகளுக்கு வழிவகுக்கும் என்ற அடிப்படையில் கால்நடை நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களை முனைந்து செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று

சொன்னால், ரூ.9 கோடி நிதியொதுக்கீட்டில், சென்னை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பன்முக மருத்துவமனைகளும், ரூ.9 கோடி நிதியொதுக்கீட்டில் நாமக்கல், திருச்சி, புதுக்கோட்டை, தேனி ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, மாநிலம் முழுவதும் ரூ.25 கோடி ஒதுக்கீட்டில் 37 புதிய கால்நடை நிலையங்களைக் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த அவையில் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தரமான நாட்டுக் கோழிக் குஞ்சுகள் கிடைப்பதில் பல சிரமங்கள் உள்ளன. இன்றைக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அசைவப் பிரியர்களாக இருக்கின்றவர்கள், ஓட்டல்களுக்குச் சாப்பிடச் சென்றால் அல்லது வேறு ஏதாவது இடத்திற்கு சாப்பிடச் செல்கிறார்கள் என்றால், நாட்டுக்கோழி இருக்கின்றதா என்று கேட்கிறார்கள். இன்றைக்கு நாட்டுக்கோழிக் குஞ்சுகளுக்கு தமிழகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தட்டுப்பாடு என்றால், நாட்டுக்கோழிக் குஞ்சு கிடைப்பதில் தட்டுப்பாடு. இந்த நிலைகளையெல்லாம் சரி செய்வதற்காக, அதிகரித்து வரும் நாட்டுக் கோழியினத் தேவையை ஈடுசெய்ய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், 9 கோடியே 42 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் திருநெல்வேலி மாவட்டம், அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், 13 கோடியே 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் சிவகங்கை மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், வருடத்திற்கு சுமார் 9 இலட்சம் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்திடும் வகையிலும், குஞ்சு பொரிப்பகத்துடன்கூடிய இனப்பெருக்க வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு கால்நடைப் பண்ணையில் வருடத்திற்கு 2 ஆயிரம் மெட்ரிக் டன் கோழித் தீவன உற்பத்தி செய்யும் ஆலையும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பல்வகை பல்லுயிரிகளின் இருப்பிடமாக இருந்து வருகிறது. எனவே, கால்நடைகளைப் பேணிக் காப்பது நமது அரசின் தலையாயக் கடமையாக இருக்கிறது. தமிழ்நாட்டில் காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, பர்கூர், புலிக்குளம் ஆகிய 5 வகை மாட்டினங்களும், தோடா, பர்கூர் ஆகிய 2 வகை எருமையினங்களும், சென்னை சிவப்பு, திருச்சி கருப்பு, கோயம்புத்தூர், நீலகிரி, மேச்சேரி,

கச்சைக்கட்டி கருப்பு, இராமநாதபுரம் வெள்ளை, வேம்பூர், செவ்வாடு, கீழக்கரிசல் ஆகிய 10 வகை செம்மறியாடுகளும், சேலம் கருப்பு, கன்னியாடு, கொடியாடு ஆகிய 3 வகை வெள்ளாட்டு இனங்களும், இராஜபாளையம், சிப்பிப்பாறை, கன்னி, கோம்பை ஆகிய 4 வகை நாட்டின நாய்களும் உள்ளன. இன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய நாட்டினங்களையெல்லாம் பாதுகாக்க வேண்டுமென்ற வகையில் பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். திட்டங்கள் என்ன என்று சொன்னால், நாட்டினங்கள், நம்முடைய நாட்டிலிருந்து மறைந்துவிடக் கூடாது என்பதற்காக, பல்கலைக்கழகத்தின்மூலம் ஒவ்வோர் இடத்திலும் குறிப்பாக, ஓசூர் கால்நடைப் பண்ணை மற்றும் திருவாரூர் மாவட்டம், கொற்கை கால்நடைப் பண்ணை ஆகியவற்றில் காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி மாட்டினங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 5—55

இந்த நிலைகளையெல்லாம் அறிந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். கால்நடைகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, நமது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 20—9—1989 அன்று தெற்காசியாவில் முதல் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமாக, தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தினை, சென்னையில் மாதவரத்தில் உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பல்கலைக்கழகத்தின்மூலம் அனைத்து உள்நாட்டு கால்நடைகள் ஆராய்ச்சி நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, சின்னக்கோவிலான்குளத்தில் ஒரு கோடியே 79 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நாட்டு ரக வெள்ளாட்டு ஆராய்ச்சிப் பண்ணையும், தென்காசி மாவட்டம், பாவூர்சத்திரத்தில் ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நாட்டின நாய்களான ராஜபாளையம், சிப்பிப்பாறை, கன்னி, கோம்பை போன்ற இனங்களைப் பாதுகாக்க, இனப்பெருக்க ஆராய்ச்சி மையமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டத்தில், நாகமல்லி கிராமத்தில் 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் புழக்கடை கோழி மையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டம், காட்டுப்பாக்கம் கால்நடை அறிவியல் முதுகலை

[திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்] [*2023 ஏப்ரல் 5*

*ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நாட்டுக்குட்டை நாட்டின மாடு பாதுகாப்பு மையம்; தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 78 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், உள் நாட்டு இனமான உம்பளாச்சேரி மாட்டினத்தை பல்துறை அணுகுமுறையின்மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில் பாதுகாக்கும் திட்டம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*இன்றைக்கு குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இராமநாதபுரம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் மூன்று வகை நாய் இனங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற வகையில் கோரிக்கை வைத்தார். தஞ்சாவூர் மாவட்டத்தில், டெல்டா மாவட்டத்தில் காணப்படும் 'அலங்கு' இன நாய், செங்கோட்டை மாவட்டத்தில் காணப்படும் 'செங்கோட்டை' இன நாய் மற்றும் இராமநாதபுரத்தில் மன்னர்கள் படையில் இடம் பெற்ற மந்தை வகை நாட்டின நாய் போன்ற நாய்கள் அழியும் நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார். இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்தப் பராம்பரிய நாய்களையும் காப்பதற்கு இந்தத் துறையின்மூலம் திட்டங்களைத் தீட்டுவோம் என்பதை நான் இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நாட்டு இன நாய்களுக்கு இன்றைக்கு நிறைய* demand *இருக்கிறது. ஒரு காலகட்டத்தில், கிராமங்களில் எல்லாம் நாட்டின நாய்கள் இருந்தன. அன்றைக்கு வேட்டைக்குப் போகும்போது, முயல் போகிறது என்று சொன்னால், முயலுக்கு முன்பாக சிப்பிப்பாறை, கன்னி போன்ற நாய்கள் எல்லாம் ஓடிவிடும். ஆனால், இன்றைக்கு வேட்டை நடத்தினால், உடனே நடவடிக்கை. எனவே, அந்த நாய்கள் வீட்டுக் காவலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனாலும், அந்த நாய்க்குட்டிகள் 20,000 ரூபாய், 25,000 ரூபாய் விலையில் விற்கப்படுகின்றன. ஆகவே, நாட்டு இன நாய்களைப் பாதுகாக்க வேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சரின் எண்ணம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஆளுக்கு ஒரு நாய்க் குட்டியைக் கேட்கிறார்கள். (சிரிப்பு)*

2023 ஏப்ரல் 5]

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாய்க் குட்டி கொடுப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. நாய்க் குட்டி வேண்டுமென்றால், online–ல் பதிவு செய்து, எங்கள் Department–ல் நீங்கள் வாங்க வேண்டுமென்று உங்களுக்கு நாங்கள் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாய் தமிழக மக்கள் நலனை, பொருளாதாரத்தை, வாழ்க்கை முறையை அனைவருக்குமான சமத்துவ வளர்ச்சியை, சாமானிய மற்றும் விளிம்பு நிலை மக்களின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் கால்நடை பராமரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் ஏற்றம் காண்பது திண்ணம் என்பதைக் கூறிக் கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறையின் 2023–2024 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு அறிவிக்கிறேன்.

## கால்நடை பராமரிப்பு

## (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

**1. கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக, துறை சார்ந்த பண்ணைகளில் உயர் மரபுத்திறன் கொண்ட புதிய கால்நடைகளை அறிமுகம் செய்யும்பொருட்டு, 2,490 கால்நடைகள் இரண்டு கோடியே அறுபத்தியொரு இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

துறை சார்ந்த கால்நடை பண்ணைகள், செயல் விளக்க அலகுகளாக மட்டுமல்லாமல், இனப்பெருக்கத்திற்காக உயர் மரபுத்திறனைக் கொண்ட கால்நடைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்கும், கால்நடைகளின் உற்பத்தி மற்றும் அதன் திறனை அதிகரிப்பதற்காகவும், ஓசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு, புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணைகள் மற்றும் சாத்தூர், முகுந்தராயபுரம் ஆட்டுப் பண்ணைகளுக்கு இனப்பெருக்க வயதுடைய 1,210 செம்மறி ஆடுகள், 1,100 வெள்ளாடுகள் மற்றும் 180 பன்றிகள் ரூ.2.61 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும்.

இதன்வழி உள் இனவிருத்தியினால், ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகள் கணிசமாகக் குறைக்கப்படும்.

**2. தீவன விரயத்தைக் குறைப்பதற்காக, மின்சாரம்மூலம் இயங்கும் 3 ஆயிரம் புல் நறுக்கும் கருவிகள் நான்கு கோடியே தொண்ணூறு இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்**

*விவசாயிகள் தங்கள் நிலங்களில் உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனப் பயிர்களைக் குறுகிய காலத்தில், வேலையாட்கள் உழைப்பைத் தவிர்த்து, அவற்றின் தரம் மாறாமல் மற்றும் வீணாகாமல், பசுந்தீவன புல் நறுக்கும் கருவிமூலம் சிறு துண்டுகளாக்கி, கால்நடைகளுக்கு உணவளிப்பதனால், அவற்றின் செரிமானத்தை அதிகரிக்க ரூ.4.90 கோடி செலவில், புல் நறுக்கும் கருவிகள் 50 விழுக்காடு மானியத்தில் 3 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.*

**3. சுய உதவிக் குழுவினருக்கு வேலைவாய்ப்பினை வழங்கி, 25 ஏக்கர் மேய்க்கால் நிலங்களில் இரண்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சம் ரூபாய் செலவில் அதிக மகசூல் தரும் பசுந்தீவனப் புல்வகைகள் உற்பத்தி செய்யப்படும்**

*சுய உதவிக் குழுவினருக்கு வேலைவாய்ப்பினை வழங்கும்விதமாக மேய்க்கால் நிலங்களில் அதிக மகசூல் தரும் பசுந்தீவனப் புல்வகைகளை உற்பத்தி செய்வதன்மூலம், வணிக ரீதியிலான தீவன உற்பத்தியை மேற்கொண்டு, தேவைப்படும் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் தீவனம் கிடைக்கச் செய்ய முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்களில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய ரூ.2.33 கோடி நிதி ஒதுக்கப்படும். இதனால் 25 ஏக்கரிலிருந்து சுமார் 3 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படும்.*

**4. நாட்டுக் கோழிகளை வளர்ப்பதில் திறன் கொண்ட கிராமப்புற பயனாளிகளுக்கு சிறிய அளவிலான (250 கோழிகள்—ஓர் அலகு) 100 நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள் 50% மானியத்தில் ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்**

*நாட்டுக் கோழி வளர்ப்பதில் திறமையும், ஆர்வமும் உள்ள 100 தொழில்முனைவோர்களை உருவாக்குவதற்காக, பண்ணைகளை நிறுவுவதற்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் நான்கு வார*

வயதுடைய 250 எண்ணிக்கையிலான கோழிக்குஞ்சுகள் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையிலிருந்து இலவசமாகவும், தீவனம் மற்றும் உபகரணங்கள் 50% மானிய விலையிலும், ரூ.1.80 கோடி செலவில் வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் முட்டைகள் மற்றும் கோழிகள் விற்பனை செய்வதால் ஒரு பயனாளி வருடத்திற்கு ரூ.2.25 இலட்சம் வரை வருமானம் ஈட்டலாம்.

பிற்பகல் 6–00

5. இன்றைக்கு ஜல்லிக்கட்டில் காளைகள் பங்குபெறுகின்றன என்று சொன்னால், மொத்தம் எவ்வளவு காளைகள் இருக்கின்றன என்பதை தமிழ்நாட்டில் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. அவற்றை அடையாளம் காண்பதற்கு, காளைகளின் கண்களை வைத்துதான் பார்க்க வேண்டும். காளைகளின் கண்களுக்கு முன்பு கேமராக்களைக் கொண்டுபோக முடியாது. காளைகளின் மூக்கின் அமைப்பை வைத்து அடையாளம் காண முடியும் என்கிற வகையில் அதற்கும் இன்றைக்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

**ஜல்லிக்கட்டு நிகழ்வுகளுக்கான இணைய முகப்பு எண்பத்து ஏழு இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்**

ஜல்லிக்கட்டுக் காளைகளைத் துன்புறுத்தாமல் மின்னணு முறையில் அடையாளம் கண்டு அவற்றைப் பதிவு செய்யவும், ஜல்லிக்கட்டு நிகழ்வுகளை ஆன்லைன் அமைப்புமூலம் பதிவு செய்யவும், அனுமதி அளிக்கவும் ரூ.87.00 இலட்சம் செலவில் இணைய முகப்பு உருவாக்கப்படும்.

**6. உள்நாட்டு நாய் இனங்களின் இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு மையம் சென்னையில் ஐந்து கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் விரிவாக்கப்படும்**

பொதுமக்களிடையே உள்நாட்டு இனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, உள்நாட்டு நாய் இனங்களான ராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை மற்றும் கோம்பை ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக ரூ.5.95 கோடி செலவில் சென்னையில் உள்ள நாய் இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு மையம் விரிவாக்கப்படும். சிறந்த இனப்பெருக்க நாட்டு நாய்கள் செல்லப் பிராணி வளர்ப்போருக்கு விற்கப்பட்டு, நாட்டின நாய்களின் மரபணுக்கள் பெருக்கப்படும்.

**7. ஊராட்சி ஒன்றிய தலைமையிட கால்நடை மருத்துவ நிலையங்களில் நோய் கண்டறியும் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக இருபது கோடி ரூபாய் செலவில் 50 கையடக்க நுண்ணலை நுண்ணாய்வு மற்றும் எக்ஸ்–ரே கதிர்வீச்சுக் கருவிகள் (Portable Ultra Sound Scanner and X–ray) வழங்கப்படும்**

*கால்நடை நோயறிதல், 'சான்றுகள் சார்ந்த மருத்துவம்' என்பதால், சரியான நோயைப் பற்றி முடிவு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே, ரூ.20.00 கோடி செலவில் 50 ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்குக் கையடக்க நுண்ணலை நுண்ணாய்வு மற்றும் எக்ஸ்–ரே கதிர்வீச்சுக் கருவிகள்* (Portable Ultra Sound Scanner and X–ray) *வழங்கப்படும். இதனால், நோய் தாக்கத்தால் ஏற்படும் பொருளாதார இழப்புகளைக் குறைத்து, துரித சிகிச்சை வழங்கப்படும்.*

**8. அனைத்து கால்நடைகளுக்கும் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள்மூலம் "கிராமங்கள்தோறும் கால்நடைகளைக் காக்க" உரிய நேரத்தில் மருத்துவச் சிகிச்சை மற்றும் மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக 73,500 முகாம்கள் நடத்தப்படும்**

*கிராமப்புறப் பொருளாதாரம் மற்றும் கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கால்நடைகளுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை மற்றும் கால்நடை மருத்துவச் சேவைகள் வழங்க தனிப் பயனாக்கப்பட்ட 245 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள்மூலம் 73 ஆயிரத்து 500 முகாம்கள் கிராமங்களில் நடத்தப்படும். இதனால், கிராமங்கள்தோறும் கால்நடைகளின் நலன் காக்கப்பட்டு, உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும்.*

**9. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகளைப் பயன்படுத்தி அதிக கிடேரிக் கன்றுகள் கிடைக்க வழிவகை செய்யப்படும்**

*துறைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகளைப் பயன்படுத்தி மூன்று ஆண்டுகளில் 2.14 இலட்சம் கிடேரிக் கன்றுகள் உற்பத்தி செய்வதால், மாநிலத்தின் பால் உற்பத்தி பெருக்கப்படும்.*

2023 ஏப்ரல் 5] [திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்]

**10. ஐந்து பண்ணைகளில் பயிரிடப்படாத 220 ஏக்கர் நிலப்பரப்பில் உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்பின்மூலம் அதிக மகசூல் தரும் பசுந்தீவனங்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்**

செட்டிநாடு மற்றும் ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணைகள், ஈச்சங்கோட்டை அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணை, சின்னசேலத்தில் அமைந்துள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிலையம் மற்றும் தீவன விதை உற்பத்திப் பண்ணை, படப்பை ஆகியவற்றில் பயிரிடப்படாத 220 ஏக்கர் நிலப்பரப்பில் உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகளின்மூலம் அதிக மகசூல் தரும் பசுந்தீவனம் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தால் 30 ஆயிரத்து 800 மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படும்.

**11. ஐந்து கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 20 கால்நடை மருந்தகங்களுக்குப் பதினாறு கோடியே முப்பது இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்**

நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் மையமாக இருந்த கால்நடை மருத்துவ நிலையங்கள் அறிவுசார் மையங்களாகவும், விரிவாக்க மையங்களாகவும் மாறியுள்ள நிலையில், விவசாயிகளுக்கு மேம்பட்ட கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக ஐந்து கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 20 கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.16.30 கோடி செலவில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**12. நான்கு துறை சார்ந்த பண்ணைகளில் புதியதாக விவசாயிகள் தகவல் மையம் மற்றும் மாதிரி செயல்விளக்க ஒருங்கிணைந்த பண்ணை கண்காணிப்பு அலுவலகங்கள் பதினான்கு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்**

மாநிலத்தின் கால்நடை வளர்ப்போர் மத்தியில் கால்நடை பராமரிப்பு மற்றும் பசுந்தீவன உற்பத்தியின் முக்கியத்துவம் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்த, அபிசேகப்பட்டி, செட்டிநாடு, புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணைகள் மற்றும் காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் விவசாயிகள் தகவல் மையம் மற்றும் மாதிரி செயல்விளக்க ஒருங்கிணைந்த

பண்ணை கண்காணிப்பு அலுவலகங்கள் ரூ.14.00 கோடி செலவில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீன்வளத் துறைக்கான பதிலுரை இருக்கிறது அல்லவா! இந்தத் துறையைப் பற்றி முடித்துவிட்டு மீன்வளத் துறைக்கான பதிலுரையைத் தொடங்குங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்கள் வாழ்வில் என்றும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தலைமையிலான கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளாக மீனவர்களுக்காகப் பல சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மீன்பிடித்தல் மற்றும் மீன் வளர்ப்பு மக்களுக்குச் சத்தான உணவு அளிப்பதோடு, கடலோரம் மற்றும் உள்நாட்டுப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. மேலும், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி நாட்டிற்கு அதிக அளவில் அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசு பொறுப்பேற்கின்றபோதெல்லாம் மீனவர்களுடைய சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக முத்தான பல சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மீனவர்களுக்கென தனி நல வாரியம் அமைத்தது, மீன்பிடித் தடைக்கால நிவாரணம் அறிமுகப்படுத்தியது, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள நாட்டுப் படகு மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கியது, மீன்பிடிக் குறைவு கால சிறப்பு நிவாரணத் தொகையை ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தியது ஆகியன முக்கியத் திட்டங்களாகும். பல்வேறு மீனவர் நல நிவாரணத் திட்டங்கள்மூலம் தமிழ்நாட்டில் சுமார் 4 இலட்சத்து 10 ஆயிரம் கடல் மீனவ மகளிர் பயன்பெறுகின்றனர் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த டிசம்பர் மாதம் மாண்டஸ் புயல் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, இராமநாதபுரம், மயிலாடுதுறை ஆகிய கடலோர மாவட்டங்கள்

பெரிதும் பாதிப்புக்குள்ளாகின. குறிப்பாக, சென்னை, காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல மீன்பிடிப் படகுகள் சேதமடைந்து மீனவர்களுடைய வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புயலால் பாதிக்கப்பட்ட தினத்தன்றே காசிமேடு துறைமுகத்தைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மீனவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்கள். அந்தப் புயலினால் பாதிக்கப்பட்டு, மீன்பிடிச் சாதனங்களை இழந்த மீனவர்களுக்கு 4 கோடியே 67 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 6—05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் தங்கள் பாரம்பரிய கடல் பகுதியில் எவ்வித அச்ச உணர்வுமின்றி பாதுகாப்போடு மீன் பிடிப்பதை உறுதி செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். தமிழக மீனவர்கள் எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை அரசால் கைது செய்யப்படுவதும், கடல் கொள்ளையர்களால் தாக்கப்படுவதும் தொடர்ந்து நடந்து வருகிறது. அப்போதெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அழுத்தம் கொடுத்து வருகிறார்கள். ஆனால், இலங்கை அரசு மீனவர்களை மட்டும் விடுவித்துவிட்டு, படகுகளை நாட்டுடைமையாக்கும் செயல்களைத் தொடர்ந்து செய்து வருகிறது. தற்போதைய நிலையில் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் 109 படகுகளும், 12 மீனவர்களும் உள்ளனர். இந்தப் படகுகளையும், மீனவர்களையும் மீட்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. படகு இழந்த மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளார்கள். எனவே, ஒன்றிய அரசு, இலங்கை அரசை வலியுறுத்தி, தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் அனைத்தையும் விடுவித்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் ஆழ்கடலில் பாதுகாப்புடன் தொழில் செய்ய தேவையான முன்னெச்சரிக்கை தகவல்களைத் தருவதற்கு, இந்திய விண்வெளி ஆராய்ச்சிமையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் விசைப்படகுகளில் transponders–ஐப் பொருத்தும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். பதிவு செய்த அனைத்து விசைப் படகுகளுக்கும் இலவசமாக transponders–ஐப் பொருத்தும் பணிகள் விரைவில் முடிவடையும் என்பதை இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள், தாங்கள் மீன் பிடிப்பதற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்கு கடன் வழங்கும் விதமாக, மீன்வளக் கூட்டுறவு வங்கிகளை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி முதற்கட்டமாக கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில், தலா ஒரு மீனவக் கூட்டுறவுச் சங்கத்தில் மீனவர்களுக்குக் கடன் வழங்கும் சேவைகள் வெகு விரைவில் துவக்கப்படவுள்ளன.

பாரம்பரிய மீனவர்களின் நலனுக்காக நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் 9 கோடியே 80 இலட்சம் ரூபாய் மானியத்தில் 2,600 உட்பொருத்தும், வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 100 பாரம்பரிய நாட்டுப் படகு மீனவர்களுக்கு 2 கோடி ரூபாய் மானியத்தில் கண்ணாடி நாரிழைப் படகுகள், இயந்திரங்கள், வலைகள், குளிர்காப்புப் பெட்டிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2022–2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியத்தில் 300 நாட்டுப் படகுகள் மற்றும் உபகரணங்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் 143 கோடி ரூபாய் செலவில் தமிழக கடலோரப் பகுதிகளில் 417 இடங்களில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தினால் அண்மை கடற்பகுதிகளில் மீன்வளம் பெருகி, பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீனவக் கிராமங்களைக் கடல் அரிப்பு மற்றும் இயற்கைச் சீற்றங்களிலிருந்து பாதுகாப்பதற்கும்,

படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்திவைப்பதற்கும் பல்வேறு திட்டங்களை வழங்கியுள்ளார்கள். அந்தவகையில் கடந்த 2 ஆண்டுகளில் பல்வேறு மீனவக் கிராமங்களில் தூண்டில் வளைவுகள், கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள், மீன் இறங்குதளம் ஆகியவை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழக கடற்கரைப் பகுதிகளில் எங்கெல்லாம் மீன்பிடித் துறைமுகங்கள் தேவை என்பதைக் கண்டறிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கினார்கள். அந்தவகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாணியகுடி மற்றும் குளச்சல், திருநெல்வேலி மாவட்டத்தில் உவரி, தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சாமந்தான்பேட்டை, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு ஆகிய மீனவக் கிராமங்களில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கவும், பயன்பாட்டில் இருக்கும் மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்தவும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்த அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களைத் தீட்டி வருகிறது. இந்திய அளவில் கடற்பாசி வளர்ப்பில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. கடற்பாசி வளர்ப்பை ஒரு மாற்று வாழ்வாதாரமாகக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 1,956 மீனவ மகளிருக்கு 2 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில், கடற்பாசி வளர்ப்பதற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாட்டில் 128 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு கடற்பாசி பூங்கா ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 16 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் 384 மிதவைக் கூண்டுகள் மீன் வளர்ப்புக்காகக் கடல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2022–2023 ஆம் ஆண்டில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 50 மிதவைக் கூண்டுகள் கடல் மீனவர்களுக்கு வழங்கி அண்மை கடற்பகுதியில் மீன் வளர்ப்பை மேற்கொண்டு, மீன் உற்பத்தியைப் பெருக்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் மீனவர்களைக் கழக அரசு பாதுகாப்பதுபோல், உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்த அறிவுறுத்தியுள்ளார்கள். உள்நாட்டு மீன் வளம் உணவு உற்பத்தி மற்றும் கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

பிற்பகல் 6–10

மாநிலத்தின் மொத்த மீன்குஞ்சு தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக 68 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் அரசு மீன்குஞ்சு உற்பத்தி மையங்களைப் புதிதாக அமைத்திடவும், தற்போதுள்ள மீன் பண்ணைகளை மேம்படுத்திடவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இப்பணிகள் அனைத்தும் முடிவடையும்போது, உள்நாட்டு மீன்குஞ்சு உற்பத்தியில், தமிழ்நாடு தன்னிறைவு அடையும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், 21 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைத்தல், தீவிர மீன் வளர்ப்புத் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 13 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட, குறுகிய காலத்தில் வேகமாக வளரும் மீன் இனமான திலேப்பியா மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் தஞ்சாவூர், கிருஷ்ணகிரி, கடலூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின மீன்களைப் பாதுகாத்திடும் வகையில், நாட்டின மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்படி, 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 நாட்டின மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் நாட்டின மீன்குஞ்சுகளை ஆறுகளில் இருப்பு செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கினார்கள். இதன்படி, தமிழ்நாட்டிலுள்ள முக்கிய ஆறுகளான காவேரி, பவானி, தாமிரபரணி மற்றும் அவற்றின் துணை ஆறுகளில் 40 இலட்சம் சேல்கெண்டை, கல்பாசு, இந்திய பெருங்கெண்டை போன்ற மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தினைக் கழக இளைஞரணியின்

*2023 ஏப்ரல் 5]* [திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்]

ஆற்றல்மிக்க செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், உலக மீன்வள தினமான கடந்த நவம்பர் 21 ஆம் தேதி, தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் பகுதியிலுள்ள தாமிரபரணி ஆற்றுப் படுகையில் துவக்கி வைத்தார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ண மீன் உற்பத்தியில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. வண்ண மீன் உற்பத்தியை அதிகரித்து, அதன்மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்கிட 4 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வண்ண மீன் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னைக்கு அருகிலுள்ள கொளத்தூர் பகுதியானது தமிழ்நாட்டின் வண்ண மீன் உற்பத்தி மையமாக விளங்குகிறது. இங்கே சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் வண்ண மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக கொளத்தூர் பகுதியில் சர்வதேசத் தரத்திலான வண்ண மீன் உற்பத்தி மையம் ஒன்றினை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டு, வண்ண மீன் உற்பத்தி மையம் அமைப்பதற்கான ஆரம்ப கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் மற்றும் குளிர்பதனக் கிடங்குகள் அமைத்திடவும், மீன் அங்காடிகள், மீன் விற்பனை வாகனங்களை வாங்கிடவும் 24 கோடியே 54 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் வாயிலாக 8 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் மீன் விற்பனை வசதிகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீனவர்களுக்கு மானிய விலையில் மீன் விற்பனை வாகனங்கள் மற்றும் மீன் விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்குத் தரமான மீன்களை நியாயமான விலையில் வழங்கிடும் விதமாக, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்,

இணையதளம் மூலமாகவும், கைப்பேசி செயலி வாயிலாகவும் மீன் விற்பனையில் ஈடுபட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின்மூலம் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, கடல்சார் உணவு உற்பத்தியை மேம்படுத்த பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது இப்பல்கலைக்கழகத்தில் 38 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் 5 தொழில் நிறுவன இணைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மீன்வளப் பல்கலைக்கழகத்தில், மீனவச் சமுதாய மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டினை 5 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக அதிகரித்து ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பலனாக, கடந்த இரண்டாண்டுகளில் மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த 50 மாணவர்கள் இட ஒதுக்கீடுமூலம் கல்வி பயின்று வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களின் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. வருங்காலங்களில் மாநிலத்திலுள்ள அனைத்து மீனவ மக்களின் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆணைகள் பெறப்பட்டு படிப்படியாக நிறைவேற்றுவோம் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொண்டு, 2023–2024 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் வெளியிடுகிறேன்.

பிற்பகல் 6–15

அந்த அறிவிப்புகளை வெளியிடுவதற்குமுன், மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது, மீனவர் நலத் துறைக்கு 389 கோடி ரூபாயாகக் குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அந்த 389 கோடி ரூபாய் என்பது 3 திட்டங்களுக்கான ரூபாயே தவிர, வேறு எதுவும் இல்லை.

அதனுடைய மொத்த நிதி ஒதுக்கீடு என்ன என்பதை சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1,358 கோடியே 26 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் ரூபாய் 407 கோடியில் புதிய திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆனையிட்டிருக்கின்றார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

## (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

**1. மீன்பிடிக் கலன்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி உரிமத்தினை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் நடைமுறை கொண்டு வரப்படும்**

தமிழ்நாடு கடல்சார் மீன்பிடித்தலை ஒழுங்குமுறைப்படுத்தும் விதிகள், 2020–ன்கீழ் மீன்பிடிக் கலன்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி உரிமம் ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் மீன்பிடி உரிமத்தினைப் புதுப்பித்திடும் நடைமுறையினால் மீனவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் களைந்திடும் விதமாக, தற்போதுள்ள நடைமுறையினை மாற்றி, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மீன்பிடி உரிமத்தினைப் புதுப்பித்திட வழிவகை செய்யப்படும்.

**2. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்மூலம் வழங்கப்படும் இயற்கை மரணத்திற்கான நிவாரணத் தொகை 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்**

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனை உறுதி செய்திட தமிழ்நாடு அரசால் 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் நிறுவப்பட்டது. இந்நல வாரியத்தில் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு, பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அவற்றுள், உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடையும் நிகழ்வில், அவர்களின் குடும்பத்திற்கு தற்சமயம் வழங்கப்பட்டு வரும் 15,000 ரூபாய் உதவித் தொகை 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**3. கடலில் மீன்பிடிக்கும்பொழுது காணாமல் போகும் மீனவரின் குடும்பத்திற்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்**

*கடலில் மீன்பிடிக்கும்பொழுது காணாமல் போகும் மீனவரின் குடும்பத்திற்கு, தற்போது நாளொன்றுக்கு உதவித் தொகையாக 250 ரூபாய் வீதம் மாதத்திற்கு 7,500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. காணாமல் போகும் மீனவரின் குடும்பம், தங்களது வாழ்க்கையினை நடத்துவதில் ஏற்படும் சிரமங்களைக் கருத்திற்கொண்டு, அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் நாளொன்றுக்கான உதவித் தொகை 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தப்பட்டு, மாதம் ஒன்றிற்கு 10,500 ரூபாயாக வழங்கப்படும்.*

**4. தமிழ்நாட்டில் உள்ள 10,000 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு, 75 விழுக்காடு மானியத்தில், 40,000 'உயிர்காப்புச் சட்டைகள்' (Life Jackets), மொத்தம் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்**

*தமிழ்நாட்டின் கடற்பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், மீன்பிடித்தலின்போது ஏற்படும் விபத்து மற்றும் எதிர்பாராத அசாதாரண சூழ்நிலைகளில், கடலில் மூழ்குவதைத் தவிர்த்திடும் பொருட்டு, மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும்விதமாக, நடப்பாண்டில், 10,000 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு, படகு ஒன்றிற்கு நான்கு வீதம், மொத்தம் 40,000 உயிர் காப்புச் சட்டைகள்* (Life Jackets) *75 விழுக்காடு மானியத்தில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.*

**5. நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டையில் 40 கோடி ரூபாய் செலவில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்**

*நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டை பகுதி மீனவர்கள் சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாளுவதற்கும், தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும், படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், இப்பகுதியில் உள்ள மணல்திட்டுகளைத் தூர்வாரி அகற்றி, வடக்கு மற்றும் தெற்கு அலைத் தடுப்புச் சுவர், படகு அணையும் தளம், மீன் ஏலக்கூடம். வலை பின்னும் கூடம், உட்புறச் சாலை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், கழிப்பிடம் உள்ளிட்ட வசதிகளுடன்கூடிய சிறிய மீன்பிடித் துறைமுகம் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.*

**6. கன்னியாகுமரி மாவட்டம், இரையுமன்துறை மீன் இறங்குதளத்தினை தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தும் பணிகள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் பட்டினச்சேரி மற்றும் கீச்சான்குப்பம் ஆகிய மீனவக் கிராமங்களில் கடற்கரையோரத்தில் பாதுகாப்பு தடுப்புச் சுவர்கள் அமைக்கும் பணிகள் மொத்தம் 49 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

*கன்னியாகுமரி மாவட்டம், இரையுமன்துறை கிராமத்தினைக் கடலரிப்பிலிருந்து பாதுகாத்திடவும், மீனவர்கள் தங்கள் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், தூண்டில் வளைவுகளுடன்கூடிய அலை தடுப்புச் சுவர், மீன் ஏலக்கூடம் உள்ளிட்ட வசதிகள் மொத்தம் 35 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். மேலும், நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் பட்டினச்சேரி மற்றும் கீச்சான்குப்பம் கிராமப் பகுதிகளில், பாதுகாப்புத் தடுப்புச் சுவர்கள் மொத்தம் 14 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.*

**7. செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலிகுப்பத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், சின்னாங்குடி மீன் இறங்குதளம் மேம்பாட்டுப் பணிகள் மொத்தம் 49 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

*செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலிகுப்பத்தில் தூண்டில் வளைவு, வலை பின்னும் கூடம் போன்ற வசதிகளுடன், மீன் இறங்குதளம் 25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், மயிலாடுதுறை மாவட்டம், சின்னாங்குடி மீனவக் கிராம மீனவர்கள் தங்கள் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி வலைகளை சரிசெய்வதற்கும், முகத்துவாரத்தில் மணல் திட்டுகள் அகற்றப்பட்டு, நிலைப்படுத்தும் சுவர், வலைபின்னும் கூட வசதிகளுடன், மீன் இறங்குதளம் 24 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.*

**8. இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மேற்குவாடி மற்றும் ரோச்மாநகர் ஆகிய மீன் இறங்குதளங்கள் 45 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தப்படும்**

*இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மேற்குவாடியில் மீனவர்கள் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்திட ஏதுவாக, 25 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுகள் அமைக்கப்படும்*

*மற்றும் ரோச்மாநகர் மீன் இறங்குதளத்தில், தூண்டில் வளைவுகளுடன்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் 20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.*

**9. திருநெல்வேலி மாவட்டம், பெருமணல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், மேலகடியப்பட்டணம் மீன் இறங்குதளம் தூண்டில் வளைவுகளுடன்கூடிய மேம்பாட்டுப் பணிகள் 45 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

*திருநெல்வேலி மாவட்டம், பெருமணல் மீனவக் கிராம மீனவர்கள் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்திட வழிவகை செய்யும்வகையில், தூண்டில் வளைவுடன்கூடிய உட்கட்டமைப்புப் பணிகள் 20 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், மேலகடியப்பட்டணம் மீனவக் கிராம படகுகளைப் பாதுகாத்திட, தூண்டில் வளைவுடன்கூடிய அலை தடுப்புச் சுவர் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன், மீன் இறங்குதளம் 25 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திருநெல்வேலி, பெருமணலுக்குத் தந்ததற்கு நன்றி.*

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

**10. தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மீன் இறங்குதளம் தூண்டில் வளைவுகளுடன் 41 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்**

*தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மீன் இறங்குதளத்தின் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில், தூண்டில் வளைவுகள் நீட்டிக்கப்படுவதுடன், ஏற்கெனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இத்திட்டம் 41 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இதன்மூலம், இக்கிராமத்திலுள்ள 250–க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள் பயன்பெறும்.*

**11. திருநெல்வேலி மாவட்டம், கூத்தன்குழி மற்றும் இடிந்தகரை, இராமநாதபுரம் மாவட்டம், திருப்பாலைக்குடி மற்றும் நம்புதாளை, கடலூர் மாவட்டம், தேவனாம்பட்டினம் வடக்கு, தெற்கு மற்றும் சூர்யா நகர், விழுப்புரம் மாவட்டம், முட்டுக்காடு அழகன்குப்பம், வசவன்குப்பம்**

**மற்றும் கைப்பானிகுப்பம் ஆகிய 9 மீனவக் கிராமங்களில் 40 கோடி ரூபாய் செலவில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்**

*திருநெல்வேலி மாவட்டம், கூத்தன்குழி மற்றும் இடிந்தகரை மீனவக் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம், திருப்பாலைக்குடி மற்றும் நம்புதாளையில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் செலவிலும், கடலூர் மாவட்டம், தேவனாம்பட்டினம் வடக்கு, தெற்கு மற்றும் சூர்யா நகர் ஆகிய மீனவக் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் செலவிலும், விழுப்புரம் மாவட்டம், முட்டுக்காடு அழகன்குப்பம், வசவன்குப்பம் மற்றும் கைப்பானிகுப்பம் ஆகிய இடங்களில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் செலவிலும் அமைக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதிலும் கூத்தன்குழிக்கு கொடுத்ததற்கு நன்றி.*

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

**12. திருவள்ளூர் மாவட்டம், நொச்சிக்குப்பம், திருவாரூர் மாவட்டம், முனங்காடு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி ஆகிய 3 மீனவக் கிராமங்களில் 23 கோடி ரூபாய் செலவில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்**

*திருவள்ளூர் மாவட்டம், நொச்சிக்குப்பம் மீனவக் கிராமத்தில் படகு அணையும் தளம், வலைபின்னும் கூடம், மீன் உலர்த்தும் தளம் ஆகிய வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் 10 கோடி ரூபாய் செலவிலும், திருவாரூர் மாவட்டம், முனங்காட்டில் படகு அணையும் தளம், மீன் ஏலக்கூடம், அணுகு சாலை வசதிகள் மற்றும் தூர்வாருதல் ஆகிய பணிகளுடன் மீன் இறங்குதளம் மொத்தம் 10 கோடி ரூபாய் செலவிலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி மீனவக் கிராமத்தில், மீன் ஏலக்கூடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன், மீன் இறங்குதளம் மொத்தம் 3 கோடி ரூபாய் செலவிலும் அமைக்கப்படும்.*

**13. கன்னியாகுமரி மாவட்டம், அன்னை நகர் மீன் இறங்குதளத்தினை தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்துதல் மற்றும் தேங்காப்பட்டணம் மீன்பிடித் துறைமுகம் தூர்வாருதல் ஆகிய பணிகள் மொத்தம் 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

*கன்னியாகுமரி மாவட்டம், அன்னை நகர் மீனவக் கிராம படகுகளைக் கடல் சீற்றத்திலிருந்து பாதுகாத்திட, அன்னை*

*நகர் மீன் இறங்குதளம் 20 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தப்படும். மேலும், தேங்காப்பட்டணம் மீன்பிடித் துறைமுகப் பகுதியில் படகுப் போக்குவரத்திற்கு இடையூறாக படிந்துள்ள மணல் திட்டுகள் 5 கோடி ரூபாய் செலவில் தூர்வாரி சீரமைக்கப்படும்.*

**14. தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியன்பட்டணம் மற்றும் பெரியதாழை, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், வாலிநோக்கம் மற்றும் மோர்பனை ஆகிய 5 மீன் இறங்குதளங்கள் மொத்தம் 24 கோடி ரூபாய் செலவில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்**

*தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியன்பட்டணம் மற்றும் பெரியதாழை மீன் இறங்குதளங்கள் மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், மீன் உலர்தளம் மற்றும் கான்கிரீட் சாலை ஆகிய கூடுதல் வசதிகளுடன் மொத்தம் 13 கோடி ரூபாய் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம், திருப்பாலைக்குடி, நம்புதாளை மற்றும் மோர்பனை ஆகிய மீன் இறங்குதளங்களில் மீன் உலர்தளம், மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம் உட்பட பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன், மொத்தம் 11 கோடி ரூபாய் செலவிலும் மேம்படுத்தப்படும்.*

**15. திருவள்ளூர் மாவட்டம், அண்ணாமலைச்சேரி மற்றும் தூத்துக்குடி மாவட்டம், புன்னக்காயல் ஆகிய மீன் இறங்குதளங்கள் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுடன் 20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்**

*திருவள்ளூர் மாவட்டம், அண்ணாமலைச்சேரி மீன் இறங்குதளத்தில் தாழ்நிலை படகு அணையும் சுவர், வலைபின்னும் கூடம் மற்றும் கான்கிரீட் சாலை வசதிகள் ஆகிய கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவிலும், தூத்துக்குடி மாவட்டம், புன்னக்காயல் மீன் இறங்குதளத்தில், மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், மின் விளக்குகள், உட்புறச்சாலை வசதி மற்றும் தண்ணீர் வசதி ஆகிய பணிகள் 10 கோடி ரூபாய் செலவிலும் மேற்கொள்ளப்படும்.*

2023 ஏப்ரல் 5] [திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்]

**16. தஞ்சாவூர் மாவட்டம், நெய்தலூர் அரசு மீன் பண்ணையில் மீன் வளர்ப்புக் குளங்கள் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு பணிகள் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நெய்தலூர் அரசு மீன் பண்ணையில் மீன் வளர்ப்புக் குளங்கள் 3 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். இதன்மூலம் ஆண்டொன்றிற்குக் கூடுதலாக 30 இலட்சம் மீன் விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு, மீன் வளர்ப்போருக்கு விநியோகம் செய்யப்படும்.

**17. தஞ்சாவூர் மாவட்டம், சம்பைப்பட்டணம், காரங்குடா, பிள்ளையார் திடல், அடைக்கத்தேவன் மற்றும் கொள்ளுக்காடு ஆகிய இடங்களில் உள்ள படகு செலுத்தும் கால்வாய்கள் மற்றும் முகத்துவாரப் பகுதிகள் மொத்தம் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் தூர்வாரி சீரமைக்கப்படும்**

தஞ்சாவூர் மாவட்டம், சம்பைப்பட்டணம், காரங்குடா, பிள்ளையார் திடல், அடைக்கத்தேவன் மற்றும் கொள்ளுக்காடு ஆகிய பகுதிகளிலிருந்து, சுமார் 300–க்கும் மேற்பட்ட கண்ணாடி நாரிழைப் படகுகளைப் பயன்படுத்தி, மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்படகுகளின் போக்குவரத்திற்கு ஆதாரமாக உள்ள படகு செலுத்தும் கால்வாய்கள் மற்றும் முகத்துவாரங்களில் படிந்துள்ள மணல் திட்டுகளை அகற்றி, தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகள் மொத்தம் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 6–20

**18. திண்டுக்கல் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைமூலம் 80 இலட்சம் ரூபாய் செலவில் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும்**

திண்டுக்கல் மாவட்டத்தில் தரமான மீன்கள் மற்றும் மீன் உணவுகளை நியாயமான விலையில், சுகாதாரமான முறையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்திட ஏதுவாக, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, நிலக்கோட்டை மற்றும் கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் 4 நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள், திண்டுக்கல் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலமாக, மொத்தம் 80 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

[திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்] [2023 ஏப்ரல் 5

**19. தமிழ்நாட்டின் அண்மை கடற்பகுதியில் குறைந்து வரும் மீன்வளத்தை மேம்படுத்தும் வகையில் 3 கோடி ரூபாய் செலவில் கடலில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படும்**

*தமிழ்நாட்டின் அண்மை கடற்பகுதியில் ஏற்பட்டுள்ள மீன்பிடி அழுத்தத்தின் காரணமாக, மீன்வளம் குறைந்து வருகிறது. எனவே, கடலில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதன்மூலம் மீன்வளம் அதிகரிக்கும். முதற்கட்டமாக, மூன்று கோடி ரூபாய் செலவில் வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கடல் மீன் இனங்களான கடல் விரால், கொடுவா, பால்கெண்டை போன்றவற்றின் 60 இலட்சம் மீன் குஞ்சுகள் 3 கோடி ரூபாய் செலவில் கடலில் இருப்பு செய்யப்படும். இதன்மூலம், அண்மை கடற்பகுதியில் மீன்வளம் பாதுகாக்கப்படுவதுடன், மீன் உற்பத்தி பெருகி, மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட வழிவகை ஏற்படும்.*

**20. 500 மீனவ இளைஞர்களுக்கு மீன்பிடிப் படகு ஓட்டுநர் பயிற்சி 31 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்**

*மீனவ இளைஞர்கள் பாதுகாப்பான முறையில் படகு செலுத்தும் திறனை மேம்படுத்தும்பொருட்டு, மத்திய மீன்வளக் கடல் மாலுமியியல் மற்றும் பொறியியல் பயிற்சி நிறுவனம் (*CIFNET*) மூலமாக 'மீன்பிடிப் படகு ஓட்டுநர் பயிற்சி' கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படும். நடப்பாண்டில், 31 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில், 25 குழுக்களில் 500 மீனவ இளைஞர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படும்.*

**21. கொடுவா மீன் வளர்ப்பினை ஊக்குவிக்கும்வகையில் 95 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் கொடுவா மீன் வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சி அளிக்கப்படும்**

*தமிழ்நாட்டின் கடலோரங்களில் உவர்நீர் நிலப் பரப்பில் பெரும்பான்மையாக இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இறால் வளர்ப்பில் ஏற்படும் நோய் தாக்குதல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த விலை வீழ்ச்சி காரணமாக இறால் வளர்ப்பிற்கு உபயோகப்படுத்தப்படாமல் உள்ள குளங்களில், கொடுவா (*Sea bass*) மீன் வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் வகையில், 150 தொழில்முனைவோருக்கு, 95 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் கொடுவா மீன் வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சி வழங்கப்படும்.*

2023 ஏப்ரல் 5] [திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்]

**22. சென்னையில் வண்ண மீன் கண்காட்சி மற்றும் மீன் உணவுத் திருவிழா 50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்**

வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனையில் நாட்டின் முக்கிய மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் விலை மதிப்புமிக்க பல்வேறு வகையான வண்ண மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வண்ண மீன் வளர்ப்பு மற்றும் அதன் முக்கியத்துவத்தினை விளக்கிடும் வகையில் சென்னையில் வண்ண மீன் கண்காட்சி நடத்தப்படும். மேலும், பொதுமக்கள் உடல் நலனில் மீன் உணவின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மீன் உணவுத் திருவிழாவும் நடத்தப்படும். இத்திட்டங்கள், மொத்தம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

சென்னையில் வண்ண மீன் கண்காட்சி மற்றும் மீன் உணவுத் திருவிழா. இன்றைக்கு குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், மீன் உணவுத் திருவிழா நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அந்தக் கோரிக்கை இப்போதே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சென்னையில் வண்ண மீன் கண்காட்சி மற்றும் மீன் உணவுத் திருவிழா ரூ.50 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

**23. உள்நாட்டு மீனவர்கள் மீன்பிடி உபகரணங்கள் வாங்கிட 50 விழுக்காடு மானியமாக 1 கோடி ரூபாய் வழங்கப்படும்**

உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் நீர்த்தேக்கங்கள், ஆறுகள், குளங்கள், ஏரிகள் மற்றும் இதர நீர்நிலைகளில் தமது வாழ்வாதாரத்திற்காக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். நீர்த்தேக்கம் மற்றும் குளங்களில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ளும் உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் திறனை மேம்படுத்தும் வகையில், 1,000 உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களான மீன்பிடி வலை மற்றும் பரிசல்கள் வாங்கிட 50 விழுக்காடு மானியமாக ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும்.

[திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்] [2023 ஏப்ரல் 5

**24. சுகாதாரமான முறையில் மீன் விற்பனை செய்வதற்கான பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள், மீன் விற்பனை நிலையங்கள், குளிர்காப்பிடப்பட்ட வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் வாங்கிட பயனாளிகளுக்கு 9 கோடியே 87 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்**

*தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 10, 20, 30 மற்றும் 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட 10 பனிக்கட்டி ஆலைகள், 5 சிறிய மீன் அங்காடிகள், 5 உயிர் மீன் விற்பனை நிலையங்கள் ஆகியன அமைத்திடவும், 40 குளிர்காப்பிடப்பட்ட வாகனங்கள் மற்றும் 5 மூன்று சக்கர வாகனங்கள் வாங்கிடவும், பயனாளிகளுக்கு மொத்தம் 9 கோடியே 87 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.*

**25. மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல், இடுபொருள் வழங்குதல் மற்றும் உவர்நீர் உயிர்க்கூழ்ம (Bio–floc) மீன் வளர்ப்பு ஆகிய திட்டங்களுக்கு 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்**

*மீன் வளர்ப்புப் பரப்பினை விரிவுபடுத்திடவும், உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்திடவும், 10 எக்டேர் பரப்பளவில் புதிய மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் மற்றும் மீன் வளர்ப்பிற்கான உள்ளீட்டுப் பொருட்களுக்கான மானியமாக 57 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயும், நவீன மீன் வளர்ப்பு தொழில்நுட்பமான உயிர்க்கூழ்ம (Bio–floc) முறையில், குறைந்த நிலப்பரப்பில் அதிக அளவு இறால் உற்பத்தி செய்திட ஊக்கப்படுத்திடும் வகையில் 5 உயிர்கூழ்ம (Bio–floc) அலகுகளுக்கு மூலதன மற்றும் நடைமுறைச் செலவின மானியமாக 43 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.*

**26. கடலில் மிதவைக் கூண்டுகள் அமைத்து மீன் வளர்ப்பு மேற்கொள்ள, மீனவர்களுக்கு 40 விழுக்காடு மானியமாக 55 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்**

*தமிழ்நாட்டின் கடலோர மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரத் திட்டங்களின்மூலம் வருமானத்தைப் பெருக்கிட, கடலில் மிதவை கூண்டுகள் அமைத்து, மீன் வளர்ப்பு மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் 25 மிதவைக் கூண்டுகள் அமைத்து, அவற்றில் வணிக முக்கியத்துவம் வாய்ந்த கடல் விரால், கொடுவா, பாறை போன்ற கடல் மீன்கள் வளர்த்திட 55 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.*

**27. தமிழ்நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்வதற்கு 77 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும்**

*உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிடவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 6,434 எக்டர் பரப்பளவிலான நீர்த்தேக்கங்களில், சுமார் 64 இலட்சம் நன்கு வளர்ந்த கட்லா, ரோகு, மிர்கால் போன்ற மீன்குஞ்சு விரலிகள் 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் மொத்த செலவில் இருப்பு செய்யப்படும். இத்திட்டத்திற்கென 77 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.*

**28. நீலகிரி மாவட்டத்தின் உயர்மட்ட நீர்நிலைகளில், 'டிரவுட் மீன்' இருப்பினைப் பெருக்குவதற்கு, 77 இலட்சம் ரூபாய் செலவில் கருவுற்ற முட்டைகள் எடுத்து வரப்பட்டு, வளர்க்கப்பட்டு, இருப்பு செய்யப்படும்**

*நீலகிரி மாவட்டத்தில் உயர்மட்ட நீர்நிலைகளில் நீண்டகாலமாக ட்ரவுட் மீனினங்கள் இருப்பு செய்யப்பட்டு வருகின்றன. இங்குள்ள 'ட்ரவுட்' தாய் மீன்களில் மரபியல் மேம்பாடு அடையச் செய்திடும் வகையில், 77 இலட்சம் ரூபாய் செலவில் பிற மாநிலங்களிலிருந்து ஆண்டொன்றிற்கு 3 இலட்சம் கருவுற்ற ட்ரவுட் மீன்முட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு, அவலாஞ்சி அரசு மீன் பண்ணையில் வளர்த்தெடுக்கப்பட்டு, நீலகிரி மாவட்ட உயர்மட்ட குளிர் நீரோடைகளில் இருப்பு செய்யப்படும்.*

**29. உள்நாட்டு மீன் வளத்தினைப் பெருக்கிடும்பொருட்டு நாட்டின மீன் வகைகள் மற்றும் இந்திய பெருங்கெண்டை மீன்குஞ்சுகள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் ஆறுகளில் இருப்பு செய்யப்படும்**

*தமிழ்நாட்டில் உள்ள முக்கிய ஆறுகளில் நாட்டின மீன் வகைகளின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும், ஆறுகளை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள உள்நாட்டு மீனவர்களின் வருமானத்தைப் பெருக்கிடும் நோக்கில், நாட்டின மீன் வகைகளான சேல்கெண்டை, கல்பாசு மற்றும் இந்தியப் பெருங்கெண்டை ஆகியவற்றின் 40 இலட்சம் மீன்குஞ்சுகள், 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் காவிரி, பவானி, தாமிரபரணி மற்றும் அதன் கிளை ஆறுகளில் இருப்பு செய்யப்படும்.*

**30. மதுரை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைமூலம் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வர்த்தக மையம் 1 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்**

*அலங்கார மீன் உற்பத்தியில் மதுரை மாவட்டம், தென் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்குகிறது. வண்ண மீன் உற்பத்தியாளர்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் அதிக அளவிலான வண்ண மீன் இனங்களை ஒரே இடத்தில் விற்பனை செய்திட ஏதுவாக, மதுரை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைமூலம் ஒரு கோடி ரூபாய் செலவில் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வர்த்தக மையம் அமைக்கப்படும். இம்மையம்மூலம் வண்ண மீன் வணிகம் அதிகரிக்கும்.*

**31. சென்னை, மாதவரம் பகுதியிலுள்ள மணலி மற்றும் மாத்தூர் ஏரிகளைச் சீரமைத்து, பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன்கூடிய சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் 10 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

*சென்னை மாநகரிலுள்ள மாதவரம் பகுதியில் ஏறத்தாழ 50 ஏக்கர் பரப்பளவில் அமையப் பெற்றுள்ள மணலி மற்றும் மாத்தூர் ஏரிகள் தற்பொழுது மழை நீர் சேகரிப்பிற்கும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின், கால்நடை பண்ணைக்கான பசுந்தீவன உற்பத்திக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாதவரம் மற்றும் மாத்தூர் பகுதி பொதுமக்களின் கோரிக்கைகளின்படி, இந்த ஏரிகளை மீன் வள சுற்றுலாத் தலமாக மேம்படுத்திடும் வகையில், மணலி மற்றும் மாத்தூர் ஏரிகளைச் சீரமைத்து, மீன்பிடிப்பு உள்ளிட்ட பொழுதுபோக்கு வசதிகளுடன்கூடிய சுற்றுச்சூழல் பூங்கா ஏற்படுத்துவதற்கு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் சாத்தியக்கூறு ஆய்வுகள் 10 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.*

**32. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் வியாபார கட்டமைப்புகளை விரிவுபடுத்துவதற்கு மூன்று பனிக்கட்டி நிலையங்கள் அமைத்தல் மற்றும் மூன்று டீசல் விற்பனை நிலையங்களைப் புனரமைத்தல் ஆகிய பணிகள் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

*நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறை, நம்பியார் நகர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், கீழமூவர்க்கரை*

மீனவக் கிராமங்களில் பனிக்கட்டி நிலையங்கள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைபேட்டை, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் (வடக்கு) மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரம் ஆகிய இடங்களிலுள்ள டீசல் விற்பனை நிலையங்கள் 60 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

**33. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் வாயிலாக வண்ண மீன் வகைகளை இறக்குமதி செய்து, உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்**

தமிழ்நாட்டில் வண்ண மீன் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள், பிரபலமான வெளிநாட்டு மீன் வகைகளை இறக்குமதி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, தமிழ்நாட்டில் உள்ள வண்ண மீன் உற்பத்தியாளர்கள் நலனுக்காகவும், வண்ண மீன் உற்பத்தியை ஊக்குவித்திடும் வகையிலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் வாயிலாக வண்ண மீன் வகைகளை இறக்குமதி செய்து உற்பத்தியாளர்களுக்கு வழங்கிடும் திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைப்பிற்கு இலக்கணமாக விளங்கும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய சீரிய தலைமையில் நாங்கள் அயராது உழைப்போம் என்ற உறுதியை மீண்டும் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியவற்றில் அரசு அறிவித்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்து வருகின்ற அரசு முதன்மைச் செயலாளர் மரியாதைக்குரிய திரு. A. கார்த்திக், I.A.S. அவர்களுக்கும், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் டாக்டர் K.S. பழனிசாமி, I.A.S. அவர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி எம். லட்சுமி, I.A.S. அவர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு சட்டமன்ற

உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், கால்நடை பராமரிப்புத் துறையில் 176 வெட்டுத் தீர்மானங்களையும், மீன்வளத் துறையில் 153 வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்துள்ளார்கள். அவற்றையெல்லாம் நான் முழுமையாகப் படித்துள்ளேன். அவற்றிற்கு முடிந்தவரை பதிலும் கூறியுள்ளேன். முடிந்தவரை, மாண்புமிகு உறுப்பினர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மை (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் வாய்ப்புத் தருகிறேன்; எல்லாம் முடிந்துவிடட்டும். மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றிய பிறகு, கண்டிப்பாக வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உறுதியாக வாய்ப்புத் தருவேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

பிற்பகல் 6–25

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கி, வேளாண் துறைக்கு மிகவும் ஆதரவாக இருக்கின்ற மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாமன்றத்தில் பல்வேறு துறைகளின் சார்பாக மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்கின்ற வாய்ப்பினை பதின்மூன்றாவது முறையாக, குறிப்பாக வேளாண் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்து, மேலும், வேளாண் துறைக்குத் தனி பட்ஜெட்டை மூன்றாவது முறையாக தாக்கல் செய்து, அதற்கும்

பதிலுரை அளிக்கின்ற வாய்ப்பினை நல்கி, மிகவும் ஆதரவு கொடுத்து, வேளாண் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து, அந்த உணர்வை எங்களுக்கு ஊட்டிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை இந்த சபையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் டெல்டா மாவட்டத்தைச் சார்ந்தவர்கள்தாம். அம்மாவட்ட மக்களின் உணர்வை உணர்ந்து, இன்றையதினம், வேளாண் மண்டலத்தில் எந்தவொரு நிலக்கரி ஒப்பந்தப் பணியையும் நிறைவேற்றுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று இங்கே சட்டமன்றத்தில் உறுதியாகத் தெரிவித்து, அதற்குரிய நடவடிக்கையையும் எடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) பாரதப் பிரதமர் அவர்களிடம் கடிதம் மூலமாகத் தெரிவித்து, பாராளுமன்றத்தில் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் மூலமாக அதற்கு விளக்கம் கொடுத்து, எங்கள் பகுதி மக்களுடைய அச்சத்தைப் போக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்போதும் களத்திலே இருக்கின்ற ஒரு போராளி; களத்திலே செயல்படக்கூடியவர்; பல களங்களைக் கண்டவர்; போராட்ட குணம் மிக்கவர். எந்த நிகழ்வை எடுத்துக் கொண்டாலும் அதை நிறைவேற்ற வேண்டும் என்கிற உணர்வுடன், உறுதியுடன் பணியாற்றுகின்ற ஒரு நல்ல முதல்வர் நமக்குக் கிடைத்திருக்கின்றார்கள். தமிழ்நாடு பல களங்களைக் கண்டுள்ளது. அந்தக் களங்கள் எல்லாம் வித்தியாசமான களங்களாகும். கள ஆய்வில் முதலமைச்சர்; திட்டக் களமாகும். எந்தவொரு முதலமைச்சரும் மாவட்டங்கள்தோறும் நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டிருக்க மாட்டார்கள்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் அமர்ந்து கொண்டு துறை சார்ந்த அலுவல்களைச் செய்வார்கள். களத்திற்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்கின்ற பணியை நாங்கள் மேற்கொள்வோம்; நாங்கள் மேற்கொள்கிறோம். அந்தந்த மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று அனைத்துத் துறைகளுடனும் களத்திலே நின்று பணியாற்றுகின்றபோது, அந்தக் கிராமத்திலுள்ள கடைகோடி மக்கள் வரை திட்டங்களைத் துரிதமாகக் கொண்டு செல்கின்ற வாய்ப்பு ஏற்படும். அந்தக் கள

ஆய்வின்மூலம் அதிகாரிகளை, இன்னும் சொல்லப்போனால், அடித்தளத்தில் இருக்கின்ற பணியாளர்களையும் சந்தித்து, ஆலோசனைகள் வழங்குவதன் மூலமாக, திட்டங்களை நிறைவேற்றக்கூடிய ஒரு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கிற முதலமைச்சர் நம் மாண்புமிகு முதலமைச்சர். முதன்முதலாக கடைகோடியில் பணியாற்றும் கடைசி அலுவலர் வரை திட்டங்கள் தொடர்பாக ஆய்வு செய்து, அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி, திட்டச் செயலாக்கத்தை விரைவுபடுத்துவதே இந்த ஆட்சியின் முத்தாய்ப்பான நோக்கமாகும். கள ஆய்வு கண்ட முதலமைச்சரே, எல்லா களமும் உம்முடைய களமே! உம்முடைய காலத்தில் செந்தமிழ் நாட்டு மக்களுக்கு என்றும் பொற்காலமே! உழுதுண்டு வாழும் உழவர்தம் வாழ்வில் விடியலைத் தந்திட விடிவெள்ளியாய் வந்தது நம்முடைய வேளாண்மை நிதிநிலை அறிக்கை! துள்ளி விளையாடும் பள்ளிக் குழந்தைகள் துவங்கி, நானிலம் செழிக்க நல் இயற்கை விவசாயம் தந்திட்ட நம்மாழ்வார் வரை, என்ன இல்லை இங்கே!

பிற்பகல் 6—30

கிராம ஊராட்சி தன்னிறைவு பெற கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்! ஆழ்துளைக் கிணறு முதல் வளமாய் மீன் வளர்க்க பண்ணைக் குட்டை வரை அனைத்தும் உண்டு இங்கே! குறுவைப் பருவத்தில் மாற்றுப் பயிர் சாகுபடி; பாரம்பரியம் காத்திட மரபுசார் நெல் விநியோகம்; மண்ணைப் பொன்னாக்க அங்கக வேளாண்மை; மரத்தைச் செல்வமாக்க பசுமைப் போர்வை இயக்கம்; உழவர் வருமானம் பெருகிட சிறுதானிய இயக்கம்; உழவர் உள்ளங்களில் வாழ்வெல்லாம் இனிக்க கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை; எறும்பாய் உழைக்கும் கரும்பு உழவருக்கு ஏற்றம் தந்திடவே இணையற்ற திட்டங்கள்; உழவர் சந்தைகள் மேம்பட தொன்மைசார் உணவகங்கள்; முத்தான முருங்கைக்கும், சத்தான வாழைக்கும் ஏற்றுமதி மண்டலங்கள்; கறிவேப்பிலைக்குக் கரிசனம் இங்கே; பலா முதல் பனை வரைக்கும் பற்பல மானியங்கள்; வேளாண் விரிவாக்கம் விரைவாகச் சென்றடைய உழவர்—அலுவலர் தொடர்புத் திட்டம் 2.0; விளைகின்ற பொருட்களுக்குக் கூடுதல் விலை பெற்றிட மதிப்பு கூட்டும் தொழில்நுட்பம்; விவசாயி விலை அறிய மின்னணு வேளாண் சந்தை; பண்ணை வயலுக்கே சென்று விளைபொருட்கள் கொள்முதல்; ஒடுக்கப்பட்ட மக்களுக்குக்

கொடுக்கப்படும் மானியத்தைக் கூடுதலாக்கி சரித்திரம் படைக்கிறார் சமூக நீதி முதலமைச்சர்; இப்படியாய் விவசாயிகளின் வாழ்வில் மகிழ்ச்சியைக் கண்டிட, மகத்தான திட்டங்களைத் தந்ததுதான் இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை. இதனால் எங்கும் பசுமை, எதிலும் வளர்ச்சி, கண்டவர் முகங்களில் ஊற்றாய் மகிழ்ச்சி; உங்களில் ஒருவர், உங்களுக்கே ஒருவர், உங்களை உயர்த்திட என்றும் உழைப்பார் நம் மாண்புமிகு முதலமைச்சர். தமிழ்நாட்டில், என்றும் தரணி போற்றும் உற்பத்தியைப் பெருக்குவோம்; உச்சம் எட்டுவோம். இதுதான் இந்த பட்ஜெட்டினுடைய சாராம்சம். ஆகவே, இது வளரும்போது, தமிழ்நாடு மலர்ச்சியாக வரக்கூடிய வாய்ப்பு.

நம்முடைய முன்னாள் அமைச்சர், மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களுடைய பேச்சில் வேளாண் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தேவையா, தேவையில்லையா என்ற கருத்தை முன் வைத்து அவர் பேசுகிறார் என்ற எண்ணம் தோன்றுகிறது. தனி நிதிநிலை அறிக்கை அளிக்கும்போது, விவசாயிகளுக்கு முக்கியத்துவம் தரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

இந்த 22 மாதக் கால சாதனைகள்-மொத்த சாகுபடி பரப்பு-63 இலட்சத்து 48 ஆயிரம் எக்டர்; கடந்த ஆண்டைவிட கூடுதலாக 1 இலட்சத்து 93 ஆயிரம் எக்டர் சாகுபடி பரப்பு உயர்ந்திருக்கிறது. அதேபோல், உணவு தானிய உற்பத்தி 6 ஆண்டுகளுக்குப் பிறகு சாதனை அளவை எட்டியிருக்கிறது. மொத்த உணவு தானிய உற்பத்தி 119 இலட்சத்து 97 ஆயிரம் மெ. டன். இது கடந்த ஆண்டைவிட 11 இலட்சத்து 73 ஆயிரம் மெ. டன் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. 22 மாதக் காலத்தில் இந்தளவுக்கு சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்றால், இந்த நிதிநிலை அறிக்கையின் வாயிலாக வளர்ச்சி வளர வளர, விவசாயிகளுடைய வாழ்வில் கண்டிப்பாக வசந்தம் வீசும் என்பதை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்; விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, குழந்தை பிறந்து, தவழ்கின்ற குழந்தையாக இருந்து, தற்போது நடக்கின்ற குழந்தையாக இருக்கும்போது, இந்தளவுக்கு வளர்ச்சி எனும்போது, இன்னும் நடந்து, ஓடி வளரும்போது, விவசாயிகளும் கண்டிப்பாக வளருவார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொரோனா காலகட்டம்; நிதியை நீங்கள் சரியாகக் கையாளாத காரணத்தால், இன்னும் சொல்லப்போனால், 10 ஆண்டுக் காலத்தினுடைய ** இவ்வளவு கடன் பாக்கி வைத்து, பல திட்டங்களை, சொன்னதை. . . (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்; உங்களுக்கு வாய்ப்பு தருவதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** கொறடா அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்; உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன். எல்லாவற்றையும் நீங்கள் பதிவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்) என்ன சொன்னார்கள் என்பதை ஓர் உறுப்பினர் எழுந்து நின்று தெரிவிக்கவும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ** வேண்டாம்; நல்ல கோலம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) ** நீக்கப்பட்டது; நல்ல கோலம் போட சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நாங்கள் பேசுகின்ற வார்த்தை அப்படியிருக்கும். நாங்கள் சொல்வது உங்களுக்குத்தான் புரியும். மக்களுக்குப் புரிய வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும்; மாண்புமிகு அமைச்சர் என்னைப் பார்த்து பேசி உரையை முடிக்கவும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5*]

*பிற்பகல் 6–35*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** நம்முடைய இந்த முயற்சியால், வேளாண் துறைக்கென்று தனி நிதிநிலை அறிக்கையினால், மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை, கரும்பு, கிராம்பு, புளி, மல்லிகை (குண்டு மல்லி), சம்பங்கி ஆகியவற்றின் உற்பத்தித் திறன் அதிகரித்து தேசிய அளவில் தமிழ்நாடு முதல் இடத்தை பெற்றிருக்கிறது. நெல் உற்பத்தியில் இரண்டாவது இடத்தை நாம் பெற்றிருக்கின்றோம். தென்னை உற்பத்தியில் மூன்றாவது இடத்தை நாம் பெற்றிருக்கின்றோம். சிறு தானிய உற்பத்தியில் நான்காவது இடத்தை நாம் பெற்றிருக்கின்றோம். ஆக, 22 மாதக் காலத்தில் இது உருவாக்கப்படும்போது, இது இன்னும் மேலும் வளரும் என்பது Agriculture படிப்பு படித்த திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உணர்வார்கள் என்று நம்புகின்றேன். திரு. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தெரியும். வளர்ச்சி என்பது விவசாயத்தைப் பொறுத்தவரையில் உடனடியாக vision ஆக, பார்வையாகக் கொண்டு வர முடியாது. அதனுடைய வளர்ச்சி, விவசாயிகளுக்கு—இன்னும் சொல்ல வேண்டுமென்றால் ‘உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது’ என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு அரசாங்கம் இவ்வளவு நிதி நெருக்கடியிலும், இவ்வளவு சாதனைகளைச் செய்திருக்கிறது. தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை நிதி நெருக்கடியிலும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். நிதி மட்டும் தாராளமாக இருந்தால் விவசாயிகளுடைய விதியும் நல்ல முறையில் அமையும். விவசாயிகளின் விதி நல்ல முறையில் அமைவதற்கு ஒரு தொடக்கமாக இந்த பட்ஜெட் உள்ளது. ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் வேளாண் budget போட்டு என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். Label ஒட்டுவது—Label ஒட்டுவது அவர்களுக்குத்தான் பழக்கம். கடந்த காலங்களில் label ஒட்டும் நிகழ்ச்சிகளை எல்லோரும் பார்த்திருக்கின்றோம், மக்களும் பார்த்திருக்கிறார்கள். அதுதான் எங்களை இங்கே மாற்றி உட்கார வைத்திருக்கிறது. எங்களை இங்கே மாற்றி உட்கார வைத்ததற்குக் காரணம், நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்திருந்தோம், இப்போது இங்கு உட்கார்ந்திருக்கிறோம். காரணம், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய—நீங்கள் எல்லாவற்றையும் செய்து, (குறுக்கீடு) அது மாறாது. அது மாறவே மாறாது. ஏனென்றால் அந்த அளவிற்கு சாதனைகளைச் செய்திருக்கிறோம். அடித்தட்டு

மக்களுடைய ஆதாரம் கிராமம். கிராமத்து மக்களின் வளர்ச்சியைக் கூறுகின்றது வேளாண்மைத் துறை. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அனைத்து விவசாயச் சங்கங்களும், விவசாயிகளும் பாராட்டக்கூடிய அளவிற்கு அறிவித்திருக்கிறோம். ஏனென்றால் ஒவ்வொரு மண்ணுக்கும் ஏற்ற பயிர்களுக்கு இங்கே சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 500–க்கும் மேற்பட்ட விவசாயிகளின் கருத்தை அறிந்து, அவர்கள் வைத்த கோரிக்கைகளை நாங்கள் அறிவிப்பாக அறிவித்திருக்கின்றோம்.

கரும்பைப் பொறுத்தவரையில், கரும்புப் பயிர் உற்பத்தி குறைந்திருக்கிறது. கலைஞர் அவர்கள் ஆட்சியிலிருந்தபோது கிட்டத்தட்ட 2¼ இலட்சம் எக்டர் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. பத்து ஆண்டுக் காலத்தில் இப்போதுதான் வீழ்ச்சி. கரும்புத் துறையில் வீழ்ச்சியடைந்து, 95 ஆயிரம் எக்டேர்தான் இருந்தது. இப்போது ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் எக்டேர் அளவிற்கு 22 மாத காலத்தில் கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை தந்திருக்கின்றோம். இதே சட்டமன்றத்தில், கரும்பு வெட்டுவதற்கு பணம் தரவில்லை என்று சொல்லி நாங்கள் குரல் கொடுத்து, கோரிக்கை வைத்தோம். ஆனால், அதற்கு அப்போது செவி சாய்க்கவில்லை. இப்போது சர்க்கரை ஆலைகள்மூலம் கரும்பு வெட்டப்பட்ட விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை பாக்கியில்லாமல் நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இது உங்கள் மனசாட்சிக்குத் தெரியும். இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், விவசாயிகளுக்கும் தெரியும். ஒரு நம்பிக்கை. கடந்த ஆண்டு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இந்த ஆண்டு இதுவரை கிட்டத்தட்ட 95 கோடி ரூபாய் அளவிற்கு கடந்த ஆட்சியைவிட இப்போது அதிகமாகக் கடன் சுமை குறைந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளுடைய நிலுவை பாக்கிக்கெல்லாம் நிதி நெருக்கடியிலும் உடனடியாக நிதி ஆதாரத்தைக் கொடுத்து, விவசாயிகளுக்கு பாக்கியில்லாமல் நிதியைக் கொடுத்த காரணத்தினால்தான் நம்பிக்கை பெற்றிருக்கின்றது.

இரண்டு சர்க்கரை ஆலைகளில் Ethanol உற்பத்திச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அதற்கும் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, டெண்டர் விடுகின்ற செயல்—அந்த Ethanol plant வரும்போது விவசாயிகளுடைய எண்ணிக்கை—நீங்கள் டன் ஒன்றுக்கு நான்கு ஆயிரம் என்று சொன்னீர்களே, நான்கு ஆயிரத்தைவிட கூடுதலாக விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய

நடவடிக்கைகளை நாங்கள் இந்த 22 மாத ஆட்சிக் காலத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆக, 10 ஆண்டுக் காலத்தில் நொடிந்துபோன கரும்பு விவசாயிகளுக்கு—ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். நலிவுற்று இருந்த சர்க்கரைத் துறையில் இந்த அளவுக்கு நாங்கள் இப்போது வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றோம். இதுபோன்று ஒவ்வொரு துறையிலும், நெல் உற்பத்தியில் சாதனைப் படைத்திருக்கின்றோம். கரும்பு உற்பத்தியில் நாங்கள் சாதனைப் படைக்கப் போகின்றோம். கண்டிப்பாக டன் ஒன்றுக்கு நான்கு ஆயிரம் ரூபாயைக் கொடுக்கப் போகின்றோம். சொன்ன சொல்லை நிறைவேற்றுவோம். இன்னும் மூன்று ஆண்டுக் காலம் இருக்கிறது. அதற்குள் கொடுக்கக்கூடிய வாய்ப்பு வரும், கொடுத்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 6—40

அதேபோல, இன்னும் சொல்லப் போனால் ஆட்கள் பற்றாக்குறை. விவசாயிகளுக்கு உள்ள ஒரு சவால் என்னவென்றால், ஆட்கள் பற்றாக்குறை. விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை இருக்கிறது. எல்லா விவசாயிகளுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இன்று பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 100 நாள் வேலைத் திட்டத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்தார்கள். அதை மாற்றுவதற்கு, அவற்றைக் கருவிகள் மூலமாக, இயந்திரமயமாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, வேளாண்மை இயந்திரமயமாக்கலுக்காக இந்த ஆண்டு கிட்டத்தட்ட 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, இத்தகைய நிதியாதாரங்கள். இன்னொன்று படிப்படியாகச் செய்யும்போது இது வளர்ச்சி. அடுத்தாண்டு, அடுத்தாண்டு கூடுதலாகும்போது விவசாயிகள் நல்ல வளர்ச்சி பெறக்கூடிய ஒரு வாய்ப்பை, உருவ அடித்தளத்தை கட்டமைக்கின்றார். இப்போது அடித்தளத்தைக் கட்டமைக்கின்ற பணி ஒரு வீடு கட்ட வேண்டுமென்றால், அங்கு foundation, அடித்தளம் போட வேண்டும். உடனே ஒரு கட்டடத்தைக் கட்ட முடியாது. ஆக, எப்படி கட்டட கட்டுமானத்தை நாம் மேற்கொள்கிறோமோ அதேபோலத்தான் விவசாயிகளுடைய கட்டமைப்பை நாங்கள் இப்போது strong செய்து கொண்டிருக்கிறோம். ஆக, அது கட்டடங்கள்போல வளரும்போது, கண்டிப்பாக நிதியாதாரம் கொடுக்கின்றபோது, அவர்கள் மகிழ்ச்சியாக வளரக்கூடிய

வாய்ப்பை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் இந்தளவுக்கு சாதனைகளைச் செய்து முடித்திருக்கிறோம். பட்ஜெட்டில், மானியக் கோரிக்கையில் நான் மூன்றாவது முறையாக பதிலுரையாற்றுகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இங்கு பேசும்போது கூறினார்கள். (குறுக்கீடு) நிறைவு செய்துவிட்டேன். முடித்துவிட்டேன். (குறுக்கீடு) முடிந்துவிட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், உலர்களங்களை அதிகரிக்க வேண்டுமென்றார். கடந்த ஆண்டும் உலர்களங்கள் கொடுத்திருக்கிறோம். நடப்பாண்டில் 250 உலர்களங்கள் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உலர்களம் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார். உலர்களம் அமைக்க வேண்டுமென்றால், இடம் வேண்டும். அதற்கான இடத்தைக் கண்டறிந்து கொடுக்கின்றபோது, அது கண்டிப்பாகக் கிடைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கன்னியாகுமரி மக்கள் முந்திரி விளைவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் இங்கே கூறினார்கள். இந்த ஆண்டு முந்திரி சாகுபடியை ஊக்குவிப்பதற்காக, கூடுதலாக 500 எக்டேர் அதிகரித்தல், 500 எக்டேரில் பழைய முந்திரி தோட்டங்களைப் புதுப்பித்தல் போன்ற அறிவிப்பை அறிவித்திருக்கின்றோம். (குறுக்கீடு) பருத்திக்குக் கேட்டார்கள். எல்லாம் கொடுத்துவிட்டோம். இப்போது மக்காச்சோளத்திற்குக் கேட்டிருக்கிறார்கள். சோளத்திற்கும் கொடுத்திருக்கிறோம். இப்போது, முந்திரி. முந்திரியைப் பொறுத்தவரையில், (குறுக்கீடு) பார்ப்போம். (குறுக்கீடு) பார்ப்போம். எங்களுடைய பக்கமும் முந்திரி சாகுபடி இருக்கிறது. நாம் சொல்கிறோமே தவிர, முந்திரி (குறுக்கீடு)

நம்முடைய முன்னாள் அமைச்சர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள், வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்றார்கள். கல்லூரி கொடுத்துவிட்டீர்களே, ஆனால், அதற்குக் கட்டடம் கட்டவில்லையே! அது அங்கு இருக்கிறது, இங்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், குடவாசலில் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்காக 3 ஏக்கர் நிலம் கொடுக்க முடியவில்லை;

அன்று ready செய்யவில்லை. இப்போது நாங்கள் 120 ஏக்கர் நிலத்தைக் கண்டறிந்திருக்கிறோம். அதுகுறித்து மாவட்ட ஆட்சியர் மூலமாக proposal–ம் வந்திருக்கிறது. அது clear ஆனவுடன், கண்டிப்பாக, இன்னும் இரண்டாண்டுகளில் அங்கு கட்டடம் கட்டி முடிப்போம். ஏனென்றால், தலைவர் கலைஞர் அவர்களால் அதற்கு ஏற்கெனவே அடிக்கல் நாட்டப்பட்டு, பின்னர் அகற்றப்பட்டது. அதனுடைய வலி எங்களுக்கு இருக்கிறது. அந்த இடத்தில் கல்லூரி அமைக்க வேண்டும்; கல்லூரி நடத்த வேண்டுமென்ற வலி உங்களைவிட எங்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்த இடத்தில் கல்லூரி அமைக்க வேண்டுமென்று எண்ணி இப்போது நாங்கள் அங்கு அமைத்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இடத்திற்கு அறநிலையத் துறையின் மூலமாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து proposal வந்திருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் முடிந்தவுடன், அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) சரி. இதுகுறித்து பட்ஜெட்டிலும் கூறியிருக்கிறோம்; இப்போது மானியக் கோரிக்கையிலும் பேசியிருக்கிறோம்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கிட்டத்தட்ட 214 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 51 தலைப்புகளில், 51 கருத்துகளை முன்வைத்து, 214 வெட்டுத் தீர்மானங்கள் மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒரு சிலவற்றுக்குப் பட்ஜெட்டிலும், இந்த மானியக் கோரிக்கையிலும் நாங்கள் அறிவித்திருப்போம். ஒரு சிலவற்றுக்கு நாங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, வேளாண்மை–உழவர் நலத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை சிறப்பாக. . .

பிற்பகல் 6–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிப்புகளையும் வாசித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *புதிய அறிவிப்புகள் 18 உள்ளன. நேரத்தின் அருமை கருதி, அறிவிப்புகளின் தலைப்பை மட்டும் இங்கே நான் படிக்கின்றேன். மீதம் உள்ளவற்றை நான் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பதிவு செய்துகொள்ளப்படும்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *புதிய அறிவிப்புகள்.*

## வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

**1. இடுபொருட்களை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்கிட 2023–2024 ஆம் ஆண்டில் 10 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்**

*2023–2024 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம், திருச்சிற்றம்பலம், அணைக்கரை, புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம், ஈரோடு மாவட்டம், பர்கூர், மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர், நாகப்பட்டினம் மாவட்டம், கணபதிபுரம், திருவள்ளூர் மாவட்டம், கிளாம்பாக்கம், திருவாரூர் மாவட்டம், திருக்கண்ணமங்கை, சிவகங்கை மாவட்டம், மல்லாக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தையம் ஆகிய 10 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.*

**2. வேளாண்மை–உழவர் நலத் துறையின்கீழ், பணியாளர்களின் பணித் திறனை மேம்படுத்திட, அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் பணி நிலை மேலாண்மை (Cadre Management) அதிகாரம் வழங்கப்படும்**

*தற்போது, அனைத்து பொதுப் பணி, அமைச்சுப் பணி, அடிப்படைப் பணி, ஓட்டுநர் பணிகளுக்கும் வேளாண்மை விற்பனைத் துறையில் வேளாண்மை விரிவாக்கப் பணி, வேளாண் விரிவாக்க சார்புப் பணிகளுக்கும் வேளாண்மை இயக்குநரே பணி நிலை மேலாண்மை அலுவலராக உள்ளார்.*

*ஒரே துறையில் தொடர்ந்து பணிபுரிந்தால் அலுவலர்களின் அனுபவத்தை முழுமையாக பயன்படுத்திட இயலும் என்பதால், இப்பணிகளுக்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களே பணி நிலை மேலாண்மை அலுவலராகச் செயல்படுவார்கள்.*

**3. நெல் உற்பத்தியை அதிகரிக்க துத்தநாக சத்தைக் கரைத்துக் கொடுக்கும் திரவ உயிர் உரத்தை இரண்டு இலட்சம் ஏக்கருக்கு 50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு 2023–2024 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்**

*நெல் மகசூலை அதிகரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் துத்தநாக சத்தைக் கரைத்துக் கொடுக்கும் திரவ உயிர் உரத்தை ஒரு இலட்சம் லிட்டர் உற்பத்தி செய்து, இரண்டு இலட்சம் ஏக்கரிலான நெற்பயிருக்கு 50 சதவிகித மானியத்தில் விநியோகம் செய்வதற்காக 2023–2024 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் இரண்டு இலட்சம் நெல் விவசாயிகள் பயனடைவார்கள்.*

**4. கூட்டுறவு, பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்த கரும்பு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் காட்டுப் பன்றி விரட்டி மருந்து (Wild Boar Repellent) 2023–2024 ஆம் ஆண்டில் 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்**

*கரும்பு பயிரில் அதிக சேதம் ஏற்படுத்தும் காட்டுப் பன்றியினைக் கட்டுப்படுத்துவதற்காக, 2023–2024 ஆம் ஆண்டில், கூட்டுறவு, பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளுக்குத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் காட்டுப் பன்றி விரட்டி மருந்து* (Wild Boar Repellent) *சுமார் ஐந்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் 50 சதவிகித மானியத்தில் வழங்குவதற்காக 45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.*

**5. கரும்பு சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களை, நேரில் அறிந்துகொள்ளும் வகையில், 2023–2024 ஆம் ஆண்டில் 100 கரும்பு விவசாயிகளை வெளிமாநிலங்களுக்குக் கண்டுணர் சுற்றுலா (Exposure Visit) அழைத்து செல்வதற்கும், 2000 கரும்பு விவசாயிகளுக்கு மாவட்ட அளவில் தொழில்நுட்பப் பயிற்சி வழங்குவதற்கும் மொத்தம் 30 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்**

கரும்பு சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள், அறுவடை இயந்திரங்களின் பயன்பாட்டை நேரில் தெரிந்து கொள்வதற்காக, 2023–2024 ஆம் ஆண்டில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 கரும்பு விவசாயிகள் வெளிமாநிலங்களுக்குக் கண்டுணர் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவதுடன், 2000 கரும்பு விவசாயிகளுக்கு 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட அளவிலான தொழில்நுட்பப் பயிற்சிகளும் அளிக்கப்படும்.

**6. கள்ளக்குறிச்சி–2, பெரம்பலூர், செங்கல்ராயன் சர்க்கரை ஆலைகளில் 2023–2024 ஆம் ஆண்டில் தலா ஒரு புதிய உருளை ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

கரும்பு ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், 2023–2024 ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சி–2, பெரம்பலூர், செங்கல்ராயன் சர்க்கரை ஆலைகளில் தலா ஒரு புதிய உருளை ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

**7. திருப்பத்தூர், சேலம், மதுராந்தகம், எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் தலா ஒரு காற்றமுத்த இயந்திரமும் (Air compressor), கள்ளக்குறிச்சி–2, எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இருவழி மையப்படுத்தப்பட்ட உயவு அமைப்பு (Dual line centralized lubrication system) தலா ஒன்றும் 2023–2024 ஆம் ஆண்டில் 85 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

2023–2024 ஆம் ஆண்டில் திருப்பத்தூர், சேலம், மதுராந்தகம், எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் தலா ஒரு காற்றமுத்த இயந்திரமும் (Air compressor), கள்ளக்குறிச்சி–2, எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இருவழி மையப்படுத்தப்பட்ட உயவு அமைப்பும் (Dual line centralized lubrication system) 85 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

**8. மரவள்ளி மகசூலைப் பெருக்க நடவுக்குச்சிகள், உரம், பயிர்ப் பாதுகாப்பு, நடவுக்குச்சி வெட்டும் கருவிகளுக்கு மானியம் வழங்கிட 2023–2024 ஆம் ஆண்டில் இரண்டு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்**

மரவள்ளியில் சாகுபடி செலவினைக் குறைத்து மகசூலை அதிகரிக்கும் வகையில், உயர் இரக நடவுக்குச்சிகள், நீர்வழி

2023 ஏப்ரல் 5] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

உரமிடல், இயற்கை உரம், இயற்கை பூச்சி, நோய் கட்டுப்பாட்டுக் காரணிகள், நடவுக்குச்சி வெட்டும் கருவிகள் ஆகிய இனங்களுக்கு மானியம் வழங்குவதற்காக 2023–2024 ஆம் ஆண்டில் இரண்டு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

**9. தோட்டக்கலைப் பயிர்களில் சந்தை சார்ந்த தொழில்நுட்ப முறைகளைத் துல்லியமாக செயல்படுத்துவதற்காக 2023–2024 ஆம் ஆண்டில் தோட்டக்கலை தொழில்நுட்ப அலுவலர்கள் வேளாண் விற்பனை–வேளாண் வணிகத் துறையில் சிறப்புப் பணியமர்த்தப்படுவார்கள்**

தோட்டக்கலை விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் கையாளுதல், மதிப்புக் கூட்டுதல், சேமித்தல், பதப்படுத்துதல், உள்நாட்டு விற்பனை, ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக, தோட்டக்கலை பயிர் சாகுபடியின்போதே தொழில்நுட்பங்களைத் துல்லியமாக செயல்படுத்த வேண்டியுள்ளதால், தோட்டக்கலை தொழில்நுட்ப அலுவலர்கள் வேளாண் விற்பனை–வேளாண் வணிகத் துறையில் சிறப்புப் பணியமர்த்தப்படுவார்கள். முதற்கட்டமாக, 2023–2024 ஆம் ஆண்டில் 11 தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், ஒரு தோட்டக்கலை அலுவலர், இரண்டு உதவி தோட்டக்கலை அலுவலர்கள் ஆக மொத்தம் 14 தொழில்நுட்ப அலுவலர்கள் வேளாண் விற்பனைத் துறையில் சிறப்புப் பணியமர்த்தப்படுவார்கள்.

**10. தேசிய மின்னணு வேளாண் சந்தை உத்திகள், பண்ணை அளவிலான வர்த்தகம் குறித்து 2023–2024 ஆம் ஆண்டில் வேளாண்மை, தோட்டக்கலைத் துறை தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்**

வேளாண்மை, தோட்டக்கலைத் துறையில் பணியாற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு 2023–2024 ஆம் ஆண்டில் வேளாண்மை, தோட்டக்கலை விளைபொருட்களை தேசிய மின்னணு வேளாண் சந்தை (eNAM) மற்றும் பண்ணை அளவிலான வர்த்தகம் (Farm Gate trading) குறித்த தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**11. தோட்டக்கலை இடுபொருட்களை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 2023–2024 ஆம் ஆண்டில் 20 வட்டாரங்களில் தோட்டக்கலைக் கிடங்குகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்**

*தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு அதிகரித்து வரும் நிலையில் விவசாயிகளுக்கு விதைகள், நடவுச்செடிகள், உரங்கள், பூச்சி, நோய் கட்டுப்பாட்டு மருந்துகளை உரிய காலத்தில் வழங்குவதற்காக, வட்டார அளவில் தோட்டக்கலைக் கிடங்குகள் அமைக்கப்படும். முதல்கட்டமாக, 2023–2024 ஆம் ஆண்டில், 20 வட்டாரங்களில் தோட்டக்கலைக் கிடங்குகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.*

**12. திருச்சியில் உள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தினை வலுப்படுத்திட 2023–2024 ஆம் ஆண்டில் மூன்று கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்**

*விவசாயிகளுக்கும், வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களுக்கும், நவீன வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வும், பயிற்சியும் அளிப்பதற்காக, திருச்சி மாவட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தினை வலுப்படுத்திடவும், 600 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கிடவும், 2023–2024 ஆம் ஆண்டில் மூன்று கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.*

**13. வேளாண்மை இயந்திர வாடகைத் திட்டத்தினை வட்டார அளவில் கொண்டு செல்லும் வகையில், 2023–2024 ஆம் ஆண்டில் 15 வேளாண் இயந்திரக்கூடங்கள் இரண்டு கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்**

*வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் வழங்கப்படும் இயந்திர வாடகைத் திட்டத்தினை வட்டார அளவில் செயல்படுத்துவதற்காக, வட்டார ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மைய வளாகங்களில் வேளாண்மை இயந்திரங்களைப் பாதுகாப்பாக வைக்கவும், பழுதுகளை உடனுக்குடன் நீக்கி முழுமையாகப் பயன்படுத்திடவும், 2023–2024 ஆம் ஆண்டில் 15 வேளாண் இயந்திரக்கூடங்கள் மொத்தம் இரண்டு கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.*

*2023 ஏப்ரல் 5]* [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

**14. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்திட 2023–2024 ஆம் ஆண்டில் அரசு வணிக வளாகங்களில் சந்தை இணைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்**

*உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களையும், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களையும், பல்வேறு அரசுத் துறை அலுவலகங்களின் சில்லறை விற்பனை நிலையங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் பல்பொருள் சிறப்பு அங்காடிகள், கூட்டுறவு பல்பொருள் அங்காடிகள், மகளிர் திட்டத்தின் பூமாலை வணிக வளாகங்களில் விற்பனை செய்திட 2023–2024 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன்மூலம் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன் நுகர்வோருக்குத் தரமான உணவுப் பொருட்களும் கிடைக்கும்.*

**15. கன்னியாகுமரி ஆண்டார்குளம் கத்திரி, விருதுநகர் அதலைக்காய், திண்டிவனம் பனிப்பயறு, கரூர் சேங்கல் துவரை, ஜவ்வாதுமலை சாமை ஆகிய ஐந்து வேளாண் விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெறுவதற்காக 2023–2024 ஆம் ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்**

*2023–2024 ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில், 10 வேளாண் விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெறுவது குறித்த அறிவிப்புக்கு விவசாய பெருமக்களிடம் கிடைத்த வரவேற்பினைத் தொடர்ந்து, கன்னியாகுமரி ஆண்டார்குளம் கத்திரி, விருதுநகர் அதலைக்காய், திண்டிவனம் பனிப்பயறு, கரூர் சேங்கல் துவரை, ஜவ்வாதுமலை சாமை ஆகிய ஐந்து தனித்துவமான விளைபொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற 2023–2024 ஆம் ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*கவுந்தம்பாடி சர்க்கரைக்கும் கடந்த ஆண்டே புவிசார் குறியீடு பெறுவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டு, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*

**16. திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி, பெரம்பலூர், தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக 2023–2024 ஆம் ஆண்டில் 78 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்**

*திண்டுக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி, பெரம்பலூர், தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் 275 நீர்வடிப் பகுதிகளில், தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள், அமிழ்வு நீர்க் குட்டைகள், பண்ணைக் குட்டைகள், ஊருணி தூர்வாருதல், நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள், ஒருங்கிணைந்த பண்ணையம், சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி ஆகிய பணிகளுக்காக 2023–2024 ஆம் ஆண்டில் 78 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.*

*பிற்பகல் 6–50*

**17. தருமபுரி மாவட்டத்தில் சுனை நீர் வடிப்பகுதி (Springshed) மேம்பாட்டுக்கான திட்டம் ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 14 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

*பருவமழைக் காலத்தில் பெய்யும் மழைநீர் மலைப் பகுதிகளில் உள்ள சுனைகளில் தேங்கி, மலைவாழ் மக்களுக்கும், விலங்குகளுக்கும், வாழ்வாதாரமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் மலைப் பகுதிகளில் உள்ள சுனைகள் புத்துயிர் பெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.*

*முதற்கட்டமாக, தருமபுரி மாவட்டத்தில் 5,000 எக்டர் பரப்பளவில் பிக்கிலி, சிட்டிலிங்கி மலைப் பகுதிகளில் உள்ள சுனை நீர்வடிப் பகுதியினை மேம்படுத்துவதற்கான திட்டம், ஐந்து ஆண்டுக் காலத்தில் மொத்தம் 14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய, மாநில அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.*

**18. மாநில அளவிலான வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வாழை, மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும், பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும்**

*நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள்*

குறித்த விழிப்புணர்வினை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில், 2023–2024 ஆம் ஆண்டு மாநில அளவில் வேளாண் கண்காட்சி திருச்சியிலும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO), வாழை, மலர்களுக்கான கண்காட்சி சென்னையிலும், பலாவுக்கான கண்காட்சி பண்ருட்டியிலும் நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைச் சிறப்பாக நல்லமுறையில் தயாரித்து, இந்த மாமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர்/ அரசு செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., சர்க்கரைத் துறை ஆணையர் திரு. C. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., சர்க்கரைத் துறை கூடுதல் ஆணையர் திரு. த. அன்பழகன், இ.ஆ.ப., வேளாண்மை இயக்குநர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் Dr. R. பிருந்தாதேவி, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் Dr. S. நடராஜன், இ.ஆ.ப., வேளாண்மை பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் R. முருகேசன், வேளாண்மை பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் திரு. த. சந்திரசேகர் அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய செயலாளர்கள் மரியாதைக்குரிய திரு. த. உதயசந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், மரியாதைக்குரிய டாக்டர் உமாநாத், இ.ஆ.ப. அவர்களுக்கும், மரியாதைக்குரிய திரு. ம.சு. சண்முகம், இ.ஆ.ப. அவர்களுக்கும் இந்த மன்றத்தின் வாயிலாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் காத்திருந்த மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம். வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக்கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 5– வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

*வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.*

*“வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,124,43,40,000/–, மூலதனக் கணக்கில் ரூ.129,00,98,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*
*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*
*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*
*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.*

## (ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

*வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.*

*2023 ஏப்ரல் 5]* [பேரவைத் தலைவர்]

*"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,310,42,51,000/–, மூலதனக் கணக்கில் ரூ.141,08,33,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.*

## (இ) கோரிக்கை எண் 7-மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 7– மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

*வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.*

*"மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.618,41,03,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.739,85,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஈ) கோரிக்கை எண் 8-பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.41,59,11,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.81,07,75,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–4–2023), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6–55 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*63. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1) (*b*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*64. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் ஐம்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1) (*b*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*65. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1) (*b*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*66. 2021–2022 ஆம் ஆண்டிற்கான அடையாறு பூங்காவின் பதினான்காவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(*b*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*67. 2021–2022 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) ஐம்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1) (*b*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*68. 2021–2022 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(*b*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*69. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(*b*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*70. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*71. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*72. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*73. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) ஐம்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*74. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (திருநெல்வேலி) பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)*

*75. 2021–2022 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*76. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*2023 ஏப்ரல் 5*]

*77. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை.* [*2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ்–ஆங்கிலம்)*

*78. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஐம்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை.* [*2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ்–ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*137. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*138. வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*139. மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*140. மானியக் கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*141. மானியக் கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*142. 'உறுதிமிக்க தமிழ்நாடு–பொதுப் பணித் துறையின் மகத்தான சாதனைகள்–2022' என்கிற சிறுநூல். (தமிழ்)*

*143. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் செயல்பாடுகள் குறித்த சிறுநூல். (ஆங்கிலம்)*

*144.* நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

*145.* கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

*146.* தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# இணைப்பு-I

*(178 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

# மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024

**முன்னுரை:**

*"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்*
*அலகுடை நீழ லவர்"*

*—திருக்குறள் : 1034*

*பல அரசுகளின் நிழல்களைத் தமது குடைநிழலின்கீழ் கொண்டு வரும் வலிமை பெற்றவர்கள் உழவர்கள்.*

*(முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் உரை)*

*"கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய*
*ஏர்நடக்கு மெனிற்புகழ்சால் இயலிசைநா டகம் நடக்கும்*
*சீர்நடக்குந் திறநடக்குந் திருவறத்தின் செயநடக்கும்*
*பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே"*

*அதாவது, மழை தவறாது பெய்ய வேண்டுமாயின் உழவர்கள் தங்கள் ஒழுக்கமாம் கடமையில் தவறாது நின்று ஏரை நடத்த வேண்டும். பசியை ஒழிக்க அவர்கள் பசுமைப் புரட்சியை மேற்கொள்வாராயின் மொழி வளம் பெறும். முத்தமிழ் தழைத்தோங்கும். நாட்டிற்கு நல்ல பல சிறப்புகள் வரும். அறிவாற்றல் பெருகும். கொள்வாரும் கொடுப்பாருமின்றி "எல்லோருக்கும் எல்லாம்" என்ற சமநிலை ஏற்படும். உலக அறங்கள் செவ்வனே நடைபெறும். நாட்டு மக்கள் நலமும் நற்காப்பும் பெறுவர் என்று உழவராலும், உழவுத் தொழிலாலும் மட்டுமே இவ்வுலகின் அனைத்து நற்செயல்களும் நடக்கும் என கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஏர் எழுபது என்ற நூலில் வேளாண்மையைப் போற்றிக் கூறியுள்ளார்.*

[2023 ஏப்ரல் 5

உலகில் பல்வேறு தொழில்கள் இருந்து வந்த போதிலும், வேளாண் தொழிலே உலக மக்களுக்கு உணவளிக்கும் உன்னதமானத் தொழிலாகும். வேளாண்மையே நாட்டின் நிலையான வளர்ச்சிக்குப் பெரும் பங்கு அளிக்கிறது. பெரும்பாலான மக்களின் முதன்மைத் தொழிலாகவும், வாழ்வாதாரமாகவும் வேளாண்மைத் தொழில் இருந்தாலும், பிற தொழில்களின் முன்னேற்றம், ஊரக வேலைவாய்ப்பு, உள்நாட்டு, பன்னாட்டு வாணிபம் மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற இனங்களிலும் வேளாண்மையே முக்கியத்துவமுள்ளதாக அமைந்துள்ளது. பல்வேறு பருவகாலச் சூழ்நிலைகளையும் கடந்து, உணவு உற்பத்தியில் தலையாய பணியாக விளங்கும் உழவுத் தொழிலை மேற்கொண்டுவரும் விவசாயிகளை மேம்படுத்திட, இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

“சாகுபடிப் பணிகள் என்பன வெறும் சடங்குகள் அல்ல; அந்தந்த காலகட்டத்தில் தோன்றும் மகசூல் காரணிகளை மேம்படுத்தும், மேன்மையான நடவடிக்கைகளே ஆகும்”

பன்னெடுங்காலமாக நமது விவசாயிகள் பயன்படுத்திய, பட்டறிவில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் புகுத்தி, இளைஞர்களை வேளாண்மையின்பால் ஈர்த்து, வேளாண்மையை ஒரு இலாபகரமான தொழிலாக மாற்றிட வேளாண்மை—உழவர் நலத் துறை அயராது பாடுபட்டு வருகிறது.

இன்றைய சூழலில் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப, உணவு உற்பத்தியினை பெருக்கிடுவதும், நஞ்சற்ற உணவுகளை நுகர்வோருக்கு வழங்குவதும், பல்வேறு பருவகால மாற்றங்கள், புதிதாக உருவெடுக்கும் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை எதிர்கொள்வது விவசாயிகளுக்கும், விஞ்ஞானிகளுக்கும் பெரும் சவாலாக உள்ளது.

நிலத்தடி நீர் மட்டம், பயிர் சாகுபடி பரப்பு ஆகியவற்றை அதிகரிப்பதில் உள்ள இடர்களை நீக்கிட, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டிய நிர்பந்தமும், புதிய தொழில்நுட்பங்களை பெருவாரியான பரப்பளவில் கடைபிடித்து, நுண்ணீர்ப் பாசனத்துடன் பயிர் சாகுபடிக்கு சாதகமான சூழலை உருவாக்கி, சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரித்திட வேண்டிய கட்டாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

*2023 ஏப்ரல் 5*]

*வேளாண்மைத் தொழிலே, தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வாழும் 70 சதவிகித மக்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கிறது. வேளாண்மையில் ஏற்படும் மாற்றங்கள், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் நிலை உள்ளதால், வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். எனவேதான், இவ்வரசு வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.*

*தமிழ்நாடு பலதரப்பட்ட தட்ப வெப்பநிலை மண்டலங்கள், மழை அளவு, பல்வேறு மண் வகைகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதால், அதற்கு ஏற்றவாறு புதிய பயிர் இரகங்கள், உயர் தொழில்நுட்பங்கள் ஆகியவை விவசாயிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு வருகின்றன. வேளாண் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, வேளாண் சார்ந்த காடுகள் போன்ற தொழில்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் நிலையான வருமானத்தையும் மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

**தமிழ்நாடு அரசின் வேளாண் வளர்ச்சிக்கான சீரிய முயற்சிகள்**

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மேட்டூர் அணை முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் 24.05.2022 அன்று 19 நாட்கள் முன்னதாகவே திறக்கப்பட்டு, ரூ.61.12 கோடி மதிப்பீட்டில் குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2022-2023 ஆம் ஆண்டில் ஆறுகள், வாய்க்கால்கள் ரூ.85 கோடி மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டன. இத்தகைய முயற்சிகளால், 47 ஆண்டுகளில் இல்லாத அளவில் 2.17 இலட்சம் எக்டர் பரப்பளவில், குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு அதிகபட்ச சாதனை அடையப்பட்டுள்ளது.*

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூன்று தொலைநோக்குத் திட்டங்களில் முதலாவதான நிகர சாகுபடிப் பரப்பினை உயர்த்தும் முயற்சியில் கடந்த இரண்டு வேளாண் நிதிநிலை அறிக்கைகளில் அளிக்கப்பட்ட திட்டங்களை செவ்வனே செயல்படுத்தியதன்மூலம் 2020-2021 ஆம் ஆண்டைவிட 76,000 எக்டர் நிகர சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.*

[2023 ஏப்ரல் 5

இரண்டாவதாக, 2020-2021 ஆம் ஆண்டில் 13.22 இலட்சம் எக்டராக இருந்த இருபோக சாகுபடி பரப்பு, கூடுதலாக 1.17 இலட்சம் எக்டர் அதிகரித்து, 2021-2022 ஆம் ஆண்டில் 14.39 இலட்சம் எக்டர் பரப்பளவாகச் சாதனை அடையப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1.1—உற்பத்தித் திறனில் தேசிய அளவில் தமிழ்நாடு**

| முதலிடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் | நான்காம் இடம் |
|---|---|---|---|
| மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை, கரும்பு | அரிசி | தென்னை | ஊட்டச்சத்து தானியங்கள் (கேழ்வரகு, கம்பு, வரகு, தினை) |

ஆதாரம் : வேளாண்மை புள்ளியியல் ஒரு கண்ணோட்டம் – 2021.

மேலும், சூரியகாந்தி, பருத்தி பயிர்களில் உற்பத்தி, உற்பத்தித் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் வருடந்தோறும் ஆறு நிகழ்வுகளில் நடத்தப்படும் கிராம சபைக் கூட்டங்களில் திட்டப் பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் கிராம ஊராட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டு வெளிப்படைத்தன்மையுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், வேளாண்மைத் தொழில்நுட்பம் தொடர்பான கருத்துக் கண்காட்சிகள், விவசாயிகளுக்கு 'உழவன் செயலி' பதிவிறக்கம் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதி ஆயோக் (NITI Aayog) அமைப்பு, நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளைக் கொண்டு, 2030 ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் மாற்றத்தினை அடையும் பொறுப்பினை ஏற்று செயல்பட்டு வருகிறது. நிலையான வளர்ச்சிக்கான 17 இலக்குகள் பல்நோக்கு செயல்முறைகளின்மூலம் உருவாக்கப்பட்டு, அனைத்து துறைகளிலும் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படுகின்றன. இதில் வேளாண்மைத் துறைக்கு ஏழ்மையின்மை, பசியின்மை, நல்ல ஆரோக்கியம்-நல்வாழ்வு, தூய்மையான நீர்-சுகாதாரம், பொறுப்புமிக்க பயன்பாடும் உற்பத்தியும், நீர்ச்சூழல் பாதுகாப்பு ஆகிய ஆறு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு,

*2023 ஏப்ரல் 5*]

துறையின் பல்வேறு திட்டங்களும், இந்த இலக்குகளை அடையும் வண்ணம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. இவ்விலக்குகளை அடைவதற்கான அனைத்து விதமான முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

வேளாண்மைத் தொழிலை பல்வேறு சவால்களைக் கடந்து விடாமுயற்சியுடன் தொடர்ந்து செய்து வரும் உழவர்களை ஊக்குவிக்கும் வகையில் நல்ல திட்டங்கள் முதல் மற்றும் இரண்டாம் வேளாண் தனி நிதிநிலை அறிக்கைகளில் அறிவிக்கப்பட்டு செவ்வனே செயல்படுத்தப்பட்டுள்ளன.

**வேளாண்மைத் துறையின் தோற்றம்**

வேளாண்மை சம்பந்தமாக ஆளுநர் சர் வில்லியம் டெனிசன் 1863 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் தனது குறிப்புக் குழுவிற்கு (Council of Note) சில வேளாண் நடைமுறைக் குறிப்புகளைத் தெரிவித்து, குழுவினுடைய கவனத்தினை முதல் முறையாக ஈர்த்தார்.

இந்திய பஞ்ச ஆணையத்தின் (1880) பரிந்துரையின் அடிப்படையில் 1882 ஆம் ஆண்டில் ஒரு தனி வேளாண்மைத் துறை அமைக்கப்பட்டது. வேளாண்மை இயக்குநர் பதவியானது வருவாய் தீர்வு, நில ஆவணங்கள் மற்றும் வேளாண்மை ஆணையரகப் பணியாக மறுவடிவமைக்கப்பட்டது. மேலும், 1905 ஆம் ஆண்டு முதல் வேளாண்மைத் துறை ஒரு தன்னிறைவு அலகாக ஒழுங்கமைக்கப்பட்டு, வேளாண்மை இயக்குநர் மற்றும் தேவையான சார்நிலை ஊழியர்கள் நியமிக்கப்பட்டு அவரது தலைமையின்கீழ் தொடர்ந்தது.

தலைமைச் செயலக மட்டத்திலும் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாடு வருவாய்த் துறையிலிருந்து திட்ட வளர்ச்சித் துறைக்கும், பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட வேளாண்மைத் துறைக்கும் மாற்றப்பட்டது. 1949-1951 ஆம் ஆண்டில் வருவாய் வாரியத்தின் குடிமைப்பொருள் வழங்கல் ஆணையர், உணவு உற்பத்தி ஆணையராக நியமிக்கப்பட்டார். 1956 ஆம் ஆண்டு வரை தலைமைச் செயலகப் பொறுப்புகளையும் வகிக்க ஆணையிடப்பட்டு, பின்னர் இப்பணிகள் வேளாண்மைத் துறையின் அரசுச் செயலாளருக்கு மாற்றப்பட்டது.

[2023 ஏப்ரல் 5

**அட்டவணை: 1.2 — வேளாண்மை - உழவர் நலத் துறையிலுள்ள பல்வேறு துறைகளின் தோற்றம் பற்றிய விவரம்**

| வ. எண் | துறை | தோற்றம் பற்றிய விவரம் |
|---|---|---|
| 1. | வேளாண்மைத் துறை | 1882 (தனித் துறை); 1905 முதல் தனி வேளாண்மை இயக்குநருடன் செயல்படுதல் |
| 2. | வேளாண்மை விற்பனை—வேளாண் வணிகத் துறை | 1977-1978 |
| 3. | தோட்டக்கலை—மலைப்பயிர்கள் துறை | 1979-1980 |
| 4. | விதைச்சான்றளிப்பு (அ) அங்ககச் சான்றளிப்புத் துறை | 1979-1980<br>2022 - தலைமையிடம் கோயம்புத்தூரிலிருந்து சென்னைக்கு மாற்றம். |
| 5. | வேளாண்மை பொறியியல் துறை | 1980-1981 |
| 6. | முதல் வேளாண்மைக் கல்லூரி | 1876 (சைதாப்பேட்டை) |
| | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 1971 |
| 7. | சர்க்கரைத் துறை | 1969<br>வேளாண்மைத் துறையில் இணைந்தது -2022 |
| 8. | உணவுப் பதப்படுத்துதல் துறை | 2012<br>(வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை)<br>2022-குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கு மாற்றம் |
| 9 | வேளாண்மைத் துறை மறுசீரமைப்பு | 2008 |

ஆதாரம்: வேளாண்மைத் துறை கையேடு, 6-வது பதிவு (1990)

**தமிழ்நாட்டில் வேளாண்மை**

நில அமைப்பில் மித மற்றும் வறண்ட ஈரப்பத வெப்பமண்டலத்தின்கீழ் தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது. நமது மாநிலமானது 1.3 இலட்சம் சதுர கி.மீ. பரப்பளவுக்

*2023 ஏப்ரல் 5*]

கொண்டு அகில இந்திய அளவில் 11-வது பெரிய மாநிலமாகவும், 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 7.21 கோடி மக்கள் தொகைக் கொண்டு ஏழாவது மாநிலமாகவும் விளங்குகிறது. மேலும், தமிழ்நாடு அகில இந்திய அளவில் நான்கு சதவிகித பரப்பளவினையும், ஆறு சதவிகித மக்கள் தொகையினையும், மூன்று சதவிகித நீர் ஆதாரங்களையும் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் 59.71 இலட்சம் எக்டர் பரப்பில் 79.38 இலட்சம் நிலவுடைமைதாரர்கள் பயிரிடுகின்றனர். மொத்த நிலவுடைமைதாரர்களில் (இந்திய அரசின் 10-வது வேளாண்மைக் கணக்கெடுப்பின்படி) குறு, சிறு விவசாயிகள் 93 சதவிகிதமாக, 62 சதவிகித நிலப்பரப்பிற்கும், நடுத்தர, பெரு விவசாயிகள் ஏழு சதவிகிதமாக 38 சதவிகிதம் நிலப்பரப்பிற்கும் நில உடைமைதாரர்களாக உள்ளனர். தமிழ்நாட்டின் சராசரி நிலவுடைமைப் பரப்பானது 0.75 எக்டர் அளவில் (இந்திய சராசரி நிலவுடைமைப் பரப்பு-1.08 எக்டர்) உள்ளது.

**படம்: 1 — தமிழ்நாட்டின் நிலப் பயன்பாடு 2021-2022**




மொத்த நிலப்பரப்பு—130.33 இலட்சம் எக்டர்

பயிரிடு திறன் (%)—129.33 (மொத்த சாகுபடி பரப்பு/நிகர சாகுபடி பரப்புX 100)

(*) மொத்த பயிரிடும் பரப்பு (63.48 இலட்சம் எக்டர்) மற்றும் ஒருமுறைக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (14.39 இலட்சம் எக்டர்)—க்குமுள்ள வேறுபாடு.

ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு

[2023 ஏப்ரல் 5


## அட்டவணை:1.3—நிலப் பயன்பாட்டில் தமிழ்நாட்டின் நிலை (2021-2022)

| வ. எண் | நிலப் பயன்பாடு | (இலட்சம் எக்டர்) | | |
|---|---|---|---|---|
| | | 2020-2021 | 2021-2022 | குறிப்பு |
| 1. | மொத்த சாகுபடி பரப்பு | 61.55 | 63.48 | 1.93 இலட்சம் எக்டர் அதிகரிப்பு |
| 2. | நடப்பு தரிசு நிலங்கள் | 8.93 | 8.00 | 0.93 இலட்சம் எக்டர் குறைவு |
| 3. | இதர தரிசு நிலங்கள் | 18.65 | 18.64 | 0.01 இலட்சம் எக்டர் குறைவு |
| 4. | நிகர சாகுபடி பரப்பு | 48.33 | 49.09 | 0.76 இலட்சம் எக்டர் அதிகரிப்பு |
| 5. | பயிரிடு திறன் (%) | 127.35 | 129.33 | 1.98 (%) அதிகரிப்பு |

**தமிழ்நாட்டின் சராசரி மழையளவு**

*தமிழ்நாட்டின் சராசரி மழையளவு 937.5 மி.மீ. ஆகும். 2022 ஆம் ஆண்டு 1131.40 மி.மீ. பெறப்பட்டுள்ளது.*

**படம்: 2 - 2022 ஆம் ஆண்டில் பருவம் வாரியாக பெறப்பட்ட மழையளவு**




*ஆதாரம் : இந்திய வானிலைத் துறை*

*2023 ஏப்ரல் 5*]

**பாசன நீர் ஆதாரம்**

*மாநிலத்தின் பல்வேறு பாசன நீர் ஆதாரங்கள்மூலம் பயன்பெறும் நிகர பாசனப் பரப்பளவு விவரம் பின்வருமாறு:*

**அட்டவணை : 1.4-நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப் பரப்பு - 2021-2022**

| பாசன ஆதாரம் | எண்ணிக்கை | நிகர பாசனப் பரப்பு (இலட்சம் எக்டர்) | நிகர பாசனப் பரப்பு (%) |
|---|---|---|---|
| *கால்வாய்கள்* | *2,240* | *6.84* | *23.35* |
| *ஏரிகள்* | *41,114* | *4.10* | *14.00* |
| *குழாய் கிணறுகள்/ ஆழ்துளைக் கிணறுகள்* | *2,42,583* | *5.46* | *18.64* |
| *திறந்தவெளிக் கிணறுகள்* | *14,42,079* | *12.85* | *43.87* |
| *இதர பாசனம்* | | *0.04* | *0.14* |
| **மொத்தம்** | | ***29.29*** | ***100.00*** |

**ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு**

*கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகள்மூலம் 63 சதவிகிதமும், கால்வாய்கள்மூலம் 23 சதவிகிதமும் ஏரிகள்மூலம் 14 சதவிகிதமுமான பரப்பளவு பாசனம் பெறுகின்றது.*

**பாசன நீர் ஆதார பயன்பாட்டு நிலை**

*2020-2021 ஆம் ஆண்டில் 6.68 இலட்சம் எக்டராகவும், 3.72 இலட்சம் எக்டராகவும் இருந்த கால்வாய்கள், ஏரிகளின் மூலமான நிகர பாசனப் பரப்பு, 2021-2022 ஆம் ஆண்டில் முறையே 6.84 இலட்சம் எக்டராகவும் (2.39 சதவிகிதம்) 4.10 இலட்சம் எக்டராகவும் (10.21 சதவிகிதம்) அதிகரித்துள்ளது.*

[*2023 ஏப்ரல் 5*

*2020-2021 ஆம் ஆண்டில் 17.20 இலட்சம் எக்டராக இருந்த கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலமான நிகர பாசனப் பரப்பு 18.31 இலட்சம் எக்டராக (6.45 சதவிகிதம்) அதிகரித்துள்ளது. நிகர நீர்ப் பாசனப் பரப்பு ஆறு சதவிகிதம் அதிகரிக்கும் விதத்தில் உள்ளது.*

## 1. வேளாண்மை

### 1.1. பயிர் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரித்தல்

*தமிழக வரலாற்றில் முதன்முதலாக 2021 ஆம் ஆண்டில் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, பல உழவர் நலன் சார்ந்த திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி, விவசாயிகளிடம் கொண்டு சேர்த்ததன் பலனாக, கடந்த 2020-2021 ஆம் ஆண்டில் 48.33 இலட்சம் எக்டர் பரப்பாக இருந்த நிகர பயிர் சாகுபடி பரப்பானது 76,000 எக்டர் அதிகரித்து 2021-2022 ஆம் ஆண்டில் 49.09 இலட்சம் எக்டர் பரப்பாக உயர்ந்துள்ளது.*


*இதேபோன்று 2020-2021 ஆம் ஆண்டில் 13.22 இலட்சம் எக்டராக இருந்த இருபோக சாகுபடி பரப்பானது 1.17 இலட்சம் எக்டர் அதிகரித்து 2021-2022 ஆம் ஆண்டில் 14.39 இலட்சம் எக்டராக உயர்ந்துள்ளது.*

*மேலும், உணவு தானிய உற்பத்தியானது கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் 119.97 இலட்சம் மெட்ரிக் டன் கிடைக்கப் பெற்றுள்ளது. இது கடந்த 2020-2021 ஆம் ஆண்டில் அடையப்பட்ட 108.24 இலட்சம் மெட்ரிக் டன்னை விட 11.73 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் என்பது மட்டுமல்லாமல் கடந்த ஆறு ஆண்டுகளில் அடையப்படாத சாதனையுமாகும்.*

சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

*2023 ஏப்ரல் 5]*

**படம்: 4-கடந்த ஆறு ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி ஒப்பீடு**




*** (கடந்த 2022-2023 இரண்டாவது முன் மதிப்பீட்டின்படி)*

**அட்டவணை: 1.5 – வரும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

| வ. எண் | பயிர்கள் | பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | உற்பத்தித்திறன் (கிலோ/எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | நெல் | 20.20 | 80.75 | 3,998 |
| 2 | சிறுதானியங்கள் | 9.83 | 38.25 | 3,892 |
| 3 | பயறு வகைகள் | 9.50 | 8.00 | 842 |
| **மொத்த உணவு தானியங்கள்** | | 39.53 | 127.00 | |
| 4 | எண்ணெய் வித்துக்கள் | 5.56 | 15.40 | 2,769 |
| 5 | பருத்தி | 1.78 | 4.50* | 432** |
| 6 | கரும்பு | 1.75 | 227.50 | 130*** |
| | **மொத்தம்** | **48.62** | | |

* உற்பத்தி இலட்சம் பொதிகள்: பொதி ஒன்றுக்கு 170 கிலோ

** உற்பத்தித் திறன்—பஞ்சு

*** உற்பத்தித் திறன் மெட்ரிக் டன்/எக்டர்

## 1.2 முதன்மை வேளாண்மைத் திட்டங்கள்

### 1.2.1. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

*"கிராமங்களின் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சியாகும்" என்பது மகாத்மா காந்தியடிகளின் கூற்று. தமிழ்நாடு அரசு, கிராம வளர்ச்சியே உண்மையான வளர்ச்சி என்ற அடிப்படையில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.*

*இத்திட்டம் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளில், ஒவ்வோர் ஆண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் தெரிவு செய்யப்படும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.*

*தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள தரிசு தொகுப்பு நிலங்களில் மின் அல்லது சூரிய சக்தி வசதியுடன் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி, நுண்ணீர் பாசனத்துடன், பழ மரக்கன்றுகளை நிரந்தர பயிர்களாகவும், ஊடு பயிர்களாக வேளாண் பயிர்களையும் சாகுபடி செய்வது முக்கிய அம்சமாகும்.*

*மேலும் திட்ட கிராமங்களில், வேளாண்மை–உழவர் நலத் துறையின் இதர திட்டங்களை 80 சதவிகிதம் அளவிற்கு ஒருங்கிணைத்தும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*நடப்பு 2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டம் 2,504 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.*

### 1.2.2. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் (ஐந்தாண்டுத் திட்டம்)

*தமிழ்நாட்டில், 40 சதவிகிதத்திற்கும் மேல் மானாவாரி சாகுபடி நிலங்கள் உள்ளன. வேளாண்மையில் எல்லா மாவட்டங்களிலும் சீரான வளர்ச்சி வேண்டுமெனில், மானாவாரி நிலங்களின் வளர்ச்சியும் மிக முக்கியமானது.*

*மானாவாரி நிலங்களின் மேம்பாட்டிற்காகக் கடந்த ஆறு ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்ட முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் முடிவுற்ற நிலையில், மானாவாரி நில விவசாயிகளின் நலனுக்காக 25 மாவட்டங்களில் சிறுதானிய*

*2023 ஏப்ரல் 5]*

*சாகுபடியை ஊக்குவித்து, நுகர்வினை அதிகரிக்கும் விதமாக சிறுதானிய இயக்கம் 2023-2024 ஆம் ஆண்டு முதல் 2027-2028 ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படவுள்ளது.*

*தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், நடப்பு 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.82 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.*

### 1.2.3 மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்

*தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் நவீன தொழில்நுட்பங்களுடன் நல்ல சாகுபடி முறைகளை கடைப்பிடித்து, நல்வருமானத்தை பெற்றிடும் வகையில் தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய பெருந்திட்டமே மாநில வேளாண் வளர்ச்சித் திட்டமாகும்.*

### 1.2.3.1. நெல் ஜெயராமன் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

*நம் உழவர்களின் வயல்களில் பன்னெடுங்காலமாகப் பயிரிட்டு வந்த பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாப்பது மிக அவசியமானதாகும். பலவகையான மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரிய நெல் இரகங்களான தூயமல்லி, சீரகச்சம்பா, மாப்பிள்ளைச்சம்பா, கருப்புக்கவுனி, ஆத்தூர் கிச்சலிசம்பா, தங்கச்சம்பா, கீரைச்சம்பா மற்றும் பிற இரகங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், குறைந்துவரும் பாரம்பரிய நெல் இரகங்களை விதை பெருக்கத்தின்மூலம் விவசாயிகளுக்கு வழங்குவதே இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.*

*2022-2023 ஆம் ஆண்டில், 300 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் விநியோகம் செய்திட ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அரசு விதைப் பண்ணைகளில் 250 ஏக்கரில் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*2023-2024 ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகளில் 200 ஏக்கர் பரப்பில் பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.50 இலட்சம் ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கு 2024-2025 ஆம் ஆண்டில் மானிய விலையில் வழங்கப்படும்.*

*இத்தகைய பாரம்பரிய நெல் இரகங்களைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டுமெனில், இதனுடைய பாரம்பரிய தூய்மை*

பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காக, இத்தகைய நெல் இரகங்களின் விதை வங்கியினைப் பராமரித்து வரும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக தலா ரூபாய் மூன்று இலட்சம் வீதம் பத்து விவசாயிகளுக்கு 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.30 இலட்சம் வழங்கப்படும்.

### 1.2.3.2 குறுவைப் பருவத்தில் மாற்றுப் பயிர்

தமிழ்நாட்டில் முக்கிய பருவமழை காலமான வடகிழக்குப் பருவமழை அக்டோபர் மாதத்தில் தொடங்கி டிசம்பரில் முடிவடைகிறது. எனவே, பருவமழை அல்லாத காலங்களில் அதிக நீர் தேவையுள்ள பயிர்களைத் தவிர்த்து, நீர் குறைவாகத் தேவைப்படக்கூடிய பயிர்களைப் பயிரிட்டால் குறைந்த நீரைப் பயன்படுத்தி நல்ல மகசூலைப் பெறலாம். இதனைக் கருத்தில் கொண்டு குறைந்த நீர்த் தேவையுள்ள பயிர்களை மாற்றுப் பயிர்களாக விளைவிக்க ஊக்கப்படுத்தவும் வேண்டியுள்ளது. எனவே, மண் வளத்தினைப் பாதுகாக்கவும், விவசாயிகள் அதிக இலாபம் பெறவும், கார், குறுவை, சொர்ணவாரி பருவத்தில் குறைந்த நீர்த் தேவையுள்ள சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடி ஊக்கப்படுத்தப்படும்.

இதற்காக நடப்பாண்டில் இத்திட்டம் ரூ.16.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.3.3. நெல்லுக்கு பின் பயிர் சாகுபடி

விவசாயிகள் தொடர்ந்து ஒரே பயிரினைச் சாகுபடி செய்வதால் மண்ணில் உள்ள ஊட்டச்சத்துக்கள் மிகக் குறைந்து, ஒரே விதமான பூச்சி, நோய் தாக்குதலால் மகசூல் குறையும் வாய்ப்புள்ளது. எனவே, சம்பா நெல் அறுவடைக்குப்பின் எஞ்சிய ஈரப்பதத்தினைப் பயன்படுத்தி சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி சாகுபடி செய்வதால், வேளாண் விளைநிலங்களில் மண் வளம் அதிகரிப்பதுடன், விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திடும். இத்திட்டமானது 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.24 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.3.4. இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்

வேளாண் பட்டதாரிகளை வேளாண் சார்ந்த பணிகளில் ஈடுபடச் செய்து, உழவர்களுக்குத் தொழில்நுட்ப ஆலோசனை

*2023 ஏப்ரல் 5]*

*வழங்கச் செய்வதுடன் அவர்களை சுயத் தொழில் முனைவோராக்குவதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இளைஞர்கள் இத்திட்டத்தின்மூலம் ஊரகப் பகுதிகளில் அக்ரி கிளினிக் அமைப்பதால் ஊரகப் பொருளாதாரம் மேம்படும்.*

*இத்திட்டத்தின்கீழ் வேளாண்மை/தோட்டக்கலை/வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்கள் சுயமாக வேளாண் சார்ந்த தொழில் துவங்கிட 2023-2024 ஆம் ஆண்டில் ரூபாய் இரண்டு இலட்சம் மானியம் வழங்கப்படும்.*

### 1.2.4. அங்கக வேளாண்மை ஊக்குவிப்பு

*தமிழ்நாடு அரசால் அங்கக வேளாண்மையை ஊக்கப்படுத்துவதற்காக, பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை–2023, மார்ச் 2023-ல் வெளியிடப்பட்டது. இது அங்கக வேளாண்மையில் ஒரு மைல் கல்லாகும்.*

*இயற்கை வேளாண்மைப் பற்றிய விழிப்புணர்வு அனைத்துத் தரப்பு மக்களிடமும் ஏற்பட்டுள்ளது. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தொடர் பயன்பாட்டினால் வேளாண் பொருட்களில் நச்சு எஞ்சியிருக்கும் சூழலுள்ளது. இவை பல்வேறு நோய்களுக்கும் காரணியாகவும் அமைகின்றன. இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக இயற்கை இடுபொருட்கள் தயாரிக்க நிதியுதவி வழங்கப்படுகிறது. நடப்பாண்டிலிருந்து சிறந்த அங்கக விவசாயிக்கு “நம்மாழ்வார்” பெயரில் விருதும் வழங்கப்படும்.*

### 1.2.5. வேளாண் காடுகள்மூலம் பசுமைப் போர்வை

*பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண்மை தொன்றுதொட்டு நிலைத்திருக்க வேண்டுமெனில் காடுகளின் பங்கு மிகவும் அவசியமானதாகும். காடுகள் மண் அரிப்பைத் தடுத்து, நல்ல மழைப்பொழிவை அளிக்கக்கூடியவை. பலன் தரக்கூடிய உயர் மதிப்பு மரக்கன்றுகளை உழவர்களுக்கு வழங்கி, காடுகளின் பரப்பளவை அதிகரிப்பதுடன், அவர்களின் வருமானத்தையும் பெருக்கும் நோக்கத்தில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டம் முழு மானியத்தில் 77 இலட்சம் உயர் மதிப்பு மரக் கன்றுகள் 36,694 விவசாயிகளுக்கு ரூ.11.55 கோடி மாநில நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளன.*

[2023 ஏப்ரல் 5

நடப்பாண்டில் விவசாயிகளுக்கு 75 இலட்சம் உயர் மதிப்புள்ள மரக் கன்றுகளை முழு மானியத்தில் விநியோகிக்கும் விதமாக, மரக் கன்றுகள் வளர்க்கப்படும் நாற்றங்கால்களை வலுப்படுத்த ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2.6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின குறு, சிறு விவசாயிகளுக்குக் கூடுதலாக 20 சதவிகித மானியம்

தமிழ்நாட்டில் 144.38 இலட்சம் மற்றும் 7.95 இலட்சம் என்ற அளவில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 79.37 இலட்சம் நில உடைமைதாரர்களில் ஆதி திராவிட விவசாயிகள் 7.99 இலட்சம் நில உடைமைதாரர்களாக 4.66 இலட்சம் எக்டர் பரப்பிலும், பழங்குடியின விவசாயிகள் 0.94 இலட்சம் நில உடைமைதாரர்களாக 0.75 இலட்சம் எக்டர் பரப்பிலும் சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மென்மேலும் உயர்த்திடவும், உயர்மதிப்பு கொண்ட வேளாண் திட்டங்களிலும் அவர்கள் பங்கெடுத்துக்கொள்ள வழிவகை செய்திடும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு அவர்களின் பங்களிப்புத் தொகையில் நிதிச் சுமையினை குறைத்திடும் வகையில், நடைமுறையில் உள்ள மானியத்துடன் கூடுதலாக 20 சதவிகிதம் மானியம் வழங்கி வருகிறது.

நடப்பாண்டிலும் ரூ.11 கோடி மதிப்பில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.7. மின்னணு வேளாண்மைத் திட்டம்

தற்போது, அனைத்துப் பணிகளிலும், எங்கும் எதிலும் மின்னணுமயம் என்ற நிலை உள்ளது. மின்னணு வேளாண்மை தொழில்நுட்பங்கள், விவசாயம் சார்ந்த கிராமப்புற வளர்ச்சியிலும், தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக் கொள்வதிலும், சந்தை விலையைத் துரிதமாகத் தெரிந்துகொள்வதிலும் மிக முக்கியப் பங்காற்றுகின்றன.

நடப்பாண்டில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி 10 முக்கிய பூச்சி மற்றும் நோய்களுக்குண்டான உடனடித் தீர்வு முறைகளை விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் வலைதளம்மூலம் இயங்கும் பொருட்கள் (Internet of Things) மூலமாக தானியங்கி

*2023 ஏப்ரல் 5]*

*முறையில் நீர்பாசனம் மற்றும் நீர்வழி உரமிடல் போன்ற தொழில்நுட்பங்கள் தலா மூன்று மாநில வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பண்ணைகளில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.*

GRAINS–*ஒரு தளம் - ஒருங்கிணைந்த சேவை இணைப்பகத்தினைக் கொண்டு, நடப்பாண்டில், விவசாயிகள் ஒற்றைச் சாளர வலைதளம் வாயிலாக அனைத்துத் திட்டப் பலன்களைப் பெற* GRAINS *(*Grower Online Registration of Agriculture Input System*) வலைதளம் பயன்படுத்தப்படும்.*

GRAINS *வலைதளத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் இணைக்கப்பட்டிருக்கும்:*

1. *நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் விவரம்.*
2. *நில உடைமை வாரியாக 16,721 கிராமங்களுக்கும் புவியியல் குறியீடு செய்தல்.*
3. *நில உடைமை வாரியாக பயிர் சாகுபடி விவரம் சேகரித்தல் (மின்னணு இ—பயிர் பதிவு முறை).*

GRAINS *வலைதளத்தில் உள்ள தரவுகள் பதின்மூன்றிற்கும் மேற்பட்ட துறைகளுக்குப் பயன்படுவதுடன், விவசாயிகளுக்குத் தேவையான திட்டப் பலன்களை வழங்குவதுடன், தகுதியான பயனாளிக்குச் சரியான பலனைக் கொண்டு செல்வதற்கு இத்தளம் பேருதவியாக இருக்கும்.*

### 1.2.8. ஒருங்கிணைந்த பண்ணையம்

*விவசாயிகள் பயிர் சாகுபடியை மட்டுமே மேற்கொள்வதினால் தொடர் வருமானம் பெறுவது சாத்தியமற்றதாக உள்ளது. விவசாயிகள் நீடித்த, நிலையான வருமானம் பெற்றால்தான் அவர்களின் வாழ்வாதாரமும் உயர்ந்து, குடும்பங்களும் நிறைவு பெற்றவையாக விளங்கும். ஆண்டுதோறும் வருமானம் என்ற நிலையினை ஏற்படுத்திட பயிர் சாகுபடியுடன் இணைந்து வேளாண் சார்ந்த தொழில்களையும் மேற்கொண்டால்,*

[2023 ஏப்ரல் 5

அவற்றின்மூலம் கிடைக்கும் பொருட்களை மறுசுழற்சி செய்து, நிலம் வளம் பெறுவதோடு வருமானமும் தொடர்ந்து கிடைத்திடும் நிலை உள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு வேளாண் குடும்பங்களை உயர்த்திடும் நோக்கத்துடன் பயிர் சாகுபடியுடனான பிற வேளாண்சார் செயல்பாடுகளையும் இணைந்து ஒருங்கிணைந்த பண்ணையமாக செயல்படுத்திட ஊக்கப்படுத்தி வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டில், 13,000 ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள் ரூ.65.65 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.2.9 பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாட்டில் பழங்குடியின விவசாயிகள் பல மாவட்டங்களைச் சார்ந்த மலைப் பகுதிகளில் இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்து வருகின்றனர். வேளாண் வளர்ச்சியானது அனைத்துப் பிரிவு விவசாயிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை உள்ளடக்கியதாகும். எனவே, "வானுயர்ந்த மலைக்கும் தானுண்டு பிள்ளை" என்று அடர்ந்த காட்டிலும் அயராது பாடுபடும் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசானது பழங்குடியின விவசாயிகளின் வளர்ச்சிக்காகத் துறை சார்ந்த திட்டங்களுடன் பிற துறைகளின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து அவர்களை முன்னேற்ற பாதையில் முன்னெடுத்துச் செல்ல இத்திட்டத்தினைச் செயல்படுத்தவுள்ளது.

## 1.3. பயிர் சாகுபடி விவரம்

### 1.3.1. நெல்

தமிழ்நாடு மக்களின் பிரதான உணவாக அரிசி இருப்பதால் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதில் அரிசி முக்கியப் பங்கு வகிக்கிறது. மொத்த பயிர் சாகுபடியில் 35 சதவிகிதம் நெல் பயிரிடப்படுகிறது.

*2023 ஏப்ரல் 5*]

**அட்டவணை:1.6—பருவம், பரப்பு மற்றும் உற்பத்தி விவரம்**

| பருவம் | மாதம் | பரப்பு (இலட்சம் எக்டர்) | அரிசி உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| கார் / குறுவை / சொர்ணவாரி | ஏப்ரல்–ஜூலை | 4.14 | 16.90 |
| சம்பா / தாளடி / பிசானம் | ஆகஸ்டு – நவம்பர் | 14.49 | 48.02 |
| நவரை / கோடை | டிசம்பர் – மார்ச் | 3.54 | 14.14 |
| **மொத்தம்** | | **22.17** | **79.06** |

*2022–2023 ஆம் ஆண்டில் நெற்பயிரின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ரூ.15.10 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் ரூ.4.57 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டிலும் இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

*இயற்கைச் சீற்றங்களிலிருந்து வேளாண் விளைபொருட்களைப் பாதுகாப்பதற்காக, ரூ.5 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளுக்குத் தார்ப்பாய்கள் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. நெற்பயிரின் வளர்ச்சிக்குத் தேவையான துத்தநாக சல்பேட் மற்றும் மண் வளத்தைக் கூட்டும் ஜிப்சம் ஆகியவை விவசாயிகளுக்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் கடந்த 2022–23 ஆம் ஆண்டில் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் நடப்பு நிதியாண்டிலும் செயல்படுத்தப்படும்.*

**1.3.2. சிறுதானியங்கள்**


*"உருவிலே சிறுதானியமானாலும்*


*உணவிலே அது பெருதானியமே"*

*தமிழ்நாட்டில் சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் ஆகிய சிறுதானியங்களும், வரகு, பனிவரகு, குதிரைவாலி, சாமை, தினை போன்ற குறுதானியங்களும் சராசரியாக 8.94 இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு, 31.35 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகின்றன.*

[2023 ஏப்ரல் 5

**படம் 5 - 2021-2022 ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறுதானிய பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன்**




**ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு-2021-2022 இறுதி மதிப்பீடு**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5*]

## தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம்

### அ) ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்கள்

*சிறுதானியங்களின் பரப்பை அதிகரித்து, அதன் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் நோக்கத்துடன் பயன்பாடற்ற நிலங்களையும், வளம் குறைவான நிலங்களையும் மேம்படுத்தி மண் வளம் அதிகரித்திடவும், உரிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கிடைக்கச் செய்வதன்மூலம் உயர் விளைச்சல் அடைந்திட இயலும். மேலும், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலைக் கிடைக்கச் செய்து வருமானத்தையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்ட உட்கூறுகள் செயல்படுத்தப்படுகின்றன.*

*இத்திட்டம், 15 மாவட்டங்களில் கடந்த 2022-2023 ஆம் ஆண்டில், ரூ.39.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

### ஆ) மக்காச்சோளம்

*மக்காச்சோளப் பயிரின் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கவும், விவசாயிகளின் வயல்களில் மண்வளத்தைப் பெருக்கி உற்பத்தித் திறனை நிலை நிறுத்திடவும், விவசாயிகளுக்கு நிலையான வருமானத்தையும், வாழ்வாதாரத்தையும் கிடைக்கச் செய்திடவும், இத்திட்டமானது ஒன்பது மாவட்டங்களில், 2022-2023 ஆம் ஆண்டில், ரூ.1.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.*


*நடப்பாண்டில் இத்திட்டம் ரூ.1.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.*

### 1.3.3. பயறுவகைப் பயிர்கள்

*பயறுவகைப் பயிர்கள் மண் வளத்தைப் பெருக்குவதில் முக்கியப் பங்காற்றுவதுடன், மனிதர்களுக்குத் தேவையான புரதச்சத்தையும் வழங்குகின்றன. துவரை, உளுந்து, பச்சைப்பயறு மற்றும் கொள்ளு ஆகியவை தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயறுவகைப் பயிர்களாகும். தமிழ்நாட்டில், பயறுவகைப் பயிர்கள் சராசரியாக 8.17 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 5.22 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.*

[2023 ஏப்ரல் 5

**படம் 6- 2021-2022 ஆம் ஆண்டு பயறுவகைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி**




**ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி மதிப்பீடு)**

*பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவை அடையும்பொருட்டு, தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டங்கள் முறையே ரூ.42.66 கோடி மற்றும் ரூ.27.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2022-2023 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன.*

*மேலும், துவரை சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்டங்களை உள்ளடக்கிய "துவரை சிறப்பு மண்டலம்" அமைக்கப்பட்டு, தேவையான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டன.*

*மேலும், "நெல்லுக்கு பின் பயறு சாகுபடித் திட்டம்" 10 இலட்சம் ஏக்கர் பரப்பில், ரூபாய் 30.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*நடப்பாண்டில் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ரூ.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.*

*2023 ஏப்ரல் 5*]

### 1.3.4. எண்ணெய்வித்துப் பயிர்கள்

*தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துப் பயிர்கள் சராசரியாக 3.95 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 9.44 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.*

*எண்ணெய்வித்துப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த, கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ரூ.28.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டன. மேலும், சோயாபீன்ஸ் சாகுபடியை ஊக்குவிக்க தங்கப்பயறு சோயாபீன்ஸ் திட்டம் ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.*

*நடப்பாண்டில் இத்திட்டங்கள் ரூ.33.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். மேலும், எண்ணெய்வித்துக்கள் அதிகம் விளையும் மாவட்டங்களை ஒருங்கிணைத்து 'சிறப்பு எண்ணெய்வித்து மண்டலம்' உருவாக்கப்படவுள்ளது.*

#### 1.3.4.1. எண்ணெய்வித்து மரப்பயிர்கள்

*எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடி பரப்பினைத் தமிழ்நாட்டில் அதிகரித்திடவும் பயன்பாடின்றி தரிசாக உள்ள நிலங்களைப் புனரமைத்திடவும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரிசு நிலப் பயன்பாட்டை மேம்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும், வேம்பு மற்றும் புங்கம் ஆகிய மரங்களைச் சாகுபடி செய்ய மரக்கன்று நடவு செய்தல் மற்றும் ஏற்கெனவே சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் பராமரிப்பு மற்றும் ஊடுபயிர் சாகுபடி செய்தல், விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்குதல் ஆகிய இனங்களை செயல்படுத்த, கடந்த 2022-2023 ஆம் ஆண்டு ரூ.1.66 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், நடப்பாண்டில் இலுப்பை மர சாகுபடியையும் சேர்த்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

### 1.3.5. பருத்தி

*தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் வணிகப் பயிர்களில் பருத்தி பயிர் இயற்கை இழை தரக்கூடிய முக்கிய வணிகப் பயிராகும். இப்பயிர் நெசவுத் தொழிலுக்குப் பருத்தி இழைகள் வழங்குவதோடு, பருத்தி விதைகள் புரதச்சத்து நிறைந்துள்ளதால் கால்நடைத்*

தீவன உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு முக்கிய மூலப் பொருளாக விளங்குகிறது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் பருத்தி பயிரானது சராசரியாக 1.62 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 3.92 இலட்சம் பஞ்சுப் பொதிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.11.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மிக நீண்ட மற்றும் நீண்ட இழைப் பருத்தி இரகங்களின் விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டம் நடப்பாண்டிலும் ரூ.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.3.6 தென்னை

தென்னை, ஆண்டு முழுவதும் காய்ப்புடன் வருமானம் கொடுத்து, கைகொடுக்கும் பல்லாண்டுப் பயிராகும். தென்னையில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், மாநில அரசாலும், தென்னை வளர்ச்சி வாரியத்தாலும், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தென்னை 4.44 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு, ஆண்டுக்கு சுமார் 51,282 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தித் திறன் ஒரு எக்டருக்கு 11,526 தேங்காய்கள் ஆகும். கடந்த 2022—23 ஆம் ஆண்டில், தென்னை வளர்ச்சி வாரியத் திட்டத்தின்கீழ் ரூ.12.25 கோடி நிதியும், மாநிலத் திட்டத்தின்கீழ் ரூ.5.58 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு திட்ட இனங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் தென்னை வளர்ச்சி வாரியத் திட்டம் ரூ.48.19 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 1.4. வேளாண் துறையின் இதர திட்டங்கள்

### 1.4.1 தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

"தரமான வித்தே நல் விளைச்சலுக்கு ஆதாரம்". உரிய பருவத்தில் விவசாயிகளுக்கு விதை விநியோகம் செய்யும் உன்னத நோக்கத்துடன், 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை தொடங்கப்பட்டது. மேலும் அறிவிக்கை


*2023 ஏப்ரல் 5]*

*செய்த பயிர் இரகங்களில் ஆதார மற்றும் சான்று விதை உற்பத்தியை மேற்கொள்ளுதல், விதைப் பண்ணை விவசாயிகளிடமிருந்து சான்று விதைகளைக் கொள்முதல் செய்து அதற்கான உரிய விலையை விதை விலைக் கொள்கைப்படி அளித்தல், அனைத்து விதை தொடர்பான துறையின் உட்கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து, பயன்படுத்தி, தரமான விதைகளை விநியோகிக்க வழிவகை செய்தல் ஆகியவை இம்முகமையின் முக்கிய நோக்கங்களாகும்.*

*இம்முகமையின்கீழ், 33 மாநில விதைப் பண்ணைகளும், ஆறு மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகளும், ஒரு மாநில பயறுவகை விதைப்பெருக்கப் பண்ணையும், 23 அரசு தென்னை நாற்றுப் பண்ணைகளும், 16 தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்களும், 108 விதை சுத்திகரிப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.*

*கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் மொத்தம் 28,011 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 31,180 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்து விநியோகிக்கப்படும்.*

**படம்:7 - 2023-2024 ஆம் ஆண்டிற்கான விதை கொள்முதல் மற்றும் விநியோகத் திட்டம்**




## 1.4.2. தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

*தரமான தென்னங்கன்றுகளை விவசாயிகளுக்கு விநியோகித்தல், தென்னங்கன்றுகளை அதிகளவில் உற்பத்தி செய்து விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்தல், தென்னை*

பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் 23 தென்னை நாற்றுப் பண்ணைகளும், 16 தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்களும் இயங்கி வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 13.73 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 16.07 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும்.

### 1.4.3. வேளாண்மை விரிவாக்க மையங்கள்

முக்கிய வேளாண் இடுபொருட்களை, இருப்பு வைத்து விநியோகிப்பதோடு, விதைப்பு முதல் அறுவடை வரை தேவைப்படும் அனைத்து ஆலோசனைகளையும் வழங்கும் ஒருங்கிணைப்பு மையமாக, வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்படுகின்றன.

மொத்தம் 880 வேளாண்மை விரிவாக்க மையங்களில் வட்டார அளவில் 383 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களும், பிர்கா அளவில் 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்படுகின்றன.

விவசாயம் தொடர்பான அனைத்து சேவைகளையும் விவசாயிகளுக்கு ஒரே இடத்தில் வழங்கிடும் பொருட்டு, 383 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களில், 193 மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 44 மையங்களைத் தரம் உயர்த்திட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில், 155 மையங்களுக்கு பல்வேறு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதுதவிர 124 துணை மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 1.5. பயிர்ப் பாதுகாப்பு

பயிர்ப் பாதுகாப்பு என்பது சரியான கட்டுப்பாட்டு முறைகளை உரிய நேரத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்களின் உற்பத்தியைப் பாதிக்கும் பூச்சி, நோய் மற்றும் களைகளை கட்டுப்படுத்தும் மேலாண்மை முறையாகும். மேலும் நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாத்து, தீமை செய்யும் பூச்சிகளிடமிருந்து பயிர்களைப்

*2023 ஏப்ரல் 5]*

*பாதுகாக்கத் தரமான, பாதுகாப்பான பூச்சிக்கொல்லிகள் விநியோகம் செய்தல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடிக்க விவசாயிகளை ஊக்குவித்தல், அயல்நாட்டிலிருந்து உள் நுழையும் பூச்சி/நோய்களைக் கண்காணித்து தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகிய பணிகளைத் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.*

### 1.5.1. உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்தல்

*பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்திடவும், சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பான பயிர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்திடவும், எஞ்சிய நஞ்சில்லாத உணவுகளை உற்பத்தி செய்திடவும் விவசாயிகளுக்கு 24 உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் ஆய்வகங்கள் வாயிலாக உயிரியல் பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.*

**அட்டவணை:-1.7-2022-2023 ஆம் ஆண்டில் உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்**

| வ. எண் | உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் | உற்பத்தி மற்றும் விநியோகம் |
|---|---|---|
| *1.* | *டிரைகோடெர்மா விரிடி (கிலோ)* | *3,19,653* |
| *2.* | *சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (கிலோ)* | *4,02,197* |
| *3.* | *பவேரியா பேசியானா (கிலோ)* | *20,969* |
| *4.* | *டிரைகோகிரம்மா கைலோனிஸ் (சிசி)* | *1,17,120* |
| *5.* | *மெட்டாரைசியம் அனிசோபிலியே (கிலோ)* | *1,11,381* |
| *6.* | *கிரைசோபெர்லா (எண்கள்)* | *1,42,73,000* |

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.6. உரம்

பயிர் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் இரசாயன உரங்கள், ஒன்றிய அரசின் உரம் மற்றும் இரசாயனத் துறைமூலம் தமிழ்நாட்டிற்கு மாதாந்திர உர வழங்கல் திட்டத்தின்படி (Monthly Supply Plan) ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், விவசாயிகளுக்கு தங்குதடையின்றி உரிய நேரத்தில் உரங்கள் கிடைத்திட இவ்வரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் 23.50 இலட்சம் மெட்ரிக் டன் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டிலும் உரங்கள் ஒன்றிய அரசிடமிருந்து பெற்று வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் காரீப் 2023 பருவத்திற்கு 10.38 இலட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 4.15 இலட்சம் மெட்ரிக் டன் (40%) உரங்கள் இருப்பில் உள்ளன.

**அட்டவணை:1.8-ஆண்டு வாரியாக உர விநியோக விவரங்கள்**

| உரம் | உர விநியோகம் (இலட்சம் மெட்ரிக் டன்) | |
|---|---|---|
| | 2021–2022 | 2022–2023 |
| யூரியா | 9.180 | 10.750 |
| டி.ஏ.பி. | 2.170 | 3.050 |
| பொட்டாஷ் | 2.010 | 1.580 |
| காம்ப்ளக்ஸ் | 7.740 | 7.380 |
| சூப்பர் பாஸ்பேட் | 0.720 | 0.740 |
| மொத்தம் | 21.820 | 23.500 |

*2023 ஏப்ரல் 5*]

## 1.7. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

விவசாயிகளுக்குத் தரமான உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் உயிர் உரங்கள் கிடைத்திட தமிழ்நாட்டில் 14 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 12 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள், மூன்று மாநில பூச்சிக்கொல்லி ஆய்வகத்துடன்கூடிய குறியீட்டு மையங்கள், இரண்டு அங்கக உரப் பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், திருச்சி மாவட்டத்தில் உயிர் உரத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் ஆகியவையும் செயல்பட்டு வருகின்றன.

### 1.7.1. உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் செயல்பாடுகள்

**அட்டவணை: 1.9- உர மாதிரிகள் பரிசோதனை விவரம்**

| வ. எண் | விவரம் | 2022–2023 | | தரமற்ற மாதிரிகள் | 2023-2024 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1 | உர மாதிரிகள் | 24600 | 23226 | 588 (540 துறை ரீதியாகவும், 48 சட்ட ரீதியாகவும் நடவடிக்கை) | 24600 |
| 2 | அங்கக உர மாதிரிகள் | 1440 | 1410 | 106 | 1440 |
| 3 | உயிர் உர மாதிரிகள் | 1040 | 1006 | 14 | 1040 |

மேலும், அனைத்து உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கும் ISO—17025:2017 தேசிய தர நிர்ணயச் சான்றினை (NABL Accreditation) பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[*2023 ஏப்ரல் 5*

## 1.7.2. பூச்சிக்கொல்லி ஆய்வகங்களின் செயல்பாடுகள்

### அட்டவணை: 1.10 - பூச்சிக்கொல்லி மாதிரிகள் பரிசோதனை விவரம்

| வ. எண் | விவரம் | 2022-2023 | | தரமற்ற மாதிரிகள் | 2023-2024 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| *1* | *பூச்சிக்கொல்லி மாதிரிகள்* | *21850* | *21766* | *130 (94 துறை ரீதியாகவும், 36 சட்ட ரீதியாகவும் நடவடிக்கை)* | *21850* |

*கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் ஆய்வகங்கள்போல் மீதமுள்ள 10 ஆய்வகங்களுக்கும் தேசிய தர நிர்ணயச் சான்றினைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

## 1.7.3. உயிரியல் காரணிகள் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம்

*நடப்பாண்டில், உற்பத்தி செய்யப்படும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளுரோசன்ஸ், பெவேரியா பேசியானா மற்றும் மெட்டாரைசியம் அனிசோபிலே ஆகியவற்றின் தரத்தினை உறுதி செய்யும்பொருட்டு ஆண்டு ஒன்றுக்கு 500 மாதிரிகள் திருச்சிராப்பள்ளியிலுள்ள புதிய உயிரியல் காரணிகள் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் தரப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.*

## 1.8. மண்வள மேம்பாடு

## 1.8.1 மண் பரிசோதனை நிலையங்கள்

*பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயை மும்மடங்காக்கவும், மண் பரிசோதனை அடிப்படையிலான பயிருக்கேற்ற மண்வள மேம்பாடும், தேவைக்கேற்ற உர நிர்வாகமும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் 36 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களில் மண்*

*2023 ஏப்ரல் 5*]

*மாதிரிகள் மற்றும் பாசன நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வு முடிவுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.*

*விவசாயிகளின் நலனுக்காக, கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் மண்நலம் மற்றும் மண்வளம் திட்டத்தின்கீழ் புதியதாக மயிலாடுதுறையில் மண் பரிசோதனை நிலையம், திருநெல்வேலி மற்றும் கடலூர் மாவட்டங்களில் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*மேலும், கடந்த 2022-2023 ஆம் ஆண்டில், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் 2,30,400 மண் வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 37,000 பாசன நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.*

## 1.9. நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம்

*மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுகளை நீக்கி உயர் மகசூல் பெற்றிடவும், விவசாயிகளுக்குத் தரமான நுண்ணூட்ட உரங்கள் விநியோகம் செய்திடவும், புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் இயங்கி வரும் நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம் வாயிலாக கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் 3300 மெட்ரிக் டன் அளவில் 14 வகையான அத்தியாவசியமான நுண்ணூட்டக் கலவைகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, 3,244 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து விவசாய பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. வரும் 2023-2024 ஆம் ஆண்டிலும், 3,300 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும்.*

## 1.10. உயிர் உர உற்பத்தி மையங்கள்

*மண்வளத்தைப் பாதுகாத்து செறிவூட்டக்கூடிய நோக்கத்துடன், தமிழ்நாட்டில் கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் எட்டு வகையான திரவ உயிர் உரங்கள் 12.10 இலட்சம் லிட்டர் அளவில் 22 உயிர் உர உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்ய திட்டமிட்டு, இதுவரை விவசாயிகளுக்கு 11.35 இலட்சம் லிட்டர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. துத்தநாகத்தைக் கரைத்துக் கொடுக்கும் பாக்டீரியா 800 லிட்டர் உற்பத்தி செய்யப்பட்டு மாநில அரசு விதைப் பண்ணைகளுக்கு கடந்த*

2022-2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு, செயல் விளக்கத் திடல்கள்மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டம் வரும் 2023-2024 ஆம் ஆண்டில் 12.10 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்கள் உற்பத்தியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.11. அட்மா—வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை

விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகளை கிராம அளவில் ஆய்வு செய்து அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து, பல்நோக்குடன் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கென மாவட்டந்தோறும் முகமை நிறுவப்பட்டுள்ளது.

வேளாண் விரிவாக்கத் திட்டமானது வேளாண்மை, தோட்டக்கலை—மலைப்பயிர்கள், கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன் வளம் (ம) மீனவர் நலத் துறை, வனத் துறை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1.11.1. 2022-2023 ஆம் ஆண்டின் அட்மா செயல்பாடுகள்

இத்திட்டத்தில் உழவர் சார்ந்த செயல்பாடுகள், பண்ணைத் தகவல் பரப்புதல், பண்ணைப் பள்ளி, வேளாண் தொழில்நுட்பங்கள் மேம்படுத்தி, மதிப்பீடு செய்து பின்பற்றுதல் மற்றும் பிற புதுமையான செயல்பாடுகள் என வகைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.61.68 கோடி செலவில் அட்மா செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

*2023 ஏப்ரல் 5*]

**அட்டவணை: 1.11- கடந்த 2022-23 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை**

| வ. எண் | இனம் | பயிற்சிகளின் எண்ணிக்கை | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உள் மாநில பயிற்சி | 367 | 14,680 |
| 2 | உள் மாவட்ட பயிற்சி | 7,051 | 2,82,040 |
| 3 | மாநிலங்களுக்குள்ளான கண்டுணர் பயணம் | 122 | 2,440 |
| 4 | உள் மாநில கண்டுணர் பயணம் | 801 | 40,050 |
| 5 | உள் மாவட்ட கண்டுணர் பயணம் | 1,612 | 80,600 |
| 6 | செயல் விளக்கங்கள் | 10,656 | 10,656 |
| 7 | பண்ணைப் பள்ளிகள் | 264 | 6,600 |

இவ்வாண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.12. உழவர் பயிற்சி மையங்கள்

### 1.12.1. உழவர் பயிற்சி நிலையம்

மாநிலத்தில் 22 உழவர் பயிற்சி நிலையங்களில் உழவர் மன்ற அமைப்பாளர்கள் மற்றும் வேளாண் மகளிருக்கு வேளாண் மேலாண்மையில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுவதற்காகத் திறன் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

## 1.12.2. மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்), குடுமியான்மலை

*வேளாண்மைத் துறையில் பணிபுரியும் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள், நிர்வாகம், விரிவாக்க மேலாண்மை மற்றும் கணினி தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் 600 வேளாண்மைத் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.19.73 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.*

*நடப்பாண்டில் 1,800 பணியாளர்களுக்கு ரூ.54 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

## 1.12.3. மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிலையம் (சமிதி), குடுமியான்மலை

*மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் இப்பயிற்சி நிலையத்தினால் (*SAMETI*) வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. மேலும், வேளாண்மை விரிவாக்க மேலாண்மை முதுகலை பட்டயப் படிப்பு (*PGDEAM*), இடுபொருள் விற்பனையாளர்களுக்கான வேளாண் விரிவாக்கச் சேவை பட்டயப் படிப்பு (*DAESI*), பூச்சிக்கொல்லி வியாபாரிகள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான பூச்சிக்கொல்லி மேலாண்மை குறித்த சான்றிதழ் படிப்பு, கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் வளர்க்கும் பயிற்சி (*STRY*) மற்றும் விவசாய ஆலோசகர் (*Certified Farm Advisor*) போன்ற பயிற்சிகளும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகின்றன. மேலும், வேளாண்மைத் திட்டங்கள் தயாரித்தல், செயல்படுத்துதல், கண்காணிப்பு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதில் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது.*

*கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் 2,620 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.94.14 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.134.5 இலட்சத்தில் 3,490 தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனுடன் ஹைதராபாத்திலுள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் மற்றும் தேசிய பயிர் நல மேலாண்மை நிலையத்துடன் இணைந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகள் நடத்தப்படும்.*

*2023 ஏப்ரல் 5*]

## 1.13. பேரிடர் மேலாண்மை

*பேரிடர் காலங்களில் பயிர் பாதுகாப்பு உத்திகளைக் கடைபிடிக்க விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பயிர்ச் சேதங்களால் ஏற்படும் இழப்பீடுகளை ஈடுசெய்து, விவசாயிகளை ஊக்குவிக்கும் விதத்தில், இடுபொருள் மானியம், மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.*

*தமிழ்நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டில் ஏப்ரல், மே மாதத்தில் பெய்த கனமழை, தென் மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழை மற்றும் ஜனவரி இறுதி முதல் பிப்ரவரி வரை (30.1.2023 முதல் 2.2.2023) பருவம் தவறி பெய்த கனமழை ஆகிய இயற்கைப் பேரிடர்களில் 1.39 இலட்சம் எக்டர் பரப்பில் சேதமடைந்த வேளாண் பயிர்களால் பாதிக்கப்பட்ட 1,93,366 விவசாயிகளுக்கு, ரூ.174.11 கோடி இடுபொருள் மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.*

## 1.14. உழவர் நலன் காக்க வேளாண் மண்டலக் குழுக்கள்

*கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் மேற்கு மண்டலம், வடமேற்கு மண்டலம், அதிக மழைப்பொழிவு மண்டலம், மலைமண்டலம் மற்றும் வடகிழக்கு மண்டலத்தில், வேளாண் மண்டலக் குழு கூட்டம் நடத்தப்பட்டது. நடப்பாண்டில் வேளாண் மண்டலக் குழுக்கள் தொடர்ந்து செயல்படும்.*

## 1.15. ஏரிகளிலும், குளங்களிலும் படிந்திருக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் பயன்படுத்தி மண் வளத்தை உயர்த்துவதற்கான விழிப்புணர்வு

*"ஆற்று வண்டல் தேற்றும் பயிரை" என்ற கூற்றிற்கேற்ப. கடந்த 2021-2022 ஆம் ஆண்டு முதல் மண்வளத்தை மேம்படுத்தவும், நீர்நிலைகளின் இயல்பான கொள்ளளவைத் தக்கவைக்கவும் ஏரி, குளங்களில் படிந்திருக்கும் வண்டல் மண்ணை விவசாய நிலங்களில் பயன்படுத்த தமிழ்நாடு அரசு விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது. இத்திட்டம், நீர்வள ஆதாரத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, தொழில் துறை, வேளாண்மைத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 15.86 இலட்சம் கனமீட்டர் வண்டல் மண் எடுக்கப்பட்டு, 12,895 விவசாயிகள் பயனடைந்தனர்.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும், விவசாயிகள் அதிக அளவில் பயன்பெறும் வகையில், கால தாமதமின்றி இப்பணியினைச் சிறப்பாக மேற்கொள்ளும் மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது வழங்கப்படும்.

**1.16. விவசாயிகளுக்கான இலவச மும்முனை மின்சாரத் திட்டம்**

தமிழ்நாடு அரசு, 1990 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி வருகின்றன. கடந்த 2021—22 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் மின் இணைப்பு மற்றும் 2022-2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 50,000 மின் இணைப்பையும் சேர்த்து, தற்போது வரை 23.37 இலட்சம் இலவச மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2022-2023 ஆம் ஆண்டு வரை இலவச மின்சாரம் வழங்க ரூ.7,857.76 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.17. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்**

ஒற்றைப் பயிர் சாகுபடி முறையைத் தவிர்த்திடவும் நீர்ப்பாசன மேலாண்மை, காலநிலை மாற்றத்திற்கு உகந்த இறவைப்பாசன வேளாண்மை ஆகியவற்றின்மூலம் பயிர் உற்பத்தித் திறனைப் பெருக்குதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக, தெரிவு செய்யப்பட்ட 66 துணையாற்றுப் படுகைகளில், 2017-2018 ஆம் ஆண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.84.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் வேளாண்மைத் துறையால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் நான்கு கட்டங்களாக, தெரிவு செய்யப்பட்ட 51 துணை ஆற்றுப்படுகைகளில் பயிர் செயல்விளக்கங்கள், இயந்திரக் களையெடுப்பு, இதர பயிர்சார்ந்த இனங்களான உழவர் வயல்வெளிப் பள்ளிகள், விதை கிராமம், ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை கிராமங்கள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் மாதிரி கிராமம் ஆகிய இனங்களுக்காக ரூ.14.96 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2023—2024 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

*2023 ஏப்ரல் 5*]

## 1.18. வேளாண்மைத் துறை சார்ந்த விருதுகள்

*விவசாயிகளுக்குப் பல்வேறு விஞ்ஞான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, அவற்றினை வயல்களில் நடைமுறைப்படுத்துவதன்மூலம் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் பயிர் விளைச்சல் போட்டிகளை நடத்தி, தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு விருதுகளை வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறது.*

**அட்டவணை: 1.12 - விருதுகள் விவரம்**

| வ. எண் | விருது விவரம் | குறிப்பு | பரிசுத் தொகை விவரம் |
|---|---|---|---|
| *1* | திரு. சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது | செம்மை நெல் சாகுபடியில் மாநிலத்தில் அதிக உற்பத்தித் திறன் பெறுதல். | *ரூ.5* இலட்சம் மற்றும் வெள்ளிப் பதக்கம். |
| *2* | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது | பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாக்கும் விவசாயிகளை ஊக்குவித்தல் | முதல் பரிசு – ரூ— *1* இலட்சம், இரண்டாம் பரிசு — ரூ.*75,000* மூன்றாம் பரிசு – ரூ. *50,000* |
| *3* | மாநில அளவில் வேளாண்மையில் புதிய உள்ளூர் விவசாய தொழில்நுட்பம் மற்றும் புதிய இயந்திரங்கள் கண்டுபிடிப்புக்கான விருது | புதிய உள்ளூர் விவசாய தொழில்நுட்பம், புதிய இயந்திரங்கள் கண்டுபிடிப்பு | தலா ரூ. *1* இலட்சம் (இரண்டு விருதுகள்) |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | விருது விவரம் | குறிப்பு | பரிசுத் தொகை விவரம் |
|---|---|---|---|
| 4 | மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி | | |
| அ) | நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி | தொழில்நுட்பங்களை பின்பற்றி அதிக உற்பத்தித்திறன் பெற்ற விவசாயிகளை ஊக்கப்படுத்துதல் | முதல் பரிசு — ரூ. 15,000/— இரண்டாம் பரிசு – ரூ. 10,000/— |
| ஆ) | சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, துவரை மற்றும் பச்சைப்பயறு | | முதல் பரிசு — ரூ10,000/— இரண்டாம் பரிசு – ரூ.5,000/— |

## 1.19. பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

பருவகால நிலை மாற்றங்களால் ஏற்படும் வெள்ளம், புயல், வறட்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் போன்ற இயற்கை இடர்பாடுகளுக்கிடையில் வேளாண்மையை மேற்கொள்வது பெரும் சவாலாக உள்ளது. இதனால், உணவு பாதுகாப்பு மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாவதோடு, உணவு தானிய உற்பத்தியும் குறையும் நிலை உள்ளது. விவசாயிகள் பருவகால மாற்றங்களை எதிர்கொண்டு சமாளிக்கும் அணுகுமுறையாகவும், இயற்கை இடர்பாடுகளில் இருந்து மீண்டு, வேளாண்மையை மேற்கொள்வதற்கும் பயிர் காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில், தெரிவு செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களால் 37 மாவட்டங்களை உள்ளடக்கிய 14 தொகுப்புகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசை வலியுறுத்தியதைத் தொடர்ந்து, சம்பா நெற்பயிர் காப்பீடு செய்வதற்கு நீட்டிக்கப்பட்ட காலத்தில் 38,760 விவசாயிகளால் கூடுதலாக காப்பீடு செய்யப்பட்ட 71,368 ஏக்கர் பரப்பளவு உட்பட, கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் 39.64 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டு, 18.54

*2023 ஏப்ரல் 5]*

*இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்த சாகுபடிப் பரப்பளவில் 50 சதவிகிதம் காப்பீடு செய்ய ஒன்றிய அரசால் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் சுமார் 72 சதவிகிதம் சாதனை அடையப்பட்டுள்ளது.*

*காப்பீட்டுக் கட்டண மானியத்தில் ஒன்றிய அரசு உச்சவரம்பை நிர்ணயித்ததால், நிதிச்சுமை பெரிதும் அதிகரித்த போதிலும், மாநில அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.2,312 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு அரசு எடுத்த பெருமுயற்சியின் விளைவாக, 2021-22 ஆம் ஆண்டிற்கு 6.71 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.783 கோடி நிதியும், 2022-2023 ஆம் ஆண்டு மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த சம்பா நெல் காப்பீடு செய்த 19,282 விவசாயிகளுக்கு விதைப்பு பொய்த்தல் இனத்தின்கீழ் ரூ.34.30 கோடி நிதியும் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

**1.20. வேளாண்மைத் துறை பணியாளர் அமைப்பு**

*தொழில்நுட்ப அலுவலர்கள், அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள் பிரிவில், மொத்தம் 10,575 பணியாளர்களுடன் வேளாண்மைத் துறை இயங்கி வருகிறது.*

**அட்டவணை: 1.13 - தொழில்நுட்ப அலுவலர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 5 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 37 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் | 132 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 424 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 1,099 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 337 |
| 7 | உதவி விதை அலுவலர் | 509 |
| 8 | உதவி வேளாண்மை அலுவலர் | 2,320 |
| | **மொத்தம் தொழில்நுட்ப அலுவலர்கள்** | **4,863** |

[2023 ஏப்ரல் 5

**அட்டவணை: 1.14- அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | துணை இயக்குநர் (நிர்வாகம்) | 2 |
| 2 | ஆட்சி அலுவலர் | 34 |
| 3 | கண்காணிப்பாளர் | 185 |
| 4 | உதவியாளர் | 650 |
| 5 | இளநிலை உதவியாளர் | 389 |
| 6 | தட்டச்சர் | 366 |
| 7 | கண்காணிப்பாளர் (பிணையம்) | 149 |
| 8 | உதவியாளர் (பிணையம்) | 249 |
| 9 | இளநிலை உதவியாளர் (பிணையம்) | 573 |
| 10 | சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்—1) | 1 |
| 11 | சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்—2) | 39 |
| 12 | சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்—3) | 95 |
| 13 | ஓட்டுநர் | 292 |
| 14 | ஆய்வக உதவியாளர் | 143 |
| 15 | பதிவறை எழுத்தர் | 157 |
| 16 | அலுவலக உதவியாளர் | 586 |
| 17 | காவலாள் | 1,133 |
| 18 | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 19 | இதர பணியாளர்கள் | 667 |
| | **மொத்தம் தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள்** | **5,712** |

*2023 ஏப்ரல் 5*]

## 2. சர்க்கரைத் துறை

*வயல்களில் சங்ககாலம் தொட்டே நெல்லும் கரும்பும் ஒருசேர சாகுபடி செய்யப்பட்டது என்பதை*

*"கழனிச் சென்நெல் கரும்பு சூழ் மருங்கு"*

*என்று சிலப்பதிகாரம் (112) கூறுகிறது.*

*"பொன்கழியாலைப் புகையொடு பரந்து*
*மன்குல் வானத்து மலையிற் றோன்றும்"*

*—சிலப்பதிகாரம் 151—152*

*சர்க்கரை ஆலைகளில், கரும்புப்பாகினைக் காய்ச்சுவதனால் எழும் புகை, அருகிலுள்ள நெற்போரினை மேகம்போல் சூழ்ந்து, மலைபோல் காட்சியளித்தது என்று தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள், சங்க காலத்திலேயே இருந்தது குறித்தும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சர்க்கரைத் துறை 1969 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சர்க்கரைத் துறையின்கீழ் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் லிமிடெட் மற்றும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஆகியன செயல்பட்டு வருகின்றன. சர்க்கரைத் துறையின்மூலம் புதிய சர்க்கரை ஆலைகள் அமைத்தல், ஏற்கெனவே இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கம், கரும்பு வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு, கூட்டுறவுச் செயல்பாடுகளை கண்காணித்தல், கரும்பு பகுதிகளை சர்க்கரை ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்தல் போன்ற பணிகளுடன் கரும்பு உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும், சாகுபடி செலவினங்களை குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*கரும்பு விவசாயிகளின்மீது அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு, தொழில் துறையின்கீழ் இயங்கி வந்த சர்க்கரைத் துறையினை முழுமையாக ஜனவரி 2022 முதல் வேளாண்மை—உழவர் நலத் துறையின்கீழ் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்தது.*

*தமிழ்நாட்டில் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளில், இரண்டாவது முக்கிய இடத்தை சர்க்கரைத் தொழில் வகிக்கிறது. சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு முக்கிய மூலப்பொருளாக விளங்குவதுடன், ஒரு முக்கிய வணிகப் பயிராகவும் திகழ்கிறது. கரும்பு சாகுபடி மற்றும் சர்க்கரை ஆலைகளினால், விவசாயிகள்*

உள்ளிட்ட அனைத்துக் கிராமப்புற மக்களின் சமூக—பொருளாதார நிலை மேம்படுவதுடன், வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதால் மாநிலத்தின் பொருளாதாரமும் உயர்கிறது.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, இரண்டு பொதுத் துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றுள் நடப்பு 2022-2023 அரவைப் பருவத்தில் 13 கூட்டுறவு, இரண்டு பொதுத் துறை, 15 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

## 2.1. கரும்பு சாகுபடி

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் 2021-2022ஆம் ஆண்டின் தரவுகளின்படி, தமிழ்நாட்டில் சராசரியாக 1.48 இலட்சம் எக்டர் பரப்பளவில் எக்டருக்கு 109 மெட்ரிக் டன் சராசரி மகசூலுடன் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கரும்பில் 65 முதல் 75 சதவிகிதம் சர்க்கரை ஆலைகளுக்கு மூலப்பொருளாக பயன்படுகிறது.

**அட்டவணை:2.1-கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படும் முதல் பத்து மாவட்டங்கள்**

| வ. எண் | மாவட்டம் | கரும்பு சாகுபடி பரப்பு (எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்) | உற்பத்தித் திறன் (மெட்ரிக் டன்/எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | 24,747 | 26.96 | 109 |
| 2 | ஈரோடு | 18,124 | 22.78 | 126 |
| 3 | திருவண்ணாமலை | 17,137 | 17.31 | 101 |
| 4 | கடலூர் | 15,406 | 16.97 | 110 |
| 5 | விழுப்புரம் | 13,196 | 13.80 | 105 |
| 6 | நாமக்கல் | 10,072 | 13.72 | 136 |
| 7 | சேலம் | 5,325 | 5.18 | 97 |
| 8 | அரியலூர் | 4,416 | 4.23 | 96 |
| 9 | திருவள்ளூர் | 4,004 | 4.42 | 110 |
| 10 | திருப்பூர் | 3,484 | 4.09 | 117 |

**(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு)**

*2023 ஏப்ரல் 5*]

### 2.1.1. சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு சாகுபடி பரப்பு

*தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளுக்காக சாகுபடி செய்யப்படும் கரும்பு பரப்பு, 2020—21 அரவைப் பருவத்தில் 95,000 எக்டரிலிருந்து, 2022—23 அரவைப் பருவத்தில் 1,50,000 எக்டராக உயர்ந்துள்ளது. குறிப்பாக கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 37,000 எக்டரிலிருந்து 55,000 எக்டராக உயர்ந்துள்ளது.*

**படம்: 2.1- கடந்த நான்கு நடவுப் பருவங்களில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு பதிவு விவரம்**





TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

### 2.1.2 கரும்பு இரகங்கள்

*தமிழ்நாட்டில், உயர்விளைச்சல், உயர் சர்க்கரை கட்டுமானம் கொண்ட கோ. 86032 கரும்பு இரகம் 45 சதவிகிதப் பரப்பளவிலும், கோ.உ 09356 (25%), கோ. 11015 (15%), கோ.0212 (5%), பிஇ 1110 (5%) மற்றும் இதர இரகங்கள் ஐந்து சதவிகிதப் பரப்பிலும் சாகுபடி செய்யப்படுகின்றன.*

*மேலும், கோ. 11015, கோ.க 13339, கோ.கு 6, கோ.கு 7, கோ. 18009 (புன்னகை) மற்றும் புத்தாக்கம் செய்யப்பட்ட கோ. 86032 போன்ற புதிய கரும்பு இரகங்களைக் கரும்பு விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்திட, கூட்டுறவு, பொது மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் நாற்றங்கால் திட்டம் மூலமாக விதைப்பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.*

**படம்: 2.2-தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் கரும்பு இரகங்கள்**




## 2.1.3. கரும்பு விலை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகை


தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளில் குறைந்து வந்த கரும்பு சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன், கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசு 9.5 சதவிகித சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்புக்கு அறிவித்த நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு (Fair and Remunerative Price) மேல் கூடுதலாக ஊக்கத்தொகை வழங்கி வருகிறது.

2020-2021 அரவைப் பருவத்திற்கு இடைக்கால உற்பத்தி ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையுடன் சேர்த்து டன் ஒன்றிற்கு ரூ.192.50 கூடுதலாக வழங்கியும், 2021-2022 அரவைப் பருவத்திற்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.195/— வழங்கியும், விவசாயிகளுக்குக் கரும்பு டன் ஒன்றிற்கு முறையே ரூ.2,900/- மற்றும் ரூ.2,950/- என்று உயர்த்தி வழங்கப்பட்டது.

2023-2024 வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், 2022-23 அரவைப் பருவத்திற்கு சிறப்பு ஊக்கத்தொகையாக கடந்த ஆண்டைப்போலவே டன் ஒன்றிற்கு ரூ.195/— வழங்க, ரூ.253 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்பிற்கு ரூ.3,016.25 என உயர்த்தி வழங்கப்படவுள்ளது, இதன்மூலம் சுமார் 1.50 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவர்.

*2023 ஏப்ரல் 5*]

**படம்: 2.3-தமிழ்நாட்டில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கரும்பு விலை மற்றும் ஊக்கத்தொகை (ரூபாய்)**




**அரவைப் பருவம்**

## 2.1.4.கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம்

### 2.1.4.1. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP)

*கரும்பு உற்பத்தி, உற்பத்தித் திறன், சர்க்கரைக் கட்டுமானத்தினை உயர்த்துதல் மற்றும் சாகுபடி செலவினைக் குறைத்திடும் நோக்குடன், கரும்பு விவசாயிகளுக்கு வல்லுநர் விதைக் கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுகள், பருசீவல் நாற்றுகள், ஒருபரு விதைக் கரணைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.*

*இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.6.88 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.*

### 2.1.4.2. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP)

*கிராம ஊராட்சிகளில் ஒட்டுமொத்த வளர்ச்சியினை அடைந்திடவும், கரும்பு உற்பத்தி , உற்பத்தித் திறன், சர்க்கரைக் கட்டுமானத்தினை உயர்த்துதல் மற்றும் சாகுபடி செலவினைக் குறைத்திடும் நோக்குடன், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராமங்களில் தரமான பருசீவல் நாற்றுகள், ஒருபரு விதைக் கரணைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.*

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 2.1.5. திசு வளர்ப்பு நாற்று ஆய்வகம் (Tissue Culture Laboratory)

இனக்கலப்பற்ற, உயர்விளைச்சல், உயர் சர்க்கரை கட்டுமானம் கொண்ட, பூச்சி, நோய் தாக்குதலற்ற விதைக் கரும்புகளை உற்பத்தி செய்யும் நோக்குடன், ஆண்டுக்கு 1.50 இலட்சம் திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தித் திறன் கொண்ட, கரும்பு திசு வளர்ப்புக்கூடம் கள்ளக்குறிச்சி—1 கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 2021 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்த ஆய்வுக் கூடத்தில் தரமான திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**அட்டவணை:2.2 - திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்**

| நடவுப் பருவம் | உற்பத்தி செய்யப்பட்டவை (எண்ணிக்கை) | வழங்கப்பட்டவை (எண்ணிக்கை) |
|---|---|---|
| 2021-2022 | 1,19,550 | 1,19,550 |
| 2022-2023 | 1,05,000 | 1,05,000 |

2023-2024 நடவுப் பருவத்தில் 1.20 இலட்சம் திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.1.6. நுண்ணீர்ப் பாசனம் (Micro Irrigation)

கரும்பு, அதிக நீர்த் தேவையுள்ள பயிர் என்பதால், பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி, அதிக மகசூல் பெறும் வகையில் நுண்ணீர்ப் பாசன அமைப்பு நிறுவுவதற்கு, குறு, சிறு விவசாயிகளுக்கு 100% மானியமும், மற்ற விவசாயிகளுக்கு 75% மானியமும் அரசு வழங்குகிறது.

தமிழ்நாடு அரசு, கரும்பு சாகுபடியில் நுண்ணீர்ப் பாசன பரப்பை அதிகரிக்கும் பொருட்டு, நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்குத்

*2023 ஏப்ரல் 5*]

*தேவையான கூடுதல் உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கு, மாநில நிதியிலிருந்து ஒரு எக்டருக்கு ரூ.32,715/—லிருந்து ரூ.43,534/— வரை கூடுதல் மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. அதிக அளவில் அகலப்பார் (Wider Row) நடவுமுறையில் நுண்ணீர்ப் பாசனம் அமைத்திட விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.*

*இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.*

**2.1.7. கரும்பு சாகுபடியில் இயந்திரமயமாக்கல்**

*கரும்பு சாகுபடிக்குத் தேவையான கூலியாட்கள் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரித்து, கரும்பு சாகுபடி செலவு உயர்ந்து வருகின்றன. கரும்பு சாகுபடி செலவினைக் குறைத்து விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் நோக்கில், நிலம் தயாரிப்பு முதல் அறுவடை வரை கரும்பு உற்பத்தியில் இயந்திரமயமாக்கல் ஊக்குவிக்கப்படுகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டு வரை வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்கம் (SMAM) மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் (NADP), 71 கரும்பு அறுவடை இயந்திரங்கள் சர்க்கரை ஆலைப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*இதுதவிர, கரும்பு சாகுபடிக்குத் தேவையான பவர் டில்லர், களை எடுக்கும் கருவி, மினி டிராக்டர், ரோட்டோவேட்டர், சோகை தூளாக்கும் கருவி, சுழல் கலப்பை போன்ற பண்ணை இயந்திரங்கள் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக, உழவன் செயலியில் இ—வாடகை எனும் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

**2.2. சர்க்கரை ஆலைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மேம்பாட்டுத் திட்டங்கள்**

*சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேலும் மேம்படுத்திட, தமிழ்நாடு அரசால் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

## 2.2.1. தானியங்கி கரும்பு எடைத்தளம் அமைத்தல்

*கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கும் விவசாயிகளின் கரும்பை துல்லியமாகவும், விரைவாகவும் எடையிடும் வகையில், 2022-2023 ஆம் ஆண்டில் அமராவதி, செங்கல்ராயன், செய்யாறு, தருமபுரி, கள்ளக்குறிச்சி—1, மதுராந்தகம், எம்.ஆர்.கே. சேலம், திருத்தணி, திருப்பத்தூர், வேலூர், கள்ளக்குறிச்சி—2, சுப்பிரமணிய சிவா ஆகிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் பெரம்பலூர், அறிஞர் அண்ணா ஆகிய பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலுள்ள எடைத்தளங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தானியங்கி எடைத்தளங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.*

## 2.2.2. சிமெண்ட் கான்கிரீட் கரும்பு தளம் (Cement Concrete Cane Yard) அமைத்தல்

*சர்க்கரை ஆலைகளில் கரும்பு ஏற்றிச்செல்லும் வாகனங்கள் எளிதில் செல்ல வசதியாக, செய்யாறு, செங்கல்ராயன், மதுராந்தகம், சேலம், திருத்தணி, அறிஞர் அண்ணா, பெரம்பலூர் ஆகிய சர்க்கரை ஆலைகளில் தற்போதுள்ள கரும்பு தளங்களை (Cane Yard), சிமெண்ட் கான்கிரீட் தளமாக வலுப்படுத்த 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.2.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 2.2.3. சுழல் கவிழ்ப்பான்கள் (Hydraulic Tipplers) நிறுவுதல்

*இயந்திரங்கள்மூலம் அறுவடை செய்யப்பட்ட கரும்பினை சர்க்கரை ஆலைகளில் எளிதாக இறக்குவதற்கு ஏதுவாக, 2022-2023 ஆம் ஆண்டில் எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சுழல் கவிழ்ப்பான் நிறுவும் பணி நடைபெற்று வருகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில், வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் தலா ஒரு சுழல் கவிழ்ப்பான் வீதம் மொத்தம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ளது.*

## 2.2.4. ஆய்வகக் கூடங்கள் நவீனமயமாக்கல் (Modernization of Laboratories)

*கூட்டுறவு மற்றும் பொதுத் துறையின் கீழுள்ள 15 சர்க்கரை ஆலைகளில் உள்ள ஆய்வகக் கூடங்களில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் கருவிகளை நவீன தொழில்நுட்பம் கொண்ட*

*2023 ஏப்ரல் 5*]

உபகரணங்களாகத் தரம் உயர்த்தி நிறுவிடும் பணிகள் ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம், ஆலைகளின் செயல்பாடுகள் குறித்த தரவுகளைத் துல்லியமாக பெற இயலும்.

## 2.2.5. சர்க்கரை ஆலை கழிவு மண்ணிலிருந்து ஊட்டமேற்றிய இயற்கை உர உற்பத்தி

2023-2024 வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, விவசாயிகளுக்குத் தரமான ஊட்டமேற்றிய இயற்கை உரம் கிடைக்கச் செய்யும் வகையிலும், இரசாயன உரப் பயன்பாட்டினைக் குறைத்து மண்ணின் வளத்தை அதிகரிக்கும் நோக்குடனும், சர்க்கரை ஆலைகளின் கழிவு மண்ணை மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, வருவாய் ஈட்டிடும் வகையிலும், 2023-2024 ஆம் ஆண்டில் சேலம், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் தலா ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மதிப்புக் கூட்டப்பட்ட இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் ஆண்டொன்றிற்கு சுமார் 3,000 மெட்ரிக் டன் ஊட்டமேற்றிய இயற்கை உரம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

## 2.3. சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள்

தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டுவரும் சீரிய முயற்சிகளின் காரணமாக, கடந்த ஆண்டுகளில் குறைந்து காணப்பட்ட கரும்பு அரவை அளவு, அரவைத் திறன், சர்க்கரை கட்டுமானம், சர்க்கரை உற்பத்தி, உப பொருட்களின் உற்பத்தி 2020-2021 அரவைப் பருவம் முதல் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது..

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் கடந்த 2021-2022 அரவைப் பருவத்தில் 139.16 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு, 9.10 சதவிகித சர்க்கரை கட்டுமானத்துடன் 12.67 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.


2022-2023 ஆம் அரவைப் பருவத்தில் 155 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டு, 14.41 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. 15.3.2023 வரை 84.36 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு, 9.59 சதவிகித கட்டுமானத்துடன், 8.09 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 5

## 2.3.1. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவை (Cane Crushing)

*கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கடந்த நான்கு அரவைப் பருவங்களில் கரும்பு அரவை 23.26 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 41 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.*

**படம்: 2.4 - கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு அரவை விவரம்**





**அரவைப் பருவம்**

## 2.3.2. சர்க்கரை கட்டுமானம் (Sugar Recovery)

*கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கடந்த நான்கு அரவைப் பருவங்களில் சர்க்கரைக் கட்டுமானம் 8.2 சதவிகிதத்திலிருந்து 9.3 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.*

**படம்: 2.5- கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரை கட்டுமானம் (%)**





**அரவைப் பருவம்**

*2023 ஏப்ரல் 5*]

### 2.3.3. பயன்பாட்டுத் திறன் (Capacity Utilization)

*கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கடந்த நான்கு அரவைப் பருவங்களில் பயன்பாட்டுத் திறன், 32 சதவிகிதத்திலிருந்து 56 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.*

**படம்: 2.6- கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் பயன்பாட்டுத் திறன்**




**அரவைப் பருவம்**

*2023-2024 ஆம் அரவைப் பருவத்தில் 9.60 சதவிகித சர்க்கரை கட்டுமானத்துடன், 16.32 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி இலக்குடன் 170 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.*


### 2.3.4. இணை மின் திட்டம் (Cogeneration Project)

*கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் மறு சீரமைப்புப் பணிகள் மேற்கொண்டு, ஆலைகளின் உற்பத்திச் செலவைக் குறைத்து, வருவாயை உயர்த்திடும் நோக்கில், மொத்தம் 183 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட 12 இணை மின் உற்பத்தித் திட்டப் பணிகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்மூலம் (TANGEDCO) செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு,*

*தற்போது வரை ஆறு ஆலைகளில் (செங்கல்ராயன், வேலூர், செய்யாறு, அறிஞர் அண்ணா, பெரம்பலூர் மற்றும் தருமபுரி) 93 மெகா வாட் திறன் கொண்ட இணை மின் திட்ட நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு, பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.*

*மீதமுள்ள ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 90 மெகா வாட் திறன் கொண்ட இணை மின் திட்டப் பணிகளை விரைவில் முடித்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வர தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (*TANGEDCO*)மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டப் பணிகள் வரும் 2023-2024 ஆம் நிதி ஆண்டில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பயன்பாட்டிலுள்ள ஆறு இணை மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மிகை மின்சாரம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (*TANGEDCO*) கட்டமைப்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. 2020-2021 ஆம் அரவைப் பருவத்தில் 6.32 கோடி யூனிட்டுகளும், 2021-2022 ஆம் அரவைப் பருவத்தில் 8.52 கோடி யூனிட்டுகளும், 2022-2023 ஆம் அரவைப் பருவத்தில், 24.3.2023 வரை 7.50 கோடி யூனிட்டுகளும் மின் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.*

**படம்;2.7- செயல்பாட்டிலுள்ள ஆறு இணை மின் திட்டங்கள்மூலம் மின்சார ஏற்றுமதி செய்யப்பட்ட விவரங்கள்**




**அரவைப் பருவம்**

## 2.3.5.எத்தனால் உற்பத்தி

*அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 1993-1994 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 55 கிலோ லிட்டர் (*KLPD*) உற்பத்தித் திறன் கொண்ட எரிசாராய வடிப்பாலைகள் (*Distilleries*)*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5]*

*நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வடிப்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் எரிசாராயத்தை மூலப்பொருளாகக் கொண்டு நாள் ஒன்றுக்கு 30 கிலோ லிட்டர் (KLPD) உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் நிறுவப்பட்டு, 2007 முதல் எத்தனால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.*

## 2.3.5.1. புதிய எத்தனால் ஆலை நிறுவுதல்

*சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி செலவைக் குறைத்து, ஆலைகளின் வருவாயை அதிகரித்திடவும், நிதி ஆதாரம் தன்னிறைவுப் பெறவும் கரும்புச்சாறு மற்றும் பி ஹெவி மொலாசஸ் ஆகியவற்றை மூலப் பொருளாகக் கொண்டு, நாள் ஒன்றுக்கு 60 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் எம்.ஆர்.கே. கள்ளக்குறிச்சி—1 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ரூ.170 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும் என 2021-2022 ஆம் நிதியாண்டில் அரசால் அறிவிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது.*

*கள்ளக்குறிச்சி—1 மற்றும் எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் எத்தனால் ஆலை நிறுவிட விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) புதுதில்லியில் அமைந்துள்ள தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பிடமிருந்து பெறப்பட்டு, சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக, பொது மக்கள் கருத்து கேட்கும் கூட்டம் (Public hearing) நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் அனுமதி கிடைக்கப்பெற்றபின், ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் மே 2023-க்குள் முடிக்கப்பெற்று, எத்தனால் ஆலையை நிறுவிடும் பணிகளை, 2024 ஆம் வருடம் இறுதிக்குள் முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

## 2.4. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (TASCO)

*தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், 1974 ஆம் ஆண்டில், நிறுமச் சட்டம் (1956)-ன்கீழ், ஓர் அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின்கீழ், தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையும், பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் பெரம்பலூர் சர்க்கரை ஆலையும் இயங்கி வருகின்றன.*

**அட்டவணை: 2.3.-தமிழ்நாடு சர்க்கரைக் கழக ஆலைகளின் செயல்பாடுகள்**

| வ. எண் | பொருள் | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, தஞ்சாவூர் மாவட்டம் | | பெரம்பலூர் சர்க்கரை ஆலை, பெரம்பலூர் மாவட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | 2021-2022 | 2022-2023 (24.3.2023 வரை) | 2021-2022 | 2022-2023 (24.3.2023 வரை) |
| 1 | கரும்புப் பதிவு (எக்டர்) | 2,641 | 1,693 | 4,845 | 292 |
| 2 | கரும்பு அரவை (மெ. டன்) | 2,00,751 | 2,32,858 | 3,14,011 | 2,25,611 |
| 3 | சர்க்கரைக் கட்டுமானம் (%) | 9.22 | 9.12 | 9.48 | 9.84 |
| 4 | சர்க்கரை உற்பத்தி (மெ. டன்) | 18,499 | 20,362 | 29,792 | 21,497 |
| 5 | பயன்பாட்டுத் திறன் (%) | 46.68 | 54.15 | 60.85 | 43.72 |

## 2.5 தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் (TNCSF)

தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் 11.11.1961 அன்று பதிவு செய்யப்பட்டு, 31.5.1962-ல் தொடங்கி செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனம் 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் இரண்டு பொதுத் துறை சர்க்கரை ஆலைகளை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம் இதனுடன் இணைக்கப்பெற்ற உறுப்பினர் ஆலைகளின் பணிகளை ஒருங்கிணைத்தல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், மையப்படுத்தப்பட்ட கொள்முதல், சர்க்கரை மற்றும் உபபொருட்கள் விற்பனை, தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் இணையம் மற்றும் இதர நிறுவனங்களில் உறுப்பினர் ஆலைகளின் பிரதிநிதியாகச் செயல்படுதல், ஆலைகளின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும்பொருட்டு, அவ்வப்போது பயிற்சி மற்றும் கருத்தரங்கங்களுக்கு ஏற்பாடு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## 2.5.1 உயிரியல் ஆய்வு மையம் (Main Bio-Control Research Laboratory - MBRL)

கரும்பில் இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டினைக் குறைத்து, குறைந்த சாகுபடி செலவுடன் சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்து கரும்பு விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கத்துடன், செங்கல்பட்டில் 1982 ஆம் ஆண்டு முதல் உயிரியல் ஆய்வு மையம் இயங்கி வருகிறது.

இந்த ஆய்வுக்கூடத்தில் அசிட்டோபாக்டர், பாஸ்போபாக்டீரியா, ஆர்பஸ்குலர் மைகோரைசா ஆகிய உயிர் உரங்களும், டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், மெட்டாரைசியம், பேசிலஸ் துரிஞ்ஜியன்சிஸ் போன்ற உயிரி பூச்சிக்கொல்லிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

உயிரியல் ஆய்வு மையம் 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.1.10 கோடியும் 2022-2023 ஆம் ஆண்டில் (20.3.2023 வரை) ரூ.1.29 கோடியும் நிகர வருவாய் ஈட்டியுள்ளது.

## 2.5.2. சர்க்கரை மற்றும் உபபொருட்கள் விற்பனை

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை மற்றும் இதர உப பொருட்கள் தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையத்தால் விற்பனை செய்யப்படுகின்றன.

**அட்டவணை:2.4. 2022-23 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட சர்க்கரை மற்றும் உப பொருட்கள் (15.3.2023 வரை)**

| வ. எண் | பொருட்கள் | விற்பனை செய்யப்பட்ட அளவு | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சர்க்கரை (Sugar) (இலட்சம் மெட்ரிக் டன்) | 3.86 | 1,385.62 |
| 2 | கரும்புச்சக்கை – (Bagasse) (மெட்ரிக் டன்) | 62,375 | 15.17 |

| வ. எண் | பொருட்கள் | விற்பனை செய்யப்பட்ட அளவு | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 3 | கரும்புக் கசண்டு – (Molasses) (மெட்ரிக் டன்) | 1,35,752 | 113.18 |
| 4 | எரிசாராயம்— (Alcohol) (இலட்சம் லிட்டர்) | 49.65 | 23.67 |
| 5 | உயிர் இடுபொருட்கள்— (Bio Inputs) (மெட்ரிக் டன்) | 8.64 | 2.04 |
| 6 | உயிர் இடுபொருட்கள்— (Bio Inputs) (லிட்டர்) | 94,027 | |

## 3. தோட்டக்கலை - மலைப் பயிர்கள் துறை

தமிழ்நாடு இந்தியாவில் தோட்டக்கலை சாகுபடியில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக விளங்குகின்றது. தேசிய அளவில் தோட்டக்கலை சாகுபடி உற்பத்தியில் 6.09 சதவிகிதத்தையும், பரப்பளவில் 5.47 சதவிகிதத்தையும் கொண்டுள்ளது. ஆண்டு முழுவதும் பல்வேறு வகையான தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு ஏற்ற வகையிலான வேளாண் காலநிலையையும், புவியியல் நிலையையும் கொண்ட மாநிலமாக விளங்குகின்றது.

தோட்டக்கலைப் பயிர்களை மாற்றுப் பயிராக சாகுபடி செய்வதன்மூலம் குறு, சிறு விவசாயிகளும் அதிக வருமானம் பெறுகின்றனர். தோட்டக்கலை விளைபொருட்களை வேளாண் சார்ந்ததொழில்களுக்குமூலப்பொருட்களாக பயன்படுத்துவதாலும், மதிப்புக் கூட்டுப் பொருட்களாக மாற்றுவதாலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படுவதோடு, ஏற்றுமதிக்கான வாய்ப்பும் அதிகரிக்கிறது.

எனவே, தோட்டக்கலை—மலைப் பயிர்கள் துறை, விவசாயிகளின் சீரான உயர்வுக்கு உற்பத்தியினை அதிகரிப்பதுடன், மக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், விளைபொருட்கள் குறுகிய கால சேமிப்புத் திறனைக் கொண்டுள்ளதால் அவற்றினை சேமிப்பதற்கு முறையான திட்டமிடுவதற்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச்செயல்படுத்தி வருகின்றன.

*2023 ஏப்ரல் 5*]

*2023-2024 ஆம் ஆண்டில், தொகுப்பு முறையில் பயிர் சாகுபடி, பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடியைப் பரவலாக்குதல், நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்ட, அதிவேகமாகக் குறைந்து வரும் குறு வட்டங்களில் நுண்ணீர்ப் பாசனத்தைத் தீவிரப்படுத்துதல் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.*

## 3.1: தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி, தேசிய அளவிலான பங்களிப்பு

*தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், தோட்டப் பயிர்கள், சுவைதாளிதப் பயிர்கள், மருத்துவப் பயிர்கள், நறுமணப் பயிர்கள், மலர்கள் ஆகியவை 15.88 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்படுகின்றன. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 231 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். தமிழ்நாட்டில் 2021-2022 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு 3.8 சதவிகிதமும், உற்பத்தி 11.85 சதவிகிதமும் முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிகரித்துள்ளன.*


**அட்டவணை 3.1: தோட்டக்கலைப் பயிர்கள் - சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறன்**

| வ. எண் | தோட்டக்கலைப் பயிர் வகை | 2021-2022 (இறுதி மதிப்பீடு) | | | 2022-2023 (முதல் முன் மதிப்பீடு) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ. டன்கள் / எக்டர்) | சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ. டன்கள் / எக்டர்) |
| 1 | பழங்கள் | 3.26 | 70.51 | 21.62 | 3.36 | 73.85 | 21.96 |
| 2 | காய்கறிகள் | 2.80 | 61.77 | 22.10 | 2.84 | 63.11 | 22.23 |
| 3 | தோட்டப் பயிர்கள்* | 7.99 | 87.13 | 10.90 | 8.31 | 92.18 | 11.09 |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | தோட்டக்கலைப் பயிர் வகை | 2021-2022 (இறுதி மதிப்பீடு) | | | 2022-2023 (முதல் முன் மதிப்பீடு) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ. டன்கள் / எக்டர்) | சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ. டன்கள் / எக்டர்) |
| 4 | சுவை தாளித பயிர்கள் | 1.21 | 3.82 | 3.15 | 1.22 | 3.98 | 3.27 |
| 5 | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | 0.16 | 1.72 | 10.45 | 0.18 | 1.70 | 9.71 |
| 6 | மலர்கள் | 0.46 | 5.91 | 12.95 | 0.48 | 6.16 | 12.74 |
| | மொத்தம் | 15.88 | 230.86 | 14.54 | 16.39 | 240.98 | 14.70 |
| | * மரவள்ளி உட்பட | | | | | | |

**வரைபடம் 3.1: தமிழ்நாடு-தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி பரப்பு - 2021-22**




*2023 ஏப்ரல் 5*]

**அட்டவணை 3.2: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் தேசிய அளவிலான நிலை**

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| *1. கிராம்பு*<br>*2. புளி*<br>*3.மல்லிகை (குண்டுமல்லி)* | *1. கொக்கோ*<br>*2. செவ்வந்தி*<br>*3. சம்பங்கி* | *1. வாழை*<br>*2. நெல்லி*<br>*3. தென்னை*<br>*4. மிளகு* |
| *ஆதாரம்: இறுதி மதிப்பீடு 2020-2021, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை-உழவர் நலத் துறை, புதுதில்லி* | | |

**வரைபடம் 3.2: தமிழ்நாடு-தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தி - 2021- 22**





TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**அட்டவணை3.3:தமிழ்நாடு - தோட்டக்கலை பயிர் உற்பத்தியில் தேசிய அளவிலான நிலை**

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| *1. கிராம்பு*<br>*2. புளி*<br>*3. மல்லிகை (குண்டுமல்லி)*<br>*4. சம்பங்கி* | *1. தென்னை* | *1. நெல்லி*<br>*2. தர்பூசணி*<br>*3. செவ்வந்தி*<br>*4. பாகற்காய்* |
| *ஆதாரம்: இறுதி மதிப்பீடு 2020-2021, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை — உழவர் நலத் துறை, புது தில்லி* | | |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**3.1.1: பழப் பயிர்கள்**



*2023 ஏப்ரல் 5*]


## அட்டவணை 3.4: பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)

| வ. எண் | பழங்கள் | பரப்பு (எக்டர்) | பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| *1* | மா | *1,47,983* | கிருஷ்ணகிரி *(32,450)*, தருமபுரி *(15,983)*, திண்டுக்கல் *(15,801)*, திருவள்ளூர் *(11,515)*, தேனி *(9,471)*. |
| *2* | வாழை | *1,02,188* | ஈரோடு *(17,609)*, தூத்துக்குடி *(8,366)*, கோயம்புத்தூர் *(7,731)*, தேனி *(6,403)*, திருநெல்வேலி *(5,768)*. |
| *3* | தர்பூசணி | *15,476* | செங்கல்பட்டு *(7,393)*, விழுப்புரம் *(2,303)*, திருவள்ளூர் *(1,719)*, சேலம் *(768)*, திருவண்ணாமலை *(553)*. |
| *4* | கொய்யா | *14,436* | திண்டுக்கல் *(2,201)*, மதுரை *(1,688)*, விருதுநகர் *(1,382)*, கடலூர் *(1,208)*, விழுப்புரம் *(1,100)*. |
| *5* | எலுமிச்சை | *13,770* | திண்டுக்கல் *(3,601)*, தென்காசி *(3,031)*, திருச்சிராப்பள்ளி *(1,024)*, தேனி *(801)*, விருதுநகர் *(757)*. |
| *6* | இதர பழங்கள் | *32,206* | திண்டுக்கல் *(6,233)*, தேனி *(2,678)*, தென்காசி *(2,159)*, நாமக்கல் *(1,824)*, சேலம் *(1,748)*. |
| பழப்பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = *3,26,059* எக்டர் | | | |

*2023-2024* ஆம் ஆண்டு, பண்ருட்டி பலாவிற்கு ஒருங்கிணைந்த தொகுப்பு, பகுதிக்கேற்ற புதிய இரகங்கள் அறிமுகம் ஆகிய செயல்பாடுகள் கடலூர், விழுப்புரம், திண்டுக்கல், சேலம், கன்னியாகுமரி, தேனி உள்ளிட்ட *21* மாவட்டங்களில் மேற்கொள்ள பலா இயக்கம் செயல்படுத்தப்படும். சந்தை வாய்ப்புகள் அதிகரித்து வரும் சிறப்புப் பழப் பயிர்களான டிராகன் பழம், வெண்ணெய் பழம், பேரீச்சை, மங்குஸ்தான், அத்தி, ஆலிவ் போன்ற பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

[2023 ஏப்ரல் 5

### 3.1.2: காய்கறிகள்




**அட்டவணை.3.5: காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-2022)**

| வ. எண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| *1* | சின்ன வெங்காயம் | *55,123* | பெரம்பலூர் *(8,258)*, திருச்சிராப்பள்ளி *(6,774)*, தூத்துக்குடி *(6,662)*, நாமக்கல் *(5,320)*, திண்டுக்கல் *(4,598)*. |
| *2* | தக்காளி | *41,545* | தருமபுரி *(12,137)*, கிருஷ்ணகிரி *(11,501)*, சேலம் *(4,144)*, திண்டுக்கல் *(2,290)*, திருப்பூர் *(2,174)*. |
| *3* | கத்தரி | *24,015* | தருமபுரி *(3,880)*, சேலம் *(2,933)*, திருவண்ணாமலை *(2,290)*, கிருஷ்ணகிரி *(1,935)*, ராணிப்பேட்டை *(883)*. |
| *4* | முருங்கை | *21,501* | திண்டுக்கல் *(5,623)*, கரூர் *(3,080)*, தேனி *(2,936)*, திருப்பூர் *(2,090)*, தூத்துக்குடி *(1,842)*. |


*2023 ஏப்ரல் 5*]

| வ. எண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| *5* | வெண்டை | *18,967* | தருமபுரி *(3,654)*, சேலம் *(2,851)*, திருவண்ணாமலை *(2,025)*, ராணிப்பேட்டை *(787)*, திருப்பத்தூர் *(775)*. |
| *6* | இதர காய்கறிகள் | *1,18,397* | கிருஷ்ணகிரி *(22,939)*, திண்டுக்கல் *(9,200)*, சேலம் *(8,920)*, தருமபுரி *(8,772)*, நீலகிரி *(8,202)*. |
| காய்கறிகள் மொத்த சாகுபடி பரப்பு = *2,79,548* எக்டர் | | | |

தக்காளி, வெங்காயம் ஆகியவற்றின் சந்தை வரத்தினை நிலைப்படுத்தவும், விவசாயிகள் சீரான வருவாய் பெறும் வகையிலும், இவ்விரு பயிர்களின் உற்பத்தி, சேமிப்பு, சந்தைப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளைச் சீர்செய்ய, *2023-2024* ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருப்பூர், அரியலூர், மதுரை, கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய முருங்கை தொகுப்பு இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

## 3.1.3: தோட்டப் பயிர்கள் (Plantation Crops)



[2023 ஏப்ரல் 5


**அட்டவணை 3.6: தோட்டப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)**

| வ. எண் | தோட்டப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | தோட்டப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தென்னை | 4,46,153 | கோவை (89,926), திருப்பூர் (68,277), தஞ்சாவூர் (40,977), திண்டுக்கல் (29,346), கன்னியாகுமரி (24,830). |
| 2 | முந்திரி | 86,117 | அரியலூர் (30,584), கடலூர் (29,489), புதுக்கோட்டை (5,788), விழுப்புரம் (3,260), தேனி (3,211). |
| 3 | தேயிலை | 69,588 | நீலகிரி (55,754), கோவை (11,191), தேனி (1,621), திருநெல்வேலி (804), கன்னியாகுமரி (214). |
| 4 | காப்பி | 33,108 | திண்டுக்கல் (10,960), நீலகிரி (7,357), சேலம் (7,029), தேனி (3,106), கோயம்புத்தூர் (2,248). |
| 5 | இரப்பர் | 28,433 | கன்னியாகுமரி (28,332), நீலகிரி (55), தென்காசி (42). |
| 6 | இதர தோட்டப் பயிர்கள் | 1,35,899 | நாமக்கல் (21,076), கள்ளக்குறிச்சி (16,065), சேலம் (14,325), தருமபுரி (13,996), ஈரோடு (10,146). |
| தோட்டப் பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 7,99,298 எக்டர் | | | |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5*]

### 3.1.4 : சுவை தாளித பயிர்கள்




**அட்டவணை 3.7: சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)**

| வ. எண் | சுவை தாளித பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளித & மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| *1* | மிளகாய் | *53,933* | தூத்துக்குடி *(15,039)*, இராமநாதபுரம் *(15,036)*, சிவகங்கை *(3,619)*, சேலம் *(1,923)*, திருவண்ணாமலை *(1,907)* |
| *2* | மஞ்சள் | *25,559* | தருமபுரி *(8,618)*, ஈரோடு *(4,754)*, சேலம் *(4,172)*, கள்ளக்குறிச்சி *(2,420)*, நாமக்கல் *(1,504)*. |
| *3* | புளி | *14,409* | திண்டுக்கல் *(3,208)*, தேனி *(1,557)*, தருமபுரி *(1,294)*, மதுரை *(1,112)*, கிருஷ்ணகிரி *(993)*. |
| *4* | கொத்தமல்லி | *7,523* | தூத்துக்குடி *(2,354)*, விருதுநகர் *(1,731)*, இராமநாதபுரம் *(1,711)*, கிருஷ்ணகிரி *(882)*, திருப்பூர் *(192)*. |


[2023 ஏப்ரல் 5

| வ. எண் | சுவை தாளித பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளித & மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| *5* | *மிளகு* | *6,980* | *நாமக்கல் (2,344), சேலம் (1,411), திண்டுக்கல் (1,293), நீலகிரி (986), கன்னியாகுமரி (322).* |
| *6* | *இதர சுவை தாளித பயிர்கள்* | *12,815* | *கோவை (2,345), நீலகிரி (1,952), தேனி (1,614), திண்டுக்கல் (1,395), கிருஷ்ணகிரி (936).* |
| *சுவை தாளித பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 1,21,219 எக்டர்* | | | |

*மிளகாய்க்கான சந்தை வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, மிளகாய் உற்பத்தி, மதிப்புக் கூட்டல், சேமிப்புக் கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்திட இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களை ஒருங்கிணைத்து மிளகாய் மண்டலம் இவ்வாண்டு முதல் செயல்படும்.*

*கறிவேப்பிலையின் பயன்களைக் கடல் கடந்தும் மக்கள் பெற்றுப் பயன்பெறவும், உற்பத்தி, மதிப்புக் கூட்டல், சந்தைப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்தவும், விவசாயிகள் உயர் வருவாய் பெற்றுப் பயன்பெறவும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கறிவேப்பிலை தொகுப்பு உருவாக்கப்படும்.*

## 3.1.5: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள்




*2023 ஏப்ரல் 5*]

## அட்டவணை 3.8: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)

| வ. எண் | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | கண்வலிக் கிழங்கு | 6,377 | திண்டுக்கல் (3,383), திருப்பூர் (2,269), கரூர் (618), திருச்சிராப்பள்ளி (37), நாமக்கல் (18). |
| 2 | மருந்துக் கூர்க்கன் | 3,305 | திருவண்ணாமலை (1,558), கள்ளக்குறிச்சி (766), சேலம் (483), கடலூர் (302), நாமக்கல் (90). |
| 3 | வேம்பு | 2,949 | விருதுநகர் (657), தூத்துக்குடி (364), திருநெல்வேலி (252), மதுரை (238), நாமக்கல் (176). |
| 4 | பால்மரோசா புல் | 1,652 | தருமபுரி (1,230), திருவண்ணாமலை (393), கள்ளக்குறிச்சி (21). |
| 5 | எலுமிச்சைபுல் | 826 | திருவண்ணாமலை (804), தேனி (9). |
| 6 | இதர பயிர்கள் | 1,324 | விழுப்புரம் (365), சேலம் (290), மதுரை (123), கடலூர் (121), விருதுநகர் (93). |
| மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 16,433 எக்டர் | | | |

[2023 ஏப்ரல் 5

## 3.1.6 : மலர்கள்




### அட்டவணை 3.9: மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மல்லிகை (குண்டுமல்லி) | 12,896 | மதுரை (1,614), தருமபுரி (1,415), ஈரோடு (1,138), திருவள்ளூர் (1,119), கிருஷ்ணகிரி (897). |
| 2 | சாமந்தி | 9,218 | கிருஷ்ணகிரி (3,531), தருமபுரி (2,346), சேலம் (1,622), திருவண்ணாமலை (902), கடலூர் (110). |
| 3 | சம்பங்கி | 7,102 | தருமபுரி (2,778), திருவண்ணாமலை (1,552), ஈரோடு (416), திண்டுக்கல் (300), திருவள்ளூர் (227) |

2023 ஏப்ரல் 5]

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 4 | செண்டுமல்லி | 3,534 | கிருஷ்ணகிரி (1,953), திருவண்ணாமலை (422), தருமபுரி (290), புதுக்கோட்டை (126), கடலூர் (110). |
| 5 | ரோஜா | 3,379 | கிருஷ்ணகிரி (1,748), தருமபுரி (294), திருவண்ணாமலை (276), நாமக்கல் (166), சேலம் (155). |
| 6 | இதர மல்லிகை | 4,219 | திருவண்ணாமலை (742), திண்டுக்கல் (646), தருமபுரி (481), கோவை (378), விருதுநகர் (350). |
| 7 | இதர மலர்கள் | 5,259 | திருவண்ணாமலை (1,252), சேலம் (965), தருமபுரி (912), திண்டுக்கல் (540), நாமக்கல் (532). |
| மலர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 45,607 எக்டர் | | | |

## 3.2: ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 3.2.1: நுண்ணீர்ப் பாசனத் திட்டம் (MI)

நிலையான வேளாண்மைக்கு நீர்ப் பாசனத்தை உறுதி செய்யும் நோக்கில், இருக்கும் நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்தி உற்பத்தியினை அதிகரிக்க நுண்ணீர் பாசனத் திட்டம் 2007-2008 முதல் செயல்படுத்தப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், 70,856.19 எக்டர் பரப்பில் ரூ.550.68 கோடி நிதி செலவில் 70,304 விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டு முதல் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படும் துளி நீரில் அதிகப் பயிர்

(Per Drop More Crop) என்ற உபத்திட்டத்தின் வாயிலாக நுண்ணீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 2023—24 ஆம் ஆண்டு ரூ.744.48 கோடி நிதியில், 89,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்ட, அதிவேகமாகக் குறைந்துவரும் குறு வட்டங்களில் (critical and over exploited firkas) சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து ரூ.450 கோடி நிதியில், 53,400 எக்டர் பரப்பளவில் இத்திட்டம் தீவிரப்படுத்தப்படும்.

**3.2.2: தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)**

இத்திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் துணை திட்டமாக 2014-2015 ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற ஒன்றிய, மாநில அரசு நிதி பங்களிப்புடன் 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், 114.00 கோடி ரூபாய் நிதியில் 1,10,802 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் ரூ.49.99 கோடி நிதியில், தோட்டக்கலைப் பயிர்களில் 25,680 எக்டரில் பரப்பு விரிவாக்கமும், 2,600 எக்டரில் இயற்கை முறையில் பயிர் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்று காளான் உற்பத்திக்கூடங்கள் ரூ.0.24 கோடி நிதியில் அமைக்கப்பட்டுள்ளன. 350 தனி நபருக்கான நீர் சேமிப்பு அமைப்பு ரூ.2.63 கோடி நிதியில் உருவாக்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட சூழல் பயிர் சாகுபடி ரூ.17.96 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ரூ.3.63 கோடி நிதியில் தோட்டக்கலை இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அறுவடைக்குப் பிந்தைய இழப்பினைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த அறுவடை பின் செய் மேலாண்மை சார்ந்த உட்கட்டமைப்புகள் ரூ.47.40 கோடி நிதியில் உருவாக்கப்பட்டுள்ளன. ரூ.16 கோடி நிதியில் நெல்லி, மா, மிதவெப்ப மண்டல தோட்டக்கலைப் பயிர்கள், மலர்களுக்கான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்தினை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான மகத்துவ மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

2023-2024 ஆம் ஆண்டில், தொகுப்பு முறையில் மல்லிகை, பலா, மிளகாய், கறிவேப்பிலை ஆகிய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மேம்படுத்தப்படும். தக்காளி, வெங்காயம் சீராக

*2023 ஏப்ரல் 5]*

*கிடைக்கும் வகையில் உற்பத்தியினை உறுதி செய்திட மானியம் வழங்கப்படும். சௌ சௌ, பட்டாணி, பீன்ஸ் போன்ற குளிர்கால கொடிவகை மலைக் காய்கறிகள் அதிக அளவில் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு மானிய உதவி அளிக்கப்படும். பாதுகாக்கப்பட்ட சூழல் பயிர் சாகுபடி முறை அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக்கப்படும். இத்திட்டத்தினை ரூபாய் 164 கோடி நிதியில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.*

### 3.2.3: தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (NADP)

*தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டமானது, வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில்களின் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ.68.29 கோடி நிதியில் 6,544 எக்டரில் நெற்ப் பயிருக்கு மாற்றாக தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிடவும், 1,000 எக்டரில் பாரம்பரிய காய்கறிகளை மீட்டெடுக்கவும், 760 எக்டரில் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி மையம், பெங்களூரு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வீரிய இரகங்களை ஊக்குவிக்கவும், தோட்டக்கலைப் பயிர்களுக்குப் பந்தல் போன்ற சிறப்பு கட்டமைப்பு அமைக்கவும், 1,500 எக்டரில் முந்திரி பரப்பு விரிவாக்கம் செய்வதற்கும், 41,000 எக்டரில் அங்ககப் பண்ணையம், 4,666 எக்டரில் துல்லிய பண்ணையத்திற்கும் மானியம் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.*

*2023-2024 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக பழவகை செடிகள், காய்கறிகள், ஆண்டு முருங்கை, பல்லாண்டு முருங்கை, வெங்காயம், மிதவெப்ப மண்டல பயிர்களான வெண்ணெய்ப்பழம், டிராகன் பழம் ஆகியவற்றை 3,110 எக்டர் பரப்பில் பயிரிடவும், 200 எக்டர் பரப்பில் நிரந்தரப்பந்தல் அமைத்து கொடிவகை காய்கறி சாகுபடி மேற்கொள்ளவும், வாழை, தக்காளி, பீன்ஸ் போன்ற பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 2,000 எக்டரில் தற்காலிக பந்தல் அமைக்கவும், 2,000 எக்டர் பரப்பில் நிலப்போர்வையிடுதலுக்கும் ரூ.25 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.*

### 3.2.4: மானாவாரி பகுதி மேம்பாடு (RAD)

*மானாவாரி பகுதி மேம்பாடுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளை ஊக்குவிப்பதற்காக, பருவநிலை*

மாற்றத்தால் பயிர் இழப்புகள் ஏற்படாமல் பாதுகாத்து, உற்பத்தியினை உறுதி செய்து, நிலையான வருவாய் ஈட்ட தோட்டக்கலைப் பயிர் சாகுபடி, கால்நடை, மீன் வளர்ப்பு, வேளாண் காடுகள் போன்றவற்றுடன் ஒருங்கிணைத்து, விளை பொருட்களை மதிப்புக் கூட்டி, வருமானத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2022-2023 ஆம் ஆண்டில், மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், ஒருங்கிணைந்த பண்ணையம் புதுக்கோட்டை, சிவகங்கை, ஈரோடு, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர், விழுப்புரம், அரியலூர், கோயம்புத்தூர், கரூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், திருப்பத்தூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, தென்காசி, திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், விருதுநகர் ஆகிய 21 மாவட்டங்களில் ரூ.14.50 கோடி நிதியில், தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், கறவை மாடு மற்றும் ஆடு வளர்ப்பு மண்புழு உரப்படுக்கைகள், தீவனப்புல் மற்றும் தேனீ பெட்டி, தேனீ குடும்பம், பயிற்சிகள், செயல்விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளுடன் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 1,850 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

2023-2024 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை ரூ.31.12 கோடி நிதியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.5.: தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய் பனை (NMEO-OP)

தமிழகத்தில், சமையல் எண்ணெய் பயிர்களின் பரப்பு, உற்பத்தியினை அதிகரித்திட, 2022-2023 ஆம் ஆண்டு முதல் தேசிய சமையல் எண்ணெய் இயக்கம்—எண்ணெய் பனைத் திட்டம் தோட்டக்கலை—மலைப் பயிர்கள் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டு, இத்திட்டம் ரூ.2.82 கோடி நிதியில், புதிதாக 382 எக்டர் பரப்பளவில் எண்ணெய்பனை சாகுபடி பரப்பு விரிவாக்கம், முதல் நான்கு வருடங்கள் வரை எண்ணெய் பனையினை பராமரித்தல், எண்ணெய்பனையில் ஊடுபயிர், ஆழ்துளைக் கிணறு அமைத்தல், டீசல் மற்றும் மின்சாரப் பம்புசெட்டுகள் அமைத்தல், எண்ணெய்பனை பழக்குலைகளை அறுவடை செய்ய கருவிகள், உபகரணங்கள் ஆகியவற்றிற்கு மானியம் ஐந்து வருடத்திலிருந்து

*2023 ஏப்ரல் 5*]

*எக்டருக்கு எட்டு மெட்ரிக் டன்னிற்கு மேல் உற்பத்தி செய்யும் எண்ணெய்பனை விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத்தொகை போன்ற திட்டக்கூறுகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் 469 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.*

*மேலும், தனியார் நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்படும் எண்ணெய்பனை பழக்குலைகளுக்கான விலையினை அரசு நிர்ணயித்த விலையில் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைத்திடவும் அரசு வழிவகை செய்துள்ளது.*

*2023-2024 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.5.16 கோடி நிதியில் செயல்படுத்தப்படவுள்ளது.*

**3.3. மாநிலத் திட்டங்கள்**

**3.3.1: மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS)**

*தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், விளைச்சலைப் பெருக்கவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் 100 சதவிகித மாநில அரசின் பங்களிப்பில் 2022-2023 ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் ரூ.28.48 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 53,847 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.*

*இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், குறைவான இட வசதியினை உடைய நகர்ப்புறங்களில் காய்கறித் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் செங்குத்து தோட்டம் அமைத்தல், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்ப்பு போன்ற உயர் தொழில்நுட்ப முறைகளில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவித்தல், உயர் விளைச்சலைப் பெறுவதற்கு துல்லிய பண்ணையத் திட்டம், அரசு மாணவியர் விடுதிகளில் தோட்டம் அமைத்தல், குறைந்த செலவிலான வெங்காய சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல், காளான் வளர்ப்புக் கூடம் அமைத்தல், மாடித்தோட்டத் தளைகள் வழங்குதல், ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல், தோட்டக்கலை சார்ந்த கருவிகள், உபகரணங்கள் வழங்குதல், வெற்றிலைப் பயிருக்கு ஒருங்கிணைந்த உர, பூச்சி மேலாண்மை, வீடுகளில் மூலிகைத் தோட்டம் அமைத்தல் போன்ற திட்டக்கூறுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*2023-2024 ஆம் ஆண்டில், ரூ.29.62 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.*

**3.3.2: கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் (KAVIADP)**

*தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டங்களை ஒருங்கிணைத்து, தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டு வந்து, ஒட்டுமொத்த வளர்ச்சி, தன்னிறைவுப் பெற்ற கிராமங்களாக அவற்றை மாற்றும் பொருட்டு கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*இத்திட்டத்தில் 2021-2022 ஆம் ஆண்டில், 1,997 கிராம பஞ்சாயத்துகளில் தோட்டக்கலை சார்ந்த செயல்பாடுகள் ரூபாய் 25.88 கோடி நிதியிலும், 2022-2023 ஆம் ஆண்டில், 3,204 கிராம பஞ்சாயத்துகளில் ரூபாய் 28.81 கோடி நிதியிலும் செயல்படுத்தப்படுகின்றன. 10,36,631 பயனாளிகள் இதுவரை பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு, மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களுடன் ஒருங்கிணைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*இத்திட்டத்தின்கீழ் பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, புதிய தோப்புகள் உருவாக்கப்படுகின்றன.*

*2023-2024 ஆம் ஆண்டில், ரூ.16.87 கோடி நிதியில் 2,504 கிராம பஞ்சாயத்துகளில் இத்திட்டத்தில் தோட்டக்கலை சார்ந்த இனங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.*

**3.3.3: பனை மேம்பாட்டு இயக்கம் (PDM)**

*தமிழ்நாட்டின் மாநில மரமான பனைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், 2022-2023 ஆம் ஆண்டில் பனை மேம்பாட்டு இயக்கம் ரூ.1.57 கோடி நிதியில், 10 இலட்சம் பனை விதைகள்*

*2023 ஏப்ரல் 5*]

வழங்குதல், 124 பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல், பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க 510 பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல், பனை ஏறுவதற்கும், அறுவடை செய்வதற்கும் 1,000 பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல் போன்ற திட்டக் கூறுகளுடன் செயல்படுத்தப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டில், இத்திட்டம் இரண்டு கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 3.4: உலக வங்கித் திட்டம்

### 3.4.1: தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் 70:30 பங்களிப்பில், உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் ஒரு பல்நோக்குத் திட்டமாகும். தேர்வு செய்யப்பட்ட உபவடிநீர்ப் பகுதிகளில் அதிக நீர் தேவைப்படும் பயிர்களிலிருந்து குறைந்த நீர் தேவைப்படும் அதிக வருவாய் தரக்கூடிய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை உயர் தொழில்நுட்பங்கள், நீர் மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தீவிரப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.47.17 கோடி நிதியில் 47 உபவடிநீர்ப் பகுதிகளில் 34 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இவற்றில் 8,353 எக்டர் பரப்பில் ரூ.17.12 கோடி நிதியில் பயிர் செயல்விளக்கங்களும், 2,969 எக்டர் பரப்பில் ரூ.28.06 கோடி நிதியில் நுண்ணீர்ப் பாசனத் திட்டமும், மாதிரி கிராமங்கள் ரூ.0.62 கோடி நிதியிலும் செயல்படுத்தப்பட்டன.

2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.19.72 கோடி நிதியில் 38 உபவடிநீர்ப் பகுதிகளில் 34 மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.5: தோட்டக்கலைத் துறையின் கட்டமைப்பு வசதிகள்

### 3.5.1: அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

தமிழ்நாட்டில், தோட்டக்கலை – மலைப் பயிர்கள் துறையின்கீழ் 37 மாவட்டங்களில், 79 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

செயல்பட்டு வருகின்றன. (இணைப்பு—1) தோட்டக்கலைப் பயிர்களின் இனத்தூய்மையான, தரமான நடவுச் செடிகளை உரிய நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்வதே அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் முக்கிய நோக்கமாகும். இப்பண்ணைகள் விவசாயிகளுக்குப் புதிய தொழில்நுட்பங்களை விளக்கும் "மாதிரி செயல்விளக்க மற்றும் பயிற்சி பண்ணை"களாகவும் திகழ்வதுடன், நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்தும் வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில், 250 மெ.டன் தக்காளி, கத்தரி, வெண்டை, வெங்காயம், கீரை வகைகள், பூசணி, புடல், பாகல், பீர்க்கன், சுரை, சாம்பல் பூசணி, முருங்கை, கொத்தவரை, அவரை, பட்டாணி, பீன்ஸ், காராமணி, உருளைக்கிழங்கு போன்ற பல்வேறு வகையான உண்மை நிலை (Truthfully labelled) காய்கறி விதைகளை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, இதுவரை 207 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் 31.74 கோடி நடவுச் செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, இதுவரை 31.72 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

2023-2024 ஆம் ஆண்டு பல்லாண்டு பயிர் நடவுச் செடிகள் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், 20 கோடி எண்கள் நடவுச் செடிகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.5.1.1 : மண்புழு உர உற்பத்தி

மண்புழு உரமானது, மண்ணில் நுண்ணுயிர் செயல்பாடு மற்றும் அங்ககத் தன்மையை அதிகரித்து காற்றோட்டம், நீர்த்தேக்க சக்தி ஆகியவற்றைக் கூட்டுவதன்மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தி மகசூலை அதிகரிக்கச் செய்கிறது. மண்புழு உர உற்பத்தி முறைகள் மற்றும் தரம் குறித்த நடைமுறைகள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. 2022—23 ஆம் ஆண்டில் 1000 மெ.டன் மண்புழு உரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை 830 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டில் 1000 மெ.டன் மண்புழு உரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

*2023 ஏப்ரல் 5*]

### 3.5.2: பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்

தோட்டக்கலை—மலைப்பயிர்கள் துறை, எட்டு மாவட்டங்களில் 24 பூங்காக்களைப் பராமரித்து வருகின்றன. இவை பொதுமக்களுக்குப் பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்வதுடன், தோட்டக்கலை, தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களங்களாகவும் விளங்குகின்றன (இணைப்பு—2).

மேலும், நில எழிலூட்டல் பிரிவின்மூலம், 2022—23 ஆம் ஆண்டில், தஞ்சாவூர் விமான படைத்தளத்தில் நில எழிலூட்டல் பணிகள் ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.5.3: மகத்துவ மையங்கள்

உயர் தொழில்நுட்பங்களுடன்கூடிய செயல் விளக்கத்திடல்கள் அமைக்கவும், விவசாயிகளுக்குப் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் அளிக்கவும், ஐந்து இடங்களில் பயிர்களுக்கு ஏற்ப மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.8: மகத்துவ மையங்கள் விவரம்**

| வ. எண் | மகத்துவ மையம் | இடம் |
|---|---|---|
| செயல்பாட்டில் உள்ள மகத்துவ மையங்கள் | | |
| 1. | கொய் மலர்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 2. | காய்கறிகள் | ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம். |
| 3. | மலை காய்கறிகள் பயிர்கள் | நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம். |
| 4. | வெப்ப மண்டல பழப்பயிர்கள் | கஞ்சநாயக்கன்பட்டி, திருச்சி |
| 5 | பாரம்பரிய மலர்கள் | திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம். |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

| வ. எண் | மகத்துவ மையம் | இடம் |
|---|---|---|
| பணிகள் நடைபெற்று வரும் மகத்துவ மையங்கள் | | |
| 6. | தேனீ வளர்ப்பு | பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம். |
| 7. | மா | வெதரம்பட்டி, தருமபுரி மாவட்டம். |
| 8. | நெல்லி | களக்காடு, திருநெல்வேலி மாவட்டம். |
| 9. | மித வெப்பமண்டல தோட்டக்கலைப் பயிர்கள் | கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் |
| 10. | மலர்களுக்கான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |

**3.6.1: தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள்**

சென்னை மாவட்டம், மாதவரத்தில் தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் தோட்டக்கலைப் பயிற்சி நிலையம், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உழவர் பயிற்சி நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் தோட்டக்கலை ஆராய்ச்சி பயிற்சி மையம், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் பாரம்பரிய மலர் பயிர்களுக்கான மகத்துவ மையம், திருச்சி மாவட்டம், கஞ்சநாயக்கன்பட்டியில், வெப்ப மண்டல பழப் பயிர்களுக்கான மகத்துவ மையம் ஆகிய ஏழு பயிற்சி மையங்கள் தோட்டக்கலை—மலைப் பயிர்கள் துறையின்கீழ் இயங்கி வருகின்றன.

விவசாயிகளுக்குத் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிப்பதே இம்மையங்களின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் மேற்குறிப்பிட்ட பயிற்சி நிலையங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

*2023 ஏப்ரல் 5*]

### 3.6.2: தோட்டக்கலைப் பட்டயப் படிப்பு

தோட்டக்கலைத் துறையின்கீழ் செயல்படும் சென்னை மாவட்டம், மாதவரம் தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தோட்டக்கலை ஆராய்ச்சி—பயிற்சி மையம், திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் காய்கறி மகத்துவமையம் ஆகிய நிலையங்களின்மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைப்புடன், ஆண்டு தோறும் 150 மாணவர்களுக்கு ஈராண்டு தோட்டக்கலைப் பட்டயப்படிப்பு வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.7: பணியாளர்கள் விவரம்

தோட்டக்கலை—மலைப் பயிர்கள் துறையின்கீழ் வட்டார, மாவட்ட, மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்:

**அட்டவணை 3.9 : மொத்த பணியிடங்கள் விவரம்**

| வ. எண் | பணியிட விவரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| 1. | தொழில்நுட்ப அலுவலர்கள் | 2,606 |
| 2. | அமைச்சுப் பணியாளர்கள் | 1,222 |
| | மொத்தம் | 3,828 |

**அட்டவணை 3.10 : அலுவலர்கள் விவரம்**

| வ.எண் | பணியிட விவரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| அ. | தொழில்நுட்ப அலுவலர்கள் | |
| 1. | தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் | 2 |
| 2. | தோட்டக்கலை இணை இயக்குநர் | 6 |
| 3. | தோட்டக்கலை துணை இயக்குநர் | 43 |
| 4. | தோட்டக்கலை உதவி இயக்குநர் | 398 |

[2023 ஏப்ரல் 5

| வ.எண் | பணியிட விவரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| 5. | தோட்டக்கலை அலுவலர் | 404 |
| 6. | தோட்டக்கலை துணை அலுவலர் | 123 |
| 7. | உதவி தோட்டக்கலை அலுவலர் | 1,625 |
| 8. | உதவி விதை அலுவலர் | 5 |
| | மொத்தம் | 2,606 |
| **ஆ.** | **அமைச்சுப் பணியாளர்கள்** | |
| 9. | இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள்) | 1,222 |
| | **மொத்தம்** | **3,828** |

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 5]

# இணைப்பு 1

## மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

| வ. எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்—பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | கீழப்பழுவூர் | 2018 | 7.58 |
| 2 | சென்னை | மாதவரம் | 1980 | 4.38 |
| 3 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 1986 | 12.00 |
| 4 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 2001 | 11.20 |
| 5 | கடலூர் | நெய்வேலி | 1985 | 39.53 |
| 6 | கடலூர் | விருத்தாசலம் | 1975 | 10.43 |
| 7 | தருமபுரி | போளயம்பள்ளி | 2013 | 2.73 |
| 8 | தருமபுரி | வட்டார நாற்றங்கால் மையம், | 2020 | 0.40 |
| 9 | திண்டுக்கல் | சந்தையூர் | 2018 | 15.20 |
| 10 | திண்டுக்கல் | நீலமலைக்கோட்டை | 2020 | 0.40 |
| 11 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 1961 | 1.73 |
| 12 | திண்டுக்கல் | தாண்டிக்குடி | 1985 | 5.45 |
| 13 | திண்டுக்கல் | சிறுமலை | 1980 | 200.04 |
| 14 | திண்டுக்கல் | காய்கறி மகத்துவ மையம், ரெட்டியார் சத்திரம் | 2012 | 5.33 |
| 15 | திண்டுக்கல் | கொத்தபுள்ளி | 2021 | 5.87 |
| 16 | ஈரோடு | பகுத்தம்பாளையம் | 2018 | 10.00 |
| 17 | செங்கல்பட்டு | ஆத்தூர் | 1961 | 12.24 |
| 18 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 1982 | 23.25 |
| 19 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 1982 | 42.63 |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்—பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 20 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 1982 | 20.60 |
| 21 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 1982 | 34.00 |
| 22 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 1922 | 12.64 |
| 23 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 1967 | 6.00 |
| 24 | கரூர் | முதலைப்பட்டி | 1978 | 23.96 |
| 25 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 1952 | 9.62 |
| 26 | கிருஷ்ணகிரி | ஜீனூர் | 1980 | 123.45 |
| 27 | கிருஷ்ணகிரி | கொய்மலர்கள் மகத்துவ மையம், தளி | 2012 | 22.00 |
| 28 | மதுரை | பூஞ்சுத்தி | 2012 | 5.76 |
| 29 | மதுரை | பாரம்பரிய மலர்களுக்கான மகத்துவ மையம், திருப்பரங்குன்றம் | 2019 | 2.65 |
| 30 | நாகப்பட்டினம் | வண்டுவாஞ்சேரி | 2018 | 6.54 |
| 31 | நாகப்பட்டினம் | புஷ்பவனம் | 2021 | 10.25 |
| 32 | நாமக்கல் | செம்மேடு | 1974 | 11.60 |
| 33 | நாமக்கல் | படசோலை | 1989 | 22.67 |
| 34 | பெரம்பலூர் | கிழக்கு வெங்கலம் | 2018 | 4.72 |
| 35 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 1974 | 118.68 |
| 36 | புதுக்கோட்டை | வல்லத்திராக்கோட்டை | 1977 | 521.20 |
| 37 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 1985 | 53.02 |
| 38 | இராமநாதபுரம் | ஒரியூர் | 2013 | 14.77 |

2023 ஏப்ரல் 5]

| வ. எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்—பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 39 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை, கருமந்துறை | 1981 | 419.77 |
| 40 | சேலம் | மணியார்குன்றம் | 1982 | 101.21 |
| 41 | சேலம் | கருமந்துறை | 1981 | 39.35 |
| 42 | சேலம் | முள்ளுவாடி | 1985 | 48.40 |
| 43 | சேலம் | சிறுமலை | 1987 | 8.00 |
| 44 | சேலம் | ஏற்காடு | 1975 | 10.13 |
| 45 | சிவகங்கை | தேவக்கோட்டை | 1985 | 81.19 |
| 46 | சிவகங்கை | நேமம் | 1979 | 38.77 |
| 47 | சிவகங்கை | கிளாதரி | 2019 | 12.81 |
| 48 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 1988 | 8.90 |
| 49 | தஞ்சாவூர் | மருங்குளம் | 1966 | 10.77 |
| 50 | நீலகிரி | பர்லியார் | 1871 | 6.25 |
| 51 | நீலகிரி | கல்லார் | 1900 | 6.77 |
| 52 | நீலகிரி | பழம் பதனிடும் நிலையம், குன்னூர் | 1965 | 4.05 |
| 53 | நீலகிரி | பழவியல் நிலையம், குன்னூர் | 1948 | 10.46 |
| 54 | நீலகிரி | காட்டேரி | 1974 | 16.96 |
| 55 | நீலகிரி | தொட்டபெட்டா | 1969 | 2.52 |
| 56 | நீலகிரி | தும்மனட்டி | 1956 | 9.80 |
| 57 | நீலகிரி | நஞ்சநாடு | 1917 | 64.00 |
| 58 | நீலகிரி | தேவாலா | 1978 | 80.00 |

| வ. எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்—பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 59 | நீலகிரி | கோல்கிரைன் | 1989 | 20.40 |
| 60 | தேனி | பெரியகுளம் | 1950 | 9.32 |
| 61 | தூத்துக்குடி | கீழவல்லநாடு | 2019 | 3.82 |
| 62 | திருவாரூர் | மூவாநல்லூர் | 2018 | 5.82 |
| 63 | திருப்பூர் | சங்கராமநல்லூர் | 2018 | 10.12 |
| 64 | திருநெல்வேலி | வன்னிக் கோனேந்தல் | 2018 | 10.86 |
| 65 | திருவண்ணாமலை | புதூர் செக்கடி | 2018 | 12.76 |
| 66 | திருவண்ணாமலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, ஜமுனாமரத்தூர் | 2019 | 0.68 |
| 67 | திருவண்ணாமலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, போளூர் | 2020 | 1.52 |
| 68 | திருச்சி | தொரக்குடி | 2013 | 4.05 |
| 69 | திருச்சி | வெப்ப மண்டல பழப்பயிர்கள் மகத்துவ மையம், கஞ்சநாயக்கன்பட்டி | 2019 | 8.67 |
| 70 | திருப்பத்தூர் | தகரக்குப்பம் | 1985 | 34.40 |
| 71 | திருப்பத்தூர் | கூடப்பட்டு | 1961 | 10.08 |
| 72 | திருவள்ளூர் | ஈக்காடு கண்டிகை | 2020 | 3.62 |
| 73 | ராணிப்பேட்டை | நவ்லாக் | 1981 | 84.42 |
| 74 | கள்ளக்குறிச்சி | ஏ.சாத்தனூர் | 2018 | 10.00 |
| 75 | வேலூர் | அகரம்சேரி | 2020 | 34.76 |
| 76 | விருதுநகர் | பூவாணி | 1967 | 9.46 |
| 77 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர் | 1982 | 46.27 |
| 78 | விருதுநகர் | ஆதித்தநேந்தல் | 2020 | 0.81 |
| 79 | விழுப்புரம் | எலவளப்பாக்கம் | 2022 | 7.20 |
| | | மொத்தம் | | 2743.67 |

*2023 ஏப்ரல் 5*]

# இணைப்பு 2

## மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பூங்காக்கள்

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| *1* | சென்னை | செம்மொழிப் பூங்கா, சென்னை | *2010* | *3.21* |
| *2* | சென்னை | தோட்டக்கலைப் பூங்கா, மாதவரம் | *2018* | *8.90* |
| *3* | சென்னை | செங்காந்தள் பூங்கா | *2021* | *2.76* |
| *4* | சென்னை | பாரம்பரியப் பூங்கா, வண்ணாரப் பேட்டை | *2021* | *1.56* |
| *5* | கன்னியாகுமரி | சுற்றுச்சூழல் பூங்கா, கன்னியாகுமரி | *2018* | *6.07* |
| *6* | இராமநாதபுரம் | பாலை மரபணுப் பூங்கா, அச்சடிபிரம்பு | *2015* | *4.04* |
| *7* | சேலம் | ரோஜா தோட்டம், ஏற்காடு | *2005* | *2.02* |
| *8* | சேலம் | ஏரி பூங்கா, ஏற்காடு | *2018* | *1.32* |
| *9* | சேலம் | அண்ணா பூங்கா, ஏற்காடு | *1999* | *1.74* |
| *10* | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா–1. ஏற்காடு | *2012* | *8.50* |
| *11* | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா–2, ஏற்காடு | *2012* | *7.69* |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 12 | சேலம் | ஐந்திணை குறிஞ்சி மரபணுப் பூங்கா, ஏற்காடு | 2012 | 7.28 |
| 13 | தென்காசி | சுற்றுச்சூழல் பூங்கா, குற்றாலம் | 1986 | 15.07 |
| 14 | திருவண்ணா—மலை | திருவண்ணா—மலை பூங்கா | 2021 | 3.64 |
| 15 | திண்டுக்கல் | ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம், கொடைக்கானல் | 2012 | 4.05 |
| 16 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா மற்றும் அண்ணா பூங்கா, கொடைக்கானல் | 1900 | 8.29 |
| 17 | திண்டுக்கல் | செட்டியார் பூங்கா, கொடைக்கானல் | 1980 | 2.02 |
| 18 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி | 1848 | 21.60 |
| 19 | நீலகிரி | அரசு ரோஜா பூங்கா, ஊட்டி | 1995 | 7.29 |
| 20 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா, குன்னூர் | 1874 | 11.34 |
| 21 | நீலகிரி | காட்டேரி பூங்கா | 2012 | 2.00 |
| 22 | நீலகிரி | தேயிலை பூங்கா, தொட்டபெட்டா | 2015 | 1.60 |

*2023 ஏப்ரல் 5]*

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 23 | நீலகிரி | மரவியல் பூங்கா, உதகை | 2008 | 1.58 |
| 24 | நீலகிரி | சுற்றுச்சூழல் பூங்கா, கல்லார் | 2021 | 2.15 |
| | | மொத்தம் | | 134.12 |

## 4. வேளாண்மைப் பொறியியல்

மண் மற்றும் நீர் போன்ற இயற்கை வளங்களைப் பாதுகாத்து, இன்றைய சூழலில் வேளாண்மைக்குச் சவாலாக விளங்கும் நீர்ப் பற்றாக்குறை, மண் வளம் குன்றுதல், வேளாண் பணியாட்கள் பற்றாக்குறை, அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைப் புதிய வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களின் உதவியுடன் வெற்றிகரமாக விவசாயிகள் எதிர்கொள்ள வேளாண்மைப் பொறியியல் துறை துணை புரிகிறது.

வேளாண் தொழிலை மேம்படுத்திடவும், விவசாயிகளின் நலனைக் காக்கவும் பல்வேறு திட்டங்களை வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தி வருகின்றன.

### 4.1. வேளாண் இயந்திரமயமாக்குதலும், விளை பொருட்களை மதிப்புக் கூட்டுதலும்

வேளாண்மையில் நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகளைப் பிரபலப்படுத்துவதன்மூலம், கூடுதலாக இயந்திர சக்தியை வழங்கிடவும், வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்திடவும், வேளாண் பணிகளைக் குறுகிய காலத்தில் முடித்திடவும், வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகள் அதிக வருமானம் ஈட்டிடவும், வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத்தில், தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்குதல், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் உள்ளடக்கிய வட்டார, கிராம அளவிலான, கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள்

மானியத்தில் அமைத்தல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில், ஒன்றிய அரசின் பங்களிப்பு 60 சதவிகிதமும் மாநில அரசின் பங்களிப்பு 40 சதவிகிதமும் ஆகும்.

**4.1.1. வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்குதல்**

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத்தில், டிராக்டர், பவர்டில்லர், சுழல்கலப்பை, கொத்துக் கலப்பை, நெல் நாற்று நடவு இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற இயந்திரங்களும், குறு, சிறு விவசாயிகள் எளிதாக வாங்கி பயன்பெறும் வகையில், நேரடி நெல் விதைக்கும் கருவி, தெளிப்பான்கள், நவீன வேளாண் இயந்திரங்களில் முக்கியப் பங்கு வகிக்கும் ட்ரோன் (Drone) போன்ற சிறு வேளாண் கருவிகள், உபகரணங்களும் வெங்காயத் தாளினை நீக்கும் இயந்திரம், தேங்காய் மட்டை உரிக்கும் இயந்திரம், எண்ணெய் செக்கு, தானியம் அரைக்கும் இயந்திரம் போன்ற வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்களும் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

மேலும், இத்திட்டத்தில், குறு, சிறு ஆதி திராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்குக் கூடுதலாக 20 சதவிகித மானியம் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில், தனிப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண் இயந்திரங்கள், 2,198 விவசாயிகளுக்கு ரூ.36.21 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2023-2024 ஆம் ஆண்டில் வேளாண் இயந்திரங்கள், 8,623 விவசாயிகளுக்கு ரூ.105.01 கோடி மானியத்தில் வழங்கப்படவுள்ளன.

தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் குறைந்து வரும் விவசாயிகளின் நில உடைமையினைக் கருத்தில் கொண்டு, சிறிய வகை வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் அவசியம் கருதி, தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமான "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டக்" கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு இரண்டு பவர்டில்லர் இயந்திரங்கள் என்ற அடிப்படையில் 2023-2024 ஆம் ஆண்டில் 2,504 கிராமங்களுக்கு வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்க நிதியிலிருந்து, 5000 பவர்டில்லர் இயந்திரங்களை விவசாயிகள் வாங்கி பயன்பெற ஏதுவாக ரூ.43 கோடி மானியமாக வழங்கப்படவுள்ளது.

*2023 ஏப்ரல் 5]*

**4.1.2. வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல்**

*அதிக விலையுள்ள உயர் தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்களை வாங்கி பராமரிக்க இயலாத குறு, சிறு விவசாயிகள் வாடகைக்கு பெற்று பயன்பெறும் வகையில், கிராமப்புறத் தொழில் முனைவோர்கள், பதிவு செய்யப்பட்ட விவசாயச் சங்கங்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்மூலம் வட்டார, கிராம அளவிலும் கரும்பு சாகுபடிக்கேற்றதுமான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைப்பதற்குக் கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் 65 வட்டார, கிராம, கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூ.7.3 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டன. மேலும், 2023-2024 ஆம் ஆண்டில் 150 வட்டார, கிராம அளவிலான கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூ.18.74 கோடி மானியத்தில் அமைக்கப்படவுள்ளன.*

**4.1.3. வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் பழுது நீக்கி பராமரிக்கும் மையம்**

*வேளாண் இயந்திரங்கள், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளில் பழுதுநீக்கி பராமரிக்கும் மையங்கள், ஒன்றிய அரசின் 60 சதவிகித பங்களிப்புடனும், மாநில அரசின் 40 சதவிகித பங்களிப்புடனும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் பொறியியலில் பட்டயம் அல்லது பட்டம் பயின்று வேலையில்லா இளைஞர்கள், கிராமப்புற இளைஞர்கள், தொழில் முனைவோர்கள், விவசாயக் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு 50 சதவிகித மானியம், அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் மானியத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 18 மையங்கள், ரூ.71 இலட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.*

**4.1.4. ஊரக இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சி**

*இளைஞர்களைத் தொழில் முனைவோராக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும், வேளாண்மைப் பொறியியல் துறையும் இணைந்து, 'வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்கம், பராமரிப்புச் சேவை வழங்குநர்' பயிற்சி கடந்த இரண்டு ஆண்டுகளில் கோயம்புத்தூர், திருவாரூர், திருச்சி, வேலூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள வேளாண் இயந்திரப் பணிமனைகளில் 351 இளைஞர்களுக்கு ரூ.13.13 இலட்சம் செலவில்*

வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2023-2024 ஆம் ஆண்டில் அறுவடை இயந்திரம், டிராக்டர் போன்றவற்றினை இயக்கிட 500 கிராமப்புற இளைஞர்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் வேளாண் இயந்திரப் பணிமனைகள்மூலம் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இது தவிர, 200 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் பழுது நீக்கம், பராமரிப்பு தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

## 4.2. இ-வாடகை கைபேசிச் செயலி

வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான இயந்திரங்கள், கருவிகளை விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நேரத்தில் முன்பதிவு செய்யவும், வாடகைத் தொகையைச் செலுத்தவும் இ—வாடகை கைபேசிச் செயலி வேளாண்மைப் பொறியியல் துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அலுவலகங்களுக்குச் செல்லாமல், தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்களை முன்பதிவு செய்ய முடிவதால் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

இச்செயலியின்மூலம் 2023-2024 ஆம் ஆண்டில் சுமார் 25,000 விவசாயிகள் பயன் பெறுவார்கள் எனவும், இதன்மூலம் அரசிற்கு வருவாயாக ரூ.60 கோடி ஈட்டப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.2.1. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்

வேளாண்மைப் பொறியியல் துறையில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற வேளாண் இயந்திரங்களின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை4.1.வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களின் விவரம்**

| வரிசை எண் | இயந்திரத்தின் விவரம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புல்டோசர் (Bull Dozer) | 85 |
| 2 | டிராக்டர் (Tractor) | 449 |
| 3 | டிராக்டர்களுக்கான இணைப்பு கருவிகள் (Tractor with suitable implements) | 1,752 |

2023 ஏப்ரல் 5]

| வரிசை எண் | இயந்திரத்தின் விவரம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4 | சக்கர வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester - Wheel Type) | 32 |
| 5 | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester - Track Type) | 18 |
| 6 | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (Backhoe with Front end loader) | 60 |
| 7 | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் (Crawler Excavator) | 10 |
| 8 | சிறு டிராக்டர் (Mini Tractor) | 6 |
| 9 | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் (Sugarcane Harvester with infielders) | 1 |
| 10 | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் (Truck Operated Coconut Hoist) | 20 |
| 11 | கனரக மரம் அறுக்கும் கருவிகள் (Heavy Duty Chain Saws) | 805 |
| 12 | டிராக்டரால் இயங்கக்கூடிய நீர் இறைக்கும் பம்புகள் (Tractor Operated Pumpsets) | 21 |
| 13 | சுழல் விசைத்துளைக் கருவிகள் (Rotary Drills) | 24 |
| 14 | பெர்குஷன் துளைக் கருவிகள் (Percussion Drills) | 3 |
| 15 | சிறு விசைத்துளைக் கருவிகள் (Mini Drills) | 20 |

| வரிசை எண் | இயந்திரத்தின் விவரம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 16 | கைத்துளைக் கருவிகள் (Hand Boring Sets) | 17 |
| 17 | பாறை வெடிக் கருவிகள் (Rock Blasting Units) | 5 |
| 18 | நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் (Resistivity Meters) | 21 |
| 19 | மின்னியல் ஆய்வுக் கருவிகள் (Electrical Loggers) | 2 |

### 4.2.2. இ-வாடகை செயலியில் தனியார் இயந்திரங்கள், பழுது நீக்குபவர்கள் விவரங்கள் இடம் பெறுதல்

அறுவடைக் காலங்களில், நெல் அறுவடை இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும்போது விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைத்திட, நெல், மக்காச் சோளம், பயறு, தானிய வகைகள் அறுவடை செய்யும் வகையில் தனியாருக்குச் சொந்தமான, 4,456 இயந்திரங்களின் உரிமையாளர் பெயர், விலாசம், கைபேசி எண் போன்ற விவரங்கள், வட்டாரம், மாவட்ட வாரியாக, இ—வாடகை செயலியில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, விவசாயிகள் உழவுப் பணிகளைத் தங்குதடையின்றி மேற்கொள்ள உதவிடும் பொருட்டும், வேளாண் இயந்திரங்கள், கருவிகள், பம்பு செட்டுகளில் ஏற்படும் பழுதுகளைச் சரிசெய்யவும், தனியாருக்குச் சொந்தமான டிராக்டர்களின் உரிமையாளர்கள், பழுது நீக்குபவர்களின் பெயர், விலாசம், கைபேசி எண் போன்ற விவரங்கள் வட்டாரம், மாவட்ட வாரியாக, இ—வாடகை செயலியில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் தொடர்ந்து பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 4.2.3. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகைத் திட்டத்தினை வலுப்படுத்துதல்

கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.22.59 கோடி மதிப்பீட்டில் டிராக்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய ரோட்டவேட்டர்கள்,

*2023 ஏப்ரல் 5]*

*கொத்துக் கலப்பைகள் ஒவ்வொன்றிலும் 185 எண்கள், 120 கேஜ்வீல்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் கொள்முதல் செய்யப்பட்டு, முதற்கட்டமாக டெல்டா மாவட்டங்களில் வட்டார அளவில் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.*

*தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் வேளாண் பணிகளைத் தங்கு தடையின்றி மேற்கொள்ள உதவிடும் பொருட்டு, 2023-2024 ஆம் ஆண்டில் டிராக்டர்கள், ரோட்டவேட்டர்கள், கொத்துக் கலப்பைகள், இன்பீல்டர்கள், நெல் அறுவடை இயந்திரங்களை, வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வட்டார அளவில் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது.*

*வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான 32 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள், நெல் அறுவடைக் காலம் அல்லாத பிற காலங்களில் சிறு தானியங்கள், பயறு வகைப் பயிர்களை அறுவடை செய்யும் வண்ணம், மாற்றி வடிவமைக்கப்பட்டு, தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன.*

### 4.2.4. அரசு இயந்திர கலப்பைப் பணிமனைகளில் நவீன வேளாண் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல்

*புதிய, நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்களைக் கோயம்புத்தூர், வேலூர், திருச்சி, திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய அரசு இயந்திர கலப்பைப் பணிமனைகளில் 2023-2024 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்ய ரூ.30 இலட்சமும், உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய ரூ.80 இலட்சமும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், இவ்வியந்திரங்களை விவசாயிகளுக்குச் செயல்விளக்கம் செய்து காண்பிப்பதோடு, அரசால் நிர்ணயிக்கப்படும் குறைந்த வாடகையில் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இத்தகைய உபகரணங்களை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறைமூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

## 4.3. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்

*மின் இணைப்பு இல்லாத விவசாயிகளின் கிணற்றுப் பாசனத்திற்கான மின்சார தேவையினைப் பூர்த்தி செய்து வேளாண்மையில் நிலையான உற்பத்தியைப் பெறுவதற்கு, முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தில், மின் கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் 10 குதிரைத் திறன் வரையிலான 2,000 பம்பு செட்டுகள் 2021—22 ஆம் ஆண்டில் 70 சதவிகித மானியத்தில் (ஒன்றிய அரசு 30 சதவிகிதம், மாநில அரசு 40 சதவிகிதம்) ரூ.43.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் விவசாயிகளின் வயல்களில் நிறுவ ஒப்புதல் வழங்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில், 2,000 பயனாளிகளுக்குப் பணியாணை வழங்கப்பட்டு, 1,740 விவசாயிகளின் வயல்களில் சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டக் கிராமங்களில், தரிசு நிலத் தொகுப்புகளில் ஏற்படுத்தப்படும் கிணறுகளில் சாத்தியமுள்ள இடங்களுக்கு முன்னுரிமை அளித்து, சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் நிறுவப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தில், ஆதி திராவிட, பழங்குடியின வகுப்பைச் சார்ந்த குறு, சிறு விவசாயிகளுக்குக் கூடுதலாக 20 சதவிகித மானியம் வழங்கப்பட்டு வருகிறது.*

*ஒன்றிய அரசிடமிருந்து 2022-2023 ஆம் ஆண்டிற்கான விலை நிர்ணயம், நிறுவன அங்கீகாரம், 30 சதவிகித நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன், அதற்கிணையான 40 சதவிகித மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டுடன் 1,000 சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்கும் திட்டம் 2023-2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.*

## 4.4. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

*வேளாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கும் மண் வளத்தினைக் காத்திடவும், மழைநீரைச் சேமித்திடவும் கீழ்க்கண்ட திட்டங்கள் வாயிலாக மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:*

*2023 ஏப்ரல் 5*]

## 4.4.1. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

*இத்திட்டத்தில், 2021-2022 ஆம் ஆண்டில், தெரிவு செய்யப்பட்ட 1,997 கிராமங்களிலும், 2022-2023 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 3,204 கிராமங்களிலும் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:*

*பாசனப் பரப்பு இல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகளில் நீர் ஆதாரத்தை உருவாக்கிட கிணறுகள் அமைக்கும் பணிகள் இதுவரை, 534 எண்கள் முடிவடைந்துள்ளன. தனிப்பட்ட ஆதி திராவிடர், பழங்குடியின பிரிவைச் சார்ந்த குறு, சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், 100 சதவிகித மானியத்தில் மின் மோட்டார் அல்லது சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளுடன் 318 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தில், விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் 100 சதவிகித மானியத்தில் இதுவரை 730 எண்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

*ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 1,147 சிறு பாசனக் குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்துக் கால்வாய்கள் தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.*

*இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1,245 விவசாயிகளுக்குப் பவர் டில்லர்கள் வாங்கியதற்கான மானியம் விடுவிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2023-2024 ஆம் ஆண்டில் 2,504 கிராமங்களில் மேற்கண்ட பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

## 4.4.2. நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைப் பராமரித்தல்

*நீர் ஆதாரத்தை அதிகரித்து மழைநீரைச் சேமிக்கவும், நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளின் வரத்துக் கால்வாய்களில் தூர்வாரி அதன் நீரோட்டத்தைப் பெருக்கும் நோக்கத்திலும், நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின்மூலம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (DPAP), ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IWDP), ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத்*

திட்டம் (IWMP) ஆகிய திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட 1,700 நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளில் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதியைக் கொண்டு ஐந்து கோடி ரூபாய் செலவில் 2021—2022 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை இயந்திரங்களைக் கொண்டு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, இதுவரை 866 பணிகள் முடிக்கப்பட்டு தொடர்ந்து பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதனைத் தொடர்ந்து, 1,500 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் ஐந்து கோடி ரூபாய் செலவில் 2022—23 ஆம் ஆண்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள, வேளாண்மை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களைக் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டு, 857 கட்டமைப்புகள் தேர்வு செய்யப்பட்டு, 463 கட்டமைப்புகளுக்கு மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறப்பட்டு, தொடர்ந்து பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.4.3. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இயற்கை வளங்களைப் பாதுகாக்க மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள், நில மேம்பாட்டுப் பணிகள், விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில், மேற்குத் தொடர்ச்சி மலையின் அருகாமையிலுள்ள வனப் பகுதி கிராமங்களில், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தில் 2022-2023 ஆம் ஆண்டில் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் 219 மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், 14,544 மீட்டர் நீளத்திற்கு ஓடை பராமரிப்புப் பணிகள், நிலச்சரிவு தடுப்புப் பணிகள் ரூ.18.28 கோடி மதிப்பில் மாநில அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் 2023—24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.4.4. மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள்

உலக வங்கி நிதியுதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தில், பல்நோக்கு நீர்த்தேக்கங்களில் வண்டல் மண்படிவதைத் தடுத்திட, ஓடை பராமரிப்புப் பணிகள், வண்டல் மண் சேகரிப்புக் கட்டமைப்புகள், வண்டல் படிவு கண்காணிப்பு நிலையங்கள் ஆகிய பணிகள் 2023-2024 ஆம் ஆண்டு முதல் நான்கு

2023 ஏப்ரல் 5]

ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளன. தேனி மாவட்டத்தில் வைகை அணை, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணை ஆகிய அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் 2023—24 ஆம் ஆண்டில் ஆறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 102 எண்கள் மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர்பிடிப்புப் பகுதி மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 4.4.5. நீர்வள நவீனமயமாக்குதல்—பண்ணைக் குட்டைகள் அமைத்தல்

உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டத்தில், பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி செயல்படுத்தப்படுகிறது. முதல் மூன்று கட்டங்களில், 1,024 பண்ணைக் குட்டைகள் ரூ.678.76 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நான்காம் கட்டத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, இராமநாதபுரம், சிவகங்கை, திருச்சி, மதுரை, கடலூர், விழுப்புரம், அரியலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், கரூர் ஆகிய 14 மாவட்டங்களில் உள்ள 11 உபவடிநிலப் பகுதிகளில் 873 பண்ணைக் குட்டைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, முதலாம் ஆண்டான 2022-2023 இல் 373 பண்ணைக் குட்டைகள் ரூ.373 இலட்சம் செலவில் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 109 பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம், 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.5. நீர் மேலாண்மை

மேற்பரப்பு நீரும், நிலத்தடி நீரும் குறைந்து கொண்டே செல்வதால், கிடைக்கக்கூடிய நீரை முறையாகவும், திறம்படவும் மேலாண்மை செய்வது அவசியமாகும். நிலத்தடி நீர் சேமிக்கும் திறனை அதிகரிக்கவும், மேற்பரப்பு நீரின் பயன்பாட்டினைத் திறம்பட நிர்வாகம் செய்யும் பொருட்டும், நீர் மேலாண்மை உத்திகள் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் பின்பற்றப்படுகின்றன.

### 4.5.1. கடைமடைக்கும் பாசன நீர்

கடைமடைக்கும் பாசன நீர் செல்லும் வகையில், கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் காவிரி, வெண்ணாறு வடிநிலப் பகுதியிலுள்ள தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம்,

மயிலாடுதுறை, கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் முதல் கட்டமாக 1587.87 கிலோமீட்டர் நீளத்திற்கு 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள், 1,43,654 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில், ரூ.4.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 2023-2024 ஆம் ஆண்டில், மேற்குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களில் 1,146 கிலோமீட்டர் நீளத்திற்கு 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள் 1,32,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.5.2. மானியத்தில் மின் மோட்டார் பம்புசெட்டுகள்

குறு, சிறு விவசாயிகளுக்கு உதவும் வகையில், புதிய திறன்மிகு மின் மோட்டார் பம்பு செட்டுகள் வாங்கவும், திறன் குறைந்த பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றி புதிய மின் மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தவும், ஒரு மின் மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.10,000 அல்லது மொத்தத் தொகையில் 50 சதவிகிதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை விவசாயிகளுக்குப் பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் ஆண்டுத் திட்டத்தில் இதுவரை, 968 விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்கல் ஆணை பிறப்பிக்கப்பட்டு 937 விவசாயிகளின் கிணறுகளில் பம்புசெட்டுகள் பொருத்தப்பட்டு பயனடைந்துள்ளனர். பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.6. புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துதல்

நவீன வேளாண் இயந்திரங்கள், வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி, விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், 2022-2023 ஆம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, 50 செயல் விளக்கங்கள் பல்வேறு மாவட்டங்களிலும், மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையத்திலும், 2,253 விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறையின்

*2023 ஏப்ரல் 5*]

*மூலம் நடத்தப்பட்டன. நவீன வேளாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தொடர்ந்து புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.*

*விவசாயிகளிடையே அனைத்து வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தனித்துவம் வாய்ந்த "மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையம்" வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் செயல்படுகின்றது. இம்மையத்தை இதுவரை 5,469 விவசாயிகள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், படித்த இளைஞர்கள், கல்வியாளர்கள், அலுவலர்கள் பொதுமக்கள் என பலதரப்பட்ட மக்கள் கட்டணமின்றி பார்வையிட்டு வேளாண் பொறியியல் தொழில்—நுட்பங்களுக்கான தகவல்கள், அரசின் மானிய திட்ட விவரங்களைப் பெற்று பயன்பெற்றுள்ளனர்.*

*மேலும், இம்மையத்தில் வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல் பயிலும் கல்லூரி மாணவ, மாணவிகளின் திறனை மேம்படுத்தும் விதமாக, வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் குறித்து ஐந்து நாட்கள் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன.*

## 4.7. கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

*வேளாண்மைப் பொறியியல் துறையின் கட்டமைப்புப் பணிகள் மட்டுமல்லாது, சகோதரத் துறைகளான வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை—வேளாண் வணிகத் துறையின் கட்டமைப்புப் பணிகளுக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி, பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

### 4.7.1. வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள்

*வேளாண்மைத் துறைக்காக 14 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், 225 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், இரண்டு உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகக்*

கட்டடங்கள் கட்டும் பணிகள் நபார்டு நிதி, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் ரூ.122.12 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 4.7.2. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர கலப்பைப் பணிமனைகளின் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள், கருவிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நீக்கவும், தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் அரசு வேளாண் இயந்திர கலப்பைப் பணிமனைகளின் கட்டமைப்புகளை வலுப்படுத்தி விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சிகள் அளிக்கும் வகையில், பயிற்சி அறையுடன் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள், பராமரிப்புப் பணிகள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.12.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### 4.8. நிர்வாக அமைப்பு

**அட்டவணை 4.2. வேளாண்மைப் பொறியியல் துறை பணியாளர்களின் விவரம்**

| வரிசை எண் | பதவியின் பெயர் | எண்கள் |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் (வே.பொ) | 1 |
| 2 | தலைமைப் பொறியாளர் (வே.பொ), நபதி | 1 |
| 3 | கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) | 14 |
| 4 | செயற் பொறியாளர் (வே.பொ) | 38 |
| 5 | உதவி செயற் பொறியாளர் (வே.பொ) | 125 |
| 6 | உதவிப் பொறியாளர் (வே.பொ) / இளநிலைப் பொறியாளர்(வே.பொ) | 850 |
| 7 | அமைச்சுப் பணியாளர்கள் | 1,120 |
| 8 | களப் பணியாளர்கள் | 1,866 |
| | மொத்தம் | 4,015 |

*2023 ஏப்ரல் 5*]

## 5. வேளாண்மை விற்பனை-வேளாண் வணிகத் துறை

*"இருங்கழி யிழிதரும் ஆர்கலிவங்கம்*
*தேறுநீர்ப் பரப்பின் யாறு சீத்துய்த்துத்*
*துறைதொறும் பிணிக்கு நல்லூர்*
*உறைவின் யாணர் நாடுகிழ வோனே"*

— *புறநானூறு*

*கோவூர்கிழாரின் புறநானூற்றுப் பாடலில் "ஆற்றுநீர் கடலில் கலக்கும் துறைகளைச் செம்மை செய்து உருவாக்கப்பட்டிருக்கும் கடற்கரை நகர்தோறும் கடலில் செல்லும் பெருங்கப்பல்கள்மூலம் சென்று வணிகம் செய்யும் நல்ல ஊர்களையும் வணிகத்தையும் உடையவன் இவன். அதன்மூலம் வருவாயை ஈட்டும் நாடு இவனுடையது" என ஒரு நாட்டின் மன்னனுடைய பெருமையை அவன் செய்யும் வணிகத்தின் வாயிலாகப் பெருமைப்படுத்தியுள்ளார். இத்தகுத் தொன்மையும், பெருமையும் வாய்ந்த வணிகத்தை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மை விற்பனை—வேளாண் வணிகத் துறை செயல்பட்டு வருகின்றது.*

*வேளாண்மை விற்பனையானது, உற்பத்தியாளர்களையும், நுகர்வோர்களையும் பல்வேறு செயல்பாடுகளின்மூலம் இணைப்பதனால் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, மதிப்புக் கூட்டல், தொழில் முனைவோருக்கான திறன், வணிக மேம்பாட்டில் விவசாயிகள் குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது போன்றவை வேளாண் வணிகத்தின் நடவடிக்கைகள் ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு வேளாண் விற்பனை—வேளாண் வணிகத் துறையால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

### 5.1. வேளாண் விற்பனை

#### 5.1.1. விற்பனைக் குழுக்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

*அறிவிக்கை இடப்பட்ட பகுதிகளில் அறிவிக்கை இடப்பட்ட வேளாண் விளைபொருட்களின் பரிவர்த்தனையை முறைப்படுத்த விற்பனைக் குழுக்களும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 27 விற்பனைக் குழுக்களின்கீழ் 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தமிழ்நாடு*

[2023 ஏப்ரல் 5

வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987 மற்றும் அதன் விதிகள் 1991-ன்படி ஏற்படுத்தப்பட்டு, வேளாண் விளைபொருள் விற்பனை முறைப்படுத்தப்படுகிறது.

இதன் வாயிலாக விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இடைத்தரகர்கள் குறுக்கீடு இன்றி மறைமுக ஏலமுறையில் பங்கு கொண்டு நல்ல விலை பெற்றுப் பயனடைகின்றனர்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, திருவாரூர் மாவட்டத்தில் 50 உலர்களங்கள், நான்கு நெல் உலர்த்திகள், 11 சேமிப்புக் கிடங்குகள் ரூ.30.50 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் புதிய, கூடுதல் கட்டமைப்புகள், சேமிப்புக் கிடங்குகளை மறுகட்டமைப்பு செய்தல், புதுப்பித்தல் போன்ற பணிகளை ரூ.161.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் (இணைப்பு –I)**

2022-2023 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத சாதனையாக 29.26 இலட்சம் மெ.டன், வேளாண் விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு ரூ.142.44 கோடி வரவினமாக வரப்பெற்றுள்ளது. பொருளீட்டுக் கடன் வசதி அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ரூபாய் மூன்று இலட்சம் வரை ஐந்து சதவிகித வட்டியில் வழங்கப்பட்டு, 2022-2023 ஆம் ஆண்டில் 1,302 விவசாயிகள் ரூ.30.1 கோடி பெற்றுள்ளனர்.

விவசாயிகளுக்கு உடனடியாக பணப் பட்டுவாடா செய்ய ஏதுவாக வர்த்தகர்களுக்கு அதிகபட்சமாக ரூபாய் இரண்டு இலட்சம் வரை பொருளீட்டுக் கடன் ஒன்பது சதவிகித வட்டியில் வழங்கப்படுகிறது. பொருளீட்டுக் கடனாக 2022-2023 ஆம் ஆண்டில் 254 வர்த்தகர்கள் ரூ.4.58 கோடி பெற்றுள்ளனர்.

**5.1.1.1.மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது (e-negotiable warehouse receipt)**

தமிழ்நாட்டில் முதன் முறையாக மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது முறை செயல்படுத்த ஏதுவாக 150 சேமிப்புக்

*2023 ஏப்ரல் 5]*

*கிடங்குகள் வலுப்படுத்தப்பட்டு, கிடங்கு மேம்பாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் (WRDA) அங்கீகாரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 107 கிடங்குகளுக்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இவ்வசதியைப் பயன்படுத்தி இதுவரை 6,593 மெ.டன் அளவிலான விளைபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு, ரூ.12.13 கோடி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் வாயிலாகக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு தேசிய அளவில் முதன்மை மாநிலமாக உள்ளது.*

### 5.1.2 மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM)

*தமிழ்நாட்டில் அக்டோபர், 2017 முதல் இரண்டு கட்டங்களாக 127 சந்தைகள் மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டு, பரிவர்த்தனைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 30 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் மின்னணு வர்த்தகம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*மின்னணு தேசிய வேளாண் சந்தைகளில், 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.1,113 கோடி மதிப்பிலான 26.57 இலட்சம் எண்கள் தேங்காய்களும், 4.54 இலட்சம் மெ.டன் இதர விளைபொருட்களும் வர்த்தகம் செய்யப்பட்டு, 3.23 இலட்சம் விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வழியாக ரூ.999.07 கோடி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய அளவில் மின்னணு பணப் பரிவர்த்தனையில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கின்றது.*

*மாநிலத்தில் உள்ள அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் வர்த்தகம் செய்ய வர்த்தகர்களுக்கு இதுவரை 5,517 ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் (Unified Single Licence) வழங்கப்பட்டுள்ளது.*


*சந்தைகளுக்கு இடையில் ரூ.247.02 கோடி மதிப்புடைய 92,170 மெ.டன் வேளாண் விளைபொருட்கள் 1,080 வர்த்தகர்கள்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன.*

*2022-2023 ஆம் ஆண்டில், மாநிலங்களுக்கு இடையில் மின்னணு தேசிய வேளாண் சந்தைகளிலிருந்து புதுச்சேரி யூனியன் பிரதேசம், உத்திரப்பிரதேச மாநிலம் ஆகியவற்றுடன்*

[2023 ஏப்ரல் 5

*ரூ.199.66 இலட்சம் மதிப்புடைய 279.94 மெ.டன் பருத்தி, உளுந்து, துவரை, மக்காச்சோளம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது.*

**2017 ஆம் ஆண்டு முதல் ஆண்டு வாரியான இ-நாம் (e-NAM) வர்த்தகம்**




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

### 5.1.2.1. பண்ணை அளவிலான வர்த்தகம் (Farm Gate Trade in e-NAM):

*விவசாயிகளின் போக்குவரத்து செலவினைக் குறைத்து அவர்கள் பயன்பெறும் வகையில் 2022-2023 ஆம் ஆண்டில் மின்னணு தேசிய வேளாண் சந்தையில் பண்ணை அளவிலான வர்த்தகம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.6.46 கோடி மதிப்புடைய 5.37 இலட்சம் எண்கள் தேங்காய் மற்றும் 2,425 மெ.டன் இதர வேளாண் விளைபொருட்கள் நேரடியாக விவசாயிகளின் விளைநிலங்களிலிருந்து இ—நாம் (e—NAM) வலைதளத்தின் வாயிலாக வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 5]

## 5.2. வேளாண் வணிகம்

### 5.2.1. உழவர் சந்தை

விவசாயிகளும், நுகர்வோர்களும் பயன்பெறும் விதமாக உழவர் சந்தை திட்டம் 1999 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் முற்போக்குச் சிந்தனையுடன் தொடங்கப்பட்டு, தற்போது 183 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சராசரியாக ரூ.6.70 கோடி மதிப்புள்ள 2,000 மெ.டன் காய்கனிகள், 8,000 விவசாயிகளால் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான நுகர்வோர்களுக்குத் தினந்தோறும் விற்பனை செய்யப்படுகிறது. "உழவன் செயலியில்" (Uzhavan App) உழவர் சந்தைகளின் தினசரி விலை விவரங்கள் தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**உழவர் சந்தைகளில் நாள் ஒன்றின் சராசரி வரத்து**




கடந்த 2021—2022 ஆம் ஆண்டு, 50 உழவர் சந்தைகள் ரூ.12.50 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 10 புதிய உழவர் சந்தைகள் ரூ.4.53 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் நான்கு புதிய உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2023 ஏப்ரல் 5

அன்றாட காய்கனி விலை நிலவரங்களை அறிந்துகொள்ள ஏதுவாக, 50 உழவர் சந்தைகளில் ரூ.1.15 கோடி செலவில் மின்னணு விலைப்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் சந்தைகளில் உருவாகும் கழிவுகளை உரமாக்கிடும்பொருட்டு 25 உழவர் சந்தைகளில் ரூ.2.75 கோடி செலவில் உரமாக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு, இதுவரை 5.10 மெ.டன் மட்கு உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் 50 உழவர் சந்தைகளை ரூ.15 கோடி செலவில் புதுப்பிக்கும் பணிகளும், 10 புதிய உழவர் சந்தைகளை ரூ.7.50 கோடி செலவில் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஐம்பது உழவர் சந்தைகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.3.50 கோடி மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையினருக்கும் கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 25 உழவர் சந்தைகள் ரூ.8.75 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படவுள்ளன. 50 உழவர் சந்தைகளுக்கு ரூ.25 இலட்சம் செலவில் உணவு பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின் சான்று பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், 25 உழவர் சந்தைகளில் தொன்மைசார் உணவகங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்படவுள்ளன.

### 5.2.1.1. இல்லம் தேடி பண்ணை காய்கறிகள்

விவசாயிகள், நுகர்வோர்கள் மற்றும் படித்த இளைஞர்கள் பயனடையும் வகையில் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய ஐந்து மாநகராட்சிப் பகுதிகளில் 30 நடமாடும் காய்கனி அங்காடிகளுக்கு வாகனம் ஒன்றிற்கு மானியமாக ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்படுகிறது. இதுவரை, 20 வாகனங்களுக்கு ரூ.40 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.2. வேளாண் விளைபொருட்களுக்கான மதிப்பு கூட்டும் மையங்களை உருவாக்குதல்

கடலூர் மாவட்டம் தொழுதூரில் மக்காச்சோளம் மதிப்புக்கூட்டும் மையம் ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு

*2023 ஏப்ரல் 5]*

*உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் இம்மையத்தின்மூலம் 1,394 மெ.டன் தீவனம் தயாரிக்கப்பட்டு, ரூ.2.93 கோடி மதிப்பிலான வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*மேலும், சிறுதானியங்கள், மிளகு பதப்படுத்தும் மையம், காபி கொட்டை உடைத்து தரம் பிரிக்கும் இயந்திரம் மற்றும் மிளகு தரம் பிரித்து பொடி செய்யும் இயந்திரம் கொண்ட வணிக மையம், தென்னைக்கான மதிப்புக்கூட்டும் மையம் போன்ற வேளாண் வணிக வசதிகள் ரூ.9.20 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.*

**5.2.3. குளிர்பதனக் கிடங்கு வசதிகள்**

*பழங்களும் காய்கறிகளும் அழுகுவதால் ஏற்படும் இழப்பினைத் தடுக்க தமிழ்நாட்டில் 17,467 மெ.டன் கொள்ளளவுக் கொண்ட 187 குளிர்பதன கிடங்குகளை 2022-2023 ஆம் ஆண்டில் 5,623 விவசாயிகளும், 28 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும், 110 வர்த்தகர்களும் பயன்படுத்தி உள்ளனர்.*

*மேலும், ரூ.110 கோடி மதிப்பீட்டில் 22,900 மெ.டன் கொள்ளளவுக் கொண்ட பெரிய அளவிலான ஒன்பது குளிர்பதனக் கிடங்குகளும், ஐந்து மெ.டன் கொள்ளளவுக் கொண்ட சூரிய சக்தியால் இயங்கக்கூடிய 80 குளிர்பதனக் கிடங்குகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.*

*2023-2024 ஆம் ஆண்டில் 31,000 மெ.டன் கொள்ளளவிலான 25 குளிர்பதனக் கிடங்குகளுக்கு கிடங்கு மேம்பாடு – ஒழுங்குமுறை ஆணையத்தின் (WDRA) அங்கீகாரம் பெற்று மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது பெற திட்டமிடப்பட்டுள்ளது.*

**5.2.4 கரும்பு விவசாயிகள் உயர்தர வெல்லம் தயாரிக்க நிதி ஆதரவு**

*கரும்பு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, திருப்பூர், கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் கரும்பிலிருந்து உயர்தர வெல்லம் தயாரிக்கும் மையங்கள் ரூபாய் ஒரு கோடி மானியத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 20 பயனாளிகளுக்கு ரூ.35 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.*

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

## 5.2.5 விநியோகத் தொடர் மேலாண்மை

இத்திட்டத்தின்கீழ் காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற அழுகும் பொருட்களின் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்க, முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் ரூ.482.36 கோடி மதிப்பீட்டில் 64 முதன்மைப் பதப்படுத்தும் மையங்கள், சிப்பம் கட்டும் அறை, குளிர்பதனக் கிடங்கு, சேமிப்புக் கிடங்கு ஆகிய கட்டமைப்புகளுடன் சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், முதன்மைப் பதப்படுத்தும் இயந்திரங்கள் போன்ற வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. (இணைப்பு—III)

இம்முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்மூலம் 1,15,250 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் கையாளப்பட்டுள்ளன. சராசரியாக நாளொன்றுக்கு 110 முதல் 200 மெ.டன் அளவுள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் கையாளப்படுகின்றன. இதுவரை 1,54,786 விவசாயிகள் முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்மூலம் பயனடைந்துள்ளனர்.

இரண்டாம் கட்டமாக சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம் (செங்கல்பட்டு உட்பட), திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கரூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் 20 முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. (இணைப்பு—IV)

இதற்கான கட்டுமானப் பணிகள் முடிவடைந்து முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரும் பொருட்டு சந்தை ஒருங்கிணைப்புப் பங்குதாரர்களைத் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 5.2.6. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

வேளாண்மை விற்பனை — வேளாண் வணிகத் துறையின்கீழ் 381 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு, தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் ஆகிய திட்டங்களின்கீழ் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 5]

## 5.2.6.1 தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு (TNSFAC)

தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின்மூலம் 318 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூ.78.91 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

### அ. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கான மாநில அரசுத் திட்டம்

| வ. எண் | இனங்கள் | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) | விடுவிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | இடைநிலை மூலதன உதவி | 25.00 | 24.28 | 286 |
| 2. | சலுகையுடன் கூடிய சுழல் நிதி | 41.67 | 14.23 | 111 |
| 3. | கடன் உத்தரவாதம் | 12.50 | 5.41 | 36 |
| | **மொத்தம்** | **79.17** | **43.92** | **433** |

### ஆ. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான இதர ஆதரவுகள்

i. 30 முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் 28 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

ii. ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் (Unified Single Licence) 211 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

iii. eNAM வலைதளத்தில் 23 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் 1,089 மெ.டன் விளைபொருட்களை ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் வர்த்தகம் மேற்கொண்டுள்ளன.

iv. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களிடமிருந்து 23.83 மெ.டன் சிறுதானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டு சென்னை, கோயம்புத்தூரில் உள்ள கூட்டுறவு அங்காடிகளிலும், நியாய விலைக் கடைகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

v. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்கள், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக மாநகராட்சிப் பகுதிகளில் 50 சிறப்பு அங்காடிகளை அமைக்க ரூபாய் ஐந்து கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

vi. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் பட்டறிவுப் பயணம் 310 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு (53 அணிகளுக்கு) ரூபாய் இரண்டு கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலமாக 2021-2022 முதல் மூன்று ஆண்டுகள் நடத்திட திட்டமிடப்பட்டு, இதுவரை 25 அணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

vii. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக நிபுணர்களைக் கொண்ட "உழவர் உற்பத்தியாளர் நிறுவன மேலாண்மை மையம்" வேளாண்மை விற்பனை — வேளாண் வணிக இயக்குநரகத்தில் செயல்பட்டு வருகின்றது.

viii. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வசதிக்காக மாவட்ட அளவிலான பட்டயக் கணக்காளர்கள், நிறுவன செயலாளர்கள் உரிய கட்டணத்தில் சேவைகளை வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ix. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உற்பத்தி செய்த பொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்த ஏதுவாக ரூ.15 இலட்சம் செலவில் நவீன சிப்பம் கட்டுதல் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

2023 ஏப்ரல் 5]

x. இத்துறை பற்றிய விவரங்களைக் கேட்டறிய கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1800 425 1907 (அலுவலக நேரத்தில்) மற்றும் புலனம் (WhatsApp) எண்.7200818155 ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 5.2.6.2.தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

இத்திட்டம், 2017-2018 முதல் 66 உபவடி பகுதிகளில் ரூ.125 கோடி மதிப்பீட்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான நிதி ஆதரவு அளிக்கும் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒவ்வோர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், தொடக்க மானியமாக ரூ.10 இலட்சமும், உற்பத்தி முதலீட்டு மானியமாக ரூ.20 இலட்சமும், திறம்பட செயல்படும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக விரிவாக்க மானியமாக ரூ.30 இலட்சமும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் இதுவரை தொடக்க மானியமாக 19 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.95 இலட்சமும், உற்பத்தி முதலீட்டு மானியமாக 13 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.2.60 கோடியும் மற்றும் 19 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக விரிவாக்க மானியமாக ரூ.5.70 கோடியும் ஆக மொத்தம் ரூ.9.25 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

| **உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வாரியான வணிகப் பரிவர்த்தனை** | | |
|---|---|---|
| **வணிகப் பரிவர்த்தனை (ரூ. இலட்சத்தில்)** | **உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் எண்ணிக்கை** | |
| | **2021-2022** | **2022-2023** |
| >100 | 14 | 25 |
| 50—100 | 37 | 71 |
| 25—50 | 55 | 84 |
| 10 to 25 | 91 | 123 |
| <10 | 184 | 78 |

## 5.2.7. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

*இத்திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 50 உலர்களங்கள், ரூ.5.25 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2022—23 ஆம் ஆண்டில் 135 உலர்களங்கள் ரூ.14.17 கோடி மதிப்பீட்டில் கிராம அளவில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், நடப்பாண்டில் 250 உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் ரூ.85 கோடி செலவில் ஏற்படுத்தப்படவுள்ளன.*

## 5.2.8. உணவு பதப்படுத்துதல்

### 5.2.8.1. சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையங்கள் அமைத்தல்

*ஐக்கிய நாடுகள் சபை, 2023 ஆம் ஆண்டினை “சர்வதேச சிறுதானிய ஆண்டாக” அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, நடப்பாண்டில் சிறுதானியங்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்து விவசாயிகளுக்குக் கூடுதல் இலாபம் கிடைத்திடும் வகையில், சிறுதானிய பதப்படுத்தும் மையங்கள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.*

## 5.2.9. வேளாண் கட்டமைப்பு நிதியின்கீழ் (AIF) கடன் வசதி பெறும் திட்டம்

*அறுவடைக்குப் பின் மேலாண்மை செயல்பாடுகள், விளைபொருட்கள் வீணாவதைத் தடுக்க தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான கடன் உதவிகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. விவசாயிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில் முனைவோர் ஆகியோர் பயன்பெறுவர்.*

*திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை 2,837 கடன் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ.636.63 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.*

## 5.2.10. அக்மார்க் தரம் பிரிப்பு

*அக்மார்க் சின்னம் சரியான எடையுடன் தரமான, கலப்படமற்ற உணவுப் பொருட்களுக்கு அரசின் உத்தரவாதத்தை உறுதி செய்கின்றது. நிர்ணயித்த தரத்தினை உறுதிப்படுத்திட, 30*

*2023 ஏப்ரல் 5]*

*மாநில அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வகங்களும், ஒரு முதன்மை ஆய்வகமும் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன.*

*இதுவரை இத்திட்டத்தில் 232 பொருட்களுக்கு தரநிலைக் குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன.*

*2022-2023 ஆம் நிதியாண்டில் 3.86 இலட்சம் மெ.டன் உணவுப்பொருட்கள் தரம் பிரிப்பு செய்யப்பட்டு, தரம் பிரிப்பிற்கான ஆய்வுக் கட்டணமாக அரசுக்கு ரூ.91.30 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.*

### 5.2.11. துறைப் பணியாளர்கள் விவரம்

*இத்துறையில் 1,343 துறைப் பணியாளர்களும், 1,674 விற்பனைக் குழுப் பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.*

**அட்டவணை: 5.1- துறைப் பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 1 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 2 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் (வேவ) | 37 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 5 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 170 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 47 |
| 7 | உதவி வேளாண்மை அலுவலர் | 627 |
| 8 | ஆட்சி அலுவலர் | 1 |
| 9 | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 10 | இதர பணியாளர்கள் | 452 |
| | மொத்தம் | 1,343 |

[2023 ஏப்ரல் 5

அட்டவணை: 5.2-விற்பனைக் குழு பணியாளர்கள் விவரம்

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதுநிலை செயலாளர் / வேளாண்மை துணை இயக்குநர் | 2 |
| 2 | முதுநிலை செயலாளர் | 2 |
| 3 | செயலாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் | 11 |
| 4 | செயலாளர் | 11 |
| 5 | கண்காணிப்பாளர் | 202 |
| 6 | பொறியியல் மேற்பார்வையாளர் | 9 |
| 7 | மேற்பார்வையாளர் | 346 |
| 8 | இதர பணியாளர்கள் | 1,091 |
| | மொத்தம் | 1,674 |

## 5.3. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

*தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமானது, 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987-ன்படி சட்டபூர்வ வாரியமாகத் திருத்தி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.*

### 5.3.1. நிதி ஆதாரம்

*தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987-ன்படி, விற்பனைக் குழுக்கள் வசூலிக்கும் உரிமக் கட்டணம், சந்தைக் கட்டண தொகையிலிருந்து, 15 சதவிகிதம் பங்குத் தொகையாகப் பெறப்பட்டு சந்தை மேம்பாட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

### 5.3.2. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் செயல்பாடுகள்

#### 5.3.2.1. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

*இவ்வாரியத்தின் பயிற்சி மையம், சேலம் மாவட்டம், உத்தமசோழபுரத்தில் செயல்பட்டு வருகின்றது. வேளாண்மை*

விற்பனை — வேளாண் வணிகத் துறையை சார்ந்த அனைத்து நிலை தொழில்நுட்ப அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பினை உருவாக்கிக்கொள்ளும்வகையில் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.21 இலட்சம் மதிப்பில் 857 தொழில்நுட்ப அலுவலர்கள், விவசாயிகள், ஊரக இளைஞர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் 35 பயிற்சிகள் நடத்தப்பட்டன. 2023-2024 ஆம் ஆண்டில் அலுவலர்கள், விவசாயிகள் பயனடையும் வகையில் இப்பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

### 5.3.2.2. கட்டுமானப் பணிகள்/பராமரிப்புப் பணிகள்

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் வளர்ச்சிப் பணிகள், வேளாண்மை விற்பனை — வேளாண் வணிகம் சார்ந்த கட்டமைப்புகளை உருவாக்கி அவற்றைப் பராமரிக்கும் வகையில் வாரியத்தில் கட்டுமானப் பிரிவு செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவின்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.65 கோடி மதிப்பிலான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன. 2023-2024 ஆம் ஆண்டிலும் இத்திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### 5.3.2.3. விலை ஆதரவுத் திட்டம்

பயறு வகைகள், கொப்பரைத் தேங்காய் ஆகியவற்றின் அறுவடைக் காலத்தில் ஏற்படும் சந்தைவிலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் குறைந்தபட்ச ஆதரவு விலையில் அவற்றைக் கொள்முதல் செய்திட "விலை ஆதரவுத் திட்டம்" தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ.450 கோடி மதிப்பிலான 4,690 மெ.டன் பயறுவகைகள், 39,515 மெ.டன் கொப்பரைத் தேங்காய், 38,205 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டன. நடப்பு ராபி கொள்முதல் பருவத்தில், 60,203 மெ.டன் உளுந்து, 12,605 மெ.டன் பச்சைப்பயறு, 56,000 மெ.டன் கொப்பரை ஆகியன கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5.3.2.4. வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

ஏற்றுமதியில் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் சென்னையில் வேளாண் ஏற்றுமதி சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிக்கு ரூபாய் இரண்டு இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

உணவுப் பொருட்களில் பூச்சிக்கொல்லி மருந்தின் நச்சுத் தன்மையினை பரிசோதனைச் செய்வதற்கான ஆய்வகங்கள் சென்னை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தலா ஒன்பது கோடி ரூபாய் திட்ட மதிப்பில் நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நடப்பாண்டில் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகளை அதிகப்படுத்திட மாநில அளவில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில், 10 கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

## 5.3.2.5 புவிசார் குறியீடு

மாநிலத்தின் தனித்துவமான பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலா, பண்ருட்டி முந்திரி உள்ளிட்ட 10 பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

நடப்பு 2023-2024 ஆம் ஆண்டிலும், கிருஷ்ணகிரி, அரசம்பட்டி தேங்காய், கிருஷ்ணகிரி, பன்னீர் ரோஜா, தஞ்சாவூர், பேராவூரணி தேங்காய், மூலனூர், முருங்கை, தூத்துக்குடி, விளாத்திகுளம் மிளகாய், சாத்தூர், வெள்ளரி, கடலூர், கோட்டிமுளை கத்தரிக்காய், தஞ்சாவூர், வீரமாங்குடி அச்சுவெல்லம், மதுரை, செங்கரும்பு மற்றும் சிவகங்கை, கருப்புகவுனி அரிசி ஆகிய 10 பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 5.3.2.6 முருங்கை ஏற்றுமதி மண்டலம்

முருங்கை, அதன் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதித் திறனைக் கருத்தில்கொண்டு தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர், மதுரை ஆகிய ஏழு

*2023 ஏப்ரல் 5]*

*மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியை முருங்கை ஏற்றுமதி மண்டலமாக அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக மதுரையில் முருங்கைக்கான சிறப்பு ஏற்றுமதி சே வை மையம் துவங்கி செயல்பட்டு வருகின்றது.*

*இரண்டாம் கட்டமாக, முருங்கை மதிப்புக் கூட்டுவதற்கான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.*

### 5.3.2.7. சிறிய உணவுப் பூங்காக்கள் - வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் அமைத்தல்

*கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், மதுரை ஆகிய ஏழு இடங்களில் ரூ.191.88 கோடி மதிப்பீட்டில் தலா 10 ஏக்கர் பரப்பளவில் சிறிய உணவுப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.*

### 5.3.2.8. பன்னாட்டு மலர் ஏல மையம்

*கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் மலர்களுக்கான பன்னாட்டு ஏல மையம் ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மலர் ஏலத்திற்கான மென்பொருள் மேம்படுத்தப்பட்டு, சோதனை ஓட்டம் முடிந்து, தற்போது மின்னணு முறையில் ஏலம் நடைபெற்று வருகின்றது.*

### 5.3.2.9. தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள்

*கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகளை விவசாயிகளும், வணிகர்களும் இணையவழி முறையில் பதிவு செய்யவும், வணிகர்களுக்கு உரிமம் வழங்கவும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களைக் கண்காணிக்கவும், அவர்தம் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்யவும் (இ—மார்க்கெட் தளம்), உழவர் சந்தையில் காய்கனி வரத்து, விற்பனை மற்றும் விலையினைத் தகவல் பரிமாற்றம் செய்திட ஏதுவாக ரூபாய் ஒரு கோடி மதிப்பில், மென்பொருள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) உதவியுடன் உருவாக்கப்பட்டு வருகின்றது.*

[2023 ஏப்ரல் 5

# இணைப்பு I

## வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

(அலகு எண்களில்)

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | முதன்மை பதப்படுத்தும் நிலையம் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | குளிர்பதன கிடங்குகள் | குளிர்பதன கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனை கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | சிறப்பு வணிக வளாகங்கள் | ஒருங்கிணைந்த வேளாண் வணிக வளாகங்கள் | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 4 | — | 7 | 4000 | — | — | 6 | — | 7 | — | — | 8 |
| 2 | செங்கல்பட்டு | 9 | — | 2 | 2600 | — | — | 1 | — | 2 | — | — | 8 |
| 3 | திருவள்ளூர் | 6 | — | 10 | 12800 | — | — | 5 | — | 7 | — | — | 12 |
| 4 | கடலூர் | 5 | — | 15 | 20100 | 4 | 77 | 29 | 76 | 16 | — | — | 16 |
| 5 | விழுப்புரம் | 3 | — | 18 | 41600 | 2 | 40 | 38 | 31 | 12 | — | — | 11 |
| 6 | கள்ளக்குறிச்சி | 3 | — | 17 | 23500 | 2 | 50 | 29 | 13 | 7 | — | — | 10 |
| 7 | வேலூர் | 4 | — | 8 | 5000 | 2 | 27 | 4 | 25 | 3 | — | — | 6 |
| 8 | ராணிப்பேட்டை | 2 | — | 10 | 8500 | — | — | 10 | 11 | 6 | — | — | 8 |
| 9 | திருப்பத்தூர் | 3 | — | 8 | 7250 | 2 | 27 | 1 | 4 | 2 | — | — | 6 |
| 10 | திருவண்ணாமலை | 8 | — | 33 | 35100 | 7 | 175 | 47 | 50 | 12 | — | — | 19 |
| 11 | தருமபுரி | 5 | 5 | 8 | 7600 | 7 | 1310 | 6 | 10 | 10 | 1 | — | 14 |
| 12 | கிருஷ்ணகிரி | 5 | 10 | 10 | 9600 | 21 | 1547 | 3 | 13 | 11 | 1 | 1 | 14 |
| 13 | சேலம் | 11 | — | 17 | 15000 | 12 | 260 | 17 | 20 | 18 | — | 1 | 14 |
| 14 | நாமக்கல் | 6 | — | 9 | 7850 | 6 | 84 | 4 | — | 7 | 1 | — | 12 |
| 15 | ஈரோடு | 6 | — | 42 | 54352 | 7 | 1225 | 36 | 37 | 40 | 3 | — | 16 |
| 16 | திருப்பூர் | 6 | — | 60 | 81900 | 6 | 152 | 33 | 10 | 47 | 2 | — | 8 |
| 17 | கோயம்புத்தூர் | 8 | 7 | 31 | 26405 | 20 | 1694 | 19 | 51 | 30 | 3 | — | 12 |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | முதன்மை பதப்படுத்தும் நிலையம் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | குளிர்பதன கிடங்குகள் | குளிர்பதன கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனை கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | சிறப்பு வணிக வளாகங்கள் | ஒருங்கிணைந்த வேளாண் வணிக வளாகங்கள் | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | நீலகிரி | 4 | 9 | — | — | 9 | 592 | 1 | — | — | — | 1 | 9 |
| 19 | பெரம்பலூர் | 2 | — | 2 | 2500 | 2 | 75 | 1 | — | 1 | 1 | — | 8 |
| 20 | அரியலூர் | 2 | — | 5 | 5500 | 1 | 25 | 14 | — | 7 | — | — | 11 |
| 21 | திருச்சிராப்பள்ளி | 8 | 12 | 14 | 13000 | 12 | 3282 | 15 | 5 | 21 | 4 | — | 13 |
| 22 | கரூர் | 5 | — | 2 | 1000 | 1 | 25 | 1 | — | — | — | — | 9 |
| 23 | தஞ்சாவூர் | 5 | — | 29 | 41650 | 2 | 125 | 22 | 16 | 6 | 2 | — | 15 |
| 24 | திருவாரூர் | 7 | — | 27 | 30100 | — | — | 9 | — | 58 | — | — | 9 |
| 25 | நாகப்பட்டினம் | 1 | — | 14 | 11820 | — | — | 4 | — | — | — | — | 7 |
| 26 | மயிலாடுதுறை | 2 | — | 4 | 3500 | — | — | 7 | — | 5 | — | — | 4 |
| 27 | புதுக்கோட்டை | 6 | — | 7 | 4600 | 2 | 125 | 3 | — | 4 | 1 | — | 12 |
| 28 | மதுரை | 7 | — | 13 | 15900 | 2 | 27 | 4 | — | 9 | 1 | 1 | 13 |
| 29 | திண்டுக்கல் | 6 | 5 | 14 | 19200 | 9 | 1115 | 6 | 105 | 11 | 1 | — | 12 |
| 30 | தேனி | 7 | 5 | 12 | 13500 | 12 | 722 | 8 | — | 9 | 3 | — | 9 |
| 31 | விருதுநகர் | 8 | — | 15 | 17200 | 3 | 150 | 5 | 55 | 5 | — | — | 11 |
| 32 | சிவகங்கை | 5 | — | 17 | 16450 | 1 | 25 | 3 | — | 7 | — | — | 9 |
| 33 | இராமநாதபுரம் | 3 | 3 | 9 | 13050 | 6 | 2155 | 3 | 136 | 11 | 1 | — | 9 |
| 34 | திருநெல்வேலி | 5 | 2 | 8 | 10800 | 5 | 72 | 4 | 3 | 5 | 2 | — | 8 |
| 35 | தென்காசி | 2 | 3 | 6 | 12000 | 9 | 1980 | 6 | 40 | 5 | — | — | 7 |
| 36 | தூத்துக்குடி | 2 | 3 | 18 | 20100 | 11 | 277 | 7 | 6 | 5 | 1 | — | 7 |
| 37 | கன்னியாகுமரி | 2 | — | 11 | 10500 | 2 | 27 | 3 | 85 | 5 | 2 | — | 5 |
| | மொத்தம் | 183 | 64 | 532 | 625527 | 187 | 17467 | 414 | 802 | 411 | 30 | 4 | 381 |

# இணைப்பு II

## மாவட்டம் மற்றும் விற்பனைக் குழு வாரியாக மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் மற்றும் மின்னணு அல்லாத சந்தைகள்

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத சந்தைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 3 | 2 | 1 |
| 2 | செங்கல்பட்டு | | 4 | 1 | 3 |
| 3 | திருவள்ளூர் | | 8 | 3 | 5 |
| 4 | கடலூர் | கடலூர் | 11 | 7 | 4 |
| 5 | விழுப்புரம் | விழுப்புரம் | 11 | 8 | 3 |
| 6 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 8 | 6 | 2 |
| 7 | வேலூர் | வேலூர் | 3 | 2 | 1 |
| 8 | ராணிப்பேட்டை | | 6 | 3 | 3 |
| 9 | திருப்பத்தூர் | | 3 | 2 | 1 |
| 10 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 18 | 8 | 10 |
| 11 | தருமபுரி | தருமபுரி | 7 | 3 | 4 |
| 12 | கிருஷ்ணகிரி | | 9 | 3 | 6 |
| 13 | சேலம் | சேலம் | 14 | 10 | 4 |
| 14 | நாமக்கல் | நாமக்கல் | 6 | 2 | 4 |
| 15 | ஈரோடு | ஈரோடு | 18 | 14 | 4 |
| 16 | திருப்பூர் | திருப்பூர் | 15 | 9 | 6 |

2023 ஏப்ரல் 5]

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத சந்தைகள் |
|---|---|---|---|---|---|
| 17 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 10 | 9 | 1 |
| 18 | நீலகிரி | நீலகிரி | 4 | 0 | 4 |
| 19 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 2 | 1 | 1 |
| 20 | அரியலூர் | | 4 | 1 | 3 |
| 21 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 10 | 5 | 5 |
| 22 | கரூர் | | 4 | 0 | 4 |
| 23 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 13 | 6 | 7 |
| 24 | திருவாரூர் | திருவாரூர் | 8 | 4 | 4 |
| 25 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 4 | 1 | 3 |
| 26 | மயிலாடுதுறை | | 4 | 4 | 0 |
| 27 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 10 | 3 | 7 |
| 28 | மதுரை | மதுரை | 6 | 5 | 1 |
| 29 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 8 | 7 | 1 |
| 30 | தேனி | தேனி | 7 | 4 | 3 |
| 31 | விருதுநகர் | விருதுநகர் | 7 | 4 | 3 |
| 32 | சிவகங்கை | சிவகங்கை | 7 | 5 | 2 |
| 33 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 6 | 6 | 0 |
| 34 | திருநெல்வேலி | திருநெல்வேலி | 4 | 3 | 1 |
| 35 | தென்காசி | | 7 | 4 | 3 |
| 36 | தூத்துக்குடி | | 9 | 1 | 8 |
| 37 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 6 | 1 | 5 |
| | மொத்தம் | | 284 | 157 | 127 |

[2023 ஏப்ரல் 5

# இணைப்பு III

## விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் கட்டம் – I

## முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் |
|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி (10) | ஓசூர், காமன்தொட்டி, தேன்கனிக்—கோட்டை, தட்டிகானப்பள்ளி, இராயக்கோட்டை, ஆலப்பட்டி, குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போச்சம்பள்ளி. |
| 2. | தருமபுரி (5) | பெண்ணாகரம் (கூட்டுறவு விற்பனைச் சங்கம்), பாலக்கோடு, தருமபுரி, அரூர், பாப்பாரப்பட்டி. |
| 3. | கோயம்புத்தூர் (7) | சிக்கதாசம்பாளையம், சூலூர், வடக்கிபாளையம், பூலுவாப்பட்டி, பிச்சனூர், ஆனைமலை, பொள்ளாச்சி. |
| 4. | நீலகிரி (9) | ஓசஹட்டி, அணிக்கொரை, தாவணை, உதகை ரோஜா பூங்கா, நீலகிரி (கூட்டுறவு விற்பனை சங்கம்), புது அலஞ்சி, சுள்ளிக்கூடு, உப்பட்டி, அய்யங்கொல்லி. |
| 5. | திருச்சிராப்பள்ளி (12) | லால்குடி, மண்ணச்சநல்லூர் – I, மண்ணச்சநல்லூர் – II, திருச்செந்துறை, பி.கே. அகரம், அரசலூர், பிடாரமங்கலம், துறையூர் (கூட்டுறவு விற்பனை சங்கம், உப்பிலியாபுரம் (தெற்கு), தாத்தையங்கார்பேட்டை, கள்ளிக்குடி, எம்.புத்தூர். |
| 6. | திண்டுக்கல் (5) | பழனி, பழனி (கூட்டுறவு விற்பனை சங்கம்), கோபால்பட்டி, கவுஞ்சி, வேடசந்தூர். |
| 7. | தேனி (5) | தேனி, சின்னமனூர், கம்பம் – I, கம்பம் — II , பெரியகுளம். |

*2023 ஏப்ரல் 5*]

| **வ. எண்** | ***மாவட்டம்*** | **முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்** |
|---|---|---|
| *8.* | இராமநாதபுரம் *(3)* | பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி (கூட்டுறவு விற்பனை சங்கம்). |
| *9.* | தூத்துக்குடி *(3)* | ஸ்ரீவைகுண்டம், புதூர், விளாத்திகுளம். |
| *10.* | திருநெல்வேலி *(2)* | இராமையன்பட்டி, வள்ளியூர். |
| *11.* | தென்காசி *(3)* | பாவூர்சத்திரம், சங்கரன்கோவில், கடையநல்லூர். |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 5

# இணைப்பு IV

## விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் கட்டம் - II

## முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களின் விவரம்

| வ. எண் | மாவட்டம் | முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் / எண்ணிக்கை விவரம் |
|---|---|---|
| 1. | சேலம் (5) | உத்தமசோழபுரம், தலைவாசல், வாழப்பாடி, எடப்பாடி, கொளத்தூர். |
| 2. | ஈரோடு (2) | அளுக்குளி, அந்தியூர். |
| 3. | திருவள்ளூர் (2) | திருவள்ளூர், ஆரணி. |
| 4. | காஞ்சிபுரம் (1) | சுங்குவார்சத்திரம். |
| 5. | செங்கல்பட்டு (1) | மதுராந்தகம். |
| 6. | திருவண்ணாமலை (2) | படவேடு, குப்பநத்தம். |
| 7. | கடலூர் (2) | பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி. |
| 8. | விழுப்புரம் (2) | ஒலக்கூர், வானூர். |
| 9. | கரூர் (3) | அரவக்குறிச்சி, மகாதானபுரம், வேலாயுதம்பாளையம். |

*2023 ஏப்ரல் 5*]

## 6. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி

*தமிழ்நாட்டில் வறுமையை ஒழித்து உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் மாநில அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அரசின் நலத் திட்டங்களையும், கொள்கைகளையும் நடைமுறைப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளின் வாயிலாக, அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது.*

*வேளாண்மையில் மனித வள மேம்பாடு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு மற்றும் உற்பத்தித் திறன் உயர்வுக்கும் விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்கும், பல்வேறு உறுப்புக் கல்லூரிகள், ஆராய்ச்சி மற்றும் அறிவியல் நிலையங்கள்மூலம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் வேளாண் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்குக் கடந்த வருடம் (2022-2023) ரூ.560.72 கோடி நிதி ஒதுக்கப்பட்டது (இணைப்பு—1).*

*நடப்பு நிதி ஆண்டில் (2023 – 2024) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.586.02 கோடி நிதி தலையாய பணிகளைச் செவ்வனே மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டில் முதல் முறையாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.100 கோடி வைப்பு நிதியாக வேளாண் ஆராய்ச்சித் தரத்தினை மேம்படுத்த வழங்கப்படும்.*

### 6.1 வேளாண்மைக் கல்வி

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 12 இளநிலை, 32 முதுநிலை மற்றும் 28 முனைவர் பட்டப் படிப்புகளை தனது 18 உறுப்புக் கல்லூரிகள் வாயிலாக வழங்கி வருகின்றது. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நான்கு உறுப்புப் பட்டயப் படிப்பு நிறுவனங்கள், வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியல் பட்டயப் படிப்பினையும் வழங்கி வருகின்றன.*

*2011-2012 ஆம் ஆண்டில் 9,652 ஆக இருந்த இளநிலைப் பட்டப் படிப்பிற்கான விண்ணப்பங்கள் 2022-2023 ஆம் ஆண்டில் 39,489 ஆக பன்மடங்கு அதிகரித்துள்ளது.*

[2023 ஏப்ரல் 5

**அட்டவணை:6.1. மாணவர்கள் சேர்க்கை (2022-23)**

| படிப்பு விவரம் | சேர்க்கை |
|---|---|
| இளநிலை (Under Graduate) | 5,050 |
| முதுநிலை (Post Graduate) | 483 |
| ஆராய்ச்சி (Doctorate) | 218 |
| பட்டயப்படிப்பு (Diploma) | 427 |
| உறுப்பு, இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 6,178 |

### 6.1.1 புதுமைப் பெண் திட்டம்

அரசு பள்ளிகளில் கற்கும் மாணவிகளின் உயர் கல்விச் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின்மூலம் அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவிகளுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் உயர் கல்வி உறுதித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், சென்ற ஆண்டில் 591 மாணவிகள் விண்ணப்பித்ததில், 448 மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

### 6.1.2 கல்வி உதவி

சென்ற ஆண்டு இளநிலை மாணவர்களுக்கான சமுதாயம் சார்ந்த கல்வி நிதிகள், 2,950 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், 1,768 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், 1,054 ஆதி திராவிடர் மற்றும் 296 பழங்குடியின மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

### 6.1.3 கட்டமைப்பு வசதிகள்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஜீனூரில், புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், கரூர், நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் மற்றும் சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும் அமைக்க தமிழ்நாடு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, கல்லூரிகள் செயல்பட துவங்கியுள்ளன.

*2023 ஏப்ரல் 5*]

*செட்டிநாட்டில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின், கட்டமைப்பு வசதிகளை, வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கி (*NABARD*)* RIDF XXVIII *நிதியுதவியின்கீழ் ரூ.61.79 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.*

### 6.1.4 சமூக நலப் பணிகள்

*இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களில் முன்னோடியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து ஒரே இடத்தில் ஒரு குழு நான்கு மணி நேரத்தில் 6,03,009 மரங்களை வெற்றிகரமாக நட்டு முடித்து, எலைட் புக் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்டில் இடம்பிடித்துள்ளது.*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சி அருங்காட்சியகத்தை மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.1.25 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் (2023-2024) ரூ.3 கோடி மதிப்பில் பூச்சி அருங்காட்சியகத்தை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.*

*மதுரை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மாநில அளவிலான உழவர் தின விழா (14.10.2022 முதல் 16.10.2022 வரை) நடைபெற்றது. இவ்விழாவில், 27,000 விவசாயிகளும், 4,200 மாணவர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.*

### 6.1.5 மாணவர் நலம் மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனை

*மாணவர் நல மையம், மாணவர்களை ஊக்குவிக்கும் உரைகள், பயிற்சி வகுப்புகள், மாதிரி குழு கலந்துரையாடல்கள், பயிற்சி நேர்காணல் தேர்வுகள், தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை நடத்தி ஆற்றல்மிக்க மாணவர்களை உருவாக்கி இந்தியா மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி 78 மாணவர்களுக்கும், ஜெர்மன் மொழிப் பயிற்சி 23 மாணவர்களுக்கும், பிரஞ்சு மொழிப் பயிற்சி 74 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. மாணவர்களின் வேலைவாய்ப்பிற்காக, வங்கி வேலைவாய்ப்புப் பயிற்சி 62 மாணவர்களுக்கும், குடிமைப்பணிக்கான பயிற்சிகள் 42 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.*

*[2023 ஏப்ரல் 5*

*மாணவர் நல மையம் வாயிலாக 2022-2023 ஆம் ஆண்டில் மொத்தம் 226 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். வேளாண் தொழில் நிறுவனங்களில் 157 மாணவர்களும், வங்கிகளில் 32 மாணவர்களும் உணவு நிறுவனங்கள், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளில் 20 மாணவர்களும், நிதி நிறுவனங்களில் 6 மாணவர்களும், இதர நிறுவனங்களில் 10 மாணவர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.*

## 6.2 வேளாண்மை ஆராய்ச்சி

*தமிழ்நாடு முழுவதும் 18 உறுப்புக் கல்லூரிகளும், 40 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களும் அந்தந்தப் பகுதிகளிலுள்ள பயிர்களுக்கேற்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஆய்வுகளுக்குத் தேவையான நிதி, மாநில அரசு, சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் வாயிலாகப் பெறப்படுகின்றன.*

*ட்ரோன்கள்மூலம் வேளாண் இடுபொருட்கள், களைக்கொல்லி மற்றும் பயிர் ஊக்கிகள் தெளிக்கும் செயல்விளக்கம் 224 எக்டர் பரப்பளவில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ரூ.37.5 இலட்சம் மதிப்பீட்டில் செய்து காண்பிக்கப்பட்டது.*

*வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அடிப்படையிலான பயிர் முறை, பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும் அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையத்திலும் துவங்கப்பட்டன.*

*தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலத்தில், களர் மற்றும் உவர் நிலங்களில் மாற்றுப் பயிர்களைக் கண்டறிந்து மேம்படுத்தப்பட்ட வேளாண் நடைமுறைகளைப் பிரபலப்படுத்துவதற்கு, ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*காவிரிப் படுகைப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பயிர் சாகுபடி முறைகள்மூலம், மண் மற்றும் நீர் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் ஆராய்ச்சிக்காக ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.*

*2023 ஏப்ரல் 5*]

*நடப்பு நிதியாண்டில் (2023-2024), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளுக்கு ஊக்கமூட்டும் வகையில், தாவரவியல் பூங்காவினைச் சீரமைக்க ஐந்து கோடி ரூபாயும், வாழை, பனை ஆராய்ச்சி நிலையங்கள் துவங்க 30 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.*

*வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் உயரிய மேலாண்மை உத்திகள் எளிதில் விவசாயிகளைச் சென்றடையும் வகையில், வட்டார அளவில் ஒரு வேளாண் விஞ்ஞானி பொறுப்பு அலுவலராக அமர்த்தப்படவுள்ளார்.*

### 6.2.1 தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீனமயமாக்கும் திட்டம் (TN- IAMP)

*உலக வங்கியின் நிதியுதவியில், தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீனமயமாக்கும் திட்டத்தின் வாயிலாக ரூ.85 கோடி மதிப்பீட்டில், 54 உபவடிநீர் படுகைப் பகுதிகளில் சீரான காலநிலை மற்றும் சந்தைச் சார்ந்த வேளாண்மையை ஊக்குவித்து, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் துல்லிய பண்ணையம், நீர் நுட்ப செயல் விளக்கம் மற்றும் புத்தாக்கப் பயிற்சியின்மூலம் 10,125 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்,*

### 6.2.2 வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்

*விவசாயத்தில் தினசரி வேலைகளைத் தீர்மானிப்பதற்கு, மத்திய கால வானிலை முன்னறிவிப்பு மிக அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, பல்கலைக்கழக ஆராய்ச்சி திட்டத்தின்மூலம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள மத்தியக் கால வானிலை முன்னறிவிப்பானது, கிராம அளவில், துல்லியம் அதிகரிக்கப்பட்டு, அடுத்த ஆறு நாட்களுக்கு ஒரு மணி நேர இடைவெளியில், தரவுகள் கிடைக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை* http://aas.tnau.ac.in/vlf *என்னும் இணையதளத்தில் உள்ள வரைபடத்தையோ அல்லது அட்டவணையையோ தேர்வு செய்து இலவசமாகத் தெரிந்துகொள்ளலாம். இந்தக் கிராம அளவிலான வானிலை முன்னறிவிப்பின் துல்லியம் சராசரியாக 70—80 சதவிகிதம் ஆகும்.*

[2023 ஏப்ரல் 5

### 6.2.3 விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்தகவல்

விலை முன்னறிவிப்புத் திட்டமானது, வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மையத்தின் (CARDS) உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் (DEMIC) தமிழ்நாடு—பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் (TN—IAMP) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தில், மக்காச்சோளம், உளுந்து, பச்சை பயறு, நிலக்கடலை, எள், கொப்பரை, வாழைப்பழம் (பூவன், கற்பூரவள்ளி, நேந்திரன்), தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய், சின்ன வெங்காயம், பருத்தி, வர மிளகாய், தேங்காய் ஆகிய 14 முக்கியப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்புகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றது. இத்திட்டத்தில், 2022—23 ஆம் ஆண்டில், விதைப்பு குறித்த 17 சந்தை ஆலோசனைகளையும், அறுவடைக்கு முந்தைய 14 ஆலோசனைகளையும் இந்தத் தகவல் மையம் வழங்கியுள்ளது.

### 6.2.4 ஆராய்ச்சி வெளியீடுகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து கடந்த வருடம் (2022-2023) 625-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், தேசிய வேளாண் அறிவியல் அகாடமி தரவரிசையில், குறியீடு (ஆறு) மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி இதழ்களில் (Scopus Index Journals) வெளியிடப்பட்டுள்ளன.

### 6.2.5 வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து இந்த வருடம் வேளாண் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் வன மரப் பயிர்களில் 23 புதிய இரகங்கள் தமிழ்நாடு அரசின் புதிய இரகங்கள் வெளியீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு விவசாயிகளுக்காக வெளியிடப்பட்டுள்ளன.

| வ. எண் | இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 1. | நெல் கோ 56 | 130 - 135 | மகசூல் : 6372 கிலோ / எக்டர் |
| 2. | நெல் கோ 57 (மேம்படுத்தப்பட்ட கவுனி) | 130 - 135 | மகசூல் : 4638 கிலோ / எக்டர் |
| 3. | நெல் ஏடிடீ 58 | 125 | மகசூல் : 6376 கிலோ/ எக்டர் |

*2023 ஏப்ரல் 5*]

| வ. எண் | இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 4. | நெல் ஏஎஸ்டி 21 | 120 | மகசூல் : 6330 கிலோ / எக்டர் |
| 5. | வீரிய ஒட்டு மக்காச்சோளம் கோஎச் (எம்) 11 | 105 - 110 | மகசூல் : 6,590 கிலோ / எக்டர் |
| 6. | கம்பு வீரிய ஒட்டு கோஎச் 10 | 85 - 90 | மகசூல் : இறவை: 3020 கிலோ/எக்டர்; மானாவாரி : 2050 கிலோ/எக்டர் |
| 7. | சோளம் கே 13 | 95 - 100 | தானிய மகசூல் : 2575 கிலோ/எக்டர்; தீவன மகசூல் : 11.4 டன்/ எக்டர் |
| 8. | குதிரைவாலி அத்தியந்தல் 1 | 90 | தானியமகசூல் : 2123 கிலோ/எக்டர்; உலர்தட்டைமகசூல் : 3057 கிலோ/எக்டர் |
| 9. | பனிவரகு அத்தியந்தல் 2 | 65 - 70 | தானியமகசூல் : 2140 கிலோ / எக்டர்; உலர்தட்டைமகசூல்: 2793 கிலோ / எக்டர் |
| 10. | பாசிப்பயறு கோ 9 | 65 - 70 | மகசூல் : 825 கிலோ/ எக்டர் |
| 11. | பாசிப்பயறு வம்பன் 6 | 70 - 75 | மகசூல் : 760 கிலோ / எக்டர் |
| 12. | தட்டைப்பயறு வம்பன் 4 | 70 - 75 | மகசூல் : இறவை : 1377 கிலோ / எக்டர்; மானாவாரி : 1035 கிலோ / எக்டர் |
| 13. | சூரியகாந்தி கோஎச் 4 | 90 - 95 | மகசூல் : இறவை:2182 கிலோ/எக்டர் மானாவாரி : 1898 கிலோ/எக்டர் |
| 14. | எள் விஆர்ஐ 5 | 75 - 80 | மகசூல் : 795 கிலோ / எக்டர் |

| வ. எண் | இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 15. | கரும்பு கோ 18009 (புன்னகை) | 356 | கரும்பு மகசூல் : 160.39 டன் / எக்டர்; சர்க்கரை மகசூல் : 20.71 டன் / எக்டர் |
| 16. | சணப்பு ஏடிடீ 1 | 120 | மகசூல் : 20.8 டன்/ எக்டர் |
| 17. | பீர்க்கங்காய் மதுரை 1 | 120 – 130 | மகசூல் : 18.75 டன்/ எக்டர் |
| 18. | மார்கழி மல்லிகை கோ 1 | பல்லாண்டு பயிர் | மகசூல் : 8.52 டன்/ எக்டர் |
| 19. | குத்து அவரை கோ 16 | 100 - 120 | மகசூல் : 16.5 டன்/ எக்டர் |
| 20. | இலவம்பஞ்சு எம்டிபி 1 | 4 - 40 ஆண்டுகள் | மகசூல் : ஒரு மரத்திலிருந்து 900 முதல் 1500 காய்கள் |
| 21. | செம்மரம் எம்டிபி 1 | 15 - 18 வருடங்கள் | ஒரு மரத்திலிருந்து 100 கிலோ கட்டை |
| 22. | சவுக்கு எம்டிபி 3 | 3 வருடங்கள் | மகசூல் : 162 டன்/எக்டர் |
| 23. | காயா எம்டிபி 1 | 5-6 வருடங்கள் | மகசூல் : 150 டன்/எக்டர் |

## 6.3 வேளாண் விரிவாக்கம்

புதிய வேளாண்மை அறிவியல் நிலையம், நீலகிரி மாவட்டம் ஊட்டியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

எழுபது விரிவாக்கப் பணியாளர்களுக்கு “அடுத்த தலைமுறை (புதுமையான) விரிவாக்க அணுகுமுறைகள் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்ற முறைகள்” குறித்து இணையதளப் பயிற்சி அளிக்கப்பட்டது,

ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவின் உயர்மட்டக் குழு மூன்று நாட்கள் (09.10.2022 முதல் 11.10.2022 வரை) கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு (TNAU) விஜயம்

2023 ஏப்ரல் 5]

செய்தது. இந்தியா—எத்தியோப்பியா இடையேயான பன்மைத்துவ வேளாண்மை விரிவாக்க அமைப்புகள் பற்றிய கலந்தாய்வு நடைபெற்றது,

தூர்தர்சன் கேந்திரா, பொதிகை சேனலில் விரிவாக்கத்திற்கான மக்கள் தொடர்பு ஊடக ஆதரவின்கீழ், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 63 செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆவணப்படுத்தப்பட்டன.

தூர்தர்சன் கேந்திரா, பொதிகை சேனலில் ஒளிபரப்பப்படும் ஃபோன்—இன்—லைவ் நிகழ்ச்சியான "வேளாண்களம்" (திங்கள்தோறும் 12.00 முதல் 1.00 மணி வரை)மூலம் 85 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ், 15 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (KVK) வாயிலாக கடந்த 2022 ஆம் ஆண்டில் 153 பண்ணை வழி ஆய்வுகள், 314 முதல்நிலை செயல் விளக்கத்திடல்கள் மற்றும் பயிற்சிகள், விவசாயிகள் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட்டன.

| வ. எண் | விரிவாக்கப் பணிகளின் விவரம் | எண்ணிக்கை | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1. | பயிற்சிகள் | 1,878 | 88,251 |
| 2. | முதல்நிலை செயல்விளக்கத் திடல்கள் | 314 | 3188 |
| 3. | வயல்வெளி ஆராய்ச்சித் திடல்கள் | 153 | 995 |
| 4. | செயல்விளக்கங்கள் | 2,965 | 23,125 |
| 5. | வயல்விழா | 54 | 1,829 |
| 6. | வேளாண் கருத்துக்காட்சிகள் | 176 | 1,25,512 |
| 7. | உழவர் தினவிழா | 24 | 10,139 |

| வ. எண் | விரிவாக்கப் பணிகளின் விவரம் | எண்ணிக்கை | பயனாளிகள் |
|---|---|---|---|
| 8. | வேளாண் கருத்தரங்குகள் | 16 | 3,268 |
| 9. | உழவர்கள் – விஞ்ஞானிகள் கலந்துரையாடல் | 62 | 3,726 |
| 10. | வயல்வெளி தீர்வு | 1,444 | 8,714 |
| | **மொத்தம்** | **7,086** | **2,68,747** |

### 6.3.1 பயிற்சிகள்

அண்டை நாடான மாலத்தீவின் மூன்றாம் நிலை கள நிலை அலுவலர்களுக்கான ஒரு மாத சான்றிதழ் நிலை வேளாண்மைப் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை கூட்டமைப்புக் குழுவின் 36 அதிகாரிகளுக்கு, வேளாண் தொழில்நுட்பத்தில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்த மூன்று நாள் புத்தாக்கப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

'வேளாண்மையில் அடுத்தக்கட்ட புதுமைகள்' பற்றிய ஒழுங்கமைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி 45 மூத்த மற்றும் இடைநிலை வேளாண் அதிகாரிகளுக்கு ஹைதராபாத்திலுள்ள வேளாண் விரிவாக்க மேலாண்மைக்கான தேசிய நிறுவனத்துடன் (மேலாண்மை) இணைந்து, ஐந்து நாட்கள் வழங்கப்பட்டது.

ஏறத்தாழ, 5,331 விவசாயிகள் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) மற்றும் பிற சகோதரத் துறைகளின்கீழ் பயிற்சிகள் மற்றும் கண்டுணர்வு பயணம்மூலம் பயனடைந்தனர்.

### 6.3.2 கல்வி ஊடக மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கல்வி ஊடக மையத்தில் 55 வீடியோ படங்கள் தயாரிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் விவசாயிகள், பொதுமக்களின் நம்பகத் தன்மையை அதிகரிக்க 82 வீடியோ நிகழ்ச்சிகள் TNAU TV YouTube சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டு, இதனை 29.23 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

*2023 ஏப்ரல் 5*]

## 6.3.3 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம்

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுமார் 12 இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு 3,653 நபர்களும், ஒரு வருடத்திற்கு 13.3 இலட்சம் நபர்களும், இணையதளத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.*

## 6.3.4 விவசாயிகள் அழைப்பு மையம் (கிஸான் கால் சென்டர்)

*இம்மையத்தின்மூலம் விவசாயிகள் 1800—180—1551 என்ற எண்ணில் வட்டார மொழியில் வல்லுநர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடலாம். இம்மையம், அனைத்து வேலை நாட்களிலும், காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில், மொத்தம், 1,30,332 தொலைபேசி அழைப்புகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.*

## 6.4 விதைகள் உற்பத்தி

*கடந்த 2022-2023 ஆம் ஆண்டில், 153.6 டன் வல்லுநர் விதைகள், 644.7 டன் ஆதார விதைகள், 179.8 டன் சான்று விதைகள், 907.4 டன் உண்மை நிலை விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டன. மேலும், 22.85 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.*

## 6.5 வேளாண் வணிக மேம்பாடு

*வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில், வேளாண் வணிகக் காப்பகம், தொழில்நுட்பம், வீரிய ஒட்டு இரகம் மற்றும் இயந்திர வணிகமயமாக்கல், ஆலோசனைச் சேவைகள், துணிகர மூலதனத் திட்டம், மாணவர் தொழில் முனைவோர் திட்டம், வேளாண் மைய நிர்வாக மேம்பாட்டுத் திட்டம், நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மற்றும் உன்னத பாரத இயக்கம் 2.0 ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இயக்கம், 266 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு வேளாண் வணிகக் கூட்டமைப்பினையும், 182 தொழில் முனைவோர்களையும் உருவாக்கியுள்ளது. மேலும், 704 வணிக ரீதியான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

## 6.6 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்—விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பு இணைப்புத் திட்டம்

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2022-2023 ஆம் ஆண்டு முதல்* TNAU—FPO *இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. தொழில் முனைவோர் திறன் மேம்பாடு, வணிக அம்சங்கள் மற்றும் கொள்கை சார்ந்த ஆராய்ச்சிமூலம் தமிழ்நாட்டில் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பை (*FPO*) மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டத்தில், ஒவ்வொரு பல்கலைக்கழக மையமும் தொழில்நுட்ப ஆதரவு, வழிகாட்டுதல், திறன் மேம்பாட்டிற்காக ஓர் உழவர் உற்பத்தியாளர் அமைப்பைத் தேர்ந்தெடுக்கும். வரும் 2023-2024 ஆண்டில், ஒரு இலட்சம் விவசாயிகளை உள்ளடக்கி 100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை இணைக்க பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.*

## 6.7 விருதுகள்

*அ) 2021 ஆம் ஆண்டிற்காக, 'சர்தார் படேல் சிறந்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழும நிறுவன (வேளாண்மைப் பல்கலைக்கழக வகை) விருது' தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வேளாண் கல்வி கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் சிறந்த செயல்திறனிற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினால் வழங்கப்பட்டது.*

*ஆ) இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை கூட்டமைப்பின் 17-வது உயர் கல்வி உச்சி மாநாட்டில் கல்வி மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் துணையுடன், '2021 ஆம் ஆண்டின் சிறந்த பல்கலைக்கழகம் (30 ஆண்டுகளுக்கும் மேலான வகை) விருது' தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது.*

*இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வுகள் மையத்திற்கு, வேளாண் பொருளாதாரத் துறையில் சிறந்த பங்களிப்பிற்காக 'பேராசிரியர் ரமேஷ் சந்திர அகர்வால் விருது' வழங்கப்பட்டது.*

*ஈ) வேளாண் உற்பத்தித் திறனில் சிறப்பாகப் பங்களித்தமைக்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் 'சௌத்ரி தேவி லால் சிறந்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம்' என்ற விருதினைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை மையத்திற்கு வழங்கியது.*

2023 ஏப்ரல் 5]

# இணைப்பு – 1

## நிதிநிலை (2022 – 23)

| வ. எண் | விவரம் | மதிப்பீடு (ரூ. கோடிகளில்) |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் சம்பள செலவு | 297.79 |
| 2. | பயணப்படி | 0.50 |
| 3. | ஆராய்ச்சிக்கான செலவுகள் | 46.56 |
| 4. | ஓய்வு ஊதியம் | 192.99 |
| 5. | இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் திட்டத்திற்கான மாநில அரசின் 25 சதம் பங்களிப்பு | 18.80 |
| 6. | சிறு பழுதுபார்ப்புப் பணிகள் | 0.80 |
| 7. | கிராம வேளாண் அனுபவ படிப்பிற்கான மாநில அரசின் பங்களிப்பு | 0.13 |
| 8. | மாணவர்களுக்கான கட்டணச் சலுகை | 0.12 |
| 9. | அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவிகித இடஒதுக்கீடு | 2.68 |
| 10. | ஓய்வுபெற்ற உணவகப் பணியாளர்களுக்கான நிலுவைத் தொகை | 0.35 |
| | **மொத்தம்** | **560.72** |

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 5

## 7. விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை

வேளாண்மையே தேசத்தின் உச்சகட்ட உந்து சக்தி. உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், தன்னிறைவு அடையவும், விவசாயத்தில் தரமான இடுபொருட்களைப் பயன்படுத்துவது அவசியம்.

வேளாண் இடுபொருட்களில் விதை முக்கியப் பங்கு வகிக்கிறது. எந்தவொரு வேளாண்மை முறையிலும் அதிக வேளாண் உற்பத்திக்குத் தரமான சான்றளிக்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்துவது அவசியம். விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் தரமான விதைகள் போதுமான அளவில் கிடைப்பதற்காகவும், தரமான விதைகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின்மூலம் தொடர்ந்து தர மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக, 2022-2023 ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநரகத்தின் தலைமையகம் கோயம்புத்தூரிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டு 1.6.2022 முதல் இயங்கி வருகின்றது.

விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறையானது, விதைச் சான்று, விதைத் தரக் கட்டுப்பாடு, விதைப் பரிசோதனை, பயிற்சி மற்றும் அங்ககச் சான்றளிப்பு ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

### 7.1 விதைச் சான்றளிப்பு

விதைச் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968 ஆகிய சட்ட அமலாக்கத்தின்படி, விதைச் சான்றளிப்புப் பிரிவு செயல்படுகிறது. இது இந்திய குறைந்தபட்ச விதைச் சான்று தர நிலைகளைப் பூர்த்தி செய்திடும்பொருட்டு, அறிவிக்கப்பட்ட பயிர் மற்றும் இரகங்களில் விதைச் சான்றுப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

வல்லுநர் விதை ஆய்வுக் குழு மூலமாக வேளாண் ஆராய்ச்சி நிலையங்களில் வல்லுநர் விதை வயல்களில் தரங்களை ஆய்வு செய்து, அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு வல்லுநர் விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் இக்குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு, 147 மெ. டன் வல்லுநர் விதை உற்பத்தி செய்யப்பட்டது .

*2023 ஏப்ரல் 5*]

விதைச் சான்றுத் துறையில் அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்மூலம் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளில் விதையின் ஆதாரத்தை ஆராய்தல், வயலாய்வு, சுத்திப்பணி, விதைத்தரங்கள் பரிசோதனை மற்றும் சான்றட்டைப் பொருத்துதல் ஆகிய தொடர் பணிகளின்மூலம் தரமான சான்று விதைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

விதைச் சான்றளிக்கும் திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் ஆண்டில் 73,948 எக்டர் விதைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு, 1,34,648 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.1: 2022-2023 விதைப் பண்ணை பதிவு செய்யப்பட்ட பரப்பு மற்றும் சான்று செய்த விதையளவு**

| வ. எண் | விதைச் சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணைப் பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1,330 | 1,330 |
| 2 | கடலூர் | 4,383 | 1,838 |
| 3 | தருமபுரி | 1,536 | 434 |
| 4 | திண்டுக்கல் | 2,453 | 3,138 |
| 5 | ஈரோடு | 3,398 | 1,590 |
| 6 | காஞ்சிபுரம் | 1,644 | 2,684 |
| 7 | கன்னியாகுமரி | 196 | 186 |
| 8 | கரூர் | 698 | 328 |
| 9 | கிருஷ்ணகிரி | 1,302 | 504 |
| 10 | மதுரை | 2,366 | 5,820 |
| 11 | நாகப்பட்டினம் | 3,880 | 3,135 |

| வ. எண் | விதைச் சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணைப் பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 12 | நாமக்கல் | 1,733 | 2,988 |
| 13 | பெரம்பலூர் | 1,298 | 2,067 |
| 14 | புதுக்கோட்டை | 1,300 | 1,305 |
| 15 | இராமநாதபுரம் | 742 | 575 |
| 16 | சேலம் | 2,237 | 919 |
| 17 | சிவகங்கை | 476 | 446 |
| 18 | தஞ்சாவூர் | 7,199 | 2,839 |
| 19 | தேனி | 886 | 2,706 |
| 20 | திருவள்ளூர் | 1,330 | 946 |
| 21 | திருவாரூர் | 6,820 | 2,585 |
| 22 | தூத்துக்குடி | 1,610 | 879 |
| 23 | திருநெல்வேலி | 3,039 | 6,270 |
| 24 | திருப்பூர் | 9,159 | 73,927 |
| 25 | திருவண்ணாமலை | 3,757 | 2,691 |
| 26 | திருச்சி | 1,224 | 3,062 |
| 27 | வேலூர் | 1,927 | 851 |
| 28 | விழுப்புரம் | 4,758 | 7,921 |
| 29 | விருதுநகர் | 1,267 | 686 |
| | **மொத்தம்** | **73,948** | **1,34,648** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5*]

*மேலும், 2023—24 ஆம் ஆண்டில், 93,000 எக்டர் விதைப் பண்ணைகளைப் பதிவு செய்யவும், 1,30,000 மெட்ரிக் டன் தரமான விதைகளுக்குச் சான்றளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.*

## 7.2 விதைத் தரக் கட்டுப்பாடு-விதை ஆய்வு

*மாநிலத்தில் தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிப்பதை உறுதி செய்திட, விதைத் தரக் கட்டுப்பாடு, விதை ஆய்வுப் பிரிவு, தற்பொழுது நடைமுறையிலுள்ள சட்டங்களான விதைகள் சட்டம், 1966, விதைகள் விதிகள் 1968, விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983, சுற்றுப்புறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் சட்டம், 1955 ஆகியவற்றை அமல்படுத்தி தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிப்பதை உறுதி செய்கின்றது.*

*இத்துறையின்மூலம் 12,881 விதை விற்பனை நிலையங்களுக்கு விதை விற்பனை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விதை விற்பனை நிலையங்கள் விதை ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு, தரமற்ற விதைக் குவியல்கள் வைத்திருக்கும் நிறுவனங்கள்மீது துறை நடவடிக்கைகளும், நீதிமன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.*

**அட்டவணை 7.2: உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள்**

**(எண்கள்)**

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு சார்பு | எண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 27 | 1 | 86 | 114 |
| 2 | செங்கல்பட்டு | 26 | 3 | 158 | 187 |
| 3 | சென்னை | 7 | 1 | 49 | 57 |
| 4 | கோயம்புத்தூர் | 46 | 94 | 360 | 500 |
| 5 | நீலகிரி | 23 | 16 | 119 | 158 |
| 6 | கடலூர் | 49 | 14 | 421 | 484 |
| 7 | தருமபுரி | 26 | 2 | 344 | 372 |
| 8 | திண்டுக்கல் | 44 | 6 | 501 | 551 |

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு சார்பு | எண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 9 | ஈரோடு | 71 | 36 | 638 | 745 |
| 10 | விழுப்புரம் | 32 | 6 | 351 | 389 |
| 11 | கள்ளக்குறிச்சி | 28 | 14 | 338 | 380 |
| 12 | கன்னியாகுமரி | 33 | 16 | 64 | 113 |
| 13 | கரூர் | 19 | 55 | 104 | 178 |
| 14 | கிருஷ்ணகிரி | 31 | 5 | 581 | 617 |
| 15 | மதுரை | 48 | 12 | 266 | 326 |
| 16 | நாகப்பட்டினம் | 28 | 4 | 181 | 213 |
| 17 | மயிலாடுதுறை | 27 | 3 | 174 | 204 |
| 18 | நாமக்கல் | 52 | 109 | 163 | 324 |
| 19 | பெரம்பலூர் | 11 | 1 | 198 | 210 |
| 20 | அரியலூர் | 21 | 8 | 300 | 329 |
| 21 | புதுக்கோட்டை | 44 | 31 | 372 | 447 |
| 22 | இராமநாதபுரம் | 33 | 29 | 160 | 222 |
| 23 | சேலம் | 67 | 114 | 646 | 827 |
| 24 | சிவகங்கை | 41 | 3 | 200 | 244 |
| 25 | திருநெல்வேலி | 41 | 26 | 200 | 267 |
| 26 | தென்காசி | 40 | 46 | 304 | 390 |
| 27 | தஞ்சாவூர் | 78 | 24 | 488 | 590 |
| 28 | தேனி | 32 | 3 | 244 | 279 |
| 29 | திருவள்ளூர் | 63 | 55 | 137 | 255 |
| 30 | திருவாரூர் | 53 | 11 | 303 | 367 |
| 31 | தூத்துக்குடி | 38 | 132 | 236 | 406 |
| 32 | திருப்பூர் | 29 | 39 | 248 | 348 |

*2023 ஏப்ரல் 5*]

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு சார்பு | எண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 33 | திருவண்ணாமலை | 68 | 66 | 440 | 574 |
| 34 | திருச்சி | 49 | 8 | 362 | 419 |
| 35 | வேலூர் | 20 | 1 | 81 | 102 |
| 36 | ராணிப்பேட்டை | 25 | 4 | 115 | 144 |
| 37 | திருப்பத்தூர் | 24 | 3 | 126 | 153 |
| 38 | விருதுநகர் | 38 | 114 | 244 | 396 |
| | மொத்தம் | 1,432 | 1,115 | 10,302 | 12,881 |

*மேலும், 2022-2023 ஆம் ஆண்டில், 75,136 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதை ஆய்வாளர்களால் எடுக்கப்பட்ட 55,353 ஆய்வு விதை மாதிரிகளில் 54,758 ஆய்வு விதை மாதிரிகளுக்கும், தனியர் மற்றும் விதை நிறுவனங்கள் மூலமாக எடுக்கப்பட்ட 27,862 பணி விதை மாதிரிகளில் 27,762 பணி விதை மாதிரிகளுக்கும், விதைப் பரிசோதனை நிலையங்களின்மூலம், மொத்தம் 82,520 விதை மாதிரிகளின் தரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன. விதை பகுப்பாய்வின்மூலம் கண்டறியப்பட்ட 2,494 தரமற்ற விதை மாதிரிகளில், 1,516 விதை மாதிரிகளுக்குத் துறை நடவடிக்கை மூலமாக ரூபாய் 346 இலட்சம் மதிப்புள்ள 459 மெட்ரிக் டன் அளவிலான விதை குவியல்களுக்கு விற்பனை தடையும், 174 விதை மாதிரிகளுக்கு நீதிமன்றம் வாயிலாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், தரமற்ற விதைகள் மற்றும் பிற விதி மீறல்களுக்காக ரூ.1,807 இலட்சம் மதிப்புள்ள 2,165 மெட்ரிக் டன் அளவிலான விதைக் குவியல்களுக்கு விற்பனைத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.*

*மேலும், 2023-2024 ஆம் ஆண்டில் 75,000 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளவும், 60,000 ஆய்வு விதை மாதிரிகளில் தர பரிசோதனை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.*

### 7.3 விதைப் பரிசோதனை

*விதையின் தரத்தை ஆய்வு செய்து உறுதி செய்வதற்காக, அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்களில் இந்திய குறைந்தபட்ச விதை சான்றளிப்பு தர நிலைகளின்*

(IMSCS) அடிப்படையில் ஆய்வகங்களில் விதை தர நிலைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

தற்போது நமது மாநிலத்தில் 34 அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் உள்ளன. விதைச் சான்றளிப்பு பிரிவிலிருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள், விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் ஆய்வு மாதிரிகள் மற்றும் விவசாயிகள், விதை விற்பனையாளர்கள், விதை உற்பத்தியாளர்கள்மூலம் அனுப்பப்படும் பணி விதை மாதிரிகள் போன்ற மூன்று வகை விதை மாதிரிகள் அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்களில் பரிசோதிக்கப்படுகின்றன.

**அட்டவணை 7.3: 2022-23 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகள்**

| வ. எண் | மாதிரிகளின் வகைகள் | இலக்கு (எண்கள்) | சாதனை (எண்கள்) |
|---|---|---|---|
| 1 | சான்று விதை மாதிரி | 26,000 | 35,066 |
| 2 | ஆய்வு விதை மாதிரி | 54,500 | 54,758 |
| 3 | பணி விதை மாதிரி | 26,500 | 27,762 |
| | **மொத்தம்** | **1,07,000** | **1,17,586** |

மேலும், 2023-2024 ஆம் ஆண்டில் 1,15,000 விதை மாதிரிகள் ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநில விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் (Referral Lab) பிற விதைப் பரிசோதனை நிலையங்களிலிருந்து பெறப்படும் ஆய்வு மாதிரிகளில் முளைப்புத் திறன் பரிசோதனை செய்யப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் 1,800 விதை மாதிரிகள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2023-2024—ல் 1,900 விதை மாதிரிகள் பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

Bt ஆய்வகத்தில் பருத்திக்கான Bt நச்சுத்தன்மையைக் கண்டறியும் பரிசோதனை செய்யப்படுகிறது. Bt சோதனைக்கான விதை மாதிரிகள் விதை ஆய்வாளர்களால் அனுப்பப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 2,282 விதை மாதிரிகளுக்கு Bt

2023 ஏப்ரல் 5]

பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2023—24—ல் 2,300 விதை மாதிரிகளில் Bt பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.3.1 சர்வதேச விதைப் பரிசோதனை குழும அங்கீகாரம் பெற்ற விதைப் பரிசோதனை நிலையம் (ISTA)

கோயம்புத்தூர் விதை பரிசோதனை நிலையம் 2014 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தினை தலைமையிடமாகக் கொண்ட சர்வதேச பரிசோதனைக் குழுமத்தின் (ISTA) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. பொதுத் துறை விதை பரிசோதனை நிலையங்களில் சர்வதேச விதை பரிசோதனைக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற இந்தியாவின் முதல் ஆய்வகமாய் கோயம்புத்தூர் விதை பரிசோதனை நிலையம் திகழ்கிறது. இப்பரிசோதனை நிலையம், தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறி பயிர்களில் விதை மாதிரிகள் எடுக்கவும், அவற்றின் முளைப்புத் திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற பயிர் இனங்களைக் கண்டறியும் பரிசோதனைக்காகவும் (OSD), சர்வதேச விதை பரிசோதனைக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

சர்வதேசத் தரத்திற்கு விதை மாதிரிகளை உறுதி செய்யும் பொருட்டு, ஆரஞ்சு நிற விதைக் குவியல் சான்றிதழ் மற்றும் நீல நிற விதை மாதிரி சான்றிதழ் ஆகியவற்றை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கும் தகுதி இந்த ஆய்வகம் பெற்றுள்ளது.

சர்வதேச விதைப் பரிசோதனைக் குழும (ISTA) அங்கீகாரம் பெற்றது முதல் 91 விதை மாதிரிகளுக்கு நீல நிற விதை மாதிரி சான்றிதழ் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் 12 விதை மாதிரிகளுக்கு நீல நிற விதை மாதிரி சான்றிதழ் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டில் 15 விதை மாதிரிகளுக்கு நீல நிற விதை மாதிரி சான்றிதழ் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.3.2. மாநில மரபணு ஆய்வகம் (DNA Fingerprinting Laboratory)

விவசாயிகளுக்குத் தரமான விதைகள் விரைவாகவும், உரிய காலத்திலும் கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு, உயர்தர தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய மாநில மரபணு ஆய்வகம்,

கோயம்புத்தூரில் 2007 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மரபணு பரிசோதனை முறையில் நெல் இனத்தூய்மை பரிசோதனை முடிவுகள் நான்கு முதல் ஐந்து நாட்களில் மிகத் துல்லியமாகக் கண்டறியப்படுகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாக நிறுவப்பட்ட மரபணு பரிசோதனை நிலையம் இதுவே ஆகும். மேலும், 2014 இல் தமிழ்நாடு அரசினால் "மாநில மரபணு ஆய்வகம்" என அறிவிக்கைச் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம் தற்போது தமிழ்நாட்டில் முதன்மையாகப் பயிரிடப்படும் அறிவிக்கைச் செய்யப்பட்ட 27 நெல் இரகங்களுக்கு SSR மரபணு குறியீட்டைப் பயன்படுத்தி மிகத் துல்லியமாகவும், விரைவாகவும் இனத்தூய்மை பரிசோதனை செய்யும் திறன் கொண்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில், 205 நெல் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும், 2023-2024 இல் 250 நெல் விதை மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.3.3. பயிர் வளர்ப்பு பரிசோதனைப் பண்ணை

பயிர் வளர்ப்பு பரிசோதனைப் பண்ணை 1997 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் கண்ணம்பாளையத்தில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டு, பயிர் இரகங்கள் மற்றும் வீரிய இரகங்களில் இனத்தூய்மை ஆய்வு செய்யப்படுகிறது. விதை தொகுப்புகளிலிருந்து பெறப்பட்ட விதை மாதிரிகளின் இனத்தூய்மை இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று தரங்களுக்குட்பட்டு (IMSCS) ஆய்வு செய்யப்படுகிறது. இனத்தூய்மை ஆய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பயிர்களின் புற வெளிப்பாட்டு தரங்களைக் கொண்டு குறிப்பிட்ட பயிர் இரகங்கள் மற்றும் வீரிய இரகங்களில் இனத்தூய்மை ஆய்வு செய்யப்படுகிறது. இனத்தூய்மை பரிசோதனை பண்ணைக்கு ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் சான்று விதை மாதிரிகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் 2,700 விதை மாதிரிகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2023-2024 இல் 3,000 விதை மாதிரிகளில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.4 பயிற்சி

தரமான விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகத்தினை மேம்படுத்த இத்துறையின் பயிற்சிப் பிரிவின்மூலம் துறை

2023 ஏப்ரல் 5]

அலுவலர்கள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள், விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் 47,826 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2023-2024 ஆம் ஆண்டில் 50,000 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 7.5 அங்ககச் சான்றளிப்பு

தமிழ்நாடு அரசால் 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையானது, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) அங்கீகாரத்துடன் அங்கக விளைபொருட்களுக்கு வர்த்தக முறைக்கு ஏற்ப, சான்றளிப்புப் பணிகளை செயல்படுத்தி வருகின்றது.

வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின்கீழ் வரும் தேசிய அங்கக உற்பத்தித் திட்டக் கொள்கைகளின் அடிப்படையில் இத்துறை செயல்படுகிறது. தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையால் வழங்கப்படும் சான்றிதழ் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவிட்ஸர்லாந்து நாட்டின் சுவிஸ் அங்ககத் தர நிலைகளுக்கு ஒத்ததாகும். தேசிய அங்கக உற்பத்தித் திட்டச் சான்றிதழின் அமைப்பு, அங்கக விளைபொருட்களை இந்தியாவிற்குள்ளும், மற்ற நாடுகளுக்கும் சந்தைப்படுத்த உதவுகிறது. அங்ககச் சான்றிதழ் ஒரு வருட காலத்திற்குச் செல்லுபடியாகும். அங்கக விதிகள் செயற்கை இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள், மரபணு மாற்றுப் பயிர்களைத் தவிர்ப்பதை உறுதி செய்கிறது.

### 7.5.1 பங்களிப்பு உத்தரவாதத் திட்டம்

ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வரும் அங்ககப் பண்ணையம் மற்றும் இயற்கை வேளாண்மைக்கான தேசிய மையம்மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின்படி, 2022-2023 ஆம் ஆண்டு முதல் பங்களிப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ் தனி நபர் (விவசாயிகள்) மற்றும் குழுக்களுக்கு அங்ககச் சான்றிதழை வழங்குவதற்கான குழு பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது பங்களிப்பு உத்தரவாதத் திட்டத்தின் தர நிலைகளின் கொள்கைகளின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன. அங்ககச் சான்று பெற்ற விவசாயிகள் அங்கக விளைபொருட்களை உள்நாட்டுச் சந்தையில் விற்க அதிகாரம் வழங்குகிறது.

[2023 ஏப்ரல் 5

*2022-2023 ஆம் ஆண்டில் 86,285 ஏக்கர் அங்ககச் சான்றளிப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது, மாநிலம் முழுவதும் பதிவு செய்யப்பட்ட மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை 46,127. இதில், 2,825 தனி நபர் விவசாயிகள், 583 உழவர் குழுக்களில் 43,302 விவசாயிகள், 24 அங்ககப் பதனிடும் மையங்கள் மற்றும் 22 அங்கக வணிகர்கள் அடங்குவர். தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளைப் பதிவு செய்யும் ஒரே சான்றிதழ் அமைப்பு தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை ஆகும்.*

**அட்டவணை 7.4. அங்ககச் சான்றளிப்பின் தற்போதைய நிலை**

| வ. எண் | நிலை | விவசாயிகளின் எண்ணிக்கை | குழுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *1.* | *முதல் ஆண்டு மாறுதல் காலம்* | *1991* | *576 (42,272 விவசாயிகள்)* |
| *2.* | *இரண்டாம் ஆண்டு மாறுதல் காலம்* | *480* | *4 (678 விவசாயிகள்)* |
| *3.* | *அங்கக நிலை* | *354* | *3 (352 விவசாயிகள்)* |

*தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையானது ரூ.166 இலட்சம் மதிப்பிலான 223.85 மெட்ரிக் டன் அங்ககப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக பதனிடுவோர் மற்றும் வணிகர்களுக்கு சான்றளித்துள்ளது. தேங்காய், தூய தேங்காய் எண்ணெய், காபி, முருங்கை, தேயிலை, கோகோ, மஞ்சள் மற்றும் வெல்லம் ஆகியவற்றிற்கு ஏற்றுமதிக்கான சான்றளிப்பை வழங்கியுள்ளது.*

*தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையில், பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் விளை நிலங்களில் எஞ்சிய நச்சுத்தன்மைக் குறித்து மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகளுக்குட்படாத காரணத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 265 விவசாயிகளிடமிருந்து அங்கக விளைபொருட்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. ஆய்வு முடிவுகளின்படி, 262 விவசாயிகள் அங்கக நிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டனர். மீதமுள்ள மூன்று விவசாயிகள் மாறுதல் காலத்திற்குத் தரம் இறக்கப்பட்டனர்.*

2023 ஏப்ரல் 5]

## அட்டவணை 7.5 ஆண்டு வாரியாக தேசிய அங்கக உற்பத்தித் திட்டத்தில் பதிவு விவரம்

(ஏக்கரில்)

| வ எண் | மாவட்டம் | 2018-2019 | 2019-2020 | 2020-2021 | 2021-2022 | 2022-2023 |
|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 51.49 | 5.1 | 829.46 | 811.00 | 656.00 |
| 2 | கோயம்புத்தூர் | 1526.21 | 1905.95 | 3905.00 | 3645.00 | 3633.00 |
| 3 | செங்கல்பட்டு | 0 | 0 | 1357.16 | 1266.00 | 1301.20 |
| 4 | கடலூர் | 2739.86 | 2251.05 | 1799.00 | 1755.02 | 1013.60 |
| 5 | தருமபுரி | 1468.00 | 1359.45 | 7687.00 | 7384.19 | 3526.00 |
| 6 | திண்டுக்கல் | 1209.97 | 1924.97 | 3585.00 | 9518.70 | 7556.62 |
| 7 | ஈரோடு | 1170.17 | 1136.02 | 3982.02 | 3425.00 | 3575.50 |
| 8 | கள்ளக்குறிச்சி | 0 | 0 | 2307.12 | 2375.00 | 192.81 |
| 9 | காஞ்சிபுரம் | 2063.81 | 1164.34 | 894.01 | 1752.00 | 1070.68 |
| 10 | கன்னியாகுமரி | 10.48 | 1.79 | 403.00 | 796.12 | 3562.53 |
| 11 | கரூர் | 1503.77 | 1371.30 | 1323.51 | 2044.92 | 2168.28 |
| 12 | கிருஷ்ணகிரி | 1101.51 | 48.42 | 7063.94 | 8082.00 | 2629.11 |
| 13 | மதுரை | 750.54 | 384.52 | 4193.55 | 3841.50 | 1954.72 |
| 14 | மயிலாடுதுறை | 0 | 0 | 514.12 | 1436.10 | 759.24 |
| 15 | நாகப்பட்டினம் | 2650.32 | 113.00 | 2769.31 | 1004.56 | 1083.63 |
| 16 | நாமக்கல் | 132.52 | 980.00 | 1640.00 | 5275.46 | 577.64 |
| 17 | பெரம்பலூர் | 61.35 | 53.15 | 805.56 | 1372.8 | 1062.69 |
| 18 | புதுக்கோட்டை | 104.02 | 118.87 | 3120.68 | 3796.62 | 1951.68 |
| 19 | இராமநாதபுரம் | 3382.25 | 3374.16 | 1850.66 | 2389.00 | 3235.07 |
| 20 | ராணிப்பேட்டை | 0 | 0 | 1531.00 | 1705.00 | 2367.97 |
| 21 | சேலம் | 117.25 | 160.78 | 3701.00 | 9043.66 | 7443.32 |
| 22 | சிவகங்கை | 428.42 | 292.76 | 1146.00 | 1650.00 | 1671.57 |
| 23 | தஞ்சாவூர் | 531.30 | 205.78 | 785.38 | 1963.06 | 1647.98 |
| 24 | நீலகிரி | 26.85 | 5455.21 | 6447.00 | 6428.00 | 1606.26 |
| 25 | தேனி | 221.14 | 180.80 | 3973.00 | 3804.51 | 3787.35 |
| 26 | தென்காசி | 0 | 0 | 975.00 | 1483.29 | 1221.95 |
| 27 | திருப்பத்தூர் | 0 | 0 | 2144.00 | 2065.38 | 1498.05 |

| வ எண் | மாவட்டம் | 2018-2019 | 2019-2020 | 2020-2021 | 2021-2022 | 2022-2023 |
|---|---|---|---|---|---|---|
| 28 | திருவள்ளூர் | 287.03 | 328.54 | 1473.21 | 1484.00 | 1676.94 |
| 29 | திருவண்ணாமலை | 2248.01 | 404.54 | 3424.00 | 5810.56 | 4431.14 |
| 30 | தூத்துக்குடி | 124.76 | 129.82 | 472.55 | 810.54 | 747.46 |
| 31 | திருநெல்வேலி | 722.94 | 761.38 | 2734.00 | 3201.61 | 3399.75 |
| 32 | திருப்பூர் | 1692.56 | 897.07 | 4360.00 | 4124.00 | 4125.00 |
| 33 | திருவாரூர் | 245.34 | 75.98 | 561.19 | 829.02 | 1061.60 |
| 34 | திருச்சி | 127.09 | 201.34 | 1568.14 | 1614.72 | 1574.34 |
| 35 | வேலூர் | 1178.07 | 1201.73 | 2221.84 | 2339.06 | 1785.24 |
| 36 | விழுப்புரம் | 2517.28 | 1656.605 | 3120.00 | 2722.60 | 2415.16 |
| 37 | விருதுநகர் | 1292.93 | 370.24 | 2667 | 2546.00 | 2314.51 |
| | மொத்தம் | 31687.24 | 28514.69 | 93334.44 | 115596.51 | 86285.58 |

**அட்டவணை. 7.6. 2022-23 ஆம் ஆண்டில் பங்களிப்பு உத்தரவாதத் திட்டத்தில் பதிவு விவரம்**

(ஏக்கரில்)

| வ. எண் | மாவட்டம் | குழுக்களின் எண்ணிக்கை | விவசாயிகளின் எண்ணிக்கை | பரப்பு பதிவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 2 | 250 | 1,075.1 |
| 2 | தருமபுரி | 15 | 193 | 2,181.8 |
| 3 | திண்டுக்கல் | 5 | 86 | 2,781.9 |
| 4 | நாகப்பட்டினம் | 3 | 15 | 47.77 |
| 5 | புதுக்கோட்டை | 4 | 80 | 213.78 |
| 6 | தேனி | 2 | 63 | 196.74 |
| 7 | திருவள்ளூர் | 3 | 15 | 36.433 |
| 8 | திருப்பூர் | 5 | 176 | 934.1 |
| | மொத்தம் | 39 | 878 | 7,545.18 |

*2023-2024 ஆம் ஆண்டில் தேசிய அங்கக உற்பத்தித் திட்டம் மற்றும் பங்களிப்பு உத்தரவாதத் திட்டங்களின்மூலம், 1,25,000 ஏக்கர் நிலப்பரப்பை அங்ககச் சான்றளிப்பின்கீழ், பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

*2023 ஏப்ரல் 5*]

## 7.6 விதை உற்பத்தி, அமலாக்கம், விதைச் சான்றுக்கான மென்பொருள்: SPECS (Seed Production, Enforcement and Certification System):

*விதைச் சான்றளிப்புத் துறையின் அனைத்துத் தொழில்நுட்ப நடவடிக்கைகளைக் கணினிமயமாக்கும் பொருட்டு, பிரத்தியேகமான SPECS எனும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் விதைச் சான்றளிப்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவும், விதைச் சான்றளிப்புத் துறையின் அனைத்துப் பிரிவுகளின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதற்கும், முறையான கண்காணிப்பிற்கும், வெளிப்படைத் தன்மையுடன் இயங்கவும் உதவுகிறது. இந்தியாவிலுள்ள விதைச் சான்றளிப்பு முகமைகளில் தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக இந்த மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது ஒரு சிறப்பம்சமாகும்.*

## 7.7 பணிக் குழு

*விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறையானது மொத்தம் 345 தொழில்நுட்பப் பணியாளர்களையும், 500 அமைச்சுப் பணியாளர்களையும் கொண்டு சிறப்பாக இயங்கி வருகிறது.*

**அட்டவணை.7.7. ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம்**

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| அ. தொழில்நுட்ப அலுவலர்கள் | 345 |
| விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர் | 1 |
| விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இணை இயக்குநர் | 1 |
| விதை ஆய்வு இணை இயக்குநர் | 1 |
| விதை ஆய்வு துணை இயக்குநர் | 15 |
| தர மேலாளர் | 1 |
| விதைச் சான்று உதவி இயக்குநர் (விதை பகுப்பாய்வு மற்றும் பயிற்சி) | 1 |

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர் | 29 |
| மதிப்பீட்டாளர் (அங்ககச் சான்று) | 1 |
| விதைப் பரிசோதனை அலுவலர் | 7 |
| விதைச் சான்று அலுவலர் | 119 |
| விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று ஆய்வாளர்கள் | 26 |
| வேளாண்மை அலுவலர் | 63 |
| விதை ஆய்வாளர் | 70 |
| அங்ககச் சான்று ஆய்வாளர் | 10 |
| ஆ. அமைச்சுப் பணியாளர்கள் | 500 |
| **மொத்த பணியாளர்கள் (அ + ஆ)** | 845 |

## 8. தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை

*8.1. நீர்வடிப் பகுதிகளைப் பங்கேற்பு அணுகுமுறையில் மேம்படுத்துவதன்மூலம் தரிசு நிலங்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975—ன்கீழ் நிறுவப்பட்டது. பின்னர், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின்கீழ் மாநில அளவிலான இணைப்பு முகமை (*SLNA*) அமைக்கப்பட்டு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு திட்டங்களான வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (*DPAP*), ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் (*IWDP*), தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (*NWDPRA*), ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (*IWMP*) ஆகியவை இதன் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுத்தப்பட்டன.*

*தற்போது, கீழ்க்கண்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் இம்முகமையின்மூலம் செயல்படுத்தப்படுகின்றன:*

1. *நீர்வடிப் பகுதி மேம்பாடு — பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - 2.0 —* Watershed Development Component - Pradhan Mantri Krishi Sinchayee Yojana *2.0 (*WDC - PMKSY *2.0)*

2023 ஏப்ரல் 5]

2. நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி — NABARD Assisted Watershed development Fund (WDF)

3. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின்கீழ் சேலம், விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப் பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம் — National Adaptation Fund for Climate Change (NAFCC).

மேலும், மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக (Nodal Agency) தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை அறிவிக்கப்பட்டு ஒன்றிய அரசு, மாநில அரசுகள், திட்ட செயலாக்கத் துறைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது.

**1. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - Rashtriya Krishi Vikas Yojana (RKVY) / National Agriculture Development Programme (NADP)**

i. RKVY விரிவான திட்ட அறிக்கை அடிப்படையிலான திட்டங்கள்

ii. மானாவாரிப் பகுதி மேம்பாடு—Rainfed Area Development (RAD)

iii. மண் நலம் மற்றும் மண்வளம் — Soil Health and Fertility (SHF)

iv. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் — Paramparagat Krishi Vikas Yojana (PKVY)

v. வேளாண் காடுகள்— Agro Forestry

vi. புகையிலை பயிருக்கு மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் - Crop Diversification Programme (CDP)

**2. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் (PMKSY)**

i. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் — துளி நீரில் அதிக பயிர் — Pradhan Mantri Krishi Sinchayee Yojana — Per Drop More Crop (PMKSY - PDMC)

ii. *பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - வயல்தோறும் பாசனம்* — Pradhan Mantri Krishi Sinchayee Yojana — Har Khet Ko Paani (PMKSY — HKKP)

iii. *விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டம்* — Accelerated Irrigation Benefits Programme (AIBP)

## 8.2. நீர்வடிப் பகுதி மேம்பாடு-பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – 2 . 0 (WDC – PMKSY 2 .0)

*இத்திட்டமானது, பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் 275 நீர்வடிப் பகுதிகளில் 27 திட்டங்களை ரூ.286.73 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-2022 முதல் 2025-2026 வரையிலான ஐந்து ஆண்டுக் காலத்தில் 1.30 இலட்சம் எக்டர் பரப்பில் செயல்படுத்த ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:*

i. *பொருளாதாரம்* (Economy)—*இயற்கை வளங்களை சமச்சீரான, ஒருங்கிணைந்த, நிலையான, திறன்மிகு முறையில் பயன்படுத்துவதன்மூலம் பல்வேறு பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன், நீர்வடிப் பகுதிகளிலுள்ள கிராம சமுதாயத்தின் வருமானத்தை மேம்படுத்துதல்.*

ii. *சூழலியல்* (Ecology)—*சமூக அமைப்புகளை உருவாக்கி எளிய, சாத்தியமான தொழில்நுட்பங்களையும் நடைமுறைகளையும் ஊக்குவிப்பதன்மூலம் இயற்கை வளங்களை (சூழல் சமநிலையை மீட்டெடுக்க) பயன்படுத்துதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல்.*

iii. *சமபங்கு* (Equity)—*ஏழை, நிலமற்றோர், மாற்றுத் திறனாளிகள் பெண்களுக்கு மேம்படுத்தப்பட்ட நிலம், நீர் போன்ற வளங்களில் சமபங்கீடு கிடைப்பதை உறுதிப்படுத்துவதோடு, பல்வேறு சமுதாய நிறுவனங்களில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.*

*2023 ஏப்ரல் 5*]

### 8.2.1 திட்ட செயலாக்க அமைப்பு

தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையானது இத்திட்ட செயலாக்கத்திற்கு மாநில அளவிலான இணைப்பு முகமையாக (State Level Nodal Agency) செயல்படும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆறு மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைகள் (District Watershed Development Agency) வேளாண்மை, வேளாண் பொறியியல் துறை தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திட்டத்திற்கும் களப் பணிகளை மேற்கொள்வதற்காக நீர்வடிப் பகுதி மேம்பாட்டு குழு (Watershed Development Team) வேளாண்மை, சமூகவியல் (மாவட்ட அளவில் மட்டும்) மற்றும் பொறியியல் வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பல்வேறு பணிக்கூறுகளை செயல்படுத்துவதற்காகக் கிராமச் சபையின் துணைக் குழுவாக நீர்வடிப் பகுதிக் குழு (Watershed Committee) கிராம அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

### 8.2.2 திட்டச் செயல்பாடுகள்

இத்திட்டம் மூன்று கட்டங்களாக ஐந்து வருடங்களில் செயல்படுத்தப்படும். தற்போது இத்திட்டம் இரண்டாம் கட்ட நிலையில் கீழ்க்கண்ட இனங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

| இனம் | செயல்பாடுகள் |
|---|---|
| இயற்கை வள மேம்பாட்டு பணிகள் (Natural Resources Management) | பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க்குட்டைகள், சிறு, நடுத்தர, பெரிய தடுப்பணைகள், கிராம குட்டைகள், ஊருணிகள், நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாருதல், கம்பிவலை தடுப்பணைகள், நீர் செறிவூட்டும் அமைப்புகள், கிணறுகளைச் சீரமைத்தல், அமிழ்வு நீர்குட்டைகள். |

| இனம் | செயல்பாடுகள் |
|---|---|
| பண்ணை உற்பத்தி அமைப்பு பணிகள் (Farm Production System) | தோட்டக்கலைப் பயிர்கள், வேளாண் காடுகள், மலர் பயிர்கள், தீவனப் புல் வளர்த்தல், பயிர் செயல் விளக்கங்கள், மண் புழு உரம் தயாரித்தல், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், பேட்டரி தெளிப்பான், தார்ப்பாலின் மற்றும் புல்வெட்டும் கருவி விநியோகம், பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்த்தல், வெள்ளாடு/ செம்மறியாடு வழங்குதல், தேனீ வளர்ப்புப் பெட்டிகள் விநியோகம், கோழி வளர்த்தல் |
| நிலமற்றவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகள் (Livelihood Supporting System) | ஆயத்த ஆடை தயாரித்தல், தையல் இயந்திரம், கறவைமாடு வழங்குதல், வீடுகளில் கோழி வளர்த்தல், உணவுப்பொருள் தயார் செய்தல், வெதுப்பகம், பெட்டிக்கடை, கரி தயாரித்தல், உணவு தயாரித்து வழங்கல், நிகழ்ச்சி மேலாண்மை, கைவினைப் பொருள்கள் தயாரித்தல், ஆடு வளர்த்தல், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வழங்குதல், தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, தேனீ பெட்டி விநியோகம், இட்லி / தோசை மாவு அரைக்கும் இயந்திரம் வழங்குதல், சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் |
| திறன் மேம்பாட்டுப் பணிகள் (Institution Capacity Building) | பயிற்சி வழங்குதல் |

2022-2023 ஆம் ஆண்டில், ரூ.71.4 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டு ரூ.78.50 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

*2023 ஏப்ரல் 5*]

## 8.3. நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதித் திட்டம் (NABARD Assisted by Watershed Development Fund)

*இத்திட்டம் 2004 ஆம் ஆண்டு முதல் நபார்டு வங்கி ஒப்புதல் வழங்கிய அரசு சாரா நிறுவனங்களின்மூலம் (NGO) செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நீர்வடிப் பகுதித் திட்டங்கள் நபார்டு வங்கியின் மாநில அளவிலான வழிகாட்டுதல் குழுவினால் (State Level Steering Committee of NABARD) அனுமதியளிக்கப்பட்டு, திறன் மேம்பாட்டு கட்டத்திற்குப் (Capacity Building Phase) பின் முழு செயலாக்க கட்டத்தை (Full Implementation Phase) செயல்படுத்திட தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைக்கு ஒப்படைக்கப்படுகின்றன. இதற்கான செலவினத்திற்கு மாநில அரசும் நபார்டு வங்கியும் சரிசமமாக பங்களிக்கின்றன.*

*இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய இனங்கள்— சமவெளி வரப்புக் குழிகள், பண்ணைக் குட்டைகள், கசிவுநீர்க் குட்டைகள், அமிழ்வுநீர்க் குட்டைகள், வேளாண் காடுகள், பழமரக் கன்றுகள் வளர்த்தல் போன்ற செயல்பரப்புப் பணிகள், வடிகால் அமைப்புப் பணிகளான குளங்களைத் தூர்வாருதல் மற்றும் வாய்க்கால்களைச் சீர்படுத்துதல், நிலமற்ற மகளிருக்கு வாழ்வாதார உதவிகள், பயிற்சி வழங்குதல்*

### 8.3.1 தற்போது செயல்படுத்தப்படும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதித் திட்டங்கள்

| வ. எண் | மாவட்டம் | திட்டம் | வட்டாரம் |
|---|---|---|---|
| 1 | மதுரை | 1 | கேசம்பட்டி |
| 2 | திருச்சிராப்பள்ளி | 1 | அய்யம்பாளையம் |
| 3 | திருவள்ளூர் | 1 | கொப்பூர் |
| 4 | புதுக்கோட்டை | 2 | ஒடுக்கூர், மாம்பட்டி |
| 5 | கடலூர் | 1 | காரைக்காடு |
| 6 | திருவண்ணாமலை | 1 | சேத்துப்பட்டு |
| 7 | சிவகங்கை | 1 | இடையாமேலூர் |
| | மொத்தம் | 8 | |

TRUTH ALONE TRIUMPHS

இதுவரை ரூ.3.11 கோடி நிதி விடுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 8.4. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின்கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப் பகுதிகளில் பருவநிலை பாதுகாப்பு திட்டம். (Climate Proofing of Rainfed Watershed in Salem and Virudhunagar districts of Tamil Nadu under National Adaptation Fund for Climate Change).

இத்திட்டம் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதியுதவியுடன் (Grants—in—aid), நபார்டு வங்கியை தேசிய செயலாக்க நிறுவனமாகவும் (National Implementing Entity), தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையைச் செயலாக்க நிறுவனமாகவும் (Executive Entity) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம், விருதுநகர் மாவட்டங்களில் 15,990 எக்டர் பரப்பளவில் ரூ.23.80 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திட்ட செயலாக்கக் காலம் 2019-2020 முதல் 2022-2023 வரை ஆகும்.

### 8.4.1 திட்டத்தின் நோக்கம்

1. மண், நீர் பாதுகாப்புமூலம் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தகவமைத்தல்.
2. பல்வகைப் பயிர்களை ஊக்குவித்தல், மாற்று வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதன்மூலம் நீடித்த நிலையான வாழ்வாதாரங்களை உறுதி செய்தல்.
3. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் திறனை உருவாக்குதல்.

### 8.4.2. திட்டத்தின் இனங்கள்

கிராம மக்களுடன் இணக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக, நீர்வடிப் பகுதியின் மிக முக்கியத் தேவையான நீர் சேமிப்புத் தொட்டிகள் நுழைவுக் கட்டப் பணியாக அமைக்கப்பட்டுள்ளன. திட்ட செயலாக்கத்தின் தொடர்ச்சியாக, நீர்வள, மண்வள

*2023 ஏப்ரல் 5]*

*மேலாண்மைச் செயல்பாடுகளான தடுப்பணைகள் அமைத்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஏற்படுத்துதல் ஆகியனவும், வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், குறு, சிறு தொழில் செயல்பாடுகளான மண்புழு உரம் தயாரித்தல், புழக்கடைக் கோழி வளர்ப்பு ஆகியனவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பருவநிலை பாதுகாப்பு செயல்பாடுகளான மாற்றுப் பயிர்கள், பருவகாலமாற்ற நிலையைத் தாங்கக்கூடிய பயிர் இரகங்கள், பொது மற்றும் தனியார் நிலங்களில் காடு வளர்த்தல், சூரிய ஒளியால் இயங்கும் நீர் இறைப்பான், உயிரியல் முறையில் மக்கும் உரம் தயாரிப்பு, உயிரி எரிபொருள் அமைப்புகள், வானிலை கண்காணிப்பு நிலையங்கள் ஆகியன வழங்கப்படுகின்றன. 2022—2023 ஆம் ஆண்டு வரை ரூ.11.52 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.10.80 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

## 8.5. நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

**இலக்கு (Goal):** *6 பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி*

**குறிக்கோள் (Target):** *6.6 மலைகள், காடுகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட நீர் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்து, மீட்டெடுத்தல்.*

**மாநில குறிகாட்டி (State Indicator Framework):** *6.6.4 பண்ணைக் குட்டைகள்/ தடுப்பணைகள்/ கசிவுநீர் குட்டைகள், இதர பணிகள் உருவாக்கும் மற்றும் புதுப்பித்தல்/தற்போதுள்ள கட்டமைப்புகள் புதுப்பித்தல் பணிகளின் எண்ணிக்கை.*

*2023-2024 ஆம் ஆண்டில் 4,812 மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள், 3,06,347 மீட்டர் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகளை ஏழு மாவட்டங்களில் பிரதம மந்திரியின் விவசாய நீர்ப் பாசனத் திட்டம் 2.0 திட்டத்தின்கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.*

———

# இணைப்பு II

*(178 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

# மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

### 1. முன்னுரை

*கால்நடை பராமரிப்பு, வேளாண்மையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பது மட்டுமின்றி மூன்றில் இரண்டு பங்கு கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கும் ஆதாரமாக உள்ளது. கால்நடை வளர்ப்புத் தொழில் கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிப்பதுடன், அதிக எண்ணிக்கையிலான சிறிய, நடுத்தர, நிலமற்ற விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பினை வழங்குவதன்மூலம், அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வேகமாக வளர்ந்து வரும் தொழிலாகும்.*

*கால்நடைகள் விவசாயிகளுக்கு இயற்கையான மூலதனமாகவும், அவற்றின் சந்ததிகள் வங்கியிலிருந்து கிடைக்கும் வட்டியைப் போன்றும், விவசாயம் பொய்க்கும் காலத்திலும், இயற்கை இடர்பாடுகளின்போதும் ஏற்படும் வருமான நிலைகுலைவிற்குத் தேசிய காப்பீடாகவும் விளங்குகின்றன. மேலும், கால்நடைகள் பால், இறைச்சி மற்றும் முட்டை போன்ற ஊட்டச்சத்து அதிகம் உள்ள பொருட்களையும், இயற்கை உரமாகவும், வீட்டு உபயோக எரிபொருளாகவும் விளங்கும் சாணத்தையும், தோலையும் விவசாயிகளுக்கு இழுவைத் திறனையும் அளிப்பதோடு மட்டுமல்லாமல் கிராமப்புற மக்களுக்கு நிரந்தர வருமானத்தையும் அளிக்கிறது. தனி நபர் வருமானம் அதிகரிப்பு, நகரமயமாதல், மக்களின் சுவை மற்றும் விருப்பங்களின் மாற்றம், உணவுப் பொருட்களின் சத்து குறித்த அதிகமான விழிப்புணர்வு காரணமாகக் கால்நடைகளிலிருந்து கிடைக்கும் பொருட்களின் தேவை கடந்த பத்தாண்டுகளில் அதிகரித்துள்ளது. மேலும்,*

*2023 ஏப்ரல் 5*]

*கால்நடை வளர்ப்புத் தொழில் அந்நிய செலாவணி வருமானத்தை ஈட்டும் வாய்ப்பு அதிகம் உள்ள தொழிலாகவும் விளங்குகிறது.*

*மாநிலம் முழுவதும் பரவியுள்ள பல்வேறு கால்நடை மருத்துவ நிலையங்கள், மருத்துவ சேவைகளை வழங்கி, கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. 3,819 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களில் அயலின மற்றும் கலப்பின உறைவிந்து குச்சிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயற்கை முறை கருவூட்டல்மூலம் நாட்டின பசுக்கள் மற்றும் எருமைகளின் தரம் உயர்த்தப்படுவதுடன் கலப்பின கால்நடைகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் வரையறுக்கப்படாத கால்நடைகளின் தரம் மேம்படுவதுடன், பால் உற்பத்தியும் சீரான அளவில் உயர்ந்துள்ளது. இதுதவிர, கிராமப்புற மக்களின் வருமானத்திற்குத் துணைபுரியும் வகையில் பல்வேறு பயனாளிகள் சார்ந்த திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

**அட்டவணை 1: முக்கிய கால்நடைப் பொருட்களின் உற்பத்தி விவரம்**

| பொருள் | இனம் | 2011-2012 | 2021-2022 |
|---|---|---|---|
| பால் (இலட்சம் மெட்ரிக் டன்களில்) | அயலினம் மற்றும் கலப்பின பசுக்கள் | 54.12 | 91.28 |
| | உள்நாட்டினம் மற்றும் வரையறுக்கப்படாத பசுக்கள் | 7.77 | 6.22 |
| | எருமை | 7.79 | 2.40 |
| | வெள்ளாடு | மதிப்பிடப் படவில்லை | 1.17 |
| | மொத்தம் | 69.68 | 101.07 |

[2023 ஏப்ரல் 5

| பொருள் | இனம் | 2011-2012 | 2021-2022 |
|---|---|---|---|
| முட்டை (மில்லியன்களில்) | நாட்டுக் கோழிகள் | 401.90 | 711.12 |
| | தரம் உயர்த்தப்பட்ட கோழிகள் | 11449.90 | 20118.80 |
| | வாத்துகள் | மதிப்பிடப் படவில்லை | 3.66 |
| | மொத்தம் | 11851.80 | 20833.59 |
| இறைச்சி (இலட்சம் மெட்ரிக் டன்களில்) | பசுக்கள் | 0.27 | 0.52 |
| | எருமைகள் | 0.07 | 0.03 |
| | செம்மறியாடுகள் | 0.26 | 0.68 |
| | வெள்ளாடுகள் | 0.38 | 0.70 |
| | பன்றிகள் | 0.12 | 0.04 |
| | கோழியினம் | 3.50 | 4.88 |
| | மொத்தம் | 4.60 | 6.86 |

ஆதாரம்: அடிப்படை கால்நடை பராமரிப்பு புள்ளியியல் —2022, ஒன்றிய அரசு வெளியீடு

**அட்டவணை 2: முக்கிய கால்நடை பொருட்கள் தனிநபருக்குக் கிடைக்கும் அளவு**

| பொருள் | 2011-2012 | | 2021-2022 | |
|---|---|---|---|---|
| | தனி நபருக்குக் கிடைக்கும் அளவு | இந்திய அளவில் பங்களிப்பு (%) | தனி நபருக்குக் கிடைக்கும் அளவு | இந்திய அளவில் பங்களிப்பு (%) |
| பால் | ஒரு நாளைக்கு 265 கிராம்கள் | 5.44 | ஒரு நாளைக்கு 362 கிராம்கள் | 4.57 |
| முட்டை | ஆண்டுக்கு 164 எண்ணிக்கை | 17.84 | ஆண்டுக்கு 273 எண்ணிக்கை | 16.08 |
| இறைச்சி | ஆண்டுக்கு 6.381 கிகி | 8.35 | ஆண்டுக்கு 8.977 கிகி | 7.38 |

*2023 ஏப்ரல் 5*]

*2021-2022-ல், கால்நடைத் துறையின் மொத்த மாநில மதிப்பு தற்போதைய விலையில் (முன்கூட்டிய மதிப்பீடு) ரூ.1,06,987 கோடியாக உள்ளது. கால்நடை பராமரிப்புத் துறையானது, தமிழ்நாட்டின் மொத்த மாநில மதிப்பில் (GSVA) சுமார் 5.63% பங்களிப்பையும், விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் 43.70% பங்களிப்பையும் வழங்குகிறது.*

## 2. தமிழகத்தின் கால்நடை வளம்

*தமிழகத்தின் கிராமப்புற மக்களின் சமூக, பொருளாதாரத் தரத்தை உயர்த்துவதில், மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.*

*தமிழ்நாட்டில் 245 இலட்சம் கால்நடைகள் மற்றும் 1207.80 இலட்சம் கோழிகள் (2019 கால்நடை கணக்கெடுப்பு) உள்ளன.*

**அட்டவணை 3: 20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி (2019) கால்நடைகள் மற்றும் கோழியினங்களின் எண்ணிக்கை**

| இனம் | கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|
| பசுவினம் | 95.19 |
| எருமையினம் | 5.19 |
| செம்மறியாடுகள் | 45.00 |
| வெள்ளாடுகள் | 98.88 |
| பன்றிகள் | 0.67 |
| மற்றவை (குதிரைகள், மட்டக் குதிரைகள், கோவேரி கழுதைகள், கழுதைகள் மற்றும் ஒட்டகம்) | 0.07 |
| **மொத்த கால்நடைகள்** | **245.00** |
| கோழிகள் மற்றும் இதர பறவைகள் (பண்ணை) | 995.16 |
| கோழிகள் மற்றும் இதர பறவைகள் (புறக்கடை) | 212.64 |
| **மொத்த கோழியினம்** | **1,207.80** |

[2023 ஏப்ரல் 5

20-வது கால்நடை கணக்கெடுப்பின் அடிப்படையில் தேசிய அளவில் தமிழ்நாடு, கோழியின எண்ணிக்கையில், முதலாவது இடத்திலும், செம்மறியாட்டின எண்ணிக்கையில் 4—வது இடத்திலும், வெள்ளாட்டின எண்ணிக்கையில் 7—வது இடத்திலும், பசுவின எண்ணிக்கையில் 13—வது இடத்திலும், எருமையின எண்ணிக்கையில் 14—வது இடத்திலும் உள்ளது.

மாநிலத்தின் உள்நாட்டின மாட்டினங்கள் பின்வருமாறு:

- காங்கேயம் (திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் கரூர் மாவட்டங்கள்)
- உம்பளாச்சேரி (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்கள்)
- ஆலம்பாடி (தருமபுரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்கள்)
- புலிக்குளம் (சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்)
- பர்கூர் (ஈரோடு மாவட்டம்)
- தோடா எருமைகள் (நீலகிரி மாவட்டம்)
- பர்கூர் எருமைகள் (ஈரோடு மாவட்டம்)

மேற்கூறிய உள்நாட்டினங்கள் மட்டுமல்லாது, கூடுதலான பால் உற்பத்தியைத் தரும் ஜெர்சி கலப்பின மாடுகள் (சமவெளிப் பகுதிகள்), ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பின மாடுகள் (மலைப் பிரதேசங்கள்) விவசாயிகளால் வளர்க்கப்படுகின்றன.

அதேபோல், மாநிலத்தின் உள்நாட்டின செம்மறி ஆடுகள் பின்வருமாறு:

- இராமநாதபுரம் வெள்ளை (தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்)
- சென்னை சிவப்பு (சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்)
- கீழக்கரிசல் (இராமநாதபுரம், விருதுநகர், மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்)
- வேம்பூர் (தூத்துக்குடி மாவட்டம்),

*2023 ஏப்ரல் 5*]

- *திருச்சி கருப்பு (பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்),*
- *கோயம்புத்தூர் (கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்கள்)*
- *நீலகிரி (நீலகிரி மாவட்டம்)*
- *செவ்வாடு (திருநெல்வேலி மாவட்டம்)*
- *கச்சைகட்டி கருப்பு (மதுரை மாவட்டம்)*
- *மேச்சேரி (சேலம், கரூர், தருமபுரி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்)*

*மேச்சேரி செம்மறி ஆட்டின மரபணு பண்புகளை மேம்படுத்த மேச்சேரி செம்மறி ஆடுகளின் மரபணு மேம்பாட்டுத் திட்டம் சேலம், கரூர், தருமபுரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*மாநிலத்தின் உள்நாட்டின வெள்ளாடுகள் பின்வருமாறு:*

- *கன்னி ஆடு (விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்)*
- *கொடி ஆடு (தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்)*
- *சேலம் கருப்பு (சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்)*

## 3. துறையின் குறிக்கோள்கள்

❖ *பசுவினங்களுக்கு அயலின மற்றும் கலப்பின உறைவிந்தைப் பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொண்டு, உள்ளூர் இன பசுக்களின் தரத்தையும், முர்ரா இன உறைவிந்தைப் பயன்படுத்தி எருமைகளின் தரத்தையும் உயர்த்துவது.*

❖ *உள்நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடங்களிலேயே பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவது.*

❖ *கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தித் திறனை பெருக்கி அதன்மூலம் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது.*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2023 ஏப்ரல் 5

❖ விஞ்ஞான அடிப்படையில் கால்நடை பராமரிப்பில் கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடைமுறைகளை ஒழுங்கமைத்தல்.

❖ கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் தேவையான நவீன மருத்துவச் சேவையை உரிய காலத்தே அளிப்பது.

❖ தடுப்பூசிகள் போடுதல், நோய் கண்காணிப்பு மற்றும் நோய் தீவிர கண்காணிப்பு வாயிலாக, கால்நடை நோய்களைத் தடுத்து அனைத்துக் கால்நடைகளின் உடல் நலனை உறுதி செய்வது.

❖ கிராமப்புற ஏழைகளின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது.

❖ கால்நடைகள்மூலம் மனிதர்களுக்கு பரவும் நோய்களைக் கண்டறிந்து மனிதர்களை நோயிலிருந்து பாதுகாப்பது.

❖ நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது.

❖ விவசாயிகளுக்கும், தொழில் முனைவோருக்கும் அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சியை அளிப்பது.

❖ இளைஞர்களிடையே தொழில் முனைவோர் திறன்களை உருவாக்குதல் மற்றும் வழங்குதல்

**4. துறையின் மைல்கற்கள்**

| | |
|---|---|
| 1799 | ➢ இந்தியாவில் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களின் இனப் பெருக்கத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கிந்திய கம்பெனியால் ஐந்து கால்நடை மருத்துவர்கள் லண்டனிலிருந்து வரவழைக்கப்பட்டு, இந்தியாவில் கால்நடை மருத்துவச் சேவை தொடங்கப்பட்டது. |
| 1892 | ➢ இராணுவ அதிகாரிகளைக் கொண்டு தனியாக கால்நடை மருத்துவத் துறை தொடங்கப்பட்டது. |

2023 ஏப்ரல் 5]

| | |
|---|---|
| 1903 | ➢ சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. |
| 1924 | ➢ இராணுவத்திடமிருந்து ஓசூர் கால்நடைப் பண்ணை எடுத்துக் கொள்ளப்பட்டு, கால்நடை இனப் பெருக்க நிலையம் நிறுவப்பட்டது. |
| 1948 | ➢ துறைத் தலைவர் பதவி, கால்நடை பராமரிப்பு இயக்குநர் என்று மாற்றப்பட்டது. திரவ விந்தைப் பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 1959 | ➢ நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. |
| 1969 | ➢ கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் தனியாகத் தொடங்கப்பட்டது. |
| 1970 | ➢ துறை மறுசீரமைக்கப்பட்டது. |
| 1975 | ➢ உறைவிந்துக் குச்சிகள் வாயிலாக செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப் படுத்தப்பட்டது. |
| 1977 | ➢ கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. |
| 1981 | ➢ ஈரோட்டில், கோழி நோய் ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டது. |
| 1999 | ➢ கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககம் அமைக்கப்பட்டது. |
| 2003 | ➢ தேசிய பசு மற்றும் எருமையின அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை தொடங்கப்பட்டது. (TNLDA) |
| 2005-2006 | ➢ நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்படுத்தும் நிதி—X வாயிலாக கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது. |
| 2006-2007 | ➢ கால்நடை காப்பீட்டுத் திட்டம் 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| 2007-2008 | ➢ தமிழ்நாடு கால்நடை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (TNVIIP) நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்—XI நிதியுதவியுடன் தொடங்கப்பட்டது. |
| 2008-2009 | ➢ கால்நடை காப்பீட்டுத் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. |
| 2009-2010 | ➢ கால்நடை காப்பீட்டுத் திட்டம் மேலும் ஐந்து மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இவ்வாறாக காப்பீட்டுத் திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. |
| 2011-2012 | ➢ மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் தொடங்கப்பட்டன.<br>➢ தீவன உற்பத்தியைப் பெருமளவில் அதிகரிக்க மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது.<br>➢ 585 கிளை நிலையங்கள் ஊரகக் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன.<br>➢ வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கோட்டங்களின் எண்ணிக்கை 65—லிருந்து 76 ஆக அதிகரிக்கப்பட்டது.<br>➢ நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி XVII வாயிலாக 360 கால்நடை நிலையங்கள் மற்றும் 12 கால்நடைப் பண்ணைகளில் உள் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது.<br>➢ ராணிப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் (IVPM) உள்ள நுண்ணுயிரி தடுப்பூசிகள் தயாரிப்பு ஆய்வகம் சிறந்த தயாரிப்பு முறைகள் தரத்திற்கு (GMP) மேம்படுத்த ஆணையிடப்பட்டது. |

2023 ஏப்ரல் 5]

| | |
|---|---|
| 2012-2013 | ➢ கோழியின அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது.<br>➢ மாவட்டங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக, புதிய ஐந்து மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன (சென்னை நீங்கலாக).<br>➢ ஒசூரில் அமைந்துள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், கள அளவில் எட்டு மாவட்டங்களிலும் கருமாற்று தொழில்நுட்பம் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டது.<br>➢ 19—வது கால்நடை மற்றும் கோழியின ஐந்தாண்டுக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டது.<br>➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ், திருநெல்வேலியிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாட்டிலும் இரண்டு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் புதியதாக நிறுவப்பட்டன. |
| 2013-2014 | ➢ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரகத்திற்குத் தரமான சேவை மற்றும் சிறந்த நிர்வாகத்தை உறுதிப்படுத்தியதற்காக சுதந்திர தினவிழாவில் “நல் ஆளுமை விருது” வழங்கப்பட்டது. |
| | ➢ 100 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. |
| | ➢ 11 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் தோற்றுவிக்கப் பட்டன. |

[2023 ஏப்ரல் 5

| | |
|---|---|
| | ➢ கால்நடை பெரு மருத்துவமனைகள், கால்நடைப் பண்ணைகள் மற்றும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டப் பிரிவுகளுக்கு 53 நுண்ணலை நுண்ணாய்வுக் கருவிகள் (Ultrasound Scanners) வழங்கப்பட்டன |
| | ➢ எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய நுண்ணலை நுண்ணாய்வு கருவிகள் (Portable Ultrasound Scanners) ஐந்து பன்முக மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டன. |
| | ➢ உள்நாட்டின மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் பர்கூர் ஆகியவற்றைப் பாதுகாக்க கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. |
| | ➢ ஒருங்கிணைந்த சிறிய அசைபோடும் விலங்குகள் மற்றும் முயல்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொட்டில் முறையில் வெள்ளாடுகள் வளர்ப்புத் திட்டம், அபிசேகப்பட்டி, செட்டிநாடு, சாத்தூர், சின்னசேலம் மற்றும் ஓசூர் ஆகிய ஐந்து கால்நடைப் பண்ணைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | ➢ பெரிய அளவிலான கோமாரி நோய்க் கிளர்ச்சி, போர்க்கால அடிப்படையிலான தீவிர கட்டுப்பாடு நடவடிக்கைகளின் வாயிலாக முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டது. |
| | ➢ கிராமப்புற புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் (சென்னை நீங்கலாக) விரிவுபடுத்தப்பட்டது. |
| | ➢ சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள நாய் இனப் பெருக்கப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட்டது. |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

| | |
|---|---|
| | ➢ நபார்டு வங்கியின் XIX—வது, ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன், 450 கால்நடை நிலையங்கள் கட்ட ஆணையிடப்பட்டது. |
| | ➢ இந்தியாவிலேயே முதன்முறையாக "விலங்கினங்களுக்கான ஆதார செல் ஆராய்ச்சி மையம்" (Stem Cell Research Centre for Animals) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19.6.2013 அன்று துவக்கப்பட்டது. |
| | ➢ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. |
| 2014-2015 | ➢ ஸ்ரீரங்கம், இலுப்பூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் புதியதாக கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. |
| | ➢ புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. |
| | ➢ 100 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. |
| | ➢ 50 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. |
| | ➢ 500 கிராமப்புற இளைஞர்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு, செயற்கைமுறை கருவூட்டல் மையங்கள் நிறுவுவதற்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டன. |
| | ➢ கால்நடை காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் பொருட்டு, தேசிய கால்நடை இயக்கத் திட்டத்தின்கீழ் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டது. |

| | |
|---|---|
| | ➢ நபார்டு வங்கியின் XX—வது ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் 226 புதிய கால்நடை நிலையங்கள் கட்ட ஆணையிடப்பட்டது. |
| 2015-2016 | ➢ நடமாடும் அவசர ஊர்தித் திட்டம் ஐந்து மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | ➢ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் நிறுவப்பட்டன. |
| | ➢ தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையில் உள்ள முதன்மைச் செயல் அலுவலர் பதவியை கூடுதல் இயக்குநர் பதவிக்கு நிகராகத் தரம் உயர்த்தப்பட்டது. |
| 2016-2017 | ➢ திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தீவன மற்றும் நீர் பகுப்பாய்வு ஆய்வகம் நிறுவ ஆணையிடப்பட்டது. |
| | ➢ திருப்பூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் புதியதாக கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. |
| 2017-2018 | ➢ சென்னை, சைதாப்பேட்டையில் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. |
| | ➢ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. |
| | ➢ பெரம்பலூர் மற்றும் தேனி மாவட்டங்களில் புதியதாகக் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் நிறுவப்பட்டன. |
| | ➢ மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களில் 16 புதிய நிர்வாக அலுவலர் பதவி தோற்றுவிக்கப்பட்டன. |

*2023 ஏப்ரல் 5*]

| | |
|---|---|
| | ➢ சிவகங்கை மாவட்டத்தில் புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. |
| | ➢ ஈரோடு மாவட்டத்தில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. |
| *2018-2019* | ➢ தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் நிறுவப்பட்டது. |
| | ➢ திருநெல்வேலியில் கால்நடை மற்றும் கோழி தீவன தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டது. |
| | ➢ தருமபுரி மாவட்டத்தில் ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. |
| *2019-2020* | ➢ சின்னசேலத்தில் ஒருங்கிணைந்த கால்நடை பூங்காவுடன் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவ ஆணையிடப்பட்டது. |
| | ➢ திருவாரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடம் கட்டப்பட்டது. |
| | ➢ அரியலூர், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் நிறுவப்பட்டன. |
| | ➢ உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.47.50 கோடியில் மாட்டின விந்தினை பாலினம் பிரிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது |
| *2020-2021* | ➢ தென்காசி மாவட்டத்தில் வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம் புதியதாக நிறுவ ஆணையிடப்பட்டது. |
| | ➢ தருமபுரி மாவட்டத்தில் திருச்சி கருப்பு செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. |

| | |
|---|---|
| | ➢ தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவ ஆணையிடப்பட்டது |
| | ➢ இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் தேனி மற்றும் உடுமலைப்பேட்டையில் தோற்றுவிக்கப்பட்டன. |
| 2021-2022 | ➢ நாட்டுக் கோழி உற்பத்தியை அதிகரிக்க, திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில், நாட்டுக் கோழி வளர்ப்புப் பண்ணை மற்றும் குஞ்சு பொரிப்பக அலகு ரூ.9.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்க ஆணையிடப்பட்டது. |
| 2022-2023 | ➢ கைவிடப்பட்ட மற்றும் காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் மற்றும் பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்காக “வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்” திட்டம் ரூ.20.00 கோடி செலவில் தொடங்கப்பட்டது. |
| | ➢ தொலைதூரக் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு கால்நடை சேவைகளை வழங்குவதற்காக 245 நடமாடும் கால்நடை வாகனங்கள் ரூ.39.20 கோடியில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. |
| | ➢ சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணையில் ரூ.13.82 கோடி செலவில் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம், குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை நிறுவ ஆணையிடப்பட்டது. |
| | ➢ உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணையில் தனிமைப்படுத்தப்படும் நிலையம் ரூ.2.25 கோடி செலவில் பலப்படுத்தப்படும். |

*2023 ஏப்ரல் 5*]

**5. நிர்வாக அமைப்பு**

*கால்நடை பராமரிப்புத் துறை, இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையிலான கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர்/இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.*

*தொழில்நுட்பப் பணிகளில் ஆணையர்/இயக்குநர் அவர்களுக்கு உதவுவதற்காக நான்கு கூடுதல் இயக்குநர்கள், இரண்டு இணை இயக்குநர்கள், ஒரு துணை இயக்குநர் மற்றும் பத்து உதவி இயக்குநர்கள் இயக்குநரகத்தில் பணிபுரிகின்றனர். ஒரு இணை இயக்குநர் (நிர்வாகம்), ஒரு துணை இயக்குநர் (பணியாளர்) மற்றும் இரண்டு நிர்வாக அலுவலர்கள் நிர்வாகம் சம்பந்தமான பணிகளில் இயக்குநருக்கு உதவுகின்றனர்.*


*நிதி மற்றும் கணக்கு சம்பந்தமான பணிகளில் உதவுவதற்காக அயற்பணியில் நிதித் துறையிலிருந்து நிதி கட்டுப்பாட்டாளர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர், கருவூல கணக்குத் துறையிலிருந்து கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர் மற்றும் கூட்டுறவுத் துறையிலிருந்து துணைப் பதிவாளர் ஆகியோர் ஆணையர்/இயக்குநரகத்தில் துறை சார்ந்த பணிகளில் உதவுகின்றனர்.*

*மாவட்ட அளவில் 31 மண்டல இணை இயக்குநர்களும் மற்றும் 41 துணை இயக்குநர்களும், கோட்ட அளவில் 295 உதவி இயக்குநர்களும் கால்நடை பராமரிப்புத் துறையின் பணிகளுக்கு பொறுப்பு வகிக்கின்றனர்.*

*ராணிப்பேட்டை மாவட்டம், ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் (*IVPM*) கால்நடை தடுப்பூசிகள், கால்நடை உயிரியல் காரணிகளைத் தயாரிக்கிறது. இந்த நிலையம் கூடுதல் இயக்குநர் பதவி நிலையில் உள்ள ஒரு இயக்குநர் தலைமையில் நிர்வகிக்கப்படுகிறது.*

*சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் ஒரு இணை இயக்குநரின் தலைமையின்கீழ் செயல்பட்டுவரும் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைத்தும் கண்காணித்தும் வருகிறது.*

துறை நிர்வாக அமைப்பு விளக்கப்படம்



*2023 ஏப்ரல் 5*]

## 6. கால்நடை மருத்துவச் சேவைகள்

*கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்குக் குறித்த நேரத்தில் தேவையான மருத்துவச் சேவையை வழங்கி, மாநிலத்தில் கால்நடைகளின் உற்பத்தி அளவு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. 1950-60க்களில் 120 ஆக இருந்த கால்நடை மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை 2021-2022 ஆம் ஆண்டில் 3,819 ஆக (2,979 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 840 கிளை நிலையங்கள்) அதிகரித்துள்ளது.*

**அட்டவணை 4: கால்நடை மருத்துவ நிலையங்களின் வகை**

| **வ. எண்** | **நிலையங்களின் வகை** | **நிலையங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| *1* | *கால்நடை பன்முக மருத்துவமனை* | *16* |
| *2* | *கால்நடை பெருமருத்துவமனை* | *14* |
| *3* | *கால்நடை மருத்துவமனை* | *152* |
| *4* | *கால்நடை மருந்தகம்* | *2741* |
| *5* | *நடமாடும் கால்நடை மருந்தகம்* | *56* |
| *6* | *கால்நடை கிளை நிலையம்* | *840* |
| *7* | *கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு* | *31* |
| *8* | *கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம்* | *3* |
| *9* | *கால்நடை மருத்துவ அவசர ஊர்தி* | *32* |

*மேற்கண்ட நிலையங்கள் மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு மருத்துவச் சிகிச்சை, அறுவை சிகிச்சை, ஈனியல் சிகிச்சை, சினையுறாத் தன்மை நீக்க சிகிச்சை, நோய்த் தடுப்பு முறைகள் உள்ளிட்ட பல்வேறு கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்கி வருகின்றன.*

- *கால்நடை பன்முக மருத்துவமனைகள் உதவி இயக்குநர் பதவி நிலையில் பிரதம மருத்துவரைத் தலைவராகவும், அவருக்கு உதவியாக கால்நடை உதவி மருத்துவர்களையும் கொண்டு 24 மணி நேரமும் செயல்பட்டு சிறப்புச் சேவைகளை வழங்கி வருகின்றன.*

*[2023 ஏப்ரல் 5*

❖ *கால்நடை பெருமருத்துவமனைகள் உதவி இயக்குநர் பதவி நிலையில் பிரதம மருத்துவரைத் தலைவராகக் கொண்டு முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர்கள் உதவியுடன் சிறப்புச் சேவைகளை வழங்கி வருகின்றன.*

❖ *கால்நடை மருத்துவமனைகள், உதவி இயக்குநர் பதவி நிலையில் கால்நடை மருத்துவர்களைத் தலைவராகக் கொண்டு, விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவச் சேவைகளை வழங்கி வருகின்றன.*

❖ *கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களின்கீழ் செயல்பட்டு, விவசாயிகளுக்குக் கால்நடை மருத்துவச் சேவைகள், அரசின் நலத் திட்டங்கள் மற்றும் விரிவாக்க சேவைகளையும் வழங்கி வருகின்றன.*

❖ *நடமாடும் கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களின்கீழ், நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே கால்நடைகளுக்கு மருத்துவச் சேவைகளை வழங்கி வருகின்றன.*

❖ *கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை ஆய்வாளர்கள்மூலம் கால்நடைகளுக்குக் செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் முதலுதவி சேவைகளை வழங்கி வருகின்றன.*

*மேற்கண்ட கால்நடை நிலையங்களில் 2022-2023 ஆம் ஆண்டு ஆற்றிய பணிகள் பின்வருமாறு:*

**அட்டவணை 5: கால்நடை நிலையங்களில் ஆற்றிய பணிகள் 2022-2023**

| | **பணிகள்** | **(இலட்சத்தில்) (பிப்ரவரி'23 வரை)** |
|---|---|---|
| *1* | *சிகிச்சை அளித்தவை (முதலுதவி உட்பட)* | *389.98* |
| *2* | *செயற்கைமுறை கருவூட்டல் பணிகள்* | *49.84* |
| *3* | *தடுப்பூசிப் பணிகள்* | *418.98* |

2023 ஏப்ரல் 5]

| | | |
|---|---|---|
| 4 | ஆண்மை நீக்க பணிகள் | 9.77 |
| 5 | குடற்புழு நீக்கம் | 364.57 |
| 6 | செயற்கைமுறை கருவூட்டல்மூலம் கன்று பிறப்பு | 21.56 |
| 7 | கட்டுப்படுத்தப்பட்ட நோய் கிளர்ச்சிகள் | 57 (எண்ணிக்கை) |

**அட்டவணை 6: மாவட்டவாரியாக கால்நடை நிலையங்களின் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | ப.மு.ம.ம | ெப. ம.ம | கா.ம.ம | கா.ம | கி.நி | ந.கா.ம | கா.நோ. பு.பி | கா.ம. அ.உ | கோ.நோ க.ஆ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 0 | 0 | 2 | 44 | 9 | 1 | 1 | 1 | 0 |
| 2 | சென்னை | 1 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 |
| 3 | கோயம்புத்தூர் | 1 | 1 | 15 | 98 | 26 | 2 | 1 | 1 | 0 |
| 4 | கடலூர் | 0 | 1 | 5 | 92 | 56 | 1 | 1 | 1 | 0 |
| 5 | தருமபுரி | 0 | 1 | 3 | 80 | 10 | 2 | 1 | 1 | 0 |
| 6 | திண்டுக்கல் | 1 | 0 | 5 | 106 | 63 | 1 | 1 | 1 | 0 |
| 7 | ஈரோடு | 2 | 0 | 6 | 106 | 24 | 3 | 1 | 1 | 1 |
| 8 | காஞ்சிபுரம் | 0 | 1 | 0 | 45 | 14 | 1 | 1 | 1 | 0 |
| 9 | செங்கல்பட்டு | 0 | 1 | 1 | 61 | 24 | 1 | 0 | 0 | 0 |
| 10 | கன்னியாகுமரி | 1 | 0 | 2 | 49 | 15 | 2 | 1 | 1 | 0 |
| 11 | கரூர் | 0 | 1 | 2 | 72 | 12 | 1 | 1 | 1 | 0 |
| 12 | கிருஷ்ணகிரி | 1 | 0 | 2 | 79 | 14 | 1 | 1 | 1 | 0 |
| 13 | மதுரை | 1 | 0 | 4 | 96 | 53 | 1 | 1 | 1 | 0 |
| 14 | நாகப்பட்டினம் | 0 | 0 | 3 | 34 | 14 | 1 | 1 | 1 | 0 |
| 15 | மயிலாடுதுறை | 0 | 2 | 1 | 38 | 7 | 1 | 0 | 0 | 0 |
| 16 | நாமக்கல் | 0 | 0 | 5 | 105 | 8 | 3 | 1 | 1 | 1 |
| 17 | பெரம்பலூர் | 0 | 0 | 0 | 37 | 5 | 0 | 1 | 1 | 0 |

| வ. எண் | மாவட்டம் | ப.மு.ம.ம | பெ. ம.ம | கா.ம.ம | கா.ம | கி.நி | ந.கா.ம | கா.நோ. பு.பி | கா.ம. அ.ஊ | கோ.நோ க.ஆ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | புதுக்கோட்டை | 0 | 1 | 4 | 101 | 32 | 2 | 1 | 1 | 0 |
| 19 | இராமநாதபுரம் | 0 | 0 | 4 | 55 | 14 | 0 | 1 | 1 | 0 |
| 20 | சேலம் | 1 | 0 | 7 | 149 | 9 | 6 | 1 | 1 | 0 |
| 21 | சிவகங்கை | 0 | 0 | 2 | 79 | 47 | 0 | 1 | 1 | 0 |
| 22 | தஞ்சாவூர் | 1 | 1 | 7 | 105 | 28 | 3 | 1 | 1 | 0 |
| 23 | தேனி | 0 | 0 | 3 | 53 | 46 | 1 | 1 | 1 | 0 |
| 24 | நீலகிரி | 0 | 1 | 2 | 29 | 7 | 3 | 1 | 1 | 0 |
| 25 | திருப்பூர் | 2 | 0 | 7 | 102 | 39 | 1 | 1 | 1 | 1 |
| 26 | திருவள்ளூர் | 0 | 0 | 5 | 88 | 26 | 1 | 1 | 1 | 0 |
| 27 | திருவண்ணாமலை | 0 | 1 | 5 | 124 | 21 | 3 | 1 | 1 | 0 |
| 28 | திருவாரூர் | 0 | 1 | 10 | 72 | 30 | 1 | 1 | 1 | 0 |
| 29 | தூத்துக்குடி | 1 | 0 | 2 | 70 | 41 | 1 | 1 | 1 | 0 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 1 | 0 | 8 | 103 | 34 | 2 | 1 | 1 | 0 |
| 31 | திருநெல்வேலி | 1 | 0 | 5 | 51 | 16 | 1 | 1 | 1 | 0 |
| 32 | தென்காசி | 0 | 0 | 3 | 61 | 19 | 0 | 0 | 0 | 0 |
| 33 | வேலூர் | 1 | 0 | 4 | 38 | 7 | 1 | 1 | 1 | 0 |
| 34 | திருப்பத்தூர் | 0 | 0 | 2 | 37 | 9 | 2 | 0 | 0 | 0 |
| 35 | ராணிப்பேட்டை | 0 | 0 | 2 | 46 | 10 | 1 | 0 | 0 | 0 |
| 36 | விழுப்புரம் | 0 | 0 | 5 | 101 | 6 | 2 | 1 | 1 | 0 |
| 37 | கள்ளக்குறிச்சி | 0 | 1 | 2 | 53 | 18 | 2 | 0 | 0 | 0 |
| 38 | விருதுநகர் | 0 | 0 | 6 | 82 | 27 | 0 | 1 | 1 | 0 |
| | **மொத்தம்** | **16** | **14** | **152** | **2741** | **840** | **56** | **31** | **32** | 0.1 |

* ப.மு.ம.ம — பன்முக மருத்துவமனைகள்

பெ. ம.ம — பெருமருத்துவமனைகள்

கா.ம.ம — கால்நடை மருத்துவமனைகள்

*2023 ஏப்ரல் 5]*

| | | |
|---|---|---|
| கா.ம | — | கால்நடை மருந்தகங்கள் |
| கி.நி | — | கிளைநிலையங்கள் |
| ந.கா.ம | — | நடமாடும் கால்நடை மருந்தகங்கள் |
| கா.நோ.பு.பி | — | கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் |
| கா.ம.அ.ஊ | — | கால்நடை மருத்துவ அவசர ஊர்திகள் |
| கோ.நோ க.ஆ | — | கோழி நோய் கண்டறியும் ஆய்வகங்கள் |

## 6.1 மருந்துகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

இத்துறைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. நிதி ஒதுக்கீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை 7: நிதி ஒதுக்கீடு (2022-2023)**

| வ. எண் | இனங்கள் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மருந்துகள் (259 இனங்கள்) | 2206.47 |
| 2 | உபகரணங்கள் மற்றும் அறுவைச் சிகிச்சைக் கருவிகள் (13 இனங்கள்) | 287.82 |
| 3 | தீவிர சுகாதாரத் திட்டம் (குடற்புழு நீக்கம் -3 இனங்கள்) | 105.00 |
| 4 | தாது உப்புக் கலவை | 501.35 |
| 5 | மாற்று மருந்துகள் (11 இனங்கள்) | 161.53 |
| 6 | காப்பு நிதி | 612.73 |
| | **மொத்தம்** | **3874.90** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 5*

## 7. கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், ராணிப்பேட்டை (Institute of Veterinary Preventive Medicine - IVPM)

*தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின் ஒரு பிரிவாக ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் மாநிலத்தில் உள்ள கால்நடை நிலையங்களின் பயன்பாட்டிற்காகத் தடுப்பூசிகள், நோய் நிர்ணயிப்பான்கள், கரைப்பான்கள் மற்றும் மருந்துகள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது.*

**தோற்றம்:**

- *இந்த நிலையம் முதலில் 1932 ஆம் ஆண்டு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 'ஊநீர் நிலையம்' என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டது.*
- *1948 ஆம் ஆண்டு இந்நிலையம் ராணிப்பேட்டையில் தற்போது உள்ள 78.57 ஏக்கர் வளாகத்திற்கு மாற்றப்பட்டது.*
- *1954 ஆம் ஆண்டு முதல் இது கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் என்று மறுபெயரிடப்பட்டது.*
- *இது தென்னிந்தியாவில் உள்ள அனைத்து கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவத்தில் ஒரு முன்னோடி நிலையமாகத் தொடர்ந்து தன்னை நிரூபித்து வருகிறது.*
- *இந்நிலையம் (IVPM) ஒன்றிய அரசின் மருந்து உரிம ஆணையத்தின் கட்டாயத் தேவையின்படி, தடுப்பூசி தயாரிப்பு வசதியை நல் உற்பத்தி தரத்திற்கு (GMP) மேம்படுத்தப்பட்ட முதல் அரசு கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் ஆகும்.*

**நோக்கங்கள்**

- *கால்நடைகள் மற்றும் கோழியினங்களைத் தாக்கும் பல்வேறு நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசிகளை உற்பத்தி செய்தல்*
- *தேவையான தடுப்பூசிகள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதிசெய்தல்*
- *தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்*

*2023 ஏப்ரல் 5*]

(NADCP) உதவியுடன் கோமாரி நோய் இணை ஆராய்ச்சி மையம்மூலம் கோமாரி நோய்க்கான (FMD) ஊநீர் கண்காணிப்பு, ஊநீர் மேற்பார்வை மற்றும் நோய் காரணியை வகைப்படுத்துதல்.

**நிலையத்தின் பணிகள்**

- இந்த நிலையம் நான்கு நுண்ணுயிரி தடுப்பூசிகளையும், ஐந்து நச்சுயிரி தடுப்பூசிகளையும், நான்கு நோய் கண்டுபிடிப்பான்களையும் மற்றும் ஒரு கரைப்பானையும் உற்பத்தி செய்து வருகிறது.

**அட்டவணை 8: நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி விவரம் 2022-2023**

| வ. எண் | உற்பத்தி செய்யப்படும் ஊநீர் | டோஸ்கள் |
|---|---|---|
| **அ.** | **நுண்ணுயிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)** | |
| *1* | அடைப்பான் | *29.680* |
| *2* | சப்பை நோய் | *1.790* |
| *3* | துள்ளுமாரி | *0.590* |
| *4* | தொண்டை அடைப்பான் | *0.740* |
| **ஆ.** | **நச்சுயிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)** | |
| *1* | ஆட்டம்மை | *1.14* |
| *2* | வாத்துக் கழிச்சல் | *154.597* |
| *3* | கோழிக்கழிச்சல் — F | *1.516* |
| *4* | கோழிக்கழிச்சல் — K | *295.360* |
| *5* | கோழிக்கழிச்சல் — Lasota | *16.500* |
| **இ.** | **நோய் கண்டுபிடிப்பான்கள் (மி.லிட்டரில்)** | |
| *1* | CMT — நோய்க்காரணி | *4000* |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | உற்பத்தி செய்யப்படும் ஊநீர் | டோஸ்கள் |
|---|---|---|
| 2 | கன்று வீச்சு நோய் — நிறமூட்டப்பட்ட நோய்க்காரணி | 1580 |
| 3 | கன்று வீச்சு நோய் –நிறமில்லா நோய்க்காரணி | 2350 |
| 4 | கன்று வீச்சு நோய் –MRT நோய்க்காரணி | 990 |
| **ஈ.** | **கரைப்பான் (லிட்டரில்)** | |
| 1 | பாஸ்பேட் பஃப்பர் கரைசல் | 4900 |

- கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான மாநிலத்திற்கான உதவி (அஸ்காட்) தடுப்பூசி இலக்கின் அடிப்படையிலும், நோய் கிளர்ச்சி மற்றும் பேரழிவுகளின்போது விவசாயிகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளின் தேவையின் அடிப்படையிலும் தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- நச்சுயிரி மற்றும் நுண்ணுயிரி மூலப்பொருட்களைப் பராமரித்தல்.
- இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு தடுப்பூசிகளை விற்பனை செய்தல்.
- தடுப்பூசிகளைப் பரிசோதிப்பதற்கான தர உத்தரவாதம் மற்றும் தரக் கட்டுப்பாடு.
- கள நிலையங்களுக்குப் பல்வேறு தடுப்பூசிகளைச் சரியான நேரத்தில் விநியோகித்தல்.
- மாநிலத்தில் எல்லா கோழிகளுக்கும் கோழிக்கழிச்சல் தடுப்பு மருந்து (RDVK) போடுவதற்காக, கரைசலுடன் தடுப்பு மருந்தை விநியோகித்தல்.

**ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்:**

- நுண்ணுயிர் தடுப்பூசி உற்பத்தியை நல்லுற்பத்தி தரத்திற்கு ரூ.12.02 கோடி செலவில் மேம்படுத்துதல்.

*2023 ஏப்ரல் 5*]

- *கோழி நோய் தடுப்பூசி உற்பத்தியை நல்லுற்பத்தி தரத்திற்கு ரூ.3.00 கோடி செலவில் மேம்படுத்துதல்.*
- *அடைப்பான்நோய் தடுப்பூசி தயாரிப்பு ஆய்வகம் ரூ.57.98 கோடி செலவில் நல்லுற்பத்தி தரத்திற்கு அமைத்தல்.*
- *தர உத்தரவாதம் மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தை (*QAQC Lab*) ரூ.19.925 கோடி செலவில் நல்சோதனை தரத்திற்கு (*GLP*) நிறுவுதல்.*
- *மருந்து தயாரிப்பு ஆய்வகம் ரூ.10 கோடி செலவில் நல்லுற்பத்தி தரத்திற்கு அமைத்தல்.*
- *கன்று வீச்சு நோய் ஆய்வகம் ரூ.8.02 கோடி செலவில் நல்லுற்பத்தி தரத்திற்கு அமைத்தல்.*

*அனைத்து தடுப்பூசி உற்பத்தி ஆய்வகங்களையும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உடன் இணைந்து தடுப்பூசி தயாரிப்பு வசதிகளையும் நல்லுற்பத்தி தரத்திற்கு மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

## 8. நோய் கண்காணித்தல், கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் முற்றிலும் நீக்குதல்

*கால்நடை வளர்ப்போரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கால்நடைகள் ஆரோக்கியமாகவும், இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தி பண்புகளுடன் இருக்க வேண்டும். கால்நடைகளின் உற்பத்தித் திறனை பாதிக்கும் பல்வேறு நோய்களை உரிய நேரத்தில் கண்டறிந்து, கட்டுப்படுத்துவது துறையின் தலையாய பணியாகும். இதை உறுதி செய்வதற்காக, மாநிலத்தில் பின்வரும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.*

## 8.1 கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு (Veterinary Epidemiology Centre-VEC)

*கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த பிரிவு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வகங்களின் செயல்பாடுகளுக்கு வழிகாட்டும் மையமாக செயல்பட்டு வருகிறது.*

- இப்பிரிவு மாநில கால்நடை பராமரிப்புத் துறையின் நோய் கண்டறியும் நடவடிக்கைகளைக் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வகங்கள்மூலம் ஒருங்கிணைக்கிறது.

- பல்வேறு கால்நடைகள் மற்றும் கோழி நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகக் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு உள்ளீடுகளைத் தீர்வு நடவடிக்கைகளையும் வழங்குவதற்காக புலனாய்வு பணிகளை இப்பிரிவு மேற்கொள்கிறது.

- இப்பிரிவு பறவைக் காய்ச்சல் நோயினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரகத்தால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவின் உறுப்பினர்களுடன் இணைந்து தனியார் கோழிப் பண்ணைகளை ஆண்டுக்கு இருமுறை ஆய்வு செய்கிறது. கால்நடைகளின் ஆரோக்கியத்திற்கான உலக கால்நடை சுகாதார அமைப்பால் (WOAH) பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகளின்படி கட்டாய உயிர் பாதுகாப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு தரநிலைகள் தனியார் கோழிப் பண்ணைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்கிறது.

- ஒன்றிய அரசால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தரநிலை நெறிமுறையின்படி (MSP) மண்டல நோய் கண்டறியும் ஆய்வகத்துடன் இணைந்து மூன்று துறை சார்ந்த பண்ணைகளின் (மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர், அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகை) உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பராமரிக்கப்படும் பொலிகாளைகளைப் பரிசோதிப்பதில் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதன்மூலம் நோயற்ற கால்நடைகளிலிருந்து பெறப்பட்ட செயற்கை கருவூட்டலுக்கான உறைவிந்துக் குச்சிகள் விநியோகிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

- செயற்கைமுறை கருவூட்டலுக்காக நோயற்ற பொலிகாளைகளிலிருந்து உறைவிந்துக் குச்சிகள் பெறப்பட்டு விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, பெங்களூரு தென் மண்டல நோய் கண்டறியும் ஆய்வக (SRDDL)

*2023 ஏப்ரல் 5]*

*விஞ்ஞானிகள் குழுவுடன் இணைந்து குறைந்தபட்ச தரநிலை நெறிமுறைகளின்படி, மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலும் உள்ள வீரியமான பொலிகாளைகளில் மேற்கொள்ளப்படும் சோதனையை இப்பிரிவு ஒருங்கிணைத்து செயல்படுகிறது.*

- *மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் தடுப்பூசிப் பணிகளைக் கண்காணிக்கிறது.*
- *சமீபத்திய நோய் கண்டறிதல் மற்றும் ஆய்வுக்கூட மேம்பட்ட நுட்பங்கள் குறித்து கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு இப்பிரிவு உதவுகிறது.*

## 8.2 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் (ADIU)

*நோய் கண்டறிதல், நோய் கண்காணிப்பு மற்றும் நோய்க்கிளர்ச்சி குறித்த தகவல் பெறப்பட்டவுடன், நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மாநிலத்தில் உள்ள 31 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மேற்கொள்கின்றன.*

- *இப்பிரிவுகள் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் இறந்த கால்நடைகளிலிருந்து மாதிரிகளைச் சேகரித்து, நோய்களைக் கண்டறிவதற்கான சோதனைகளை நடத்துகின்றன.*
- *இப்பிரிவுகள் நோயறிதலை உறுதிப்படுத்துவதற்காக, நோய்வாய்ப்பட்ட மற்றும் இறந்த கால்நடைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளை மத்திய அரசு ஆய்வகங்களுக்கு அனுப்புகின்றன.*
- *நோய் பரவுதலைக் கட்டுப்படுத்தவும், எதிர்காலத்தில் நோய்க் கிளர்ச்சியைத் தவிர்ப்பதற்காகவும், இப்பிரிவுகள் நோய்க் கிளர்ச்சிக்கான காரணங்களைக் கண்டறியும் பணியை மேற்கொள்கின்றன.*
- *நோய் பரவலை அறியவும், நோய் தாக்கும் பகுதிகளில் தடுப்பூசிகளை மேற்கொள்வதற்கான முன்னறிவிப்புகள் குறித்த நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் நோய் முன்னறிவிப்பு அட்டவணையை (Endemic chart) தயாரிக்கின்றன.*

- இப்பிரிவுகள் அந்தந்த இடங்களிலேயே நோய் கண்டறிதலை மேற்கொள்வதற்காக, மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் சிறப்பு முகாம்களில் கலந்துகொள்கின்றன.

- கால்நடைகளிலிருந்து மனிதர்களுக்கு நோய் பரவுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, இறைச்சிக் கூடங்களுக்குச் சென்று மாதிரிகளைச் சேகரிக்கின்றன.

- கால்நடைகள் மற்றும் கோழிகளின் சுகாதாரத்தைக் கண்காணிப்பதற்காக அரசு மற்றும் தனியார் பண்ணைகளை அவ்வப்போது பார்வையிடுகின்றன.

- தடுப்பூசி மற்றும் நோய் எதிர்ப்புத் திறனை மதிப்பிடுவதற்கு, கோமாரி நோய்க்கான முன் மற்றும் பிந்தைய ஊநீர் மாதிரிகள், ஆட்டுக் கொல்லி நோய் மற்றும் கருச்சிதைவு நோய்க்கு பிந்தைய ஊநீர் மாதிரிகள் சேகரிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொள்கிறது.

குதிரைகள், கழுதைகள், கோவேறு கழுதைகள் மற்றும் மட்டக்குதிரைகளில் புரவிக்காய்ச்சல் நோயை ஆய்வு செய்வதற்காக திருச்சி மற்றும் உதகமண்டலத்தில் உள்ள இப்பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

## 8.3 கோழி நோய் கண்டறியும் ஆய்வகம் (Poultry Disease Diagnostic Laboratory - PDDL)

கோழிப் பண்ணைகள் அதிகம் உள்ள இடங்களில் கோழிப் பண்ணையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் ஈரோடு, நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய 3 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

இப்பிரிவுகள் பல்வேறு நச்சுயிரி, நுண்ணுயிரி மற்றும் ஒட்டுண்ணிகளின் தாக்குதல்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவதற்காக எச்சங்கள், இரத்தம் மற்றும் இதர மாதிரிகள் சேகரித்தல், பிரேதப் பரிசோதனை மேற்கொண்டு புதிதாகத் தோன்றும் மற்றும் ஏற்கெனவே உள்ள பல்வேறு கோழி நோய்களைக் கண்டறிந்து நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

*2023 ஏப்ரல் 5*]

*இப்பிரிவுகள் அவ்வப்போது கோழிப் பண்ணைகளில் ஆய்வு மேற்கொண்டு, நோய் மேலாண்மை நடைமுறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்குகின்றன.*

*கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை சரியான நேரத்தில் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி விற்பனையும் மேற்கொள்ளப்படுகிறது.*

*நாமக்கல் மற்றும் ஈரோட்டில் உள்ள கோழியின நோய் கண்டறியும் ஆய்வகங்கள் உயிர் பாதுகாப்பு நிலை II (BSL—II) இணக்க ஆய்வகங்கள் ஆகும். அவை வீரியம் குறைந்த பறவைக் காய்ச்சலுக்கான அடிப்படை பரிசோதனைகளை மேற்கொள்கின்றன.*

*திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் தீவனம் மற்றும் நீர் பகுப்பாய்வுக்கான ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது*

## 8.4 மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் (Central Referral Laboratory - CRL)

*ராணிப்பேட்டை மாவட்டம், கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், மாநிலத்தின் உச்ச நிலை ஆய்வுக்கூடமாகும்.*

*உலக கால்நடை சுகாதார அமைப்பால் (WOAH) அங்கீகரிக்கப்பட்ட ஆய்வக நுட்பங்களின்படி இந்த ஆய்வுக்கூடம் நோயை உறுதிப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.*

## 8.5 நோய் கட்டுப்படுத்தும் பணிகள்

*ஒவ்வோர் ஆண்டும், அனைத்து கால்நடை நிறுவனங்களிலும் தயாரிக்கப்பட்ட நோய் முன்னறிவிப்பு அட்டவணை (Endemic chart) அடிப்படையில் தடுப்பூசி போடப்படுகிறது.*

*விவசாயிகளுக்குப் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் கால்நடை நோய்களான அடைப்பான், சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் ஆட்டம்மை நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகள், ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு தேவைக்கேற்ப கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.*

[2023 ஏப்ரல் 5

**அட்டவணை 9: தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரம் 2022-2023**

| நோயின் பெயர் | தடுப்பூசி போடப்பட்ட கால்நடை வகை | தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| அடைப்பான் | மாட்டினம் மற்றும் ஆட்டினம் | 38.46 |
| சப்பை நோய் | பசுவினம் | 0.35 |
| கோமாரி நோய் | மாட்டினம் | 78.67 |
| தொண்டை அடைப்பான் | மாட்டினம் | 0.83 |
| ஆட்டுக்கொல்லி | ஆட்டினம் | 27.73 |
| ஆட்டம்மை | செம்மறியாடுகள் | 0.49 |
| தோல்கழலை நோய் (using Goat pox vaccine) | பசுவினம் | 57.86 |
| கன்றுவீச்சு | 4-8 மாத வயதுடைய கிடேரி கன்றுகள் | 6.14 |
| வெறிநோய் | நாய்கள் | 2.42 |
| கோழிக்கழிச்சல் | கோழியினம் | 63.00 |
| **மொத்தம்** | | **275.95** |

## 8.5.1 தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டம் (NADCP)

தகுதியுள்ள மாட்டினங்களுக்குத் தடுப்பூசி போடுவதன்மூலம் இந்தத் திட்டத்தின்கீழ், கோமாரி நோய் மற்றும் கன்றுவீச்சு நோயைக் கட்டுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கோமாரி நோயானது கால்நடைகளில் பெருந்தொற்றை ஏற்படுத்தி, விவசாயிகளுக்குப் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும்

*2023 ஏப்ரல் 5*]

*ஒரு நச்சுயிரி நோயாகும். சீரான இடைவெளியில் தடுப்பூசி போடுவதன்மூலம் இந்நோய் கட்டுப்படுத்தப்படுகிறது.*

*மாநிலத்தில் உள்ள, தகுதியுள்ள அனைத்து மாட்டினங்களுக்குக் கோமாரி நோய்க்கு எதிரான தடுப்பூசிகள் தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் போடப்படுகின்றன.*

*இத்திட்டத்தின்கீழ், தகுதியுள்ள 87.03 இலட்சம் மாட்டினங்களுக்கு 2020-2021 ஆம் ஆண்டில் முதல் சுற்று கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் தகுதியுள்ள 86.33 இலட்சம் மாட்டினங்களுக்கு இரண்டாம் சுற்று தடுப்பூசி போடப்பட்டுள்ளது.*

*தற்போது நடைபெற்றுவரும் மூன்றாவது சுற்றில் தகுதியுள்ள 82.07 இலட்சம் மாட்டினங்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.*

### 8.5.1.1 தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் கன்றுவீச்சு நோய்த் தடுப்பூசிப் பணி

*ஒரே ஒருமுறை மட்டும் போடக்கூடிய கன்றுவீச்சு நோய்த் தடுப்பூசியானது, தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் முதல் சுற்றில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நான்கு முதல் எட்டு மாத வயதுடைய 6.14 இலட்சம் தகுதியுள்ள கிடேரி கன்றுகளுக்குப் போடப்பட்டுள்ளது.*

### 8.5.2 தோல் கழலை நோய்

*தோல் கழலை நோய் என்பது கால்நடைகள் மற்றும் எருமைகளில் தோல் முடிச்சுகள், பால் உற்பத்தி குறைதல், கருக்கலைப்பு மற்றும் மலட்டுத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தும் ஒரு நச்சுயிரி தொற்று நோயாகும். 2022 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் உள்ள 35 கிராமங்களில் நோய்த் தொற்று ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி சுமார் 60.25 இலட்சம் வெள்ளாட்டம்மை தடுப்பூசி வாங்கப்பட்டு, 57.86 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டது.*

### 8.5.3 ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல்

*ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் என்பது நச்சுயிரியால் உள்நாட்டு மற்றும் காட்டுப் பன்றிகளைப் பாதிக்கும், எளிதில் தொற்றக்கூடிய*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

அபாயகரமான நோயாகும். இந்தத் தொற்றைத் தடுப்பதற்கோ, குணப்படுத்தவோ தற்போது தடுப்பூசி அல்லது மருந்துகள் எதுவும் இல்லை. இந்நோய்க்கு எதிராக அனைத்து மாவட்டங்களிலும் துறை பணியாளர்கள்மூலம் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023 ஆம் ஆண்டில், ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலத்தில் நீலகிரி, செங்கல்பட்டு, திருவண்ணாமலை, தூத்துக்குடி, சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் இந்நோய் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நோய் பரவலைத் தடுப்பதற்காக ASF தேசிய செயல் திட்டத்தின்படி, நோய் பாதிக்கப்பட்ட மையப் பகுதியிலிருந்து (பாதிக்கப்பட்ட மண்டலம்) 1 கி.மீ. சுற்றளவில் உள்ள பன்றிகள் மனிதாபிமான முறையில் அழிக்கப்பட்டன.

**அட்டவணை 10: நோய்க் கிளர்ச்சி விவரம் 2022-2023**

| நோய்க் கிளர்ச்சி வகை | பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை | நோய்க் கிளர்ச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆட்டம்மை | 3 | 5 |
| அடைப்பான் | 3 | 3 |
| ஆட்டுக்கொல்லி | 1 | 1 |
| தோல்கழலை நோய் (using Goat pox vaccine) | 15 | 35 |
| வெள்ளை கழிச்சல் நோய் | 1 | 2 |
| வாத்து கழிச்சல் | 1 | 1 |
| ஆப்பிரிக்க பன்றி காய்ச்சல் | 9 | 9 |
| சப்பை நோய் | 1 | 1 |
| **மொத்தம்** | | **57** |

*2023 ஏப்ரல் 5*]

## 9. கால்நடை அபிவிருத்தி

### 9.1 கால்நடை பண்ணைகள்

*இத்துறையின்கீழ் எட்டு கால்நடைப் பண்ணைகள், மூன்று ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை உள்ளிட்ட 13 துறை பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.*

**துறை பண்ணைகளின் நோக்கங்கள்:**

- *விவசாயிகளிடையே கால்நடை வளர்ப்பு மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல் விளக்க அலகுகளாகச் செயல்படுதல்*
- *விவசாயிகளுக்கு உயர்மரபுத் திறன் கொண்ட கால்நடைகளை விற்பனை செய்தல்*
- *விவசாயிகளுக்குச் சிறந்த மேலாண்மை முறைகள் குறித்த பயிற்சி அளித்தல்*
- *கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளித்தல்*
- *நோயில்லா உயர் மரபுத் திறன் கொண்ட உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்தல்*

**இனவாரியாக விற்பனை விவரம்**

*2022-2023 ஆண்டில், விவசாயிகளுக்கு 60 எண்ணிக்கைக் கன்றுகள், 491 செம்மறியாட்டுக் குட்டிகள், 647 வெள்ளாட்டுக் குட்டிகள் மற்றும் 696 பன்றிக் குட்டிகள் இனவிருத்திக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும் 2,23,958 எண்ணிக்கை முட்டைகள் மற்றும் 23,582 எண்ணிக்கை கோழிக்குஞ்சுகள்/கோழிகள் இனவிருத்திக்காகவும், உண்பதற்காகவும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 5

## அட்டவணை 11: துறை பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் பராமரிக்கப்படும் கால்நடை இனங்கள்

| வ. எண் | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| 1 | அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி |
| | | எருமையினம் | முர்ரா |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், சிவப்பு சிந்தி, காங்கேயம், பர்கூர், புலிக்குளம் |
| | | செம்மறி ஆட்டினம் | மேச்சேரி |
| | | வெள்ளாட்டினம் | தலைச்சேரி, கொடியாடு, சேலம் கருப்பு |
| | | பன்றியினம் | பெரிய வெள்ளை யார்க்கையர் |
| | | கோழிகள் | அசில் |
| | | குதிரைகள் | கத்தியவார் மற்றும் தரோப்ரெட் இனம் |

2023 ஏப்ரல் 5]

| வ. எண் | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், சாஹிவால் |
| | | செம்மறி ஆட்டினம் | கீழக்கரிசல் |
| | | வெள்ளாட்டினம் | கன்னிஆடு |
| | | பன்றியினம் | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| | | கோழிகள் | வனராஜா, அசில் |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| | | செம்மறி ஆட்டினம் | இராமநாதபுரம் வெள்ளை |
| | | வெள்ளாட்டினம் | ஜமுனாபாரி |
| | | பன்றியினம் | பெரிய வெள்ளை யார்க்ஷயர், லேண்ட்ரேஸ் |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| 6 | மாவட்ட கால்நடைப் பண்ணை, நடுவூர் (தஞ்சாவூர் மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம் |
| | | எருமையினம் | முர்ரா |
| 7 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்) | பசுவினம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், தார்ப்பார்க்கர், சாஹிவால், காங்கேயம் |
| | | செம்மறி ஆட்டினம் | இராமநாதபுரம் வெள்ளை |
| | | வெள்ளாட்டினம் | ஜமுனாபாரி, தலைச்சேரி |
| | | பன்றியினம் | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| | | கோழிகள் | அசில் |
| 8 | கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்) | பசுவினம் | உம்பளாச்சேரி |
| 9 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (கள்ளக்குறிச்சி மாவட்டம்) | செம்மறி ஆட்டினம் | மேச்சேரி, சென்னை சிவப்பு |
| | | வெள்ளாட்டினம் | சேலம் கருப்பு, தலைச்சேரி |

*2023 ஏப்ரல் 5*]

| வ. எண் | பண்ணையின் பெயர் | வகை | இனங்கள் |
|---|---|---|---|
| *10* | ஆட்டுப்பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்) | செம்மறி ஆட்டினம் | சென்னை சிவப்பு |
| *11* | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்) | செம்மறி ஆட்டினம் | வேம்பூர் |
| | | வெள்ளாட்டினம் | கன்னிஆடு |
| *12* | கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (செங்கல்பட்டு மாவட்டம்) | கோழிகள் | வனராஜா, நிக்கோபாரி, கடக்நாத், வெள்ளை லெகார்ன், அசில், ரோட் ஐலாண்ட் சிவப்பு, |
| | | வான்கோழிகள் | பெல்ட்ஸ்வில்லி வெள்ளை |
| | | காடை | ஜப்பானிய காடை |
| *13* | தீவன விதை உற்பத்திப் பண்ணை, படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்) | | தீவன சோளம் கோஎப்எஸ்—*31*, கம்பு நேப்பியர்—கோ*4*, கோ*5*, வேலி மசால், அகத்தி |

## 9.2 உறைவிந்து உற்பத்தி

- *மாநிலத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு, ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய 3 உறைவிந்து உற்பத்தி நிலையங்களின்மூலம் நோயற்ற, உயர் மரபணுத் திறன் கொண்ட உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கத்தால்*

[2023 ஏப்ரல் 5

நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தர நிர்ணயத்தின்படி, இந்த நிலையங்களில் 41.26 இலட்சம் எண்ணிக்கை உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த உறைவிந்து நிலையங்கள் ஒன்றிய அரசின் மத்திய கண்காணிப்புப் பிரிவால் காலமுறைப்படி மதிப்பீடு செய்யப்படுகின்றன.

- இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் உறைவிந்துக் குச்சிகள் தெலுங்கானா (2015 முதல்—2018 ஆண்டு வரை 14 இலட்சம் முர்ரா உறைவிந்துக் குச்சிகள்) மற்றும் ஆந்திரா (2021-2022 ஆம் ஆண்டில் 4.2 இலட்சம் கலப்பின ஜெர்சி உறைவிந்துக் குச்சிகள்) மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணையில் தனிமைப்படுத்தப்படும் நிலையத்தை பலப்படுத்துவதற்காக ரூ.2.25 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து உற்பத்தி பணியானது, உதகை மாவட்ட கால்நடைப் பண்ணையில் 9.3.2023 அன்று தொடங்கப்பட்டுள்ளது. 3 ஆண்டுகளில் 7.2 இலட்சம் எண்ணிக்கை பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகள் ரூ.47.50 கோடி செலவில் உற்பத்தி செய்யப்படவுள்ளது.
- காங்கேயம், பர்கூர் மற்றும் புலிக்குளம் நாட்டு மாட்டினங்கள் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், உம்பளாச்சேரி நாட்டு மாட்டினம் கொருக்கை கால்நடை பண்ணையிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.
- பிற மாநிலங்களின் நாட்டினங்களான சிகப்பு சிந்தி, ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், தார்பார்கர் மற்றும் சாகிவால் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், சாகிவால் அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## 9.3 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி (CBFD)

- துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்களின்மூலம் உற்பத்தி செய்யப்படும் உறைவிந்துக் குச்சிகள், 31 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள்மூலம் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து

*2023 ஏப்ரல் 5*]

கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்களுக்குச் செயற்கை முறை கருவூட்டல் பணிக்கென விநியோகிக்கப்பட்டு வருகிறது.

- மேலும், இவ்வலகுகள்மூலம் கால்நடை நிலையங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்களுக்குத் திரவ நைட்ரஜன் விநியோக்கப்பட்டு வருகிறது. தீவன விதைகள்/ புல் கரணைகள் மற்றும் தீவன மரக்கன்று நாற்றுகள் விவசாயிகளுக்கு விநியோக்கப்பட்டு வருகிறது.

## 9.4 நாய் வளர்ப்புப் பிரிவு, சைதாப்பேட்டை

தமிழ்நாட்டில் உள்ள நாட்டின நாய்களான இராஜபாளையம், சிப்பிப்பாறை மற்றும் கன்னி ஆகியவற்றைப் பாதுகாத்து, இனப்பெருக்கம் செய்ய சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

## 10. திட்டங்கள்

ஏழை மற்றும் எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான மற்றும் நலனுக்காக இத்துறை பயனாளிகள் சார்ந்த பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய திட்டங்களை முறையாகச் செயல்படுத்தி, பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்து, கிராமப்புறப் பகுதிகளில் நீடித்த, நிலையான வளர்ச்சிக்குக் கால்நடை பராமரிப்புத் துறை வழிவகுத்து வருகிறது.

## 10.1 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்

சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள், கிராமங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் கால்நடை சுகாதார வசதிகளை வழங்குவதற்காக, ஆண்டிற்கு ரூ.7.76 கோடி ரூபாய் மொத்த செலவில் நடத்தப்பட்டு வருகின்றன.

இம்முகாம்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் பின்வருமாறு:

- நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தல்
- குடற்புழு நீக்கம் செய்தல்

- நோய்களுக்கு எதிரான தடுப்பூசி
- ஆண்மை நீக்கம்
- செயற்கை முறை கருவூட்டல்
- மலடு நீக்க சிகிச்சைகள்
- சினை பரிசோதனை
- சுண்டுவாத அறுவை சிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள் (CLP)
- சிறப்பு மகப்பேறியல் மருத்துவ உதவி
- விவசாயிகளிடையே கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- இலவசமாக தாது உப்பு கலவைகள் வழங்குதல்
- தீவன பயிர் உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு
- கால்நடை பொருட்கள் உற்பத்தி, சந்தைப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல் குறித்த நுணுக்கங்கள்

2022-2023 ஆம் ஆண்டில், 7,760 சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 8.93 இலட்சம் விவசாயிகளின் 81.92 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் பயன்பெற்றுள்ளன.

## 10.2 தீவன அபிவிருத்தி

சீரான விகிதத்தில், நல்ல தரமான தீவனம் கிடைப்பதை உறுதி செய்வதன்மூலம் மட்டுமே அதிக பால் உற்பத்தியை எய்த முடியும். மேய்ச்சல் நிலங்களிலிருந்து கிடைக்கும் தீவனத்தைவிட, பயிரிடப்பட்ட தீவனங்களிலிருந்து பெறப்படும் ஊட்டச்சத்து கால்நடை பெருக்கத்திற்கு உகந்ததாகும்.

இது கால்நடைகளின் நல்ல ஆரோக்கியத்தைப் பராமரிக்கவும், இனப்பெருக்கத் திறனை மேம்படுத்தவும் உதவுகிறது. அடர் தீவனத்தில் கிடைப்பதை போல் பசுந்தீவனத்திலிருந்து கிடைக்கும் சத்துக்கள் சம அளவிலும் மலிவாகவும் உள்ளதால் கால்நடைகளுக்குப் பசுந்தீவனத்தை அதிகளவில்

*2023 ஏப்ரல் 5]*

*பயன்படுத்துவதன்மூலம் பால் உற்பத்திச் செலவினைக் குறைத்து அதிக இலாபம் கிடைத்திட வழி வகுக்கின்றது.*

*அதிக மகசூல் தரும் தீவன இரகங்கள் குறைந்த அளவில் கிடைப்பது, மேம்படுத்தப்பட்ட இரகங்களின் தரமான விதைகள் போதிய அளவு இல்லாமை, தீவன அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை இல்லாமை, மேய்ச்சல் நிலங்களின் ஒழுங்கற்ற மேய்ச்சல் மேலாண்மை போன்றவை தீவனப் பயிர்களின் பரப்பை அதிகரிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்களாகும்.*

*சான்றளிக்கப்பட்ட விதைகள்/மேம்படுத்தப்பட்ட உயர் விளைச்சல் தரக்கூடிய தீவனப் பயிர்களின் தரமான நடவுப் பொருட்களைப் பயன்படுத்தி, பசுந்தீவன விளைச்சலை மேம்படுத்துவதால் பசுந்தீவனத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கலாம். ஆண்டு முழுவதும் பசுந்தீவன உற்பத்தியை உறுதி செய்வதற்காக, தேவைக்கு மிகுதியாக உள்ள தீவனத்தை ஊறுகாய் புல்லாக (சைலேஜ்) அல்லது வைக்கோல் வடிவில் சேமித்து வைப்பது அவசியம்.*

### 10.2.1 துறையினால் மேற்கொள்ளப்படும் தீவன உற்பத்தி முயற்சிகள்

*தேசிய கால்நடை இயக்கம் (NLM), ஒருங்கிணைந்த தீவன மேம்பாட்டு இயக்கம் (IFDM), நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் மானாவாரி பகுதி மேம்பாடு (NMSA — RAD) போன்ற பல்வேறு மாநில மற்றும் ஒன்றிய அரசின் பங்களிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் தீவனப் பற்றாக்குறை, குறிப்பாக தீவனத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்கள் மற்றும் வறட்சி/வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களைச் சமாளிக்க தீவன உற்பத்தியை அதிகரிப்பது, கிடைக்கும் தீவனங்களைப் பாதுகாத்தல் மற்றும் தீவன மேலாண்மைச் செய்தல் ஆகியவற்றில் இத்துறையானது கவனம் செலுத்துகிறது.*

### 10.2.2 தீவன உற்பத்தி நடவடிக்கைகள்:

#### 10.2.2.1 துறைசார் பண்ணைகளில் தீவன மேம்பாட்டு நடவடிக்கைகள்

*கடந்த பல ஆண்டுகளாகத் துறையின் இடைவிடாத முயற்சியால், தீவனப் பெருக்கம் என்ற கருத்து விவசாயிகள்*

மத்தியில் பிரபலமடைந்துள்ளது. இதனால் விவசாயிகளிடையே தரமான தீவன புல்கரணைகள் உற்பத்தி செய்து, தங்களுக்குள் பரிமாற்றம் செய்து கொண்டும் வருகின்றனர். செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஒரு பேலர் அலகு நிறுவப்பட்டு, பருவக் காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனங்கள் அறுவடை செய்து, பேல்களாக்கப்பட்டு தீவனப் பற்றாக்குறைக் காலத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், செட்டிநாடு, நடுவூர் மற்றும் அயலின கால்நடை பெருக்குப் பண்ணை ஈச்சங்கோட்டைக்கு தலா ஒரு பேலர் இயந்திரம் கொள்முதல் செய்யப்படவுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில், 12 துறை சார்ந்த பண்ணைகளில் இதுவரை 1167.81 ஏக்கர் பரப்பளவில் தீவனப் பயிரிடப்பட்டு, சுமார் 18,999 மெ.டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், 21.47 இலட்சம் தீவன புல்கரணைகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

### 10.2.2.2 தீவன உற்பத்தி மற்றும் பாதுகாப்பு குறித்த மேம்பட்ட பயிற்சி

கால்நடை உற்பத்தியை அதிகரிப்பதற்காக தீவன உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மைக் குறித்த அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் தெற்காசியாவின் முதன்மையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான ஜான்சியில் உள்ள இந்திய புல்வெளி மற்றும் தீவன ஆராய்ச்சி நிறுவனத்தில் (IGFRI) 5 நாட்கள் கொண்ட மேம்பட்ட பயிற்சி துறை அலுவலர்களுக்கு வழங்கப்படும்.

### 10.2.2.3 விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

விவசாயிகளிடையே வைக்கோல்/தீவன கட்டுகளாகப் பயிர் மிச்சங்களைப் பாதுகாப்பதைத் தவிர, புதிய தீவன உற்பத்தி தொழில்நுட்பங்கள், சைலேஜ் பேல்களாக, தீவன கட்டிகளாக தீவனத்தைப் பாதுகாத்தல் போன்ற நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடையே இல்லாததால், சமச்சீர் ஊட்டச்சத்து நிறைந்த பசுந்தீவனங்களைக் கால்நடைகளுக்கு வழங்குவது, கால்நடைகளில் ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பசுந்தீவன உற்பத்தி ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு கிராம அளவில் "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" மூலம் உருவாக்கப்பட்டு வருகிறது.

*2023 ஏப்ரல் 5]*

**10.2.2.4 வணிக ரீதியிலான தீவன உற்பத்தி**

*வணிக ரீதியிலான தீவன உற்பத்தி மற்றும் பாதுகாப்பு நுட்பங்களை ஊக்குவிக்கும் வகையில், நான்கு தொழில் முனைவோரை உருவாக்கி ஆண்டுக்கு 3,000 மெட்ரிக் டன் மற்றும் அதற்கு மேல் உற்பத்தித் திறன் கொண்ட வணிக ரீதியிலான சைலேஜ் பேல் தயாரிக்கும் அலகினை நிறுவ தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு 25% மானியமாக ரூ.10.50 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அலகுகள் மாநிலத்தின் நான்கு வெவ்வேறு மண்டலங்களில், அந்தந்தப் பகுதிகளில் உள்ள தீவன தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் நிறுவப்பட்டு வருகிறது.*

**10.2.2.5 அறிவியல் ரீதியாக மேய்க்கால் நிலங்களைப் புதுப்பித்தல்**

*கிராமப்புறப் பொருளாதாரத்திற்குக் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குக் கால்நடை வளர்ப்பு இன்றியமையாதது ஆகும். இந்த விவசாயிகள் அவர்களது கால்நடைகளின் தீவனத் தேவைகளுக்குத் தங்கள் கிராமத்தில் உள்ள பொது மேய்ச்சல் நிலங்களையே சார்ந்துள்ளனர். எனவே, கிராம அளவில் பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்திட, விஞ்ஞான ரீதியாக மேய்க்கால் நிலங்களைப் புதுப்பிப்பது அவசியமாகிறது. இதற்கென முன்னோடித் திட்டமாகத் தற்போது மாநிலத்தில் 31 மாவட்டங்களில் 1,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தை மேம்படுத்தும் பணி ரூ.1.67 கோடி ஒதுக்கீட்டுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிதியினை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் குறைந்த சத்துள்ள புற்களை அகற்றி, அதிக மகசூல் தரும் பல்லாண்டு புல் மற்றும் பயறு வகை தீவனங்கள் கால்நடைகளுக்கு ஆண்டு முழுவதும் கிடைக்கும் வண்ணம் வளர்க்கப்பட்டு வருகிறது. இதனால் கால்நடைகளின் பால் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும்.*

**10.2.2.6 மாற்று தீவனப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல்**

*பல்லாண்டு தானிய/புல்வகை மற்றும் பயறுவகை தீவனப் பயிர்களை நன்கு வளர்ந்துள்ள தோப்புகள்/பழத்தோட்டங்களில் ஊடுபயிராக சாகுபடி செய்வதன்மூலம் தரமான சமச்சீர் தீவனங்கள் கால்நடைகளுக்கு ஆண்டு முழுவதும் வழங்கிட இயலும். எனவே, தீவனப் பயிர்களை ஊடுபயிராகப் பயிரிடுவதை ஊக்குவிக்க, சாகுபடி ஊக்கத் தொகையாக ஏக்கருக்கு ரூ.3,000/—*

[2023 ஏப்ரல் 5

என்ற வீதத்தில் 2,000 ஏக்கருக்கு ரூ.60.00 இலட்சம் செலவில் 2022-2023 ஆம் ஆண்டுக்கு திட்டம் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டமானது 2023-2024 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

### 10.2.3 தீவன பதப்படுத்துதல்/சேமிப்பு நடவடிக்கைகள்

***நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்—*** *பருவமழைக் காலத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனத்தை விவசாயிகளே ஊறுகாய் புல் (சைலேஜ்) தயாரித்தல்மூலம் பாதுகாத்து, தீவனப் பற்றாக்குறைக் காலத்தில் பயன்படுத்துவதன்மூலம் ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் கால்நடைகளுக்கு வழங்கப்படுவதை செயல் விளக்கங்களாக விளக்கும்வகையில், 30 மாவட்டங்களில் 125 சைலேஜ் தயாரிக்கும் அலகுகள் ரூ.1.17 கோடி செலவில் செயல்விளக்க அலகுகளாக நிறுவப்பட்டுள்ளன.*

*இத்துறை மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளின்மூலம், விவசாயிகளின் சொந்த நிலம், மேய்க்கால் நிலங்களில் தீவனப் பயிரிடுதல் மற்றும் வணிகரீதியான தீவன உற்பத்தி வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருவதால் வரும் காலங்களில் தீவனத் தேவைக்கும் உற்பத்திக்குமான இடைவெளி குறைக்கப்படும்.*

### 10.3 பெண்களை தொழில் முனைவோராக்குதல்

*கிராமப்புற ஏழை விதவைகள்/கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நிலைநிறுத்தவும், ஓர் ஊராட்சி ஒன்றியத்தில், 100 பயனாளிகளுக்குத் தலா 5 வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள்வீதம், மொத்தம் 38,800 பயனாளிகளுக்கு 1,94,000/— வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் 37 மாவட்டங்களில் (சென்னை தவிர) வழங்கப்பட்டுள்ளன.*

### 10.4 கோழியின அபிவிருத்தி

### 10.4.1 கிராமப்புறங்களில் சிறிய அளவிலான (250 கோழிகள்/அலகு) நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள் நிறுவுதல்

*நாட்டுக் கோழி வளர்ப்பில் தொழில்முனைவோரை ஊக்குவிக்க சிறிய அளவிலான (250 கோழிகள்/அலகு) 100 நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள், 50 சதவிகித மானியத்தில் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம்,*

*விருதுநகர், கடலூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 10 மாவட்டங்களில் ரூபாய் 180 இலட்சம் செலவில் நடப்பு நிதியாண்டில் நிறுவப்பட்டு வருகின்றன.*

*இத்திட்டத்தின் கூறுகள் பின்வருமாறு:*

- *கொட்டகைக் கட்டுமானம்*
- *உபகரணங்கள் வாங்குதல்*
- *குஞ்சுகள் வாங்கும் செலவு மற்றும்*
- *4 மாதங்களுக்குத் தேவையான தீவனச் செலவு (கோழி வளரும் வரை)*

*இத்திட்டத்தின்மூலம், பயனாளிகள் நாட்டுக் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்தும், முட்டைகளை விற்பனை செய்தும், வளர்ந்த பெண் கோழிகள் மற்றும் சேவல்களை இறைச்சிக்காக விற்பனை செய்தும், ஒரு வருடத்திற்கு ரூ.2.31 இலட்சம் வரை வருமானம் ஈட்டலாம்.*

**10.4.2 துறைப் பண்ணைகளில் செயல்படும் கோழி அலகுகள்**

*துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் கோழிப் பண்ணை அலகுகள்மூலம் சிறந்த நடைமுறைகள் மற்றும் புதிய அறிவியல் தொழில்நுட்பங்கள் கோழிப் பண்ணையாளர்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.*

**10.4.2.1 மாவட்டக் கால்நடை பண்ணை, அபிஷேகப்பட்டியில் கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்**

*தரமான நாட்டுக் கோழிக் குஞ்சுகளை தென் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கில் திருநெல்வேலி மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் அபிஷேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 60:40 என்ற வீதத்தில் ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன், நாட்டுக் கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் ரூ.942.31 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் முடிவு பெறும் தருவாயில் உள்ளன.*

### 10.4.2.2 செட்டிநாடு, மாவட்டக் கால்நடை பண்ணையில் கோழி இனப் பெருக்க வளாகம், குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை அமைத்தல்

*தரமான நாட்டுக் கோழிக் குஞ்சுகளை கிழக்கு மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கில் சிவகங்கை மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் செட்டிநாடு, மாவட்டக் கால்நடைப் பண்ணையில், மாநில அரசின் நிதி பங்களிப்புடன், நாட்டுக் கோழி இனப் பெருக்க வளாகம், கோழிக் குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை நடப்பு நிதியாண்டில் ரூ.1381.92 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.*

### 10.5 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TN IAMP)

*இத்திட்டத்தின்கீழ், 34 மாவட்டங்களில் உள்ள 66 உப வடிநிலங்களில் ரூ.38 கோடியில் 6 ஆண்டுக் கால அளவில் கால்நடை பராமரிப்பின் முக்கியப் பணிகளான பால்வள ஆர்வலர் குழுக்கள் அமைத்தல், கன்றுகள் மேலாண்மை, மடிவீக்க நோய் மேலாண்மை, மலடு நீக்க நோய் சிகிச்சை முகாம், திட்டமிடப்பட்ட இனப்பெருக்கம், விவசாயிகளின் இருப்பிடத்திலேயே செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் தீவன அபிவிருத்தி ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*நான்கு கட்டங்களில் 52 உப வடிநிலப் பகுதிகளில் எய்தப்பட்ட சாதனைகள்:*

- *3000 விவசாயிகள் அடங்கிய 120 பால்வள ஆர்வலர் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.*
- *25,652 கிடேரிக் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.*
- *25,274 கிடேரிக் கன்றுகளுக்கு தாது உப்பு கட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.*
- *40,040 பசுக்களுக்கு மடிவீக்க நோய் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.*
- *4,148 மலடு நீக்க நோய் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.*

*2023 ஏப்ரல் 5]*

- *திட்டமிடப்பட்ட இனப் பெருக்கத்தின்கீழ் 36,345 பசுக்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.*
- *8,19,968 செயற்கைமுறை கருவூட்டல் விவசாயிகளின் இருப்பிடத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.*
- *4,313 ஹெக்டேர் தீவன சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.*

*மேற்கண்ட நடவடிக்கைகளால் 3.47 இலட்சம் விவசாயிகள் பயனடைந்து, 2.32 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன.*

## 10.6 கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்

*சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான 1102.25 ஏக்கர் பரப்பில் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையமானது ரூ.564.44 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.*

### 10.6.1 குறிக்கோள்கள்

1. *விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளும்படியான, நிரூபிக்கப்பட்ட அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகள் நிறுவுதல். உயர் மரபுத்திறன் கொண்ட கன்றுகள்/கோழிக் குஞ்சுகள் விவசாயிகள் தங்களின் கால்நடை/கோழியின வளத்தை மேம்படுத்துவதற்காக வழங்குதல்.*
2. *கால்நடை மருத்துவ அறிவியல், பால்வளம், கோழியினங்கள் மற்றும் உணவுத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் பிரத்யேக மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.*
3. *கால்நடை மருத்துவ அறிவியல், பால்வளம், கோழியினங்கள் மற்றும் உணவுத் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்பிற்கான வசதிகள் உருவாக்குதல்.*
4. *மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் களத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளை அறிவதற்கும், அதற்குத் தகுந்த தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகளை உருவாக்குதல்.*

5. விவசாயிகள் மற்றும் கள கால்நடை மருத்துவர்களின் தேவைக்கேற்ப பல்வேறு திறன் மேம்பாடுப் பயிற்சிகள் வழங்குதல்.

6. விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் பல்துறை சார்ந்த அறிவுரைகள் வழங்குதல், கால்நடை உற்பத்திப் பொருட்களை முறையாகச் சந்தைப்படுத்தும் வாய்ப்பு உருவாக்குதல்.

இந்நிறுவனத்தை ஆசியாவில் ஒரு புகழ்பெற்ற நிறுவனமாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது, கல்வி, ஆராய்ச்சி, உற்பத்தி மற்றும் செயலாக்கம், கால்நடைத் துறை தொடர்பான விரிவாக்கம் மற்றும் வணிக வளாகங்கள் அனைத்தும் ஒரே குடையின்கீழ் உள்ளன. ஒன்றோடொன்று தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் ஒன்பது முக்கிய வளாகங்களாகப் பின்வருமாறு அமைக்கப்பட்டு வருகிறது.

1. **கால்நடைப் பண்ணை வளாகம்**—இவ்வளாகத்தில் உள்நாட்டு மாட்டினப் பிரிவு, செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு, பன்றிப் பிரிவு, உள்நாட்டு நாயினப் பிரிவு, கால்நடை தனிமைப்படுத்தும் பிரிவு, கால்நடை மருத்துவமனை, ஆய்வகம் மற்றும் கோழியினப் பிரிவுகள் இடம்பெற்று கட்டுமானப் பணிகள் முடிவுற்றன.

2. **மீன்வள செயல்முறை வளாகம்**–இவ்வளாகத்தில் தீவிரமுறையில் காற்றுப் புகுத்திகளைப் பயன்படுத்தி மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதி, நவீன மீன் விற்பனையகம், மீன் வளர்ப்புடன்கூடிய நீர்த் தாவர வளர்ப்புப் பிரிவு மற்றும் அலங்கார மீன் வளர்ப்புப் பிரிவு ஆகியவை அமைக்கப்பட்டு முடிவடைந்துள்ளன.

3. **முதுநிலைக் கல்வி/பட்ட மேற்படிப்பு வளாகம்**–இவ்வளாகத்தில் நிர்வாகக் கட்டடம், கல்வி வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வகங்கள், ஆசிரியர் அறைகள், விடுதிகள் மற்றும் குடியிருப்புகளின் கட்டடப் பணிகள் மற்றும் மின் பணிகள் ஆகியவை முடிவடைந்துள்ளன. சாலை வசதிகள், சுற்றுச்சுவர் மற்றும் கல்வெட்டுகள் ஆகிய பொதுப் பணி வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

2023 ஏப்ரல் 5]

4. **விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகம்**– இவ்வளாகத்தில் விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாடுப் பயிற்சி மையம், உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் மையம், கால்நடைப்பண்ணை மாதிரி அலகுகள், ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கான விடுதிகள் ஆகியவற்றின் கட்டடப் பணிகள் மற்றும் மின் பணிகள் ஆகியவை முடிவடைந்துள்ளது. சாலை வசதிகள், சுற்றுச்சுவர் மற்றும் கல்வெட்டுகள் ஆகிய பொதுப் பணி வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

5. **ஆராய்ச்சி வளாகம்**—கால்நடை இனப் பெருக்கம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி பிரிவுகள் நிறுவப்பட்டு வருகின்றன.

6. **தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம்**— தொழில் உருவாக்க மையமும், தொழில் ஒருங்கிணைப்பு மையமும் இடம்பெற ஏதுவாக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

7. **இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகம்**— செம்மறியாடு, வெள்ளாடு, கோழி மற்றும் பன்றியினங்களுக்கெனத் தனித்துவமான வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

8. **பசுந்தீவன ஆராய்ச்சி மண்டலம்** – இத்தீவன ஆராய்ச்சி வளாகத்தில் தீவனப் பயிர் உற்பத்தி, மரவகை தீவனப் பயிர்களுடன்கூடிய மேய்ச்சல் நிலம், உலர் தீவன உற்பத்தி, ஊறுகாய்ப் புல் உற்பத்தி மற்றும் தீவன விதை உற்பத்தி ஆகியவற்றிற்கான பரப்புகள் வரையறுக்கப்பட்டு, ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

   முதற்கட்டமாக 25 ஏக்கர் நிலப்பரப்பில் கோ.எப்.எஸ்.29 தீவனப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு, உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணைக்கு வழங்கப்பட்டுள்ளது.

9. **பொதுமக்கள் கலந்துரையாடும் பகுதி**—இப்பகுதியில் குழந்தைகள் பூங்கா, கால்நடை அறிவியல் மற்றும் தொடர்புடைய துறைகளில் பொதுமக்களுக்கு நிகழ்ச்சிகள்

நடத்தும் அரங்கு, வாகன நிறுத்தம், ஓய்வு அறைகள், சில்லறை அங்காடி, வங்கிகள் மற்றும் தானியங்கி பணம் வழங்கும் மையம் ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், கால்நடை உற்பத்திப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள், பசுந்தீவன உள்ளீடுகள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை விற்பனை செய்வதற்கான விற்பனையகங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

திறன் மேம்பாட்டு வளாகம், தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம், ஆராய்ச்சி வளாகம், இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகம், முதுநிலைக் கல்வி வளாகம் மற்றும் கால்நடைப் பண்ணை வளாகத்தில் உள்ள கோழியினப் பிரிவுகள், ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தின் நிர்வாக அலுவலகம், பொதுமக்கள் கலந்தாலோசிக்கும் பிரிவு, முக்கிய விருந்தினர் இல்லம் மற்றும் நுழைவு வாயில் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன.

கால்நடைப் பண்ணை வளாகத்தில் அமையவிருக்கும் உள்நாட்டு மாட்டினப் பிரிவு, செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு, பன்றிப் பிரிவு, உள்நாட்டு நாயினப் பிரிவு, கால்நடை தனிமைப்படுத்தும் பிரிவு, கால்நடை மருத்துவமனை, ஆய்வகம் மற்றும் கோழியினப் பிரிவுகள் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகத்தில் அமையவிருக்கும் உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் மையம், கால்நடைப் பண்ணை மாதிரி அலகுகள், ஒருங்கிணைந்த பண்ணை அமைப்புகள் ஆகியவற்றின் பணிகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு, இதன் கட்டடப் பணிகள் மற்றும் மின் இணைப்பு பணிகள் முடிவடைந்துவிட்டன.

மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 110/22KV துணை மின் நிலையப் பணிகளை செய்து வருகின்றன. வேளாண் பொறியியல் துறை வாயிலாக நுண்ணீர் பாசனப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 10.6.2 விவசாயிகளுக்கான பயிற்சி, உயர் மரபுத் திறன் கொண்ட ஜெர்ம்ப்ளாசம் கிடைப்பது, சந்தை தகவல்களை வழங்குதல்

விவசாயிகளுக்குச் சிறந்த மரபுத்தன்மை உடைய கால்நடைகள் மிகக் குறைந்த விலையில் கிடைப்பதால் அவர்கள்

*2023 ஏப்ரல் 5]*

*தங்கள் பண்ணையின் தரத்தை உயர்த்தவும், அதன் வாயிலாக கால்நடைகளின் உற்பத்தித் திறனை பெருக்குவதோடு, அதிக இலாபம் சம்பாதிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.*

*நவீன வர்த்தக வசதிகளின் விளைவாக இடைத்தரகர்கள் நீக்கப்படுவதால், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல சந்தை மதிப்பை பெற்றுத் தர இயலும். அழிவின் விளிம்பில் உள்ள உள்நாட்டு கால்நடை இனங்கள் பாதுகாக்கப்படும். கால்நடை வளர்ப்பில் வணிக ரீதியான முயற்சிகளில் தொழில் முனைவோருக்கான புதிய உத்திகள் உருவாக்கப்படும்.*

*கால்நடை உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டிய பொருட்கள் தயாரிப்பிற்கான புதிய உத்திகள் தொழில் முனைவோருக்கான வியாபார நோக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்.*

### 10.6.3 தொழில் முனைவோருக்கான பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் சந்தை நுண்ணறிவினை வழங்கும் பிரிவு

*பல்நோக்குடன்கூடிய ஒருங்கிணைந்த பண்ணை வசதிகள் ஆற்றல்மிக்க தொழில் முனைவோருக்குக் கால்நடை வளர்ப்பில் தனிக் களத்தினை உருவாக்கிட ஏதுவாக இப்பிரிவு அமைக்கப்பட்டு வருகிறது.*

*மாநிலத்திற்குள் மற்றும் மாநிலத்திற்கு வெளியே சந்தைகளில் உள்ள பல்வேறு பொருட்களின் விலைகள் குறித்து தொழில் முனைவோருக்கு சந்தை நுண்ணறிவும், ஏற்றுமதி வசதியும் செய்து தரப்படும்.*

### 10.6.4 மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்குக் கற்றலுக்கான உலகத்தர வசதிகளை வழங்குதல்

*ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்குப் புதிய தொழில்நுட்பங்கள் புகழ் பெற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதோடு, கூட்டு ஆராய்ச்சிகளில் ஈடுபடவும் வாய்ப்புகள் அமையும்.*

## 10.6.5 நுகர்வோர்

நுகர்வோருக்குத் தரம் உயர்ந்த, சுத்தமான கால்நடை உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கும். மின்னணு வர்த்தக வசதியானது பல தரப்பட்ட புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட கால்நடை உற்பத்திப் பொருட்கள் எளிதில் கிடைக்க வழிவகுக்கும்.

இத்தகைய பெரிய அளவிலான திட்டத்தின் சுமூக செயல்பாட்டிற்குத் தேவையான நீரை தடையற்ற முறையில் வழங்கிட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இத்திட்டத்திற்கு நாளொன்றுக்கு தேவையான 10 மில்லியன் லிட்டர் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சிறப்பு குடிநீர் வழங்கல் திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலமாக காவிரி நதிப் பாதையிலுள்ள கூடக்கல் என்ற இடத்திலிருந்து இவ்வளாகத்திற்கு சுமார் 155 கி.மீ. தொலைவிற்குக் குழாய்கள் வாயிலாக குடிநீர் கொண்டு வரப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 11. கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பு

கால்நடை மருத்துவ நிலையங்கள், நோயுற்ற கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் மையங்களாகவும், அறிவுசார் மையங்களாகவும் மற்றும் விரிவாக்க மையங்களாகவும் உருமாறியுள்ளன. ஊரக மேம்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டு, மாநில அரசின் நிதி, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF), ஒன்றிய அரசின் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP), கால்நடை மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டம்மூலம் (ESVHD) துறையின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்டங்களின்கீழ் இதுவரை ரூ.645.08 கோடி செலவில் 2100 கால்நடை நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது ரூ.96.90 கோடி செலவில் 144 கால்நடை நிலையங்களுக்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2022-2023-ல் ரூ.25.00 கோடி செலவில் 37 கால்நடை நிலையங்களுக்கான புதிய கட்டடப் பணிகள் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி XXVIII மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*2023 ஏப்ரல் 5*]

## 12. கால்நடை கணக்கெடுப்பு மற்றும் மாதிரி வரைவுத் திட்டம்

### 12.1 கால்நடை கணக்கெடுப்பு

*கால்நடை கணக்கெடுப்புப் பணி 1919—20 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கால்நடை கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. இது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகளை உள்ளடக்கியது.*

*20-வது கால்நடை கணக்கெடுப்பு 2019 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி கையடக்கக் கணினியை பயன்படுத்தி நடத்தப்பட்டது. கால்நடை கணக்கெடுப்புப் பணி 100 சதவிகிதம் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகிறது.*

**அட்டவணை 12: அனைத்து இந்திய 20-வது கால்நடை கணக்கெடுப்பு விவரங்கள் மற்றும் அதனில் தமிழ்நாட்டின் பகிர்வு**

| வ. எண் | இனங்கள் | அனைத்து இந்திய 20-வது கால்நடை கணக்கெடுப்பு விவரம் | தமிழ்நாட்டின் 20-வது கால்நடை கணக்கெடுப்பு |
|---|---|---|---|
| 1 | அயலின/கலப்பின பசுவினம் | 51356405 | 7724719 |
| | நாட்டின பசுவினம் | 142106466 | 1793941 |
| | **மொத்த பசுவினம்** | **193462871** | **9518660** |
| 2 | எருமையினம் | 109851678 | 518795 |
| 3 | மிதுன் | 386305 | 0 |
| 4 | யாக் | 57570 | 0 |
| | **மொத்த பசு மற்றும் எருமையினங்கள்** | **303758424** | **10037455** |
| 5 | அயலின/கலப்பின செம்மறியாடுகள் | 4088133 | 277650 |
| | நாட்டின செம்மறியாடுகள் | 70172482 | 4222841 |
| | **மொத்த செம்மறியாடுகள்** | **74260615** | **4500491** |

| வ. எண் | இனங்கள் | அனைத்து இந்திய 20-வது கால்நடை கணக்கெடுப்பு விவரம் | தமிழ்நாட்டின் 20-வது கால்நடை கணக்கெடுப்பு |
|---|---|---|---|
| 6 | வெள்ளாடுகள் | 148884786 | 9888746 |
| 7 | குதிரைகள் மற்றும் மட்ட குதிரைகள் | 342226 | 5417 |
| 8 | கழுதைகள் | 123587 | 1428 |
| 9 | கோவேறு கழுதைகள் | 84261 | 305 |
| 10 | ஒட்டகங்கள் | 251956 | 7 |
| 11 | அயலின/கலப்பினப் பன்றிகள் | 1896944 | 17106 |
| | நாட்டினப் பன்றிகள் | 7158544 | 49666 |
| | **மொத்த பன்றிகள்** | **9055488** | **66772** |
| | **மொத்த கால்நடைகள்** | **536761343** | **24500621** |
| 12 | நாய்கள் | 9434039 | 1296655 |
| 13 | முயல்கள் | 549941 | 26513 |
| 14 | புழக்கடை கோழியினங்கள் | 317073357 | 21264570 |
| | பண்ணை கோழியினங்கள் | 534736574 | 99516530 |
| | **மொத்த கோழியினங்கள்** | **851809931** | **120781100** |

## 12.2 ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்

கடந்த 1977-1978 முதல் ஒவ்வோர் ஆண்டும் ஒன்றிய அரசின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் மாதிரி வரைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் வழிகாட்டுதலின்படி பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தில் ஓர் ஆண்டானது கோடைக் காலம், மழைக் காலம் மற்றும் குளிர் காலம் என மூன்று பருவங்களாகப்

*2023 ஏப்ரல் 5]*

*பிரிக்கப்பட்டு, பருவ வேறுபாடுகளால் ஏற்படும் உற்பத்தி மாற்றங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் 15 விழுக்காடு கிராமங்களில் மேற்கூறிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது.*

*கால்நடை வளர்ப்போரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, பல்வேறு திட்டங்களை வகுக்கவும், மேற்பார்வையிடவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும் அவற்றின் விளைவுகளால் ஏற்படும் தாக்கத்தைக் கணக்கிடவும் மாதிரி வரைவுத் திட்டத்தின்மூலம் பெறப்படும் புள்ளிவிவரங்கள் பயன்படுகின்றன.*

**அட்டவணை 13: பருவம்வாரியாக கால்நடை பொருட்கள் உற்பத்தி மதிப்பீடு 2021-2022**

| **இனம்** | **கோடைக்காலம் (மார்ச் முதல் ஜூன் வரை)** | **மழைக் காலம் (ஜூலை முதல் அக்டோபர் வரை)** | **குளிர்காலம் (நவம்பர் முதல் பிப்ரவரி வரை)** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| *பால் (இலட்சம் மெட்ரிக் டன்களில்)* | *33.14* | *34.11* | *33.82* | *101.07* |
| *முட்டை (மில்லியன் எண்களில்)* | *6630.51* | *7110.81* | *7092.27* | *20833.59* |
| *இறைச்சி (இலட்சம் மெட்ரிக் டன்களில்)* | *232.50* | *223.02* | *230.36* | *685.88* |

## 13. ஜல்லிக்கட்டு-தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார அடையாளம்

*ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டில் கிராம மக்களிடையே நடத்தப்படுகின்ற 5,000 ஆண்டு பழமை வாய்ந்த பாரம்பரியமிக்க கலாச்சார நிகழ்ச்சியாகும். ஜல்லிக்கட்டு, தமிழ்நாட்டின் சமூக பண்பாட்டுப் பழக்கங்களுடன் வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ளதாகும்.*

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 5

பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம் 2017)—ன்படி ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் மே மாதம் வரை ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்த மாநில அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுகின்றன. தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததன் வாயிலாக, பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம், 2017) முறையாகப் பின்பற்றப்படுவதை இத்துறை உறுதி செய்துள்ளது. தமிழகத்தின் கலாச்சார உணர்வுகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், காளைகள், தேவையில்லாத துன்பங்களுக்கு உட்படுத்தப்படுவதும் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் காரணமாக மாநிலத்தில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது அசம்பாவிதங்கள் நடைபெறாமல் பெருமளவில் தவிர்க்கப்படுகிறது. மேலும், ஏறுதழுவுதலின்போது 25 பேர் மட்டுமே களத்தில் இருக்க வேண்டும் என்றும், ஒரு காளையை ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே பிடிப்பதை உறுதி செய்ய காவல் துறைக்குக் கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

## 14. பிராணிகள் நலம் காக்கும் நடவடிக்கைகள்

### 14.1 தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் செயல்பாடுகள் (Tamil Nadu Animal Welfare Board)

இந்திய அரசமைப்பு சட்டப் பிரிவு 51(A)(g), அனைத்து உயிரினங்களும், பற்றுதலுடனும், மனிதாபிமானத்துடனும் நடத்தப்படுவதை உறுதி செய்ய வழிகாட்டுகிறது.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசால் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும் உள்ளனர். மற்ற உறுப்பினர்களில் தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட துறைகளின் முதன்மைச் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட துறைகளின் ஆணையர்கள்/ இயக்குநர்கள், பதிவாளர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் அடங்குவர்.

*2023 ஏப்ரல் 5*]

**14.1.1 "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்"**

*தமிழ்நாடு அரசு 2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்போது, அனைத்து உயிர்களையும் ஒப்பிட்டுப் பறைசாற்றி "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று பல்லுயிர் ஓம்பிய வள்ளலாரின் 200—வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, ஆதரவற்ற, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" என்ற புதிய திட்டம் துவக்கப்படும் என அறிவித்தது. இந்தத் திட்டம் செயல்படுத்திட 2022—23 ஆம் நிதியாண்டில் ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

1) *ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட, காயமடைந்த தெருவில் சுற்றித் திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்க நிதியுதவி வழங்குதல்.*

2) *காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக* SPCAs/AWOs/NGOs-*க்கு மருத்துவ அவசர சிகிச்சை ஊர்தி (*Ambulance*) கொள்முதல் செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.*

3) *'வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்' என்னும் திட்டத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட, காயமடைந்த, தெருவில் சுற்றித் திரியும் விலங்குகளுக்கு உறைவிடம் (*Animal Shelter*) கட்டுவதற்கு நிதியுதவி வழங்குதல்.*

4) *தெரு நாய்களின் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கருத்தடை அறுவை சிகிச்சை (*Animal Birth Control*) மற்றும் ஆதரவற்ற தெரு நாய்கள் / விலங்குகளுக்கு வெறிநோய் தடுப்பூசி செலுத்துவதற்கு நிதியுதவி வழங்குதல்.*

*முதற்கட்டமாக ஐந்து அரசு சாரா தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி வழங்கிடவும், உறைவிடம் மற்றும் அவசர ஊர்தி சேவைக்காகவும் மொத்தம் ரூ.2.14 கோடி ஒப்பளிக்கப்பட்டு, 16.1.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதல் தவணையாக ரூ.88.05 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.*

## 14.2 பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம் (Society for Prevention of Cruelty to Animals)

*அனைத்து மாவட்டங்களிலும் பிராணிகள் துயர் துடைப்பு சங்கங்கள் (SPCAs) தோற்றுவிக்கப்படுதல் மற்றும் முறைப்படுத்துதலானது விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960, பிரிவு 38, உட்பிரிவு 1—ன்கீழ், ஒன்றிய அரசிதழில் வெளியிடப்பட்ட மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் சுற்றறிக்கை எண். S.O.271(E), நாள்.26.3.2001—ன்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.*

*மாவட்ட பிராணிகள் துயர் துடைப்பு சங்கத்தின் (SPCA) நோக்கங்களாகிய, பிராணிகளின் உரிமைகள், சுதந்திரம் மற்றும் நலன்களை உறுதி செய்வதும், பிராணிகளுக்கு இழைக்கப்படும் தீங்குகளிலிருந்து அவற்றைப் பாதுகாப்பதும், நிவர்த்தி செய்வதும் மற்றும் தனது கடமைகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கான துணைச் சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குதல், பிராணிகள் உறைவிடங்கள் மற்றும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த அமைப்புகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் இயங்கி வருகிறது. இந்தச் சங்கங்களின் செயல்பாடுகள் மாவட்ட மேலாண்மை குழுவின்மூலம் கண்காணிக்கப்படுகின்றன.*

## 14.3 விலங்குகள் இனவிருத்திக் கட்டுப்பாடுத் திட்டம்

*ஆதரவற்ற நாய்கள் அபரிமிதமாகப் பெருகுவதைத் தடுப்பதற்காகவும், வெறிநாய்க்கடி நோய் நிகழ்வுகளைக் குறைப்பதற்காகவுமே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தெரு நாய்களின் எண்ணிக்கையை நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய அரசு பிராணிகள் கருத்தடை (நாய்கள்) விதி, 2001—ஐ வகுத்துள்ளது.*

*இத்திட்டத்தின்கீழ் ஆதரவற்ற நாய்களை மனிதாபிமான முறையில் பிடித்து, கருத்தடை செய்து, வெறிநோய் தடுப்பூசி செலுத்தி, அவை பிடித்து வரப்பட்ட பகுதிகளிலேயே மறுபடியும் விடப்படுகின்றன.*

*2023 ஏப்ரல் 5*]

*நகராட்சி நிர்வாகத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் ஆகியவை ஒருங்கிணைந்து, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றன.*

*விலங்குகள் இனவிருத்திக் கட்டுப்பாடுக்காக நடப்பாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## 14.4 செல்லப் பிராணிகள் விற்பனை நிலையம்

*ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், 6.9.2018 ஆம் தேதியிட்ட ஜி.எஸ்.ஆர்.844 (இ) அறிவிப்பு மற்றும் பிராணிகள் வதை தடுப்பு (பெட் ஷாப்) விதிகள், 2018 ஆகியவற்றின்படி, மாநிலம் முழுவதும் இயங்கி வரும் செல்லப் பிராணிகள் விற்பனை நிலையங்கள் எந்த விதிமுறைகளும் இல்லாமல் செயல்பட்டு வந்ததால், அவை மாவட்ட நிர்வாகம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் ஈடுபாட்டுடன் பிராணிகள் நல வாரியத்தால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.*

*செல்லப் பிராணிகள் விற்பனை நிலையங்கள், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பிறகு, உறுதிமொழிப் பத்திரத்துடன் ரூ.5000/—ஐ (திருப்பிச் செலுத்தப்படமாட்டாத தொகை) செலுத்தி மாநில பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.*

*தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் (TNAWB) செய்திக்குறிப்புமூலம் செல்லப் பிராணிகள் விற்பனை நிலைய உரிமையாளர்களை வாரியத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டு, இதுவரை 417 செல்லப் பிராணிகள் விற்பனை நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

## 15. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

*தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை பசு மற்றும் எருமை இனப்பெருக்கம்மூலம், பால் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க, 2002 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, கால்நடைகள் மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.*

[2023 ஏப்ரல் 5

## 15.1 முகமையின் முதன்மை நோக்கம்

இம்முகமையின் முதன்மை நோக்கம், இனப்பெருக்கம் செய்யக்கூடிய வயதிலுள்ள அனைத்து மாட்டினங்களையும், எருமைகளையும் வரையறுக்கப்பட்ட இனப்பெருக்கத்தின்கீழ் கொண்டு வந்து பால் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தித்திறனை அதிகரிப்பதாகும்.

## 15.2 செயல்பாடுகள்

- உறை விந்து உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வலுப்படுத்துதல்.
- உறை விந்து சேமிப்பு, விநியோகம் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் மையங்களுக்குத் திரவ நைட்ரஜன் கொள்கலன்கள், உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் பிற உள்ளீடுகளை வழங்குவதன்மூலம் வலுப்படுத்துதல்.
- இனப்பெருக்கம் செய்யக்கூடிய மாட்டினம் மற்றும் எருமைகள் அனைத்தையும் செயற்கை முறை கருவூட்டலின்கீழ் கொண்டு வர விவசாயிகளின் வீட்டிற்கே சென்று உயர் மரபணுத் திறன் கொண்ட காளைகளின் உறைவிந்துமூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்ய வழிவகை செய்தல்.
- மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு உயர் மரபணுத் திறன் கொண்ட காளைகள் கிடைக்க வழிவகை செய்தல்.
- உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்கள், திரவ நைட்ரஜன் குடுவைகள், உறைவிந்துக் குச்சிகளை சேமிக்கத் தேவையான கொள்கலன்கள் வழங்குதல்.
- நல்ல தரமான நாட்டின கறவைகளை உற்பத்தி செய்யவும், பாதுகாக்கவும், கருமாற்றுத் திட்டம் செயல்படுத்த வழிவகை செய்தல்.
- துயர்துடைப்பு மற்றும் பேரிடர் மேலாண்மைக்காக கால்நடை காப்பீடுத் திட்டம் செயல்படுத்துதல்.
- கால்நடை வளர்ப்போரில் தொழில் முனைவோர்களை உருவாக்க வழிவகை செய்தல்.

*2023 ஏப்ரல் 5*]

- *கால்நடை பராமரிப்புத் துறையின் பல்வேறு திட்டங்களின்கீழ் உள்ளீடுகளை கொள்முதல் செய்தல்.*

## 15.3 மேற்கொள்ளப்பட்ட பணிகள்

### 15.3.1 உறைவிந்து உற்பத்தி நிலையங்களை வலுப்படுத்துதல்

*கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில், காளைகளுக்கான தனிமைப்படுத்தும் கொட்டகைகளை நிறுவும் பணி ரூ.2.09 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணை, தஞ்சாவூர் ஈச்சங்கோட்டையில் உள்ள உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்டக் கால்நடைப் பண்ணைகளின் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் அளவாக்க பாலிமரேஸ் தொடர்வினை பரிசோதனை உபகரணங்கள் (*Quantitative Polymerase Chain Reaction Test equipment*), ஆழ் உறைப் பெட்டகங்கள் (*Deep freezers*), குளிரூட்டிய சுழல் வீழ்த்திகள் (*Refrigerated Centrifuges*) மற்றும் பாலிமரேஸ் தொடர்வினை பரிசோதனை பணி நிலையங்கள் (*work stations*) ரூ.75.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.*

*தஞ்சாவூர் ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணையில் உள்ள விந்து உற்பத்தி நிலையத்தைப் பலப்படுத்த ரூ.4.73 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

### 15.3.2 உயர் மரபணுத்திறன் கொண்ட பொலிகாளைகள் உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தல்

- *ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட 12 கலப்பின ஜெர்சி, 2 காங்கேயம், 2 புலிக்குளம் இன பொலிகாளைகள் வழங்கப்பட்டுள்ளன.*

- *ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்கு பண்ணைக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட 5 கலப்பின ஜெர்சி பொலிகாளைகளும், 10 முர்ரா எருமை பொலிகாளைகளும் வழங்கப்பட்டுள்ளன.*

- *உதகமண்டலம் மாவட்ட கால்நடை பண்ணைக்கு உயர் மரபணுத்திறன் கொண்ட 12 கலப்பின ஹோல்ஸ்டின் பிரிசியன்,*

*2 சாகிவால், 10 கலப்பின ஜெர்சி பொலிகாளைகள் வழங்கப்பட்டுள்ளன.*

## 15.3.3 உறைவிந்து சேமிப்பு மற்றும் விநியோக மையங்களை வலுப்படுத்துதல்

*திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகள் சேமிப்பு மற்றும் விநியோக முறையை வலுப்படுத்த ரூ.3.60 கோடி செலவில், திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகள் விநியோகம் செய்ய 17 வாகனங்கள், 47 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 71 உறைவிந்துக் குச்சி சேமிப்புக் குடுவைகள், 50 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 381 திரவ நைட்ரஜன் சேமிப்புக் குடுவைகள் மற்றும் 18 எண்ணம் நுண்ணோக்கிகள் (Phase Contrast Microscopes) வழங்கப்பட்டுள்ளன. 3000 லிட்டர்கள் கொள்ளளவுக் கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்புக் கொள்கலன்கள் இரண்டு இடங்களில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

## 15.3.4 திறன் மேம்பாடு

*உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் 6 கால்நடை மருத்துவர்களுக்கு கேரள கால்நடை மேம்பாட்டு வாரிய (KLDB) பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.*

*உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் 6 கால்நடை மருத்துவர்களுக்கு பாலிமரேஸ் தொடர் வினை பரிசோதனைக்கான (Quantitative Polymerase Chain Reaction Test) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி நிலையத்தில் பயிற்சிப்பெற வழிவகை செய்யப்பட்டது.*

*செயற்கை முறை கருவூட்டல் பணிகளின் தரத்தை மேம்படுத்த 106 செயற்கை முறை கருவூட்டல் பணியாளர்களுக்கு மறு பயிற்சியும், 197 கால்நடை ஆய்வாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சியும், 120 கால்நடை மருத்துவர்களுக்குக் கால்நடை இனப்பெருக்கத்தில் முன்னேற்றம் குறித்த பயிற்சியும் பெற வழிவகை செய்யப்பட்டது.*

## 15.3.5 பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து உற்பத்தி வசதியை நிறுவுதல்

*உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.47.50 கோடி மதிப்பீட்டில், பாலின பிரிக்கப்பட்ட உறைவிந்து உற்பத்தி வசதிகள் நிறுவப்பட்டுள்ளன. மூன்று*

*2023 ஏப்ரல் 5]*

*ஆண்டுகளில் மொத்தம் 7.20 இலட்சம் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்படும்.*

### 15.3.6 கருமாற்றுத் தொழில்நுட்பம்

*கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணையில் கருமாற்று மற்றும் ஆய்வுக்கூடக் கருத்தரிப்பு தொழில்நுட்பம் ரூ.4.55 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மூன்றாண்டுகளில் 84 உயர் மரபணுக் கொண்ட பொலிகாளைகள் (சிந்தி—34, காங்கேயம்—20, உம்பளாச்சேரி—10, புலிக்குளம் – 10, பர்கூர் — 10) மற்றும் 85 பொலிகாளைகள் உற்பத்தி செய்ய தாய் பசுக்கள் (சிந்தி—35, காங்கேயம்—20, உம்பளாச்சேரி—10, புலிக்குளம்—10, பர்கூர்—10) உற்பத்தி செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 464 கருக்கள் (சிந்தி—372, காங்கேயம்—83, புலிக்குளம்—8 பர்கூர் —1) மாற்றப்பட்டுள்ளன, 227 கருக்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.*

*இதன்மூலம் 55 கன்றுகள் (சிந்தி—43, காங்கேயம்—9, புலிக்குளம்—3) பிறந்துள்ளன.*

### 15.3.7 தேசிய அளவிலான செயற்கைமுறைக் கருவூட்டல் திட்டம் (NAIP)

*சிறந்த கன்றுகள் பிறப்பதற்கும், பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கும் 50% -க்கும் குறைவான எண்ணிக்கையில் செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படும் மாவட்டங்களில், விவசாயிகளின் வீட்டிற்கே சென்று இனப்பெருக்க வயதில் உள்ள மாட்டினங்களில் செயற்கைமுறைக் கருவூட்டல் சேவை வழங்கும் நோக்கத்துடன் நாடு தழுவிய செயற்கைமுறைக் கருவூட்டல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் திருவண்ணாமலை, விருதுநகர், விழுப்புரம், சென்னை, கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, சேலம், உதகமண்டலம், திருவள்ளூர் ஆகிய 13 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.*

*இத்திட்டத்தின் மூன்றாம் கட்டம் 1-8-2021 முதல் 31-7-2022 வரையிலான காலக்கட்டத்தில் 13.95 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கைமுறைக் கருவூட்டல் செய்ய குறியீட்டுடன் ரூ.49.47 கோடி நிதி அனுமதியுடன் செயல்படுத்தப்பட்டது.*

[2023 ஏப்ரல் 5

இத்திட்டத்தின்கீழ், இதுவரை 9.90 இலட்சம் பயனாளிகளின் 13.66 இலட்சம் கால்நடைகளுக்குச் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்யப்பட்டு, 3.24 இலட்சம் கன்று பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் நான்காம் கட்டம் 1.8.2022 முதல் 31.05.2023 வரையிலான காலக்கட்டத்தில் 15.79 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கைமுறைக் கருவூட்டல் செய்ய குறியீட்டுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 4.65 இலட்சம் பயனாளிகளின் 7.86 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கைமுறைக் கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன.

### 15.3.8 தேசிய கால்நடை இயக்கம்-இன்னல் மேலாண்மை

தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ் கால்நடை காப்பீடுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாக ரூ.737.482 இலட்சம் செலவில், 1.50 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு (பசு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் பன்றி) காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1,60,531 கால்நடை அலகுகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 15.3.9 தொழில்முனைவோர் உருவாக்கல் திட்டம்

மாற்றி அமைக்கப்பட்ட தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ், கீழ்க்கண்ட இனங்களில் தொழில் முனைவோரை உருவாக்கும் நோக்கத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

- நாட்டின கோழிப் பண்ணை அமைத்தல்,
- செம்மறியாடு மற்றும் வெள்ளாடு பண்ணை அமைத்தல்,
- பன்றி பண்ணை அமைத்தல்,
- தீவனம் மற்றும் தீவனப் பயிர் உற்பத்தி பண்ணை அமைத்தல்.

*2023 ஏப்ரல் 5*]

**அட்டவணை எண்.14: இத்திட்டத்தின் மானியம் - பயனாளி விவரங்கள்**

| **செயல்பாடு** | **குறைந்தபட்ச அலகு** | **மானியம்** |
|---|---|---|
| *கிராமப்புற கோழிப் பண்ணை அமைத்தல்* | *1000 எண்ணிக்கை நாட்டின தாய் கோழி குஞ்சு பொரிப்பகம்* | *மொத்த திட்டச் செலவினத்தின் மூலதனத்தில் 50% வரை மானியம் – அதிகபட்சம் ரூ.25 இலட்சம் வரை* |
| *செம்மறியாடு மற்றும் வெள்ளாடு பண்ணை அமைத்தல்* | | *திட்டச் செலவினத்தின் மூலதனத்தில் 50%-ல் இரண்டு தவணைகள்* |
| | *100 பெட்டை ஆடு +5 கிடா* | *ரூ.10 இலட்சம்* |
| | *200 பெட்டை ஆடு + 10 கிடா* | *ரூ.20 இலட்சம்* |
| | *300 பெட்டை ஆடு + 15 கிடா* | *ரூ.30 இலட்சம்* |
| | *400 பெட்டை ஆடு + 20 கிடா* | *ரூ.40 இலட்சம்* |
| | *500 பெட்டை ஆடு + 25 கிடா* | *ரூ.50 இலட்சம் வரை –* |
| *பன்றி பண்ணை அமைத்தல்* | | *மொத்த திட்டச் செலவினத்தின் மூலதனத்தில் 50%* |
| | *50 பெண் பன்றிகள் + 5 ஆண் பன்றிகள் அல்லது* | *ரூ.15 இலட்சம்* |
| | *100 பெண் பன்றிகள் + 10 ஆண் பன்றிகள்* | *ரூ.30 இலட்சம்* |

| செயல்பாடு | குறைந்தபட்ச அலகு | மானியம் |
|---|---|---|
| தீவனம் மற்றும் தீவன பயிர் உற்பத்திக்கான கட்டமைப்பு | உலர்ந்த புல் உற்பத்தி/ ஊறுகாய்புல் உற்பத்தி ஓராண்டில் 2000 முதல் 2400 மெட்ரிக் டன்/கலப்புத் தீவன உற்பத்தி/தீவன பயிர் கட்டி உற்பத்தி – நாளொன்றிற்கு 30 மெட்ரிக் டன்/தீவன பயிர் சேமிப்பு முதலிய பணிகள் | மொத்த திட்டச் செலவினத்தின் மூலதனத்தில் 50% வரை மானியம் – அதிகபட்சம் ரூ.50 இலட்சம் வரை |

*தனி நபர்கள்/சுய உதவிக் குழுக்கள்/விவசாய உற்பத்திச் சங்கங்கள்/விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்கள்/கூட்டு பொறுப்புக் குழுக்கள்/பகுதி 8 நிறுவனங்கள் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் பயன் பெற தகுதியானவர்கள். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 14 தொழில் முனைவோரின் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு, 4 தொழில் முனைவோருக்கு ரூ.46.91 இலட்சம் முதல் தவணை மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.*

### 15.3.9.1 தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் (TNIAMP) திட்டத்தின்கீழ் தரம் வாய்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்தல்

*தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் உப வடிநிலப் பகுதிகளில் செயற்கைமுறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்கு வழங்க உயர் மரபணுத் திறன் கொண்ட பொலிகாளைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்துக் குச்சிகள், பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து, செயற்கைமுறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ள கை உறைகள், கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

## 16. நிலையான வளர்ச்சி இலக்குகள்

*நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது ஐக்கிய நாடுகளின் பொதுசபையால் 2030 ஆம் ஆண்டிற்காக 2015*

*2023 ஏப்ரல் 5]*

*ஆம் ஆண்டில் நிர்ணயித்த 17 உலகளாவிய இலக்குகளின் தொகுப்பாகும். கால்நடை பராமரிப்புத் துறை நிலையான வளர்ச்சி இலக்குகளான இலக்கு-1 (வறுமை ஒழிப்பு), இலக்கு-2 (பட்டினியின்மை), இலக்கு-3 (நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு) மற்றும் இலக்கு-12 (நீடித்த நுகர்வு மற்றும் உற்பத்தி) ஆகியவற்றை அடைய பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.*

*இத்துறையின் கால்நடை மருத்துவ நிலையங்கள்மூலம், வழங்கப்படும் சேவைகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் வாயிலாக பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியினை அதிகரித்து இலக்குகளை அடைய வழிவகை செய்யப்பட்டு வருகிறது.*

**17. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

*கால்நடைகளுக்குத் தரமான மருத்துவ சிகிச்சை அளிப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. விவசாயிகள் மற்றும் பொது நலன் காப்பாளரும், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் கால்நடைகளுக்கு மேம்பட்ட மருத்துவப் பாதுகாப்பை அளித்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிட கீழ்க்காணும் நோக்கங்களுடன் ஆசியாவின் முதல் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை 1989-ல் நிறுவினார்:*

- *பல்கலைக்கழகம் நிர்ணயித்தவாறு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் புலங்களில் கல்வியினை அளித்தல்*

- *கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் புலங்களில் நவீன கற்றல் மற்றும் ஆராய்ச்சி செயல்பாட்டினை மேம்படுத்துதல்*

- *பல்கலைக்கழகத்தில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிச் செயல்பாட்டின் முடிவுகளை சம்பந்தப்பட்ட அரசு துறைகளின் ஒத்துழைப்புடன் கிராமப்புற மக்களுக்கு விரிவுபடுத்தும் பணியினை மேற்கொள்ளுதல்*

[*2023 ஏப்ரல் 5*

## 17.1 பல்கலைக்கழகத்தின் பிரிவுகள்

### 17.1.1 பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்

| வ. எண் | கல்லூரிகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|
| *1.* | *சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை (பி.வி.எஸ்சி. & ஏஎச்)* | *120* |
| *2.* | *கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் (பி.வி.எஸ்சி. & ஏஎச்)* | *100* |
| *3.* | *கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு (பி.வி.எஸ்சி. & ஏஎச்)* | *100* |
| *4.* | *கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி (பி.வி.எஸ்சி. & ஏஎச்)* | *100* |
| *5.* | *கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் (பி.வி.எஸ்சி. & ஏஎச்)* | *80* |
| *6.* | *கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி (பி.வி.எஸ்சி. & ஏஎச்)* | *40* |
| *7.* | *கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை, (பி.வி.எஸ்சி. & ஏஎச்)* | *40* |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5*]

| வ. எண் | கல்லூரிகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|---|
| 8. | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவெளி, திருவள்ளூர் (பி. டெக்.) | 60 |
| 9. | கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, ஒசூர் (பி.டெக்.) | 40 |
| | **மொத்தம்** | **680** |

**17.1.2 பல்கலைக்கழகத்தின் புறநகர் ஆராய்ச்சி நிலையங்கள், ஆய்வகங்கள் மற்றும் மையங்கள்**

| வ. எண் | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | • கோழியின ஆராய்ச்சி நிலையம், மாதவரம் |
| | | • கால்நடைப் பண்ணை வளாகம், மாதவரம் |
| | | • பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம் |
| | | • நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் |
| | | • நுண்ணுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் |
| | | • விலங்குவழி பரவும் நோய்கள் ஆராய்ச்சிக் கூடம், மாதவரம் |
| | | • ஆய்வக விலங்கினப் பிரிவு, மாதவரம் |

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| | | • கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம், மாதவரம் |
| | | • கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளம், மாதவரம் |
| | | • உயிர்ப் பாதுகாப்பு நிலை III ஆய்வகம், மாதவரம் |
| | | • மைய சிகிச்சையியல் ஆய்வகம், வேப்பேரி |
| | | • மைய ஆய்வக கருவிக்கூடம், வேப்பேரி |
| | | • முதன்மைத் திசு ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருந்தக மையம், வேப்பேரி |
| 2. | செங்கல்பட்டு | • கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம் |
| | | • கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனம், காட்டுப்பாக்கம் |
| | | • மத்திய தீவன தொழில்நுட்ப மையம், காட்டுப்பாக்கம் |
| | | • வேளாண் அறிவியல் மையம், காட்டுப்பாக்கம் |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 5]

| வ. எண் | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| | | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், மேல்மருவத்தூர் |
| 3. | காஞ்சிபுரம் | • உழவர் பயிற்சி மையம், காஞ்சிபுரம் |
| 4. | தருமபுரி | • ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம் |
| | | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| | | • திருச்சி கருப்பு செம்மறி ஆட்டின மையம் |
| 5. | விழுப்புரம் | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| | | • வேளாண் அறிவியல் மையம் |
| 6. | சேலம் | • மேச்சேரி செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி |
| | | • பறவையின நோயாய்வுக் கூடம், தலைவாசல் |
| | | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| 7. | ஈரோடு | • பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், பர்கூர் |
| | | • காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், ஈரோடு |
| | | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |

| வ. எண் | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 8. | நீலகிரி | • செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சாந்திநல்லா |
| 9. | நாமக்கல் | • கோழியின நோயறி மற்றும் நோய் கண்காணிப்பு ஆய்வகம் |
| | | • கால்நடை தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வுக் கூடம் |
| | | • கோழிகளுக்கான பாரம்பரிய கால்நடை மருத்துவ மூலிகை ஆராய்ச்சி மையம் |
| | | • வேளாண் அறிவியல் மையம் |
| 10. | சிவகங்கை | • புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரை |
| | | • வேளாண் அறிவியல் மையம், குன்றக்குடி |
| 11. | புதுக்கோட்டை | • மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம் |
| 12. | மதுரை | • கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையம் |
| 13. | தேனி | • உழவர் பயிற்சி மையம் |


*2023 ஏப்ரல் 5*]

| வ. எண் | மாவட்டங்கள் | ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள் |
|---|---|---|
| 14. | திருவாரூர் | |
| 15. | இராமநாதபுரம் | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் |
| 16. | கன்னியாகுமரி | |
| 17. | வேலூர் | |
| 18. | திருவண்ணாமலை | |
| 19. | கிருஷ்ணகிரி | |
| 20. | கடலூர் | |
| 21. | பெரம்பலூர் | |
| 22. | திருப்பூர் | |
| 23. | கோயம்புத்தூர் | |
| 24. | தஞ்சாவூர் | |
| 25. | நாகப்பட்டினம் | |
| 26. | திண்டுக்கல் | |
| 27. | திருச்சிராப்பள்ளி | |
| 28. | விருதுநகர் | |
| 29. | தென்காசி | •வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம் |
| | | • நாட்டின நாய்கள் பாதுகாப்பு மண்டல மையம் |
| 30. | கரூர் | • கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| | | • புழக்கடை கோழியின ஆராய்ச்சி மையம் |

[2023 ஏப்ரல் 5

### 17.1.3 நிர்வாகக் கட்டமைப்பு

**பல்கலைக்கழகத்தின் செயலமைப்பு**



*2023 ஏப்ரல் 5*]

## 17.2 கல்வி

இப்பல்கலைக்கழகத்தில் அளிக்கப்படும் பட்ட / பட்டய வகுப்புகள் மற்றும் அதன் மாணவர் சேர்க்கை விவரங்கள் பின்வருமாறு:

| பட்ட/பட்டய வகுப்புகள் | மாணவர் சேர்க்கை எண்ணிக்கை |
|---|---|
| கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் விலங்கினப் பராமரிப்பில் இளநிலைப் பட்டம் | 580 |
| உணவுத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 40 |
| கோழியினத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 40 |
| பால்வளத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம் | 20 |
| கால்நடை மருத்துவ அறிவியலில் முதுநிலைப் பட்டம் | 160 |
| எம்.டெக் (உணவு தொழில்நுட்பம்) | 7 |
| எம்.டெக் (கோழியின தொழில்நுட்பம்) | 3 |
| எம்.டெக் (பால்வளத் தொழில்நுட்பம்) | 3 |
| எம்.டெக் (பால்வள வேதியியல்) | 3 |
| எம்.ஃபில் பட்டம் (உயிர்த் தொழில்நுட்பவியல்) | 3 |
| எம்.எஸ்சி. (உயிர்த் தொழில்நுட்பவியல்) | 3 |
| பிஎச்.டி. (கால்நடைப் புலம்) | 88 |
| பிஎச்.டி. (உயிர்த் தொழில்நுட்பவியல்) | 3 |
| பிஎச்.டி. (உணவு தொழில்நுட்பம்) | 5 |
| முதுநிலைப் பட்டயம் (4 தலைப்புகளில்) | 14 |
| தொலைநிலைக் கல்வி வழி முதுநிலைப் பட்டயம் (22 தலைப்புகளில்) | 240 |

[2023 ஏப்ரல் 5

## 17.3 2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

- *சேலம் கருப்பு வெள்ளாட்டினைப் பாதுகாக்கும் இலக்குடன் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பண்ணைக் கட்டடங்களை தமிழ்நாடு அரசின் மாண்புமிகு அமைச்சர் மீன்வளம், மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அவர்கள் 8.3.2022 அன்று திறந்து வைத்தார்.*

- *தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட கால்நடை மற்றும் கோழித் தீவனத் தொழில்நுட்ப மையத்தினைத் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் 15.3.2022 அன்று திறந்து வைத்தார்.*

- *தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் 22-வது பட்டமளிப்பு விழா 30.3.2022 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலுள்ள அண்ணா கலையரங்கில் நடைபெற்றது. இப்பல்கலைக்கழகத்தின் வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், 282 மாணவர்களுக்குப் பட்டங்கள் மற்றும் பட்டயங்களை வழங்கினார்.*

- *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (டிட்கோ) டைசெல் பயோபார்க் நிறுவனத்துடன் 6.7.2022 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது. உயிர்ப் பூங்காவை மேம்படுத்தி உயிர்த் தொழில்நுட்பத் தொழில் முனைவோர்களை ஊக்குவித்தல் ஆகிய பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.*

*2023 ஏப்ரல் 5*]

- *'என் விரல் நுனியில் என் நூலகம்' எனும் செயலியைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அவர்கள் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அறிவியலாளர்களின் நலனுக்காக சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 18.10.2022 அன்று துவக்கி வைத்தார்.*

- *இக்குறிப்பாண்டில் தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் துறைமூலம் "கன்று நலச் சாதனப் பெட்டி" 886 விலையில்லா கறவை மாடு திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.*

- *2022 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் உருவாக்கிய நான்கு தொழில்நுட்பங்களுக்குக் காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன.*

- *கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் கூட்டிணைந்து செயல்படும் நோக்குடன் தேசியளவில் இப்பல்கலைக்கழகம் மொத்தம் பத்து நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. மேலும் மாணவர் ஆசிரியர் பரிமாற்ற முனைப்புடன், ஒக்லஹாமா பல்கலைக்கழகம், அமெரிக்கா மற்றும் யுனிவெர்சிடாஸ் ப்ரவிஜெயா, இந்தோனேசியா ஆகிய பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு செய்யப்பட்டுள்ளன.*

- *2022 ஆம் ஆண்டில், இந்திய வேளாண் உயர்கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படும் பல்கலைக்கழக மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியுதவியின்கீழ் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் ஆலோசனை மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவு நடத்திய தொழிலக உள்ளுறைப் பயிற்சிமூலம் இளங்கலை கால்நடை மருத்துவப் பட்டம் பயிலும் 91 இறுதியாண்டு மாணவர்கள் பயனடைந்தனர். மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்மூலம் 10 மாணவர்கள் மற்றும் 21 ஆசிரியர்களும் அயல்நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெற்றனர்.*

- *தமிழக அரசின் நிதியுதவியுடன் ரூ.189.49 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் கட்டப்பட்டுள்ள கீழ்க்கண்ட புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 9.3.2023 அன்று காணொளிக் காட்சிமூலம் திறந்து வைத்தார்.*

- தேனி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.82.13 கோடி மதிப்பில் கல்வி கட்டுமானங்கள் உட்பட புதிய கட்டடங்கள்

- உடுமலைபேட்டை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.82.13 கோடி மதிப்பில் கல்வி கட்டுமானங்கள் உட்பட புதிய கட்டடங்கள்

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.11.94 கோடி செலவில் கட்டடப்பட்டுள்ள கால்நடைகளுக்கான மூலிகை மருத்துவப் பயிற்சிக்கூடம், விலங்குகள் வழி பரவும் நோயறி ஆய்வகம் உட்பட புதிய கட்டடங்கள்

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.7.14 கோடி மதிப்பீட்டிலான மாணவர் மற்றும் மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடங்கள்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.4.15 கோடி செலவில் ஊரகக் கால்நடை பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள நவீன சிகிச்சை வசதிகளுடன்கூடிய மண்டல கால்நடை சிறப்பு மருத்துவமனை

- சென்னை, மாதவரத்தில் தேசிய கால்நடை இயக்ககத்தின்கீழ் ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலான கால்நடை இறைச்சி உடலங்க பயன்பாட்டு ஆலை

## 17.4 ஆராய்ச்சி

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவம் மற்றும் பராமரிப்புத் துறை எதிர்கொள்ளும் புதிய சவால்களுக்கு ஏற்ப நவீன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய வலுவான ஆராய்ச்சி கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், 12 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 15 ஆராய்ச்சி ஆய்வகங்களைத் தன்னகத்தே கொண்டு கால்நடை நலம், கால்நடை உற்பத்தி, கால்நடை மருத்துவ உயிரியல், விலங்குவழி நோய்கள், கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு, நோயறிதல் மற்றும் கண்காணித்தல், பாரம்பரிய கால்நடை

*2023 ஏப்ரல் 5]*

*மருத்துவம், கால்நடை மருந்துக் கண்காணிப்பு ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. 2022—23 ஆம் குறிப்பாண்டில், பல்வேறு தேசிய நிதி முகமைகளின்மூலம் தேர்வு முறையில் ரூ.633.06 இலட்ச மதிப்பீட்டில் 25 ஆராய்ச்சித் திட்டங்களை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.*

**17.4.1 ஆராய்ச்சித் திட்டங்கள்**

*நாட்டினக் கால்நடைகளைப் பாதுகாக்க ஒன்றிய அரசு ஊக்கமளித்து வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, தேசிய மாட்டினப் பெருக்கத் திட்டத்தின் நிதியுதவியுடன் தமிழகத்தின் மாட்டினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, ரூ.329.72 இலட்ச மதிப்பீட்டில் "நாட்டின மாடுகள் வளர்ப்பினைப் பிரபலப்படுத்துவதற்கென நாட்டின மாடுகள் பிரிவினை நிறுவுதல்" மற்றும் ரூ.221.98 இலட்ச மதிப்பீட்டில் "நீலகிரி மலையில் அழிந்து வரும் தோடா எருமைகளின் நிலைப்புத்தன்மைக்காக பழங்குடியினருடன்கூடிய சமூகப் பங்கேற்பு அணுகுமுறை" ஆகிய இரண்டு திட்டங்களைச் செயல்படுத்திட தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, பல்கலைக்கழகத்தில் திட்டப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.*

*"கரூர் மாவட்டத்தில் புழக்கடை கோழி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் நிறுவுதல்", "உம்பளாச்சேரி மாடுகளின் இனத்தைப் பல்துறை அணுகுமுறையின்மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில் பாதுகாத்தல் — கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு", "தமிழ்நாட்டில் உள்ள நாட்டின நாய்களுக்கான (இராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை மற்றும் கோம்பை) இனப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் தென்காசி மாவட்டத்தில் நிறுவுதல்", "கிராமப்புற முன்னேற்றத்திற்கான வெண்பன்றி இனப்பெருக்கம் மற்றும் உள்ளீட்டு மையம் கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல்" மற்றும் "நாட்டுக்குட்டை மாடுகளுக்கான பாதுகாப்பு மையம் கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் அமைத்தல்" ஆகிய ஐந்து திட்டங்களை ரூ.548.97 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, பல்கலைக்கழகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

[2023 ஏப்ரல் 5

## 17.5 தொழில்நுட்பங்கள்

*கால்நடை மற்றும் கோழியின நலம், உற்பத்தி, மதிப்பூட்டிய இறைச்சி மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி ஆகியவை சார்ந்த தொழில்நுட்பங்களை இப்பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. வர்த்தகமயமாக்கத்திற்குத் தயாராக உள்ள இப்பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களாவன:*

CRISPR Cas *12 மதிப்பீடு அடிப்படையில் நாய்களின் இரத்த மாதிரிகளில் எர்லிச்சியா கேனிஸ், பெபீசியா கிப்சோனி ஆகியவற்றின் மரபணுக்களைக் கண்டறியும் தொழில்நுட்பம்; உலர்ந்த புண்களில் இருந்து ஓஆர்எஃப் (*ORF*) நுண்ணுயிரி மரபணுவைக் கண்டறிவதற்கான* CRISPR Cas *12 மதிப்பீட்டு முறை; மாட்டினத் தோல் கழலை நோய் நுண்ணுயிரியைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்ட* CRISPR Cas *12 மதிப்பீட்டு முறை; நாய்களில் காணப்படும் பெபீசியா கிப்சோனியின் நோயைக் கண்டறிய எலிசா (*ELISA*) சாதனம்; மேக்ரோபேஜ் செறிவூட்டப்பட்ட தைலேரியா அன்னுலேட்டா ஓரணு நுண்ணுயிரி வளரும் திசு வளர்ப்பு முறை; மடிவீக்க நோய்க்கான தெர்மோ—ரிவர்சிபிள் பாலிமர் மருந்து; நாய்களுக்கான ஈரப்பதமுள்ள செல்லப் பிராணி உணவு மற்றும் கோழி இறைச்சி ஊறுகாய் ஆகிய மதிப்பூட்டிய இறைச்சிப் பொருட்கள் தயாரிப்புத் தொழில்நுட்பங்கள் மெருகேற்றப்பட்டுள்ளன.*

*2022-2023 ஆம் ஆண்டில், பல்கலைக்கழக அறிவியலறிஞர்கள் உருவாக்கிய கீழ்க்குறிப்பிட்டுள்ள தொழில்நுட்பங்கள், தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டுள்ளது;*

- *'வீரோ செல்களில் பதனிட்ட மாட்டினத் தோல் கழலை நோய் திரிபு உருவாக்கம்' — பயோவெட் தனியார் நிறுவனம், பெங்களூரு*
- *'தடுப்பூசித் தயாரிப்பிற்கான தெய்லீரியா அனுலேட்டா ஓரணு உயிரி' — ஹெஸ்டர் பயோசயின்சஸ் தனியார் நிறுவனம், அகமதாபாத்*
- *மடிக்காப்பான், தானுசெக் எஸ்சிசி சாதனம், நானோமெதிகோன், ப்ரோசிங்க் என்சி மற்றும் என்எஃப் — ஜெஷ்ரான் பயோடெக் சொல்யூஷன்ஸ் தனியார் நிறுவனம், சென்னை*

*2023 ஏப்ரல் 5]*

## 17.6 திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

*கால்நடை மருத்துவம், விலங்கினம் மற்றும் உணவு அறிவியல் புலங்களில் ஏற்படும் அண்மைக் கால முன்னேற்றங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு இப்பல்கலைக்கழகம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகின்றது.*

### 17.6.1 மாணவர்களுக்கான முயற்சிகள்

- *5.1.2022 அன்று பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் பயனுற 'சைபர் ஜாக்ரூக்தா திவாஸ்' எனும் நிகழ்வினைக் கடைபிடித்து, இப்பல்கலைக்கழகம் "சைபர் குற்றங்கள் மற்றும் பாதுகாப்பு" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது.*
- *மாணவர்களின் நலனுக்காக 3.2.2022 அன்று "வேளாண்மை சார்ந்த மீன்வள கூட்டமைப்பினைத் (CeRA) தொன்மையாகப் பயன்படுத்துதல்" என்ற தலைப்பிலான செயல்விளக்கப் பயிற்சி வகுப்பு கோடுவெளியில் உள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்பட்டது.*
- *பல்கலைக்கழகத்தின் கால்நடை அறிவியல் துவக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பானது (VIF @ TANUVAS) "கால்நடை அறிவியல் மாணவர்களுக்கான தொழில் முனைவு வாய்ப்புகள்" குறித்த பயிலரங்கினைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்புக் கல்லூரிகளிலும் நடத்தியதன் வாயிலாக 437 மாணவர்கள் மற்றும் 68 ஆசிரியர்கள் பயனடைந்தனர்.*

### 17.6.2 ஆசிரியர்களுக்கான முயற்சிகள்

- *'வனவிலங்குகள், அயல்நாட்டினச் செல்லப் பிராணிகள் மற்றும் மனிதர்களுக்கு விலங்குவழிப் பரவும் நோய்கள்' குறித்த பயிற்சி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 6.1.2022 மற்றும் 7.1.2022 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டதில், 13 வனவிலங்கு வல்லுநர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் பயனடைந்தனர்.*
- *புதுக்கோட்டை, மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில்*

*"கால்நடை இனப்பெருக்க மேலாண்மையில் நோய் கண்டறிய நகலெடுப்புத் தொழில்நுட்பப் பயன்பாடு" (2.2.2022 முதல் 4.2.2022 வரை) மற்றும் "தீவன உற்பத்தித் தொழில்நுட்பத்தில் அண்மைக்கால முன்னேற்றங்கள்" (8.2.2022 முதல் 10.2.2022 வரை) குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டதில் 60 கால்நடை உதவி மருத்துவர்கள் பயனுற்றனர்.*

- *இந்தியக் கால்நடை சரும நோய் மருத்துவச் சங்கத்துடன் இணைந்து "வளர்ந்து வரும் நாடுகளில் கால்நடை மருத்துவத் தோல் நோய்ச் சிகிச்சை, கல்வி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல்" குறித்த பன்னாட்டு மருத்துவ மாநாடு, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 9.6.2022 முதல் 11.6.2022 வரை நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு மீன்வளம், மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மாநாட்டு மலரை வெளியிட்டார். இம்மாநாட்டில் சிறப்பு விருந்தினர்கள், அறிவியலாளர்கள், கால்நடை மருத்துவர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட 650 நபர்கள் பங்கேற்றுப் பயனுற்றனர்.*

- *"கறவை மாடுகளில் இனவிருத்தித் திறனை அதிகரிக்கும் நவீன உத்திகள்" குறித்த புத்துணர்வுப் பயிற்சி 26.10.2022 முதல் 28.10.2022 வரை நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும், 8.11.2022 முதல் 10.11.2022 வரை, ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும் நடத்தப்பட்டதில் மாநிலக் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த 60 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.*

- *பல்கலைக்கழகம் மற்றும் இந்தியத் தேசியப் புதுமை அறக்கட்டளையும் இணைந்து "கால்நடை மருத்துவத் துறையில் உள்நாட்டுத் தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல்" என்ற பயிலரங்கு தேனி, உழவர் பயிற்சி மையத்தில் 17.11.2022 அன்று நடத்தப்பட்டதில், தேனி மாவட்டத்தின் 33 கள கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.*

- *திருவள்ளூர், திருவாரூர் மற்றும் ஒரத்தநாடு ஆகிய இடங்களில் 174 கள கால்நடை உதவி மருத்துவர்கள் பயன்பெறும் வகையில் 'பேரழிவுக் காலங்களில் விலங்குகளைப் பாதுகாத்தல்' குறித்த பயிற்சிகள் இவ்வறிக்கை காலத்தில் நடத்தப்பட்டன.*

*2023 ஏப்ரல் 5*]

- *இவ்வறிக்கை காலத்தில், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், 44 கள கால்நடை மருத்துவர்களுக்குப் பயனளிக்கும் வகையில், 'பறவையின மற்றும் அயல்நாட்டு செல்லப் பிராணிகளுக்கான மருத்துவம் — அவசரநிலை மற்றும் சிக்கலான பராமரிப்பு மேலாண்மை' குறித்த பயிற்சி நடத்தப்பட்டது.*

## 17.7 சிகிச்சையியல் பணிகள்

*தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சிறந்த பயிற்றுவிப்பு கால்நடை மருத்துவமனை வசதிகளைக் கொண்டு கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகின்றது. 2022 ஆம் ஆண்டில் மொத்தம் 2,76,582 கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளுக்குச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. மீயொலிக் கருவி (*Ultrasonograph*), உள்நோக்குக் கருவி (*Endoscope*), இதய துடிப்பலைப் பதிவுக் கருவி (*Electrocardiograph*), எலும்பு முறிவு சிகிச்சை (*Orthopaedics*), இரத்தச் சுத்திகரிப்புக் கருவி (*Haemodialysis*), கண் மருத்துவம் (*Ophthalmology*), தோல் நோயியல் (*Dermatology*), நாய்களுக்கான இரத்த வங்கி ஆகிய உயர்தர மருத்துவ வசதிகளை இப்பல்கலைக்கழகத்தின் மருத்துவமனைகள் பெற்றுள்ளன. சென்னை மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிடி ஸ்கேன் வசதிகளும் உள்ளன. இவ்வறிக்கை காலத்தில், இந்த உபகரணங்களைப் பயன்படுத்தி 40,145 கால்நடைகளுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.*

*சேலம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சிறந்த வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ள கால்நடை சிகிச்சை வளாகத்தில் சிகிச்சை அளிக்கும் சேவையினைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் 3.6.2022 அன்று துவக்கி வைத்தார்.*

*இவ்வறிக்கை காலத்தில், தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த 95 கால்நடை மருத்துவர்களுக்கு நவீன சிகிச்சையியல் மருத்துவம் குறித்து ஆறு பயிற்சிகள் நடத்தப்பட்டன.*

## 17.8 விரிவாக்கப் பணிகள்

*விவசாயிகள், கிராமப்புற மகளிர் மற்றும் இளைஞர்கள், பள்ளி இடைநின்றோர், சுய உதவிக் குழுவினர் ஆகியோரது வாழ்வாதாரத்தைக் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பின்மூலம் மேம்படுத்தும் நோக்கில், கறவை மாடு வளர்ப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வெண்பன்றி*

வளர்ப்பு, பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு, கால்நடைத் தீவனம் மற்றும் பசுந்தீவனப் பயிர் உற்பத்தி உள்ளிட்ட தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், பண்ணைப் பரிசோதனைத் திட்டங்கள், முதல்நிலைச் செயல் விளக்கத் திட்டங்கள் ஆகிய விரிவாக்கப் பணிகள் இப்பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாகக் கால்நடை மற்றும் கோழியினத் தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்தும் பணியினையும் இப்பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

2022 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு விரிவாக்க மையங்கள் வாயிலாக மொத்தம் 67,517 கால்நடை விவசாயிகளுக்கு 1,854 பயிற்சிகளும், 2,19,892 எண்ணிக்கையில் ஆலோசனை சேவைகளும் அளிக்கப்பட்டன. இவை தவிர கால்நடை விவசாயிகளுக்குப் பண்ணை இடுபொருட்களும் வழங்கப்பட்டன. இக்குறிப்பாண்டில் கால்நடைப் பண்ணையாளர்கள் பயனுறும் வகையிலான விரிவாக்கப் பணி சார்ந்து நடத்தப்பட்ட கருத்தரங்குகள் பின்வருமாறு:

- "கஜா புயலால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா பகுதியின் கறவை மாடு வளர்க்கும் விவசாயிகளின் வருவாய்ப் பெருக்கத்திற்கு மதிப்புக்கூட்டிய பால் பொருட்கள் தொழில்நுட்பத்தைப் பரிமாற்றம் செய்தல்" எனும் பயிற்சி, ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பிப்ரவரி 2022-ல் நடத்தப்பட்டதில், 50 கால்நடை விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

- "கால்நடை மற்றும் கோழிகளின் சுகாதாரத்துடன் பராமரிப்பதற்கான பாரம்பரிய மூலிகை மருத்துவம்" என்ற பயிற்சி, 2.3.2022 மற்றும் 3.3.2022 ஆம் தேதிகளில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டதில், 50 கால்நடை விவசாயிகள் பயன்பெற்றனர்.

- "அறிவியல் தொழில்நுட்பங்கள்மூலம் நாட்டுக் கோழிகளில் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தல்" குறித்த மண்டல அளவிலான கால்நடை, கோழிகள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு, திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 29.4.2022 மற்றும் 30.4.2022 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை

*2023 ஏப்ரல் 5]*

*அமைச்சர் அவர்கள் கருத்தரங்கு மலரை வெளியிட்டு, 319 பயனாளிகளுக்கு இடுபொருட்கள் வழங்கினார்.*

- *மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி மைய நிதியுதவியுடன் "கால்நடைப் பண்ணை உற்பத்தி முறைகள்" குறித்த பயிற்சி ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 28 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 23.8.2022 முதல் 29.8.2022 வரை நடத்தப்பட்டது.*

### 17.8.1 தொலைநிலைக் கல்வி வகுப்புகள்

*கால்நடை மருத்துவ அறிவியலில் உள்ள நவீனத் தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு 22 பாடப் பிரிவுகளில் முதுநிலைப் பட்டயப் படிப்புகள் கால்நடை மருத்துவர்களுக்குத் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர கால்நடை மற்றும் கோழியின உற்பத்தியை அதிகரித்து கிராமப்புற வருவாயைப் பெருக்கும் பொருட்டு 10 தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 10 தலைப்புகளில் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகளும் கால்நடை வளர்ப்போர் மற்றும் ஊரக இளைஞர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. 2022—23 ஆம் ஆண்டில், தொலைநிலைக் கல்வி வாயிலாக நடத்தப்பட்ட வகுப்புகள் மற்றும் மாணவர் சேர்க்கை விவரம் பின்வருமாறு:*

*2022-2023 ஆம் ஆண்டில் தொலைதூரக் கல்வி முறையில் வழங்கப்படும் 19 முதுகலை பட்டயப் படிப்புகளுக்கு 114 மாணவர்களும், இரண்டு திறன் மேம்பாட்டுப் படிப்புகளுக்கு 39 நபர்களும், எட்டு சுயவேலைவாய்ப்புப் படிப்புகளுக்கு 790 விவசாயிகள் மற்றும் வேலையில்லாத இளைஞர்களும் சேர்ந்துள்ளனர்.*

### 17.9 விருதுகள்/அங்கீகாரங்கள்

- *சிறந்த முறையில் வாழை சார்ந்த தொழில்நுட்பங்களைப் பரவலாக்கம் செய்ததற்காக, 20.8.2022 அன்று திருச்சிராப்பள்ளி, தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற 29-வது நிறுவன நாள் மற்றும் உழவர் பெருவிழாவில் நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு தேசிய அளவில் "சிறந்த வேளாண்மை அறிவியல் நிலையம்-2022" என்ற விருது அளித்து சிறப்பிக்கப்பட்டது.*

- NABL தரச்சான்றிதழின் காலவரையறை வெறிநாய்க்கடி ஆய்வுக் கூடத்திற்கு 2023 ஆம் ஆண்டு வரையிலும், நாமக்கல் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வுக் கூடத்திற்கு 2024 ஆம் ஆண்டு வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள நான்கு தொழில்நுட்பங்களுக்கு 2022 ஆம் ஆண்டில் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது:

    1. வெள்ளைக்கழிச்சல் நோயை உண்டாக்கும் குறிப்பிட்ட மரபணுவிற்கு எதிரான ஓரணு ஊடகத் தடுப்பூசி
    2. சியா விதைகளிலிருந்து பெறப்பட்ட ஒமேகா—3 கொழுப்பு அமிலத்துடன் செறிவூட்டப்பட்ட ஊட்டச்சத்து சாக்லேட்
    3. முலாம்பழம் கொண்டு செறிவூட்டப்பட்ட, குறைந்த கலோரி மற்றும் கொழுப்பு கொண்ட தினை சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம்
    4. கறவை மாடுகளில் அசையூண் இரைப்பை நொதித்தலை மேம்படுத்தவும் மீத்தேன் உமிழ்வைத் தணிப்பதற்குமான கலவை

## 17.10 கால்நடைத் துறையில் துவக்க நிலை நிறுவனங்கள்

கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் அதன் சார்புத் துறைகளில் துவக்க நிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் கால்நடை அறிவியல் துவக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பினை (VIF@TANUVAS) இப்பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் முக்கிய நடவடிக்கைகளாவன:

- புதிய கால்நடை பராமரிப்பு சார்ந்த பொருட்கள்/தொழில்நுட்பங்களை உருவாக்கும் பொருட்டு 2022 ஆம் ஆண்டில், 24 துவக்க நிலை நிறுவனங்கள் கால்நடை அறிவியல் தொடக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் பதிவு செய்து பயனடைந்துள்ளன.

*2023 ஏப்ரல் 5*]

- *"கால்நடை மருத்துவத் தொழில்முனைவோர்க்குத் தொடக்க நிலைத் தொழில் திட்டங்களை ஊக்குவித்தல்" குறித்த தேசியக் கருத்தரங்கு, பல்கலைக்கழகக் கால்நடை அறிவியல் தொடக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்புமூலம் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 27.4.2022 முதல் 29.4.2022 வரை நடத்தப்பட்டதில் 120 மாணவர்கள் பயனடைந்தனர். தொடக்க நிலை அமைப்பின் பயனாளிகளது புதுமையான தயாரிப்புகள் இக்கருத்தரங்கில் காட்சிப்படுத்தப்பட்டன.*
- *பல்கலைக்கழகத்தின் தொடக்க நிலைத் தொழில் உருவாக்க அமைப்பினால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பண்ணையாளர்களுக்கான கருத்தரங்கு நிகழ்ச்சி, காஞ்சிபுரம் மாவட்டம், வாத்தியூர் கிராமத்தில் 23.11.2022 அன்று நடத்தப்பட்டது.*
- *தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் செயல்படும் தமிழக அரசின் கண்டுபிடிப்பாளர் அறிமுகத் திட்டம்–*B-*ன்கீழ்* VIF@TANUVAS-*ன் பயனாளியான ஜெஷ்ரோன் பயோடெக் சொல்யூஷன்ஸ் நிறுவனம், நிதியுதவி பெற்றுள்ளது.*
- VIF@TANUVAS-*ன் பயனாளியான அரிவியா டெக்னாலஜிஸ், ஸ்டார்ட்அப் நிறுவனத்திடமிருந்து* TANSEED *3.0 எனும் மானியத்தை பெற்றுள்ளது.*
- VIF@TANUVAS *மூலம் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு இளங்கலை மாணவர்களிடையே தொழில்முனைவோர் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.*

## 17.11 தொழிலக-கல்வி நிறுவனத் தொடர்பு

*தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடையே ஆராய்ச்சி மற்றும் கல்வித் திட்டங்களில் இணைந்து செயல்படும் நோக்குடன் 2022 ஆம் ஆண்டு, பல்கலைக்கழகம் கீழ்க்குறிப்பிட்டுள்ள பன்னாட்டு/தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது:*

- ✓ *தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்*
- ✓ *தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் திட்டம், சென்னை*
- ✓ *சென்னை முதலை பண்ணை, சென்னை*
- ✓ TICEL *பயோ பார்க் லிமிடெட், சென்னை*

- ✓ பயோவெட் தனியார் நிறுவனம், பெங்களூரு
- ✓ ஓக்லஹாமா மாநில பல்கலைக்கழகம், ஸ்டில்வாட்டர், அமெரிக்கா
- ✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் – மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், திருவனந்தபுரம்
- ✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் – கால்நடை ஆராய்ச்சிக்கான மத்திய நிறுவனம், மீரட்
- ✓ ஹெஸ்டெர் பயோசயின்சஸ் லிமிடெட், அகமதாபாத்
- ✓ இன்பிலிப்னெட் மையம், பல்கலைக்கழக மானியக் குழு, புது தில்லி
- ✓ யுனிவெர்சிடாஸ் ப்ரவிஜெயா, இந்தோனேசியா
- ✓ இந்து சமய அறநிலையத் துறை, தமிழ்நாடு அரசு
- ✓ அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்கா, வண்டலூர்
- ✓ ஜெஷ்ரான் பயோடெக் சொல்யூஷன்ஸ் தனியார் நிறுவனம், சென்னை
- ✓ நானாஜி தேஷ்முக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், ஜபல்பூர்

## 17.12 2023-2024 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகள்

ஒரே சுகாதார அணுகுமுறையின் மூலம் இப்பல்கலைக்கழகம் கால்நடைத் துறையை மட்டுமல்ல, மனித நல்வாழ்வினையும் மேம்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகமானது தேசிய மற்றும் சர்வதேச அளவிலான பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஆரோக்கியத்தைப் பெறும் பொருட்டு ஒரே சுகாதார அணுகுமுறையை பின்பற்றுவதன்மூலம் விலங்குவழி பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த வழிவகை செய்யப்படுகிறது.

இவை அனைத்தினையும் கருத்திற்கொண்டு இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்தியுள்ளது:

- கால்நடைகளுக்குத் தரமான சிகிச்சை அளித்து அதன் நலன் பேண ஒருங்கிணைந்த கால்நடை மருத்துவமனைத் தகவல் அமைப்பு உருவாக்குதல்

*2023 ஏப்ரல் 5*]

- ஒருங்கிணைந்த ஒரே சுகாதார அணுகுமுறையை வலுப்படுத்துதல்
- மாடுகள் மற்றும் எருமைகளில் மலட்டுத்தன்மை மற்றும் தொடர் சினையூட்டல் சிக்கல்களுக்கு இனப்பெருக்க உதவி தொழில்நுட்பங்கள்மூலம் தீர்வு காணுதல்
- தமிழகத்தின் நாட்டின கால்நடை மற்றும் கோழியினங்களைப் பாதுகாத்தல்
- கறவை மாடுகளில் மீத்தேன் உமிழ்வைக் குறைத்து பால் உற்பத்தியை மேம்படுத்துதல்
- தீவன விதைப் பண்ணைகளை நிறுவுவதன்மூலம் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குதல்
- தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், கறவை மாடுகளில் பால் காய்ச்சலைத் தணிக்கவும், தனுவாஸ் கிராண்ட் (TANUVAS GRAND) மற்றும் அயோனிக் உப்புகளை கூடுதல் ஊட்டச்சத்தாக அளிப்பதனைப் பிரபலப்படுத்துதல்
- கறவை மாடுகளுக்கு ஏற்படும் தோல் கழலை நோய் உள்ளிட்ட கால்நடைகளில் உருவாகும் நோய்களுக்கான நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்
- கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இணைந்து செயல்பட பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டிணைவு
- வேலையற்ற இளைஞர்கள் மற்றும் ஊரகப் பெண்களுக்கு கால்நடைப் பராமரிப்பு நடவடிக்கைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்
- கால்நடை மருத்துவர்களுக்கான தொடர் கால்நடை மருத்துவக் கல்வித் திட்டம்
- சிறந்த மேலாண்மை முறைகள் மற்றும் செயலிகள்மூலம் மின் ஆளுமையினை மேம்படுத்துதல்
- தொழிலகம்—பல்கலைக்கழகம் இணைந்த ஆராய்ச்சிக் கூட்டமைப்பினை நிறுவி தொழிலகங்களின் தேவை அறிந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் புதிய துவக்கநிலை நிறுவனங்களை ஊக்குவித்தல்.
- கால்நடைகளில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள வழிமுறைகள்/தணிப்புத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்

[2023 ஏப்ரல் 5

- நடப்பிலுள்ள "ஆய்வகத்திலிருந்து களம்" நோக்கிய அணுகுமுறையினைத் தொடர்ந்து இப்பல்கலைக்கழகத்தின் பார்வை "களநிலையிலிருந்து ஆய்வகம்" நோக்கி கால்நடை விவசாயிகள் எதிர்கொள்ளும் களப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளித்து ஆய்வக ஆராய்ச்சி வழி தீர்வுகாணுதல்

## 18. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2023-2024

| | | | | ரூபாய் ஆயிரத்தில் |
|---|---|---|---|---|
| **திட்டங்கள்** | **வருவாய்** | **மூலதனம்** | **கடன்** | **மொத்தம்** |
| சம்பளங்கள் | 7346837 | 0 | 0 | 7346837 |
| இதர செலவினங்கள் | 1068309 | 0 | 0 | 1068309 |
| மாநில திட்டங்கள் | 747251 | 0 | 0 | 747251 |
| மத்திய அரசு திட்டங்கள் | 12 | 2 | 0 | 14 |
| வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள் (IAMWARM—World Bank Scheme) | 26642 | 0 | 0 | 26642 |
| மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 43361 | 1 | 0 | 43362 |
| தன்னாட்சி நிறுவனங்களிடமிருந்து உதவி பெறும் திட்டங்கள் | 186 | 0 | 0 | 186 |
| உள்கட்டமைப்பு (மாநில நிதி) | 0 | 55642 | 0 | 55642 |
| உள்கட்டமைப்பு – NABARD | 77 | 1067400 | 0 | 1067477 |
| உள்கட்டமைப்பு – AIIRLIVAS | 21866 | 287788 | 0 | 309654 |
| 00602 — கால்நடை பராமரிப்புத் துறை | 9254541 | 1410833 | 0 | 10665374 |
| 00601 — தலைமைச் செயலகம் | 108616 | 0 | 4000 | 112616 |
| 00603 — தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் | 3741095 | 0 | 0 | 3741095 |
| மொத்த மானியம் | 13104252 | 1410833 | 4000 | 14519085 |

*2023 ஏப்ரல் 5*]

## 19. முடிவுரை

மாநில அரசின் முனைப்புத் திட்டங்களால் ஊரக பொருளாதார முன்னேற்றத்தை எட்டுவதற்காக இந்த அரசு கால்நடை பராமரிப்புக்குச் சிறப்பு ஊக்கமளிக்கிறது. கால்நடைக் கொள்கையானது சரியான திட்டங்கள் மற்றும் மூலதனங்கள் வாயிலாகப் பால், இறைச்சி மற்றும் முட்டை பொருட்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தை எட்டுவதற்கு உதவியாக உள்ளது. இது ஊரக ஏழை மக்களுக்கு மிகவும் தேவைப்படும் விலங்கின புரதம் கிடைக்க வழிவகை செய்கிறது. மேலும் கால்நடை வளர்ப்பு கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு, உணவு பாதுகாப்பு, அதிகரித்த உற்பத்தியின் வாயிலாக குடும்ப வருமானம் மேம்பட வழிவகுக்கிறது. இவ்வாறாக கிராமப்புற ஏழைகளிடையே ஏழ்மையைக் குறைப்பதற்கும், கிராமப்புறச் சூழல் மேம்படுவதற்கும் உதவி செய்கிறது. சொத்து இல்லாத ஏழைகளை வருவாய் ஈட்டி, சொத்து கொண்ட மக்களாக மாற்றி, வறுமையைப் போக்கும் எந்திரமாக கால்நடை பராமரிப்பு செயல்படுகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# இணைப்பு III

*(178 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 7-மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

### 1. முன்னுரை

*தமிழ்நாட்டின் பல்வேறு மீன்வள ஆதாரங்களிலுள்ள வளமான மீன் பல்லுயிர் வளம், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு நேரடியாகவும் மற்றும் அதனைச் சார்ந்த நடவடிக்கைகளிலும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குகிறது. 2021-2022 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் மொத்த வேளாண் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியில் மீன்வளத்தின் பங்களிப்பு 5.78% ஆகும். மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் 1.14 இலட்சம் மெட்ரிக் டன் மீன் மற்றும் மீன் பொருட்களை ஏற்றுமதி செய்ததன்மூலம், ரூ.6,559.64 கோடி அன்னியச் செலாவணி ஈட்டிடுவதற்கு தமிழ்நாட்டின் மீன்வளம் பங்களிப்பு செய்துள்ளது.*

*மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நலனை உறுதி செய்வதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவத்தையும் அளிக்கிறது. மீன்பிடித் தடைக்காலம் மற்றும் மீன்பிடிப்பு குறைவு காலங்களில் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்மூலம் மீனவர்களின் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதுடன், கடலில் மீனவர்களின் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடையற்ற தகவல் தொடர்பு அமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகிறது.*

*மாநிலத்தின் மீன்வளமானது கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும், இதுவரை முறையாகப் பயன்படுத்தப்படாத வளங்களை, முழுமையாகப் பயன்படுத்துவதற்கும், மீன் வளர்ப்பின்மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மகத்தான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.*

*2023 ஏப்ரல் 5]*

*பண்ணைக் குட்டைகள் உள்ளிட்ட குளங்கள் மற்றும் ஏரிகள் மழைநீரைச் சேகரித்து, சேமித்து வைப்பதன்மூலம், நிலத்தடி நீர் மட்டத்தினைக் காப்பதில் மிக முக்கியப் பங்கு வகிப்பதுடன், உள்நாட்டு மீன் உற்பத்தியில் கணிசமாகப் பங்களிக்கின்றன. நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் மக்கள் தொகையின் காரணமாக, ஆரோக்கியமான மீன் புரத உணவிற்கான தேவை நீடித்த முறையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக, மீன்வள ஆதாரங்களை முழுமையான அளவில் பயன்படுத்துவதற்கும் மற்றும் கூடுதல் மீன்வள ஆதாரங்களை உருவாக்குவதற்கும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.*

*மீன்வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் நிலையான முறையில் கடல் மீன் உற்பத்தியை அதிகரித்தல் ஆகியவற்றிற்காக அரசு பல்வேறு புதுமையான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மீனவர்கள் தங்கள் மீன்பிடிப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும் மற்றும் மீன்களைச் சுகாதாரமாகக் கையாளுவதற்கும், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கடற்கரையோர வசதிகள், மீன் சந்தைகள், குளிர்பதனக் கிடங்குகள், பனிக்கட்டி நிலையங்கள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. இந்த நோக்கத்தினை நிறைவேற்றிடும் பொருட்டு மேற்கூறிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட அரசு அதிக அளவிலான முதலீடுகளைச் செய்து வருகிறது.*

## 2. மீன்வளக் கொள்கை

*மீனவர் நலன், மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், மீனவர் மற்றும் மீன் வளர்ப்போரின் வருவாயினை உயர்த்துதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை தமிழ்நாடு அரசு மீன்வளக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும்.*

### 2.1 தொலைநோக்குப் பார்வை

*"மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மைச் செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புமூலம் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளத்தை, பாதுகாப்பினை உறுதி செய்தல்".*

## 2.2 செயலாக்கம்

மாநிலத்தின் அனைத்து நீர்வளங்களை மேம்படுத்தி, மேலாண்மைச் செய்து, பாதுகாத்து, வளங்குன்றாமல் பயன்படுத்தி, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, வேலைவாய்ப்பினை அதிகரித்து, ஊட்டச்சத்துமிக்க உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

## 2.3 முக்கியக் கொள்கைகள்

மீன்வளம் சார்ந்த அரசின் முக்கியக் கொள்கைகள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல் மற்றும் அவர்களின் நலன் பேணுதல்.

2. பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் வாயிலாக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

3. நன்னீர், உவர்நீர் மற்றும் கடல்வள ஆதாரங்களின்மூலம் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்.

4. மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்.

5. அரசு மீன் பண்ணைகள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், தொடர் குளிர்காப்பு, மதிப்புக்கூட்டுதல் மற்றும் மீன்பிடிப்பிற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் வணிக ரீதியிலான நடவடிக்கைகளை இணைத்திடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

6. மீன் வளர்ப்பின்மூலம் ஊரகப் பகுதியில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

7. மீனவ மகளிருக்கு புதிய வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துவதன்மூலம் அதிகாரப் பகிர்வளித்தல்.

8. வாழ்வாதாரம், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை வழங்குவதற்கு ஏதுவாக உள்நாட்டு மீன் வளங்களைப் பாதுகாத்தல், மேலாண்மைச் செய்தல் மற்றும் நிலையாகப் பயன்படுத்துதல்.

*2023 ஏப்ரல் 5]*

9. *மீன்குஞ்சு தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினைக் குறைத்தல்.*

10. *விலைமதிப்புமிக்க மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியினை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.*

11. *உரிய சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்துவதன் வாயிலாக மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், மீன்வளங்களை அதிகரித்தல் மற்றும் மேலாண்மைச் செய்தல்.*

12. *மீனவர்கள் மற்றும் மீன்வளத் துறை அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின்மூலம் மீன்வளத்தை மேம்படுத்துதல்.*

13. *தமிழ்நாட்டின் மீன்வள ஆதாரங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை மறு மதிப்பீடு செய்தல்.*

14. *மின் ஆளுமைமூலம் வெளிப்படைத் தன்மையுடன் திட்டங்கள் சென்றடைவதைக் கண்காணித்து உறுதி செய்தல்.*

## 2.4 துறையின் முக்கியச் செயல்பாடுகள்

*மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:*

1. *தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.*

2. *கடல் மீன்பிடிப்பின்போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.*

3. *இயற்கை பேரிடர் காலங்களில் தேடுதல், மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.*

4. *மீனவர்களுக்கான பல்வேறு சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.*

5. *மீன்வளச் சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துதல்.*

6. *நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளை உற்பத்தி மற்றும் இருப்புச் செய்வதன்மூலம் கடல் மற்றும் உள்நாட்டு மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்து மேலாண்மைச் செய்தல்.*

7. உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின்மூலம் மேம்படுத்துதல்.

8. மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் அரசு மீன் பண்ணைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

9. சுகாதாரமான முறையில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் மற்றும் குளிர்காப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

10. மீனவ மகளிருக்கென சிறப்பு மாற்று வாழ்வாதார திட்டங்களைச் செயல்படுத்துதல்.

11. மீனவர் மற்றும் மீன் வளர்ப்போருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல்.

12. விரிவாக்கப் பணிகள்மூலம் திட்டங்களைச் சென்றடையச் செய்தல்.

13. மீனவக் கூட்டுறவுச் சங்கங்களை மேலாண்மை செய்தல்.

14. மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள்மூலம் மீனவர்களின் சமூக—பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.


15. மீன் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்.

16. மீனவர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் மற்றும் மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குதல் போன்ற நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

17. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்மூலம் நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குதல்.

## 3. நிருவாக அமைப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் துறையின் தலைவராக உள்ளார். மேலும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.


மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் இயக்குநர் (2)
காவல் கண்காணிப்பாளர் (1)
நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் (1)
தலைமை பொறியாளர் (1)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (4) / மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (11) / துணை இயக்குநர் (பொறியியல்) (1) / துணை இயக்குநர் (பணியாளர்) (1)
துணை காவல் கண்காணிப்பாளர் (1)
கணக்கு அலுவலர் (1)
செயற்பொறியாளர் (5)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் (49) / நேர்முக உதவியாளர் (12) / துணைப் பதிவாளர் (1)
உதவி செயற்பொறியாளர் (13)
உதவி பொறியாளர் (13) / இளநிலை பொறியாளர் (17)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆய்வாளர் (167) / கூட்டுறவு சார்-பதிவாளர் (16)
காவல் ஆய்வாளர் (10) / காவல் சார்-ஆய்வாளர் (8)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்ஆய்வாளர் (84) / கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர் (27) / கடல்முதல்வர் (13)

[2023 ஏப்ரல் 5

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,796 ஆகும். பதவி வாரியாக பணியிடங்களின் விவரம் அட்டவணை 1—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை: 1

### பதவி வாரியாக அலுவலர்கள் விவரம்

| வ எண் | பதவியின் பெயர் | பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி) |
|---|---|---|
| 1 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் | 1 |
| 2 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை கூடுதல் இயக்குநர் | 2 |
| 3 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் | 4+1 |
| 4 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை துணை இயக்குநர் | 11+2 |
| 5 | துணை இயக்குநர் (பணியாளர்) | 1 |
| 6 | துணை இயக்குநர் (பொறியியல்) | 1 |
| 7 | நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் | 1 |
| 8 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் / உதவி இயக்குநர் (இயந்திரவியல்) | 49+8 |
| 9 | துணைப் பதிவாளர் | 1 |
| 10 | கணக்கு அலுவலர் | 1 |
| 11 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆய்வாளர் | 167 |
| 12 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்—ஆய்வாளர் | 84 |

*2023 ஏப்ரல் 5*]

| **வ எண்** | **பதவியின் பெயர்** | **பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி)** |
|---|---|---|
| 13 | அமைச்சுப் பணி மற்றும் களப் பணியாளர்கள் | 1,263+1 |
| | மொத்தம் | 1,586 + 12 |

| | | |
|---|---|---|
| | **பொறியியல் பிரிவு** | |
| 1 | தலைமைப் பொறியாளர் | 1 |
| 2 | செயற்பொறியாளர் | 5 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 13 |
| 4 | உதவி பொறியாளர் | 13 |
| 5 | இளநிலை பொறியாளர் | 17 |
| 6 | முதுநிலை வரைவு அலுவலர் | 1 |
| 7 | வரைவு அலுவலர் | 8 |
| 8 | இளநிலை வரைவு அலுவலர் | 4 |
| 9 | கோட்டக் கணக்கு அலுவலர் | 4 |
| 10 | தொழில்நுட்ப உதவியாளர் | 23 |
| 11 | அமைச்சுப்பணி மற்றும் இதர பணியாளர்கள் | 9 |
| | **மொத்தம்** | **98** |
| | **கடல்வள சட்ட அமலாக்கப் பிரிவு** | |
| 1. | காவல் துறை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | துணை காவல் கண்காணிப்பாளர் | 1 |
| 3. | காவல் ஆய்வாளர் | 10 |
| 4. | காவல் சார்—ஆய்வாளர் | 8 |
| 5. | தலைமைக் காவலர்/காவலர் | 53 |
| 6. | காவல் ஊர்தி ஓட்டுநர் | 19 |

| | | |
|---|---|---|
| 7. | கண்காணிப்பாளர் | 1 |
| 8 | உதவியாளர் | 2 |
| 9. | முகாம் உதவியாளர் | 17 |
| | மொத்தம் | 112 |
| | **மொத்தக் கூடுதல்** | **1,796+12** |

## 4. தமிழ்நாட்டின் மீன்வளம்—ஒரு கண்ணோட்டம்

*தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையினைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கடல் மீன் உற்பத்தி 5.95 இலட்சம் மெட்ரிக் டன் (2021-2022) ஆகும். இதில் 1.14 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.6559.64 கோடி அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன ஏரிகள், குளங்கள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் பிற நீர்நிலைகள் உள்ளடக்கிய 3.85 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர் நிலைகள் உள்ளன. உள்நாட்டு மீன்வளம் 2.36 இலட்சம் உள்நாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது.*

*தமிழ்நாட்டிலுள்ள உப்பங்கழிகள், கழிமுகங்கள், முகத்துவாரங்கள் போன்ற 56,000 ஹெக்டேர் பரப்பளவிலான உவர் நிலப் பரப்புகள் மீன் வளர்ப்பிற்கான ஆதாரமாக உள்ளது. தற்போது 4207.34 ஹெக்டேர் பரப்பளவிலான 2,177 பண்ணைகள் மூலமாக கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

### 4.1 கடல் மீன்வளம்

*கடல் மீன்வளம் குறித்த கண்ணோட்டம் அட்டவணை 2—ல் கொடுக்கப்பட்டுள்ளது.*

*2023 ஏப்ரல் 5*]

## அட்டவணை: 2

### கடல் மீன்வளம் குறித்த புள்ளிவிவரம் 2022-23

| | |
|---|---|
| *கடற்கரை நீளம்* | *1,076 கி.மீ.* |
| *பிரத்யேக பொருளாதார மண்டலம் (*EEZ*)* | *1.9 இலட்சம் ச.கி.மீ.* |
| *கண்டத்திட்டு (*Continental shelf*)* | *41,412 ச.கி.மீ.* |
| *கடலோர மாவட்டங்கள்* | *14* |
| *மீனவக் கிராமங்கள்* | *608* |
| *கடலோர மீனவ மக்கட்தொகை* | *10.48 இலட்சம்* |
| தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள கடல் மீனவர்கள் | *4,41,977* |
| ***பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணைய வழி)*** | |
| *மீன்பிடி விசைப்படகுகள்* | *5,830* |
| நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை) | *45,685 (41,593 + 4,092)* |


| | |
|---|---|
| ***உட்கட்டமைப்பு வசதிகள்*** | |
| பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் — *9* | *1.* சென்னை,<br>*2.* பூம்புகார், மயிலாடுதுறை மாவட்டம்<br>*3.* நாகப்பட்டினம்,<br>*4.* மூக்கையூர், இராமநாதபுரம் மாவட்டம்<br>*5.* தூத்துக்குடி,<br>*6.* சின்னமுட்டம், கன்னியாகுமரி மாவட்டம்<br>*7.* முட்டம் (PPP), கன்னியாகுமரி மாவட்டம்<br>*8.* குளச்சல், கன்னியாகுமரி மாவட்டம்<br>*9.* தேங்காப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம் |

[2023 ஏப்ரல் 5


| | |
|---|---|
| நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் — 4 | 1. பழையாறு, மயிலாடுதுறை மாவட்டம்<br>2. மல்லிப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்<br>3. கடலூர்,<br>4. நம்பியார்நகர், நாகப்பட்டினம் மாவட்டம் |
| கட்டுமானத்தில் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள்— 5 | 1. திருவொற்றியூர் குப்பம், சென்னை மாவட்டம்,<br>2. அழகன்குப்பம், விழுப்புரம் மாவட்டம் மற்றும் ஆலம்பரைகுப்பம், செங்கல்பட்டு மாவட்டம்<br>3. வெள்ளப்பள்ளம், நாகப்பட்டினம் மாவட்டம்<br>4. தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம்<br>5. ஆற்காட்டுத்துறை, நாகப்பட்டினம் மாவட்டம் |
| மேம்பாட்டிலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் — 3 | 1. தேங்காப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம்<br>2. தூத்துக்குடி,<br>3. பழையாறு, மயிலாடுதுறை மாவட்டம் |
| மீன் இறங்குதளங்கள்/படகு அணையும் தளங்கள் | 52 |
| மீன் இறங்கு மையங்கள் | 251 |
| கடல் மீன் உற்பத்தி (2021—22) | 5.95 இலட்சம் மெட்ரிக் டன் |
| கடல்பொருள் ஏற்றுமதி (2021—22) * | அளவு:1,14,810 மெட்ரிக் டன்<br>மதிப்பு: ரூ.6,559.64 கோடி |

ஆதாரம்: * கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA)

*2023 ஏப்ரல் 5*]



தமிழ் நாட்டின் மொத்த மீன் உற்பத்தி
(இலட்சம் டன்களில்)
மீன்கள் உற்பத்தி
8.5
8
7.5
7
6.5
6
6.81
6.9
7.57
7.22
8.06
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
ஆண்டு

தமிழ் நாட்டின் மீன் மற்றும் மீன் பொருட்கள் ஏற்றுமதி
7,000
6,000
5,000
4,000
3,000
2,000
1,000
0
5408.81
5591.49
6210.52
5565.48
6559.64
1,144
1,288
1,349
1,100
1,148
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
ஆண்டு
அளவு (100 மெட்ரிக் டன்களில்)
மதிப்பு (ரூ கோடிகளில்)

### 4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் அளவிலான உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் உள்ளன. இதில் நீர்த்தேக்கங்கள், நீண்டகால மற்றும் குறுகிய கால பாசன ஏரிகள், குளங்கள், ஆறுகள் மற்றும் இதர நீர்நிலைகள் மீன்பிடிப்பிற்கும் மற்றும் மீன் வளர்ப்பிற்கும் உகந்ததாக உள்ளன.

உள்நாட்டு மீன்வளம் குறித்த கண்ணோட்டம் அட்டவணை 3—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 3**

**உள்நாட்டு மீன்வள புள்ளிவிவரம் 2022 – 2023**

| | |
|---|---|
| உள்நாட்டு மீன் வள ஆதாரங்கள் | 3,85,761 ஹெக்டேர் |
| நீர்த்தேக்கங்கள் (90 எண்ணிக்கை) | 62,015 ஹெக்டேர் |
| பெரிய மற்றும் குறுகிய கால பாசன ஏரிகள் மற்றும் குளங்கள் | 2,67,746 ஹெக்டேர் |
| உவர்நீர் பரப்பளவு | 56,000 ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கட்தொகை | 2.36 இலட்சம் |
| தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள உள்நாட்டு மீனவர்கள் | 57,772 |

### உள்நாட்டு மீன்வள உட்கட்டமைப்புகள்

| | |
|---|---|
| மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் | |
| i) அரசு மீன் பண்ணைகள் | 10+1 (TNFDC) |
| ii) தனியார் மீன் பண்ணைகள் | 42 |

*2023 ஏப்ரல் 5]*

**மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்**

| ***மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்*** | |
|---|---|
| *i) அரசு மீன் பண்ணைகள்* | *39+5 (TNFDC)* |
| *ii) தனியார் மீன் பண்ணைகள்* | *290* |
| *iii) கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு (அரசு)* | *3* |
| *2021-2022 ஆம் ஆண்டு உள்நாட்டு மீன் உற்பத்தி* | *2.11 இலட்சம் மெட்ரிக் டன்* |

## 4.3 உவர்நீர் மீன்வள மேலாண்மை

*உவர்நீர் பரப்பானது முகத்துவாரப் பகுதியில் வசிக்கக்கூடிய மீன் இனங்களின் இனப்பெருக்கம் மற்றும் மீன்களின் வாழ்க்கைச் சுழற்சிக்கு அடிப்படையாக அமைவதுடன், இனப் பெருக்கத்திற்காக ஒரு நீர்பரப்பிலிருந்து மற்றொரு நீர்பரப்பிற்குச் செல்லும் மீன் இனங்களின் வாழ்விடமாகவும் உள்ளது. உவர்நீர் ஆதாரமானது, முகத்துவாரங்கள், உப்பங்கழிகள், சதுப்பு நில காடுகள் மற்றும் உப்பு நீர் ஏரிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இவை வணிக மற்றும் சுற்றுசூழலுக்கு முக்கியமான மீன்கள், இறால் மற்றும் நண்டுகளின் இனப்பெருக்கம் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தி நடைபெறும் இடங்களாகும்.*

*பழவேற்காடு ஏரி, ஆரணியாறு, எண்ணூர், முட்டுக்காடு உப்பங்கழிகள், பழையாறு, பிச்சாவரம், புன்னக்காயல், முத்துப்பேட்டை உப்புநீர் பகுதி, மணக்குடி, தேங்காப்பட்டினம், கொள்ளிடம், கெடிலம் மற்றும் அடையார் உப்பங்கழிகள் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான முகத்துவார மற்றும் உவர்நீர் பகுதிகளாகும். உவர்நீர் மற்றும் முகத்துவார ஏரிகள் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுசூழல் முக்கியத்துவம் கொண்ட அதிக உற்பத்தித் திறன் கொண்ட நீர்நிலைப் பகுதிகளாகும். தமிழ்நாட்டின் மொத்த உவர்நீர் பரப்பளவு 56,000 ஹெக்டேர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த உவர்நீர் பரப்பில் 3.98 சதவிகிதம் ஆகும்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## 4.4 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு

உலகின் பல பகுதிகளில் கடல் மீன் பிடிப்பின்மூலம் கிடைக்கப்பெறும் மீன்களின் அளவு மற்றும் மீன் வளங்கள் மிகவும் குறைந்து வருகிறது. ஆனால், உலகளவில் தொடர்ந்து அதிகரித்து வரும் கடல் உணவுக்கான தேவை, கடல் மீன்பிடிப்பு குறைந்து வருதல் மற்றும் மீன்பிடித்தலுக்குத் தேவையான உள்ளீட்டு செலவுகள் அதிகரித்தல் ஆகியவை கடல் உயிரின வளர்ப்பு மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசின் கொள்கைக் கட்டமைப்பானது அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையின்மூலம் பொறுப்பான மற்றும் நிலையான கடலோர மீன் வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பினை ஊக்குவிக்கிறது.

ஏற்றுமதி வர்த்தகத்திற்கான கடல் உணவுப் பொருட்களில், இறால் மிகவும் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், நவீன மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்களில் இறால் வளர்ப்பு மிகுந்த இலாபம் ஈட்டக்கூடிய தொழிலாகக் கருதப்படுகிறது. இறால் வளர்ப்பின்மூலம் கடலோரப் பகுதிகளில் அதிகளவு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், இத்தொழில் நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருகிறது. தமிழ்நாட்டில் 4,207.34 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ள 2,177 இறால் பண்ணைகள் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின்மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் இயங்கி வரும் 78 இறால் குஞ்சு பொரிப்பகங்கள் தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலத்திற்குத் தேவையான இறால் குஞ்சுகளை வழங்கி வருகின்றன.

## 5. கடல் மீன்வளச் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்

2022-2023 ஆம் ஆண்டில் பல்வேறு கடல் மீனவர் நலன் சார்ந்த திட்டங்களுக்காகத் தமிழ்நாடு அரசு ரூ.319.04 கோடி விடுவித்துள்ளது.

பல்வேறு நலத் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 5]

## 5.1. மாநிலத் திட்டங்கள்

### 5.1.1. மீன்பிடிப்பு குறைவு காலத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல்

மீன்பிடிக் குறைவு காலத்தில், கடல் மீனவர் குடும்பங்களின் துயரினைக் களைந்திடும் விதமாக கடல் மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடிக் குறைவு காலத்தில் தமிழ்நாடு அரசு நிவாரணத் தொகை வழங்கி வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டு முதல் கடல் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு நிவாரணத் தொகையை ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/-ஆக அரசு உயர்த்தியுள்ளது.

அதன்படி, 2022-2023 ஆம் ஆண்டில் மீன்பிடிக் குறைவுகால சிறப்பு நிவாரணத் தொகைக்கென ரூ.104.38 கோடி அரசு ஒப்பளித்தது. மேற்காணும் தொகையில் 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,54,384 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.92.63 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மேற்படி உதவித் தொகை 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிவுறும்.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.2 கடல் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டமானது மாநில அரசின் நிதியுதவித் திட்டமாக 2022-2023 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், மீனவர் பங்களிப்புத் தொகை ரூ.1,500/- உட்பட நிவாரணத் தொகையாக ரூ.4,500/- மீன்பிடிக் குறைவு காலத்தில் வழங்கப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.63.26 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு, அத்தொகையில் இதுவரை திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,74,772 கடல் மீனவர்களுக்கு மொத்தம் ரூ.52.43 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிவாரணத் தொகை வழங்குவது மே 2023-ல் முடிவுறும்.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.1.3. கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் 2006-2007 ஆம் ஆண்டு முதல் மாநில அரசு நிதியுதவி திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மீனவ மகளிருக்கும், மீனவ மகளிரின் பங்களிப்புத் தொகையான ரூ.1,500/-ஐ சேர்த்து மொத்த நிவாரணத் தொகையாக ரூ.4,500/- வழங்கப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.63.36 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு, அத்தொகையில் இதுவரை திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,75,588 கடல் மீனவ மகளிருக்கு மொத்தம் ரூ.52.67 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிவாரணத் தொகை வழங்குவது மே 2023-ல் முடிவுறும்.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.1.4 மீன்பிடிப் படகுகளுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல்

தமிழ்நாடு அரசு, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விசைப் படகிற்கு ஓர் ஆண்டிற்கு 18,000 லிட்டரும், அதாவது ஒரு விசைப் படகிற்கு 2 மாத மீன்பிடித் தடைக்காலம் தவிர 10 மாதங்களுக்கு, மாதத்திற்கு 1800 லிட்டர் வீதம் வழங்கி வருகிறது. மேலும், ஒவ்வோர் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகிற்கு, ஓர் ஆண்டிற்கு அதிகபட்சமாக 4,000 லிட்டர் வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் வழியாக வழங்கி வருகிறது.

2022-2023 ஆம் நிதியாண்டில், விற்பனை வரித் தொகை ரூ.169.27 கோடி அளவில் விலக்களிக்கப்பட்டு, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட 93,992 கிலோ லிட்டர் டீசல் எரியெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

*2023 ஏப்ரல் 5*]

### 5.1.5 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்குத் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல்

*தமிழ்நாடு அரசு தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்திய நாட்டுப் படகுகளுக்கு ஓராண்டில் ஒரு படகிற்கு 3400 லிட்டர் தொழிலக மண்ணெண்ணெயினை லிட்டர் ஒன்றிற்கு ரூ.25 வீதம் மானிய விலையில் வழங்கி வருகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டில், ரூ.112.02 கோடி மானியத்துடன் 17,100 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.*

*இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

### 5.1.6 கடலில் மீன்பிடிக்கும்போது பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்குத் தின உதவித் தொகை வழங்குதல்

*கடலில் மீன் பிடிக்கும்போது இலங்கை மற்றும் பிற அண்டை நாட்டினரால் சிறை பிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாத்திடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் தின உதவித் தொகையாக மாநில அரசு வழங்கி வருகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டில், சிறை பிடிக்கப்பட்ட 121 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.10.53 இலட்சம் நிவாரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.*

*2023-2024 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

### 5.1.7 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போகும் மீனவர்களது குடும்பத்திற்குத் தின உதவித் தொகை வழங்குதல்

*கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு தின உதவித்*

*தொகையாக ரூ.250/— வீதம் (மாதமொன்றுக்கு ரூ.7,500/—) மாநில அரசால் வழங்கப்படுகிறது. கடலில் மீன் பிடிப்பிற்காகச் சென்று காணாமல் போயிருக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகையினை இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது குழு விபத்து காப்புறுதித் திட்டம்/தமிழ்நாடு மீனவர் நல வாரியம் ஆகியவற்றின்கீழ் நிவாரண உதவி பெறும் வரை வழங்கப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.7.81 இலட்சம் தின உதவித் தொகை 18 மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

**5.1.8 இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மீனவரது குடும்பத்தினருக்கு/காயமடையும் மீனவருக்கு நிவாரணம் வழங்குதல்**

*கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள், பாரம்பரிய மீன்பிடிப் பகுதியான பாக்—வளைகுடா பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல்/துன்புறுத்தப்படுதல் போன்ற சிரமங்களை எதிர்கொள்வதோடு, சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகின்றனர்.*

*இவ்வாறான நிகழ்வுகளின்போது மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக்கூடிய ஒரே நபராக இருக்கும்பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. மீனவர் பலத்த காயம் மற்றும் சிறுகாயம் அடையும்போது முறையே ரூ.50,000/- மற்றும் ரூ.20,000/- கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.*

**5.1.9 புதிய சூரை மீன்பிடித் தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப் படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல்**

*கடலோர மீன்வளங்களைப் பாதுகாப்பதன்மூலம் நிலையான மீன்வளத்தைப் பெருக்கவும், அதிகம் பிடிக்கப்படாத ஆழ்கடல் மீன்வளங்களான சூரை மீன் மற்றும் அதுபோன்ற*

மீன் இனங்களை மீனவர்கள் பிடிப்பதை ஊக்கப்படுத்திடவும், 'தூண்டில் மற்றும் செவுள் வலையுடன்கூடிய புதிய சூரை மீன்பிடிப் படகுகள்' வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், படகு ஒன்றினைக் கட்டுவதற்கான உத்தேச மதிப்பு ரூ.60 இலட்சத்தில், 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை ரூ.51.30 கோடி திட்ட மதிப்பீட்டில் 171 சூரை மீன்பிடிப் படகுகள் கட்டுவதற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 103 படகுகள் கட்டி முடிக்கப்பட்டு, ரூ.29.35 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டு படகுகளின் கட்டுமானப் பணிகள் ஆரம்ப நிலையில் உள்ளன. தற்பொழுது 66 பயனாளிகளுக்குப் புதியதாகப் பணி ஆணைகள் வழங்கப்பட்டு, படகு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 5.2 ஒன்றிய அரசு பங்களிப்புத் திட்டங்கள்

### 5.2.1 மீன்பிடித் தடைக்காலத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்கான நிவாரணத் தொகை வழங்குதல்

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மீன்பிடித் தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடித் தடைக்காலம் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் (திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரோக்கியபுரம் வரை) ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், 61 நாட்களுக்கும், மேற்குக் கடற்கரைப் பகுதியில் (கன்னியாகுமரி மாவட்டத்தில் இராஜாக்கமங்கலம்துறை முதல் நீரோடி வரை) ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும் 61 நாட்களுக்கு அமல்படுத்தப்படுகிறது.

மீன்பிடித் தடை காலத்தில் மீனவர்களின் துயரினைக் களைந்திட, 14 கடலோர மாவட்டங்களில் உள்ள கடலோர மீனவக் குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.5000/— வீதம் மீன்பிடித் தடைகால நிவாரணமாக அரசு வழங்கி வருகிறது. இதனில், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசு ரூ.1500/-ஐ தனது பங்குத் தொகையாக வழங்குகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,78,472 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.89.24 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 5.2.2 மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

*தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம்மூலம் (NFDB) பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் விபத்தில் இறந்த மீனவருக்கு ரூ.5 இலட்சம் மற்றும் விபத்தில் ஊனமடைந்த மீனவருக்கு ரூ.2.50 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படுகிறது. 2022—2023 ஆம் ஆண்டிற்கு 5,43,949 உறுப்பினர்களுக்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.1.57 கோடி (40% பிரிமியத் தொகை) தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்குச் செலுத்தப்பட்டு, 25.7.2023 வரை இத்திட்டம் நடைமுறையில் இருக்கும்.*

## 5.2.3 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்

*பாரம்பரிய மீன்பிடிக் கலன்களில் பொருத்திட வெளிப்பொருத்தும் இயந்திரம்/உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு, இயந்திரத்தின் ஓர் அலகிற்கான விலையில் 40 விழுக்காடு அல்லது ரூ.48,000/- மானியமாக வழங்கப்படுகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டில், பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு 2,586 உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் ரூ.9.60 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.*

## 5.2.4 பாக் வளைகுடா மாவட்டங்களில் இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளாக மாற்றுவதற்கு மானியம் வழங்குதல்

*பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவைப் படகுகளுக்கு மாற்றாக ஆழ்கடல் சூரை மீன்பிடிப் படகுகளைக் கட்டுவதற்கு, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் 70 விழுக்காடு மானியம் வழங்கி செயல்படுத்தி வருகிறது. ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சத்தில், 50 விழுக்காடு மத்திய அரசின் மானியமாக ரூ.40 இலட்சமும், 20 விழுக்காடு தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.16 இலட்சமும், 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்பாக ரூ.8 இலட்சமும், மீதமுள்ள 20 விழுக்காடு ரூ.16 இலட்சம் வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5*]

*இத்திட்டத்தின்கீழ், 55 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் கட்டப்பட்டு, பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், 24 படகுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளது.*

### 5.2.5 பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கு மாற்றாக கண்ணாடி நாரிழைப்படகு மற்றும் இதர உபகரணங்கள் வாங்க மானியம் வழங்குதல்

*’பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்’கீழ் பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் நாட்டுப் படகுகளுக்கு மாற்றாக 10 மீட்டர் ஒட்டுமொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப் படகுடன் வலைகள், வெளிப்பொருத்தும் இயந்திரம் மற்றும் குளிர்காப்பு பெட்டி வாங்குவதற்கு, அதன் அலகு ஒன்றின் விலையான ரூ.5.00 இலட்சத்தில் 40 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம் மானியமாக அரசு வழங்கி வருகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டில் ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் 300 கண்ணாடி நாரிழைப் படகுகள் வழங்க அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

## 5.3 மீன்பிடி ஒழுங்குபடுத்துதல் மற்றும் சட்ட அமலாக்கம் செய்தல்

### 5.3.1 மீன்பிடிக் கலன்களைப் பதிவுசெய்தல்

*மீன்பிடிக் கலன்களின் இயக்கத்தைக் கண்காணித்திடவும், கடலோரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திடவும் மீன்பிடிக் கலன்கள் இணையதளம்மூலம் (*‘ReALCraft’ website*) பதிவு செய்யப்பட்டு வருகிறது. 5,830 மீன்பிடி விசைப் படகுகள், 41,593 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 4,092 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப் படகுகள்* ’ReALCraft’ *இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

### 5.3.2 கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்ட அமலாக்கப் பிரிவு

*தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தினைச் சிறப்பாக அமல்படுத்துதல், சட்டத்திற்கு முரணான மீன்பிடிப்பை தடுத்தல், மீன்வள ஆதாரத்தைப் பாதுகாத்தல், மீன்பிடிப்பை முறைப்படுத்துதல் போன்றவற்றைச் செயல்படுத்துவதற்கு மீன்வளத் துறைக்கென தனியே சட்ட அமலாக்கப் பிரிவுக்கான 112 பணியிடங்களில், 92 காவல் துறை அலுவலர்களுடன் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.*

*[2023 ஏப்ரல் 5*

*அதன்படி, 14 கடலோர மாவட்டங்களில், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம், 1983-ஐ அமலாக்கம் செய்திட, ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், 10 காவல் ஆய்வாளர்கள், 8 காவல் சார்—ஆய்வாளர்கள், 53 காவலர்கள், 19 காவல் ஓட்டுநர்கள் ஆகிய நிரந்தரப் பணியிடங்களைக் கொண்டு இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.*

*சட்டத்திற்குப் புறம்பான மீன்பிடிப்பு, அழிவை ஏற்படுத்தும் மீன்பிடிப்பு மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் மீன்பிடித்தலில் ஒழுங்குமுறையை நிலைநாட்டிட கடலில் ரோந்துப் பணி மேற்கொள்ளுதல், ரோந்துப் பணியின்போது சேகரிக்கப்படும் சமூகவிரோத செயல்பாடுகள் மற்றும் நுண்ணறிவுத் தகவல்களைக் கடலோர பாதுகாப்புப் படை மற்றும் உள்ளூர் காவல் துறையின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கியப் பணிகளை இந்த அமலாக்கப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.*

## 5.4 பேரிடர் தயார் நிலை, மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்

*மோசமான வானிலை மற்றும் இயற்கைப் பேரிடர் காலங்களில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:*

1) *மீனவர்களுக்கு வானிலை மற்றும் புயல் எச்சரிக்கை தகவல்களைப் பகிர்தல்.*

2) *வானிலைத் தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகளை மீனவர்களுக்கு 24 மணி நேரமும் வழங்கிடத் தேவையான தொலைதொடர்பு வசதிகளுடன்கூடிய மத்திய கட்டுப்பாட்டு அறை மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்தக் கட்டுப்பாட்டு அறைப் பணிக்காக பிரத்யேக தொலைபேசி எண் 044—29530392 வழங்கப்பட்டுள்ளது.*

3) *தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் கடலோர காவல் குழுமம், இந்திய கடலோரக் காவல் படை மற்றும் இந்திய கப்பல் படை ஆகியவற்றுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது.*

TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5]*

### 5.4.1 கடலில் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்பிற்கான நடவடிக்கைகள்

#### 5.4.1.1 கம்பியில்லாத் தொலைத் தொடர்பு கருவிகள் வழங்குதல்

*கடல் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட, தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கிய தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு 18 தொலைத் தொடர்பு கோபுரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*கடலில் உள்ள மீன்பிடிக் கலன்கள் கரைப் பகுதியினைத் தொடர்புகொள்ள ஏதுவாக 15 இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு விலையில்லா 5 வாட் வி.எச்.எப். கருவிகள் 17,795 எண்ணம் மற்றும் விசைப் படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 3,135 எண்ணம் 25 வாட் வி.எச்.எப். கருவிகளும், ஆக மொத்தம் 20,930 வி.எச்.எப். தொலைதொடர்புக் கருவிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.*

#### 5.4.1.2 விசைப் படகுகளில் 'டிரான்ஸ்பாண்டர்கள்' (Transponders) பொருத்துதல்

*200 கடல் மைல்கள் வரை ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களைக் கண்காணித்திடவும், மீன்பிடிப்பில் இருக்கும் படகுகளுக்குத் தகவல் தெரிவித்திடவும், ஆபத்துக் காலங்களில் உதவிகள் புரிந்திடும் பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் டிரான்ஸ்பாண்டர்களை உருவாக்கியுள்ளது.*

*தமிழ்நாட்டில் உள்ள 4,997 விசைப் படகுகளில் டிரான்ஸ்பாண்டர்களைப் பொருத்திடும் பொருட்டு ஒன்றிய அரசு ரூ.18.01 கோடி நிதி விடுவித்துள்ளது. மீன்பிடி விசைப் படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்திடும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.12.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விசைப் படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.*

### 5.4.1.3 செயற்கைக்கோள் தொலைபேசி, ''நேவிக்'' (NavIC) மற்றும் ''நேவ்டெக்ஸ்'' (NavTex) தொலைத் தொடர்பு சாதனங்கள் வழங்குதல்

*ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்பினை மேம்படுத்தும் வகையில் 80 விசைப் படகு குழுக்களுக்கு ரூ.2.28 கோடி செலவில் 160 செயற்கைக்கோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் ஆகிய தொலைத் தொடர்புக் கருவிகள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன.*

*மேலும், ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு மானிய விலையில் 500 விசைப் படகுகளுக்கு செயற்கைகோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.*

### 5.4.1.4 "தூண்டில்" – கைபேசிச் செயலியுடன்கூடிய இணையதள சேவை

*மீன் பிடிப்பிற்காகக் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன்பிடிக் கலன்களை கண்காணிப்பதன்மூலம் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் விவரங்களைப் பதிவு செய்திடவும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஒன்றிய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் (MoES) தேசிய கடலோர ஆராய்ச்சி நிலையத்துடன் (NCCR) இணைந்து, இணையதளம் வாயிலாக "தூண்டில்" எனும் கைபேசி செயலி இயக்கப்படுகிறது.*

*இந்தச் செயலி, கடலில் மீனவர்கள் தங்களின் இருப்பிடம், படகின் கடற்பயண பதிவுகள், பாதுகாப்பான இடம் செல்ல வழிகாட்டி, மீன் அதிகம் கிடைக்கும் இட விவரங்களைப் பெறுதல், மீன் அதிகம் கிடைக்கும் பகுதிகளைப் பதிவு செய்தல் மற்றும் வானிலை அறிக்கை அறிந்துகொள்ளவும் உதவுகிறது.*

### 5.4.2 அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடிப் படகுகளுக்கு நிவாரணம் வழங்குதல்

*அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடிப் படகுகள்/மீன்பிடி உபகரணங்கள்/வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடும்பொருட்டு, ஒரு கடலோர மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சம் வீதம் அனைத்துக் கடலோர மாவட்டங்களுக்கும் ரூ.1.30 கோடி சுழல் நிதி தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் ஆண்டில் மோசமான வானிலையால் சேதமடைந்த 9 மீன்பிடிப் படகுகளுக்கு ரூ.10.89 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.*

*2023 ஏப்ரல் 5]*

*இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

### 5.4.3 மாண்டஸ் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

*கடந்த 2022 ஆம் ஆண்டு உருவான "மாண்டஸ்" புயல் காரணமாக, சென்னை, செங்கல்பட்டு, இராமநாதபுரம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் கனமழை மற்றும் காற்றினால், இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகள், கண்ணாடி நாரிழைப் படகுகள், மீன்பிடி வலைகள் மற்றும் இயந்திரங்கள் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, 2022 மாண்டஸ் புயலின்போது ஏற்பட்ட சேதங்களுக்கு அரசால் ரூ.4.67 கோடி நிவாரணம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.*

### 5.4.4 கடல் ஆமைகளைப் பாதுகாத்தல்

*தமிழ்நாடு கடற்பகுதியில் கடல் ஆமைகளைப் பாதுகாத்திடும் பொருட்டு, மீன்பிடி இழுவலைகளில் கடல் ஆமைகள் சிக்காமல் வெளிச் செல்ல ஏதுவாக, இழுவலைகளில் உள்ள தூர்மடியில்* Turtle Excluder Device (TED) *கருவிகள் பொருத்திடவும், ஒவ்வோர் ஆண்டும் கடல் ஆமைகளின் இனப்பெருக்கக் காலமான ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30 முடிய கடல் ஆமைகள் முட்டையிடும் கடற்பகுதியின் 5 கடல் மைல்களுக்குள் அனைத்து வகை படகுகளும் மீன்பிடிக்கத் தடையாணைப் பிறப்பித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.*

### 5.5 தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

### 5.5.1 கச்சத்தீவினைத் திரும்பப் பெறுதல்

*பாக் நீரிணைப் பகுதியில் 2,490 விசைப் படகுகள், 12,443 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 1,020 நாட்டுப் படகுகள் பாரம்பரிய கடல் பகுதியில் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. பாக் நீரிணைப் பகுதி மாவட்டங்களில் உள்ள 286 மீனவக் கிராமங்களில் 2,08,827 மீனவ மக்கள் வாழ்கின்றனர். பாக் நீரிணைப் பகுதியிலுள்ள இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வாழும் சுமார் 80,000 மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக, அத்துடன் பெரும்பான்மையான கடலோர மக்கள் மறைமுகமாகவும்*

தங்களது வாழ்வாதாரத்திற்காக பாக் நீரிணையின் பாரம்பரிய மீன் பிடிப்பைச் சார்ந்துள்ளனர்.

தமிழ்நாடு மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடற்பகுதியில் மீன்பிடிக்கும்போது சர்வதேசக் கடல் எல்லையை கடப்பதாகக் கூறி இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். இலங்கை அரசால் நமது மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடிப் படகுகள் நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்படுவது தமிழ்நாடு மீனவர்கள் மத்தியில் கவலையையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, "கச்சத்தீவை" மீட்டெடுத்து மீண்டும் இந்தியாவிற்குக் கிடைப்பது மற்றும் பாக் நீரிணைப் பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கும் வகையில், 1974-ல் இந்திய அரசால் இலங்கைக்கு ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்ட "கச்சத்தீவை" மீட்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பாகத் தமிழ்நாடு சட்டமன்றத்திலும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமிழ்நாடு அரசும் வாதியாக இணைந்து, கச்சத் தீவை மீட்க இந்திய அரசை வலியுறுத்தியது.

அதன்பின் SLP.எண் 8013/2017-ல், தனி நபர் ஒருவர், இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 6-வது பிரிவைச் செயல்படுத்த/ அமல்படுத்த இந்திய ஒன்றியத்திற்கு எதிராக மனுத்தாக்கல் செய்துள்ளார். அத்துடன் அவ்வொப்பந்தம் தொடர்பான 23.3.1976 நாளைய கடிதத்திலுள்ள ஆட்சேபனைக்குரிய பிரிவுகளை நீக்கிட கோரியுள்ளார். தமிழ்நாடு அரசு 5.8.2021 அன்று மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தில் எதிர் பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.6.2021 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு வழங்கிய கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார். மேலும், 1.4.2022 அன்று மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு

*2023 ஏப்ரல் 5]*

*மீனவர்கள் எதிர்க்கொள்ளும் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டியும், பாரம்பரிய கடற்பகுதியில் தங்களது மீன்பிடி உரிமையை மீட்டெடுப்பதற்கும் மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார். எனவே, மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத் தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன்மூலமே, பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதை தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.*

### 5.5.2 இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் முடக்கி வைக்கப்பட்டுள்ள அவர்களின் படகுகளை விடுவித்தல்

*தமிழ்நாடு மீனவர்கள் பாரம்பரியமான பாக் வளைகுடா பகுதியில் தங்கள் மீன்பிடிப்பை மேற்கொள்ளும்போது சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டுவதாகத் தெரிவித்து, இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்படும் தொடர் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுதல், துன்புறுத்தப்படுதல், சிறைபிடிக்கப்படுதல் போன்ற சம்பவங்களால் பாதிக்கப்படும்போது, இரு நாட்டு தூதரக அளவில் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, அவர்களை விடுவிக்க வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு கடிதங்கள் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.*

*மேலும், தமிழ்நாடு அரசு, கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிப்பதற்கு தூதரக ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது. 1-4-2022 அன்று மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் சிறை பிடிக்கப்பட்ட படகுகளை மீட்க, மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார். இதற்கு முன்பு அதிகபட்சமாக 113 நாட்கள்*

[*2023 ஏப்ரல் 5*

*வரை இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு மீனவர்கள், இந்த அரசு எடுத்த முயற்சிகளினால், மிகக் குறைந்த காலமான பதினாறு நாட்களிலேயே தாய் நாடு திரும்பியுள்ளனர். தற்போது வரை இலங்கை அரசு வசமுள்ள 110 படகுகளில் 6 படகுகள் விடுவிக்கப்பட்டதில் 1 படகு தமிழ்நாடு திரும்பியுள்ளது. விடுவிக்கப்பட்ட மீதமுள்ள 5 படகுகளுடன் இலங்கை சிறையில் உள்ள 12 மீனவர்கள் மற்றும் விடுவிக்கப்படாத 104 படகுகளையும் தமிழ்நாட்டிற்கு கொண்டுவர அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது.*

## 5.5.3 மீன்வளத்திற்கான இந்திய-இலங்கை கூட்டுப் பணிக் குழுக் கூட்டம் (JWG)

*மீனவர்கள் மற்றும் மீன்பிடிப் படகுகளை விடுவிப்பது, ரோந்து மற்றும் கைது நடவடிக்கையின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்/நெறிமுறைகள் மற்றும் மீனவர்களை மனிதாபிமான முறையில் கையாளுவது குறித்து மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக் குழுக் கூட்டம் (JWG) நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஐந்து சுற்றுகள் இந்திய—இலங்கை கூட்டு பணிக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தக் கூட்டங்களின்போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை விடுவித்து, திருப்பி அனுப்புவது குறித்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது.*

## 5.6 உவர்நீர் மீன்வளம், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு

### 5.6.1. உவர்நீர் மீன்வளம்

*உவர்நீர் மீன்பிடிப்பை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் மாநிலத்தின் நீண்ட கால மீன்வள நிலைத்தன்மைக்கு மிகவும் முக்கியமானதாக உணரப்படுகிறது. சுற்றுசூழலுக்கு உகந்த மற்றும் செலவு குறைந்த உவர்நீர் மீன் வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடிப்பு, முக்கியமாக இறால்களை இருப்புச் செய்தல், நண்டு மற்றும் பிற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துடுப்பு மீன்களை வளர்த்து அவற்றை உவர்நீர் பரப்பில் இருப்பு செய்தல் போன்ற செயல்பாடுகளை உவர்நீர் மீன்வள கொள்கையின்மூலம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5*]

*உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மேலாண்மைக்கு அரசின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் உத்திகள் மற்றும் செயல்பாட்டுத் திட்டங்கள் பின்வருமாறு:*

1. *உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மீன்வளங்களைத் திறம்பட மேலாண்மைச் செய்தல், சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான நிலைத்தன்மைக்கு மிகவும் அவசியம்.*

2. *உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மீன்வள மேலாண்மைக்கான குறிப்பிட்ட வழிகாட்டுதல்களுடன் கடலோர மண்டல மேம்பாட்டுத் திட்டத்தில் உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார வாழ்விடங்களை ஒருங்கிணைப்பதை உறுதி செய்தல்.*

3. *உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் மீன்பிடித்தலைத் திறம்பட மேம்படுத்திட மற்றும் இனப்பெருக்கம் மற்றும் நாற்றாங்கால் பகுதிகளில் உற்பத்தியை உறுதி செய்தல், மீன் இனங்களின் இடம்பெயர்வு வழிகளையும் உறுதி செய்தல்.*

4. *உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் மீன்வள மேலாண்மை மற்றும் உயிர் பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதில் சமூகத்தின் பங்களிப்பினை அதிகப்படுத்துதலை ஊக்குவித்தல்.*

5. *விரிவான ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்புமூலம் உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரங்கள் தொடர்புடைய தரவு மற்றும் தகவல்களைச் சேகரித்து அதன்மூலம் உவர்நீர் மீன்வள மேலாண்மைப் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளுதல்.*

## 5.6.2. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

*மீன் உற்பத்தியினைப் பெருக்குவதன்மூலம் கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் நீர் ஆதாரங்களின் உற்பத்திப் பயன்பாட்டினை அதிகரித்தல் ஆகியவை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பின் முக்கியத்துவங்களாகும். தற்போது மாநிலத்தில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பில், இறால் வளர்ப்பு மிக முக்கியச் செயல்பாடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலோரப் பகுதிகளில் இறால்களை வளர்க்க விவசாயிகளை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், குளங்கள்*

மற்றும் கூண்டுகளில் மாற்று மீன் இனங்களான நண்டு, பால் மீன், மடவை மற்றும் கொடுவா மீன் வளர்ப்பினை ஊக்குவிக்க அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. ஒன்றிய மற்றும் மாநில அரசுத் திட்டங்களின்மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளை, கொடுவா, பால் மீன், சில்வர் பாம்பனோ, மடவை, கரிமீன் மற்றும் நண்டு போன்ற பல்வகைப்பட்ட இனங்களை வளர்க்க ஊக்குவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குளம் சார்ந்த மீன் வளர்ப்பு, நீர் பரிமாற்றமில்லாத மீன் வளர்ப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டு முறையில் மீன் வளர்ப்பு, உயிர்க்கூழ்ம மீன் வளர்ப்பு மற்றும் பிற புதுமையான தொழில்நுட்பங்கள்மூலம் நீர் மற்றும் பிற இயற்கை வளங்களை முறையாக உபயோகப்படுத்தி கடலோர மீன் வளர்ப்பினை மேற்கொள்ள அரசால் ஊக்குவிக்கப்படுகிறது.

மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம்மூலம் மேற்கொள்ளப்பட்ட உவர் நீர் மீன் வளர்ப்பிற்கு உகந்த இடங்களைக் கண்டறிந்து வரைபடம் (Resource Mapping) தயாரிக்கும் பணியின் மூலமாகத் தமிழ்நாடு கடலோரப் பகுதிகளில் சுமார் 10,099 ஹெக்டேர் பரப்பளவிலான மீன் வளர்ப்பிற்கு உகந்த நிலப்பரப்பு கண்டறியப்பட்டுள்ளது. எனவே, கடலோரப் பகுதிகளில் உவர் நீர் மீன் வளர்ப்பினை அதிகப்படுத்துவதன்மூலம் கடலோர மீனவ கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட அதிகளவில் வாய்ப்பு உள்ளது.

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்துவதற்காக பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்:

1. தமிழ்நாட்டின் கடலோர மாவட்டத்தில் மீன் வளர்ப்பிற்கு உகந்த உவர் நிலங்களைத் தொலையுணர்வு (Remote Sensing) மற்றும் புவியியல் தகவல் முறைமை (GIS) மூலம் கள ஆய்வுகளின் அடிப்படையில் வரைபடமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக அரசு கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கடலோர தரிசு நிலங்களில் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேற்கொள்ள நில குத்தகைக் கொள்கையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் விவசாயத்திற்குப் பயன்படாத உவர் நீர்

தரிசு நிலங்களில் பிரத்யேக உவர் நீர் மீன் வளர்ப்பு மண்டலங்கள் உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

4. சினை இறால் வங்கி, நோய் கிருமியற்ற இறால் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தி செய்வதற்கான பொரிப்பகங்கள் மற்றும் உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி மீன் தீவனம் தயாரிக்கும் ஆலைகள் ஆகியவற்றை நிறுவ தனியார் துறை ஊக்குவிக்கப்படும்.

இறால் பண்ணை பதிவு செய்தல் மற்றும் பதிவு புதுப்பித்தலை எளிமையாக்க கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய விதிகள் திருத்தப்பட்டு, தற்போது மாவட்ட அளவிலான உப குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைத்து, இறால் பண்ணைகள் பதிவு மற்றும் பதிவு புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள மாநில அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ரூ.18.50 கோடி மதிப்பீட்டில், இறால் வளர்ப்புத் தொழிலை மேம்படுத்திட அரசிடமிருந்து நிருவாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி நிருவாக அனுமதியின்படி செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரம் அட்டவணை 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 4**

| **வ. எண்** | **திட்ட விவரம்** | **அலகு** | **திட்ட செலவினம் (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | புதிய உவர் நீர் இறால் வளர்ப்புக் குளங்கள் அமைத்தல் | 100 ஹெக்டேர் | 800.00 |
| 2 | உவர் நீர் இறால் வளர்ப்பிற்கான உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 100 ஹெக்டேர் | 600.00 |
| 3 | உயிர் கூழ்ம குளங்களில் (Biofloc) இறால் வளர்த்தல் | 25 எண்ணம் | 450.00 |
| **மொத்தம்** | | | **1850.00** |

[2023 ஏப்ரல் 5

கடலில் மிதவைக் கூண்டுகள் அமைத்து, மீன் வளர்ப்போருக்குத் தேவையான அளவு கடல் மீன் குஞ்சுகளை வழங்குவதற்காக இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் கடல் மீன் குஞ்சு வளர்ப்பு மையம் மாநில அரசால் நிறுவப்பட்டு, அதன்மூலம் 73,000 கடல் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.30 இலட்சம் செலவில் இரண்டு கடல் மீன் குஞ்சு நாற்றாங்கால் அலகுகளை நிறுவ மீன் வளர்ப்போருக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**5.6.3 கடல் உயிரின வளர்ப்பு**

கடல் உயிரின வளர்ப்பானது மீன் வளர்ப்பின் ஒரு பிரிவாகும். இது கடலோர மற்றும் அண்மைக்கடல் பகுதியில் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது குறைந்த கட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின்கீழ் நீர்வாழ் உயிரினங்களை வளர்ப்பதை உள்ளடக்கியது. அதிக வளர்ச்சித் திறன் கொண்ட மற்றும் வேகமாக வளர்ந்து வரும் கடல் உயிரின வளர்ப்பு, இலாபம் ஈட்டக்கூடிய ஒரு முக்கிய மீன்வளத் தொழில்நுட்பமாகும். கடலோர மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும்பொருட்டு கடற்பாசி வளர்ப்பு, கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்ற கடல் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகள் மாநிலத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பதன்மூலம் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மீன் இனங்களின் உற்பத்தியினை அதிகரிக்க இயலும். கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பானது மீன் உற்பத்தியினை அதிகரிப்பதோடு, கடலோர மீனவ இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை வழங்குகிறது. மேலும், கடலோரப் பகுதியில் மீன்பிடி அழுத்தத்தினைக் குறைப்பதற்கும், மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரம் அளிப்பதற்கும் கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பினை விரிவுபடுத்துவது அவசியமாகும்.

மாநிலத்தில் ஒரு நிலையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த கடல் உயிரின வளர்ப்பினை மேம்படுத்தவும், கடற்பாசி மற்றும் மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், மீன் வளர்ப்பில் ஈடுபடும் மீனவர்களுக்குச் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை

*2023 ஏப்ரல் 5]*

*வழங்கவும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:*

1. *நவீன மீன்வளத் தொழில்நுட்பங்கள்மூலம் கடலில் மீன் வளர்ப்பினை மேற்கொள்வதற்கான தகுதி வாய்ந்த கடல் மண்டல பரப்புகளைக் கண்டறிதல் மற்றும் கடலில் மீன் வளர்ப்பிற்கு உகந்த பல்வகை மீன் இனங்களை வளர்ப்பதற்குரிய தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து மீன்களை வளர்ப்பதற்கான சீரிய திட்டங்களைச் செயல்படுத்துதல்.*

2. *கடலோர மாவட்டங்களில் வாழும் மீனவர்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் கடல் நீர்பரப்பில் உகந்த பகுதிகளைக் கண்டறிந்து, அப்பரப்பில் கடல் மீன் வளர்ப்பை உரிய மீன்வள அறிவியல் தொழில்நுட்பத்தின்மூலம் செயல்படுத்துதல் மற்றும் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.*

3. *கடல் உயிரின வளர்ப்பினை ஊக்குவித்திட, பயனாளிகளுக்கு உரிய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உதவிகள் வழங்கிட ஒன்றிய மற்றும் மாநில அரசுமூலம் திட்டங்களைச் செயல்படுத்துதல்.*

4. *ஒருங்கிணைந்த கடல் மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு, அத்திட்டத்தினைத் தகுதி வாய்ந்த கடலோர மாவட்டங்களில் செயல்படுத்திட ஏதுவாக வங்கிகளில் நிதி ஆதாரம் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளுதல்.*

## 5.6.4 கடற்பாசி வளர்ப்பு

*கடலோர மீனவக் கிராமப்புற பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு கடற்பாசி வளர்ப்பானது முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில் வாழும் சிறியளவிலான குடும்பங்கள் மற்றும் மீனவச் சமூகம் சார்ந்த மகளிர் குழுக்கள் கடற்பாசி வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ள அதிகளவு சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்தியாவிலேயே கடற்பாசி வளர்ப்பில் தமிழ்நாடும் முதலிடத்தில் உள்ளது. கடற்பாசி வளர்ப்பை மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கையாக ஊக்குவிப்பதற்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்*

துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கடலோர மீனவ கிராமங்களில் வசிக்கும் மீனவ மகளிரின் சமூக அதிகாரத்தை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் கடற்பாசி வளர்ப்புத் திட்டம் முக்கியப் பங்கு வகிக்கிறது. கடற்பாசி வளர்ப்பதற்கு 1,956 மீனவ மகளிருக்கு ரூ.2.43 கோடி செலவில் 16,000 கடற்பாசி வளர்ப்பிற்கான மிதவைகள் மற்றும் கயிறுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 5,048 ஹெக்டேர் பரப்பு கடற்பாசி வளர்ப்பிற்கு உகந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தற்போதைய கடற்பாசி தேவை சுமார் 1,15,150 மெட்ரிக் டன்களாக இருப்பினும், மாநிலத்தின் தற்போதைய உற்பத்தி 13,300 மெட்ரிக் டன்களாக மட்டுமே உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் ரூ.127.71 கோடி செலவில் பல்நோக்கு கடற்பாசி பூங்கா அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. இந்த முதன்மைத் திட்டத்தின்மூலம் இரண்டு நவீன தொழில்நுட்ப மையங்கள் ஏற்படுத்தப்படும். இந்நவீன தொழில்நுட்ப மையங்களில் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடற்பாசியிலிருந்து மதிப்புக்கூட்டிய பொருட்கள் உற்பத்தி செய்தல் போன்ற தொழில்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பல்நோக்கு கடற்பாசி பூங்கா திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் கடற்பாசி உற்பத்தி மற்றும் கடற்பாசியிலிருந்து மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைப் புகுத்தி அதிக அளவில் கடற்பாசி உற்பத்தி செய்வதுடன், கடற்பாசியிலிருந்து தரம் உயர்ந்த மதிப்புக்கூட்டிய பொருட்கள் உற்பத்தி செய்வது உறுதி செய்யப்படும். இத்திட்டத்தின்மூலம் குறிப்பாக தென் தமிழ்நாடு கடலோர மாவட்டங்களைச் சார்ந்த மீனவ மக்களுக்குச் சுய தொழில் வேலைவாய்ப்புகளை அதிகரித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5.6.5 கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பு

கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பதன்மூலம் விலை மதிப்புமிக்க மீன்களின் உற்பத்தியினை அதிகரிக்கலாம். கடல் விரால் (Cobia), கொடுவா (Sea bass), கலவா (Grouper), பாம்பனோ பாறை (Silver pompano) மற்றும் சிங்கி இறால் (Lobster) போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்களைக் கூண்டுகளில் வளர்த்திட இயலும். பல்வேறு அரசு திட்டங்களின்மூலம்

*2023 ஏப்ரல் 5]*

*384 மிதவைக் கூண்டுகள் ரூ.16.56 கோடி செலவில் கடலோர மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2022—23 ஆம் ஆண்டில், ரூ.2.50 கோடி செலவில் 50 மிதவைக் கூண்டுகள் கடலோர மீனவர்களுக்கு வழங்கிட அரசிடமிருந்து நிருவாக ஒப்புதல் பெறப்பட்டதன் அடிப்படையில், மேற்படி மிதவைக் கூண்டுகளை கடலோர மீனவர்களுக்கு வழங்கி, அண்மை கடல் பகுதியில் மிதவைக் கூண்டில் மீன் வளர்ப்பினை மேற்கொண்டு மீன் உற்பத்தியினைப் பெருக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**6. உள்நாட்டு மீன்வள மேம்பாடு**

*தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளம் வளர்ந்து வரும் துறையாகவும், இனிவரும் ஆண்டுகளில் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றவுள்ளது. உள்நாட்டு மீன்வளம் மாநிலத்தின் உணவு உற்பத்தியில் மிக முக்கிய அம்சமாக செயல்பட்டு வருவதோடு, கிராமப்புற மக்களின் வாழ்வாதரத்தினை மேம்படுத்தி, உணவு பாதுகாப்பினையும் உறுதி செய்து வருகிறது. உள்நாட்டு மீன் உற்பத்தி தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியினை அதிகரிக்கவும், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், வேலைவாய்ப்பினை பெருக்கிடவும் முக்கியப் பங்காற்றுகிறது.*

*உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:*

1. *தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து மீன் வளர்ப்போருக்கு வழங்குதல்.*
2. *மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்து மீன்குஞ்சு தேவையினைப் பூர்த்தி செய்தல்.*
3. *உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்.*
4. *உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் செயற்கைகோள் வாயிலாகக் குறியீடு செய்து மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தித் திறனைக் கண்டறிதல்.*
5. *மீன் வளர்ப்புப் பண்ணைகளை அதிகரித்தல்.*

6. மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்தல்.

7. மீன் உற்பத்தியினை இருமடங்காக்கி அதன்மூலம் மீன் வளர்ப்போரின் வருவாயினை அதிகரித்தல்.

8. தகுதியான அனைத்து நீர்நிலைகளிலும் அறிவியல் பூர்வமாக மீன்குஞ்சுகள் இருப்பு செய்து மீன்வளர்ப்பு மேற்கொண்டு, உணவு பாதுகாப்பினை உறுதி செய்தல்.

9. உள்நாட்டு மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், முறையாகப் பராமரித்தல், மீன்வள ஆதாரங்களைப் பெருக்குதல் மற்றும் வெளிநாட்டு மீன்இனங்கள் ஊடுருவுவதைக் கண்காணித்தல் மற்றும் தடை செய்தல்.

10. ஊரகப் பகுதி மக்களுக்கு நவீன மீன் வளர்ப்பு முறைகளை அறிமுகம் செய்து, சுய வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் சுகாதாரமான மீன் விற்பனை வசதிகளை ஏற்படுத்துதல்.

11. புரதம் மிகுந்த மீன் உணவினை வழங்குவது மற்றும் தரமான மீன் உணவு கிடைப்பதை உறுதி செய்தல்.

## 6.1 உள்நாட்டு மீன் வளத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் அமைந்துள்ளன. இந்த மீன்வள ஆதாரங்கள் பெரும்பாலும் பருவ மழையை நம்பி உள்ளன. குறைந்த மழை அளவு, மீன்களின் இனப்பெருக்கக் காலத்திற்கும், பருவமழை காலத்திற்கும் உள்ள வேறுபாடுகளால் மீன்குஞ்சு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மேலும், நீர்நிலைகளில் குறைவான கால அளவே நீர் நிறைந்திருத்தல், குறைந்த செலவில் மீன் தீவனம் கிடைக்கப்பெறாமை ஆகியவை உள்நாட்டு மீன் உற்பத்தியினைப் பாதிக்கும் காரணிகளாகும்.

மேற்கூறப்பட்ட சவால்களை எதிர்கொண்டு உள்நாட்டு மீன் உற்பத்தியினைப் பெருக்கிட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை பின்வரும் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

1. நீர்த்தேக்கங்கள் மற்றும் பாசனக் குளங்களில் மிதவைக் கூண்டுகளில் தீவிர மீன் வளர்ப்புமூலம் உள்நாட்டு

*2023 ஏப்ரல் 5]*

*மீன் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்த்தல்மூலம் தரமான மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்தல்.*

*2. பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் வளர்ப்பிற்குத் தகுதியான நீர் நிலைகளில் அறிவியல் பூர்வமாக மீன்குஞ்சுகள் இருப்பு செய்து உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்தல்.*

*3. தீவிரமுறை மீன் வளர்ப்புத் தொழில்நுட்பத்தினைப் பரவலாக்கிட மானியம் வழங்குதல் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கி மீன் வளர்ப்போரின் வருவாயினைப் பெருக்குதல்.*

*4. சுற்றுச்சூழலுக்குகந்த மீன் வளர்ப்பு முறைகளைப் பிரபலப்படுத்தி, விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புடன் மீன் வளர்ப்பினையும் ஒருங்கிணைத்து விவசாயிகளின் வருவாயினைப் பெருக்குதல்.*

*5. பரவலான மற்றும் தீவிர மீன் வளர்ப்பிற்கு உகந்த மாற்றுமுறை மீன் வளர்ப்பு முறைகளுக்கு பொருத்தமான மீன் இனங்களான அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு மற்றும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் வளர்ப்பு முறைகளை ஊக்குவித்தல்.*

*6. ஊரக பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும்பொருட்டு மீன் வளர்ப்பு மற்றும் மீன்குஞ்சு வளர்ப்புக் குழுக்களை ஏற்படுத்துதல்.*

*7. தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள அரசு மீன் உணவு உற்பத்தி ஆலைமூலம் தரமான மீன் உணவு அரசு மீன் பண்ணைகளுக்கும் மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்கும் விநியோகித்தல்.*

*8. தரமான மீன்குஞ்சு உற்பத்தியினை உறுதி செய்திட மேட்டூர் மற்றும் பவானிசாகர் அரசு மீன் பண்ணைகளில் நல்விதை தேர்வு (*Pureline*) சினைமீன் வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

*9. உயிர்கூழ்ம முறை (*Biofloc*) தொழில்நுட்பத்தின்மூலம் தீவிர மீன் வளர்ப்பு முறைகளில் மீன் உற்பத்தித் திறனை அதிகரித்து, நிலையான மீன் வளர்ப்பு முறைகள்மூலம்*

மீன் வளர்ப்போர் அதிக இலாபம் ஈட்டிட ஊக்குவிக்கப்படுகிறது.

10. நீர் மறுசுழற்சி முறை மீன் வளர்ப்புத் தொழில்நுட்பத்தின்மூலம் குறைந்த அளவு நீரினைப் பயன்படுத்தி தீவிர மீன் வளர்ப்பு மேற்கொள்ள மீன் வளர்ப்போருக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 6.2 மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாடு அரசு மீன் வளர்ப்பினைப் பரவலாக்கிடவும், ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், தமிழ்நாட்டில் சென்னை தவிர 38 மாவட்டங்களில் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை ஏற்படுத்தி திறம்பட செயல்படுத்தி வருகிறது. இந்த மாவட்ட மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் முக்கியச் செயல்பாடுகளான, விவசாயிகளுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியளித்தல், மீன் வளர்ப்பிற்குத் தேவையான மானியங்களை அளித்து மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல், தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் விரிவாக்க உதவி அளித்தல் போன்ற முக்கியப் பணிகளை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மேற்கொண்டு வருகின்றன. மாவட்டத்திலுள்ள மீன்குஞ்சு பொரிப்பகங்கள், மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் மற்றும் மீன் பண்ணைகளைப் பதிவு செய்து பல்வேறு அரசு திட்டங்களின்மூலம் மீன் வளர்ப்போருக்கு மானிய உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

## 6.3 நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை

தமிழ்நாட்டில் மொத்தம் 62 நீர்த்தேக்கங்களின் மீன்வள மேலாண்மை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ளன. அவற்றில் உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட 54 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் கட்டுப்பாட்டிலும், 8 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மேற்படி 62 நீர்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*2023 ஏப்ரல் 5*]

1. *நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், நீர்த்தேக்கங்களைத் தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவர்களின் வருவாயை அதிகரித்தல் ஆகியன நீர்த்தேக்க மீன்வள மேலாண்மையின் முக்கிய நோக்கங்களாகும்.*

2. *மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை பொது ஏல ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் மீன் வளர்ப்போருக்குக் குத்தகைக்கு விடப்படுகிறது. மீன்பிடி உரிமம் வழங்குதல் மற்றும் பங்கு மீன்பிடிப்பு முறைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

3. *2021-2022 ஆம் ஆண்டில் 39 நீர்த்தேக்கங்களின் மீன்பாசி குத்தகை மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு, மீன்பாசி குத்தகையின்மூலம் ரூ.9.68 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.*

4. *மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் சிறப்பு முயற்சியாக மீன் வளர்ப்பிற்கு உகந்த இதர நீர்த் தேக்கங்களிலும் மீன்வள மேலாண்மையினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

## 6.4 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்

*தமிழ்நாட்டில் 11 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் மீன்குஞ்சு உற்பத்தி விவரம் (2022-2023) அட்டவணை 5-ல் கொடுக்கப்பட்டுள்ளது*

**அட்டவணை-5**

| வ. எண் | மாவட்டம் | மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் | மீன்குஞ்சு உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | மணிமுத்தாறு | 1495.00 |
| 2. | தஞ்சாவூர் | கரந்தை, தட்டான்குளம் | 727.00 |
| 3. | திருவாரூர் | நல்லிக்கோட்டை | 50.50 |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | மாவட்டம் | மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் | மீன்குஞ்சு உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 4. | கரூர் | திருக்காம்புலியூர் | 367.00 |
| 5. | ஈரோடு | பவானிசாகர் | 1920.00 |
| 6. | சேலம் | மேட்டூர் | 1872.00 |
| 7. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி (கிப்ட் திலேப்பியா) | 60.00 |
| 8. | திருவள்ளூர் | பூண்டி | 276.80 |
| 9. | தேனி | மஞ்சளாறு (கிப்ட் திலேப்பியா) | 4.12 |
| 10. | திருவண்ணாமலை | சாத்தனூர் * | 122.50 |
| | **மொத்தம்** | | **6894.92** |

* தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

அரசு மீன் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளைத் திறம்பட மேம்படுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின்மூலம் 68.90 கோடி நுண் மீன்குஞ்சுகள் (Early fry) உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தனியார்மூலம் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திடவும், தனியார் பண்ணையாளர்களை ஊக்குவித்து மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது.

மாநிலத்தின் பெரும்பாலான நீர்நிலைகளில் குறைவான அளவு நீர் இருப்பினைக் கருத்தில் கொண்டு வேகமாக வளரும் மீன் இனங்களைக் குறுகிய கால நீர்நிலைகளில் இருப்பு செய்திடும் நோக்குடன் மாநிலத்திலேயே முதன் முறையாக மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா (GIF Tilapia) மீன்குஞ்சு பொரிப்பகத்தினைக் கிருஷ்ணகிரி அரசு மீன் பண்ணையில் அமைத்து, ஆண்டொன்றிற்கு 25 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தித் திறனுடன் திறம்பட செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி அரசு மீன் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் தரமான மீன்குஞ்சுகள் மாநிலத்திலுள்ள மீன் வளர்ப்போருக்கும் மற்றும்

*2023 ஏப்ரல் 5]*

*அருகாமையிலுள்ள மாநிலங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பெருகிவரும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு தேவையினை பூர்த்தி செய்திட, குறிப்பாக தென்மாவட்டங்களின் தேவையினைப் பூர்த்தி செய்திட தமிழ்நாடு அரசு மேலும் ஒரு மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகத்தினை உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் ஆண்டொன்றிற்கு 15 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தித் திறனுடன் தேனி மாவட்டம், மஞ்சளாறு அணை அரசு மீன் பண்ணையில் அமைத்துள்ளது. இதன்மூலம் வேகமாக வளரும் திலேப்பியா மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன்வளர்ப்போருக்கு நியாயமான விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

## 6.5 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

*தமிழ்நாட்டில் 39 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் மூலமும், 5 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமும் செயல்பட்டு வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் மொத்தம் 8.84 கோடி தரமான மீன் விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. வளர்த்தெடுக்கப்பட்ட மீன் விரலிகள் நீர்த்தேக்கங்களிலும், பாசனக் குளங்களிலும் மற்றும் தனியார் மீன் பண்ணைகளிலும் இருப்பு செய்யப்பட்டதன் காரணமாக மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் விவரம் அட்டவணை 6-ல் கொடுக்கப்பட்டுள்ளது.*

**அட்டவணை-6**

**அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களின் மீன் விரலிகள் உற்பத்தி விவரம் (2022-2023)**

| வ. எண் | மாவட்டம் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மீன்விரலிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை,<br>சிற்றார் – I,<br>சிற்றார் – II | 13.96 |
| 2 | திருநெல்வேலி | மணிமுத்தாறு,<br>கூனியூர் | 58.56 |

| வ. எண் | மாவட்டம் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மீன்விரலிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 3 | தென்காசி | கடானா | 20.42 |
| 4 | தேனி | வைகை,<br>மஞ்சளாறு | 49.90 |
| 5 | சிவகங்கை | பிரவலூர் | 15.12 |
| 6 | விருதுநகர் | பிளவக்கல் | 13.73 |
| 7 | திண்டுக்கல் | அணைப்பட்டி | 28.06 |
| 8 | புதுக்கோட்டை | தட்டமனைப்பட்டி,<br>குறுங்களூர்,<br>கருவிடைச்சேரி | 13.75 |
| 9 | தஞ்சாவூர் | நெய்தலூர்,<br>அகரப்பேட்டை,<br>கரந்தை-திருமங்கலக்<br>கோட்டை | 88.18 |
| 10 | திருவாரூர் | நல்லிக்கோட்டை | 9.9 |
| 11 | திருச்சி | அரூர், குளித்தலை | 11.94 |
| 12 | கரூர் | திருக்காம்புலியூர் | 14.49 |
| 13 | ஈரோடு | பவானிசாகர் | 129.44 |
| 14 | சேலம் | மேட்டூர், ஆணைமடுவு | 113.35 |
| 15 | தருமபுரி | ஓகேனக்கல், சின்னாறு | 61.06 |
| 16 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி,<br>பாம்பாறு,<br>கெலவரப்பள்ளி | 127.05 |
| 17 | வேலூர் | மோர்தானா | 8.67 |
| 18 | விழுப்புரம் | வீடூர் | 10.50 |
| 19 | கடலூர் | லால்பேட்டை,<br>அகரம் | 29.62 |
| 20 | திருவள்ளூர் | பூண்டி | 23.15 |
| 21 | காஞ்சிபுரம் | செம்பரம்பாக்கம் | 4.12 |

*2023 ஏப்ரல் 5]*

| வ. எண் | மாவட்டம் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மீன்விரலிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 22 | செங்கல்பட்டு | ஆத்தூர் | 15.13 |
| | **மொத்தம்** | | **860.10** |
| **தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்** | | | |
| 23 | திண்டுக்கல் | பாலாறு – பொறந்தலாறு | 1.05 |
| 24 | திருப்பூர் | அமராவதி, திருமூர்த்தி | 5.83 |
| 25 | கோயம்புத்தூர் | ஆழியாறு | 11.10 |
| 26 | திருவண்ணாமலை | சாத்தனூர் | 6.15 |
| **மொத்தம்** | | | **24.13** |
| **ஆக மொத்தம்** | | | **884.23** |

தமிழ்நாடு அரசு மீன் பண்ணையாளர்களை ஊக்குவித்து, தனியார் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களை அமைத்திட மானிய உதவிகளை வழங்கி வருகிறது. வடகிழக்குப் பருவ மழையில் நீர் கிடைக்கப்பெறும் பாசனக் குளங்களுக்குத் தேவையான வளர்த்தெடுக்கப்பட்ட மீன் விரலிகள் கிடைத்திட ஏதுவாக மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு முறைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.6 நாட்டின மீன்வளத்தினைப் பாதுகாத்தல்

மாநிலத்தின் நாட்டின மீன் வகைகளைப் பாதுகாத்திட அரசு உறுதி பூண்டுள்ளது. நாட்டின மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து, நீர்நிலைகளில் இருப்பு செய்வதன்மூலம் நாட்டின மீன்வளத்தினைப் பெருக்கி பாதுகாத்திட சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மாநிலத்தின் நாட்டின மீன் இனங்களுக்கு அதிக தேவை உள்ளது. மருத்துவக் குணங்கள் நிறைந்த நாட்டின மீன்கள் சுவையில் சிறந்ததாகவும் விளங்குகின்றன. எனவே, உள்ளூர் மக்களாலும் அதிகம் விரும்பப்படுகின்றன. நாட்டின மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு முறைக்கு முக்கியத்துவம் அளிப்பது வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு உணவு பாதுகாப்பு அளிப்பதற்கான முக்கியத் தீர்வாகக் கருதப்படுகிறது.

நாட்டின மீன்களின் பெருகிவரும் தேவையினைக் கருத்திற்கொண்டு கரிமீன் (Etroplus suratensis), கல்பாசு (Labeo calbasu) மற்றும் சேல் கெண்டை (Labeo fimbriatus) போன்ற நாட்டின மீன் வகைகளை உற்பத்தி செய்து, புரதம் நிறைந்த மீன் உணவினை ஊரகப் பகுதிகளில் வழங்கிட இயலும். இதற்கென சேலம், தஞ்சாவூர் மற்றும் கடலூர் ஆகிய 3 மாவட்டங்களில் ரூ.4.40 கோடி மதிப்பில் நாட்டின மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளை நிறுவிட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதனைச் செயல்படுத்திட கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அரசு மீன் பண்ணையில் ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் கரி மீன்குஞ்சு பொரிப்பகம், தஞ்சாவூர் மாவட்டம், அகரப்பேட்டை அரசு மீன் பண்ணையில் ரூ.1.64 கோடி மதிப்பீட்டில் கல்பாசு கெண்டை மீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு மீன் பண்ணையில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சேல் கெண்டை மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்திட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன. நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைக்கப்பட்டவுடன் உள்நாட்டு மீனவர்களுக்கு நாட்டின மீன்வளத்தினைப் பாதுகாப்பது தொடர்பான உரிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. மேலும், நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள், நாட்டின மீன் வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, மாநிலம் முழுவதும் சுவையான நாட்டின மீன்கள் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கு நல்ல இலாபம் ஈட்டித் தரும் என்பது திண்ணமாகும்.

## 6.7 ஆறுகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல்

மாநிலத்திலுள்ள ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகளை இருப்புச் செய்வதன்மூலம் தமிழ்நாட்டின் நாட்டின மீன் வளத்தை மீட்டெடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டின மீன்களை பாதுகாத்து பெருக்குவதன்மூலம் நீர்நிலைகளை ஒட்டி வாழும் உள்நாட்டு மீனவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தினை மேம்படுத்திடலாம். தமிழ்நாட்டில் ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகளை இருப்பு செய்திடும் திட்டம் ரூ.1.24 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 40 இலட்சம் நன்கு வளர்ந்த விரலிகள்

*2023 ஏப்ரல் 5*]

*காவேரி, பவானி மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகளிலும், அதன் கிளை ஆறுகளிலும் இருப்பு செய்யப்பட்டுள்ளன. ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகளை இருப்பு செய்திடும் திட்டத்தின்கீழ் நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்களில் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, மீன் விரலிகளாக வளர்த்தெடுக்கப்பட்டு, ஆறுகளில் இருப்பு செய்யப்பட்டு அதன்மூலம் மீன் உற்பத்தி அதிகரித்திடும்.*

## 6.8 தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் (2021-22)

### 6.8.1 பண்ணை குட்டைகளில் கூட்டு மீன் வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பினை ஊக்குவித்தல் திட்டம்

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-2022-ன்கீழ் தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகளால் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டைகளைப் புனரமைத்திடவும் மற்றும் கூட்டு மீன் வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பினை மேற்கொள்ள உள்ளீட்டு மானியமாக ரூ.25.25 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.*

### 6.8.2 பண்ணை குட்டைகளில் நீர் சேமிப்புத் திறனை மேம்படுத்திட பாலித்தீன் உறைகளிட்டு மீன் வளர்த்தல் திட்டம்

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-2022-ன்கீழ் தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகளால் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டைகளை புனரமைத்திடவும், பாலித்தீன் உறையிடுதல் மற்றும் மீன் வளர்த்திட ஆகும் உள்ளீட்டு செலவினத்திற்கான மானிய தொகையாக ரூ.75.75 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.*

### 6.8.3 விரால் மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட உள்ளீட்டு மானியம் வழங்குதல் திட்டம்

*தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-2022-ன்கீழ் தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகளால் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டைகளைப் புனரமைத்திடவும் மற்றும் விரால் மீன் வளர்ப்பு செய்திட ஆகும் உள்ளீட்டு செலவினத்திற்கான மானிய தொகையாக ரூ.30.30 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.*

[2023 ஏப்ரல் 5

### 6.8.4 கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் அரசு மீன் பண்ணையில் கிப்ட் திலேப்பியா மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்தல்

*கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் அரசு மீன் பண்ணையில் கிப்ட் திலேப்பியா மீன்குஞ்சு உற்பத்தி வளர்ப்பு அமைக்க தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-2022-ன்கீழ் ரூ.4.50 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.*

### 6.8.5 சேலம் மாவட்டம், ஆணைமடுவு அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல்

*சேலம் மாவட்டம், ஆணைமடுவு அரசு மீன் பண்ணையினை மேம்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-2022-ன்கீழ் ரூ.70 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நிறைவுற்றுள்ளன.*

### 6.8.6 கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு-2 அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல்

*கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு—2 அரசு மீன் பண்ணையினை மேம்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-2022-ன்கீழ் ரூ.32 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.*

### 6.8.7 கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல்

*கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு மீன் பண்ணையினை மேம்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-2022-ன்கீழ் ரூ.20 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.*

### 6.8.8 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (2020-21) அரசு மீன்விதை வங்கிகள் அமைத்தல்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021-ன்கீழ் கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் தென்காசி மாவட்டம், இராமநதி ஆகிய இடங்களில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மீன்விதை வங்கிகள் அமைக்கப்பட்டு, பணிகள் முடிவடைந்துள்ளன.*

### 6.8.9 ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டுத் திட்டம்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021—ன்கீழ் மேட்டூர், பவானிசாகர், சாத்தனூர், வீராணம்*

*மற்றும் சிற்றாறு ஆகிய 5 நீர்த்தேக்கங்களில் ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டுத் திட்டம் ரூ.11.08 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 6.8.10 புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021-ன்கீழ் பயனாளிகள்மூலம் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 2 நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திட ரூ.25 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பணிகள் முடிவுற்றுள்ளது மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.*

### 6.8.11 புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்புக் குளம் மற்றும் உள்ளீட்டு மானியம் வழங்குதல்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021-ன்கீழ் 10 ஹெக்டேர் பரப்பளவில் புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் அமைத்திட, ரூ.32.20 இலட்சம் பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

### 6.8.12 புதிய நன்னீர் மீன் வளர்ப்புக் குளம் அமைத்தல்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021-ன்கீழ் 100 ஹெக்டேர் பரப்பளவில் புதிய நன்னீர் மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்திட ரூ.3.22 கோடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது.*

### 6.8.13 நன்னீர் மீன் வளர்ப்புக் குளங்களுக்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021—ன்கீழ் 100 ஹெக்டேர் பரப்பளவில் நன்னீர் மீன் வளர்ப்புப் பண்ணைகளுக்கு ரூ.1.84 கோடி உள்ளீட்டு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.*

### 6.8.14 உயிர்கூழ்ம (Biofloc) குளங்கள் (நடுத்தர அலகு) அமைத்தல் மற்றும் உள்ளீட்டு மானியம் வழங்குதல்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021-ன்கீழ் 15 அலகு பயோபிளாக் குளங்கள் அமைத்தல் மற்றும் உள்ளீட்டு மானியமாக ரூ.98 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

## 6.8.15 நீரினை மறுசுழற்சி முறையில் தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன் வளர்ப்பு மானியம் வழங்குதல்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021-ன்கீழ் 20 அலகு, நீரினை மறுசுழற்சி முறையில் தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு மேற்கொள்ள மானியமாக ரூ.69 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

## 6.8.16 உயிர்கூழ்ம (Biofloc) குளங்கள் (சிறிய அலகு) அமைத்தல் மானியம் வழங்குதல்

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021-ன்கீழ் 10 அலகு, சிறிய அளவிலான பயோபிளாக் குளங்கள் அமைத்தல் மற்றும் உள்ளீட்டு மானியமாக ரூ.34.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

## 6.9 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2021-2022)

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2021-2022-ன்கீழ் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய பின்வரும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

**அட்டவணை-7**

| வ. எண் | திட்டங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல் | 8 எண்ணம் | 200.00 |
| 2. | புதிய மீன்குஞ்சு வளர்ப்பு தொட்டிகள் அமைத்தல் | 40 ஹெக்டேர் | 280.00 |
| 3. | மீன் வளர்ப்பு குளம் அமைத்தல் | 85 ஹெக்டேர் | 595.00 |

| வ. எண் | திட்டங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| *4.* | *மீன் வளர்ப்பிற்கான உள்ளீட்டுகள்* | *85 ஹெக்டேர்* | *340.00* |
| *5.* | *நன்னீர் உயிர்கூழ்ம (பயோபிளாக்) மீன் வளர்ப்புத் தொட்டிகள் அமைத்தல்* | *100 எண்ணம்* | *750.00* |
| *6.* | *நாட்டின மீன் இனங்களை ஆறுகளில் இருப்பு செய்தல்* | *40 இலட்சம் மீன்குஞ்சுகள்* | *124.00* |
| | *மொத்தம்* | | *2289.00* |

## 6.10 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2022-2023)

*பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2022-2023-ன்கீழ் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய பின்வரும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது:*

**அட்டவணை-8**

| வ. எண் | திட்டங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| *1.* | *மீன் வளர்ப்பு குளம் அமைத்தல்* | *10 ஹெக்டேர்* | *70.00* |
| *2.* | *மீன் வளர்ப்பிற்கான உள்ளீட்டுகள்* | *10 ஹெக்டேர்* | *40.00* |
| | **மொத்தம்** | | ***110.00*** |

## 6.11 பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட மாநில நிதி 2022-23-ன்கீழ் உள்ளீட்டு மானியம் வழங்குதல்

*பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட மீன் வளர்ப்போருக்கு உள்ளீட்டு மானியம்*

வழங்கிடும் திட்டத்தினை அரசு ரூ.1 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 550 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ள மீன் வளர்ப்பிற்கான உள்ளீட்டுப் பொருட்களான மீன்குஞ்சு, தீவனம் மற்றும் உரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருவாய் கணிசமாக அதிகரிப்பதோடு, மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியும் அதிகரித்திடும்.

## 6.12 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம். தமிழ்நாட்டில் 66 உப வடிநிலப் பகுதிகளில் 2018-2019 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் நீண்ட கால மற்றும் குறுகிய கால பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல், பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு மற்றும் மண்ணாலான மீன்குஞ்சு மற்றும் மீன் வளர்ப்பு பண்ணை அமைத்தல் ஆகிய முக்கியமானத் திட்டங்கள், ஏற்கெனவே உள்ள நீரினைப் பயன்படுத்தி மீன் உற்பத்தியினைப் பெருக்கிட செயல்படுத்தப்படுகிறது. மேலும், வேகமாக வளரும் மீன் இனங்கள் மற்றும் அதிக மதிப்புள்ள மீன் இனங்களை வளர்க்கும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன்மூலம் பயனாளிகளின் வருமானம் இரட்டிப்பாகிறது.

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு கட்டங்களாக உள்நாட்டு மீன்வளத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திட, தமிழ்நாடு அரசு ரூ.39.50 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2018-2019 முதல் 2021-2022 வரை ரூ.30.76 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, பயனாளிகளுக்குத் தரமான மீன்குஞ்சுகளை வழங்குவதற்காக பவானிசாகர் மற்றும் மேட்டூர் அணை அரசு மீன் பண்ணைகளில் நல்விதை தேர்வு சினை மீன் உற்பத்தி மற்றும் பராமரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் மீன்குஞ்சு உற்பத்தியை மேம்படுத்த மஞ்சளாறு அணையில் வேகமாக வளரக்கூடிய கிப்ட் திலேப்பியா பொரிப்பகம் அமைத்தல் மற்றும் கடலூர் மாவட்டத்தில் லால்பேட்டை, அகரம் ஆகிய அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

*2023 ஏப்ரல் 5]*

*மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 26,396 ஹெக்டேர் பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டன மற்றும் 1,027 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க 85 மண்ணாலான மீன்குஞ்சு மற்றும் மீன் வளர்ப்பு பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர 100 அலகு கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் 15 அலகு மிதவைக்கூண்டுகளில் மீன் வளர்ப்பு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் திறனை அதிகரிக்க 495 எண்ணம் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*மீன் விற்பனை சந்தையை மேம்படுத்த 18 நவீன மீன் விற்பனை அங்காடிகள் உப வடிநிலப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.*

*2022-2023 ஆம் ஆண்டில் ரூ.6.43 கோடி மதிப்பில் பின்வரும் மீன்வளத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது:*

**அட்டவணை -9**

**தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்**

| வ எண் | திட்டங்கள் | அலகுகள் எண்ணிக்கையில் |
|---|---|---|
| 1 | நீண்ட கால மற்றும் குறுகிய கால பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் | 743 |
| 2 | பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பு | 231 |
| 3 | மீன் பிடி உபகரணங்கள் வழங்குதல் | 20 |
| 4 | மண்ணாலான மீன்குஞ்சு மற்றும் மீன் வளர்ப்பு பண்ணை அமைத்தல் | 3 |
| 5 | நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல் | 6 |
| 6 | நாகப்பட்டினத்தில் அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைத்தல் | 1 |

| வ எண் | திட்டங்கள் | அலகுகள் எண்ணிக்கையில் |
|---|---|---|
| 7 | மடித்து எடுக்கக்கூடிய தொட்டிகளில் மீன் வளர்த்தல் | 40 |
| 8 | மாதிரி கிராமத் திட்டங்கள் | 11 |

## 6.13 வண்ண மீன் வளர்ப்பு

தமிழ்நாடு, வண்ண மீன் ஏற்றுமதியில் நாட்டில் இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. வண்ண மீன் உற்பத்தியை அதிகரித்திடவும், அதன் வாயிலாக வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும் ரூ.4.70 கோடி திட்ட மதிப்பீட்டில், முன்னோடித் திட்டமாக வண்ண மீன் வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.1.50 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.0.75 கோடி என மொத்தம் ரூ.2.25 கோடி மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த வண்ண மீன் வளர்ப்புப் பண்ணைகள் புதிதாக அமைத்தல்/ புனரமைத்தல், நீர்த்தாவரம் வளர்த்தல் மற்றும் வண்ண மீன் வளர்ப்பு உபகரணங்களுக்கான விற்பனை நிலையம் அமைத்தல், வண்ண மீன் வளர்ப்பு தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே வண்ண மீன் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட ஏதுவாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் வண்ண மீன் தொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு, ஒருங்கிணைந்த வண்ண மீன் வளர்ப்பு மேற்கொள்ள ரூ.13.85 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, வண்ண மீன் வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தினை அதிகரிக்கும் நோக்கில், சென்னை, கொளத்தூர் பகுதியில் ரூ.50 கோடி செலவில் வண்ண மீன் வர்த்தக மையம் அமைக்கப்படும் என அரசு அறிவித்தது. இத்திட்டத்திற்காக, அமைந்தகரை தாலுகா,

*2023 ஏப்ரல் 5]*

*வில்லிவாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலுக்குரிய இடம் 3.94 ஏக்கர் மற்றும் அயனாவரம் தாலுகா, பெரவளூர் கிராமம், அருள்மிகு செல்லியம்மன் கோயிலுக்குச் சொந்தமான 4,785 சதுரஅடி இடம் ஆகியவை முறையே வண்ண மீன் வர்த்தக மையம் மற்றும் நிர்வாக அலுவலகத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.*

## 7. மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

*மீன் இறங்கும் பகுதிகளை மேம்படுத்தி., மீன் இறங்குதளங்களை தரமுயர்த்தி, புதிய மீன்பிடித் துறைமுகங்களை உலகளாவிய தரத்திற்கு உருவாக்குவதன்மூலம் மீன்பிடிப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்திடவும், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளவும் பல்வேறு நிதி ஆதாரங்களின் உதவி பெற்று மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. மீன்களை சுகாதாரமான முறையில் கையாண்டு, நுகர்வோருக்குத் தரமான மீன்களை வழங்குவதற்கான பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது. இதன்மூலம் ஏற்றுமதி மதிப்பு உயர்வதோடு மீனவர்களுக்கு அதிக வருவாய் ஈட்டிடவும் உதவுகிறது. மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுவதால் மீனவர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெறுவதுடன், அவர்களின் வாழ்வாதாரமும் மேம்படும்.*

### 7.1 புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல் மற்றும் கட்டப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்துதல்

### 7.1.1 சென்னை மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

*சென்னை மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் ரூ.200 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் 510 மீ. நீளம், வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 849 மீ. நீளம் தெற்கு அலை தடுப்புச்சுவர்களுடன் சூரை மீன்கள் மற்றும் ஆழ்கடல் மீன்கள் சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.*

*[2023 ஏப்ரல் 5*

### 7.1.2 விழுப்புரம் மாவட்டத்தில் அழகன்குப்பம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆலம்பரைகுப்பம் மீன்பிடித் துறைமுகம் கழுவேலி ஆற்றின் கரையோரங்களில் அமைத்தல்

*விழுப்புரம் மாவட்டத்தில் அழகன்குப்பம் மீன்பிடித்துறைமுகம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில், ஆலம்பரைகுப்பம் மீன்பிடித் துறைமுகம் கழுவேலி ஆற்றின் கரையோரங்களில் அமைக்க ரூ.235 கோடி மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாகஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மாநில கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம், நிலைபடுத்தும் சுவர் 900 மீ. நீளம், படகு அணையும் சுவர் 1,100 மீ. நீளம், கடற்கரை பாதுகாப்பு கட்டமைப்பு 300 மீ. நீளம், சாய்வு தளம் 2 எண்ணம், கரைகளைப் பலப்படுத்தும் பணி 400 மீ. நீளம்,தூர்வாருதல் மற்றும் சமன்படுத்துதல் மற்றும் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.*

### 7.1.3 கடலூர் மாவட்டம், முதுநகர் மீன்பிடித் துறைமுகத்தினைப் புனரமைத்தல்

*கடலூர் மாவட்டம், முதுநகரில் மீன்பிடித் துறைமுகத்தினைப் புனரமைக்கும் பணிக்காக ரூ.100 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கூடுதல் வசதிகளுடன் படகு அணையும் சுவர் 1,040 மீ. நீளம், தடுப்புச்சுவர் 600 மீ. நீளம் மற்றும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.*

### 7.1.4 மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

*மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் ரூ.120 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம்*

*2023 ஏப்ரல் 5]*

*340 மீ. நீளம் வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 1,070 மீ. நீளம் தெற்கு தடுப்புச் சுவர்களுடன் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.*

### 7.1.5 மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துதல்

*மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்தும் பணிக்காக ரூ.26.26 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் 180 மீ. நீளத்தில் படகு அணையும் தளம், 80 மீ. நீளத்தில் தடுப்புச்சுவர், 30 மெட்ரிக் டன் கொள்ளளவில் பனிக்கட்டி உற்பத்தி ஆலை மற்றும் கரையோர வசதிகளுடன் மேம்படுத்தப்படுகிறது. ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.1.6 நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

*நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் நவீன வசதிகளுடன் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் 1,080 மீ. நீளம் வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 1,300 மீ. நீளம் தெற்கு அலைத் தடுப்புச்சுவர், 240 மீ. நீளம் படகு அணையும் தளங்களுடன் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 33% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

### 7.1.7 நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

*நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் ரூ.150 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வடக்கு அலைத் தடுப்புச்சுவர் 1,650 மீ. நீளம், தெற்கு அலைத் தடுப்புச்சுவர் 2,000 மீ. நீளம், படகு அணையும் தளம் 340 மீ. நீளம், தூர்வாருதல்,*

சமன்படுத்துதல் மற்றும் மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 62% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### 7.1.8 இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர்காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்புகள் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர்காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்புகள் அமைக்க ரூ.20 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 25% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### 7.1.9 தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் படகு அணையும் தளம் அமைப்பதன்மூலம் கூடுதல் படகு நிறுத்தும் வசதிகளை அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் படகு அணையும் தளம் அமைப்பதன்மூலம் கூடுதல் படகு நிறுத்தும் வசதிகளை அமைக்க ரூ.25 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 74% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### 7.1.10 கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலை தடுப்பு சுவர் நீட்டிக்கவும் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல்

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலை தடுப்பு சுவரை நீட்டித்து, நவீனமயமாக்கிடும் பணி ரூ.253 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்படுத்தும் நிதித் திட்டத்தின்கீழ் செயல்படுத்திட அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையம் பூனே—வின் பரிந்துரையின்படி, பிரதான அலைத்தடுப்புச் சுவரினை

*2023 ஏப்ரல் 5]*

*637 மீ. நீளத்திற்கு நீட்டித்திடவும் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. 21% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

**7.1.11 நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், திருநெல்வேலி மாவட்டம், உவரி, திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி ஆகிய நான்கு கடலோர மாவட்டங்களில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகள்**

*நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டை (ரூ.15 இலட்சம்) மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் (ரூ.1 கோடி), திருநெல்வேலி மாவட்டம், உவரி (ரூ.1 கோடி), திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு (ரூ.1 கோடி) மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி (ரூ.1 கோடி) ஆகிய நான்கு கடலோர மாவட்டங்களில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க, பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

**7.1.12 கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீன்பிடித் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தினை விரிவாக்கம் செய்திட பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகள்**

*கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீன்பிடித் துறைமுகம் (ரூ.1 கோடி) மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தினை (ரூ.1 கோடி) விரிவாக்கம் செய்திட, பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, அதற்கான விரிவான*

*தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.2 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

**7.1.13 தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்கிட மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தின் நிலைப்படுத்தும் சுவரினை நீட்டிப்பு செய்திட பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகள்**

*தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்கிட (ரூ.50 இலட்சம்) மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தின் நிலைப்படுத்தும் சுவரினை நீட்டிப்பு செய்திட (ரூ.50 இலட்சம்) பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.1 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.*

**7.2 புதிய மீன் இறங்குதளங்கள் அமைத்தல் மற்றும் மீன் இறங்குதளங்களை மேம்படுத்துதல்**

**7.2.1 கடலூர் மாவட்டம், அன்னன்கோவில் மற்றும் முடசலோடை கிராமங்களில் மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகளை அமைத்தல்**

*கடலூர் மாவட்டம், அன்னன்கோவில் மற்றும் முடசலோடை கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த ரூ.19.50 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அரசால் நிருவாக ஒப்புதல்*

*2023 ஏப்ரல் 5*]

*வழங்கப்பட்டுள்ளது. 54% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

### 7.2.2 கடலூர் மாவட்டம், தாழங்குடாவில் மீன் இறங்குதளம் அமைத்தல்

*கடலூர் மாவட்டம், தாழங்குடாவில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.13.06 கோடிக்கு நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 88% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.2.3 கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள்

*கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளங்கள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.13 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. புதுக்குப்பத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

### 7.2.4 இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர், தங்கச்சிமடம், மயிலாடுதுறை மாவட்டம், சின்னமேடு மற்றும் கொடியம்பாளையம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடல் அரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

*இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர் மற்றும் தங்கச்சிமடம், மயிலாடுதுறை மாவட்டம், சின்னமேடு மற்றும் கொடியம்பாளையம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.21.62 கோடிக்கு, நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. தங்கச்சிமடம் மீன் இறங்குதளத்தில் 92% பணிகளும், சின்னமேடு மீன் இறங்குதளத்தில் 64% பணிகளும் மற்றும் கொடியம்பாளையம் மீன் இறங்குதளத்தில் 5% பணிகளும் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

[2023 ஏப்ரல் 5

### 7.2.5 மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல், தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், சிப்பிக்குளம், திரேஸ்புரம் மற்றும் கீழவைப்பார் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தும் பணிகள்

*மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல், தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், சிப்பிக்குளம், திரேஸ்புரம் மற்றும் கீழவைப்பார் மீன் இறங்குதளங்களை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.66 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சிப்பிக்குளத்தில் 22% பணிகளும், கீழவைப்பாரில் 37% பணிகளும், திருமுல்லைவாசலில் 11% பணிகளும் மற்றும் சேதுபாவாசத்திரத்தில் 82% பணிகளும் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. திரேஸ்புரத்தில் ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

### 7.2.6 மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி மீன் இறங்குதளத்தை மேம்படுத்தும் பணிகள்

*மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி மீனவக் கிராமத்தில் படகு அணையும் சுவர் 580 மீ. நீளம், நிலைபடுத்தும் சுவர்கள் தெற்கு மற்றும் வடக்கில் முறையே தலா 245 மீ. நீளம் (2 எண்ணம்), சிறிய நேர்கல் சுவர்கள் 50 மீ. நீளம் (2 எண்ணம்) மற்றும் 300 மீ. சாலை வசதிகளுடன் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தும் பணிக்காக ரூ.55 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

### 7.2.7 நாகப்பட்டினம் மாவட்டம், சந்திரபாடி கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

*நாகப்பட்டினம் மாவட்டம், சந்திரபாடி கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிக்காக ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*2023 ஏப்ரல் 5*]

**7.2.8 தஞ்சாவூர் மாவட்டம், கீழத்தோட்டம், மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி, புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம், வடக்கம்மாப்பட்டினம் மற்றும் புதுக்குடி ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் அமைத்தல்**

*தஞ்சாவூர் மாவட்டம், கீழத்தோட்டம், மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி, புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம், வடக்கம்மாப்பட்டினம் மற்றும் புதுக்குடி ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.22 கோடி மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் வானகிரி மீன் இறங்குதளத்தில் 75% பணிகளும், கீழத்தோட்டம் மீன் இறங்குதளத்தில் 79% பணிகளும், கோட்டைப்பட்டினம், வடக்கம்மாப்பட்டினம் மற்றும் புதுக்குடி மீன் இறங்குதளங்களில் 65% பணிகளும் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

**7.2.9 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்**

*இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் படகு அணையும் தளங்கள் அமைக்க ரூ.20 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 94% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

**7.2.10 இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்**

*இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 85% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

**7.2.11 இராமநாதபுரம் மாவட்டம், முள்ளிமுனை கிராமத்தில் மீன் இறங்குதளத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல்**

*இராமநாதபுரம் மாவட்டம், முள்ளிமுனை கிராமத்திலுள்ள மீன் இறங்குதளத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ்*

ரூ.1.69 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 70% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 7.2.12 இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல் மீன் இறங்குதளத்தில் கரையோர வசதிகள் ஏற்படுத்துதல்

இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல் மீன் இறங்குதளத்தில் கரையோர வசதிகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் சாகர்மாலா நிதித் திட்டத்தின்கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் பரிசீலனையில் உள்ளது. பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளன.

### 7.2.13 இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் உள்ள படகு அணையும் தளத்தைப் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் உள்ள படகு அணையும் தளத்தைப் புனரமைத்து மேம்படுத்தும் பணிக்காக ரூ.22.77 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 200 மீ. நீளத்தில் அணுகுத் தளம் மற்றும் 150 மீ. நீளத்தில் படகு அணையும் ஜெட்டியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 28% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 7.2.14 தூத்துக்குடி மாவட்டம், ஜீவாநகர், அமலிநகர், ஆலந்தலை, மற்றும் மீனவர் காலனி (தெர்மல் – II அருகில்) மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள்

தூத்துக்குடி மாவட்டம், ஜீவா நகர், அமலிநகர், ஆலந்தலை மற்றும் மீனவர் காலனி (தெர்மல்–II அருகில்) ஆகிய இடங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்க ரூ.7 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் அமலிநகரில் 38% பணிகளும், ஆலந்தலையில் 54% பணிகளும் மற்றும் மீனவர் காலனியில் (தெர்மல்–II அருகில்) 76% பணிகளும் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

*2023 ஏப்ரல் 5*]

## 7.2.15 திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

*திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

## 7.2.16 கன்னியாகுமரி மாவட்டம், கோடிமுனை, சைமன் காலனி மற்றும் குறும்பனை ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளத்தை மேம்படுத்தும் பணிகள்

*கன்னியாகுமரி மாவட்டம், கோடிமுனை, சைமன் காலனி மற்றும் குறும்பனை ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளத்தை மேம்படுத்திட ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கோடிமுனையில் இரண்டு நேர்கல் சுவர்கள் முறையே 160 மீ. மற்றும் 116 மீ. நீளங்களிலும், சைமன் காலனியில் இரண்டு நேர்கல் சுவர்கள் முறையே 163 மீ. மற்றும் 100 மீ. நீளங்களிலும் மற்றும் குறும்பனையில் ஒரு நேர்கல் சுவர் 100 மீ. நீளத்திலும் அமைக்கத் திட்டமிடப்பட்டன. இதில் கோடிமுனை மீன் இறங்குதளத்தில் 29% பணிகளும், சைமன் காலனி மீன் இறங்குதளத்தில் 31% பணிகளும், குறும்பனை மீன் இறங்குதளத்தில் 88% பணிகளும் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

## 7.3 முகத்துவாரத்தைத் நிரந்தரமாக நிலைப்படுத்துதல் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகள்

## 7.3.1 திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்துதல்

*திருவள்ளூர் மாவட்டம்,பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்த ரூ.26.85 கோடிக்கு, நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்ட நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.*

[2023 ஏப்ரல் 5

**7.3.2 செங்கல்பட்டு மாவட்டம், கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னகுப்பம் மற்றும் ஆழிகுப்பம் கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள்**

*செங்கல்பட்டு மாவட்டம், கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னகுப்பம் மற்றும் ஆழிகுப்பம் கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் அமைக்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.39 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.*

**7.3.3 செங்கல்பட்டு மாவட்டம், பழைய நடுக்குப்பம், புது நடுக்குப்பம், கரிக்காட்டு குப்பம், செம்மஞ்சேரி குப்பம் மற்றும் அங்காளம்மன் குப்பம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள்**

*செங்கல்பட்டு மாவட்டம், பழைய நடுக்குப்பம், புது நடுக்குப்பம், கரிக்காட்டு குப்பம், செம்மஞ்சேரி குப்பம் மற்றும் அங்காளம்மன் குப்பம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகளுக்காக ரூ.57 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.*

**7.3.4 செங்கல்பட்டு மாவட்டம், புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்**

*செங்கல்பட்டு மாவட்டம், புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தி கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.9.70 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

*2023 ஏப்ரல் 5*]

### 7.3.5 விழுப்புரம் மாவட்டம், பிள்ளைச்சாவடி கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

*விழுப்புரம் மாவட்டம், பிள்ளைச்சாவடி கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.14.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 25% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.3.6 கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் அமைக்கும் பணிகள்

*கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புப் பணிகளுக்காக ரூ.22 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.*

### 7.3.7 கடலூர் மாவட்டம், வெள்ளாறு முகத்துவாரம் மற்றும் கிள்ளை கிராமம், சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள்

*கடலூர் மாவட்டம், வெள்ளாறு முகத்துவாரம் மற்றும் கிள்ளை கிராமம், சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகளுக்காக ரூ.70 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வெள்ளாறு முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்திட 512 மீ. நீளத்தில் இரண்டு நிலைப்படுத்தும் சுவர்களும் மற்றும் சின்னவாய்க்கால் முகத்துவாரத்தில் 305 மீ. நீளத்தில் இரண்டு நிலைப்படுத்தும் சுவர்களுடனும் வடிவமைக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.*

### 7.3.8 நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் பகுதியில் கடலரிப்பைத் தடுக்க கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணி

*நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் பகுதியில் கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைத்து கடலரிப்பைத் தடுக்கும் பணிக்காக ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் முடிவுறும் தருவாயில் உள்ளன.*

### 7.3.9 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்குப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

*இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு பகுதியில் 843 மீ. நீளத்தில் அலைத்தடுப்பு (வடக்கு) சுவருடன் மீன் ஏலக்கூடம் அமைத்து கடலரிப்பிலிருந்து பாதுகாத்திட ரூ.30 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 15% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.3.10 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் தெற்குப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

*இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் தெற்கு பகுதியில் 1032 மீ. நீளத்தில் அலைத் தடுப்புச் சுவர் (தெற்கு), 84 மீ. நீளத்தில் நேர்கல் சுவர் மற்றும் மீன் ஏலக்கூடம் அமைத்து, கடலரிப்பிலிருந்து பாதுகாத்திட ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 10% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.3.11 தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்துதல் மற்றும் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள்

*தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தி, முகத்துவாரத்தினை நிரந்தரமாக*

*2023 ஏப்ரல் 5*]

*நிலைப்படுத்திட, தெற்கு அலைத் தடுப்புச் சுவர் மற்றும் வடக்கு அலைத் தடுப்புச் சுவர் முறையே 940 மீ. மற்றும் 120 மீ. நீளத்தில் அமைத்து, முகத்துவாரத்தை ஆழப்படுத்திட ரூ.45 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 65% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

## 7.3.12 கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை மற்றும் புத்தன்துறை கிராமத்தில் கடலரிப்பினைத் தடுப்பதற்காகக் கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி கிராமத்தில் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

*கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை மற்றும் புத்தன்துறை கிராமத்தில் கடலரிப்பினைத் தடுப்பதற்காக கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.101 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.*

*இதில் கேசவன்புத்தன்துறையில் 14% பணிகளும், கீழமணக்குடி மீன் இறங்குதளத்தில் 26% பணிகளும் மற்றும் மேலமணக்குடி மீன் இறங்குதளத்தில் 92% பணிகளும் முடிக்கப்பட்டு, புத்தன்துறையில் கடலரிப்பினைத் தடுப்பதற்கான கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

## 7.4 உள்நாட்டு மீன்வள மற்றும் இதர உட்கட்டமைப்புப் பணிகள்

### 7.4.1 கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் தென்காசி மாவட்டம் இராமநதியில் இந்திய பெருங்கெண்டைகளுக்கான சினை மீன் வங்கிகள் நிறுவுதல்

*கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் தென்காசி மாவட்டம், இராமநதியில் இந்திய பெருங்கெண்டைகளுக்கான சினை மீன் வங்கிகள் நிறுவும் பணிக்காக ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்*

*மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் லால்பேட்டை சினை மீன் வங்கியில் 93% மற்றும் இராமநதி சினை மீன் வங்கியில் 88% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.4.2 கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒருங்கிணைந்த அலுவலகம் மற்றும் பயிற்சி மையம் கட்டும் பணி

*கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒருங்கிணைந்த அலுவலகம் மற்றும் பயிற்சி மையங்கள் அமைக்க மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.9 கோடிக்கு மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 85% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.4.3 தமிழ்நாட்டில் ஐந்து நீர்த்தேக்கங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

*தமிழ்நாட்டில் ஐந்து நீர்த்தேக்கங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் அமைக்கும் பணிக்காக ரூ.2.50 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.4.4 தமிழ்நாட்டில் ஐந்து நீர்த்தேக்கங்களில் மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு அலகுகளை நிறுவுதல்

*தமிழ்நாட்டில் ஐந்து நீர்த்தேக்கங்களில் மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு அலகுகளை நிறுவிடும் பணிக்காக ரூ.4.60 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 7.5 அரசு மீன் விதைப் பண்ணைகள் அமைத்தல்/புனரமைத்தல், அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பயிற்சி மையங்கள் அமைத்தல்

*தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் அரசு மீன் விதைப் பண்ணைகள் மற்றும் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் அமைக்க மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அரசால் ரூ.75.70 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:*

2023 ஏப்ரல் 5]

## அட்டவணை-10

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு II அணை அரசு மீன் குஞ்சு பண்ணைகளைப் புனரமைத்தல் | 4.00 |
| 2 | சேலம் மாவட்டம். மேட்டூர் அணை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் பயிற்சி மையத்துடன் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் நிறுவுதல் | 8.00 |
| 3 | விருதுநகர் மாவட்டம், பிளவக்கல் மற்றும் வெம்பக்கோட்டை அரசு மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணைகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 7.00 |
| 4 | திருச்சி மாவட்டம், அசூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், வீடூரில் அரசு மீன் பண்ணையை நவீனப்படுத்துதல் | 6.20 |
| 5 | கடலூர் மாவட்டம் அகரம், கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் திருமங்கலக்கோட்டை அரசு மீன் பண்ணைகளில் மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல் | 10.80 |
| 6 | திருநெல்வேலி மாவட்டத்தில் வண்ண மீன் காட்சியகம் மற்றும் மீன் விற்பனையகம் நிறுவுதல் | 5.00 |
| 7 | நீலகிரி மாவட்டம், அவலாஞ்சி அரசு ட்ரவுட் மீன் பண்ணையை நவீனப்படுத்துதல் | 2.50 |

[2023 ஏப்ரல் 5

| | | |
|---|---|---|
| 8 | கள்ளக்குறிச்சி மாவட்டம், கோமுகி அணை, வடக்கனேந்தல் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், கடம்பாவில் புதிய அரசு மீன் குஞ்சு வளர்ப்பு மையங்களை நிறுவுதல் | 10.00 |
| 9 | திருப்பத்தூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத்தில் அரசு மீன் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல் | 5.00 |
| 10 | திண்டுக்கல் மாவட்டம், பாலாறு—பொருந்தலாறு அணையில் தற்போதுள்ள மீன் பண்ணையை மேம்படுத்துதல் | 5.00 |
| 11 | கரூர் மாவட்டம், திருக்காம்புலியூர் மற்றும் திருவாரூர் மாவட்டம் நல்லிக்கோட்டை அரசு மீன் பண்ணைகளை நவீனப்படுத்துதல் | 7.20 |
| 12 | ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு பழைய மீன் பண்ணையில் சினைமீன் குளங்கள் நிறுவுதல் | 5.00 |
| | **மொத்தம்** | **75.70** |

## 7.6 மீனவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்

*தமிழ்நாடு அரசு கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு 5,000 வீடுகள் கட்டி வழங்கிட ரூ.85 கோடி செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை ரூ.1.70 இலட்சமாகும். அதனில் ரூ.61.97 கோடி பெறப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,879 வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு, 1,242 வீடுகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.*

## 8. மீன் மற்றும் மீன் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்

*2021-2022 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 8.07 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். 2020-2021 ஆம் ஆண்டில் மாநிலத்தின் தனி நபர் மீன் நுகர்வு 9.3 கிலோ கிராம் ஆகும். நவீன மற்றும் சுகாதாரமான மீன் சந்தைகள் அமைத்தல், மீன் அங்காடிகள்,*

*2023 ஏப்ரல் 5]*

*நடமாடும் மீன் விற்பனை வாகனங்கள் மற்றும் இணையதள மீன் விற்பனை வாயிலாக மாநிலத்தில் மீன் நுகர்வு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. தேசிய தனி நபர் மீன் நுகர்வான ஆண்டொன்றிற்கு 6 கிலோ கிராம் அளவினை ஒப்பிட்டுப் பார்க்கையில், மாநிலத்தின் தனி நபர் மீன் நுகர்வு 10.66 கிலோ கிராமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## 8.1 மீன் விற்பனைச் சந்தைகள் அமைத்தல்

*பொதுமக்களுக்குத் தரமான மீன்களைச் சுகாதாரமான முறையில் வழங்கிடும் வகையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய மீன் சந்தைகள் அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டமானது மாநில அரசு, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதியுதவிடன் ரூ.17.54 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது,*

*இத்திட்டத்தின்கீழ், 21 மீன் சந்தைகள் அமைத்திட மாநில அரசின் நிதியுதவியாக ரூ.6.69 கோடி மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியாக ரூ.7.19 கோடி, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்/ மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:*

**அட்டவணை: 11**

| வ. எண் | மாவட்டம் | புதிதாக அமைக்கப்பட்ட / புனரமைக்கப்பட்ட மீன் விற்பனை சந்தைகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கடலூர் | 1 | 22.50 |
| 2 | ராணிப்பேட்டை | 1 | 61.29 |
| 3 | புதுக்கோட்டை | 1 | 53.70 |
| 4 | திருச்சி | 1 | 250.00 |
| 5 | சேலம் | 2 | 139.30 |
| 6 | திருப்பூர் | 1 | 93.00 |

| வ. எண் | மாவட்டம் | புதிதாக அமைக்கப்பட்ட / புனரமைக்கப்பட்ட மீன் விற்பனை சந்தைகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 7 | ஈரோடு | 1 | 100.00 |
| 8 | சிவகங்கை | 1 | 100.00 |
| 9 | நாகப்பட்டினம் | 4 | 158.57 |
| 10 | தென்காசி | 1 | 38.76 |
| 11 | தூத்துக்குடி | 1 | 13.60 |
| 12 | இராமநாதபுரம் | 3 | 293.39 |
| 13 | கன்னியாகுமரி | 2 | 179.47 |
| 14 | விழுப்புரம் | 1 | 250.00 |
| **மொத்தம்** | | **21** | **1,753.58** |

மேற்கூறிய அனைத்து 21 மீன் சந்தைகளின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## 8.2 மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி

இந்தியாவில் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ரூ.57,586.48 கோடி மதிப்பிலான 13.69 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதியுடன் பெரும் பங்கு வகிக்கிறது.

தமிழகத்திலிருந்து 2021-2022 ஆம் ஆண்டில் 1.14 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்குக் கடல் பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நியச் செலாவணியாக ரூ.6,559.64 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவற்றில் கடல் உணவுப் பொருட்களான உறைந்த இறால், மீன்கள், கணவாய் மீன், உலர்மீன், குளிரூட்டப்பட்ட மீன் பொருட்கள் மற்றும் உயிர் மீன்களும் அடங்கும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, தென்கிழக்கு ஆசிய நாடுகள், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவை இந்திய மீன் பொருட்களுக்கான பெரும் மீன் சந்தைகளாகும்.

*2023 ஏப்ரல் 5]*

*தமிழ்நாட்டில் அரசால் கட்டப்பட்டுள்ள 9 பெரிய மீன்பிடித் துறைமுகங்கள், 4 நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் 52 மீன் இறங்குதளங்களின் வாயிலாக மீன் மற்றும் மீன் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்கள் மீன்களைப் பதப்படுத்தி, ஏற்றுமதி செய்வதில் மாநிலத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.*

## 9. பயிற்சி மற்றும் நிதியுதவி சேவைகள்

### 9.1 மீனவ இளைஞர்கள் கடற்சார் கல்வி பயில ஊக்குவித்தல்

*மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட 6 கடற்சார் பாடப் பிரிவுகளை பயின்றிட, மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2022—23 ஆம் ஆண்டில் 37 மீனவ இளைஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.12 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.*

*இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

### 9.2 அகில இந்திய குடிமைப் பணியில் சேர்வதற்கு மீனவ இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல்

*மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் வாயிலாக, 2017 ஆம் ஆண்டு முதல், இந்திய குடிமைப் பணி போட்டித் தேர்வுகளைத் திறனுடன் எதிர்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு அரசு செலவில் ஆறு மாதக் கால பிரத்யேக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரி (அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி நிலையம், சென்னை) மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை ஐந்து அணிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.12.50 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, 102 மீனவ இளைஞர்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சிக்கான அனைத்து செலவினங்களும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 18 மீனவ இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

[2023 ஏப்ரல் 5

## 9.3 மீனவர் மற்றும் மீன் வளர்ப்போருக்கு விவசாயக் கடன் அட்டை (Kisan Credit Card) வழங்குதல்

*மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போருக்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனச் செலவினங்களுக்கு வங்கிகளிடமிருந்து கடன் பெற்றிட, விவசாயக் கடன் அட்டை வழங்கும் திட்டமானது ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்தின் வாயிலாக மீன்பிடிப்பு, மீன்/ இறால் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு, சிப்பி வளர்ப்பு மற்றும் மீன் விற்பனைக்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனச் செலவினங்களை வங்கிகளிடமிருந்து குறுகிய கால கடனாகப் பெற்றிட இயலும். இத்திட்டத்தின்கீழ் தகுதியுடைய மீனவர்/ மீன்வளர்ப்போர்க்கு நடைமுறை மூலதனச் செலவிற்கு கடன் உச்ச வரம்பாக ரூ.2 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கடன் தொகைக்கு, ஆண்டொன்றிற்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகையில் 2 விழுக்காடு குறைக்கப்படுகிறது. மேலும், குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாகக் கடனைத் திரும்ப செலுத்தும் நபருக்கு வட்டித் தொகையில் ஆண்டுக்கு 3 விழுக்காடு குறைக்கப்பட்ட வட்டிச் சலுகையும் அளிக்கப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டிலுள்ள மீனவர்/ மீன் வளர்ப்போருக்கு 4712 விவசாயக் கடன் அட்டைகள்மூலம் ரூ.35.88 கோடி மதிப்பிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.*

## 10. விரிவாக்கம் மற்றும் இதர நடவடிக்கைகள்

*மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையில் செயல்பட்டு வரும் விரிவாக்கப் பிரிவு, அரசின் நலத் திட்டங்களை மீனவர்கள், மீன் வளர்ப்போர் மற்றும் பிற பங்குதாரர்களைச் சென்றடையும் வகையில் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு பொருட்காட்சிகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்று, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மீன்வள மேலாண்மை, கடலில் பாதுகாப்பான மீன் பிடிப்பு முறைகள், மீன்களைச் சுகாதாரமாகக் கையாளுதல், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களின் தூய்மை குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள்*

*2023 ஏப்ரல் 5]*

*நடத்தப்பட்டு வருகின்றன. மீனவர் மற்றும் மீன் வளர்ப்போரின் குறைகளைத் தீர்க்க, மீனவர் குறைதீர்க்கும் நாள் மற்றும் மீன் வளர்ப்போர்க்கான கூட்டங்கள் இத்துறையால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. மீன்வளம் தொடர்பான முக்கியத் தினங்களான உலக பெருங்கடல் தினம் (ஜூன்—8), தேசிய மீன் வளர்ப்போர் தினம் (ஜூலை—10) மற்றும் உலக மீன்வள தினம் (நவம்பர்—21) ஆகியவை மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் மாநிலத்தில் சிறந்து விளங்கும் மீனவர் மற்றும் மீன் வளர்ப்போரை ஊக்குவித்திட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள், விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.*

*'உலக மீன்வள தினம் 2022' கொண்டாட்ட நிகழ்வில் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்க்குப் பல்வேறு பிரிவுகளின்கீழ் 9 விருதுகள் வழங்கப்பட்டன.*

## 10.1 தமிழ்நாடு கடல் மீனவ மக்கட்தொகைக் கணக்கெடுப்பு

*மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கடல் மீனவ மக்கட்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொண்டு வருகிறது. இதற்கு முன்பு 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீனவ மக்கட்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.*

*தமிழ்நாடு அரசு தற்பொழுது மாநிலத்தில் உள்ள அனைத்து மீனவர் குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களின் விவரங்களைச் சேகரித்து வருகிறது. இதன் அடிப்படையில் மீனவ மக்களின் தற்போதைய நிலை அறியப்பட்டு, மீனவர்களின் நலனுக்காக, மீன்வளக் கொள்கைகள் மற்றும் நலத் திட்டங்கள் உருவாக்கப்படும்.*

## 10.2 தமிழ்நாடு மீனவச் சமூதாயத்தின் சமூகப் பொருளாதார நிலை குறித்து ஆய்வு

*தமிழ்நாடு அரசு மீனவ மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மாநிலம் முழுவதும் உருவாக்குவதன் வாயிலாக அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பல்வேறு நலத் திட்டங்களினால் மீனவ மக்களின் சமூகப் பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்துகொள்ளும் பொருட்டும், கூடுதலாக மேற்கொள்ள*

வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வுகள் நடத்திட அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திட்டமிடுதல், கொள்கை முடிவு உருவாக்கம், திட்டச் செயல்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை மாநிலத்தில் கட்டமைப்பதற்கு இவ்வாய்வு பேருதவியாக அமையும்.

## 11. மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாடு மீனவர் மற்றும் மீனவ மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையானது மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக அரசின் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள மொத்தமுள்ள 1,457 தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்/ 12 மாவட்ட கூட்டுறவு இணையங்கள்/ 1 மாநிலத் தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.52 இலட்சம் மீனவர்/ மீனவ மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 62 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 12 பகுதி நேர நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம், அட்டவணை 12—ல் கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை-12**

**மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்**

| கூட்டுறவுச் சங்கம் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் | | |
| கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் | 576 | 3,66,846 |
| கடல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் | 476 | 2,94,116 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் | 330 | 82,677 |

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5]*

| | | |
|---|---|---|
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் | 75 | 7,990 |
| **மொத்தம்** | **1,457** | **7,51,629** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | 12 | 998 |
| தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 834 |
| **ஆக மொத்தம்** | **1,470** | **7,53,461** |

**12. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG)**

*2030 ஆம் ஆண்டுக்குள் நிலையான எதிர்காலத்தை உருவாக்கிட, ஐக்கிய நாடுகள் அமைப்பு வறுமையை ஒழிக்கவும், சமத்துவமின்மையினைப் போக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவைச் சீரமைப்பதற்காகவும் 17 நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDG) உருவாக்கியுள்ளது. வறுமையைப் போக்கவும், பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உணவு, பொருளாதார வளர்ச்சி மற்றும் இயற்கை வளங்களை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஒரு பெரும் வாய்ப்பாக உள்ளது.*

*மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் உற்பத்தியும், உற்பத்திக்கு ஏற்ற நுகர்வு ஓர் அலகாகவும் (இலக்கு 12) 'கடல்வளம்' (இலக்கு 14) மூன்று குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது. இலக்கு-12-ஐ அடைவதற்குப் பல்வேறு திட்டங்களின்மூலம் மாநிலத்தின் மீன் உற்பத்தியை அதிகரிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது. மாநிலத்தின் மீன் உற்பத்தி 2020-2021-ல் 7.23 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 2021-2022-ல் 8.06 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. 2020-2021-ல் மாநிலத்தின் தனி நபர் மீன் நுகர்வு 9.3 கிலோவிலிருந்து 2021-2022-ல், 10.66 கிலோவாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'இலக்கு-14-ல் கடல் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல், மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல், கடல்வாழ் உயிரின வளர்ப்பு, திறன்மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தினை அமல்படுத்துவதன் வாயிலாக நீடித்த நிலையான மீன்பிடிப்பை அடைவதற்கு இத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.*

[2023 ஏப்ரல் 5

*இலக்கு-14-ஐ அடைய, அரசால் 90 இடங்களில் பல்வேறு திட்டங்களின்கீழ் 28.50 கோடி ரூபாய் செலவில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவப்பட்டதினைத் தொடர்ந்து மாநிலத்தின் கடல் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. மேலும், 3 பாக்—வளைகுடா மாவட்டங்களில் ரூ.79 கோடி செலவில் 217 அலகுகள் கொண்ட செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவிடவும் மற்ற மாவட்டங்களில் ரூ.64 கோடி செலவில் 200 அலகுகள் நிறுவிடவும் துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவர்களுக்குச் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைப்பது சாதகமாக இருப்பதால், தமிழக கடலோரப் பகுதிகளில் அதிக அளவில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்க மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய களப்பணி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து தனிப் பிரிவு இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தரவுகள் அவ்வப்போது தகவல் இணையத்தில் ஏற்றப்பட்டு வருகின்றன. மாவட்ட நல்லாட்சி குறியீட்டில் (DGGI) தரவரிசைப்படுத்துவதற்கான குறிக்காட்டியாக மீன்களின் வளர்ச்சி விகிதம் சேர்க்கப்பட்டுள்ளது.*

**13. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்**

*மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனை உறுதி செய்திட, தமிழ்நாடு அரசால் 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் நிறுவப்பட்டது.*

*இவ்வாரியமானது மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையரை உறுப்பினர் செயலராகவும், அலுவல் மற்றும் அலுவல்—சாரா உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இம்மீனவர் நல வாரியத்தில் மொத்தம் 4.99 இலட்சம் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.*

*தமிழ்நாடு மீனவர் நல வாரிய விதிகளின்படி, நிதியத்திற்கான ஆண்டு பங்களிப்புத் தொகையாக உறுப்பினர்களிடமிருந்து வருடத்திற்கு ரூ.20/— உறுப்பினர் சந்தாத் தொகை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான டீசல்*

*2023 ஏப்ரல் 5]*

*விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்யப்படும் டீசலில் லிட்டருக்கு 10 பைசா வீதம் மற்றும் விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் வரியில்லா டீசலில் லிட்டருக்கு 20 பைசா வீதமும், நீர்நிலைகளின் மீன்பாசி குத்தகைத் தொகையில் 7 விழுக்காடு வீதமும் மற்றும் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு மற்றும் விற்பனை சங்கத்தால் மேற்கொள்ளப்படும் மீன் விற்பனையில் கிலோ ஒன்றிற்கு ரூ.2/— என்ற வீதத்தில் வசூல் செய்யப்பட்டு வருகிறது. 2022—23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீனவர் நல வாரிய பங்களிப்புத் தொகையாக ரூ.5.34 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணை 13—ல் கொடுக்கப்பட்டுள்ளது:*

**அட்டவணை-13**

**தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

| வ. எண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உறுப்பினரின் மகன்கள் மற்றும் மகள்கள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கிப் படிப்பவர் | |
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | ——— | ——— |
| | ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | ——— | ——— |
| | இ) தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற்நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டு ஒன்றிற்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| | ஈ) இளங்கலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | உ) முதுகலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | ஊ) இளங்கலை தொழில் கல்விகள் (மீன்வள அறிவியல், வேளாண்மை, கால்நடை அறிவியல், சட்டம், பொறியியல், மருத்துவம்) (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | எ) முதுகலை தொழிற்கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 2. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி | | | 3,000 | 5,000 |
| | ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம். | | | 3,000 | 5,000 |
| 3. | மகப்பேறு / கருச்சிதைவு /கருக்கலைப்பு உதவித் தொகை | | | | |
| | அ) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ,1,000/— வீதம் ஆறு மாதங்கள்) | | | 6,000 | |
| | ஆ) கருச்சிதைவு | | | 3,000 | |
| | இ) கருக்கலைப்பு | | | 3,000 | |

*2023 ஏப்ரல் 5*]

| வ. எண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 4. | விபத்து நிவாரணம் | |
| | அ) விபத்தினால் மரணம் | 2,00,000 |
| | ஆ) இரண்டு கைகள் இழப்பு | 1,00,000 |
| | இ) இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 |
| | ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| | உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 |
| | ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| | எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 50,000 |
| 5. | மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின் உடனடியாக விபத்தின் காரணமாக அல்லாமல் | 2,00,000 |
| 6. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 2,00,000 |
| 7. | இயற்கை மரணம் | 15,000 |
| 8. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களின்கீழ் விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கு நிவாரணம் / உதவி தொகையினைத் துரிதமாக வழங்கிடவும், புதிய உறுப்பினர் சேர்க்கைக்காகவும் பிரத்யேக வலைதளம் www.tnfwb.tn.gov.in சென்னை, தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் உருவாக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.

இவ்வலைதளத்தைப் பயன்படுத்த அனைத்து மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர்களுக்கும் பயனாளர் குறியீடு (User ID) வழங்கப்பட்டுள்ளது. நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் நிவாரணம்/ உதவி கோரும் விண்ணப்பங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் பரிசீலிக்கப்பட்டு, உரிய ஆவணங்களுடன் தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைமை அலுவலகத்திற்கு வலைதளம் வாயிலாகப் பரிந்துரை செய்யப்பட்டு,

மின்னணு பணப் பரிமாற்றம் வாயிலாக பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக நிவாரணம் / உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்தில் மீனவ மாணவர்கள் பி.எப்.எஸ்.ஸி., (மீன்வள அறிவியல்) மற்றும் பி.டெக் (மீன்வள பொறியியல்) பாடப் பிரிவுகளில் பயில்வதற்கு ஏதுவாக 5 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தினால் அம்மாணவர்களுக்கு முழு கல்விக் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.14.02 இலட்சம் கல்விக் கட்டணமாக தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் ஏற்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட திட்ட விவரங்கள் அட்டவணை 14-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-14**

| **வ. எண்** | **நிவாரணம் / உதவித் திட்டங்கள்** | **எண்ணிக்கை** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை | 1,860 | 35.19 |
| 2 | திருமண உதவி | 94 | 3.46 |
| 3. | விபத்து மரணம் | 147 | 292.00 |
| 4. | உடல் உறுப்பு இழப்பு | 4 | 3.50 |
| 5. | மீன்பிடிக்கையில் இறத்தல் | 20 | 40.00 |
| 6. | மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவர்கள் | 2 | 3.00 |
| 7. | இயற்கை மரணம் | 1,104 | 165.60 |
| 8. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 1,223 | 30.57 |
| | **மொத்தம்** | **4,454** | **573.32** |

*2023 ஏப்ரல் 5*]

## 14. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்

*தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமானது தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன்படி 6.11.1991 அன்று பதிவு செய்யப்பட்டு, கடந்த 19.10.1992 முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, இவ்விணையத்தில் 474 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், 198 கடல் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள், 153 உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 10 மாவட்ட மீனவக் கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு ரூ.91.29 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.*

*இவ்விணையத்தின் செயற்பதிவாளராக மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் அவர்களும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை கூடுதல்/ இணை இயக்குநர் பதவித் தரத்தில் மேலாண்மை இயக்குநரும் இணையத்தை நிர்வகித்து வருகின்றனர். இணையத்தின் கட்டுப்பாட்டில் சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.*

**தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:**

### 14.1 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

*தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெய்யில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட நாட்டுப் படகுகளுக்கு, 2022—23 ஆம் நிதியாண்டில், 14 விற்பனை மையங்கள்மூலம் 6,602 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.1.32 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.*

### 14.2 மீன்பிடிக் கலன்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்

*தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 17 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 2022-2023 ஆம் ஆண்டில், 22,088 கிலோ லிட்டர்*

வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப் படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.4.62 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.3 மீன் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் பொதுமக்களுக்குத் தரமான மீன்களை, நியாயமான விலையில் வழங்கிடும் பொருட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வையாவூர், செங்கல்பட்டு மாவட்டத்தில் வாணியஞ்சாவடி, கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி நகரம், அரியலூர், மதுரை மாவட்டத்தில் பழங்காநத்தம், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம், பரமக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தில் வண்ணாரப்பேட்டை, பேட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் இதன்மூலம் மொத்த வாடகை வருவாய் ரூ.7.44 இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.4 மீனவ மகளிருக்குச் சிறு கடன் வழங்குதல்

தற்போது மீனவர்கள், குறிப்பாக மீனவ மகளிருக்குக் கடன் அளிப்பவர் மற்றும் மீன் கொள்முதல் செய்பவர்மூலம் அன்றாட வியாபாரத்திற்கு அதிக வட்டிக்குக் கடன் பெற்று மீன் விற்பனை சார்ந்த தொழிலில் ஈடுபட்டுவரும் நிலையில், குறைவான வருவாயையே பெறுகின்றனர். மீனவ மகளிருக்கு உதவிடும் வகையிலும், கடன் கொடுப்பவரின் பிடியிலிருந்து விடுபடும் வகையிலும் இணையம் குறைந்தபட்ச வட்டி விகிதத்தில் சிறு கடன் வழங்கி, அதன் வாயிலாக மீனவ மகளிர் விற்பனை செய்யும் மீன்களுக்குக் கூடுதல் விலை கிடைக்க வழிவகை செய்துள்ளது. 2022–2023 ஆம் ஆண்டில் கடலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த 205 மீனவ மகளிர் அடங்கிய 41 கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு மீனவ மகளிர் பயனாளி ஒருவருக்கு ரூ.15,000/— வீதம், தொகை ரூ.30.75 இலட்சம் சிறுகடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 14.5 மீன்பிடித் துறைமுகம்/மீன் இறங்குதளம் ஆகியவற்றில் கூட்டுறவு விற்பனை மையங்கள் அமைத்தல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமானது, தேங்காப்பட்டணம், குளச்சல், சின்னமுட்டம்,

*2023 ஏப்ரல் 5]*

*தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மீன்பிடித் துறைமுகங்களிலும், தருவைக்குளம் மீன்பிடி இறங்குதளத்திலும் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு விற்பனை மையத்தின்மூலம் மீன்பிடிக்கத் தேவையான பொருட்கள் மற்றும் மீனவர்களுக்குத் தேவையான இதர அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. இதன்மூலம் ரூ.3.34 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.*

## 14.6 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்குதல்

*தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின்மூலம் 2022-2023 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. இயந்திரத்தின் விலையில் 40 விழுக்காடு அல்லது ரூ.48,000/-, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.1.44 கோடி மானியத்தில் 333 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.*

## 14.7 திட்ட அலுவலகக் கட்டுமானப் பணி

*சென்னை ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பில் இவ்விணையத்தின் தூத்துக்குடி திட்ட அலகிற்கான அலுவலகம் கட்டப்பட்டு, 27.1.2023 அன்று திறக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.*

## 14.8 டீசல் விற்பனை நிலையம் நிறுவுதல்

*மயிலாடுதுறை மாவட்டம் வானகிரியில் டீசல் விற்பனை நிலையம் 23.9.2022 அன்று துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த டீசல் விற்பனை நிலையத்தின்மூலம் மீனவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

## 14.9 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்

*தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் வாயிலாக 2020-2021 ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசு மற்றும் பயனாளிகள் பங்களிப்புடன்கூடிய பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மீன் வியாபாரம்*

மேற்கொள்ள குளிர்காப்புப் பெட்டி பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம், குளிர்காப்புப் பெட்டியுடன்கூடிய மூன்று சக்கர வாகனம், குளிரூட்டும் வசதியுடன்கூடிய நான்கு சக்கர வாகனம் மற்றும் மீன் விற்பனை நிலையம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆதி திராவிடர் / மீனவ மகளிர் பயனாளிகளுக்கு 60% மற்றும் பொது பிரிவினருக்கு 40% மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மானிய விவரங்கள் அட்டவணை 15-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-15**

| வ. எண் | திட்டம் | 2021-2022 | | 2022–2023 | |
|---|---|---|---|---|---|
| | | அலகு | மானியத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | அலகு | மானியத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | மீன் விற்பனை நிலையம் | 10 | 40.00 | 6 | 24.00 |
| 2 | குளிரூட்டும் வசதியுடன் கூடிய நான்கு சக்கர வாகனம் | 2 | 16.00 | — | — |
| 3 | குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய மூன்று சக்கர வாகனம் | 15 | 21.00 | 40 | 52.20 |
| 4 | குளிர்காப்பு பெட்டி பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம் | 500 | 157.50 | 225 | 77.70 |
| | **கூடுதல்** | **527** | **234.50** | **271** | **153.90** |

## 14.10. நிதிநிலை

2022-2023 ஆம் ஆண்டில் இணையத்தால் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் மீன் விற்பனை நிலையங்கள் வாயிலாக

*2023 ஏப்ரல் 5*]

*ரூ.228.86 கோடி வரவு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, மொத்த இலாபமாக ரூ.5.93 கோடி (தணிக்கை செய்யப்படாதது — பிப்ரவரி 2023 வரை) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், இவ்விணையம், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்குத் தனது பங்களிப்புத் தொகையாக ரூ.38.33 இலட்சம் வழங்கியுள்ளது.*

## 15. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

*தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நிறுவனங்களின் சட்டத்தின்கீழ், 1974 ஆம் ஆண்டு பொதுத் துறை நிறுவனமாக ரூ.5 கோடி பங்கு முதலீட்டுடன் பதிவு செய்யப்பட்டது. இக்கழகம் மாநில மீன்வளம் தொடர்பான வியாபார ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டது. அரசால் நியமிக்கப்படும் தலைவரை முதன்மையாகக் கொண்ட இயக்குநர் குழுமத்தினால் இக்கழகம் நிர்வகிக்கப்படுகிறது.*

*ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அவர்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஆவார். இக்கழகத்தின் நிருவாகப் பணிகள் பதிவலுவலக அளவில் பொது மேலாளர், முதுநிலை மேலாளர்கள் (கடல்வளம் மற்றும் உள்நாட்டு மீன்வளம்), மேலாளர் (தணிக்கை மற்றும் கணக்கு) ஆகியோராலும், கள அளவில் மேலாளர்கள், துணை மேலாளர்கள் மற்றும் உதவி மேலாளர்கள் ஆகியோரால் அமைச்சுப் பணியாளர்களின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

### 15.1 உள்நாட்டு மீன்வளம்

#### 15.1.1 நீர்த்தேக்க மீன்வளம்

*மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையிலிருந்து நீண்டகாலக் குத்தகைக்கு பெறப்பட்ட பின்வரும் 8 நீர்த்தேக்கங்களான, ஈரோடு மாவட்டம், பவானிசாகர், பெரும்பள்ளம், கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாறு, திருப்பூர் மாவட்டம், அமராவதி, திருமூர்த்தி, உப்பாறு, திண்டுக்கல் மாவட்டம், பாலாறு—பொருந்தலாறு மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் ஆகியவற்றின் மீன்வள மேலாண்மையினைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. நடப்பாண்டு பிப்ரவரி 2023 வரை 791.15 டன் மீன்கள் இந்நீர்தேக்கங்களில் பிடிக்கப்பட்டதுடன், வருமானமாக ரூ.7.08 கோடி ஈட்டப்பட்டுள்ளது. கூடுதல் வருவாயினைப் பெற்றிடும் வகையில், இந்நீர்த்தேக்கங்களின் மீன்பிடிக் குத்தகை உரிமம் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது.*

## 15.1.2 மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு

*மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் கட்டுப்பாட்டிலிருந்த சாத்தனூர், ஆழியாறு, அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு—பொருந்தலாறு ஆகிய இடங்களில் 3.83 ஹெக்டேர் பரப்பளவுள்ள மீன் பண்ணைகளைக் கழகம் குத்தகைக்கு பெற்றுள்ளது. சாத்தனூர் மீன் பண்ணையில் பிப்ரவரி 2023 வரை 1.22 கோடி இந்திய பெருரக கெண்டை மற்றும் சாதா கெண்டை நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. சாத்தனூர், ஆழியாறு, அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு—பொருந்தலாறு பண்ணைகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, பிப்ரவரி 2023 வரை 24.13 இலட்சம் விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தரமானதாக உற்பத்தி செய்யப்படும் இம்மீன்குஞ்சுகள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக நீர்த்தேக்கங்களில் இருப்புச் செய்யப்படுவதுடன், மீன் வளர்ப்போருக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.*

## 15.1.3 வண்ண மீன் உற்பத்தி மற்றும் மீன்காட்சியகங்கள்

*தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் வண்ண மீன்களின் உற்பத்திக்கென தனியே ஆழியாறு மீன் பண்ணையில் செயல்பட்டுவரும் உற்பத்தி அலகில், கோய் கெண்டை, பொன்மீன், பூகொண்டை மற்றும் சிச்லிட் இன மீன்கள் இனப்பெருக்கம் செய்து, வளர்க்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. இக்கழகம்மூலம் ஆழியாறு, திருமூர்த்தி மற்றும் சாத்தனூர் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் வண்ண மீன் காட்சியகங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சிகளின்மூலம் அமைக்கப்பட்டுள்ள பொது வண்ண மீன் காட்சியகங்களின் பராமரிப்பினையும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. வண்ண மீன் காட்சியகத்திற்குத் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் வண்ண மீன்களை விற்பனை செய்வதற்கான ஒரு பிரத்யேக விற்பனை அங்காடியினை இக்கழகம் சேத்துப்பட்டு பசுமைப் பூங்காவில் அமைத்து வருகிறது. மேற்கூறிய செயல்களின் வாயிலாக இவ்வருடத்தின் பிப்ரவரி 2023 வரை ரூ.17.21 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.*

*2023 ஏப்ரல் 5*]

## 15.2 கடல் மீன்வளம்

### 15.2.1 வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் வழங்குதல்

*தமிழ்நாடு அரசால் கடல் மீனவர்களின் நலனுக்காக வழங்கப்படும் வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் தமிழ்நாடு கடலோரத்தில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் அமைக்கப்பட்டுள்ள 32 டீசல் எரிபொருள் நிலையங்கள்மூலம் வழங்கப்படுகிறது. பிப்ரவரி 2023 வரை 75,008.41 கிலோ லிட்டர் வரி விலக்களிக்கப்பட்ட டீசல் விற்பனை செய்யப்பட்டு, ரூபாய் 591.49 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் ஒரு புதிய டீசல் விற்பனை நிலையம் துவக்கப்பட்டுள்ளது.*

*புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

### 15.2.2 மானிய விலை தொழிலக மண்ணெண்ணெய் மீன்பிடிக் கலன்களுக்கு விற்பனை

*கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாரம்பரிய நாட்டுப் படகு மீனவர்கள் பயன்பெறும் வகையில் மண்ணெண்ணெயினால் இயக்கப்படும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் மானிய விலை மண்ணெண்ணெய், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 11 விற்பனை நிலையங்கள்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.*

*நடப்பு வருடத்தில் பிப்ரவரி 2023 வரை 10504 கிலோ லிட்டர் மானிய விலை மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு, ரூபாய் 94.05 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

### 15.2.3 பெட்ரோல் விற்பனை

*தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரத்தில் உள்ள எரிபொருள் நிலையத்தில் கூடுதல் வருவாய்*

ஈட்டிடும் பொருட்டு, ஒரு பெட்ரோல் விற்பனை நிலையத்தினை நிறுவியுள்ளது. நடப்பாண்டில் 175.56 கிலோ லிட்டர் பெட்ரோல் அப்பகுதி பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, ரூ.1.82 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இதர எரிபொருள் நிலையங்களிலும் கூடுதலாகப் பெட்ரோல் விற்பனை நிலையங்கள் எதிர்வரும் காலங்களில் அமைக்கப்படவுள்ளன.

### 15.2.4 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 544 வெளிப்பொருத்தும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட பாரம்பரிய நாட்டுப் படகு மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கியதன்மூலம் ரூ.1.77 கோடி அரசு மானியமாக மீனவர்களுக்கு வழங்கியுள்ளது.

## 15.3 மீன் விற்பனை

### 15.3.1 மீன் விற்பனை அங்காடிகள் மற்றும் ஊர்திகள்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆரம்ப காலத்திலிருந்தே மீன் விற்பனைப் பணியினை முக்கிய வியாபார செயல்பாடாக மேற்கொண்டு வருவதன்மூலம் தரமான மீன்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட மீன் உணவு வகைகளை நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்பொழுது 43 சங்கிலித் தொடர் மீன் அங்காடிகளை சென்னை, மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலும், 12 நடமாடும் மீன் விற்பனை ஊர்திகளை சென்னை, திருவண்ணாமலை, நெய்வேலி, மதுரை, பொள்ளாச்சி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இயக்கி வருகிறது.

நடப்பாண்டில் 472.86 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு, பிப்ரவரி 2023 வரை ரூ.14.51 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில்லரை மீன் விற்பனை பணிகளை விரிவாக்கம் செய்திடும் வகையில் கூடுதலாக நவீன மீன் விற்பனை அங்காடிகள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை ஊர்திகளை செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*2023 ஏப்ரல் 5*]

### 15.3.2 மதிப்புக்கூட்டப்பட்ட மீன் விற்பனை

*மீன் விற்பனையில் கூடுதல் வருவாயினை ஈட்டுவதற்கு மதிப்புக் கூட்டுதல் அவசியம். ஆதலால், அதனைச் செயல்படுத்தும் விதமாக சென்னை மெரினா கடற்கரை (2), சைதாப்பேட்டை (1) ஆகிய 3 இடங்களில் நடமாடும் கடலுணவு ஊர்திகள் மற்றும் சாந்தோம்* CIBA *வளாகத்தில் அமர்ந்து உணவருந்தும் வசதியுடன்கூடிய ஒரு மீன் உணவகமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீன் மற்றும் இறால் ஊறுகாய் வகைகள் தயார் செய்யப்பட்டு கழகத்தின் மீன் விற்பனை அங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பொதுமக்களிடையே மீன் உணவு நுகர்வு மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒரு மீன் உணவு விற்பனை நிலையத்தினை சென்னை தீவுத்திடல் சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைத்திருந்தது. மதிப்புக் கூட்டிய மீன் உணவு விற்பனைமூலம் நடப்பாண்டில் பிப்ரவரி 2023 வரை ரூ.1.65 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

### 15.3.3 இணைய வழி மீன் விற்பனை

*தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்* www.meengal.com *என்ற இணைய முகவரி மற்றும்* 'meengal' *எனும் கைபேசி செயலி வாயிலாக இணையவழி மீன் விற்பனையினை மேற்கொண்டு வருகிறது. இவ்விணைய வழி மீன் விற்பனையின் வாயிலாக நுகர்வோரின் இல்லங்களுக்கே மீன்களைக் கொண்டு போய் சேர்ப்பதற்கு உரிய மின் வணிகத்தரவுகள் (*e—commerce*) பயன்படுத்தப்பட்டன. இவ்விற்பனையின் துவக்க காலமான ஏப்ரல் 2020-லிருந்து இதுவரை 38,324 நபர்களுக்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டு, பிப்ரவரி 2023 வரை 57.73 மெட்ரிக் டன் மீன்கள் ரூ.3.16 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

*தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் "இது நம்ம ஊரு மீன்கள்"(*Idhu Namma Ooru Meengal*) என்ற வணிகச் சின்னத்தை அறிமுகப்படுத்தி, அதனை சமூக ஊடகங்கள் வழியாக மீன் விற்பனையை பிரபலப்படுத்தும் பணிகளையும் செய்து வருகிறது.*

### 15.3.4 மொத்த மீன் விற்பனை சந்தை, உக்கடம், கோயம்புத்தூர் மாவட்டம்

*தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் கோயம்புத்தூர் உக்கடம் பகுதியில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன்*

இணைந்து ஒரு மொத்த மீன் விற்பனைச் சந்தையினை நிறுவியுள்ளது. தற்பொழுது சந்தையிலுள்ள கடைகள் மற்றும் வடிகால் வசதிகள் புனரமைத்து மேம்படுத்தப்பட்டுள்ளன. மீன்களை நல்ல நிலையில் இருப்பு வைக்கவும், தரத்தினை மேம்படுத்தும் விதமாகவும், 10 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிர்பதன அறை ரூ.1.10 கோடி செலவில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன.

## 15.4 சேத்துப்பட்டு, பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன்கூடிய பசுமைப் பூங்கா மேலாண்மை

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையால் அமைக்கப்பட்ட சேத்துப்பட்டு பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன்கூடிய பசுமைப் பூங்காவினைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பராமரித்து வருகிறது. சேத்துப்பட்டு பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன்கூடிய பசுமைப் பூங்காவிலுள்ள பின்வரும் வசதிகளான, வண்ண மீன் காட்சியகத்துடன்கூடிய நீர்வாழ் மெய்நிகர் காட்சியகம், படகுக் குழாம், தூண்டில் மீன்பிடிப்பு, உணவகம், நடைபயிற்சி பாதை, சிறுவர் விளையாட்டுப் பகுதி, முப்பரிமாணத் திரையரங்கு மற்றும் பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகிய வசதிகள்மூலம் இப்பூங்கா ஏராளமான பொதுமக்களைக் கவர்வதுடன், குறிப்பாக குழந்தைகளையும் வெகுவாக ஈர்க்கின்றது. நடப்பாண்டின் பிப்ரவரி 2023 மாதம் வரை 1,78,539 மக்கள் வருகை புரிந்ததுடன், நுழைவுக் கட்டணமாக ரூ.39.69 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இப்பசுமைப் பூங்காவின் பொழுதுபோக்கு வசதிகள் தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்ட வகையில் ரூ.1.29 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இவ்வருமானத்தின்மூலம் பூங்காவின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் கூடுதல் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 15.5 மீன் தீவன தொழிற்சாலை இயக்கம்

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், அச்சம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள மீன் தீவன ஆலையினைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மீன் தீவனம் அரசு மீன் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

*2023 ஏப்ரல் 5]*

*நடப்பாண்டில் பிப்ரவரி 2023 மாதம் வரை 154.31 மெட்ரிக் டன் மீன் தீவனம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.*

## 15.6 நிதிநிலை

*2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.788.25 கோடி விற்றுமுதலில் (Turnover) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது ரூ.10.23 கோடி (தணிக்கை செய்யப்படாதது) இலாபம் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## 15.7 தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நிதி பங்களிப்பு

*தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 2021-2022 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட இலாபத்தில் ரூ.2.59 கோடியினை 2022-2023-ல் மாநில அரசுக்கு பங்கு ஈவுத் தொகையாகச் செலுத்தியுள்ளது. மேலும், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு பிப்ரவரி 2023 வரை ரூ.1.98 கோடியினைத் தனது பங்களிப்புத் தொகையாக 2022-2023 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது.*

*தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 2022-2023 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு ரூ24.25 இலட்சம், பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து வழங்கியுள்ளது.*

## 16. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU)

*தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகமானது தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம், 2012-ன்படி, மாநில அரசு நிதியுதவியுடன் 19.6.2012 அன்று நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் மற்றும் மீன்வளக் கல்லூரிகள் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் மார்ச் 2026 ஆம் ஆண்டு வரை 'A' தர அங்கீகாரம் பெற்றுள்ளது.*

## 16.1 தொலையறிவு

*"மக்களுக்கு உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதில் மீன்வள அறிவியலை சரியாகப் பயன்படுத்துதல்".*

## 16.2 செயலாக்கம்

*"தரமான மீன்வள அறிவியல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கங்கள்மூலம் சமூக பொறுப்புள்ள மற்றும்*

*தொழில்ரீதியாகத் திறன்மேம்பட்ட பட்டதாரிகளை உருவாக்கி, மீன்வளத் துறையில் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை அடைதல்".*

## 16.3 குறிக்கோள்கள்

➢ *மீன்வள அறிவியலின் பல்வேறு பிரிவுகளில் தொழில் கல்வியை வழங்குதல்*

➢ *மீன்வள அறிவியலில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்க திட்டமிட்ட ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்.*

➢ *மீன்வள அறிவியலில் விரிவாக்கச் சேவைகளை வழங்குதல்.*

➢ *மீன்வளக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை சரியான வழியில் எடுத்துச் சென்று மாநிலத்தின் மேம்பட்ட பொருளாதார வளர்ச்சியில் பங்களித்தல் மற்றும் மீன்வள அறிவியலின் தர மேம்பாட்டிற்கான அளவுகோல்களை நிர்ணயித்தல்.*

## 16.4 நிருவாக அமைப்பு

*நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகத் தலைமையகத்தில் துணைவேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குநர், விரிவாக்கக் கல்வி இயக்குநர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு இயக்குநர், நிதி அலுவலர் மற்றும் உடைமை அலுவலர் அலுவலகங்கள் உள்ளன. தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில், 8 உறுப்புக் கல்லூரிகள், 3 இணைத் தொழிற்சார் கல்வி நிலையங்கள் மற்றும் 5 இயக்குனரகங்கள் உள்ளன.*

## 16.5 கல்வி

**அட்டவணை-16**

| புலங்கள் | வழங்கப்படும் பாடப் பிரிவுகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மீன்வள அறிவியல் | 1. பி.எஃப்.எஸ்ஸி<br>2. எஃப்.எஸ்ஸி (13 பிரிவுகள்)<br>3. பி.ஹெச்.டி (13 பிரிவுகள்) | 3 |

2023 ஏப்ரல் 5]

| புலங்கள் | வழங்கப்படும் பாடப் பிரிவுகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| அடிப்படை அறிவியல் | 1. பி.டெக் (உயிர் தொழில்நுட்பம்)<br>2. பி.பி.ஏ (மீன்வள வணிக மேலாண்மை)<br>3. எம்.பி.ஏ (மீன்வள வணிக மேலாண்மை)<br>4. பி.ஹெச்.டி (உயிர் அறிவியல்) | 3 |
| மீன்வளப் பொறியியல் | 1. பி.டெக் (மீன்வளப் பொறியியல்)<br>2. பி.டெக் (எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்)<br>3. எம்.டெக் (2 பிரிவுகள்) | 1 |
| உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து | பி.டெக் (உணவுத் தொழில்நுட்பம்) | 1 |

* மேலும் பி.வோக், மூன்று பாடப் பிரிவுகளில் மூன்று இணை தொழிற்சார் கல்வி நிலையங்களிலும் வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், இளநிலைப் பாடப் பிரிவுகளில் 320 மாணவர்களும், முதுநிலை பாடப் பிரிவுகளில் 61 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் மொத்தம் 1500 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய 2022 ஆம் ஆண்டிற்கான அகில இந்திய நுழைவுத் தேர்வில் 33 மாணவர்கள் தேர்வாகி முதுநிலை மாணவர் சேர்க்கைக்கான தர வரிசைப் பட்டியலில் இடம்பெற்று, பிற மாநிலங்களில் மத்திய மற்றும் மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் முதுநிலை மற்றும் பிஎச்டி, படிப்புகளில் சேர்க்கைப் பெற்றுள்ளனர்.

*2022-2023 ஆம் கல்வியாண்டில், பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து இளநிலை பட்டப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் 7.5% இட ஒதுக்கீட்டின்மூலம் 17 மாணவர்களும், மீனவர் சமுதாய மாணவர்களுக்கான 20% இட ஒதுக்கீட்டின்மூலம் பி.எஃப்.எஸ்ஸி. மற்றும் பி.டெக். மீன்வளப் பொறியியல் பிரிவில் 25 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.*

*2022 ஆம் ஆண்டில், 9 இளநிலைப் பட்டப் படிப்புகளில் பயின்றுவரும் 570 மாணவிகளில் 31 மாணவிகள் தமிழ்நாடு அரசின் 'புதுமைப் பெண்' திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர்.*

## 16.6 நான் முதல்வன்

*தமிழ்நாடு அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின்மூலம் 'கல்லூரி கனவுகள்' என்ற தலைப்பில் மாணவர்களுக்கு மீன்வளக் கல்வி, அதன் முக்கியத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு விவரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, சென்னையில் 25.6.2022 அன்று கண்காட்சி நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களின் கல்வி நிறுவனங்களில் மீன்வளக் கல்வி குறித்து இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் விளக்கவுரை வழங்கினர். இதில் 10,000—க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.*

## 16.7 பட்டமளிப்பு

*தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழா 19.08.2022 அன்று நாகப்பட்டினத்தில் உள்ள பல்கலைக்கழகத் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்த பட்டமளிப்பு விழாவில் பல்வேறு பிரிவுகளில் 366 பட்டங்கள் நேரடியாக வழங்கப்பட்டன. மேலும், 48 பட்டதாரிகள் தங்களது பட்டங்களைத் தபால்மூலம் பெற்றனர். இவ்விழாவில் பல்வேறு பிரிவுகளின்கீழ் மொத்தம் 19 பட்டதாரிகளுக்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவானது, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் தலைமையில் நடைபெற்றது. ஒவ்வொரு வருடமும் 50 பதக்கங்கள் கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.*

*2023 ஏப்ரல் 5*]

## 16.8 உருவாக்கப்பட்ட மற்றும் திறந்து வைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள்

*இப்பல்கலைக்கழகத் தலைமையகத்தில் விவசாயிகள் பயிற்சி மையம், சாலை உருவாக்கம் மற்றும் நுழைவாயில் வளைவு, தலைஞாயிறு மீன்வளக் கல்லூரியில் நிருவாகக் கட்டடம் மற்றும் மாணவர்கள் விடுதி மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் சுற்றுச்சுவர் ஆகியவை நபார்டு நிதியுதவியுடன் ரூ.26.09 கோடியில் கட்டப்பட்டுள்ளன.*

*2022 ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில நிதி மற்றும் நபார்டு நிதியுதவியுடன் ரூ.13.20 கோடியில் தலைஞாயிறு மீன்வளக் கல்லூரியின் ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கான குடியிருப்பு மற்றும் நாகப்பட்டினம் மீன்வளப் பொறியியல் கல்லூரியின் முதல் தளக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்கள்.*

*2023 ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில நிதி, நபார்டு மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் ஆகிய நிதியுதவிகளுடன் ரூ.11.67 கோடியில் கட்டப்பட்ட இணைத் தொழிற்சார் மீன்வளத் தொழில்நுட்ப நிலையம், மாதவரம், தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் விடுதி முதல் மற்றும் இரண்டாம் தளம், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தின் அலுவலகம் மற்றும் ஆய்வகம், தூத்துக்குடி மாவட்டத்தில் வடிவமைக்கப்பட்ட ஆழ்கடல் செவுள் வலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி விசைப் படகு, தூத்துக்குடி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தின் பயிற்சிக் கூடத்துடன்கூடிய ஆய்வகம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.*

## 16.9 ஆராய்ச்சி செயல்பாடுகள்

### 16.9.1 தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

*இப்பல்கலைக்கழகம் 2022-2023 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து ரூ.37.84 கோடி நிதியுதவி பெற்று, பின்வரும் 25 ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.*

[2023 ஏப்ரல் 5

## அட்டவணை-17

| வ. எண் | நிதி நிறுவனம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை —அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் | 2 | 66.68 |
| 2. | தொழில்முனைவு மேம்பாட்டு நிறுவனம் | 1 | 250.00 |
| 3. | இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் — தேசிய புதுமை காலநிலை மீள்திறன் வேளாண்மைத் திட்டம் | 2 | 68.25 |
| 4. | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் — மீன் மரபியல் வள தேசிய பணியகம் | 1 | 52.20 |
| 5. | உயிர் தொழில்நுட்பத் துறை | 1 | 54.00 |
| 6. | தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்—II | 1 | 250.00 |
| 7. | தமிழ்நாடு அரசின் மாநில புதுமைத் திட்டம் | 2 | 577.46 |
| 8. | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் | 6 | 882.30 |
| 9. | தேசிய வேளாண்மை மற்றும் கிராம மேம்பாட்டு வங்கித் திட்டம் | 1 | 350.00 |

*2023 ஏப்ரல் 5*]

| வ. எண் | நிதி நிறுவனம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| *10.* | தமிழ்நாடு அரசின் மாநில நிதியுதவி | *3* | *917.20* |
| *11.* | தமிழ்நாடு மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் | *2* | *26.36* |
| *12.* | தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் | *1* | *123.91* |
| *13.* | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் | *1* | *116.00* |
| *14.* | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் | *1* | *50.00* |
| | **மொத்தம்** | ***25*** | ***3784.36*** |

## 16.9.2 ஆராய்ச்சி வெளியீடுகள்

*இப்பல்கலைக்கழகம் 2022 ஆம் ஆண்டில் 6-க்கும் அதிகமாக மதிப்பீடு உடைய 120 ஆய்வுக் கட்டுரைகளை (சர்வதேச இதழ்கள் : 93 மற்றும் தேசிய இதழ்கள் : 27) வெளியிட்டுள்ளது. இது தேசிய வேளாண் அறிவியல் கழகத்தின் தரவரிசைக்கு இன்றியமையாத அளவுகோலாகும்.*

## 16.9.3 காப்புரிமைகள்

*2022-2023 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகம் 16 வடிவமைப்பு காப்புரிமைகளைத் தாக்கல் செய்துள்ளது.*

1. *மிதிசெயல்பாட்டின்மூலம் இயக்கப்படும் மீன் செதில் நீக்கும் இயந்திரம்*
2. *மின்சாரத்தில் இயங்கும் பகுதி தானியங்கி உலர் மீன் வெட்டும் இயந்திரம்*
3. *'ரிடார்ட்' பொதிகலனில் நண்டு சதைகளை பதப்படுத்துவதற்கு மின்சாரத்தால் இயக்கப்படும் அடுக்கு வகை பேஸ்டுரைசேசன் அமைப்பு*
4. *மீன் துண்டுகளில் உள்ள நீரை நீக்கும் மின்சார இயந்திரம்*

[*2023 ஏப்ரல் 5*

*5. மீன் விற்பனை இயந்திரம்*

*6. நாற்றாங்கால் மீன் வளர்ப்பு முறைக்கான காற்றோட்டம் மற்றும் உணவு அமைப்பு*

*7. நன்னீர் மீன் வளர்ப்புக்கான கூண்டு*

*8. ஒருங்கிணைந்த காற்றேற்றிகளுக்கான பல்லிணைப் பெட்டி*

*9. இறால் நாற்றாங்காலில் குஞ்சுகளை தரம் பிரிப்பான்*

*10. உறையிடப்பட்ட மீனின் தரத்தைக் கண்டறிய உதவும் நிறமாறும் உணரிகள்*

*11. கைக்கு அடக்கமான கலோரி மீட்டர்*

*12. அயனி நீக்கப்பட்ட நீர் உருவாக்கம்*

*13. நீர்வாழ் உயிரி அறுவடை இயந்திரம்*

*14. நீர்வாழ் உயிரியை புது சூழலுக்கு இணங்க வைக்க பயன்படுத்தும் தொட்டி*

*15. பைசோ எலக்ட்ரிக் காலணிகள்*

*16. பைசோ எலக்ட்ரிக் ஓடுகள்*

### 16.9.4 உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்கள்/ கருவிகள்

*ஐந்து தொழில்நுட்பங்கள் இந்த ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, பயோஃப்ளோக் மீன் வளர்ப்பு நுட்பத்திற்கான குறைந்தபட்ச வட்ட தொட்டி முன் மாதிரி, மீன் எலும்பு கொலாஜன் பெப்டைடுகளுடன் புரதம் சேர்க்கப்பட்ட உணவு, யுபிஎல்ஸி உபகரணம் பயன்படுத்தி மீன்களில் உள்ள ஃபார்மால்டிஹைடை கணிக்கும் தேர்வு முறை மற்றும் சரிபார்ப்பு முறை, பிசிஆர் மதிப்பீடுமூலம் இறால் ஒவ்வாமை பொருளான ட்ரோபோமையோசினைக் கண்டறிதல் மற்றும் மீன் சூப் பொடியை சிறு பையில் பேக்கிங் செய்யும் தொழில்நுட்பம்.*

*இந்த ஆண்டில் ஏழு இயந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, சுருமி உற்பத்திக்காக நீர் நீக்கும் அடுக்கு அமைப்பு, நண்டு சதையை பாஸ்டுரைசேசன் முறையில் ரிடார்ட்*

2023 ஏப்ரல் 5]

பைகளில் நிரப்புவதற்கான பாஸ்டுரைசர் அடுக்கு அமைப்பு, மிதி செயல்பாட்டின்மூலம் இயக்கப்படும் மீன் செதில்களை நீக்குவதற்கான இயந்திரத்தின் வடிவமைப்பு, மீன்சதையைத் தனியே பிரித்தெடுப்பதற்கான இயந்திரம், மீன் பாப்பிங் இயந்திரம், கணினி செயலியுடன் சூரியசக்தியில் இயங்கும் தானியங்கும் உணவளிக்கும் இயந்திரம், உறையிடப்பட்ட மீனின் தரத்தைக் கண்டறிய உதவும் நிறம் மாறும் உணரிகள்.

### 16.9.5 தயாரிக்கப்பட்ட பொருட்கள்

இந்த ஆண்டில், 15 தயாரிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, காலர்பா ரெஸிமோசா எனும் கடற்பாசி சேர்க்கப்பட்ட பாஸ்தா உணவு, பாலாடைக்கட்டி மற்றும் மசாலா சேர்த்த இறால் நொறுவை, தரமான உப்பு மற்றும் மிளகாய் சேர்க்கப்பட்ட இறால், பச்சை மிளகாய் சேர்க்கப்பட்ட காரமான இறால் நொறுவை, தந்தூரி பார்பிக்யூ இறால் நொறுவை, தமிழ்நாடு பாணியில் காரமான இறால் பொடி, புகையால் உலர்த்தப்பட்ட இறால், இறால் மசால் கலவை, கடற்பாசி ஊறுகாய், ஆப்பிள் நத்தை சூப்புப்பொடி, கடற்பாசி ஜாம், மசாலா இறால் நொறுவை, நீரில் கரையக்கூடிய கைடோசனால் வலுவூட்டப்பட்ட ஆரோக்கிய கலவை, நீரில் கரையக்கூடிய கைடோசனால் வலுவூட்டப்பட்ட காய்கறி சூப் மற்றும் நீரில் கரையக்கூடிய கைடோசனால் வலுவூட்டப்பட்ட திராட்சைப் பானம்.

### 16.9.6 உருவாக்கப்பட்ட கணினிச் செயலிகள்

3 கணினிச் செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, ஸ்மார்ட்டூ – செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இணைய செயலி, அக்வாஜெண்ட்– விவசாயி நட்பு மெய்நிகர் உதவியாளர் மற்றும் இறால் பண்ணை கீழ்படிவு கணக்கிடும் செயலி.

### 16.9.7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

2022-2023 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவிலுள்ள கர்டின் பல்கலைக்கழகம் மற்றும் வங்காள விரிகுடா திட்டம் ஆகியவற்றுடன் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், தனியார் தொழில் துறை நிறுவனங்களுடன் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டுள்ளன.

### 16.9.8 ஆராய்ச்சி முடிவுகளின்மூலம் வணிகமயமாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்

*தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வரும் "கடல் சார் உணவுப் பொருட்கள் வணிக மையம்" பல்வேறு விதமான கடற்பாசி சார்ந்த அழகு சாதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கில் ஹெர்பலிஸ் ஹெல்த் கேர் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து சந்தையில் மேற்கண்ட அழகு சாதனப் பொருட்களை அறிமுகம் செய்துள்ளது.*

*இப்பல்கலைக்கழகத்தின்மூலம் இருவகையான பன்னடுக்குப் பைகளில் வெப்பப்பதனம் செய்யப்பட்ட மீன்குழம்பு தூத்துக்குடியிலுள்ள பிரிட்டோ கடலுணவு ஏற்றுமதி நிறுவனத்திற்கு வணிகப்படுத்தப்பட்டது. மேலும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த வான்டேஜ் நியூட்ரிமென்ட்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஐந்து வகையான மணங்களுடன், உலர்த்தப்பட்ட இறால் வணிகமயமாக்கப்பட்டுள்ளது. இறால் தீவன உருவாக்கம் குறித்த தொழில்நுட்பம் சி.எம்.ஆர் ஃபீட்ஸ் மற்றும் சப்ளிமெண்ட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வணிகமயமாக்கப்பட்டுள்ளது.*

### 16.10 முக்கிய நிகழ்வுகள்

### 16.10.1 இந்திய மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பு கருத்தரங்கு

*தேசிய அளவிலான 12-வது 'இந்திய மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பு கருத்தரங்கு' இப்பல்கலைக்கழத்தினால் 2022 ஆம் வருடம், மே 5 முதல் 7 வரை சென்னையில் நடத்தப்பட்டது. இதில் சுமார் 2000 ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர், 900 ஆராய்ச்சி கட்டுரைகள் வழங்கப்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.*

### 16.10.2 தேசிய வேளாண் அறிவியல் தமிழ் மாநாடு

*இப்பல்கலைக்கழகம் புதுதில்லியில் உள்ள வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து வேளாண் அறிவியல் தமிழ் குறித்த தேசிய மாநாட்டை 25 முதல் 26 பிப்ரவரி 2023 வரை, இரண்டு நாட்கள் நாகபட்டினத்தில் பல்கலைக்கழக மாநாடு கூடத்தில் நடத்தியது. இதில் 576 தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டன. மீன்வளம், கால்நடை அறிவியல், வேளாண்மையியல் சார்பு கல்லூரிகள் மற்றும் கல்வி நிலையங்களைச் சேர்ந்த 500—க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.*

*2023 ஏப்ரல் 5*]

## 16.11 விரிவாக்கச் செயல்பாடுகள்

### 16.11.1 விவசாயிகள் மற்றும் இதரப் பயனாளிகளுக்காக உருவாக்கப்பட்ட தொழில் காப்பகங்கள்

*மறுசுழற்சி மீன்வளர்ப்பு அமைப்பு, இறால் நுண்குஞ்சுகள் வளர்ப்பு அலகு, கடல் மீன் நாற்றங்கால் அலகு, மீன் மற்றும் இறால் குளங்கள், தீவன ஆலை, நீர்வாழ் வண்ண மீன் வானவில் பேரங்காடி, நீர்வாழ் வானவில் தொழில்நுட்பப் பூங்கா, உள்நாட்டு கூண்டுகளில் மீன் வளர்ப்பு அலகு, கடலில் கூண்டுகளில் மீன் வளர்ப்பு அலகு, தொடர் தொட்டிகளில் மீன் வளர்ப்பு போன்றவை இப்பல்கலைக்கழகத்தின் கல்லூரிகள் மற்றும் மையங்களில் உள்ளன. இவற்றை மீன் மற்றும் இறால் பண்ணையாளர்கள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்கள் மற்றும் பிற பயனாளிகள் பயன்பெறும் நோக்கில் குத்தகைக்கு விடப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன நிதியுதவித் திட்டத்தில், 27 காப்பக பயனாளிகள் பதிவு செய்து, தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் உள்ள தொழில் காப்பக வசதிகளைப் பயன்படுத்தி வணிகம் செய்து வருகின்றன.*

### 16.11.2 ஆய்வகங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள்

*மீன் வளர்ப்போர் மற்றும் கடல் உணவு பதப்படுத்தும் தனியார் நிறுவனங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இப்பல்கலைக்கழகத்தில் நான்கு ஆய்வகங்கள் நீர்த் தர பரிசோதனை, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, மீன் தீவனத்தின் தரம் மற்றும் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்காகச் செயல்படுகின்றன. மாதவரத்தில் மாநில அளவிலான நீர்வாழ் உயிரினங்களின் சுகாதார மேலாண்மைக்கான ஆய்வகம், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நீர்வாழ் உயிரினங்களின் சுகாதார மேலாண்மைக்கான ஆய்வகம், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மீன்தர கண்காணிப்பு மற்றும் சான்றிதழுக்கான ஆய்வகம், மீன்வள முதுகலைப் பட்ட மேற்படிப்பு நிலையம், வாணியஞ்சாவடி வளாகம், சென்னையில் உள்ள மாநில அளவிலான மீன் தீவன சோதனை மற்றும் தரச்சான்றிதழ் பரிந்துரை ஆய்வகம் இந்த சேவைகளை செய்து வருகிறது.*

### 16.11.3 மீனவர்களுக்கான பயிற்சிகள்

இப்பல்கலைக்கழகத்தால் தூத்துக்குடியில் ஆழ்கடல் மீன்பிடி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கப்பல் வடிவமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. 2022-23 ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல், படகுகள் வழிசெலுத்துதல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் நடத்தப்பட்ட பயிற்சிகளின்மூலம் 150 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

### 16.11.4 மீன்வளர்ப்போர் மற்றும் தொழில் முனைவோர்களுக்காக வழங்கப்படும் சேவைகள்

மீன்வளர்ப்பு பற்றிய நடப்பு நிகழ்வுகளை புரிந்துகொள்வதற்காக மீன் வளர்ப்போர் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு இப்பல்கலைக்கழகத்தால் 'மீன்வளச் சுடர்' என்ற காலாண்டு தமிழ் இதழ் பிரசுரிக்கப்படுகிறது.

மீன் வளர்ப்பில் மற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு மீன் விவசாயிகளின் வெற்றிக் கதைகள் வெளியிடப்படுகின்றன. பல்கலைக்கழகத்தில் அனைத்து உறுப்பு மையங்களில் இணையவழி பயிற்சி மற்றும் கருத்தரங்கு உள்ளிட்ட 78 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, 5224 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். வேளாண் அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம் மூலமாக வேளாண்மை மற்றும் கால்நடை பாடப் பிரிவுகளில் 71 பயிற்சிகள் நடத்தப்பட்டு 3819 பயனாளிகள் பயனடைந்தனர்.

## 17. எதிர்காலத் திட்டங்கள்

மீன்வளப் பிரிவின் விரிவான வளர்ச்சிக்கான அரசின் எதிர்காலத் திட்டங்கள்:

- சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்மூலம் மாநில அரசு மீனவர்களின் நலனை உறுதி செய்யும்.
- அதிநவீனத் தகவல் தொடர்பு சாதனங்களைத் தொடர்ந்து மீனவர்களுக்கு வழங்குவதன்மூலம், மீன்பிடிக்கும்போது அவர்களது பாதுகாப்பினை உறுதி செய்யும்.
- கடல் மீன்வளத்தின் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் நோக்குடன், கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் கடற்பாசி வளர்ப்பு போன்ற கடல்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகள் மாற்று வாழ்வாதார வாய்ப்பாக ஊக்குவிக்கப்படும்.

- கடற்பாசி உற்பத்தி மற்றும் கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்கள் உற்பத்தி செய்திட ஏதுவாக பிரத்யேக உட்கட்டமைப்பு வசதிகளை அரசு உருவாக்கும்.

- மீன்களைச் சுகாதாரமாக கையாளுதல், தொடர் குளிர்காப்பினைப் பேணுதல், மதிப்புக் கூட்டுதல், சிறந்த மீன்வளர்ப்பு முறைகள் போன்றவற்றில் மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, திறன் மேம்பாடு அடைய வழிவகை செய்யப்படும்.

- கடலோர மீன்வளர்ப்பு நடவடிக்கைகளான நண்டு கொழுக்க வைத்தல், குளங்களில் கடல் மீன் வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் நண்டு வளர்த்தல் போன்றவை ஊக்குவிக்கப்பட உள்ளன.

- மீன் வளர்ப்பு, கடல்வாழ் உயிரின வளர்ப்பு, மீன் பதப்படுத்துதல் போன்றவற்றில் டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் பயன்பெறும் வகையில் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

- கரையோர தரிசு நிலங்களை முறையாக பயன்படுத்தி, கடலோர மீன் வளர்ப்பின்மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 'நில குத்தகை கொள்கை' உருவாக்கப்படும்.

- மீன்களைச் சுகாதாரமாக கையாளுதல், தரம் உறுதி செய்தல் மற்றும் மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையைப் பெறுதல் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, உலகத் தரம் வாய்ந்த மீன்பிடித் துறைமுகங்கள், கடற்கரை வசதிகள் மற்றும் தொடர் குளிர்காப்பு வசதிகள் தமிழ்நாட்டின் கடற்கரை முழுவதும் ஏற்படுத்தப்படும்.

- சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை திறம்பட செயல்படுத்துவதன்மூலம் மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்து நிலையான மேலாண்மை செய்யப்படும்.

- மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட அரசு உறுதியாக உள்ளது. இதற்காக

மீன்குஞ்சு உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், அனைத்து நீர்வள ஆதாரங்களையும் மீன் வளர்ப்புக்கு திறம்படப் பயன்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

- மாநிலத்தின் நாட்டின மீன் வகைகளைப் பாதுகாக்க முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. ஆறுகள் மற்றும் பிற இயற்கை நீர்நிலைகளில் நாட்டின மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதன்மூலம் அவற்றின் இருப்பு அதிகரிக்கப்படும்.
- மீன் சந்தைப்படுத்துதலை திறம்பட மேற்கொள்ளவும், உள்நாட்டு மீன்களுக்கு சிறந்த விலையைப் பெற்றிடவும், குழு அடிப்படையிலான மீன்வளர்ப்பு ஊக்குவிக்கப்படும்.
- செயற்கை பவளப்பாறைகள் நிறுவுதல் மற்றும் கடலில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் போன்ற மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் பெருமளவில் மேற்கொள்ளப்படும்.

## 18. நிதி ஒதுக்கீடு (2023-2024)

*2023-2024 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ.1,358.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.618.41 கோடி வருவாய் செலவினமாகவும், ரூ.739.85 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.*

## 19. நிறைவுரை

*மீனவர்களின் நலனைப் பாதுகாப்பதுடன், கடல், உவர்நீர் மற்றும் உள்நாட்டு மீன்வளப் பிரிவுகளில் இருந்து நீடித்த முறையில் மீன் உற்பத்தியை உறுதி செய்வதற்கான மீன்வள ஆதாரங்களை உருவாக்குவதற்கு அரசு அதிமுக்கியத்துவம் அளிக்கிறது. பாக் வளைகுடாவின் பாரம்பரிய மீன்பிடி பகுதிகளில் நமது மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமையை மீட்டெடுப்பது அரசின் முதன்மையான குறிக்கோள்களுள் ஒன்றாக உள்ளது. பாக் வளைகுடா பகுதியில் தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி உபகரணங்கள் மீதான இலங்கை அரசின் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*2023 ஏப்ரல் 5]*

*மீன்வளப் பிரிவில் நிரந்தர வளர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு, கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்ற மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. அதேசமயம், பாக் வளைகுடா மாவட்டங்கள் மற்றும் பிற கடலோர மாவட்டங்களில், மீன்களுக்கு உணவு கிடைக்கும் இடமாகவும், இனப்பெருக்கம் செய்வதற்கு உகந்த இடமாகவும் திகழும் செயற்கைப் பவளப்பாறைகளை பெருமளவில் நிறுவுவதற்கான அறிவிப்பினை அரசு வெளியிட்டுள்ளது. இதன்மூலம், கரையோரப் பகுதிகளில் மீன்வளம் பெருமளவில் அதிகரித்து, நாட்டுப்படகு மீனவர்கள் தங்கள் மீனவ கிராமங்களுக்கு அருகிலேயே போதிய அளவில் மீன்களைப் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும்.*

*தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க, அனைத்து பொது நீர்நிலைகளிலும் தரமான மீன் விரலிகளை இருப்பு செய்திடும் வகையில், உள்நாட்டு மீன் குஞ்சு உற்பத்திக்கும் தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கான, அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. உள்நாட்டு மீன்வளர்ப்பில், அதிகரித்து வரும், மரபணு மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா (GIFT) போன்ற வேகமாக வளரும் மீன் குஞ்சுகளுக்கான தேவையைப் பூர்த்தி செய்வதிலும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. மீன்வளப் பிரிவில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை மீன்வளர்ப்போருக்கு கொண்டு செல்வதற்காக, நீர் மறு சுழற்சிமுறை மீன்வளர்ப்பு (RAS) மற்றும் உயிர்க்கூழ்ம (Biofloc) மீன் வளர்ப்பு போன்றவற்றிற்கு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.*

*தமிழ்நாட்டின் கடல் உணவு ஏற்றுமதியை இரட்டிப்பாக்கும் நோக்குடன், கடலோர தரிசு நிலங்களை இறால் வளர்ப்புக்கு பயன்படுத்தும் அதே வேளையில், உவர்நீர் மீன் வளர்ப்பைப் பெரிய அளவில் விரிவுபடுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையை அரசு கொண்டுள்ளது. மீனவர்கள் தங்கள் மீன்பிடிப் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்குத் தேவையான தொடர் குளிர்காப்பு வசதிகள் மற்றும் பிற கடலோர உட்கட்டமைப்பு வசதிகள், நன்கு திட்டமிடப்பட்டு முறையாக செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக, அரசின் தலைசிறந்த எதிர்காலத் திட்டமிடல் மற்றும் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள துல்லியம் ஆகியன, மீன்வளப் பிரிவில் அரசின் தொலைநோக்கு வளர்ச்சி இலக்குகளை விரைவில் அடைய வழிவகுக்கும்.*

[2023 ஏப்ரல் 5

## பிற்சேர்க்கை

## 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

| திட்டம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | | | (ரூ. இலட்சத்தில்) |
| ஊதியம் | 8,792.51 | 0.00 | 0.00 | 8,792.51 |
| நிவாரணத் திட்டங்கள்(மாநில நிதி) | 23,665.40 | 0.00 | 0.00 | 23,665.40 |
| பிற திட்டங்கள் (மாநில மற்றும் ஒன்றிய அரசு நிதியுதவி) | 4,456.31 | 0.00 | 0.00 | 4,456.31 |
| நீர்வள நிலவளத்திட்டம் (உலக வங்கி திட்டம்) | 326.19 | 0.00 | 0.00 | 326.19 |
| பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்(ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்களிப்புத் திட்டம்) | 19,381.81 | 0.00 | 0.00 | 19,381.81 |
| தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் | 0.77 | 0.00 | 0.00 | 0.77 |
| தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் | 5,218.05 | 0.00 | 0.00 | 5,218.05 |
| உட்கட்டமைப்பு (மாநில நிதி) | 0.00 | 800.03 | 0.00 | 800.03 |
| உட்கட்டமைப்பு – மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்களிப்புத் திட்டம்) | 0.00 | 36,185.01 | 0.00 | 36,185.01 |
| உட்கட்டமைப்பு –நபார்டு வங்கியின் நிதியுதவி | 0.00 | 37,000.01 | 0.00 | 37,000.01 |
| **மொத்தம்** | **61,841.04** | **73,985.05** | **0.00** | **1,35,826.09** |

———————

# இணைப்பு IV

*(179 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

# மானியக் கோரிக்கை எண் 8-பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

# கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

## 1. முன்னுரை

*வேளாண் தொழில்களில் பால் உற்பத்தி முதன்மையாக இருந்து வருவதுடன், இந்திய நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியப் பங்களிப்பையும் அளித்து வருகிறது. கால்நடைத் துறையில் பால் உற்பத்தித் தொழில் இன்றியமையாத பங்கினை வகித்து வருகின்றது.மேலும், பால் உற்பத்தித் துறையானது கிராமப்புறங்களில் உள்ள நிலமற்ற, சிறு, குறு விவசாயிகள் மற்றும் பெண்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதில் முதன்மைப் பங்காற்றுகிறது.*

*கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் சுமார் 221.06 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து தொடர்ந்து உலகளவில் மிகப் பெரிய பால் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழ்ந்து வருகிறது.கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் தொடர்ந்து பல திட்டங்கள், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாகப் பால் உற்பத்தியும் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில் அதற்கு முந்தைய ஆண்டினை விட 5.29% பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.இந்தியாவில் கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் தனி நபருக்குக் கிடைக்கும் (percapita availability) பாலின் அளவு 444 கிராம் ஆக உள்ளது.*

*கிராமப்புறத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகள், குறிப்பாக வேளாண்மை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைகளின் கூட்டுறவுச் சங்கங்கள், சமூகம் சார்ந்த அணுகுமுறைமூலம் மக்களின் வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. மேலும், கூட்டுறவுத் துறையே கிராமப்புற பொருளாதாரத்திற்கு இன்றியமையாதப் பங்களிப்பினை ஆற்றி வருகின்றது.*

பால் பண்ணைத் தொழிலானது ஆண்டு முழுவதும் நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்கிறது. மேலும், பால் உற்பத்தித் துறையானது சிறு, குறு விவசாயிகள் மற்றும் பெண்களையும் உள்ளடக்கிய, நிலையான வளர்ச்சியை அளிக்கிறது.

**1.1. தமிழ்நாட்டின் பால்வளம்**

2022 ஆம் ஆண்டு கால்நடை பராமரிப்புத் துறையின் புள்ளிவிவரப்படி, 2021-2022 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 10.10 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்துள்ளது. இது நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தியில் 4.57% ஆகும். தமிழ்நாட்டில் பால் உற்பத்தியானது 2020-2021 ஆம் ஆண்டைவிட 4.75% அதிகரித்துள்ளது.

மேலும், கடந்த 2019-2020 ஆம் ஆண்டில் தனி நபருக்குக் கிடைக்கும் (percapita availability) பாலின் அளவு 316 கிராமாக இருந்த நிலையிலிருந்து 2021-2022 ஆம் ஆண்டில் 362 கிராமாக அதிகரித்துள்ளது.

**2. பால்வளத் துறை - ஒரு கண்ணோட்டம்**

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியினை ஒருங்கிணைக்கும் நோக்கில், கடந்த 1958 ஆம் ஆண்டு பால்வளத் துறை தொடங்கப்பட்டது.

கூட்டுறவுத் துறையிலிருந்து கடந்த 1-8-1965-ல் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான அதிகாரங்கள் பால்வளத் துறைக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1972 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் (Companies Act), துறையின் வணிக நடவடிக்கைகளை மேலாண்மை செய்யும் நோக்கில் தமிழ்நாடு பால் உற்பத்தி வளர்ச்சிக் கழகம் (TNDDC) உருவாக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, பால் கூட்டுறவுத் துறையில் மூன்றடுக்கு பால் கூட்டுறவு முறையை பின்பற்றத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு பால் உற்பத்தி வளர்ச்சிக் கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு மாற்றப்பட்டது.

பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறையின் ஆணையர், பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பதிவாளராகவும்,

*2023 ஏப்ரல் 5*]

*பால்வளத் துறையின் தலைமை அதிகாரியாகவும் செயல்பட்டு வருகிறார்.*

## 2.1. பால்வளத் துறையின் நிர்வாகக் கட்டமைப்பு

*தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்கீழ் பால்வளத் துறை செயல்பட்டு வருகிறது.*

*ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்களுக்கு அலுவலக மற்றும் நிர்வாக பணிகளில் உதவியாக ஒரு துணைப் பால் ஆணையர் (கூட்டுறவு), ஒரு துணைப் பதிவாளர் (தலைமையகம்) மற்றும் ஒரு துணைப் பதிவாளர் (சட்டப் பணிகள்) ஆகியோர் செயல்படுகின்றனர்.*

*மாவட்ட அளவில், 38 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய 29 சரக அலுவலகங்கள் துணைப் பதிவாளர் (பால்வளம்) அவர்களது தலைமையில் செயல்பட்டு வருகின்றன. மேலும் கூட்டுறவு சார் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் களப் பணியாளர்களாக சரக அளவில் பணிபுரிந்து வருகின்றனர்.*

## 2.2. பால்வளத் துறையின் செயல்பாடுகள்

*பால்வளத் துறை, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் 1988—ன்கீழ் புதிய பால் கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்தல், செயலிழந்த பால் கூட்டுறவுச் சங்கங்களை புதுப்பித்தல்/மறுமலர்ச்சி செய்தல், பால் கூட்டுறவுச் சங்கங்களை ஆய்வு செய்தல், கூட்டுறவுச் சங்க தகராறுகளைத் தீர்த்து வைத்தல், இணையம், ஒன்றியம் மற்றும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குரிய நிர்வாகக் குழுவிற்கு தேர்தல் நடத்துதல், அறிவுரைகள் வழங்குதல், தணிக்கை அறிக்கை மற்றும் தனி அறிக்கைகளின்மீது பொது நல நோக்கில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது.*

## 2.3. பால்வளத் துறையின் நோக்கங்கள்

- *புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பால் நுகர்வோர்கள் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் பதிவு செய்தல்*

[2023 ஏப்ரல் 5

- தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுமூலம் பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தில் பால் உற்பத்தியாளர்களின் பங்களிப்பை உறுதி செய்தல்
- பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு உரிய விலை வழங்குவதை உறுதி செய்தல்
- பால் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத பகுதிகளில் பால் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல்
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் தர நிலைகளின்படி நுகர்வோருக்கு நியாயமான விலையில் பதப்படுத்தப்பட்ட பால் கிடைப்பதை உறுதி செய்தல்
- நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மைமூலம் பால் கூட்டுறவுகளின் நம்பகத் தன்மையினை உறுதி செய்தல்
- பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்க ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல்
- பால் உற்பத்தியாளர்களுக்குப் பல்வேறு சலுகைகள் மற்றும் ஊக்கத் தொகைகளை வழங்குதல்
- அமைப்புசாரா பால் உற்பத்தியாளர்களைக் கூட்டுறவு வரம்பிற்குள் கொண்டு வருதல்
- பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குத் தீவனம் மற்றும் சுகாதாரச் சேவை போன்ற பல்வேறு சேவைகளை வழங்குதல்
- தொடக்கச் சங்கங்கள் அளவில், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணைய அளவில் பல்வேறு பால் பண்ணை நடவடிக்கைகளில் சமீபத்திய புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்

### 3. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்புகள்

தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டிலிருந்து மூன்றடுக்கு பால் கூட்டுறவுமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. பால் கூட்டுறவு அமைப்பானது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு இயக்குநர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

*2023 ஏப்ரல் 5*]


*கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மூன்றடுக்கு அமைப்பின் அடிப்படை அமைப்பாக முதல்நிலையில் உள்ளது.*

*மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூன்றடுக்குக் கூட்டுறவு அமைப்பில் மத்திய நிலையில் உள்ளது. மாவட்ட அளவில் அவற்றின் அதிகார எல்லையில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களாக உள்ளன.*

*மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் அனைத்து மாவட்ட ஒன்றியங்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஓர் உயர்நிலை அமைப்பாகும்.*

*அனைத்து பால் கூட்டுறவுச் சங்கங்களும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், 1988-ன்கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.*

**பால் கூட்டுறவுச் சங்கங்களின் மூன்றடுக்கு அமைப்பு**



## 4. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

மூன்று அடுக்கு கூட்டுறவு அமைப்பின் முதல் நிலையில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கிராம அளவில் உருவாக்கப்படுகின்றன.

### 4.1. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு

முதுநிலை ஆய்வாளர்கள் (பால்) அல்லது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் விரிவாக்க அலுவலர்கள் கள ஆய்வை மேற்கொண்டு, கறவைகளின் எண்ணிக்கை, அப்பகுதியில் உள்ள பால் உற்பத்தித் திறன், பாலின் தரம், இலாபம், பால் வழித்தடம் மற்றும் பயண நேரம் ஆகியன குறித்து ஆய்வு செய்வார்கள்.

அலுவலர்களின் வழிகாட்டுதலோடு, புதிய பால் கூட்டுறவுச் சங்கத்தை பதிவு செய்வதற்காக, குறிப்பிட்ட கிராமத்தில் வசிக்கும் குறைந்தபட்சம் 25 தகுதி வாய்ந்த நபர்கள், பால் கூட்டுறவுச் சங்கத்தை பதிவு செய்ய கோரி சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணைப் பதிவாளர் (பால்வளம்) அவர்களுக்கு விண்ணப்பத்தை அளிக்க வேண்டும்.

மேலும், முன்மொழியப்பட்ட சங்கத்தின் விவகார எல்லை மற்றொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாட்டு எல்லையுடன் ஒன்றுடன் ஒன்று குறுக்கிடக் கூடாது. இருப்பினும் ஆதி திராவிடர்/ பழங்குடியினர் மற்றும் பெண்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், பொது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க விவகார எல்லைக்குள் அச்சங்கத்தின் பால் உற்பத்திக்கு எந்தவொரு குந்தகம் விளைவிக்காத வகையில் பதிவு செய்யப்படுகிறது.

சங்கம் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள பால் உற்பத்தியாளர்களிலிருந்து ஒரு முதன்மை அமைப்பாளர் நியமிக்கப்படுவார். மேலும், உறுப்பினர்கள் அப்பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதற்கான குடியிருப்புக்கான ஆதாரம், உள்ளூர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் நிலுவையின்மைச் சான்று உள்ளிட்ட விவரங்களுடன் முதன்மை அமைப்பாளர் முழு வடிவில் முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டும்.

*2023 ஏப்ரல் 5*]

*அத்தகைய முன்மொழிவு கிடைத்ததும், முன்மொழிவு பெறப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் துணைப் பதிவாளர் (பால்வளம்) சங்கத்தைப் பதிவு செய்வார். எந்தவொரு குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி முன்மொழிவு துணைப் பதிவாளர் (பால்வளம்) அவர்களால் 120 நாட்கள் கால எல்லைக்குள் திருப்பித் தரப்படாவிட்டால், அது பதிவு செய்யப்படவில்லை என்றாலும், துணைப் பதிவாளர் (பால்வளம்) அவர்களால், மேற்படி காலவரம்பின் கடைசி தேதியில் அத்தகைய சங்கம் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.*

**4.2. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள்**

*தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாட்டு எல்லைகளில் வசிக்கும் பால் உற்பத்தியாளர்கள் அச்சங்கத்தில் உறுப்பினராகத் தகுதியுடையவராவர்.*

*மகளிர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், சங்கத்தின் செயல்பாட்டு எல்லைகளில் வசிக்கும் பெண்கள் அச்சங்கத்தில் உறுப்பினராகத் தகுதியுடையவராவர்.*

*ஆதி திராவிடர்/பழங்குடியினர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதி திராவிடர்/பழங்குடியினர் அச்சங்கத்தில் உறுப்பினராகத் தகுதியுடையவராவர்.*

**4.3. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழு**

*ஒவ்வொரு தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் சங்கத் தலைவரின் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றன. நிர்வாகக் குழுத் தேர்தலில் போட்டியிட, பால் உற்பத்தியாளர்கள் அந்தந்தச் சங்கத்திற்கு ஓர் ஆண்டில் 300 லிட்டர் பாலை ஊற்றியிருக்க வேண்டும் அல்லது 120 நாட்கள் தொடர்ந்து பால் ஊற்றியிருக்க வேண்டும்.*

*தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் அமைப்பு*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

| வ.எண் | வகை | இயக்குநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பொது | 6 |
| 2. | பெண்கள் | 3 |
| 3. | ஆதி திராவிடர்/ பழங்குடியினர் | 2 |
| | மொத்தம் | 11 |

**4.4. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள்**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்குகின்றன.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஈவுத்தொகை, புரவுக்கான ஆதரவுத் தள்ளுபடி, போனஸ் போன்ற பலன்களைச் சங்கத்தின் இலாபத்திலிருந்து வழங்குகிறது.

சங்க உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு மருத்துவச் சேவைகள், கால்நடைத் தீவனம் மற்றும் இதர உள்ளீடுகள் வழங்குவதை உறுதி செய்கிறது.

**4.5. செயலிழந்த தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைப் புத்துயிரூட்டுதல்**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் முறையில்லா நிர்வாகம் மற்றும் இதர பிரச்சினைகளால், உறுப்பினர்கள் நீண்ட நாட்களாகப் பால் ஊற்றாமலிருந்தால் சம்பந்தப்பட்ட தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செயலிழக்கிறது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு உறுப்பினர்கள் பால் ஊற்ற ஆரம்பித்தவுடன் செயலற்ற சங்கம் புத்துயிர் பெறும்.

2023 ஏப்ரல் 5]

2022-2023 ஆம் ஆண்டில், 116 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயலற்ற நிலையிலிருந்து புத்துயிர் பெற்று செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

தற்போது கிராம அளவில் 9,673 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பொது | | ஆதி திராவிடர் | | பெண்கள் | | செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை | செயலிழந்த சங்கங்களின் எண்ணிக்கை | மொத்த சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1 | திருவள்ளூர் | 129 | 12 | 8 | 01 | 57 | 08 | 194 | 20 | 214 |
| 2 | காஞ்சிபுரம் | 50 | 04 | 3 | 0 | 27 | 02 | 80 | 6 | 86 |
| 3 | செங்கல்பட்டு | 120 | 13 | 8 | 0 | 105 | 11 | 233 | 24 | 257 |
| 4 | வேலூர் | 113 | 17 | 48 | 14 | 1 | 01 | 162 | 32 | 194 |
| 5 | ராணிப்பேட்டை | 92 | 11 | 7 | 0 | 30 | 09 | 129 | 20 | 149 |
| 6 | திருப்பத்தூர் | 37 | 04 | 1 | 0 | 1 | 02 | 39 | 6 | 45 |
| 7 | திருவண்ணாமலை | 558 | 25 | 10 | 04 | 50 | 20 | 618 | 49 | 667 |
| 8 | விழுப்புரம் | 184 | 11 | 8 | 0 | 75 | 15 | 267 | 26 | 293 |
| 9 | கள்ளக்குறிச்சி | 267 | 12 | 4 | 0 | 76 | 07 | 347 | 19 | 366 |
| 10 | கடலூர் | 143 | 07 | 4 | 0 | 55 | 05 | 202 | 12 | 214 |
| 11 | கோயம்புத்தூர் | 272 | 15 | 1 | 0 | 80 | 07 | 353 | 22 | 375 |
| 12 | ஈரோடு | 432 | 15 | 1 | 0 | 81 | 02 | 514 | 17 | 531 |
| 13 | திருப்பூர் | 357 | 32 | 2 | 0 | 72 | 08 | 431 | 40 | 471 |
| 14 | தருமபுரி | 223 | 27 | 1 | 0 | 43 | 06 | 267 | 33 | 300 |
| 15 | கிருஷ்ணகிரி | 172 | 35 | 2 | 0 | 51 | 09 | 225 | 44 | 269 |
| 16 | கரூர் | 130 | 15 | 1 | 0 | 20 | 04 | 151 | 19 | 170 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 304 | 28 | 2 | 0 | 44 | 06 | 350 | 34 | 384 |

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பொது | | ஆதி திராவிடர் | | பெண்கள் | | செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை | செயலிழந்த சங்கங்களின் எண்ணிக்கை | மொத்த சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 18 | அரியலூர் | 64 | 05 | 2 | 01 | 29 | 03 | 95 | 9 | 104 |
| 19 | பெரம்பலூர் | 164 | 05 | 1 | 0 | 33 | 01 | 198 | 6 | 204 |
| 20 | திண்டுக்கல் | 174 | 34 | 8 | 0 | 20 | 04 | 202 | 38 | 240 |
| 21 | மதுரை | 523 | 102 | 14 | 0 | 191 | 31 | 728 | 133 | 861 |
| 22 | தேனி | 363 | 51 | 38 | 02 | 116 | 12 | 517 | 65 | 582 |
| 23 | தஞ்சாவூர் | 202 | 06 | 2 | 0 | 92 | 02 | 296 | 8 | 304 |
| 24 | திருவாரூர் | 29 | 01 | 1 | 0 | 24 | 02 | 54 | 3 | 57 |
| 25 | நாகப்பட்டினம் | 22 | 01 | 1 | 0 | 27 | 0 | 50 | 1 | 51 |
| 26 | மயிலாடுதுறை | 26 | 0 | 1 | 0 | 36 | 01 | 63 | 1 | 64 |
| 27 | புதுக்கோட்டை | 335 | 64 | 1 | 0 | 23 | 01 | 359 | 65 | 424 |
| 28 | சேலம் | 690 | 17 | 4 | 0 | 117 | 02 | 811 | 19 | 830 |
| 29 | நாமக்கல் | 454 | 14 | 2 | 0 | 62 | 05 | 518 | 19 | 537 |
| 30 | சிவகங்கை | 349 | 22 | 3 | 0 | 57 | 04 | 409 | 26 | 435 |
| 31 | இராமநாதபுரம் | 118 | 11 | 2 | 0 | 16 | 01 | 136 | 12 | 148 |
| 32 | நீலகிரி | 90 | 02 | 1 | 0 | 4 | 0 | 95 | 2 | 97 |
| 33 | திருநெல்வேலி | 131 | 12 | 3 | 0 | 32 | 03 | 166 | 15 | 181 |
| 34 | தென்காசி | 56 | 04 | 2 | 0 | 9 | 02 | 67 | 6 | 73 |
| 35 | கன்னியாகுமரி | 50 | 01 | 1 | 0 | 2 | 0 | 53 | 1 | 54 |
| 36 | தூத்துக்குடி | 131 | 12 | 3 | 0 | 43 | 10 | 177 | 22 | 199 |
| 37 | விருதுநகர் | 80 | 15 | 9 | 01 | 28 | 09 | 117 | 25 | 142 |
| | **மொத்தம்** | **7634** | **662** | **210** | **23** | **1829** | **214** | **9673** | **899** | **10572** |

மேலும், 12,584 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கலைத்தல் நடவடிக்கையில் உள்ளன.

*2023 ஏப்ரல் 5*]

## 4.6. பால் கொள்முதல்

கிராம அளவில் *9,673* தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் *3.99* இலட்சம் உறுப்பினர்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு பால் கொள்முதல் செய்யப்படுகிறது:

| வ. எண் | மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பெயர் | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க அளவில் பால் கொள்முதல் |
|---|---|---|
| *1* | காஞ்சிபுரம்—திருவள்ளூர் | *1,20,950* |
| *2* | விழுப்புரம் | *49,886* |
| *3* | கள்ளக்குறிச்சி | *1,38,313* |
| *4* | கடலூர் | *52,516* |
| *5* | வேலூர் | *1,16,022* |
| *6* | திருப்பத்தூர் | *22,382* |
| *7* | திருவண்ணாமலை | *2,78,220* |
| *8* | தருமபுரி | *1,37,954* |
| *9* | கிருஷ்ணகிரி | *91,222* |
| *10* | சேலம் | *5,61,228* |
| *11* | நாமக்கல் | *1,45,141* |
| *12* | ஈரோடு | *2,06,153* |
| *13* | திருப்பூர் | *2,12,744* |
| *14* | கோயம்புத்தூர் | *1,54,135* |
| *15* | நீலகிரி | *16,875* |
| *16* | மதுரை | *1,74,590* |
| *17* | தேனி | *93,118* |
| *18* | திண்டுக்கல் | *81,254* |
| *19* | திருச்சி | *5,61,812* |
| *20* | கரூர் | *74,793* |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பெயர் | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க அளவில் பால் கொள்முதல் |
|---|---|---|
| 21 | தஞ்சாவூர் | 1,20,531 |
| 22 | புதுக்கோட்டை | 66,453 |
| 23 | சிவகங்கை | 89,767 |
| 24 | விருதுநகர் | 38,141 |
| 25 | திருநெல்வேலி | 47,746 |
| 26 | தூத்துக்குடி | 48,465 |
| 27 | கன்னியாகுமரி | 38,048 |
| | **மொத்தம்** | **37,38,457** |

### 4.7. பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோருக்குப் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட முதன்மை நிலை சங்கங்களாகும்.

நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்/மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிடமிருந்து பால் மற்றும் பால் பொருட்களைக் கொள்முதல் செய்து, பால் அட்டைகள்மூலம் சலுகை விலையில் விற்பனை செய்து வருகின்றன. பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்த விற்பனையாளர்களாகவே கருதப்படுகின்றனர்.

மாநிலம் முழுவதும் 58 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், 48 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகமானது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

*2023 ஏப்ரல் 5*]

## 4.8. தணிக்கை

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் நிதித் துறையின்கீழ் உள்ள பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்பட்டு, அதன் அறிக்கை ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

தணிக்கை அறிக்கையின்படி, இலாபத்தில் உள்ள சங்கங்களின் இலாபத் தொகையானது உறுப்பினர்களுக்குப் பல்வேறு விதமான ஊக்கத் தொகையாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

## 5. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

மூன்றடுக்கு அமைப்பு முறையில் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது மத்திய நிலையில் உள்ளது.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழகத்தில் தற்போது 27 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், சென்னை தவிர்த்து 37 வருவாய் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

## 5.1. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நிர்வாகக் குழு

மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தலைவர் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நிர்வாகக் குழு தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவர்கள்.

17 தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள், 2 இணைத்தெரிவு இயக்குநர்கள் மற்றும் 7 செயல் இயக்குநர்கள் உட்பட மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் இயக்குநர்கள் குழுவின் மொத்த எண்ணிக்கை 26 ஆகும்.

[2023 ஏப்ரல் 5

**மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நிர்வாகக் குழுவின் அமைப்பு**

| வ. எண் | இயக்குநர்கள் | இயக்குநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள்** | |
| 1 | பொது | 9 |
| 2 | பெண்கள் | 5 |
| 3 | ஆதி திராவிடர்/பழங்குடியினர் | 3 |
| | **இணைத்தெரிவு இயக்குநர்கள்** | |
| 4 | பால் பண்ணைத் தொழில்நுட்பம் அல்லது பால் பண்ணை பொறியியல் துறையில் அனுபவம் பெற்றவர் | 1 |
| 5 | கால்நடை மருத்துவயியலில் அனுபவம் பெற்றவர் | 1 |
| | **செயல் இயக்குநர்கள்** | |
| 6 | தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் பிரதிநிதி | 1 |
| 7 | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பிரதிநிதி | 1 |
| 8 | மத்தியக் கூட்டுறவு வங்கியின் பிரதிநிதி | 1 |
| 9 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பிரதிநிதி | 1 |
| 10 | கால்நடை பராமரிப்பு இயக்குநர், அவர்களின் பிரதிநிதி | 1 |
| 11 | சம்பந்தப்பட்ட துணைப் பதிவாளர் (பால்வளம்) | 1 |
| 12 | சம்பந்தப்பட்ட மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பொது மேலாளர் | 1 |
| | **மொத்தம்** | **26** |

*2023 ஏப்ரல் 5*]

*பொது பிரிவில் தேர்ந்தெடுக்கப்படும் 9 நிர்வாகக் குழு இயக்குநர்கள் ஆணையர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் 9 தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

## 5.2. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் செயல்பாடுகள்

- *மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு உள்ளீட்டு சேவைகளை வழங்கி வருகின்றன*
- *ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன*
- *மாவட்ட அளவிலான திட்டங்களையும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன*
- *பால் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள்/ உறுப்பினர்களுக்குச் சுத்தமான பால் உற்பத்தி மற்றும் செயற்கை கருவூட்டல் போன்றவற்றில் பயிற்சியும் அளித்து வருகின்றன*
- *பால் வழித்தடங்களை உருவாக்கி, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து, அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பான் (பிஎம்சி)/குளிர்விக்கும் மையம்/ பால்பண்ணைக்கு பாலை கொண்டு சேர்க்கின்றன*
- *மாவட்ட பால் பண்ணைகளில் பாலைப் பதப்படுத்தி நுகர்வோருக்குத் தேவையான பல்வேறு பால் வகைகள் விற்பனை செய்யப்படுகிறது*
- *மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் ஊற்றப்படும் பாலின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் பாலுக்கான தொகையை வழங்குகிறது*
- *பால் கையாளும் திறனை அதிகரிக்க, புதிய உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல்*

- ➢ மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தங்களது பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி தேவைபோக மீதமுள்ள உபரி பாலினை இணைய (TCMPF) பால் பண்ணைகளுக்கு அனுப்பிவைக்கின்றன

- ➢ மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், உறுப்பினர்கள் ஊற்றும் பாலின் அளவுக்கேற்ப அதன் உறுப்பினர் சங்கங்களுடன் ஈட்டும் இலாபத்தை பல்வேறு விதமாக ஊக்கத் தொகையாக பகிர்ந்து கொள்கின்றன

- ➢ மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கணக்குகள் பால் கூட்டுறவுத் தணிக்கை துறையால் தணிக்கை செய்யப்படுகின்றன

## 5.3. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்—சேவை மையங்கள்

### 5.3.1. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் பயிற்சி மையங்கள்

தூய பால் உற்பத்தி, சமச்சீர் தீவனம் வழங்கும் முறை, பசுந்தீவனப் பயிரிடுதல், கால்நடை மேலாண்மை மற்றும் இனப்பெருக்கம், உற்பத்திச் செலவைக் குறைத்தல் போன்ற தலைப்புகளில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு சங்கநிர்வாகம், சுகாதாரமான பால் கொள்முதல், தரப் பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இந்திய அரசின், பயிற்சி நிலையங்களைக் கண்காணிக்கும் குழுவால் (central monitoring unit) அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையங்கள், சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன.

விழுப்புரம், வேலூர் மற்றும் மாதவரத்தில் உள்ள பயிற்சி மையங்களை மேம்படுத்த, ஒன்றிய அரசால் தேசிய பசுக்கள் இயக்கத்தின்கீழ் (Rashtriya Gokul Mission) 100% மானிய உதவியாக ரூ.200 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 5]

## 5.3.2. கால்நடை தீவன உற்பத்தி ஆலை, ஈரோடு

கலப்புத் தீவனமானது வளரும் கன்றுகள், கிடாரிகள், பால் வற்றிய பசுக்கள், பால் உற்பத்தி செய்யும் பசுக்கள் மற்றும் கருவுற்ற பசுக்கள் ஆகியவற்றிற்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் வழங்குகிறது. துரித உடல் வளர்ச்சி, உடல் பராமரிப்பு, பால் உற்பத்தி, இனப்பெருக்கத் திறன் மற்றும் கறவை மாடுகளின் நோய் எதிர்ப்பு திறனைப் பேணுவதற்கு கலப்புத் தீவனம் அவசியமாகிறது.

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்ட உதவியுடன் ஈரோடு தீவன ஆலையின் உற்பத்தித் திறன் 150 மெட்ரிக் டன்னிலிருந்து 300 மெட்ரிக் டன் என்ற அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், கூடுதல் தீவன தேவையினைப் பூர்த்தி செய்ய விருதுநகர் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தில் நாளொன்றிற்கு 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட தீவன ஆலையுடன், தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றிற்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட தீவன ஆலை நிறுவ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் ஈரோடு கால்நடை தீவன ஆலையில் 81,047 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## 5.3.3. தாது உப்புக் கலவை உற்பத்தி ஆலைகள்

தாது உப்பு கலவையானது கறவை மாடுகளின் உடல் வளர்ச்சி, உடல் பராமரிப்பு, பால் உற்பத்தி, இனப்பெருக்க திறன் மற்றும் நோய் எதிர்ப்புத் திறனை பேணுவதற்கு அவசியமாகும்.

நாளொன்றுக்கு தலா 12 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட 5 தாது உப்புக் கலவை உற்பத்தி ஆலைகள் இயங்கி வருகின்றன. அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு (Area Specific) தாது உப்புக் கலவையினை உற்பத்தி செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருகின்றன.

தாது உப்புக் கலவை உற்பத்தி விவரம் பின்வருமாறு:

| வ.எண் | தாது உப்புக் கலவை ஆலைகள் | உற்பத்தி (மெ.டன்) |
|---|---|---|
| 1 | ஈரோடு | 10138 |
| 2 | விழுப்புரம் | 4180 |
| 3 | தூத்துக்குடி | 3748 |

| வ.எண் | தாது உப்புக் கலவை ஆலைகள் | உற்பத்தி (மெ.டன்) |
|---|---|---|
| 4 | திருச்சி | 4269 |
| 5 | கிருஷ்ணகிரி | 381 |

2022-2023 ஆம் ஆண்டில் இந்த ஆலைகளால் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 1683.32 மெட்ரிக் டன் தாது உப்புக் கலவையை ரூ.6.89 கோடிக்கு விற்பனை செய்துள்ளது.

### 5.3..4. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் வாரியான பால் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | கையாளும் அளவு | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | மொத்தம் |
| | | | | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 1 | 1,00,000 | 2 | 72,000 | 32 | 88,000 | 1,60,000 |
| 2 | விழுப்புரம் | 1 | 1,00,000 | — | — | 11 | 45,000 | 45,000 |
| 3 | கள்ளக்குறிச்சி | — | — | 1 | 1,00,000 | 30 | 1,20,000 | 2,20,000 |
| 4 | கடலூர் | — | — | 1 | 10,000 | 10 | 44,000 | 54,000 |
| 5 | வேலூர் | 1 | 1,50,000 | 2 | 80,000 | 30 | 1,00,000 | 1,80,000 |
| 6 | திருப்பத்தூர் | — | — | — | — | 9 | 34,000 | 34,000 |
| 7 | திருவண்ணாமலை | — | — | 2 | 1,50,000 | 82 | 2,55,500 | 4,05,500 |
| 8 | தருமபுரி | — | — | 1 | 50,000 | 34 | 1,28,000 | 1,78,000 |
| 9 | கிருஷ்ணகிரி | 1 | 2,00,000 | 1 | 10,000 | 11 | 48,000 | 58,000 |
| 10 | சேலம் | 1 | 5,00,000 | 1 | 1,30,000 | 87 | 3,32,500 | 4,62,500 |
| 11 | நாமக்கல் | — | — | 2 | 1,00,000 | 22 | 53,000 | 1,53,000 |

*2023 ஏப்ரல் 5]*

| வ.எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | கையாளும் அளவு | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | மொத்தம் |
| | | | | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | |
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *8* | *9* |
| 12 | ஈரோடு | 1 | 3,00,000 | 2 | 35,000 | 53 | 2,49,000 | 2,84,000 |
| 13 | கோயம்புத்தூர் | 1 | 5,00,000 | 3 | 1,20,000 | 17 | 82,000 | 2,02,000 |
| 14 | திருப்பூர் | — | — | 2 | 1,10,000 | 41 | 1,98,000 | 3,08,000 |
| 15 | நீலகிரி | 1 | 50,000 | 1 | 10,000 | 5 | 9,000 | 19,000 |
| 16 | மதுரை | 1 | 5,00,000 | — | — | 79 | 2,13,000 | 2,13,000 |
| 17 | தேனி | — | — | 1 | 1,00,000 | 2 | 7,000 | 1,07,000 |
| 18 | திண்டுக்கல் | 1 | 30,000 | 2 | 40,000 | 27 | 95,500 | 1,35,500 |
| 19 | திருச்சி | 1 | 1,50,000 | 2 | 1,50,000 | 66 | 2,18,500 | 3,68,500 |
| 20 | பாடாலூர் | 1 | 1,00,000 | — | — | — | — | — |
| 21 | கரூர் | — | — | 1 | 50,000 | 14 | 26,500 | 76,500 |
| 22 | தஞ்சாவூர் | 1 | 48,000 | 1 | 30,000 | 18 | 61,500 | 91,500 |
| 23 | புதுக்கோட்டை | 1 | 55,000 | — | — | 5 | 25,000 | 25,000 |
| 24 | சிவகங்கை | 1 | 50,000 | 1 | 10,000 | 15 | 63,000 | 73,000 |
| 25 | விருதுநகர் | 1 | 50,000 | 1 | 10,000 | 1 | 5,000 | 15,000 |
| 26 | திருநெல்வேலி | 1 | 1,00,000 | 2 | 80,000 | 3 | 15,000 | 95,000 |
| 27 | தூத்துக்குடி | — | — | 2 | 20,000 | 9 | 43,000 | 63,000 |
| 28 | கன்னியாகுமரி | 1 | 30,000 | — | — | — | — | — |
| | மொத்தம் | 18 | 30,13,000 | 34 | 14,67,000 | 713 | 25,59,000 | 40,26,000 |

**6. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமானது மாநில அளவிலான 3 அடுக்குக் கூட்டுறவு அமைப்பின் உச்ச அமைப்பாகும். இதில் மாநிலத்தில் உள்ள அனைத்து

மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமானது தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதியப்பட்ட மாநில அளவிலான சங்கம் ஆகும்.

**6.1 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நோக்கங்கள்**

- பால் உற்பத்தியாளர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பால் உற்பத்தி, பால் பதப்படுத்துதல், பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை ஆகியவற்றில் வளர்ச்சிக்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல்

- பால் பண்ணைத் தொழில் மேம்பாடு மற்றும் விரிவாக்கத்திற்கான உரிய நடவடிக்கைகள், கறவை மாடுகளின் பாதுகாப்பு மற்றும் மரபுவழி திறன் முன்னேற்றத்தின்மூலம் பால் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் மேம்படுத்துதல்

- தேவைப்படும்போது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு பால் பொருட்களை கொள்முதல் மற்றும் விநியோகம் செய்ய தேவையான தொழில்நுட்பம், நிர்வாகம், நிதி போன்ற சேவைகளை வழங்குவதற்கு உதவி புரிதல் மற்றும் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள அவசியம் ஏற்படும்பட்சத்தில் எந்தவொரு நிறுவனத்துடனும் ஒருங்கிணைந்து செயல்பட ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்

- புதிய சங்கங்கள் அமைக்க ஊக்குவித்தல் மற்றும் சங்க உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

- பால் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அல்லது மற்ற ஆதாரங்கள்மூலம் கொள்முதல் செய்யும்போது மாவட்ட ஒன்றியங்கள் பாதிக்காதவாறு பாலை பதப்படுத்தி மற்றும் பால் பொருட்களை உற்பத்தி செய்து ஆவின் என்ற வணிக பெயரில் விற்பனை மேற்கொள்ளலாம்

*2023 ஏப்ரல் 5*]

- பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்குத் தேவையான கால்நடை மருத்துவ வசதி, செயற்கைக் கருவூட்டல் வசதி, கலப்புத் தீவனம், தாது உப்புக் கலவை, காப்பீடு போன்ற பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு உதவுதல்

## 6.2 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாகக் குழு

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமானது ஒரு தலைவர் தலைமையில், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாகக் குழுத் தேர்தலில் போட்டியிட மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தகுதியுடையவர் ஆகிறார்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாகக் குழுவின் அமைப்பின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இயக்குநர்கள் | இயக்குநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள்** | |
| *1.* | பொது | *11* |
| *2.* | பெண்கள் | *6* |
| *3.* | ஆதி திராவிடர்/ பழங்குடியினர் | *4* |
| | **இணைத்தெரிவு இயக்குநர்கள்** | |
| *4.* | பால் பண்ணைத் தொழில்நுட்பம் அல்லது பால் பண்ணை பொறியியலில் அனுபவம் பெற்றவர். | *1* |
| *5.* | தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திலிருந்து நிதித் துறையில் அனுபவம் பெற்றவர் . | *1* |

| | **செயல் இயக்குநர்கள்** | |
|---|---|---|
| 6. | தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் பிரதிநிதி | 1 |
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவ வசதி இயக்குநரகத்தின் பிரதிநிதி | 1 |
| 8. | துணை பால் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டு ஆணையர் அலுவலகம் | 1 |
| 9. | இணையத்தின் நிர்வாக இயக்குநர் | 1 |
| | **மொத்தம்** | **27** |

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாக அலுவலகம் சென்னையில் உள்ள நந்தனத்தில் செயல்பட்டு வருகிறது.

**6.3. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் செயல்பாடுகள்**

சென்னை மாநகர நுகர்வோருக்குத் தேவையான பால் வகைகளான நிலைப்படுத்திய பால், இருமுறை சமன்படுத்திய பால், சமன்படுத்திய பால் மற்றும் நிறைகொழுப்பு பால் ஆகியவற்றை மாதவரம், அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் பால் பண்ணைகளில் பதப்படுத்தி, சிப்பமிட்டு விநியோகம் செய்து வருகிறது. நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் நீட்டிக்கப்பட்ட சேமிப்பு காலமுள்ள பாலை (UHT Milk Long Shelf life) தயாரிக்கின்ற ஆலை சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டிய பால் பொருட்களான ஐஸ்கிரீம், நொதிக்கப்பட்ட பால் பொருட்கள், இனிப்புகள், காரவகைகள், சாக்லேட் வகைகள் தயாரிக்கும் ஆலை அம்பத்தூரில் உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையத்தில் நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் பால் பவுடர் மற்றும் 12 மெட்ரிக் டன் வெண்ணெய் உற்பத்தித் திறன் கொண்ட பால் பண்ணை மற்றும் பால் பவுடர் உற்பத்தி ஆலை அமைந்துள்ளது.

*2023 ஏப்ரல் 5*]

*மதுரையில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைந்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து சென்னை மாநகர நுகர்வோருக்குத் தேவையான பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கத் தேவையான பாலை கொள்முதல் செய்து வருகிறது. சென்னை நகர பால் பண்ணைகள், அம்பத்தூர் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை, திருவண்ணாமலை பால் பவுடர் உற்பத்தி & பால் பண்ணை மற்றும் மதுரை ஐஸ்கிரீம் தயாரிக்கும் ஆலை ஆகியவை இணை நிர்வாக இயக்குநரால் நிர்வகிக்கப்படுகிறது.*

*பால் மற்றும் பால் பொருட்களைத் தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்தல், சமநிலையான விநியோகத்தைப் பராமரிக்க, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மாதாந்திர பால் உற்பத்தி மற்றும் பால் விநியோகத் திட்டம் (*Movement Plan*) தயாரித்து, கண்காணித்து வருகிறது. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உற்பத்தியாகும் உபரியான பாலை அதே ஒன்றியத்திலோ அல்லது மற்ற ஒன்றியங்களிலோ உருமாற்றம் செய்து, தேவைப்படும் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு வெண்ணெய் மற்றும் பால் பவுடர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் பால் பண்ணை சம்பந்தமான வளர்ச்சித் திட்டங்களை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புற பால் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படுத்துவதற்கான தொடர்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் பால் பணப் பட்டுவாடாவிற்கான நிதி தொய்வு ஏற்படும்பொழுது அவற்றிற்கு நிதியுதவி வழங்கி வருகிறது.*

*எருமை உறை விந்து நிலையம் (*BFSS*) மற்றும் ஈரோட்டில் உள்ள கறவை இன மேம்பாட்டுச் செயல் திட்டம் (*DIPA*) அலகுகள் மற்றும் நீலகிரியில் ஆவின் உறைவிந்து உற்பத்தி நிலையம் (*NJ&SF*) ஆகியவை இணையத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன.*

*இணையத்தின் போக்குவரத்துப் பிரிவு மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இணையத்தின் 50 பால் டேங்கர்கள் மூலம் (9*KL x *20, 15*KL x *30) தினமும் 4.5 இலட்சம் லிட்டர் பால் மாவட்ட ஒன்றியங்களிலிருந்து இணைய பயன்பாட்டிற்காகக் கொண்டு*

வரப்படுகிறது. மேலும், வெண்ணெய், பால் பவுடர் மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவை மாவட்ட ஒன்றியங்களிலிருந்து விநியோகத்திற்காகக் கொண்டு வரப்படுகிறது. மேலும், 75 இணைய வாகனங்கள் GPS செயலிமூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 400 தனியார் ஒப்பந்த பால் டேங்கர்கள் எதிர்வரும் காலங்களில் GPS செயலிமூலம் கண்காணிக்கப்படும்.

பால் பாக்கெட்டுகளைக் குளிர்ந்த வெப்ப நிலையிலேயே பாதுகாக்கக் காப்பிடப்பட்ட (Insulated) வாகனங்கள்மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

## 6.4. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் - சேவை மையங்கள்

### 6.4.1. ஆவின் உறைவிந்து உற்பத்தி நிலையம், நீலகிரி

சங்க பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு செயற்கைமுறைக் கருவூட்டலுக்குத் தேவையான உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்வதற்காக உறைவிந்து உற்பத்தி நிலையம், நீலகிரியில் 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டீன், ஃப்ரீசியன் ஆகிய காளை இனங்களிலிருந்து உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. பிறகு உறைவிந்துக் குச்சிகள் ஈரோட்டில் சேமிக்கப்பட்டு, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

தற்போது, இப்பண்ணையில் 132 காளைகள் வளர்ப்பில் உள்ளன. அக்காளைகளில் 72 பொலிகாளைகளிடமிருந்து விந்து சேகரிக்கப்படுகிறது. இவற்றுள், இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு ஜெர்சி மற்றும் இரண்டு ஹோல்ஸ்டீன்—ஃப்ரீசியன் இன பொலிகாளைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பொலிகாளை பண்ணையில் ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்படி, உயிர்பாதுகாப்பு (Biosecurity measures) வழிமுறைகளைப் பின்பற்றி பொலிகாளைகள் வளர்க்கப்பட்டு, தரமான உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் (2022–2023) பிப்ரவரி 2023 வரை 9.22 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் இப்பண்ணையில்

*2023 ஏப்ரல் 5]*

*உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடுத்த ஆண்டில் 2023–2024 ஆம் வருடம் இந்நிலையத்தில் 14 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.*

*இப்பண்ணை ISO 9001: 2015 என்ற தரச்சான்று பெற்ற நிறுவனம் ஆகும். மேலும், ஒன்றிய அரசின் உறைவிந்து நிலையங்களுக்கான தர ஆய்வுக் குழுவின் 'B' தர சான்றும் பெற்றுள்ளது.*

**6.4.2. உறைவிந்துக் குச்சிகள் விநியோக நிலையம், ஈரோடு**

*இந்திய அரசின் வழிகாட்டுதல்படி, உறைவிந்துக் குச்சிகள் விநியோக நிலையம், உறைவிந்து உற்பத்தி நிலையத்துக்குள்ளிருந்து செயல்படாமல் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி ஈரோட்டில் தனியாகச் செயல்பட்டு வருகிறது.*

*நடப்பாண்டில் (2022 – 23) பிப்ரவரி 2023 மாதம் வரை 9.58 இலட்சம் பசு உறைவிந்துக் குச்சிகள் மற்றும் 0.20 இலட்சம் எருமை உறைவிந்துக் குச்சிகள் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.*

**6.4.3. பொலிகாளைகளைத் தனிமைப்படுத்தும் நிலையங்கள்**

*பொலிகாளைகளைத் தனிமைப்படுத்த இரண்டு தனிமைப்படுத்தும் நிலையங்களில் ஒன்று, முன் தனிமைப்படுத்தும் நிலையம் (Pre—quarantine), ஆத்தூரிலும் மற்றொரு தனிமைப்படுத்தும் நிலையம் (Quarantine) ஈரோட்டிலும் செயல்படுகின்றன.*

*மரபுவழித் திட்டம் மற்றும் கள பால் உற்பத்தித் திறன் பதிவுத் திட்டங்கள்மூலம் பிறக்கும் சிறந்த மரபியல் திறனுள்ள காளைகள் மேற்கூறிய தனிமைப்படுத்தும் நிலையங்களில் வளர்க்கப்பட்டு, பின் உறைவிந்து உற்பத்தி நிலையம் நீலகிரி மற்றும் இதர பொலிகாளைப் பண்ணைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.*

**6.4.4. சிறந்த மரபியல் திறனுள்ள கிடாரி கன்றுகள் வளர்ப்பு நிலையம், கருமந்துறை,சேலம் மாவட்டம்.**

*மரபுவழித் திட்டம் மற்றும் கள பால் உற்பத்தித் திறன் பதிவுத் திட்டம்மூலம் பிறக்கும் அதிக இனப்பெருக்க மதிப்பீடு உள்ள சிறந்த மரபியல் திறனுள்ள கிடாரி கன்றுகள் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, இந்நிலையத்தில் வளர்க்கப்படுகின்றன.*

இக்கிடாரிகளைச் சிறந்த மரபியல் திறனுள்ள காளையின் உறைவிந்து கொண்டு கருவூட்டல் செய்து, பிறக்கும் காளைக் கன்றுகள் உறைவிந்து உற்பத்தி நிலையத்திற்கும், சிறந்த மரபுத் திறன் கொண்ட கிடாரிக் கன்றுகள் தேவைப்படும் பால் உற்பத்தியாளர்களுக்கு விலைக்கும் வழங்கப்படும்.

## 6.4.5. கறவையின மேம்பாட்டுத் திட்ட செயல்பாடுகள் (DIPA), ஈரோடு

உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்ய உயர் மரபுத்திறனுள்ள சிறந்த பொலிகாளைக் கன்றுகளை உற்பத்தி செய்து அவற்றை உறைவிந்து நிலையங்களுக்கு விநியோகித்தல் இத்திட்டப் பிரிவின் முக்கிய நோக்கம் ஆகும்.

இப்பிரிவின்கீழ், ஜெர்சி கலப்பின கள பால் உற்பத்தித் திறன் பதிவு திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் அதிக அளவில் பால் தரும் பசுக்கள் பதிவு செய்யப்பட்டு, அப்பசுக்களின் பால் உற்பத்தியினை தொடர்ச்சியாக 10 மாதங்கள் (மாத இடைவேளைகளில்) பதிவு செய்யப்படுகிறது. அந்தப் பதிவுகளின் அடிப்படையில் சிறந்த மரபியல் திறன் உள்ள பசுக்கள் தேர்வு செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட சிறந்த பசுக்களுக்குச் சிறந்த மரபுத் திறன் உள்ள பொலிகாளைகளிடமிருந்து பெறப்பட்ட உறைவிந்துக் குச்சிகளை கொண்டு செயற்கைமுறைக் கருவூட்டல் செய்து, உயர் மரபுத் திறனுள்ள பொலிகாளைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பின் மேற்கூறிய நோயற்ற பொலிகாளைக் கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு, தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

இத்திட்டம் தற்போது சேலம், நாமக்கல், கரூர், தருமபுரி, ஈரோடு, கோவை, மதுரை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் (கள்ளக்குறிச்சி) ஆகிய ஒன்பது மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ஒன்றிய அரசின் நிதிமூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை வழியாக நடைபெறுகிறது.

இதுவரை கள பால் உற்பத்தித் திறன் பதிவுத் திட்டம்மூலம் 439 பொலிகாளைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, 320 பொலிகாளை கன்றுகள் ஆவின் உறைவிந்து உற்பத்தி நிலையம், ஊட்டி மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைக்கு உறைவிந்து

*2023 ஏப்ரல் 5*]

*உற்பத்தி செய்வதற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.*

**6.4.6. மாநில மைய ஆய்வகம், மாதவரம்**

*தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மூலமாக மாதவரத்தில் மாநில மைய ஆய்வகமானது, தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டு, 16.8.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பூச்சிக் கொல்லிகளின் அளவு, நுண்ணுயிர்/நோய் எதிர்ப்பு மருந்துகள், கன உலோகங்கள் மற்றும் பூஞ்சைகாளான் நச்சு போன்றவற்றைக் கண்டறிய தேவையான உயர் தொழில்நுட்ப உபகரணங்களுடன் மாநில மைய ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.*

*தற்பொழுது மாதவரத்தில் மாநில மைய ஆய்வகத்தை நிறுவியதன்மூலம் பால் மற்றும் பால் பொருட்களை வெளிப்புற ஆய்வகத்தில் சோதனை செய்வதற்கு ஆகும் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வகத்தில் அதிக எண்ணிக்கையிலான பால் மற்றும் பால் பொருட்களின் மாதிரிகள் பரிசோதிக்கப்படுவதால், நுகர்வோருக்குச் சென்றடைகின்ற பாலின் தரம் மேலும் உறுதி செய்யப்படுகிறது. மாநில மைய ஆய்வகத்தில் கால்நடை தீவனம் மற்றும் தாது கலவைகளும் அவற்றின் மூலப்பொருட்களின் தரமும் பரிசோதிக்கப்படுவதால், விவசாயிகளுக்குத் தரமான கால்நடைத் தீவனம் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.*

**6.4.7. ஆவின் திறன் மேம்பாட்டு மையம், மாதவரம்**

*மாதவரம் பயிற்சி மையம் 2022 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு இணையம், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு அவர்களின் துறை சார்ந்த பல்வேறு வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றியங்களின் பால் உற்பத்தி மற்றும் இடுப்பொருள் பிரிவு அலுவலர்களுக்குக் கால்நடை ஊட்டச்சத்து, கால்நடை மேலாண்மை பயிற்சிகளும், பால் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்குச் செயற்கைமுறைக் கருவூட்டல் மற்றும் முதலுதவி சிகிச்சை பயிற்சிகளும், இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கணக்குப் பிரிவு, நிர்வாகப் பிரிவு, தரக்கட்டுப்பாடுப்பிரிவு மற்றும் விற்பனைப் பிரிவு பணியாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சிகளும்*

வழங்கப்பட்டுள்ளன. இதுவரை, 233 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 7. பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், ஆவின் எனும் வணிக பெயரில் தமிழ்நாடு முழுவதும் பால் மற்றும் பால் பொருட்களைப் பிற தனியார் நிறுவனங்களின் விலையோடு ஒப்பிடுகையில் மலிவு விலையில் விற்பனை செய்து வருகிறது. நுகர்வோரின் பால் மற்றும் பால் பொருட்கள் தேவையினை ஒப்பந்த வாகனங்கள்மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப தேவையறிந்து, மாநிலம் முழுவதும் கீழ்க்காணும் பால் வகைகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன:

| வ.எண் | பால் வகைகள் | Fat % | SNF % |
|---|---|---|---|
| 1 | இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் | 1.5 % | 9.0% |
| 2 | சமன்படுத்தப்பட்ட பால் | 3.0% | 8.5% |
| 3 | பசும்பால் | 3.5% | 8.5% |
| 4 | நிலைப்படுத்தப்பட்ட பால் | 4.5% | 8.5% |
| 5 | ஆவின் கோல்ட் | 5.0% | 9.0% |
| 6 | நிறை கொழுப்புப் பால் | 6.0% | 9.0% |
| 7 | டீமேட் | 6.5% | 9.0% |

மாநிலம் முழுவதும் நுகர்வோருக்கு ஆவின் பால் அனைத்து இடங்களிலும் எளிதில் கிடைக்கும் வண்ணம் மாதாந்திர பால் அட்டை, பாலகங்கள், மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே மாதாந்திர பால் அட்டைகள்மூலம் நுகர்வோருக்கு பால் விற்பனை செய்யும் ஒரே கூட்டுறவு நிறுவனம் ஆவின் ஆகும். இதன்மூலம் பால் எளிதில் கிடைக்கப் பெறுவதால் நுகர்வோரின் பேராதரவைப் பெற்றுள்ளது. மாதாந்திர பால் அட்டை விலை அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட சலுகை விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

*2023 ஏப்ரல் 5]*

*இத்தகைய முயற்சிகளால், ஆவின் பால் விற்பனை அளவு அதிகரித்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் விற்பனை அளவு 10.3% அதிகரித்து நாளொன்றுக்கு 26.41 இலட்சம் லிட்டரிலிருந்து 29.13 இலட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது.*

*இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்கள்மூலம் ஆவின் பால் பொருட்கள், நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தரமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது.*

*பாரம்பரியமிக்க பால் பொருட்களான நெய் மற்றும் வெண்ணெய் மட்டுமல்லாது ஐஸ்கிரீம், இனிப்புவகைகள் மற்றும் சாக்லேட் போன்ற பல்வேறு பால் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறது.*

**ஆவின் பால் பொருட்களின் வகைகள்**

| **குக்கீஸ் & சாக்லேட்** | **ஹெல்த் மிக்ஸ் வகைகள்** | **நீட்டிக்கப்பட்ட காலமுள்ள பால் வகைகள்** |
|---|---|---|
| • குக்கீஸ் (6 வகைகள்)<br>• பால் சாக்லேட்<br>• நட்டீஸ் சாக்லேட்<br>• டைரி ஒயிட்னர் | • பாதாம் மிக்ஸ்<br>• பாதாம்—பிஸ்தா மிக்ஸ்<br>• உலர்—நட் மிக்ஸ்<br>• ஆவின் ஹெல்த் மிக்ஸ்<br>• பால் புரத நூடுல்ஸ் | • UHT பால் — டிலைட் பிலெக்ஸி பேக்<br>• நிலைப்படுத்தப்பட்ட பால் — டெட்ரா பேக் பிரிக்<br>• சமன்படுத்தப்பட்ட பால் — டெட்ரா பேக் பிரிக்<br>• பசும்பால் — டெட்ரா பேக் பிரிக்<br>• நறுமண பால் — டெட்ரா /பாட்டில் |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 5

| **இனிப்புகள்** | **ஐஸ்கிரீம் வகைகள்** | **நொதியூட்டப்பட்ட பால்பொருட்கள்** |
|---|---|---|
| • இனிப்புகோவா<br>• பேரிச்சைகோவா<br>• மைசூர்பா<br>• குலோப்ஜாமுன்<br>• பால்பேடா<br>• ரசகுல்லா<br>• பிரிமியம் மில்க்கேக்<br>• பாயாசம்மிக்ஸ்<br>• குலோப்ஜாமுன் மிக்ஸ் | • கப்ஐஸ்கிரீம்<br>• ஐஸ்கிரீம் பேமலிசிப்பம்<br>• பந்துஐஸ்கிரீம்<br>• சாக்கோபார்<br>• மேங்கோடுயட்<br>• பைனாப்பிள்டுயட்<br>• திராட்சைடுயட்<br>• 2 இன் 1 பார்<br>• ஸ்ட்ராபெர்ரிகோர்<br>• மேங்கோகோர்<br>• சாக்கோபீஸ்ட்<br>• சாக்லேட்பீஸ்ட்<br>• பிரிமியம் வகை கப்ஐஸ்கிரீம்<br>• பிரிமியம் வகை ஸ்கூப்ஸ்கிரீம் (6 வகைகள்)<br>• சாக்லேட்கோன்<br>• வெனிலாகோன்<br>• குல்ஃபிபார்<br>• கசட்டா<br>• சுவையூட்டப்பட்ட<br>• குல்ஃபிபார் (10 சுவைகள்)<br>• இனிப்பில்லாத குல்ஃபி பார்/ லாங்குல்ஃபிபார் | • சுவையூட்டப்பட்ட<br>• யோகர்ட் (5 சுவைகள்)<br>• இனிப்பில்லாத யோகர்ட்<br>• தயிர்<br>• லஸ்ஸி<br>• பாக்கெட்மோர்<br>• பிரிமியம் தயிர்கப்புகள்<br>• பாட்டில்களில் அடைக்கப்பட்ட மோர்<br>• புரோபயாட்டக் தயிர்<br>• புரோபயாட்டிக் லஸ்ஸி<br>• மாம்பழம் & ஸ்ட்ராபெர்ரி சுவைகளில் யோகர்ட்பானம் |

ஆவின் பால் பொருட்களின் விற்பனை அளவு கடந்த இரண்டு ஆண்டுகளில் 4% அதிகரித்து, ரூ.553.62 கோடியிலிருந்து ரூ.574.5 கோடியாக உயர்ந்துள்ளது.

ஆவின் நிறுவனம் மாறிவரும் நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப தொடர்ந்து புதிய பால் பொருட்களைச் சந்தைப்படுத்துவதுமூலம்

*2023 ஏப்ரல் 5*]

*விற்பனை அளவை அதிகரித்துள்ளது.*


*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.1.2022 அன்று டெய்ரி ஒயிட்னர், பிரீமியம் மில்க் கேக், மாம்பழம் மற்றும் ஸ்ட்ராபெர்ரி யோகர்ட், பால் புரத நூடுல்ஸ் மற்றும் ரெடிமேட் பாயாசம் மிக்ஸ் போன்ற 5 புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தினார். மேலும், 19.8.2022 அன்று மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களால் ஆவின் ஹெல்த் மிக்ஸ், கோல்ட் காபி (*cold coffee*), பாலாடைக்கட்டி, பலாப்பழம் ஐஸ்கிரீம், வெண்ணெய் கட்டி, பாசந்தி, ஆவின் பால் பிஸ்கட், அடுமனை யோகர்ட் மற்றும் ஆவின் வெண்ணெய் முறுக்கு போன்ற 10 புதிய பால் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

*பண்டிகைக் காலங்களில் பொது மக்கள் விரும்பும் சிறப்பு இனிப்புகளான நெய் பாதுஷா, நட்ஸ் அல்வா, ஸ்டஃப்டு மோத்திபாக், முந்திரி பிஸ்தா ரோல், முந்திரி இனிப்பு, நெய் அல்வா மற்றும் கருப்பட்டி அல்வா போன்ற சிறப்பு இனிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையின்போது சாதனை அளவாக ரூ.116 கோடிக்கு இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.*

**7.1 விநியோக அமைப்பு**

*சென்னை மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ஆவின் நிறுவனம் பின்வரும் சந்தைப்படுத்தும் தடங்களைக் கொண்டுள்ளது. இவ்விற்பனை தடங்கள்மூலம் ஆவின் நிறுவனத்தின் பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோருக்குத் தங்குதடையின்றி கிடைக்க வழிவகை செய்துள்ளது.*

*மேலும் விற்பனை சந்தைப்படுத்தும் தடங்களை வலுப்படுத்தும் நோக்கில், புதிய தொழில் விநியோகஸ்தர்களை நியமித்து பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதன் தொடர்புடைய நியமன படிவம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.*




## 7.2 விற்பனை அதிகரிப்பு நடவடிக்கைகள் - சிறப்பு விற்பனை முகாம்கள்

*இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ஆவின் பால், பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க பல்வேறு சிறப்பு விற்பனைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக பின்வரும் ஆவின் சிறப்பு விற்பனை முகாம்கள் கடந்த 2022-2023 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டு, ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விளம்பரம் மற்றும் விற்பனை செய்யப்பட்டன.*

### ஆவின் தினம்:

*பொதுமக்களிடையே ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்புமூலம் ஆவின் துவக்கப்பட்ட நாளான 1.2.1981 நாளினை ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 1 ஆம் தேதி ஆவின் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி மாநிலம் முழுவதிலுமிருந்து சிறந்த பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்குப் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, இதன் ஒரு பகுதியாக, கோலப் போட்டி, ஓவியப் போட்டி, சமையல் போட்டி என பல்வேறு வயதுப் பிரிவினரைக் கவரும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்வுகளின்போது, பொது மக்கள்/பள்ளி/கல்லூரி பயிலும் மாணவ மாணவியர் மற்றும் குழந்தைகள் அதிக அளவில் கலந்து கொண்டதைத் தொடர்ந்து, நிகழ்வுகள் முக்கிய ஊடக நிறுவனங்களின் பரவலான கவனத்தை ஈர்த்தது.*

*2023 ஏப்ரல் 5]*

**செஸ் ஒலிம்பியாட்:**

*தமிழ்நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டு மாமல்லபுரத்தில் நடைபெற்ற சர்வதேச செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டியில் உலகம் முழுவதிலுமிருந்து போட்டியாளர்கள் பங்கேற்றார்கள். இதில் ஆவின் நிறுவனத்தின் சார்பில் விற்பனை அரங்கு அமைக்கப்பட்டு, பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.*

**தொழில் பொருட்காட்சி:**

*சென்னை தீவுத் திடலில் நடைபெற்ற 47—வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் ஆவின் நிறுவனத்தின் சார்பாக கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு, ஆவின் நிறுவனத்தின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி நிலைகள் கண்காட்சி அரங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. அதன் ஒரு பகுதியாக விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு ஆவின் பால் பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்பட்டது.*

**உணவுத் திருவிழா:**

*திருவள்ளூர் மாவட்டம், தனி மாவட்டமாக அமைக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில் மூன்று நாட்கள் உணவுத் திருவிழா நடைபெற்றது. இந்த உணவுத் திருவிழாவில் ஆவின் சார்பாக விற்பனை அரங்கு அமைக்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டது.*

*மேலும், தற்காலிக விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் பாலகங்கள்மூலம் தொடர்ந்து பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

*ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை நடவடிக்கைகள் ட்விட்டர், ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் (*@AavinTN*) போன்ற சமூக ஊடகங்களிலும் ஆவின் அதிகாரப்பூர்வ இணையதளத்திலும் (*www.aavin.tn.gov.in*) விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன.*

**7.3 மின்னணு மற்றும் இணையவழி வணிகம்**

*வளர்ந்து வரும், மின்னணு மற்றும் இணையவழி வணிகத்தில் ஆவின் நிறுவனம் தனது சந்தை மதிப்பை அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. தற்போது ஆவின் பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனையை மின்வணிக முறையில் பிளிப்கார்ட் (*FLIPKART*), பிக் பாஸ்கெட்(*BIG BASKET*), ஸ்விக்கி*

(SWIGGY), ஸோமாட்டோ (ZOMATO) மற்றும் டன்ஸோ (DUNZO) மூலம் சந்தைப்படுத்தியுள்ளது.

மேலும், ஆவின் நிறுவனம் பால் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான தேசிய பால் கூட்டுறவு விற்பனை தளமான (NCDFI) இணைய வழி (e—PORTAL) மூலம் பால் பவுடர், நெய் மற்றும் வெண்ணெய் விற்பனை மேற்கொண்டு தேசிய அளவில் 2021—2022 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

## 7.4 பால் மற்றும் பால் பொருட்கள் ஏற்றுமதி

தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கு நற்பெயர் பெற்றுள்ள ஆவின் நிறுவனம் உலகெங்கிலும் நம்பிக்கைக்குரிய வர்த்தக நிறுவனமாக மாறியுள்ளதைத் தொடர்ந்து UHT பால் மற்றும் நெய் போன்ற ஆவின் தயாரிப்புகள் கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், துபாய், இலங்கை, ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியை மேலும் விரிவுபடுத்தும் வகையில், நெய் மற்றும் UHT பால் ஆகியவை பல்வேறுகட்ட ஆய்வகச் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, நெய்யின் பயன்பாட்டுக் காலம் 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாகவும், UHT பாலின் பயன்பாட்டுக் காலம் 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாகவும் நீட்டிக்கப்பட்டு முறையே அமெரிக்கா மற்றும் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. அனைத்து தொழில் விநியோகஸ்தர்கள் ஊக்குவிக்கும் வகையில் ஏற்றுமதி ஆய்வு கவுன்சில் வழங்கும் நெறிமுறைகளுக்குட்பட்டு ஆவின் உபபொருட்களை ஏற்றுமதி செய்ய ஆவின் நிறுவனம் வாய்ப்பளிக்கிறது.

## 7.5 நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்

நுகர்வோர் நலன் மற்றும் சேவை மையம், கட்டணமில்லாத் தொலைபேசி வசதியுடன் (எண். 1800-425-3300) 24 மணி நேரமும், சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இதன்மூலம் நுகர்வோர் தங்களது கருத்துகளை/குறைகளைப் பதிவு செய்துகொள்ளலாம். நுகர்வோரின் புகார்கள் மற்றும் குறைகளை முறையே துறை சார்ந்த அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 48 மணிநேரத்திற்குள் நுகர்வோரின் குறைக்களுக்கான தீர்வு காணப்படுகிறது. 2022-2023-ல் மொத்தம் 2,199 புகார்கள் பெறப்பட்டு, உரிய தீர்வும் காணப்பட்டுள்ளது.

*2023 ஏப்ரல் 5*]

**8. தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள்**

மாநிலம் முழுவதும் உள்ள பால் பண்ணை தரக்கட்டுப்பாடு ஆய்வகங்களிலும் பாலின் தரத்தை சரிபார்க்க அதிநவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்/தொகுப்பு பால் குளிர்விப்பான்கள்/குளிர்விக்கும் நிலையங்கள்/மாவட்ட ஒன்றிய பால் பண்ணைகள்/சென்னை பெருநகர பால் பண்ணைகளிலுள்ள ஆய்வகத்தில், வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் ரீதியாக பாலின் தரத்தை கொள்முதல் நிலையில் உறுதி செய்ய சோதிக்கப்படுகிறது.

| **தர பரிசோதனை நிலைகள்** | **பரிசோதனைகள்** |
|---|---|
| பால் கொள்முதல் சங்க அளவில் | சுவை மற்றும் மணம் அறிதல் பரிசோதனை (Organoleptic Test) |
| | கொழுப்புச்சத்து (%) |
| | கொழுப்பல்லாத இதர சத்துக்கள்(%) |
| பால் குளிரூட்டும் நிலையம் & பால் பண்ணை அளவில் | வெப்பநிலை |
| | சுவை மற்றும் மணம் அறிதல் பரிசோதனை |
| | கொதித்தலின்போது திரிதல் பரிசோதனை (COB) |
| | மெத்திலீன் ஊதா நிறமாற்ற பரிசோதனை |
| | அமிலத்தன்மை அறிதல் பரிசோதனை |
| | கொழுப்புச்சத்து (%) |
| | கொழுப்பல்லாத இதர சத்துக்கள் (%) |
| | கலப்பட பரிசோதனைகள் |
| | நோய் எதிர் மருந்துகள் (Antibiotics) பரிசோதனை |
| | பூஞ்சைகாளான் நச்சு (Aflatoxin) பரிசோதனை |
| | மொத்த நுண்ணுயிர் எண்ணிக்கை பரிசோதனை |
| | கோலிஃபார்ம் பரிசோதனை |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 5

| **தர பரிசோதனை நிலைகள்** | **பரிசோதனைகள்** |
|---|---|
| பால் பதப்படுத்தும் நிலையில் | வெப்பநிலை |
| | சுவை மற்றும் மணம் அறிதல் பரிசோதனை (Organoleptic Test) |
| | கொதித்தலின்போது திரிதல் பரிசோதனை (COB) |
| | கொழுப்புச்சத்து (%) |
| | கொழுப்பல்லாத இதர சத்துக்கள் (%) |
| | பாஸ்படேஸ் பரிசோதனை |
| | அமிலத்தன்மை அறிதல் பரிசோதனை |
| | சமசீர்தன்மை அறிதல் பரிசோதனை |
| | மெத்திலீன் ஊதா நிறமாற்ற பரிசோதனை |
| | பாலின் வைப்புநிலை தரம் அறிதல் பரிசோதனை (Keeping Quality) |
| | மொத்த நுண்ணுயிர் எண்ணிக்கை பரிசோதனை (Standard Plate Count) |
| | கோலிஃபார்ம் பரிசோதனை |
| பால் மற்றும் பால்பொருட்களில் மேற்கொள்ளப்படும் காலமுறை பரிசோதனைகள் (Periodical Testing parameters of Milk & Milk Products) | பூச்சிக்கொல்லிகள் (Pesticide Residues)<br>நோய் எதிர் மருந்துகள்/ கால்நடை மருந்துகளின் அளவு (Antibiotics/Veterinary Drug Residues)<br>அடர் உலோகங்கள் (Heavy Metals)<br>மெலமைன் (Melamine)<br>பூஞ்சைகாளான் நச்சு (Aflatoxin) பரிசோதனை |

*2023 ஏப்ரல் 5*]

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், பால் மற்றும் பால் பொருட்களின் உணவு பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக இணைய மற்றும் ஒன்றிய பால் பண்ணைகளில் உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பிற்கான ISO 22000 சான்றினைப் பெற்றுள்ளது.

| **இணைய பால் பண்ணைகள்** | **ஒன்றிய பால் பண்ணைகள்** |
|---|---|
| • அம்பத்தூர் பால் பண்ணை | • ஈரோடு ஒன்றியம் |
| • மாதவரம் பால் பண்ணை | • சேலம் ஒன்றியம் |
| • சோழிங்கநல்லூர் பால் பண்ணை | • மதுரை ஒன்றியம் |
| • பால் பொருட்கள் பால் பண்ணை, அம்பத்தூர் | • கோயம்பத்தூர் ஒன்றியம் |
| • பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, திருவண்ணாமலை | |

## 9. திட்டங்கள்

### 9.1 தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம். (NPDD)

கிராமப் பகுதிகளில் பால் குளிர்விக்கும் கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்துதல், தரமான பாலை கொள்முதல் செய்தல், மாவட்டக் கூட்டுறவு ஒன்றிய அளவில் பால் கொள்முதல், பால் பதப்படுத்துதல் மற்றும் பால் விற்பனை போன்றவற்றிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

- தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் ஆவின் மாநிலமைய ஆய்வகம் மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- இவ்வாய்வகம் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின்(FSSAI) தர நிர்ணயித்துக்குட்பட்டு தரமான பாதுகாப்பான பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு உறுதி செய்யும் வகையில் பால் மற்றும் பால் பொருட்களின் மாதிரிகளைப் பரிசோதனை செய்ய மிகவும் துல்லியமான பகுப்பாய்வுத் திறன் கொண்ட LCMS, GCMS, ICPMS, பகுப்பாய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும், 21 எண்ணிக்கையில் FTIR தொழில் நுட்பத்துடன்கூடிய பால் பகுப்பாய்வு உபகரணங்கள் 17 ஒன்றியங்களிலும் மற்றும் சென்னை மாநகர பால் பண்ணைகளிலும் பால் மற்றும் பால் பொருட்கள் அனைத்தும் FSSAI தர நிர்ணயித்துக்குப் பரிசோதிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன

- மாதவரத்தில், நோய் கிருமி கண்டறிதல் மற்றும் நுண்ணுயிர் கண்டறியும் ஆய்வகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவ்வாய்வகம் மூலமாக இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் மற்றும் பால் பொருட்களின் அனைத்து அளவுருக்களைப் (Parameters) பரிசோதிக்க உதவுவதன்மூலம் ஏற்றுமதி தரத்திற்கு ஏற்றவாறு பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தினை உறுதி செய்வதோடு உள்ளூர் சந்தைக்கு விற்பனை செய்ய முடியும்

- பால் மற்றும் பால் பொருட்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஆய்வகத்தை ரூ.11.58 கோடி மதிப்பில் அம்பத்தூரில் உள்ள பால் உபபொருட்கள் பால் பண்ணையில் துவங்கவுள்ளது. இந்த ஆய்வகத்தில் புதிய பால் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி மற்றும் தற்போது விற்பனையில் உள்ள பால் பொருட்களின் தரமேம்பாடு ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், பால், பால் பொருட்கள், மூலப் பொருட்கள் மற்றும் கட்டுப் பொருட்களை தர ஆய்வு செய்யப்படுகிறது

- தர பகுப்பாய்விற்கான ரூ.8.75 கோடி மதிப்பிலான இரசாயனங்கள், கண்ணாடி பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஒன்றியங்களுக்கு வழங்கப்படும்

- மாவட்ட ஒன்றியங்களிலுள்ள பால் பண்ணைகளில் உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்காக சான்று பெறுதல் திட்டத்தின்கீழ் ரூ.3 கோடி நிதி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிதியானது, பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை உறுதி செய்யும், இந்திய தர நிர்ணய ஆணையத்தின்

(BIS) இணக்க மதிப்பீடுத் திட்டத்தை (Conformity assessment Scheme) ஒன்றியங்களில் செயல்படுத்தவும் பயன்படுத்தப்படவுள்ளது

- 5,07,000 லிட்டர் பாலை கூடுதலாக குளிர்விக்க 105 தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 5,80,000 லிட்டர் பாலை கூடுதலாகக் குளிர்விக்க112 தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது

- பால் சேகரிப்பு நிலையங்களில், பால் தரத்தினை உறுதிசெய்ய, 1672 பால் பரிசோதனைக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு, 1672 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்/தொகுப்பு பால் குளிர்விக்கும் நிலையம்/குளிர்விப்பு நிலையம்/பால் பண்ணைகளில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், கிராம அளவில் பாலின் தரத்தினை உறுதி செய்ய 1600 பால் பரிசோதனைக் கருவிகள் நிறுவப்படும்

- மாவட்ட ஒன்றியங்களில் பால் கொள்முதல், பதப்படுத்துல், விற்பனை போன்ற பணிகளை ஒருங்கிணைக்க தேவையான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணி இத்திட்டத்தின்கீழ் ரூ.14.26கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது

- பணியாளர்களுக்குத் தர மேலாண்மை, தொகுப்பு பால் குளிர்விப்பான், தானியங்கி பால் சேகரிப்பு அலகு ஆகியவற்றிற்கான பயிற்சி ரூ.4.5 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டு வருகிறது

- பால் நுகர்வோர் நலனுக்காக மாவட்ட ஒன்றியங்களின் பால் பண்ணைகளுக்குத் தரச்சான்றிதழ் மற்றும் அங்கீகாரம் பெறுவதற்காக நிதியுதவியும் பெறப்பட்டுள்ளது

- தேசிய பால்வளத் திட்டத்தின்கீழ் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகத்தை நிறுவுதல் பணி அம்பத்தூரில் நடைபெற்று வருகிறது.

[2023 ஏப்ரல் 5

## 9.2 தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD-RIDF)

- *மாநில அரசு கூட்டுறவு பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (RIDF) கீழ் நிதியுதவி அளித்து வருகிறது.*
- *நபார்டு வங்கி நிதி தொகுப்பு – XXVI கீழ் ரூ.26.63 கோடி பெறப்பட்டு, திருப்பூர் மற்றும் நாமக்கல் மாவட்ட ஒன்றியங்களில் நிர்வாகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. நீலகிரி மாவட்ட ஒன்றியத்தில் 1 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட பாலாடைக்கட்டி ஆலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது*
- *நபார்டு வங்கி நிதி தொகுப்பு —XXVIII கீழ், ரூ.150 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர் மாவட்டம், பாடலூரில் நாளொன்றுக்கு 6 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட பால் பண்ணையை நிறுவும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.*
- *நபார்டு வங்கி நிதி தொகுப்பு —XXVIII கீழ், தஞ்சாவூரில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் திறன் கொண்ட கால்நடைத் தீவன ஆலையினை ரூ.50 கோடி மதிப்பீட்டில் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றது.*

## 9.3 பால்பண்ணை உட்கட்டமைப்பு மேம்பாட்டுநிதி (DIDF)

*சென்னையின் அதிகரித்து வரும்பால் தேவையைப் பூர்த்தி செய்ய பால் பண்ணை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் கடன் பெற்றுநாளொன்றிற்கு 10 இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணையை மாதவரத்தில் நிறுவும் பணி நடைப்பெற்று வருகிறது.*

*டெல்டா மாவட்டங்களின் பால் மற்றும் பால் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் திருவாரூரில் நாளொன்றிற்கு 1 இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணையை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.*

*திருச்சி மாவட்ட ஒன்றியத்தின் வருவாயை அதிகரிக்க, கூடுதலாக தரமான, மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்களை உற்பத்தி செய்து நுகர்வோருக்கு வழங்கும் வகையில் நாளொன்றிற்கு*

*2023 ஏப்ரல் 5*]

*6000 லிட்டர் ஐஸ்கிரீம் தயாரிப்பு ஆலை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.*

*தூத்துக்குடி மாவட்ட நுகர்வோரின் பால் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய தூத்துக்குடியில் நாளொன்றிற்கு 50 ஆயிரம்லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணையை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.*

**9.4 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி (SBGF)**

*தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் பின்தங்கிய பகுதிகளை வளர்ச்சி பாதைக்குக் கொண்டு செல்ல மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி வழங்கப்படுகிறது. பின்தங்கிய, ஈரோடு மாவட்ட மலை பகுதிகளுக்குத் தேவைப்படும் திட்டங்கள் கண்டறியப்பட்டு மாநில திட்டக் குழுவிற்கு சூரிய சக்திமூலம் பால் கேன்கள் குளிரூட்டும் வசதிக்கான கருத்துரு அனுப்பப்படுகிறது.*

**9.5 தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்(NADP)**

*கோயம்புத்தூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் நாளொன்றுக்கு இரண்டு மெட்ரிக் டன் பன்னீர் உற்பத்தி மற்றும் பேக்கிங் தானியங்கி அலகு நிறுவப்பட்டுள்ளது*

*தென் மாவட்டங்களின் கால்நடைத் தீவனத் தேவையை பூர்த்தி செய்ய விருதுநகர் மாவட்டத்தில் 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடைத் தீவன ஆலை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது*

*வேலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு 60 எண்ணிக்கையிலான தானியங்கி பால் கறவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

**9.6 பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம்(PMFME)**

*உணவு பதப்படுத்தும் தொழிலில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு பொது உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் பொருட்டு ஒன்றிய அரசு நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டத்தின்மூலம் 35% கடன் மூலதனம் மானியமாக 3 கோடி வரை அதிகபட்ச உச்சவரம்பாக வழங்கப்படுகிறது.*

*இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற தருமபுரி, திருவண்ணாமலை, கரூர் மற்றும் கடலூர் ஆகிய ஒன்றியங்களின் பால் பண்ணை உட்கட்டமைப்பு திட்டத்திற்கான கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

[2023 ஏப்ரல் 5

## 9.7 தேசிய பசுக்கள் இயக்கம் (RGM) –மரபுவழி சோதனைத் திட்டம்

*மரபுவழி சோதனைத் திட்டத்தின்கீழ் ரூ.2,087.51 இலட்சம் மதிப்பீட்டில் வேலூர், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய 3 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தேசிய பால்வள வாரியத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதல்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயர் மரபியல் திறனுள்ள பொலிகாளைகளை உற்பத்தி செய்தல் மற்றும் பொலிகாளைகளை மதிப்பீடு செய்து தரவரிசைபடுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.*

*இத்திட்டத்தின் கொள்முதல் இலக்கான 225 பொலிகாளைக் கன்றுகளுக்கு, இதுவரை, 246 பொலிகாளைக் கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் விநியோக இலக்கான 180 பொலிகாளைக் கன்றுகளுக்கு, இதுவரை 169 பொலிகாளைக் கன்றுகள் பல்வேறு பொலிகாளைப் பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், 77 பொலிகாளைக் கன்றுகள் வளர்ப்பில் உள்ளன.*

## 9.8 தேசிய கால்நடை இயக்கம் (NLM)

*ஒன்றிய அரசின் தேசிய கால்நடை இயக்கம்மூலம் கால்நடை காப்பீடுத் திட்டம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்களின் மாடுகள் திடீரென்று இறந்துபோகும் நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காகவும், உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தித் தொழிலில் தொடர்ந்து ஈடுபடவும் இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு காப்பீடு வழங்க வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு மொத்த காப்பீட்டுத் தொகையில் 50 சதவிகித மானியமும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு 70 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டு, இத்திட்டத்தின் இலக்கான 1.07 இலட்சம் கறவைகளின் காப்பீடிற்கு, 27 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களைச் சார்ந்த 1.12 இலட்சம் கறவை பசுக்களுக்கு ஆவின் நிறுவனத்தின்மூலம் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது.*

*2023 ஏப்ரல் 5*]

**9.9 தேசிய செயற்கைமுறைக் கருவூட்டல் திட்டம் (NAIP)**

*ஒன்றிய அரசின் தேசிய கால்நடை இயக்கம்மூலம் தேசிய செயற்கைமுறைக் கருவூட்டல் திட்டம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 10 மாவட்ட ஒன்றியங்களில், செயற்கைமுறைக் கருவூட்டல் வசதிகள் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ள 12 மாவட்டங்களான கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, உதகமண்டலம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகியவற்றில் செயல்படுத்தப்படுகிறது.*

*கிராமப்புறங்களில் உள்ள பசு மற்றும் எருமையினங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக சிறந்த மரபியல் திறனுள்ள பொலிகாளைகளின் உறைவிந்துக் குச்சிகளை செயற்கைமுறைக் கருவூட்டல்மூலம் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு இனப்பெருக்கம் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.*

*இதுவரை இத்திட்டத்தின் முதல் மூன்று கட்டங்கள் முடிவுற்று, நான்காம் கட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.*

**9.10 பசுந்தீவன வளர்ப்பு**

*கறவை மாடுகளுக்கு அடர்தீவனம் மற்றும் உலர்தீவனம் ஆகியவற்றுடன் பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் வழங்குவது, பால் உற்பத்தி, இனப்பெருக்கத் திறன் மற்றும் ஆரோக்கிய நிலையைப் பராமரிக்க இன்றியமையாததாகும்.*

*24 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பகுதிகளுக்கு ஏற்ற (*Area specific*) பசுந்தீவன உற்பத்தித் திட்டத்தின்கீழ், மக்காச்சோளம்/கோ 4/சோளம்/வேலிமசால் வகை பசுந்தீவனங்கள் 500 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகளின் நிலத்தில் இணைய மற்றும் ஒன்றியங்களின் நிதியில் உற்பத்தி செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து வருகின்றார்கள்.*

*ஆவின் நிறுவனம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (*TANUVAS*) மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (*TNAU*) ஆகியவற்றுடன் இணைந்து பசுந்தீவன உற்பத்தி மற்றும் தீவனம் பதப்படுத்துதல் போன்ற நவீன*

விஞ்ஞான முறைகள் குறித்து ஆவின் ஊழியர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

## 10. மின் ஆளுமை நடவடிக்கைகள்

## 10.1. IDMS-Integrated Dairy Management System

ஆவின் பால் பண்ணை அலுவலகப் பணிகளை ஒருங்கிணைக்கும் பணிகளுக்காக மென்பொருட்களை உருவாக்க ஒன்றிய அரசின் மின்னணுத் தகவல் தொழில்நுட்ப துறையின் நிதியுதவியுடன் IDMS உருவாக்கப்பட்டது. நிறுவன வள திட்டமிடல் மென்பொருள்மூலம் இணையத்தின் அனைத்து அலகுகள், அலுவலகங்கள் மற்றும் கிருஷ்ணகிரி, ஈரோடு, மதுரை, சேலம் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்கள், தொகுப்பு குளிர்விப்பு மையங்கள், பால் பண்ணை பணிகள் கணினிமயமாக்கப்பட்டது.

இத்திட்டப்பணிகள்மூலம் செயல் திறன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் உரிய நேரத்திற்குள் அலுவலகப் பணிகள் முடிக்கப்படும்.

ஆவின் பால் பண்ணை அலுவலகப் பணிகளை ஒருங்கிணைக்கும் மென்பொருட்களை மீதமுள்ள மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பயன்படுத்தும் வகையில் மாற்றம் செய்து விரிவுபடுத்தப்படும்.

## 10.2 பயோமெட்ரிக் வருகை முறை

பயோமெட்ரிக் வருகை முறை இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் அனைத்து அலகுகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 10.3 தமிழ்நாடு-டெண்டர் போர்ட்டல் - ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளி கோருவது நடைமுறைப்படுத்துதல்

திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி (Tender) கோருவது மற்றும் பல்வேறு சேவைகள்/பொருட்களை வாங்குவதுTN—Tender Portal மூலம் இணையவழியில் மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம் முன் வைப்புத் தொகை இணையவழியில் பெறப்படுகிறது. இம்முறையைப்

*2023 ஏப்ரல் 5]*

*பின்பற்றுவதன்மூலம் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதுடன் ஒப்பந்தம் கோருவதில் போட்டியினை அதிகரித்தல், நேரம் மற்றும் பண விரயத்தினை வெகுவாகக் குறைக்க உதவுகிறது.*

## 11. பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள்

### 11.1 பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி

*பால் உற்பத்தியாளர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நல நிதி உருவாக்கப்பட்டது. இதற்கு பால் ஊற்றும் ஒவ்வோர் உறுப்பினரும் மாதந்தோறும் ஒரு ரூபாயும், சம்பந்தப்பட்ட தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தலா 50 பைசாவும் பங்களிக்க வேண்டும்.*

| **வ. எண்** | **நிதியுதவி** | **தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| *1* | *விபத்து மரணம்* | *2,50,000* |
| *2* | *இரண்டு குழந்தைகள் வரை கல்வி உதவி* | *25,000* |
| *3* | *பெண் குழந்தைகளுக்கான திருமண உதவி* | *30,000* |
| *4* | *இறப்பு நேரிட்டால் இறுதிச் சடங்கு செலவுகள்* | *5,000* |
| *5* | *ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புகளின் இழப்பு* | *1,75,000* |
| *6* | *ஓர் உறுப்பு இழப்பு* | *75,000* |

இதுவரை 479 பயனாளிகளுக்கு ரூ.5.14 கோடி உதவித் தொகையாக இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | நிதியுதவி | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | இறப்பு | 244 | 4,81,74,911/— |
| 2 | கல்வி உதவி | 105 | 17,80,000/— |
| 3 | பெண் குழந்தைகளின் திருமணம் | 47 | 10,90,000/— |
| 4 | இறுதிச் சடங்கு செலவுகள் | 83 | 4,15,000/— |
| **மொத்தம்** | | | **5,14,59,911/—** |

2022-2023 ஆம் நிதியாண்டில் 51 பயனாளிகளுக்கு ரூ.1.48 கோடி இத்திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## 11.2 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க அளவில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு அவர்கள் வழங்கும் பாலின் மதிப்புக்கு ஏற்ப பங்கு ஈவுத்தொகை, புரவுக்கான ஆதரவுத் தள்ளுபடி மற்றும் போனஸ் ஆகியவை சங்கங்கள் ஈட்டும் இலாபத்திலிருந்து ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில், சுமார் 1.09 இலட்சம் சங்க உறுப்பினர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.5,422.99 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | போனஸ் | | | புரவுக்கான ஆதரவு தள்ளுபடி | | | ஈவுத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1 | திருவள்ளூர் | 3 | 332 | 3.08 | 0 | 0 | | 0 | 0 | |
| 2 | காஞ்சிபுரம் | 7 | 993 | 6.29 | 1 | 97 | 0.028 | 7 | 1567 | 50.56 |
| 3 | செங்கல்பட்டு | 9 | 709 | 5.88 | 9 | 709 | 0.823 | 2 | 729 | 37.12 |
| 4 | வேலூர் | 12 | 845 | 36.75 | 12 | 954 | 0.029 | 9 | 2431 | 56.15 |
| 5 | திருப்பத்தூர் | 2 | 139 | 1.77 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 6 | ராணிப்பேட்டை | 7 | 1173 | 14.28 | 7 | 3913 | 0.054 | 5 | 5431 | 136.00 |
| 7 | திருவண்ணாமலை | 84 | 18000 | 248.29 | 0 | 0 | | 0 | 0 | |
| 8 | கடலூர் | 10 | 4088 | 55.56 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 9 | விழுப்புரம் | 9 | 2072 | 13.89 | 0 | 0 | 0 | 2 | 1286 | 29.61 |
| 10 | கள்ளக்குறிச்சி | 40 | 9333 | 160.53 | 40 | 13451 | 12.63 | 1 | 435 | 4.00 |
| 11 | தருமபுரி | 19 | 1618 | 31.74 | 4 | 393 | 18.75 | 0 | 0 | 0 |
| 12 | கிருஷ்ணகிரி | 5 | 3030 | 31.65 | 5 | 3030 | 0.77 | 2 | 2136 | 56.36 |
| 13 | சேலம் | 159 | 21073 | 300.91 | 159 | 21073 | 0.40 | 58 | 13470 | 337.33 |
| 14 | நாமக்கல் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 18 | 2960 | 54.97 |

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | போனஸ் | | | புரவுக்கான ஆதரவு தள்ளுபடி | | | ஈவுத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 15 | ஈரோடு | 292 | 29844 | 547.94 | 292 | 55100 | 1.18 | 64 | 10017 | 232.68 |
| 16 | திருப்பூர் | 50 | 3532 | 61.63 | 50 | 3532 | 0.17 | 15 | 2591 | 103.11 |
| 17 | கோயம்புத்தூர் | 27 | 1385 | 35.00 | 0 | 1385 | 0.049 | 13 | 900 | 28.00 |
| 18 | நீலகிரி | 11 | 1357 | 12.00 | 11 | 1883 | 0.026 | 4 | 353 | 8.54 |
| 19 | திருச்சிராப்பள்ளி | 55 | 20706 | 197.26 | 55 | 20706 | 0.71 | 77 | 8749 | 938.34 |
| 20 | பெரம்பலூர் | 31 | 6294 | 81.20 | 26 | 5014 | 0.070 | 48 | 9021 | 257.14 |
| 21 | அரியலூர் | 8 | 6161 | 35.10 | 6 | 3759 | 2.77 | 5 | 13057 | 208.28 |
| 22 | கரூர் | 25 | 2501 | 27.21 | 25 | 2501 | 0.068 | 30 | 1650 | 99.60 |
| 23 | புதுக்கோட்டை | 3 | 973 | 6.45 | 0 | 0 | 0 | 2 | 877 | 14.15 |
| 24 | தஞ்சாவூர் | 1 | 165 | 1.47 | 0 | 0 | 0 | 5 | 945 | 17.22 |
| 25 | திருவாரூர் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 7 | 18602 | 231.25 |
| 26 | மயிலாடுதுறை | 1 | 837 | 1.73 | 0 | 0 | 0 | 1 | 837 | 19.24 |
| 27 | நாகப்பட்டினம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 28 | திண்டுக்கல் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 14 | 3101 | 131.08 |

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | போனஸ் | | | புரவுக்கான ஆதரவு தள்ளுபடி | | | ஈவுத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 29 | மதுரை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 30 | தேனி | 1 | 137 | 1.91 | 0 | 0 | 0 | 1 | 281 | 8.46 |
| 31 | சிவகங்கை | 2 | 120 | 2.57 | 2 | 120 | 0.0016 | 12 | 2601 | 47.17 |
| 32 | இராமநாதபுரம் | 1 | 265 | 7.05 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | விருதுநகர் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 | 996 | 94.65 |
| 34 | தூத்துக்குடி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 7 | 2320 | 147.36 |
| 35 | திருநெல்வேலி | 3 | 968 | 7.34 | 1 | 2106 | 0.054 | 6 | 1024 | 33.42 |
| 36 | தென்காசி | 2 | 84 | 0.80 | 0 | 0 | 0 | 4 | 380 | 18.96 |
| 37 | கன்னியாகுமரி | 6 | 384 | 14.32 | 0 | 0 | 0 | 5 | 848 | 31.74 |
| | **மொத்தம்** | **885** | **139118** | **1951.74** | **705** | **139726** | **38.63** | **427** | **109595** | **3432.62** |

**11.3 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கப்படுவதைபோல, மாவட்டக் கூட்டுறவு பால்

உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஈட்டும் இலாபமானது பால் உற்பத்தியாளர்கள் ஊற்றும் பாலின் அளவின் அடிப்படையில் ஊக்கத்தொகையாக தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | புரவுக்கான ஆதரவு தள்ளுபடி/போனஸ் | இலாபம் ஈட்டப்பட்ட வருடம் | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | கடலூர் | புரவுக்கான ஆதரவு தள்ளுபடி | 2019-2020 | 177 | 6,474 | 167 |
| 2. | மதுரை | புரவுக்கான ஆதரவு தள்ளுபடி | 2020-2021 | 798 | 36,450 | 368 |
| 3. | தஞ்சாவூர் | புரவுக்கான ஆதரவு தள்ளுபடி | 2020-2021 | 361 | 10,436 | 96.37 |
| 4. | நாமக்கல் | போனஸ் | 2018-2019 | 471 | 16,891 | 61.98 |
| | | | 2019-2020 | 480 | 16,793 | |
| | | மொத்தம் | | 2,287 | 87,044 | 691.35 |

## 11.4 பால் உற்பத்தியாளர்களுக்குக் கால்நடை உள்ளீட்டு சேவைகள்

இத்துறைமூலம் கீழ்க்காணும் இடுபொருள் சேவைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- கால்நடை சிகிச்சை மற்றும் அவசரக் கால சிகிச்சை
- உயர் மரபியல் திறன் கொண்ட உறைவிந்துக் குச்சிகளை கொண்டு செயற்கைமுறைக் கருவூட்டல் சேவைகள்

- *மலட்டு நீக்க சிகிச்சை முகாம்*
- *சினைதருண அறிகுறிகளை ஒருங்கிணைத்தல் திட்டம்*
- *கறவையின காப்பீடு*
- *பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி*
- *தரமான கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை வழங்குதல்*
- *தரமான தீவன புல் மற்றும் விதைகளை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்*
- *பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கிகள்மூலம் நடைமுறை மூலதனக் கடன் வழங்குதல்*

**12. பணியாளர் நலன்**

1. *2022 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையின்போது கருணைத் தொகையாக ரூ.301.59 இலட்சம் இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் 4,150 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*
2. *2022-2023 ஆம் ஆண்டு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூ.40.18 இலட்சம் இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் 4,251 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*
3. *மறைந்த பணியாளர்களின் குடும்ப நிதி நிலைமையினைக் கருத்தில் கொண்டு 2022-2023 ஆம் ஆண்டு மொத்தம் 50 வாரிசுதாரர்களுக்கு இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.*
4. *மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் தினந்தோறும் அரை லிட்டர் பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 5

5. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.4,000/— ஓய்வூதியத் தொகையாகவும் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை குடும்ப ஓய்வூதியமாக ரூ.2,000/— வழங்கப்பட்டு வருகிறது.

## 13. நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள்

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக்கொண்ட 2030 ஆம் ஆண்டிற்குள் செய்யப்பட வேண்டிய வளர்ச்சி குறித்த இலக்குகள் பற்றிய முன்மொழிவுகள், தற்போதும், எதிர்காலத்திலும், மக்களுக்கும் அனைத்து உலக நாடுகளுக்கும் அமைதி மற்றும் செழிப்புக்கான பகிரப்பட்ட செயல்திட்டத்தை வழங்குகிறது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு 17 குறிக்கோள்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பால்வளத் துறையானது, வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள் எண் 2.0-ன்படி பட்டினியை ஒழித்தல், உணவு பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்து மேம்பாட்டை எய்துதல் மற்றும் நிலையான வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். மேலும், இத்துறையானது, இலக்கு எண் 2.3 மற்றும் 2(அ) அடைவதற்குத் திட்டமிட்டுள்ளது.

**குறிக்கோள் 2.3-** 2030 ஆம் ஆண்டிற்குள் கிராமப்புறங்களில் சிறிய அளவில் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் குறிப்பாக பெண்கள், பழங்குடியினர், விவசாயத் தொழிலையே வாழ்வாதாரமாகச் செய்கின்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கறவைமாடுகள் வளர்ப்போருக்குத் தங்களுடைய வருட வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடன் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப அறிவு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அனைத்துப் பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். மேலும், மதிப்புக் கூட்டிய பொருட்கள் உற்பத்திக்குத் தேவையான வசதிகளை அதிகரித்தல்மூலம் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்புகள்உருவாக்குதல் ஆகும்.

**குறிக்கோள் 2(அ):** வளரும் நாடுகளில் மற்றும் குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காகக் கிராமப்புற உட்கட்டமைப்பு, விவசாய

ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள், விவசாயப் பயிர்கள் மற்றும் கால்நடை மரபணு வங்கிகளில் மேம்பட்ட சர்வதேச ஒத்துழைப்புமூலம் முதலீட்டை அதிகரித்தல்.

இத்துறையானது, அரசாணை (நிலை) எண்.184, கால்நடைபராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள். 26-12-2019—ன்படி வளங்குன்றா வளர்ச்சித் திட்டங்களை எய்துவதற்காக குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவானது, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறை, மாநில மற்றும் மாவட்ட களப்பணியாளர்கள் மற்றும் இதர வளங்குன்றா வளர்ச்சித் திட்ட குழுக்களுடன் இணைந்து செயல்படும். இவ்வாறாகப் பல்வேறு திட்டங்கள்மூலம் பால்வளத் துறையானது, வளர்ச்சித் திட்டங்களை எய்த திட்டமிட்டுள்ளது.

**14. புதிய முயற்சிகள் மற்றும் நிறைவேற்றப்பட்ட சட்டமன்ற அறிவிப்புகள்**

- பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும் மற்றும் இடுபொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பால் கொள்முதல் விலையை பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/- உயர்த்தி, ரூ.32/- லிருந்து ரூ.35/-ஆகவும் மற்றும் எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/—உயர்த்தி, ரூ.41/-லிருந்து ரூ.44/- ஆகவும் 5.11.2022 முதல் வழங்கப்பட்டு வருகிறது

- 2022-2023 ஆம் நிதியாண்டில் 395 புதிய பிரதம பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டது. 116 செயலிழந்த சங்கங்கள் புதுத்துயிரூட்டப்பட்டுள்ளன

- பொது மக்கள் மற்றும் நுகர்வோர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளுக்கு ஏற்ப பேக்கிங் முறை, புதிய தரமான பால் பொருட்களைத் தயாரிக்கவும் பேக்கிங் பொருட்களின் தரத்தினை பரிசோதிக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகம் (Research and Development Lab) ரூ.11.58 கோடி மதிப்பில் அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ளது

- 2135 எண்ணிக்கையில் பால் பகுப்பாய்வு இயந்திரங்கள் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சங்கங்களில் நிறுவப்பட்டது

## 14.1 புதிய பால் பண்ணைகள் உருவாக்கம்

- *நாளொன்றுக்கு ஆறு இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட புதிய பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை பாடாலூர், திருச்சி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. இதன்மூலம் தனியார் பால் பண்ணை நிறுவனங்களில் பால் பவுடர் மற்றும் வெண்ணெய் உருமாற்றம் செய்வது தவிர்க்கப்படும்*

- *புதிய 2 இலட்சம் லிட்டர் திறனுள்ள பால் பண்ணையினை அச்சிரப்பாக்கத்தில் நிறுவுவதுமூலம் சென்னை புறநகர் நுகர்வோரின் பால் தேவையினைப் பூர்த்தி செய்ய முடியும்*

- *புதிய 2 இலட்சம் லிட்டர் திறனுள்ள பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை நாமக்கல் மாவட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய நிறுவப்பட்டு வருகிறது*

- *நாளொன்றுக்கு 50 ஆயிரம் திறன் கொண்ட புதிய பால் பண்ணை நிறுவுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் கடலூர், கரூர், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களில் தொடங்கப்பட்டுள்ளது*

## 14.2. கறவை மாடு மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

- *சிறந்த மரபுத் திறன் கொண்ட கிடாரி கன்றுகளை வளர்ப்பதற்கான தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் சேலம் மாவட்டம், கருமந்துறை கிராமத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் சிறந்த மரபுத் திறன் உள்ள பொலிகாளைகள் மற்றும் சிறந்த மரபுத் திறன் உள்ள கிடாரிக் கன்றுகள் உற்பத்தி செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்படும்*

- *உறைவிந்துக் குழல்களை அதிகமான எண்ணிக்கையில் சேமித்து வைக்க 5 இடங்களில் (ஈரோடு, திருவண்ணாமலை, நாமக்கல், திருப்பூர் மற்றும் நீலகிரி) தலா 3000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட திரவ நைட்ரஜன் சேமிக்கும் கலன்கள் (Silo) நிறுவப்பட்டது. இதன்மூலம் 15000 லிட்டர் திரவ நைட்ரஜன் கூடுதலாகச் சேமிக்கப்பட்டு வருகிறது*

*2023 ஏப்ரல் 5*]

- *கறவை மாடுகளில் சினை தருண ஒருங்கிணைக்கும் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி நீண்ட காலமாகச் சினைக்கு வராத/சினை நிற்காத கறவை மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், கன்றுகள் பிறக்கும் இடைவெளி இத்திட்டத்தின்மூலம் குறைக்கப்படுகிறது*

**14.3 சிறந்த பால் உற்பத்தியாளர்களைக் கௌரவித்தல்**

- *38 மாவட்டங்களிலும் தமிழ்வழிக் கல்வி பயின்று மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற, மூன்று பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளுக்குப் பரிசுத் தொகையாக மொத்தம் ரூ.6.84 இலட்சம் 114, குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது*
- *25 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் அதிக அளவில் பால் வழங்கிய 3 பால் உற்பத்தியாளர்களுக்குப் பரிசுத் தொகையாக ரூ.4.5 இலட்சம், 75 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது*

**14.4 நிர்வாகச் சீர்திருத்தம்**

- *பால் உற்பத்தியினை அதிகரிக்க இரண்டு புதிய மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சியினை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டு செயல்படுகிறது*
- *தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள நேரடி நியமனத்திற்கான காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்பப்படும்*
- *கால்நடைத் தீவனம், தாது உப்புக் கலவை உற்பத்தி மற்றும் விநியோகப் பணிகளை கண்காணிக்க ஒருங்கிணைந்த கண்காணிப்பு மையம் இணைய தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு கால்நடைத் தீவனம், தாது உப்புக் கலவை விநியோகம் உறுதி செய்யப்படுகிறது*

[2023 ஏப்ரல் 5

- பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்கின்ற வாகனங்களில் GPS கருவி பொருத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் உரிய நேரத்தில் விநியோகம் செய்யவும் மற்றும் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய இழப்புகளைத் தவிர்க்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது

- பால் பண்ணைகள், பாலகங்கள், தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுககளைக் கண்காணிப்பு கேமராவில் பதிவு செய்யப்பட்டு, கண்காணித்து பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது

## 14.5 சேமிப்புத் திறனை அதிகப்படுத்துதல்

- தனியார் பால் பண்ணைகள் மற்றும் அரசு சேமிப்புக் கிடங்குகளில் பால் பவுடரைச் சேமித்து வைக்கும் வாடகைக் கட்டணச் செலவைத் தவிர்க்கும்பொருட்டு திருவண்ணாமலையில் உள்ள பால் பவுடர் தொழிற்சாலையில் கூடுதலாக 1500 மெட்ரிக் டன் சேமிப்பு கிடங்கிற்கான கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன

- கூடுதலாகக் கால்நடை தீவனம் சேமிக்க ஏதுவாக ஈரோட்டில் 1500 மெட்ரிக் டன் தீவனத்தினைச் சேமிக்கும் கிடங்கிற்கான கட்டடப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன

## 15. நிதி ஒதுக்கீடு

பால்வளத் துறை கோரிக்கையின்கீழ், 2022-2023 நிதி ஆண்டிற்கான, வரவு—செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவினமாக ரூ.59.80 கோடியும், மூலதனச் செலவினமாக ரூ.43.46 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 5]

## கூட்டுறவுத் துறை ஒரு பார்வை

| வ. எண் | பொருட்கள் | மார்ச் 2023 வரையிலான விவரங்கள் |
|---|---|---|
| I | **பிரதம கூட்டுறவுச் சங்கங்கள்** | |
| 1 | பால் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | 10,572 |
| 2 | 2022-2023 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்கள் (எண்ணில்) | 395 |
| 3 | 2022-2023 ஆம் ஆண்டில் புத்துயிரூட்டப்பட்ட நலிவடைந்த சங்கங்கள் (எண்ணில்) | 116 |
| 4 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 19.59 |
| 5 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 3.99 |
| 6 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 37.38 |
| II | **மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள்** | |
| 7 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 27 |

| வ. எண் | பொருட்கள் | மார்ச் 2023 வரையிலான விவரங்கள் |
|---|---|---|
| 8 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (சராசரியாக நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 33.69 |
| 9 | மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களிலுள்ள பால் பண்ணைகளின் எண்ணிக்கை | 18 |
| 10 | மாவட்ட ஒன்றியங்களிலுள்ள பால் பண்ணைகளின் பால் பதப்படுத்தும் திறன் (LLPD) | 30.13 |
| 11 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 15.62 |
| 12 | மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 410 |
| 13 | ஒன்றியங்களிலுள்ள பால் குளிருட்டும் நிலையங்கள் | 34 |
| 14 | பால் குளிர்விக்கும் நிலையத்தின் பால் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 14.67 |
| 15 | தொகுப்பு குளிர்விப்பு மையங்களின் எண்ணிக்கை | 713 |

2023 ஏப்ரல் 5]

| வ. எண் | பொருட்கள் | மார்ச் 2023 வரையிலான விவரங்கள் |
|---|---|---|
| 16 | தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களின் பால் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 25.59 |
| III | **மாநில அளவில்** | |
| 17 | மாநில அளவில் இணையம் | 1 |
| 18 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 6 |
| 19 | இணைய பால் பண்ணைகளின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 18.65 |
| 20 | சென்னையில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 14.39 |
| 21 | சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 201 |
| IV | **மற்றவை** | |
| 22 | பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை (ஈரோடு, சேலம், மதுரை, கிருஷ்ணகிரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்) | 5 |
| 23 | பால் பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/நாள்) | 90 |

[2023 ஏப்ரல் 5

| வ. எண் | பொருட்கள் | மார்ச் 2023 வரையிலான விவரங்கள் |
|---|---|---|
| 24 | வெண்ணெய் சேமிக்கும் திறன் (மெ.டன்) | 4,629 |
| 25 | பால் பவுடர் சேமிக்கும் திறன் (மெ.டன்) | 7,805 |

**16. முடிவுரை**

கிராமப்புற பால் உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் வழங்கும் பாலுக்கு உரிய விலை மற்றும் பால் உற்பத்திக்குத் தேவையான இடுபொருட்கள், சேவைகளை வழங்குவதன்மூலம் பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்குப் பால்வளத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆவின் நிறுவனம் பால் நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்வதை உறுதி செய்கிறது. ஆவின் நிறுவனம் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோருக்கு இணைப்புப் பாலமாக விளங்குகிறது. பால்வளத் துறையானது மக்களுக்கு பல்வேறு விதமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன்மூலம் கிராமப்புற பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு பணப் புழக்கத்தை ஏற்படுத்தி வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக உள்ளது. இதன்மூலம் அனைவரையும் உள்ளடக்கிய நிலையான தொடர் வளர்ச்சியினை உறுதிப்படுத்தி இரண்டாம் வெண்மைப் புரட்சியினை இலக்காகக் கொண்டு செயல்படுகிறது.

———————

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.